
Q6m211
N04.13
160427

ஜனுவரி 1916. Vol. XIII. No. 1.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

மகாகனம் அத்தியக்ஷரவர்களின் நவவருட செய்தி.

இந்தப் புதுவருஷ ஆரம்பத்தில் இந்திய மிஷனெரி சங்க சம்பந்தமாய் நவவருட செய்தியொன்று உங்களுக்கு எழுதுவது எனக்கு மெத்த சந்தோஷமான காரியம். ஏனெனில், தேவநோக்கங்களை நிறைவேற்றுவதற்கேற்ற நற்சமயம் இம்மிஷனெரி வேலையின் மூலமாய் நமக்குக்கிடைத்திருக்கிறது. ஆகவே, [illegible]ம் நம் அத்தியக்ஷாதீனத்தின் மகா முக்கியமான வேலையென்று நம்புகிறேன். அதுவுமன்றி, இக்காலம் விசேஷித்த பிரகாரமாய்த் தேவன் தமது ஜனங்களைப் போதித்து கற்பிக்குங் காலமாயிருக்கிறது.

இவ்வருஷத்தின் துவக்கத்தில் உலகத்தின் பலஜாதியார் இன்னமும் ஒருவரோடொருவர் போர் நிலையிலிருப்பதாகவே காண்கிறோம். ஒவ்வொரு ஜாதியாரும் வெவ்வேறு நோக்கத்தைத் தங்களுக்கு முன் நிறுத்திக்கொண்டு, அந்த நோக்கம் நிறைவேறுவதற்காகத் தங்களையே ஒறுத்து, யுத்தம் செய்கிறார்கள். அவரவர் தான் கோரிய காரியமே சரியென்று எண்ணிக்கொண்டபோதிலும், தேவதீர்மானம் ஒன்று உண்டென்றும், அதுவே முடிவில் ஜெயம் பெறுமென்றும் நாம் மறந்துவிடாதிருப்போமாக. தேவதீர்மானத்தைப்பற்றி வேதாகமத்தில் பல காரியங்கள் நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அதைப்பற்றிய பூரணமான விபரம் எபேசியர் நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிறது. தேவனுடைய அநாதி தீர்மானம் ஓர் ரகசியமென்றும், அது முற்காலங்களில் உலகத்தாருக்கு மறைக்கப்பட்டிருந்ததென்றும், இப்பொழுது அவருடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அங்கு வாசிக்கிறோம். அத்தேவதீர்மானமாவது சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படவேண்டும் என்பதே (எபே. 1: 10.) அதாவது, சகலமும் சகலமனிதரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, முற்றிலும் அவருடையவர்களாகவேண்டும்.

இந்தத்தீர்மானம் நாம் அறியாத ஏதோ ஓர்காலத்தில் தேவன் தாமே நிறைவேற்றப் போகிற ஓர் தீர்மானமல்ல; தமது திருச்சபையின் மூலமாகவே அதை அவர் நிறைவேற்றுவார். திருச்சபை இவ்வனாதி தீர்மானத்தை எவ்வாறு நிறைவேற்றவேண்டுமென்று பரி. பவுல் எபேசியருக்கெழுதின நிருபம் 3-ம் அதிகாரத்தில் நமக்குப் போதிக்கிறார். கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம் புறஜாதிகளுக்குள்ளும், உலகத்தின் சகல ஜாதிகளுக்குள்ளும் சுவிசேஷமாக அறிவிக்கப்பட வேண்டும். சுவிசேஷத்தினாலே புறஜாதிகள் உடன் சுதந்தரரும், ஒரே சரீரமாகிய சபைக்குள்ளானவர்களும், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்திற்கு உடன் பங்காளிகளுமாகவேண்டும். ஆகவே, பரி. பவுல் அப்போஸ்தலன் புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகச் சுற்றித்திரிவதிலேயே தம்முடைய ஜீவியகாலமுழுவதையும் செலவிட்டார். அவர் அநேக உபத்திரவங்களைச் சகித்தார். தங்

162427.

ளோடு சம அந்தஸ்துள்ளவர்களாய், புற ஜாதியார் சபையில் சேர்க்கப்படுவது யூதருக்குப் பிரியமாயிருக்கவில்லை. யூதருக்கும் கிறிஸ்தவர்களுக்குமுள்ள விரோதங்கள், வாக்குவாதங்கள் முதலியவற்றினாலுண்டான குழப்பங்களினிமித்தம், ரோமர் மிகவும் விசனமடைந்ததுண்டு. எபேசியருக்கு நிருபம் எழுதின சமயத்தில் பரி. பவுல் ரோமாபுரியில் கட்டுண்டவராய்க் காவலிலிருந்தார். தேவ தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முயன்றதினாலேயே அவர் சிறைச்சாலையிலிருக்கவேண்டியதாயிற்று.

திருச்சபையின் மூலமாய், அதாவது இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய திருச்சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிறவர்கள் மூலமாய், தேவ தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியதாயிருக்கிறது இன்னமும் கேள்விப்படாதவர்களுக்கு இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே தேவதீர்மானம் நிறைவேறுவதற்கு நாம் செய்யவேண்டிய முதற்காரியம்; அதுவே உத்தமும் சிறந்ததுமான முறை. புறமதஸ்தர்களெல்லாரும் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் தம்மண்டை கொண்டுவரப்படவேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். இந்த ஊழியம் எனக்குரியதல்லவென்று எந்தக்கிறிஸ்தவனாவது சொல்ல வழியில்லை. அதற்கென்று விசேஷமாய் ஏற்படுத்தப்பட்ட சிலர் மாத்திரம் செய்யவேண்டிய ஊழியமல்ல; சபைமுழுவதும் ஏகமாய்ச் செய்யவேண்டிய ஓர் வேலை இது. ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும், உத்தம கிறிஸ்தவ ஜீவிய சாதனையினாலும், தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுக்குப் பிரசங்கிப்பதினாலும் இவ்வேலைக்கு எல்லோரும் உதவிபுரியக்கூடும். என்னால் இது முடியாது என்று எவரும் சொல்வதற்கு இடமுண்டோ? தங்கள் சொந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் மிக்கஜோலியாயிருந்து, தேவதீர்மானத்தை பலர் அலட்சியம்செய்து விடும்பொழுது, தேவன் பலத்த ஓர் தண்டனையை அனுப்புகிறார். தற்காலம் நடக்கும் யுத்தமும் அவ்வித ஓர் தேவதண்டனையே. இதின் போதனை என்ன? ஜெயம் பெறலாம் என்ற நம்பிக்கையோடு மனிதர் செய்யக்கூடிய ஒரே வேலை தேவ தீர்மானத்தை நிறைவேற்றுவதுதான் அல்லவா? சகலமும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தப்படவேண்டுமென்ற ஒரே நோக்கமே நம்முடைய ஆலோசனைகளோ, கிரியைகளோ, நம்முடைய கல்வி, உத்தியோகம் வியாபாரமோ, அரசாட்சி முறையோ யாவற்றிலும் பரீஷ்காரமாய் விளங்கவேண்டும்.

இவையெல்லாவற்றிலும் திருநெல்வேலியிலிருக்கிற நமக்கு ஒரு படிப்பினை இருக்கிறதென்னலாம். நம்முடைய சொந்தக் காரியங்களையும் நம்முடைய சொந்தச் சபை விஷயங்களையும் பற்றி நாம் அதிகக் கரிசனையுள்ளவர்களாயிருந்துவந்திருக்கிறோம். உலகத்தின் மற்றப்பாகங்களிலுள்ள மனிதரைக் கிறிஸ்துவினண்டை கொண்டுவருவதற்கு வேறு யாராவது வேலை செய்யட்டும் என்றெண்ணி, புறதேசத்தவர்களே முழுவதுமாய் அவ்வேலையைச் செய்வதற்கு விட்டுவிட்டோம். இப்போது தமக்கு உதவிபுரியும்படி தேவன் நம்மையழைக்கிறதுபோலிருக்கிறது. மற்றவர்கள் செய்து வந்த சுவிசேஷ வேலை சரியாய் நடக்காதபடி இப்போது பெரிய தடை ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் செய்யவேண்டிய அளவுக்கு அவர்கள் வேலை செய்யவில்லையென்பது மெய்யானாலும், அவர்கள் செய்துவந்த சொற்பமான வேலையுங்கூட தற்கால சம்பவங்களினால் குறையவேண்டியதாயிருக்கிறது. திருநெல்வேலியிலிருக்கிற நமக்கோ சமாதானமும் சவுக்கியமும் தந்திருக்கிறார். ஆதலால் தேவ தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு நற்சமயம் கட்டளையிடப்பட்டது போலிருக்கிறது. இதுவே இந்தப் புதுவருஷம் நமக்குக் கொடுக்கும் செய்தி. தேவன் நம்மைப்பார்த்து, "நீங்கள் சமாதான நிலமையிலிருக்கிறீர்கள். ஒரு நூற்றாண்டுக்கதிகமாய் நீங்கள் உடன் சுதந்தரமும், கிறிஸ்துவின் சரீரத்திலும் அவருடைய சுவிசேஷத்திலும் உடன் பங்காளிகளுமாயிருந்து வந்திருக்கிறீர்கள். தேவனுடைய ராஜ்

யத்திற்கு அந்நியரும், நம்பிக்கையற்றவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்று அலைகிறவர்களுமாயிருப்பவர்களுக்கு உதவிபுரியும்படி இப்போது உங்களை அழைக்கிறேன்" என்கிறார்.

நாம் யாவரும் இவ்வுலகத்தின் விஷயமாய்த் தேவன் கொண்டிருக்கிற தீர்மானத்தை நிறைவேற்றும்பொருட்டு உழைப்பதினால் நமக்கு இவ்வருஷம் ஆசீர்வாதமான வருஷமாயிருப்பதாக. நான் உங்களுக்கு அனுப்பக்கூடிய சிறந்த நவவருட வாழ்த்துதல் இதுவே.

இப்படிக்கு,
கர்த்தருக்குள் உங்கள் அன்புள்ள ஊழியன்,
E. H. M. உவாலர்,
திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷர்.

பத்திராதிபர் குறிப்புகள்.

நம் நண்பர் யாவருக்கும் நவவருட வாழ்த்துதலளிக்கிறோம். நமது அருமையான அத்தியக்ஷரவர்களின் நவவருட செய்தி நம்மை அனல் மூட்டுவதாக. கடந்த ஆண்டில் நம்மைச் சுகபத்திரமாய்க் காப்பாற்றிவந்த தயாநிதியை அத்தியந்த பணிவாய் ஸ்தோத்திரித்து, நம்மையும் நமது தாலந்துகளையும் அவருக்கே நவமாய் இவ்வாண்டிலும் பிரதிஷ்டை செய்வோமாக.

நவவருடம்.

பெப்ருவரி மீ 12உயோடு சங்கத்தின் பதிமூன்றாவது வயது முற்றுப்பெறும். 13உயாகிய பிரசன்ன திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு நமது அருமையான சங்கத்தின் மன்றாட்டு நாள். இதுவரைக் கர்த்தர் அருளிய பெரிய நன்மைகளுக்காக அவருக்குத் துதிசெலுத்துவதுடன், வரப்போகிற ஆண்டு முன்னிலும் பெரிய காரியங்களைப்பார்க்கும் வருஷமாகக் கர்த்தர் கட்டளையிடும்படி மிகுந்த எதிர்பார்த்தலுடன் கர்த்தருடைய பாதத்தைக் கிட்டிச் சேருவோமாக. கேளுங்கள், கொடுக்கப்படும். உன் வாயை விரிவாய்த்திற, அதை நன்மையினால் நிரப்புவேன் என்பது தேவவாக்கு. ஆகவே, கடந்த வருஷங்களைப்பார்க்கிலும், நாளது வருஷத்தில் கர்த்தர் தமது ஜனங்கள் மீதும் ஊழியர் மீதும் ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் நிறைவாய்ப் பொழிந்தருளுவாராக.

ஜெப அழைப்பு.

நம்மைச் சுற்றிலுமுள்ள புறமதஸ்தருக்கு காவலாளிகளாக கர்த்தர்நம்மை வைத்திருக்கிறார். சமீபகாலத்தில் நமது அத்தியக்ஷமண்டலத்தில் வருஷா வருஷம் சபையில் சேரும் ஜனங்கள் எவ்வளவு சொற்பம்! பெந்தே கோஸ்தே சபையில் "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" என்று அறிகிறோம். அப்பலன் நமது சபைகளில் குறைவாய் காணப்படுவதற்குக் காரணமென்ன? ஜெபக்குறைவும், கர்த்தருடைய வசனத்தை ஆராய்வதில் காணப்படும் அஜாக்கிரதையும், கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தின் அசட்டையும் தேவனுக்காக ஊழியஞ்செய்வதில் தளர்ச்சியுமல்லவா? இக்குறைவுகளைச் சரிப்படுத்த விரும்புவோமாக. அத்தியக்ஷாதீன சபைகள், யாவும் ஏகமாய் சுவிசேஷ பிரபல்ய வேலையைச் செய்ய நாளது ஆண்டில் அழைக்கப்படுகிறோம். "அந்தகாரத்தினின்று நம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துசொள்ளப்பட்ட ராஜரீக ஆசாரியக்கூட்டமா" யிருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாய், நம்மாலியன்றதை ஊக்கமாய்ச் செய்வோமாக. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் குருமாருக்கு அனுப்பியிருக்கும் நவவருட நிருபத்திலும், நம்பத்திரிகை நண்பருக்கு எழுதிய நவவருட செய்தியிலும், மற்றும் அவர்களுடைய உபந்நியாசங்களிலும் சுவிசேஷ பிரபல்ய வேலையைச் சபைக்குமுன்பாக நிறுத்தியிருக்கிறார்கள். நாளது வருஷத்தில் சுவிசேஷ பிரபல்ய விஷயமாய் விசேஷ முயற்சி நடைபெறும்படி அத்தியக்ஷாதீன முழுமையிலும் விசேஷ ஒழுங்குகள் ஏற்பாடாகிவருகின்றன. கர்த்

தர் தாமே தமது உன்னத ஆலோசனையை அறுக்கிரகித்து, இவ்வூழியம் சிரத்தையுடன் குருமார், தேவஊழியர், சபையார் யாவராலும் ஏகமாய் நடத்தப்படக் கிருபை அருளுவாராக. தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்தில் ஏற்பாடாகியிருக்கும் முறைகள் "தெலுங்குநாட்டுக் கடிதத்தில்" மிகு தெளிவாய் வரையப்பட்டிருக்கின்றன. அவைகள் நமக்கும் பிரயோசனமாக இருக்குமென நம்புகிறோம். சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! என்பது பரி. பவுலின் அநுபவசாட்சி.

திருவாங்கூர் சமஸ்தானம் மலைகளில் வசித்து, பளியர் மன்னாக்களுக்குள் சுவிசேஷவேலையும் பள்ளிக்கூடவேலையும் நடத்துவதற்கு ஓர் ஊழியர் தேவை; போதனா சக்திபரீக்ஷை தேறி, பள்ளிக்கூடவேலை பார்க்கக்கூடிய லாயக்கு மனைவிக்கும் இருக்கவேண்டும். Mr. A. டேவிட் அவர்களும் மனைவியும் இம்மலைகளில் ஏற்கனவே பளியருக்குள் ஷை ஊழியங்களை சித்தியுடன் பார்த்துவருகிறார்கள். இப்பாகத்தில் வருஷத்தின் பல மாசங்களில் மலேரியா ஜுரம் உண்டாகக்கூடியது. ஏற்ற ஊழியர் கிடைக்கும்படி ஜெபிக்க நண்பரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பளியர் மிஷன்.

தோர்ணக்கல் அத்தியக்ஷமண்டலத்தின் கைத்தொழிற்சாலை நமது மிஷனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நெசவும், தச்சுவேலையும் இப்போது நடந்துவருகிறது. நெசவு சாலைவிர்த்திக்குவரத்தக்கதாக ஓர் கட்டடம் கட்டுவதற்கு வழிவகை கிட்டும்படி மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷாவர்களும் மற்றும் ஊழியரும் ஜெபித்து வந்ததுண்டு. ரூ. 1000 கட்டடச் செலவும், சுமார் 6 நெசவு தறிகளுக்கு சுமார் ரூ 500ம் செல்லுமென்று நமது கமிற்றிக்கு கடந்த ஜூலை மீ அறிவிக்கப்பட்டது. இத்தொகை சாங்கிஷன்செய்வது தங்களுக்கு சாத்தியப்படாது என்றும், வழக்கமான செலவுகளைச் சுருக்கி, இக்கட்டடம் கட்டக்கூடுமானால் ஆரம்பிக்கலாமென்றும் அத்தியக்ஷாவர்களுக்கு கமிற்றிமார் சொல்லிவிட்டார்கள். ஒரு வகையாய் ரூ 500-ம், ஒரு நண்பர் நன்கொடையாக ரூ. 150-ம் கிடைத்திருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இரண்டொருவர் இரண்டு தறிகள் வாக்களித்திருக்கிறார்கள். நூதனமான நல்லதறி ஒன்றுக்கும் அதன் சம்பந்தமான செலவுக்கும் ரூ. 75, அல்லது 100 பிடிக்கும்போலும். சபைகளும் கிறிஸ்தவர்களும் தங்கள் பெயரால் ஒவ்வோர் தறி அளிப்பது இலகுவே.

நெசவு சாலை.

பல நண்பர் வேண்டுகோளுக்கு இணங்கி, செலவுக்கான கையிருப்பு நிதி விஷயமான காணிக்கை கணக்குகளை நாளது மாசம் முடிவில் தான் முடிக்கும்படி தீர்மானித்திருக்கிறது. வாக்குப்பண்ணியிருக்கும் சபைகளும் சிநேகிதரும் மற்றும் நண்பர்களும் காலதாமதமின்றி உடனே இவ்விசேஷ காணிக்கையை அனுப்புவிக்க அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

செலவுக்கான கையிருப்பு.

இப்புதுவருஷ முதல் நமது பத்திரிகை ஒரு புஸ்தகமாக வெளியேறுகிறது. சில மாசங்களில் 16 பக்கங்களும் சில மாசங்களில் 8 பக்கங்களும் அடங்கினதாயிருக்கும். யுத்தத்தினால் காகிதக் கிரையம் மிகவும் அதிகரித்திருக்கின்றமையாலும், பக்கம் அதிகரித்து சந்தா கிரையத்தை ஜாஸ்தியாக்காதிருப்பதினாலும், செலவு தாங்கத்தக்கதாக சற்றுமிதமான காகிதம் இவ்வருஷம் உபயோகிக்க சேர்ந்திருக்கிறது.

நமது பத்திரிகை.

"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்."

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் குருமாருக்கெழுதிய நிருபம்.

கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே,

என்னுடைய பட்டாபிஷேக சமயத்தில் நீங்கள் யாவரும் எனக்காக ஜெபித்ததுமன்றி, உங்களில் பலர் எனக்கு உபசார வாழ்த்துதல் செய்தியனுப்பியதற்காகவும் நான் உங்களுக்கு மிகவும் நன்றிபாராட்டுகிறேன். என்னுடைய ஊழியத்தில் உங்களின் அனுதாபமும் உதவியும் இருந்துவரும் என்பதற்கு இவ்விடத்தில் என்னை மிக அன்பாயும் மனோற்சாகமாயும் நீங்கள் ஏற்றுக்கொண்டதே தகுந்த அத்தாட்சி. இன்னமும் என் வேலையில் உங்கள் ஜெபத்தினால் என்னைத் தாங்கி உதவிபுரிவீர்களென்று நம்புகிறேன்.

நமது ராஜ்யத்தின் காரியாதிகளை நாம் கவனிக்கும்போது, சத்துருவைத் திறமையாய் எதிர்த்து மேற்கொள்வதற்கு ஐக்கியம் எவ்வளவோ முக்கியமானதென்றறிகிறோம். அதுபோலவே பாவம், அறிவீனம் என்பவைகளை நாம் எதிர்த்து மேற்கொள்ளுவதற்கும் ஐக்கியமே மிக்க அவசியம். நாம் தவறாமல் வெற்றி பெறுவதற்கு அதுவே மிகச் சிறந்த ஆயுதம். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்," என்ற திருவாக்கின்படி, சுற்றிலுமுள்ள புறமதஸ்தருக்கும், உலகமெங்குமுள்ள யாவருக்கும் திருச்சபையானது சாட்சியாக விளங்கவேண்டுமானால், கிறிஸ்துவில் ஐக்கியப்பட்ட ஜீவியமே மிக அவசியம்.

நாம் யாவரும் விரும்பியதும் ஜெபித்து வந்ததுமான ஓர் நற்சமயத்தைத் தேவன் இப்போது நடக்கும் யுத்தத்தின் மூலமாய் இந்திய திருச்சபைக்கு அருளுகிறாரென்று நான் எண்ணுகிறேன். இந்திய திருச்சபையானது தாய்ச் சபையோடு ஐக்கியப்பட்டிருந்தபோதிலும், அயல் தேசத்திலிருந்து வரும் பொருள் உதவியை எதிர்[illegible]காமல், தானே இந்தியாவி[illegible] சுவிசேஷத்தைப் பரவச் செய்வ[illegible]லும், தன் குருமாரைத் தானே ஆதரித்து அவர்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதிலும், தன் காரியாதிகளைத் தானே ஆண்டு நடத்திக்கொள்வதிலும் முன்னேறிச் செல்வதற்கு இது ஏற்ற சமயம் என்றெண்ணுகிறேன்.

சுய பரிபாலனம், சுய ஆளுகை முதலிய இவ்விஷயங்களில் நம் நோக்கம் நிறைவேறுவதெப்படி? நமக்குள்ளே பிரிவினைக்குக் காரணமான சமுசயம் சிறிது இருந்தாலுங்கூட அந்த நோக்கம் நிறைவேறமாட்டாது. ஐக்கியமே முதல் அவசியம். அற்பமான வித்தியாசங்களைப் பெரிதுபாராட்டாமல், ஐக்கியத்துக்கிடமான முக்கிய விஷயங்களை மாத்திரம் நோக்கினவர்களாய், நமக்கு வித்தியாசமான அபிப்பிராயங்களுள்ளவர்களோடுங்கூட ஒருமித்து ஊழியஞ்செய்யத்தக்க பொருத்தமுள்ள சுபாவமே நம்மிடம் காணப்படவேண்டும். ஐக்கியத்தைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதினால் இரு வகுப்பாருக்குள் நெருங்கிய ஐக்கியம் உண்டாகிவிடமாட்டாது. இரு வகுப்பாரும் ஒரே நோக்கத்தோடு ஒரே பொதுவான வேலையில் பிரவேசிக்கும்போதுதான் அவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் வித்தியாசங்களை மறந்து ஐக்கியப்படுவார்கள்.

நாம் யாவரும் ஒருமித்துச் செய்யக்கூடியதும் செய்யவேண்டியதுமான பல காரியங்களுண்டு.

1. அத்தியக்ஷாதீனத்திற்குள் சுவிசேஷப் பிரசங்க வேலை.

சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமாய் நீங்கள் யாவரும் ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கும் இச்சமயத்தில் நான் உங்கள் மத்தியில் வந்துசேர்ந்தது எனக்கு மெத்த சந்தோஷம். இம்முயற்சியில் யாவரும் ஒரே முறையைக் கையாடாமல், பற்பல பாகங்களில் வெவ்வேறு முறையைக் கையாடவேண்[illegible]ருக்கலாம். ஆயினும் ஒருமே முக்கியமானவை. ஒருமனப்பட்டு[illegible]தி வேலை செய்வதற்கு ஒரு வருஷ[illegible] நாம் ஆயத்[illegible]மிருக்கிறது. இக்காலத்தை ஜெபத்திலும் நமதாவிக்குரிய ஜீவியம் ஸ்திரப்படும்படி முயற்சிப்பதிலும் நமது மார்க்க போதனைகளை நாமே நன்றாய்க் கற்றுக்கொள்வதிலும் செ[illegible]

விடுவோமாக. இவ்விதச் சுவிசேஷ படைமுயற்சி வேலையில் ஊழியஞ்செய்கிறவர்கள் தாங்களே கிறிஸ்துவின் போதனையைக் கற்றறிந்தாலொழிய, அவர்களுடைய பிரசங்கம் குறிப்பற்றதாயும் வல்லமையற்றதாயுமிருக்கும்.

2. அத்தியகூடினத்திற்கு வெளியே சுவிசேஷப் பிரசங்க வேலை.

அத்தியகூடினம் மூழுமையும் ஒருமித்துச் செய்யும் ஊழியமாக இந்திய மிஷனெரி சங்க வேலை இக்கே நடைபெற்றுவருவதை நான் கண்டு மிகவும் சந்தோஷிக்கிறேன். இம்மிஷனெரி சங்க வேலையில் நீங்கள் யாவரும் உற்சாகங் காட்டவேண்டுமென்று அத்தியகூடின ஆலோசனை சங்கத்தாரால் (Diocesan Conference) எற்கனவே உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது யாதெனில், ஒவ்வொரு சேகரமும் ஒவ்வொரு சபையும் இவ்வூழியத்திற்கென்று ஒழுங்காய் ஜெபித்து, காணிக்கை சேகரித்தனுப்புவதிலும் ஊழியர்களை யனுப்புவதிலும், தன் தனக்குரிய பங்கை சரிவர நிறைவேற்றுவதுமன்றி, நீன் பங்குக்கதிகமாகவும் செய்ய முயற்சிக்குமென நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன் என்பதே. அயல் தேசங்களிலிருந்து நமக்கு வரக்கூடிய ஊழியர்களும் பொருளுதவியும் குறைத்துபோகக்கூடியதாயிருக்கும் இக்காலத்திற்கென்றே தேவன் இவ்விதசங்கமொன்றை எற்படுத்தி வைத்திருக்கிறரென்று சொல்லலாமல்லவா? இந்தியாவில் சுவிசேஷம் பிரபல்யமாவதற்கு தேவ கரத்தில் இச்சங்கம் ஓர் பலத்த கருவியாயிருப்பதாக.

3. ஜெபம்.

ஜெபத்தின் வல்லமையை நாம் இன்னமும் சரியாய் அறியாதிருக்கிறோம். நமக்கு சுகமும் சௌக்கியமும் இருப்பதினால், ஜெபம் செய்வதில் ஆசை அற்றுப்போகிறது. ஆனால் ஜெபமே பெலன். இந்தப் புது வருஷ முழுவதிலும், இந்தப் பயங்கரமான யுத்தத்தில் நமது ராஜ்ய விஷயமாயுள்ள அவரவர்களுக்காகவும், திருச்சபைக்காகவும், நம்முடைய அத்தியகூடினத்திற்காகவும், அதின் மிஷனெரி ஊழியத்திற்காகவும், நமது சொந்த சங்கங்களுக்காகவும் மற்றச் சங்கங்களுக்காகவும் அதிகமான நேரத்தை ஜெபத்தில் பின்னிடத் தீர்மானிப்போமாக. நம் அத்தியகூடினத்தின் பற்பல ஊழியங்களையும் பற்றி ஒழுக்காய் ஜெபிக்கத்தக்கதாக, ஒரு ஜெப ஒழுக்கு எற்பாடு செய்ய விரும்புகிறேன். தேவன் நம் மத்தியிலும் நமக்குள்ளும் வல்லமையோடு வாசஞ்செய்யும்படி ஊக்கமாய் ஜெபிப்போமாக.

வரப்போகிற வருஷம் உங்களுக்கு ஆசீர்வாதமான வருஷமாயிருக்கும்படி உங்களுக்காக ஜெபித்து, உங்களுக்கு வாழ்த்துதல் கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன். அத்தியகூடின பத்திரிகையொன்று மூன்று மாதத்திற்கொரு முறை பிரசுரஞ்செய்து, அதின் மூலமாய் என் ஆலோசனைகளை உங்களுக்குத் தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன். அதைப் பற்றிப் பின்னல் உங்களுக்குத் தெரியப்படுத்துவேன்.

தேவன் என்னை அழைத்திருக்கும் இந்த உத்தரவாதமான ஊழியத்தில் நான் தேவ ஆவியினால் தாக்கி நடத்தப்படும்படி நீங்கள் உங்கள் ஜெபங்களில் என்னை எப்பொழுதும் நினைத்துக்கொள்ளும்படியாக உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் வழிகளிலெல்லாம் தேவன் உங்களோடிருப்பாராக.

இப்படிக்கு,
கர்த்தருக்குள் உங்கள் அன்புள்ள ஊழியன்,
E. H. M. உவாலர்,
திருநெல்வேலி மதுரை அத்தியகூர்.

தேவுங்குநாட்டுக் கடிதம்.

I

கனம் மதுரம் ஐயாவர்களின் வரவு. கல்குத்தாவுக்குப்போகும் வழியில் கனம் ஐயர்வர்கள் இக்கே மிஷன் ஸ்தானத்தையும், அக்கக்கே கடக்கும் வேலைகளையும் கண்ணுரக்கண்டுபோனது மிகவும் சந்தோஷமே. கனம் மதுரம் ஐயாவர்கள் தோர்ணக்கல்லில் ஒர் அரை ஞாயிறும், திக்களில் பாதி நாளும் மாத்திரம் பரிஷில் சமயம் வாய்த்தது. அதற்குள் அவர்களுக்கிருந்த மிகுந்த

வாஞ்சையினால், போர்டிங்பள்ளிக்கூட வேலைகள், கைத்தொழிற்பாடசாலைவேலைகள், அதாவது தச்சுவேலை, நெசவுவேலை, சபை வேலைகள் முதலியவற்றையும், நமதுமிஷன் கட்டடங்கள் நிலங்கள் யாவற்றையும் கண்ணுய்க் கவனித்தார்கள். ஒய்வுநாள் காலை ஆராதனையில் யோவான் 3: 14—ன்மேல் ஆழ்ந்த இவிய கருத்துக்கள் எளிதில் மனதிற்படும்படியாகப் பிரசங்கம் செய்தார்கள். மெய்க் கிறிஸ்தவனெவ்வருவனும் கொள்ளி வாய்ச்சர்ப்பத்தால் கடியுண்ட லோகத்தாருக்கு சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவை உயர்த்திக்காட்டும் கோலாக இருக்கவேண்டும் என்பதே. ஐயர்வர்கள் இன்னும்கொஞ்சநாட்கள் இக்கே பின்னிடவும், கனம் ஆசீர்வாதம் ஐயர்வர்களும் இவைகளைப் பார்க்கவும் சமயம் வாய்த்திருக்குமாஞல், அவர்களுக்கும் எங்களுக்கும் இன்னும் பெரிய சந்தோஷத்திற்கு இடமாகும் என்பதற்கு ஐயமில்லை.

புல்லூர் ஞானஸ்நானம். ஸிக்கேனி ரெயில் மார்க்கத்திற்கு அருகாமையாய், இக்கேயிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள கிராமத்திற்கு புல்லூர் என்றுபெயர். போனமாதம் 21உ இக்கே ஞானஸ்நானம் நடந்தது. அதற்கு இக்கேயுள்ள சபையார், பள்ளிப்பிள்ளைகள், மிஷனெரிமார், ஊழியர், மகாகனம் தோர்ணக்கல் அத்தியகூடவர்கள் யாவரும் போனேம். மூன்று மணிக்கு சற்றுமுன் புறப்பட்டு, நீரும் சேறுமான வழிகளையும், குறுக்கு மறுக்கான பாதைகளையும், ஆமணக்கு விளைகளையும், முள்காடுகளையும் தாண்டி, சுமார் 4 மணிக்கு ஊர்க்கரை யடைந்தோம். ஊருக்குள் பிரவேசிக்கவே, அஞ்ஞானிகளான அச்சனங்கள் இத்தக் கூட்டதார் யார் என்றும், என்வந்தார்கள் என்றும் வினவ ஆரம்பித்தார்கள். பின்னுலே வந்தவர்களாகிய எங்களிடத்தில் "உங்கள் கிறிஸ்தவர்கள் இக்கே இல்லையே!" என்க, அவர்களில் ஒருவன் "மாலகூடத்தில் இரண்டுபேர் கிறிஸ்துமார்க்கத்தில் விழுந்திவிட்டார்கள்" என்கவே, "நீங்கள் எல்லாரும் போய் என்னசெய்யபோகிறீர்கள்" என்று கேட்டான். "வந்து பாருங்கள்" என்று கூப்பிட்டதற்கு, "போய், பார்க்கலாம்" என்று ஒருவனும், "மாலகூட்டத்திற்கு யார் போவார்கள்?" என்று இன்னெருவனும், "இல்லை, இல்லை, குளக்கலாயில் தான் ஏதோ கட்டி வைத்திருக்கிறார்கள்" என்று வேறொருவனும் பேசிக்கொண்டார்கள். கடையாக ஒருவனே மாத்திரம் தாழத்தில் வந்து நிற்கக் கண்டோம். இடிந்த போன கோட்டையைக் கடக்கவே, மாலக்கூடம் கண்ணுக்குப் புலப்பட்டது. முன்னமே ஆயத்தமாய்க் காத்திருந்த ஞானஸ்நானக்காரருடன் சேர்ந்து, சமீபத்திலுள்ள குளக்கலாக்குப்போனேம். கலாயில் ஆராதனை நடக்க, மகாகனம் தோர்ணக்கல் அத்தியகூடவர்களும், கனம் மதுரம் ஐயர்வர்களும் குளத்திலிறங்கி, முறையே 5 ஸ்திரீகளுக்கும், 4 புருஷருக்கும் நீர் முழுக்கு ஸ்நானம் கொடுத்தார்கள். கனம் S. பாக்கியநாதன் ஐயர்வர்கள் 3 பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்கள். வெகுகாலம் கிறிஸ்தவர்களாயிருந்து அறிவில் தேறினவர்களைப் போல, வாசிப்பறியாத இவர்கள் ஆராதனை வாசிப்பைக் கருத்தாய் செவிகொடுத்துக் கேட்டதும், கேள்விகளுக்குத் தகுந்த விடை பகர்ந்ததும் உற்சாகத்தைக் கொடுத்தது. மகாகனம் அத்தியகூடவர்கள் ஞானஸ்நானக் கிரமத்தின் உள்கருத்தைப் புதுக் கிறிஸ்தவர்களுக்கு தெளிவித்ததும், ஜனங்கள் சிரித்து மறுமொழி சொன்னதும் சிறப்பு மாதிரியே.

குளக்கரை யாராதனைக்குப் பின்பாடல்களுடன் பிள்ளைகள் கொடிபிடித்துச் செல்ல, சிறிது காலத்திற்குமுன் அக்கிறிஸ்தவர்கள் கட்டிய ஜெபவீட்டுக்குப்போனேம். அச்சேரியின் மையத்திலுள்ள வீதியில் கட்டிபிருக்கிறார்கள். நீளம் டத்தடிக்கதிகப்படாமலும், அகலம் எட்டடிக்கு அதிகப்படாமலுமிருக்கும். சுவர்களுக்காக மக்காச்சோளத்தட்டையை நிறுத்தி, களிமண் அடித்து வைத்திருக்கிறார்கள். கூரையும் அத்தகட்டைதான். கோவில் வாஞ்சை, ஜெபவாஞ்சை அவர்களில் காணப்படுகிறதற்காக கர்த்தரைத் துதிப்போமாக. பிள்ளைகள் பாடியபின் புதுக் கிறிஸ்தவ சபையில் பாட்

டைக்கேட்டது பெரிய சந்தோஷம். ஒருவன் மாத்திரம் வாசிக்கக் கற்றுக்கொண்ட வாலிபன். மற்றவர்கள் கற்கவாவது, பாடவாவது ஏற்ற வயது வெகுதூரம் தாண்டிப் போனவர்கள். இவர்கள் பாடின பாட்டின் பல்லவிப்பொருள் இதுவே. "தேவ அன்பைப்பாருங்களேன், ஓ ஜனங்களே! இதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுங்களேன்! நம்புவீர்களானால், பரலோக ஜீவன் உங்களுக்குக் கிடைக்குமே." அண்டைவீட்டுக்காரர், ஊரார் யாவரும் சூழ்ந்து நிற்க, அவர்களும் தேவ அன்பை அறியவேண்டும் என்று மகாகனம் அத்தியக்ஷரவர்கள் புத்திசொல்லி ஜெபித்தபின், இராத்திரி ஏழேகால் மணிக்கு தோர்ணக்கல் வீதி வந்து சேர்ந்தோம். அந்தப் புதுக்கிறிஸ்தவர்களில் சிலர் ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்காகவும் ஜெபிக்கக் கேட்கிறேன்.

புல்லூர்ச் சுவிசேஷகன். புல்லூருக்கு எவ்விதமாய்ச் சுவிசேஷம் சென்றது, என்பதையும் அறிய விரும்புவீர்கள். இந்த மனுஷன் தோர்ணக்கல் பயிற்சிசாலையில் ஒரு காலத்துக்குமுன் படித்த காலேப். வாசிப்பில் மற்றவர்களைப்போல் ஓடாதவன், அவனை என்னசெய்கிறதென்று ஆலோசித்து, கைவுத்தொழிலில் போட்டார்கள். ஆனால் சனி, ஞாயிறுகளில் கூடிய பொழுதெல்லாம் இந்தக் கிராமத்தைச் சந்தித்து, போதனைசெய்து வந்தான். கர்த்தர் அவனைக் கொண்டு முதலாவதாகவே இத்தப்பன்னிரண்டு ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணச் சித்தமானார். தேவன் உலகத்தில் பேதைகளைக் கொண்டு, தமது ஞானத்தைப் போதிக்கும், பெலவீனரைக்கொண்டு சபையைப் பலப்படுத்தியும் வருகிறார் என்பது எவ்வளவு தெளிவான சத்தியம்! அவன் முன் பின் கைவசு பழகாதவனுயிருந்தும், வேலைக்குப் பற்பல இடையூறுகள் நேரிட்டும் சுமார் ஒரு வருஷத்திற்குள் மாதமொன்றிற்கு ரூபாய் 7 சம்பாதிக்கும் நிறமைக்கு வந்திருக்கிறான். கிருபையுள்ள கர்த்தர் இன்னும் இவனை உபயோகிக்கும்படி மன்றாடுவோமாக.

புதுப்போஷகர்கள். பிள்ளைகள் வந்து சேர்ந்தபின், பிள்ளைகளை யாதரிப்போர் தேவை என்று விண்ணப்பம் பண்ணினேமே. எதிர்பாராதவண்ணமாய்க் கர்த்தர் மங்கூன், யாழ்ப்பாணம், சாகுபியாபுரம், பண்ணைவிளை முதலிய இடங்களிலுள்ள சகோதர சகோதரிகளை எழுப்பிவிட்டிருக்கிறார். கர்த்தருக்கே மகிமை யுண்டாவதாக. கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுக்கு ஆகாரமளிக்கும் தேவன் காலதிசையினின்றும் இந்திய மிஷனுக்காக ஓயாமல் ஏறெடுக்கும் கூப்பிடுதலுக்கு செவியை யடைத்துக்கொள்வாரா? இன்னும் கர்த்தருக்கென்று தோர்ணக்கல் மிஷன் பிள்ளைகளைத் தாபரிக்க தாய்மார், தகப்பன்மார் தேவை.

மழை ஓய்ந்து பனிகாலம் ஆரம்பித்து விட்டது. எங்கே பார்த்தாலும் சுரத்தினால் கஷ்டப்படுகிறவர்கள் அதிகர். நமது சபைகளுக்குள்ளும், ஊழியருக்குள்ளும் சிலர் சுரத்தினால் கஷ்டப்படுகிறார்கள்.

S. V. சுவாமிதாஸ்.

II

சுவிசேஷ பிரபல்ய ஊழியம்.

உத்தேசம் இரண்டு மாதங்களுக்குமுன் கம்மாமேட்டில் தேவ ஊழியருக்கு நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூட்டங்களின் கடைசிக் கூட்டத்தில் இனி நடத்தப்படவேண்டிய சுவிசேஷ வேலையைப்பற்றிய தீர்மானங்கள் செய்யப்பட்டது.

(1) அக்கூட்டங்களுக்கு வந்திருக்கும் தேவஊழியர் யாவரும் பவுஞ்சுபவுஞ்சாய்க் கூடி, கம்மாமேட்டில் அன்று சாயந்தரமே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பது. அவ்வாறே பல கூட்டங்களாகச் சென்று, அந்தப் பட்டணமெங்கும் சுவிசேஷம் கூறியறிவிக்கப்பட்டது. மகாகனம் தோர்ணக்கல் அதிகியட்சரவர்களும் ஒரு கூட்டத்தாரோடு சேர்ந்து, சுவிசேஷ சத்தியத்தைக் கூறினார்கள். உற்சாகமான வேலை நடந்தது.

(2) அயலிடங்களுக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் போதிப்பவர்களை அனுப்பவேண்டுமென்பது. இது சம்பந்தமாய்த் தற்சமயம் கம்மாமேட்டிலிருக்கும் சுவிசேஷ சங்கத்தாரும், தோர்ணக்கல்லிலிருக்கும் சுவிசேஷ சங்கத்தாரும், சிக்கரேனி மிஷன் சுவிசேஷ சங்கத்தாரும் சேர்ந்து, தோர்ணக்கல் அதிகியட்சமண்டல சுவிசேஷ சங்கமாகக் கூடி, நிர்மானிக்கப்படும் சமீபத்திலுள்ள தாலுகா அல்லது தாலுகாக்களில் சுவிசேஷத்தைப் போதிப்பவர்களை அனுப்புவதென்று நிர்மானிக்கப்பட்டது. இது விஷயங்களைத் நிர்மானித்து நடத்துவதற்கு ஒரு கமிற்றி ஏற்படுத்தப்பட்டு, அதில் கம்மாமேட்டுச் சங்கத்தாரான ஆறு மெம்பர்கள், தோர்ணக்கல் சங்கத்தாரான மூன்று மெம்பர்கள், சிக்கரேனி சங்கத்தாரான ஒருவர், ஆக 10 பேர் மெம்பர்களாயிருக்க வேண்டுமென்றும் நிர்மானிக்கப்பட்டது. அயலிடங்களுக்குப் போய்ச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகத் தங்களை ஒப்புவித்து, சிலர் மறு எழுதியிருக்கிறார்களென்பது சந்தோஷமான விஷயம்.

(3) அத்தத்தச் சபையார் தங்களைச் சுற்றி மூன்று மைல் சுற்றளவிலுள்ள சகல இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்பது இன்னொன்று. இதின்சம்பந்தமாய்ப் பின்வரும் ஏற்பாடுகள் நமது சபைகளிற் செய்யப்பட்டு கடைபெற்றுவருகின்றன. அவையாவன:—

(a) அத்தத்தச் சபையார் தங்களுக்கு மூன்று மைல் சுற்றளவிலுள்ள கிராமங்களையும் குடியிருப்புகளையும் குறிப்பிட்டுக் கொண்டு, அவைகள் தங்கள் உத்தரவாதத்திலுள்ளதான தங்கள் கிராமம் என்றெண்ணி, அவைகளுக்காக ஜெபித்து, அவைகளில் சுவிசேஷத்தை அறிவித்து, அவைகளைக் கிறிஸ்தவ கிராமங்களாக்க முயற்சிக்க வேண்டும்.

(b) ஒவ்வொரு கிறிஸ்தவனும் மேற்சொல்லியபடியதான தங்கள் கிராமங்களில் ஒன்றை, தன் கிராமமெனப் பாவித்து, (1) அதற்காக விசேஷமாய்த் தான் தனிமையாயும், கூடுமானால் ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு கூட்டமாயும் தினந்தினமும் ஜெபித்துவரவேண்டும். (2) தான் தனிமையாக அல்லது தான் சேர்த்துக்கொண்ட கூட்டத்தாரோடு கூடி, வாரத்தில் ஒரு முறையாவது தன் கிராமத்துக்குப் போய்ச் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். (3) இப்படியாக பற்பல கிராமங்களுக்காகவும் குடியிருப்புகளுக்காகவும் ஜெபித்து உழைத்துவரும் யாவரும் தங்கள் சபையின் போர் வீரரோடு சேர்ந்து, பிரதி ஆதிவாரத்திலும் ஒரு கூட்டம் வைத்து, தங்கள் தங்கள் கிராமங்களில் நடத்தப்பட்டவரும் ஊழியம், அவைகளில் காண்படும் அனுகூலம் பிரதி கூலங்களையிட்டுப் பேசிக்கொண்டும், ஆலோசனைகள் செய்துகொண்டும் ஜெபிக்கவேண்டும். (4) தேவ ஊழியக்காரர் ஒவ்வொருவரும் தன் தன் சபையின் சுற்றுள்ள கிராமங்கள், குடியிருப்புகளில் புதிதாய்ச் சபைகளுண்டாகும்போது, அவைகளில் போய்ப் பாடம் படிப்பிக்கத்தக்கவர்களாகத் தங்கள் தங்கள் சபைகளிலுள்ள சிலருக்காவது நன்றாய் வாசிக்கக் கற்பிப்பதோடு, வேத பாடமும் புகட்டி வேலையிற் பயிற்சிக்கவேண்டுமென்பதே.

இவ்வேற்பாடுகளைத் தேவ ஊழியரும் பல சபையாரும் சந்தோஷத்தோடொப்புக்கொண்டு, இவைகளின்படி உற்சாகமாய்த் தகவலானமட்டும் செய்துவருகிறார்கள்.

இதுவுமல்லாமல் சமீபத்திலுள்ளவர்களும் எளிதாய்க் கூடிக்கொள்ளக்கூடியவர்களுமான தேவ ஊழியர்களைக் கூட்டம் கூட்டமாகப் பிரித்து, அத்தத்தக் கூட்டத்தார் தாங்கள் குறிப்பிட்டுக்கொள்ளும் தங்கள் எல்லைக்குட்பட்ட ஓரோர் கிராமத்தில் பிரதி வியாழக்கிழமையும் கூடி ஜெபிக்கவும், கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

மேலும் மாதந்தோறும் நிலாவெளிச்சமுள்ள ஒரு வாரத்தைப் பிரத்தியேகப்படுத்தி, அந்த வாரத்தில் அத்தத்த பாஸ்டரேற்றில் அல்லது பாஸ்டரேற்றுகளிலுள்ள தேவ ஊழியக்காரரெல்லாரும் ஒரு இடத்

தில் கூடி, ஜெபத்திலும் பாடங்கள் கற்றுக் கொள்வதிலும் அத்தினங்களைப் பின்னிடுவதுமாத்திரமல்ல, சுற்றுக் கிராமங்களில் சுவிசேஷத்தைக் கூறிப்பறிவிக்கவுமாக ஏற்பாடு செய்து நடைபெற்றுவருகிறது. இவ்வித முயற்சிகளின் பலனாக, பழைய சபைகளில் சிலர் புதிதாய் மார்க்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். புதிதான சில இடங்களிலும் சிலர் மார்க்கத்தை அனுசரிக்கிறவர்களாயிருக்கிறார்கள். சபைகளுக்குள் அதிக ஊக்கம் காணப்படுகிறது. தேவ ஊழியர் அதிக ஜெப வாஞ்சையுள்ளவர்களாகியிருக்கிறார்கள். புதுச் சபையில் போய் வேலைசெய்யத்தக்கவர்களாகச் சபையிலுள்ள சிலர் ஆயத்தப்பட்டுவருகிறார்கள்.

(4) வருஷத்தில் ஒரு தினத்தைச் சுவிசேஷ ஊழியத்துக்கு விசேஷ தினமாகக் குறிப்பிட்டு, அத்தினத்தில் தோர்ணக்கல் அத்தியட்ச மண்டலத்தைச் சேர்ந்த கிராமங்களிலெல்லாம் அங்கங்கேயுள்ள சபையார் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பது. இதைக் குருமாரும் மற்றத் தேவ வீரரான யாவரும் சந்தோஷமாய் அங்கிகரித்துப்போயிருக்கிறார்கள். இவ்வருஷம் விசேஷித்தபிரகாரம் இவ்வேலை நடந்தேறும் என்று நம்புகிறோம்.

இவைகளெல்லாவற்றையும் நினைத்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. பாக்கியநாதன்.

ஜெர்க்கர்லா மிஷன்.

ஐதராபாத்து சமஸ்தானத்தில் வெகுகாலமாய் S. P. G. மிஷன் சங்கத்தார் தெலுங்கருக்குள் சுவிசேஷவேலை யாதொன்றுஞ் செய்யவில்லை. ஒன்பது வருஷங்களுக்கு முன்தான் இப்பாகத்தில் சுவிசேஷ வேலையை இச்சங்கமானது ஆரம்பித்தது. அவர்களுடைய முதல் மிஷனெரி கனம் A. A. குறோவ்ஸ் ஐயரவர்கள். தகுந்த மிஷன்தானங்கண்டுபிடிக்கும் பொருட்டு ஓராண்டாக பல இடங்களுக்குப்போய், இறுதியில் ஜர்க்கர்லா என்னுமிடத்தைக் குறிப்பிட்டு, அங்கே அவர்கள் வேலை ஆரம்பித்தார்கள். இப்பாகத்தில் இதற்குமுன் யாதாமொரு சுவிசேஷப் பிரசங்கவேலை நடந்திருக்கவில்லை. ஜெர்க்கர்லா என்பது ஐதராபாத் நகரிலிருந்து கர்னூல் பட்டணத்துக்குச் செல்லும் பாதையில் செக்குந்தராபாத்துக்கு சுமார் ஐம்பத்தாறு மைல் தென்மேற்காயிருக்கிறது. கனம் குறோவ்ஸ் ஐயர் இவ்டத்தில் விஸ்தீரணமான நிலம் 400 ரூபாய்க்கு வாங்கி, அதில் ஓர் சிறுபங்களாவும், சிறு ஆஸ்பத்திரியும், தெலுங்கு ஊழியருக்காகச் சில சிறுவீடுகளும் கட்டினார்கள். இப்பங்களா ஓர் ஐரோப்பியர் வாசம்பண்ணக்கூடிய வசதி பெற்றிலதாயினும், கனம் ஐயரும் அம்மாளும் மகா அசௌகரியங்களின் மத்தியில் தங்கள் அன்பின் ஊழியத்தை அனேக வருஷங்களாக ஆவலோடு நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். தெலுங்கு ஊழியர் இருவரின் உதவியை மாத்திரம் வைத்துக்கொண்டு, மேற்படி போதகரும் அம்மாளும் பதினைந்து மைல் சுற்றளவிலுள்ள கிராமங்களில் அநேகந்தடவைகளில் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைக்கூறி அறிவித்தார்கள். கனம் அம்மாளவர்கள் தங்கள் ஆஸ்பத்திரி வேலையின் மூலமாக இந்துக்கள், மகமதியரான ஜனங்கள் யாவரின் அன்பைக் கவர்ந்துகொண்டு, இந்நாள் வரையிலும் "தாய்" என்றழைக்கப்பட்டுவருகிறார்கள். ஊழியர், பொருட்சகாயமுதலிய குறைவினிமித்தம் மார்க்க ஆராய்ச்சிபண்ண விரும்பினோருக்கு ஒழுங்கும் திட்டவட்டமுமான கிறிஸ்தவ உபதேசம் கொடுக்க சாத்தியப்படவில்லை. அதுவுமன்றி, இங்கிலாந்துக்கு ரஜாவின்பேரில் செல்லுங்கால், தங்கள்வேலை சரியாய் நடைபெற்றுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமென்பதும் தெளிவில்லாதிருந்தது. இப்படியாக, ஊழியத்தின் எதிர்கால நிலைமையைக் குறித்த சந்தேகங்களினால் மார்க்கத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஊக்கமான முயற்சிசெய்யப் பயந்து நின்றார்கள். இவ்வருஷத்தின் ஆரம்பத்தில் அவர்கள் ரஜாவின்பேரில் சீமைக்குச் செல்லவேண்டியதாயிற்று. மகாகனம் சென்னை, தோர்ணக்கல் அத்தியக்ஷரிருவருடைய ஏற்பாட்டின்

படி, சிங்கரேனி மிஷன் விசாரணைக்குருவாகிய கனம் D. S. தாவீது ஐயரவர்கள் இம்மிஷன் காரியாதிகளையும் மேல்விசாரித்து வருகிறார்கள்.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் சிங்கரேனி மிஷனைச்சேர்ந்த கனம்: P. ராயப்பன் பிரசங்கியாரை அம்மிஷனில் சுவிசேஷ ஊழியஞ் செய்யும்படி உத்தரவு பண்ணியிருக்கிறார்கள். ஆகவே Mr ராயப்பனும் கனம் ஐயரவர்களும் பெப்ருவரி மீ 27உ அவ்விடம் போய், கனம் குறோவ்ஸ் ஐயரவர்களிடமிருந்து மிஷன் கணக்குகளை மார்ச்சு மீ 31உ ஒப்புக்கொண்டார்கள். ஐரோப்பிய மிஷனெரி அவர்களும் அம்மாளும் அந்நாள் சாயரட்சை சுயதேசம் புறப்பட்டனர். அத்தருணத்தில் இந்துக்களும் மகம்மதியரும் பெருங்கூட்டமாய்வந்து, கண்ணீரும் கையுமாய் கனம் ஐயருக்கும் அம்மாளுக்கும் பயணோபசார வந்தனம் அளித்தார்கள். அந்நாள் முதல் இம்மிஷன் தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்தின் ஓர் மிஷனாக இருந்து வருகிறது.

Mr. P. ராயப்பன் ஏப்பிரல் மாசம் முதல் ஜெர்கலாவில் குடும்பசகிதம் வசித்து, அங்கு முன்னாகவே இருந்த இரண்டு உபதேசிமாருடன் சுவிசேஷவேலை விமரிசையாய் நடத்திவருகின்றனர். ஜூன் மீ 20உ முதல் இருபது பேரடங்கிய நாலு குடும்பத்தினர் மார்க்க ஆராய்ச்சிக்காரராய் கிறிஸ்தவபோதனை கிரமமாய் அடைந்து வருகிறார்கள். சாயந்தர வேளைகளில் Mr. ராயப்பனும் உபதேசிமாரிருவரும் கிறிஸ்துமார்க்க ஆராய்ச்சிக்காரரைச் சந்தித்து, அவர்களுக்கு உபதேசித்து வருகிறார்கள். காலை நேரங்களில் மூன்று மைலுக்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று, சுவிசேஷப் பிரசங்கவேலை நடத்திவருகிறார்கள். மார்க்க ஆராய்ச்சிக்காரராய் அமைந்துள்ளவர்களில் பதினைந்து பேர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களில் பீமன்னா என்பவன் சூத்திரன். மற்றவர்கள் மாலர்கள். பீமன்னா கனம் குறோவ்ஸ் ஐயரவர்களின் வண்டிக்காரன். முன்னமே அவன் கிறிஸ்து மார்க்கத்தில் அதிக வாஞ்சையுள்ளவனாயிருந்தான். இப்போது அவனும் வேறே இருவரும் வாசிக்கக்கற்று, தங்கள் சொந்த வார்த்தைகளில் ஜெபம் பண்ணக்கூடியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கூடிய சீக்கிரத்தில் ஞானதீக்ஷை பெறுவார்கள். கனம் குறோவ்ஸ் ஐயரவர்கள், அம்மாள்முதலான இந்த தேவ ஊழியரின் மெய்யான சுயவெறுப்பின் ஊழியம் இப்போது பலன் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. இச்சுவிசேஷ ஆரம்ப வேலையில் நண்பர்களின் உற்ற அனுதாபமும் ஊக்கமுமான ஆதரவும் ஜெபமும் இன்னும் தேவையே.

கனம் D. S. தாவீது ஐயரவர்களும் அம்மாளவர்களும் டிசம்பர் மீ 19உ ஜர்க்கர்லாவுக்குப்போய், கிறிஸ்மஸ் முந்தின இரவு சிங்கரேனிக்குத் திரும்பிவந்தார்கள். கனம் ஐயரவர்கள் 13 பேரை பரி. ஞானஸ்நானத்தினால் கிறிஸ்து சபையில் சேர்த்தார்கள். அந்த ஊரிலுள்ள ஜனங்களின் விரோதம் மெத்த. இம்மிஷனின் முதற்பலன்களாகிய இவர்கள் மிகுந்த துன்பத்தின் மத்தியிலும் விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்கவும், சுவிசேஷத்தின் வல்லமைக்குச் சாட்சியாக அப்பாகத்தில் விளங்கவும் கர்த்தர் கிருபை அருளும்படி ஊக்கமாய் ஜெபித்து வர நண்பரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு நியாயங்கள்.

மாதத்தின் ஒவ்வொரு தினத்துக்கும் ஒவ்வொரு வேதவாக்கியமாக பின்வரும் 31 வேதவாக்கியங்களையுங்கொண்டு, ஆண்டவர் தாமே பேசி, சிலராவது தங்களுடைய முக்கியக் கடமையையும் சலாக்கியத்தையும் உணர்ந்துகொள்ளவும் சுவிசேஷ ஊழியத்தைச்செய்ய ஏவப்படவும் வேண்டுமென்ற ஜெபத்தோடு இந்நியாயங்கள் கூறப்படுகின்றன:—

1. அநாதி காலமுதல் சுவிசேஷ ஊழியமே ஆண்டவருடைய முறை.

"உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி." (வெளி. 13: 8.)

2. ஆத்ம ஆதாயம் பண்ணுவதே தேவ சித்தம்.

எல்லா மனுஷரும் ரக்ஷிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவையடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2: 3, 4.)

3. சுவிசேஷ ஊழியமே ஆண்டவருக்கு அதிகப்பிரியம்.

"பைத்தியாகமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கத் தேவனுக்குப்பிரியமாயிற்று.'! (1 கொரி. 1: 21.)

4. சுவிசேஷ ஊழியமே தேவ அன்பின் பரிபூரணத்தின் நோக்கம்.

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் . . . . . தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் . . . . . அவராலே உலகம் ரக்ஷிக்கப்படுவதற்காகவே அவனை அனுப்பினார்." (யோவான் 3: 16, 17.)

5. ஆண்டவருடைய முதல் ஈவாக வேதாகமத்தில் காணப்படுவது பரலோக வாசிகளுக்கல்ல, புறதேசமாகிய இப்பூலோகத்திலுள்ள மனுஷனுக்கே.

"இதோ பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவிதப்பூண்டுகளையும் விதை தரும் கனி மரங்களாகிய சகலவித விருக்ஷங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்." (ஆதி. 1: 29.)

6. சுவிசேஷ ஊழியமே ஆண்டவருடைய ஊழியத்தில் அவரோடு உடன்பங்காளிகளாகுதலென்பதற்கடையாளம்.

"நான் அவர்களிடத்தில் பேசியும் அவர்கள் கேட்கவில்லை." (எரேமியா. 35: 17.) "பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால், எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10. 14.)

7. கிறிஸ்துவின் பிறப்போடு வந்த முதற் செய்தி சுவிசேஷ செய்தியே.

"எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கும் நற்செய்தி. (லூக்கா. 2: 10.)

8. கிறிஸ்துவானவர் பாலனாக முதல் முதல் பெற்ற காணிக்கை அயல் தேசத்திலிருந்தே.

8. "கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைத்திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்." (மத். 2: 11.)

9. இவ்வுலகத்திலிருந்து கிறிஸ்துவானவர் கடைசியாகப்பெற்றுக்கொள்ளும் காணிக்கையும் குணப்பட்ட ராஜ்யங்களே.

"உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின" (வெளி. 11: 15.) "யார் நமது காரியமாய்ப்போவான்?" (ஏசாயா 6: 8.)

10 கிறிஸ்துவானவர் முதல் முதல் திருவாய் மலர்ந்தருளியதாய் வேதாகமத்தில் சொல்லப்படும் வார்த்தைகள் சுவிசேஷ ஊழியத்தைச் சார்ந்ததே.

"என் பிதாவுக் கடுத்தவைகளில் நானிருக்க வேண்டியதென்றறியீர்களா?" (லூக்கா 2: 49.)

11. கிறிஸ்துவைப்பற்றி முதல் முதல் பகிரங்கமாய் உரைக்கப்பட்ட வாழ்த்துதல் மொழிகள் அவரது சுவிசேஷ ஊழியத்தை விளக்கும் வார்த்தைகளே.

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1: 29.)

12. கிறிஸ்துவானவருடைய ஜாக்ரதையைப்பற்றிவரும் முதல் குறிப்பு சுவிசேஷ ஊழியத்திற்கு ஆயத்தமானதே.

"அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள்." லூக். 2: 46.)

13. கிறிஸ்துவின் முதல் சீஷனான அந்திரேயா சுவிசேஷ ஊழியக்காரனே.

"அவன் முதலாவது தன் சகோதரனைக்கண்டு . . . . அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான்." (யோவான் 1: 41; 42.)

14. இயேசுவானவர் மனுஷருக்குப் படிப்பித்த முதல் ஜெபம் சுவிசேஷ ஊழியத்தை யடுத்த ஜெபமே.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக." (மத்தேயு 6: 10.)

15. ஒரு மைப்பாட்டின்பேரில் கிறிஸ்துவானவர் செய்த போதனை சுவிசேஷ ஊழிய காரணம் பற்றியதே.

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக . . . அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவான் 17: 21.)

16. அன்பைப்பற்றி கிறிஸ்துவானவருடைய போதனை சுவிசேஷ ஊழியகாரணம் பற்றியே.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள். யோவா. 13: 35.)

17. ரக்ஷிக்கப்படாதவர்களுக்காக உழைப்பதாகும்சுவிசேஷ ஊழியமே பூமியிலிருக்குமட்டும் கிறிஸ்துவின் உன்னதநோக்கமாயிருந்தது.

"இழந்துபோனதைத் தேடவும் ரக்ஷிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்." (லூக்கா 19: 10.)

18. கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த பின் சொன்ன முதல் செய்தி சுவிசேஷ செய்தியே.

"என் சகோதரரிடத்திற்குப்போய் . . . அவர்களுக்குச்சொல்லு." (யோவான் 20 : 17.)

19. கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த பின் கொடுத்த முதல் கட்டளை சுவிசேஷ ஊழியத்தைப்பற்றியே.

"பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களையனுப்புகிறேன்." (யோவான் 20: 21.)

20. கிறிஸ்துவானவர் பரமேறும் சமையம் கொடுத்த கடைசிக் கட்டளையும் சுவிசேஷ கட்டளையே.

"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்." (மத். 28: 19.)

21. கிறிஸ்துவானவர் முதலாந்தரம் வந்தது சுவிசேஷ ஊழியத்தைச் செய்யவே.

"தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார் . . . இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வையும் பிரசித்தப்படுத்தவும், இருதயம் நறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் என்னை அனுப்பினார்." (லூக்கா 4: 18.)

22. இரண்டாம் வருகை சுவிசேஷ ஊழியத்திற்குப் பலனளிக்கவாம்.

"ரக்ஷிப்பை யருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபி. 9: 28.)

23. ஒரு ஏற்பாட்டின் முடிவு சுவிசேஷ ஊழியத்தால் பூரணமாகும்.

"ராஜ்யத்தினுடைய இந்தச்சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்." (மத். 24: 14.)

24. பரலோகத்திலே சந்தோஷம் உண்டாகும் என்று சொல்லப்படும் ஒரே சமயம் எது என்றால், சுவிசேஷ ஊழியத்திற்குப் பலன் உண்டாகும்போதே.

"மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்." (லூக்கா 15: 7.)

25. வேதாகமத்தில் வரும் முதலாவது ஜெபம் ரக்ஷிக்கப்படாத ஒரு மனுஷனுக்காக செய்யப்பட்ட சுவிசேஷ ஊழிய ஜெபமே.

"ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கை . . . குணமாக்கினார்." (ஆதி. 20: 18.)

26. வேதாகமத்தில் பிரசங்கத்தைப்பற்றி வரும் கடைசிக் குறிப்பு சுவிசேஷ பிரசங்கத்தை யடுத்ததே.

"சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்தியசுவிசேஷத்தை யுடையவனாயிருந்தான்." (வெளி 14: 6.)

27. சுவிசேஷவேலை நம்மைப் பொறுத்த கடமை.

"சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், எங்களை உத்தமரென்றெண்ணினபடியே." (1 தெசலோ. 2: 4.) சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! (1 கொரி. 9: 16).

28. நாம் சுவிசேஷ ஊழியத்தைச் செய்து இழந்துபோனதைத் தேடி ரக்ஷிக்காவிட்டால், நமக்கே கெடுதி வந்துசேரும்.

"மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி, அதை அறியோமென்பாயாகில் இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக்காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாக பலனளியாரோ?" (நீதிமொழிகள் 24: 11, 12.)

29. ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதான சுவிசேஷ ஊழியம் நமக்கு பூரிப்புண்டாக்கும்.

"நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பது போல, நாங்களும் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருக்கிறதை . . ." (II கொரி. 1: 14.)

30. ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதான சுவிசேஷ ஊழியம் நமக்கோர் சந்தோஷத்தையும் அருளும்.

"எங்களுக்குக் . . . கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? . . . நீங்களல்லவா? . . ." (1 தெச. 2: 19.)

31. ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதான சுவிசேஷ ஊழியமே இனிவரும் மகிமையையும் தரும்.

"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நக்ஷத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." (தானி. 12: 3.)

கவனிப்பு. சுவிசேஷ ஊழியத்தில் அனுபவசித்தியடைய ஆசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் இவற்றைத் தன் வீட்டின் ஓர் பாகத்தில் தொங்கவைத்தாவது சுவரில் ஒட்டவைத்தாவது மாதாமாதம் அந்தந்த தேதிக்குரிய நியாயத்தையும் வேதவாக்கியத்தையும் வாசித்து, ஜெபத்தோடு தியானித்து, அந்தந்த நாளின் கடமைகளில் பிரவேசித்தால், சுவிசேஷ பிரபல்ய ஆவியாலும் சுவிசேஷ ஊழியத்திலும் தேறலாம் என்று கிறிஸ்துவுக்குள்ளான அன்புடன் ஆலோசனை சொல்லப்படுகிறது. A. S.

அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; அறுப்புக்கு எஜமான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளக் கடவோம்"

வியாழக்கிழமை இந்திய மிஷனெரி சங்கத்திற்காக பிரதிவாரம் சபை மொத்தமாக ஜெபிக்கும் நாள்.

இந்திய மிஷனெரி சங்க மன்றாட்டு நாள். 1916-ம் ௵ பெப்ருவரி ௴ 13௳.

கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே,

இந்த அத்தியக்ஷாதீனத்தின் மிஷனெரி ஊழியத்திற்காக சபை மொத்தமாய் விண்ணப்பஞ்செய்யும்படி 'ஜெப அழைப்பு' ஒன்று இத்துடன் அனுப்பப்படுகிறது. உங்கள் அத்தியக்ஷராக நானும் அதில் சேர்ந்து கொள்ளுகிறேன். பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறாகிய பெப்ருவரி ௴ 13௳ நமது மிஷனெரி ஊழியத்தின் விசேஷித்த மன்றாட்டு நாளாக இவ்வத்தியக்ஷ மண்டலத்திலுள்ள சபைகளிலெல்லாம் ஆசரிக்கப்படும்படி விரும்புகிறோம். மத்தியஸ்த மன்றாட்டு நாளாக நியமிக்கப்பட்ட தினங்களில் இதற்கு முன்னமே இவ்வத்தியக்ஷாதீனத்தில் வழங்கிவரும் ஜெபமுறைமை, விசேஷ சங்கீதங்கள், பாடங்கள், நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம் முதலியவைகளை இந்த விண்ணப்ப நாளிலும் உபயோகிக்க அனுமதி கொடுக்கிறோம்.

மேலும், நம்முடைய மிஷனெரி சங்கத்தின் ஊழியங்களுக்காகவும் இவ்வத்தியக்ஷாதீனத்திலுள்ள புறமதஸ்தருக்குள் நடத்தப்படும் சுவிசேஷப் பிரசங்க வேலைக்காகவும் ஜனங்கள் பொதுவான ஆராதனையில் மாத்திரமல்ல, தங்களுடைய வீடுகளிலும் ஒழுங்காய்ப் பிரார்த்தனை செய்துவரும்படி குருமாரும் மற்றும் தேவ ஊழியரும் ஏவி எழுப்பிவிடுவார்களென்று நம்புகிறோம்.

கர்த்தருடைய ஆவியானவர் நமக்காக வேண்டுதல்செய்து, நமது பெலவீனங்களில் நமக்கு உதவி செய்வாராக.

காலை ஆராதனை.	மாலை ஆராதனை.
சங்கீதங்கள்: 45, 46 47,	67, 97; 100, 117.
பாடங்கள்: ஏசாயா. 49.	ஏசாயா 61.
பரி. யோவா. 4: 31—43.	அப். 17: 16—32.
நிருபவாக்கியம். எபே. 2: 11.	
சுவிசேஷ வாக்கியம். பரி. யோவா. 10: 7—16.	

E. H. M. உவாலர்,
திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷர்.

ஜெப அழைப்பு.

எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல் முழுவதும் இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே (கர்த்தருக்கு நினைப்பூட்டுகிறவர்களே) நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள். (ஏசா. 62: 6, 7.)

கடந்த பதிமூன்று வருஷங்களாகக் கருணைமிகுத்த கர்த்தர் நமது அருமையான மிஷனெரி சங்கத்திற்குத் தமது கிருபையின் ஐசுவரியத்தின்படியே தமது மகிமைக்குப் புகழ்ச்சியாக அநுக்கிரகித்துவந்திருக்கும் அளவற்ற இரக்கங்களையும் கிருபைகளையும் நன்குணர்ந்தவர்களாய், இப்பதி நான்காம் வருஷ ஆரம்பத்தில் நன்றியறிந்த இருதயத்துடன் திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷாதீன சபைகளனைத்தும் இவ்வேலைக்காக கர்த்தரைநோக்கி விண்ணப்பம்பண்ண தேவனுடைய நாமத்தினால் அழைக்கிறோம்.

அருள்நாதர் திருவுளம்பற்றிப்போன கடைசிக் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டுமென்ற ஒரே எண்ணத்தினால் பயத்தோடும் நடுக்கத்தோடும் அற்பமாய் இச்சங்கம் 1903-ம் ௵ பெப்ருவரி ௴ 12௳ ஆரம்பிக்கப்பட்டது. 'இதோ சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்று வாக்களித்த ஆண்டவர் இப்பதிமூன்று வருஷக்காலமாய் தமது வாக்குப்பிரகாரம் நம்மோடுகூட இருந்து, தமது அளவற்ற ஐசுவரியத்தின்படியே நம்மை ஆசீர்வதித்து வந்திருக்கிறார் என்று உண்மையாய்ச் சாட்சி பகரக்கூடுமல்லவா? இதுவரை ஆதரித்தவர் இன்னும் ஆதரிப்பார். கடந்தகாலத்தில் தமது கண்ணின் கருப்பு விழியைப்போல இப்பால்ய சங்கத்தைப் பாதுகாத்த ஆண்டவர் உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் அதைப் பரிபாலிப்பார் என்பது நிச்சயம்.

ஆயினும் 'இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும்' என்கிறார். எந்த மிஷனெரி ஊழியத்திற்கும் ஜெபமே ஆதாரம், ஜெபமே பெலன், ஜெபமே ஜெயம். ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருந்த பின்புதான் முதல் மிஷனெரிமார் அனுப்பப்பட்டார்கள். ஜெபத்தினால்தான் அவர்கள்வேலை பரவினது. ஜெபத்தினாலேயே புது இடங்களுக்குப் போக அவர்கள் தேவ நடத்துதல் பெற்றார்கள். ஜெபத்தினாலேயே எபேசு, கொரிந்து முதலிய பேர்போன விக்ரக அரண்கள் தேவ ஊழியர்முன் பணிந்து விழுந்தன. சுவிசேஷ ஊழியம் நடப்பிக்கும் நாமும் ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருப்பது எவ்வளவு அவசியம்! சாத்தானின் அரண்களோடு யுத்தம்செய்ய நமது பிரதிநிதிகள் முன்னணிக்குச் சென்றிருக்கிறார்கள். நாம் நமது கையை வானத்திற்கு நேராய் ஏறெடுக்கையில் அவர்கள் மேற்கொள்ளுவார்கள். நமது கையைத் தாழவிடுகையில், சத்துரு மேற்கொள்ளுவான். உயர்த்தப்பட்ட நமது கரங்கள் அசந்துபோகாமல், ஒரே நிலையாயிருக்கப் பார்த்துக்கொள்ளுவோமாக. தேவாவாவியாகிய எண்ணெய் ஓயாமல் இறங்கிவரப்பண்கிற பொற்குளாய்கள் (சக. 4: 12, 13) பேராவலோடும் விசுவாசத்தோடும் ஜெபத்தில் அநுதினமும் போராடுகிறவர்களே. அப்படியானால், பக்திவிசுவாசத்தோடே, தைரியமாய்க் கர்த்தருடைய கரத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்த்தவர்களாய், மிகுந்த வணக்கத்தோடும் ஊக்கத்தோடும் ஜெபத்தில் தரித்திருப்போமாக.

என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் உடன் ஊழியர்,

G. தேவதாசன், பொக்கிஷதார். A. S. அப்பாசாமி, பிரசிடென்று.
V. சாமுவேல், பொக்கிஷ காரியதரிசி. J. அன்புடையான், செக்ரற்றெரி.

ஜெப விஷயங்கள்.

I. தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனம்.

(a) மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள், தோர்ணக்கல், சிங்கரேனி, ஜெர்க்கர்லா, கம்மா மேட்டு மிஷன்களிலுள்ள மிஷனெரிமார், குருமார், பட்டாபிஷேகத்துக்கு ஆயத்தப்படுகிறவர்கள், சுவிசேஷ ஊழியர்; சபைகள், புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள், ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்கள், மார்க்க ஆராய்ச்சிக்காரர், புறமதஸ்தரான இந்துக்கள், மகமதியர் இவர்களுக்காக ஜெபம்.

(b) இவ்வத்தியக்ஷாதீனத்தில் ஸ்தாபித்திருக்கும் சிறுபிள்ளைகள் மிஷன், மதுவிலக்கு சங்கம்; உள்நாட்டு, அயல்நாட்டுச் சுவிசேஷ பிரபல்ய சங்கம்; தாய்மார் சங்கம், ஸ்திரீகளின் மிஷனெரி சங்கம்; ஜனசமுதாய சங்கம்—இவைகளுக்காக ஸ்தோத்திரமும் ஜெபமும்.

(c) போர்டிங், கிராமப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணாக்கர்; நெசவு, தச்சுவேலை, விபசாய முயற்சி; உபதேசிமார், பயிற்சிசாலை, புாடக்கூட்டங்கள்; சுதேச ஆலோசனை சங்கம், சுயஆதரவு முறைகள்—இவைகளுக்காக ஜெபம்.

(d) அத்தியக்ஷாதீன முழுவதிலும் சுவிசேஷ பிரபல்ய ஊழிய சம்பந்தமாய்க் கடந்த வருஷத்தில் சபையாரும் ஊழியரும் காண்பித்துவரும் உற்சாகத்திற்காக துதி. நாளது வருஷத்தில் விசேஷ ஒழுங்குகளுடன் ஜனங்கள் செய்துவரும் சுவிசேஷ வேலை மிகுந்த பலனைக் கொண்டுவரும் படியாகவும்; நிஜாம்ராஜ்யமட்டுமல்ல, அதற்கடுத்த நாடுகளும் தோர்ணக்கல் அத்தியக்ஷ மண்டலத்துக் கிறிஸ்தவர்களால் ரக்ஷகருக்குச் சொந்தமாகும்படி ஜெபம்.

II. பளியர் மிஷன்.

1. பளியருக்குள் உழைக்கும் பிரசங்கிமார்; கிறிஸ்தவர்கள், மார்க்க ஆராய்ச்சிக்காரர், ரக்ஷா பெருமானை நம்பாத மலைவாசிகள், பளியருக்குள் நடக்கும் பள்ளிக்கூடவேலை, சுவிசேஷவேலை இவைகளுக்காக ஜெபம்.

2. பளியர், மன்னாக்களுக்குள் சுவிசேஷ ஊழியம் செய்வதற்குவேண்டிய ஆட்கள் கிடைக்கும்படியாக ஜெபம்; மிஷன் ஸ்தானத்திற்காகச் செய்யும் ஏற்பாடுகள் சித்திபெற ஜெபம்.

III. திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனம்.

(a) மகாகனம் அத்தியக்ஷரவர்கள், குருமார், மற்றும் தேவ ஊழியர், சபையார் யாவரும் கர்த்தருடைய ஆவியானவரால் சம்பூரணமாய் நிரப்பப்படவும், மிஷனெரி ஊழியமே சபையின் பிரதம வேலையென்று யாவரும் உணர்ந்து, உள்நாட்டில் கிறிஸ்தவர்கள் சுதாவாயும் அதிக உற்சாகமாயும் சுவிசேஷப் பிரசங்கவேலை செய்யவும், அயல்நாட்டு சுவிசேஷ ஊழியத்தை இன்னும் அதிகமாய் உள்ளக்கனிவோடும் உண்மையான வாஞ்சையோடும் தாபரிக்கவும் ஜெபம்.

(b) இவ்வத்தியக்ஷாதீன மண்டலம் முழுவதிலும் நாளது வருஷம் ஏகமாய் நடத்தப்படும் சுவிசேஷ முயற்சியினால் மிகுந்த பலனுண்டாகவும்; புறமதஸ்தர் திரள்திரளாகத் திருச்சபையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற அவாவு கிறிஸ்தவர்கள் யாவரையும் ஆட்கொள்ளவும்; அவ்வாஞ்சையினால் ஏவப்பட்டு, கிறிஸ்தவர் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுவதுமன்றி, சுவிசேஷத்தைப் புறமதஸ்தருக்கு ஆத்திரமாய்க் கொடுக்கும் திராணியுண்டாகவும் ஜெபம்.

(c) தோர்ணக்கல்லில் மிஷனெரி ஊழியம் செய்வதற்குத் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கும் சகோதரனுக்காகவும், இன்னும் வேண்டிய ஆட்களும் வழிவகைகளும் கைகூடும்படியாகவும் ஜெபம். சுவிசேஷ ஊழியத்திற்காக விண்ணப்பத்தில் இரவும் பகலும் அமர்ந்திராத ஜாமக்காரர் தொகை பெருகும்படியாக ஜெபம்.

நடபடி ஆகம ஆராய்ச்சிக் குறிப்புகள்.

இது மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களால் தமிழ்ச் சபையில் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையை விர்த்திபண்ணும் நோக்கமாக எழுதப்பட்டது. சி. எம். எஸ். ஜில்லா ஆலோசனை சங்கத்தார் இப்புஸ்தகத்தை தேவ ஊழியருக்கு பாதிக் கிரையத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள். கனம் C. G. ஸ்டேப்லி ஐயரவர்கள் தங்கள் விசாரணைக் குட்பட்ட நாசரேத் மிஷன் சபை ஊழியருக்கும் கலாசாலை மாணவருக்கும் இப்புஸ்தகம் அளித்து, நாளது வருஷத்தில் நடத்தும் சுவிசேஷ முயற்சிக்கு ஆயத்தமாக "நடபடி" ஆகமத்தைப் படிக்கும்படி தக்கஏற்பாடுகள் செய்கிறார்கள். கிரையம் அணா 5. இந்திய மிஷனெரி சங்க செக்ரற்றரியிடமிருந்து பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

பெப்ருவரி 1916. Vol. XIII. No. 2.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

மகாகனம் அத்தியக்ஷரவர்களும் சி. எம். எஸ் ஜில்லா ஆலோசனைச் சங்கமும்.

நாளது மீ 9உ காலையில் பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்தில் பரி. நற்கருணை ஆராதனை நடந்த பின்னர், நூற்றாண்டு சபாமண்டபத்தில் 'சர்ச்சு கவுண்சல்' கூட்டம் நடைபெற்றது. மகாகனம். அத்தியக்ஷரவர்கள் கவுண்சல் பிரசிடென்றாக விஜயமானார்கள். கவுண்சல் பெயரால் கனம் M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் பிஷப் அவர்களுக்கு ஏற்ற வார்த்தைகளில் நல்வரவு கூறினார்கள். பிஷப் மார்ளி, உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் இருவருக்கும் கவுண்சிலில் யாதாமொரு சம்பந்தமில்லாதிருந்தது பெரிய குறைவாக கவுன்சல் மெம்பர்களில் புலர் அபிப்பிராயப்பட்டதண்டு. இப்போது மகாகனம்: உவாலர் அத்தியக்ஷரவர்கள் இக்குறைவை நீக்கி, கவுண்சலுடன் நெருங்கிய ஐக்யமுள்ளவர்களாய் வந்திருப்பது ஓர் பெரிய சலாக்கியமும் சபைக்குப் பாக்கியமுமென்று சொன்னார்கள்.

மாறுத்தரமாக, அத்தியக்ஷரவர்கள், தாங்கள் திருநெல்வேலிச் சீமைக்கு வரும்படி தீர்மானம்பண்ணின விஷயத்தையும், சர்ச்சு கவுண்சல்கள் சம்பந்தமாய் தாய்ச்சங்கத்து நோக்கம் யாதுவென்பதையும், ஓர் அத்தியக்ஷாதீனத்தின் அவயவமாக சர்ச்சு கவுண்சலின் கடமை யாதென்றும் வெகு தெளிவாய் எடுத்துக்காட்டினார்கள். அவர்களுடைய வார்த்தைகளைச் சுருக்கமாய் இங்குவரைவோம்.

லண்டன்மாநகரத்திலிருப்பதுதான் மிகவும் பிரயோஜனமாயிருக்குமென்று என்னுடைய நண்பர் பலர் சொன்னார்கள். திருநெல்வேலி சபையின் மாட்சிமையையும், கவுண்சல் முதலிய நேர்த்தியான ஒழுங்குகளையும் அறிந்திருந்ததால், அச்சபையை இன்னும் முன்னுக்குக்கொண்டுவருவதற்கு நான் உதவியாயிருக்கலாமென்ற எண்ணத்தினால் அத்தியக்ஷ ஊழியத்தை ஏற்றுக்கொண்டேன். இந்த சர்ச்சு கவுண்சலின் பிரசிடென்றாக நான் நியமிக்கப்பட்டிருப்பது திருநெல்வேலி சபை நல்வாழ்வில் முன்னேறிச்செல்வதற்கான ஓர் படி என்று சொல்லவேண்டும்.

தாய்க்கமிற்றிமாரின் செக்ரற்றெரியாக இருந்திருப்பதால், கவுண்சல்களின் நோக்கமும் வேலையும் என்னவென்று அவர்கள் எண்ணுவதை உங்களுக்குத் திட்டமாய் அறிவிக்கக்கூடும். கவுண்சல்கள் ஏற்றகாலத்தில் 'சினட்' என்னும் அத்தியக்ஷ மகா சபை உண்டாவதற்குக் கருவிகளாயிருக்கவேண்டுமென்பதே தாய்க்கமிற்றிமாரின் நோக்கம். ஆகவே, 'மத்திய ஆலோசனைச் சங்கம்' ஒன்று ஏற்படுவதற்கு நிபந்தனை செய்து, அதில் அத்தியக்ஷரவர்கள் பிரசிடென்றாக இருக்கும்படி விதித்திருக்கிறார்கள். இந்த மத்திய ஆலோசனை சங்கம் 'சினட்' சபையாகவேண்டுமென்பது சர்ச்சு கவுண்சல் விதிகளை ஏற்படுத்தினவர்கள் எதிர்நோக்கின விஷயம். இப்படியே, ஆப்பிரிக்கா கண்டத்து சபைகளில் நடந்துவருகிறது. இந்துதேசத்திலோ இந்நோக்கம் நிறைவேறாததற்குப் பல காரணங்களுண்டு. துரைத்

தனத்தாரோடு சபை சேர்ந்து, அவர்கள் ஆதரிக்கும் க்ஷேப்ளன்மார் இருப்பது ஒன்று. மற்றும் மிஷனெரி சங்கங்களும் ஒரே அத்தியக்ஷாதீனத்தில் வேலைசெய்வது இன்னோர் முகாந்தரம். ஆகவே இந்ததேச சபை விஷயமாய் என்ன செய்யவென்று அறியாமல், தாய்க்கமிற்றிமார் திகைத்துநிற்கிறார்கள். இத்தருவாயில், அதிகத் தேர்ச்சியடைந்திருக்கும் திருநெல்வேலி சபை அவர்களுக்கு உதவிசெய்யக்கூடுமென்று நம்புகிறேன். நம் வழியிலிருக்கும் ஓர் பெரிய தடையென்னவென்றால், மத்திய ஆலோசனைச் சங்கம்' ஒன்று திருநெல்வேலியில் ஏற்படாததே. இதற்கு ஓர் காரணமுண்டு. ஆரம்பத்தில் தெலுங்குநாடு, திருவாங்கூர், திருநெல்வேலி யாவும் ஒரே அத்தியக்ஷாதீனமாயிருந்தது. தூரத்தினிமித்தமும் வேலை மிகுதியினிமித்தமும் இவைகளைச்சேர்ந்த சர்ச்சு கவுண்சல் யாவும் ஒரே மத்திய ஆலோசனைச் சங்கத்துக்குள் வருவது சாத்தியப்படவில்லை. திருநெல்வேலியிலோ சர்ச்சு கவுண்சல் வேலையே மிக்கப் பாரமாயிற்று. இதற்கு நிவிர்த்தியாக பாஸ்ற்றரேற்றுகளுக்கும் சர்ச்சு கவுண்சலுக்குமிடையில் 'சர்க்கிள் கமிற்றிகள்' ஸ்தாபிக்கலாயிற்று. இதின் பலன் என்ன? சர்ச்சு கவுண்சலின் வேலையில் ஒரு பாகத்தை இக்கமிற்றிகள் எடுத்துக்கொள்ள, மத்திய ஆலோசனைச் சங்கத்தின் கடமைகளில் சிலவற்றை சர்ச்சு கவுண்சல் தனக்குள் அடக்கிக்கொண்டது. ஆகவே, அத்தியக்ஷருக்கு சபையின் காரியாதிகளை விசாரித்து ஆலோசனை செய்யும் சர்ச்சு கவுண்சலில் இடமில்லாதுபோயிற்று. இப்படியாக, காரியாதிகள் நடக்கவேண்டிய முறையாய் நடக்கவில்லை. இப்போதோ சபை விஷயங்கள் சரியான ஏற்பாட்டின் பிரகாரம் நடந்தேறத்தக்கதாக அத்தியக்ஷருக்கு கவுண்சலில் சரியான இடம் கொடுத்திருக்கிறது.

சுயஆதரவு, சுயஆழுகை, சுயவிருத்தி ஆகிய மூன்று விஷயங்களும் இவ்வொழுங்குப்பிரகாரம் வரவேண்டுமென்பது முற்காலத்து அபிப்பிராயம். இதினால் விழைந்த தீமைகளுண்டு. தங்கள் ஊழியரை சபைகள் ஆதரித்துவிட்டால், சுயஆதரவு வந்துவிட்டதென்றெண்ணி, மற்றவர்களைப்பற்றி சற்றெங்கினும் கவலைப்படாது விட்டுவிட்டதுண்டு. சபையின் ஜீவனுக்கும் பெலனுக்கும் ஆதாரம் சபைக்கு வெளியேயுள்ளவர்களுக்குச் செய்யும் ஊழியமே. என்றாலும் பணக்குறைவென்று சுவிசேஷ வேலையைமுழுவதும் நிறுத்திவிடுவது சகஜமாயிற்று. தனது காரியத்தையும் க்ஷேமத்தையும் கருதுவதே சபைகளின் தன்மையானது. உகாண்டாநாட்டு டக்கர் அத்தியக்ஷர் சுவிசேஷ பிரபல்ய ஊழியம் சுயஆதரவின் ஓர் பாகம் என்று தீர்மானித்து, தம் சபையின் அநுபவத்தால் காட்டவே, சுவிசேஷ வேலையாகிய சுயவிருத்திக்கு இப்போது முதல் இடம் கொடுக்கப்பட்டுவருகிறது.

சுய ஆதரவை முதல் இடத்தில் வைத்ததினால் விழைந்திருக்கும் மற்றோர் தீமை குருமாரின் தொகையைக் குறைக்கும்படியான எண்ணம் என்கலாம். பணம் குறைகிறது. வழியென்ன? குருமாரின் தொகையைக் குறைத்துவிடுவோம் என்பது சிலர் எண்ணம். அயோத்தி ஐக்யமாகாணத்தில் 10 குருமாரிருந்தபோது சுயபரிபாலன நிலமைக்கு சபைகள் வருவதற்கு வழியில்லாதிருந்தது. 5 குருமாரை வைத்து, வேலை நடத்தவே, சுயஆதரவு வந்துவிட்டதென்று சந்தோஷப்பட்டு, கவுண்சலார் தங்களைத் தேற்றிக்கொண்டதுண்டு. இது சபையின் ஸ்திரத்துக்கு அநுகூலமாகுமா?

ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றும் சர்க்கிளும் தனக்காக மாத்திரம் கவலைப்பட்டு, சபை வாழ்வை மொத்தமாகக் கவனியாதது மூன்றாவதான இன்னோர் தீமை. எனக்குப் போதுமான பணமிருக்கிறது. என் பாஸ்ற்றரேற்றோ, என் சர்க்கிளோ அது செவ்வையாயும் க்ஷேமமாயுமிருக்கும்படி பார்த்துக்கொள்வேன். அதின் சுயஆதரவுநிலை குன்றாதபடி விழிப்பாய் அதின் காரியாதி ஒன்றையே காத்துக்கொள்வேன். மற்றப் பாஸ்ற்றரேற்று, சர்க்கிளைப்பற்றி எனக்குக் கவலையில்லையென்றாற்போல் காரியங்களை நடத்துவது குற்றமே. இது சுயநயமல்லவா?

திருநெல்வேலி சபை சுயவிருத்தியின் முக்கியத்தையும் அவசியத்தையும் உணர்ந்து மிஷனெரி ஊழியத்தைச் செய்துவருகிறது, இது மிகுந்த சந்தோஷத்தை எனக்கு விளைவிக்கும் ஓர் காரியம். நம்மெல்லாரையும் ஒன்றாயிணைத்து, அத்தியக்ஷாதீனத்தின் ஊழியங்கள் சிரத்தையாய் நடைபெறுவதற்கும், 'சினட் சபை' ஏற்பாடாவதற்கும் நமது மிஷனெரி சங்கம் உதவியாயிருக்குமென்று நம்புகிறேன்.

தாய்க்கமிற்றிமாரைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லவும் விரும்புகிறேன். சீமையிலிருந்து வரும் கடைசிக் காசு நின்றுபோகும்வரையும், சுதேச சபைகளுக்குத் தாய்க்கமிற்றிமார் சுயஆளுகை கொடாமல், சீனாவிலோ, ஆப்பிரிக்காவிலோ, இந்தியாவிலோவுள்ள சபைகளில் அதிகாரம் செலுத்திவருவார்களென்பது ஓர் தப்பான எண்ணமே. சுதேச சபைகளை ஆளவேண்டுமென்பது கிஞ்சித்தேனும் அவர்கள் நோக்கமல்ல. ஆனால் ஒரு காரியத்தை அவர்கள் விரும்புகிறார்கள். உலகத்தின் நானா பாகங்களிலும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்துக்கள் தாய்ச்சங்கத்துக்குண்டு. இங்கிலாந்து சபையின் சுத்த உபதேசத்தைச் சபைகள் காத்துக்கொள்ளவும், அவ்வுபதேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறவர்களுடைய அநுபவத்திற்கும் பிரயோஜனத்திற்கும் ஷை சொத்துக்கள் உதவாதபடி இருக்கவும் தாய்க்கமிற்றிமார் கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, இச்சொத்துக்கள் யாவும் 'சர்ச்சு மிஷன் டிரஸ்டு' அசோஸியேஷன்' என்னும் ஏழு மெம்பர்களடங்கிய ஓர் தர்மகர்த்தா சபையின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன. தாய்க்கமிற்றிமாரின் திட்டமான தீர்மானமின்றி, இக்கழகத்தார் ஒரு அடி நிலத்தை விற்கவாவது, ஒத்தி, அடமானம் வைக்கவாவது முடியாது. என்ன நோக்கத்திற்காக சொத்துக்கள் வாங்கப்பட்டதோ அந்நோக்கம் நிறைவேற்றப்பார்ப்பதே அவர்களுடைய கடமை. மிஷனெரிமார் இச்சொத்துக்களின் நிலச்சுவான்களல்ல, அவர்கள் தாய்க்கமிற்றிக்கு ஆலோசனை மாத்திரம் சொல்லுகிறவர்கள். சொத்து விஷயமான தீர்மானங்களில் தாய்க்கமிற்றிமார் சமயாசமயம் தப்பிதம் செய்திருப்பதுண்டு. என்றாலும், சுதேச சபைக்கோ, வித்தியா ஸ்தாபனங்களுக்கோ, வைத்திய வேலைக்கோ எதற்கு ஒரு சொத்து மிகவும் பிரயோஜனமாயிருக்கும் என்று அறியும்போது, அக்கவைக்கு உதவும்படி தீர்மானம் செய்வது தாய்க்கமிற்றிமார் வழக்கம். சொத்துக்களை விற்று, முதலை தாய்க்கமிற்றிமார் கொண்டுபோய் விடுவார்களென்று, சில இடங்களில் நடக்கிற பேச்சு மிகவும் விந்தையாயிருக்கிறது. இதைப்பற்றிப் பயப்படவேண்டியதே இல்லை. சபைக்காகவே இச்சொத்துக்களிருக்கின்றன. கவுண்சல் சொத்தென்றும் கான்பரென்ஸ் சொத்தென்றும் பேசுவது தாய்க்கமிற்றிமாரின் சிறந்த நோக்கத்திற்கு முற்றிலும் விகற்பமே.

ஒரு கேள்வி இப்போ உண்டாகிறது சொத்துக்களின் உபயோகத்தைப்பற்றிய மேற்கண்ட நோக்கம் சிதறாது நடந்தேறும்படி பார்த்துக்கொள்ளும் ஓர் பலமான கமிற்றி திருநெல்வேலியில் உண்டாக்கக்கூடுமாவென்றும், இக்கமிற்றியின் தீர்மானங்களை தாய்க்கமிற்றிமார் தங்களுடைய தீர்மானங்களாக அங்கிகாரஞ்செய்வார்களாவென்றும் பார்க்கவேண்டும். இதைப்பற்றிய திட்டமான தீர்மானமில்லாததால், சபையின் ஊழியம் மிகவும் ஹீனப்பட்டுவருகிறது. இங்கு ஒரு 'தர்மகர்த்தா சபை' ஏற்படுத்தி, சில சொத்துக்களை அது விசாரணை செய்வதற்கு தாய்க்கமிற்றிமார் அநுமதிகொடுக்கும்படி நான் கேட்கப்போகிறேன். ஓர் 'சினட் சபை' ஏற்படுங்கால், சொத்துக்களுக்கு அது தர்மகர்த்தாவாகத் தாராளமாய் இருக்கக்கூடும். அந்த 'சினட் சபை' அத்தியக்ஷரவர்களின் அக்கிராசனாபதியத்திற்குள் இவ்வத்தியக்ஷ மண்டலத்தின் வாழ்வுக்கான சகல ஊழியங்களுக்கும் கைகொடுத்துதவும்.

அத்தியக்ஷராக ஓர் வாத்தை சொல்லுகிறேன். அத்தியக்ஷாதீனமானது சரியான பிரகாரம் விர்த்தியடைவதற்கு ஒரு 'சினட் சபை'யில் மூன்றுபக்ஷத்தார் வேண்டும்.

1-வது, அத்தியகூர். இவர்களுக்குரியவிசே
ஷித்த உத்தரவாதமும கடமைகளுமுண்டு.
இதை மற்றவர்கள் செய்யமுடியாது.2-வது,
குருமார். இவர்களும் விசேஷித்த ஊழிய
மும் உத்தரவாதமும முள்ளவர்களாயிருக்கி
ருர்கள். மற்றவர்களுக்கு இக்கடமை நிறை
வேற்ற அதிகாரமில்லை. 3-வது வே அக
கங்கள், அதாவது குருமாரல்லாத சபை
மெம்பர்கள். இவர்களுக்குரிய வேலைகளு
முண்டு. இவைகளைச் செய்வதற்கு அவர்
களே ஏற்றவர்கள். ஒவ்வொரு வகுப்பாரும்
தம் தமக்குரிய கடமைகளை நன்குணர்ந்து
அவைகளை உத்தமமும் உண்மையுமாய் நி
றைவேற்றும்போதுதான் சபையின் வாழ்வு
வீர்த்தியடையும். தேவ நீர்மானத்தை நி
றைவேற்றவேண்டியது சபையின் கடமை.
அத்தீர்மானமாவது "சகலமும் கிறிஸ்துவுக்
குள் கூட்டப்படவேண்டும்" என்பதே. சக
லமும் இணைக்கப்படவேண்டும்-சபை மாத்
திரமல்ல, சபைக்கு வெளியேயுள்ளவர்க
ளும்; அதாவது சபைக்குதித்த ஊழியங்கள்
மாத்திரமல்ல, சுவிசேஷ பிரபல்ய ஊழிய
மும் இணைக்கப்படவேண்டும். கிறிஸ்துவில்-
சுயத்தை காடவாவது சுயமேன்மை
யைத் தேடவாவது இடமில்லை. பாஸ்ற்ற
ரேற்ற, சர்க்கிள், கான்பரென்ஸ், சவுண
சல் இவைகளின் மகிமையல்ல, கிறிஸ்து
வின் காம மகிமையொன்றே காரியம்.

இவ்வெரே நோக்கம் நிறைவேறத்
தக்கதாக பரிசுத்த ஆவியானவர் நம்மை
நடத்துவாராக.

பத்திராதிபர் குறிப்புகள்.

நமது அருமையான அதிபரஷ்டாவர்கள் பாலையகோட்டைக்கு வந்த மறுவாரம் கஸ்பாவிலுள்ள கமிற்றி மெம்பர்கள் மகா கணம அதிபரஷ்டாவர்களை நமது சபை வண்ணமாயச் சந்தித்து, பரிபாலனர். சபைப் பரிபாலனராகஇருக் குமபடி வருமபி வேணடிக் கொண்டனர் மிஷனரி ஊழியம தவை ஞுக்கு மிக்கப் பிரியமான ஓர் காரியமென் றும், தங்களாலியன்ற உதவி மனப்பூர்வம யளிப்பது, சபை வேலை விர்த்திக்காக தாங் கள் எப்போதும் கவனமுள்ளவர்களாயிருப் பதாக வாக்குரைத்து, "பரிபாலனர்" உத் தியோகத்தைச் சந்தோஷமாய் அங்கீகாரஞ் செய்தார்கள். அவர்களுக்கு மிகவும் நன் றிசொல்லுகிறோம். மேலும், சங்கத்தின் ஸ்திரம் சிற்சில தொகைகளாக வரும் அ தேக காணிக்கையிலிருக்கிறதென்றும், அத் தியகூரானை முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர் களும் சபைகளும் தனித்தனியாகவும் மொ த்தமாகவும் கொஞ்சமாவது காணிக்கை வரு ஷா வருஷம் கிரமமாய் ஓர் முறைப்படி படைக்கும்படி முயலவேண்டுமென்றும் ஆ லோசனை சொன்னார்கள். ஜி. எம். எஸ். தாய்ச் சங்கத்தின் காரியதரிசியாக தாங் கள் உத்தியோகம வகித்த காலத்தில் "வா ரப் பென்னி பண்டு" ஒன்று ஆரம்பித்ததா கவும் அதினால் மிகுந்த பலனுண்டாயிருக் கிறதென்றும் திருவுடன்தபூர்வமாய்ச் சொ ன்னார்கள். தாங்கள் சந்திக்கும் சபைக ளில் சுவிசேஷப் பிரபல்ய ஊழியத்தின் முக்கியத்தை எப்போதும் எடுத்துக்காட்டி, சபைகளும் ஊழியரும் இம்முயற்சியில் கரு த்துள்ளவர்களா யிருக்கவேண்டுமென்று எவி எழுப்பிவருவதை அறிந்து கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். கர்த்தர் அவர்களுக் குத் தம் உன்னத ஞானத்தையும் பெலனை யும் சம்பூரணமாய் அநுக்கிரகிக்கும்படி யா வரும் எப்போதும் ஜெபித்துவரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கடந்த ஆகஸ்டுமாதமுதல் சி. எம். கா லேஜ், ஹாஸ்டல் மாணவர் "பை பண்டு ஒன்று" ஆரம்பித்து, செலவுக்காக கையி ருப்பு கிடைக்கு சுமார் ரூ. 20 ஓர் பைபண்டு. அனுப்பியிருப்பது கண்டி யறிதலான விஷயமே. 'பல துள்ளி பெரு வெள்ளம' என்பதைத் அறி வோம. நமது அதியஷ்டானத்திலுள்ள கிறிஸ்தவர்களெலலாரும் சபைகள் யாவும் ஒழுங்காய் வாரா வாரமோ, மாதாமாதமோ காணிக்கைகள் சேகரித்து அலை கொஞ் சமானாலும் நட்டமாக அனுப்பிவித்தால, நமது சங்கத்தின் பொக்கிஷ வறுதி அபி விர்த்தியாவதற்குத் தடையுண்டோ? அற் பமேயாயினும, ஜெபதோடு கூடிய கை மிகுந்த பலன் விளைவிக்கும.

39-ம் சங்கீதம்.

சங்கீத ஆகமங்களிலுள்ள ஒப்பாரிகளெல் லாம் மகா அலங்காரமானதென்று பூர்வ வேத சாஸ்திரிகளிலொருவரால் பேர்பெற்ற சங்கீ தம் இது. மனதில் வியாகுலம் நிறைந்துள்ள சமயத்துக்கு இது ஏற்றது. இதினிமித்தமாக வே அடக்க ஆராதனையில் வாசிக்கும்படி ஜெப புஸ்தகத்தில் இதை நியமித்திருக்கிறது.

சங்கீதக்காரன் அதிகமாய் வியாதிப்பட் டுத் தொய்ந்தபோனன். சரீர பலவீனம் அதிகம். முகரூபம் மாறிவிட்டது. அலங் காரம் அலங்கோலமாயிற்று. பிராணன் குன் றினது. கஷ்டம், கண்ணீர், கவலை மிச்சம். உள்ளம் குழம்புகிறது, மனது பதைக்கிறது, வயிறெரிகிறது. தேவன் இவ்வித நிலைமை யில் வைத்துவிட்டாரே என்று முறையிட வாய் துடுதுடுவென்கிறது. இவ்வித சமயத் தில் சங்கீதக்காரன் பாடுகிறான்.

1-ம் சாணம், வா. 1—3.

என் நாவினால் பாவஞ் செய்யாதபடிக்கு
நான் என் வழிகள்மேல் நோக்கமாயிருந்து,
துன்மார்க்கன் என் முன் இருக்குங்கால்
என் வாய்க்கு மூடி போடுவேன் என்றேன்.
நான் மவுனமாகி ஊமையாயிருந்தேன், [ன்;
நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தே
அப்பொழுது என் துக்கம் அதிகரித்தது.
என் இருதயம் எனக்குள்ளே சுடுதொண்டது:
நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது.
அப்பொழுது, நாவெடுத்துப் பேசினேன்.

கர்த்தரைப் பார்த்து முறுமுறுக்கும் முறைப்பாடோ, மற்றவர்களைக் குற்றப்படுத் தும் குரூர மொழிகளோ, தன் நீதியை ஸ்தா பிக்கும் நியாயங்களோ, துன்மார்க்கர்மேல் பொருமையுற்றுச் சொல்லும் பிரலாபமோ— ஏதோ மனதிலிருந்ததினால் வாய் துடுதுடு வென்று வந்ததாம். சங்கீதக்காரனே மன தை அடக்கி, வாய்க்கு வாய்மூடிபோட்டு, கர்த்தரை அறியாதவர்கள் அப்படிப்பட்ட வாத்தைகளைக் கேட்டு அவரை அவமதியாத படி, நலம்போலும் ஒன்றும் பேசாமலிருந்து விட்டானும். ஆனால் அடக்கும் தக்கம் அதி கரிக்குமாதலால், இதை நினைக்க நினைக்க அவன் உள்ளம் பொங்கினதாம். கடைசியில் நாவெடுத்துப் பேசினனும். ஆனால் மனுஷ ரிடத்திலல்ல, தேவனிடத்திலேயே பேசினி ருன்.

கண்ணீர் சிந்தவும், வாய்விட்டழவும். உப த்திரவத்தின் குகையிலிருக்கவும் அழைக்கப் பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளே, சங்கீதக்காரனை உங்களுக்கு மாதிரியாக்கிக் கொள்ளுங்கள். மனுஷருக்கு முன்பாக வாயை மூடுங்கள். உங்கள் ஒப்பாரியில் தேவ னையும் மனுஷரையும் தூஷிக்காதிருங்கள். மனுஷருக்கு முன்பாக வாயை மூடுங்கள். அந்தரங்க அறையில், முழங்காலில் உங்கள் இருதயத்தைத் தேவசமுகத்தில் ஊற்றிவிடுங் கள்.

2-ம் சாணம், வா. 4—6.

கர்த்தாவே என் முடிவையும்
என் நாட்களின் அளவு இவ்வளவுதான்
என்பதையும் நான் அறியச்செய்யும்.
நான் எவ்வளவு நிலையற்றவன் என்று நான்
உணர்ந்துகொள்ளட்டுமேன்.
இதோ என் நாட்களை நாலுவிரற்கடையள
வாக்கினீர்!
என் ஆயுசுகாலம் உமது பார்வைக்குச்
சூனியம்போலிருக்கிறது.
ஸ்திரமாய் நிற்கும்போது முதலாய் எந்த
மனுஷனும் மாயையே என்பது நிச்ச
யம்.
நிழலைப்போல்வே மனுஷன் நடமாடித்
திரிகிறான்!
விருதாவாகவே அவன் சஞ்சலப்படுகிறான்!
ஆஸ்தியை வாரிக் கூட்டுகிறான்—
யார் அதைச் சேர்த்துக்கொள்ளுவான்
என்று அறியான்!

சங்கீதக்காரன் அடக்கமுடியாமல் போய்ச் செய்யும் ஜெபம் இதுதான்:—என் ஆயுசுகா லம் சொற்பம், அது ஓர் மூச்சு, ஓர் நிழல், ஓர் தோற்றம்—இதை நான் உணர்ந்து, தேவ ருடைய ஏற்பாட்டுக்குக் கீழடங்கும்படி நல் மனதைத் தாரும் என்கிறான். தேவசித்தம் நமது பாக்கியம். அவர் நியமுகம் நமது பரி மளம். சூனியத்திலும் சூனியமாகிய நமக்கு வேறே வாஞ்சை என்?

3-ம் சரணம், வா. 7—10.

இப்போதும், ஆண்டவரே, நான் எதற்குக்
காத்திருக்கிறேன்?
நீரே என் நம்பிக்கை.
என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து
என்னை விடுதலையாக்கும்.
மூடர் நிந்தைக்கு என்னை ஒப்புக்கொடா
தேயும்.

நான் மவுனமாயிருக்கிறேன்;
வாய் திறவேன்—
நீர் இதைச் செய்தீரே.
என்னிடத்திலிருந்து உமது அடியை நீக்
கிப்போடும்.
உமது கரத்தின் அடியினால் அடியேன்
பக்ஷிக்கப்படுகிறேன்.

இருளிலிருந்து இப்போது வெளிச்சம் பிரகரசிக்கிறது! முறுமுறுப்பும் படபடப்பு மான வயிற்றெரிச்சல் இப்போது நீங்கிவிட்டது. பாவ அறிக்கையும், பாவம் நீங்கப் பிரார்த்தனையும், தேவன்பேரில் நம்பிக்கையும் இங்கே மேலிடுகிறது. துக்கசாகரத்தில் அமிழ்ந்துபோகும் பக்தனே, நீயும் இப்பாடத்தைப் படி. தேவனே உன் நம்பிக்கை. அவரே இதைச் செய்தவர். ஆகையால் [illegible] அவர்பேரில் மாத்திரம் உன் நம்பிக்கையை வை. நீ பட்ட அடியையும், விட்ட கண்ணீரையும் உன் பரம பிதாவினிடம் சொல். ஆடித்த கரமே ஆற்றும்.

4-ம் சரணம், வா. 11—13.

அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக்
கண்டிப்புகளால் திருத்தும்போது,
பூச்சியைப்போல அவன் அலங்காரத்தை
அரித்துவிடுகிறீர்.
எந்த மனுஷனும் மாயையே என்பது
நிச்சயம்.
கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்.
என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்.
என் கண்ணீரைப் பார்த்து, சும்மாயிரா
தேயும்.
என் பிதாக்களெல்லாரையும்போல
நானும் உமக்கு முன்பாக அந்நியனும்
பரதேசியுமாயிருக்கிறேன்.
நான் இங்கிருந்து சென்றுபோய் இராமற்
போகுமுன்
முகமலர்ச்சிகொள்ளும்படி, என்னைவிட்
டுத் திரும்பியருளும்!

மனுஷனைத் திருத்தும்படி தேவன் அனுப்பும் சிக்ஷை பொட்டரிப்பைப்போல மனுஷனுடைய புறம்பான அலங்காரத்தைத் தின்று விடுகிறதுண்டு. இதைச் சொல்லி, சங்கீதக்காரன் கெஞ்சி மன்றாடுகிறான். மரணத்துக்குப்பின் ஒன்றுமில்லை என்ற எண்ணம் உடையவனாதலால், மரிக்குமுன் தேவன் அவனைத் தமது கடைக்கண்ணால் நோக்கிப் பார்த்து, அவனுடைய உபத்திரவத்தைச் சற்று நீக்கி, திரும்பவும் கொஞ்சம் முகமலர்ச்சியருளும்படி உரித்தாய்க் கெஞ்சுகிறான்.

நாமும் இவ்வாறு கேட்கத் தடையில்லை. மறுஉலகத்தில் ஒப்பற்ற சந்தோஷத்தினால் நம்மை தேவன் பூரிப்பாக்குவார் என்பது நிச்சயமே. ஆனால் தாம் சிக்ஷிக்கும் பக்தனை இவ்வுலகத்திலும் தேவன் தாங்குகிறார் என்பது மெய். அநேக உபத்திரவங்களையும் கண்ணீரையும் கண்ட வருஷங்களுக்குத்தக்கதாக தமது பிள்ளைகளையும் அவர்கள் சந்ததியையும் அவர் மகிழ்ந்திருக்குகிறார் என்பது சத்தியம்.

பக்தனே, நீயும் ஜெபி, கூப்பிடு, கண்ணீர் விடு. உன் பரம தகப்பன் கேட்பார், செவி கொடுப்பார், மவுனமாயிரார்.

தெலுங்குநாட்டுக் கடிதம்

கடந்த இரண்டு மாசமும் மானுக்கோட்டை, முப்பாரம் இலக்கா கிறிஸ்தவ கிராமங்கள் ஒவ்வொன்றையும் இருமுறை பார்த்து வந்தேன். நாளுக்குநாள் கர்த்தர் தம் சபையை ஸ்திரப்படுத்திக்கொண்டு வருகிறார். அவருக்கே துதி உண்டாவதாக.

இரண்டொரு இடந்தவிர, மற்ற இடங்களில் இரவு வெளிகளில் தங்கி நித்திரை செய்ததால், பனிகாலத்தின் மிகுந்த குளிரால் ஜலதோஷமும் நித்திரைப்பங்கமும் அதிகம்.

நான் திருநெல்வேலி நாட்டில் பிரயாணம் செய்தபோது, எங்குபோனாலும் கிறிஸ்

தவ கிராமங்களும், ஒரு தேவஊழியரின் வீடும், ஓர் பள்ளிக்கூடமும், இன்னும் கோவிலும், போதாக்குறைக்குஸ்திதியுள்ள பெரியோரின் வீடுகளுமுண்டே. ஆண்டவர் தெலுங்குநாட்டில் அப்படிப்பட்ட ஒருகாலம் சீக்கிரம் வரச்செய்வராக, சுவாமி என்று ஜெபித்தேன். ஆகிலும் மானுக்கோட்டைத் தாலூகாவுக்குள் தோர்ணக்கல் மிஷன்சமஸ்தானமும் அத்தியக்ஷ தலைமையும் வகித்து, திருநெல்வேலியின் மக்களின் ஒரு சிறிய கூட்டமும், பாடசாலைகளும் உண்டாயிருப்பதே இந்நாடு அவருடையதாகும் என்பதற்கு அத்தாட்சி. இடம், பொருள், காலத்தை ஆராய்ந்து, இத்தெலுங்கு சங்க சமஸ்தானத்தைப்பார்த்து, அகமகிழும் வண்ணம் எங்கும் பார்த்து சந்தோஷிப்பது எக்காலம்!! ஆம், சீக்கிரம் கர்த்தராகிய இயேசு இதைச் செய்ய வல்லவர் என்பதற்கு ஐயமில்லை. 1905-ம் வருஷத்தில் சங்கஸ்தானமும் ஒரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவ ஊழியனுமில்லாத சுமார் அறுபதினாயிரம் (6000) ஜனமுள்ள மானுக்கோட்டைத் தாலூகாவில் 1916-ல் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு (2500) கிறிஸ்தவர்களையும் 40 ஊழியரையும் கட்டளையிட்டவர் அதிசயங்களைச்செய்து, பூமியின் உறுவத்தை மாற்றுவார்.

தேவுனிசங்கேசா என்ற கிராமச் சுற்றுக் கிராமங்களில் சுமார் 13 பேரை புலி கொன்றுபோட்டது. இன்னம் அதைச் சுட்டுக்கொல்வாரில்லை.

பரிசுத்த ஞானஸ்நானம். நாளது ஜனுவரி மீ 22உ புஜன்னாபேட்டையில் 22 பேர் பரி: ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்பிராந்தியங்களில் வந்த புது சபையில் இவர்கள் மிகவும் பலவீனர். கடந்த மாசம் பரி: ஞானஸ்நானம்பெறுவதற்கு ஆயத்தப்பட்ட போதிலும், கிறிஸ்தவனாகாத ஒரு முக்கிய மனிதன் கிறிஸ்தவர்களில் யாராவது ஞானஸ்நானம் பெற்றால், தன் கிணற்றில் தண்ணீர் எடுக்கவிடமாட்டேன் என்றான். அப்போ ஞானஸ்நான ஆயத்தக்காரரையும் மற்றும் ஊழியரையும் பார்த்து: இத்தடை நீங்க இதுமுதல் ஜெபிப்போமாக என்று ஜெபித்து, அடுத்தக் கிராமம் போனேன். ஆகவே, இந்தச்சமயம் தடைசெய்த மனிதனே என்னிடம் வந்து: நான் தண்ணீரைத் தடுக்கமாட்டேன், நானும் ஞானஸ்நானம் பெற விரும்புகிறேன்; நீங்கள் இன்று இங்கேயே இருங்கள். என்மனைவி பிள்ளைகளையும் ஞானஸ்நானம் பெறச் சொல்லுகிறேன் என்றான். ஞானஸ்நானம்கொடுக்கையில், தன் மனைவி, பிள்ளைகள், சகோதரர் எல்லாரையும் பெறும்படிச் சொல்லி, தான் வராது விலகிக் கொண்டான். சீக்கிரம் இவனையும் கர்த்தர் தமது மந்தையில் சேர்க்க ஜெபிப்போமாக. தோர்ணக்கல் ஜெபவிஷயங்களைக் கவனித்து, நம்நாட்டார் எத்தனை பேர் முழங்கால் யுத்தத்தில் நிற்போமோ அத்தனையாய் இங்கு காரியங்கள் சித்தி பெறுகிறது.

தட்டிப்பல்லி பரி ஞானஸ்நானம்:—இவர்கள் 9 மாசக்கிறிஸ்தவர்கள். இவர்களின் ஆசான் தோர்ணக்கல் அப்பியாசாலையில் படித்து வந்த யோசேப்பு உபாத்தியார். அவர் மனைவி நம்போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்தவள். இப்பலவீன பாண்டங்களைக் கொண்டு கர்த்தர் நாம் நினைத்ததற்கும் அதிகமாய்ச் செய்து வருகிறார். இவ்வளவு நாளைக்குள் 4 பையன்களுக்கு வாசிக்கப் படித்துக்கொடுத்து, 2 பையன்கள் தோர்ணக்கல்லில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். போஷணைக் கர்த்தாக்கள் இல்லாததால், இருவர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வூருக்கு 19உ போய், இரண்டு நாள் அவர்களை பரி: ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்தி, அதன்பின் அதற்கப்பாலுள்ள சபைகளைச் சுற்றிப்பார்த்து, 26உ முழுவதும் பிரயாணஞ்செய்து, 27உ அதிகாலை திரும்ப தட்டிபல்லி வந்து சேர்ந்தேன். பின்வருமாறு ஞானஸ்நான ஆயத்தம் நடந்தது. ஜனங்கள் அதிகாலை எழுந்து, வீடுவாசல்களைப் பெருக்கி, மெழுகி, எல்லாரும் ஸ்நானஞ்செய்து, வஸ்திரங்களைத் துவைத்து, போஜன சாமக்கிரி ஆயத்தம் செய்து, வரிசையாக நின்று பாட்டுப்பாடி மேளதாளங்களுடன் 2 பர்லாங்குக்கு அப்பாலுள்ள ஒரு பெரியகுளத்திற்குப் பவனிபோய், பரி: ஞானஸ்நானத்தில் அவர்கள் செய்யப்போகும் கெம்பீரமான பிரதிக்கினை, வரக்கு, ஒப்பந்

தம் முதலியவற்றை சம்பாஷணை ரூபமாக நினைப்பூட்டி, தெலுங்கில் "தெய்வாத்துமா இறங்கு" என்ற பாட்டைப்பாடி, பெலவீன மானவர்கள் தவிர மற்றெல்லாருக்கும் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கடைசியாக "ஜெயம், ஜெயம் அல்லேலூயா" என்ற பாட்டை உபாத்திமார் தெலுங்கில் பாடினார்கள். இதற்குப்பின் அதே இடத்தில் சமையல்செய்து, 2மணிக்குப் போஜனம் செய்தார்கள். தேவ ஊழியருக்கும் விருந்து கொடுத்தார்கள். பரி: ஞானஸ்னானம்பெறுமுன் உபவாசித்து, ஜெபித்து, தங்களை ஆதாயம் பண்ண வேண்டுமென்று சொன்னபடி, அதுவரை சாப்பிடாதிருந்தார்கள். அவர்கள் சாப்பிடுமுன் என்னை ஜெபஞ் செய்யக் கேட்டுக்கொண்டார்கள். இந்த ஆரம்பம் என்றைக்கும் நிலைத்திருந்து, கர்த்தர் இவர்களுக்கு ஆத்ம பெலனருளிச்செய்ய ஜெபிப்போமாக.

பள்ளிப்பிள்ளைகள். இத்திசையார் நூதன கிறிஸ்தவர்கள் என்பதை நம்மவர்கள் அறிவார்கள். இப்போதான் தங்கள் பிள்ளைகளை தோர்ணக்கல்லுக்கு அனுப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். 5 பிள்ளைகள் ஆதரிப்போரின்றி, வெயில்காலம்வரை காத்திருக்க நேரிட்டிருக்கிறது.

"சென்னையில் வித்தியா தர்மம்" என்ற தலைப்பின் கீழ் 'ஏழை மாணவர்கட்கு உடையும் உண்டியும் ஈந்து, படிக்கப் பணமும் தந்து, அவர்களை உருவாக்கிவிட்டு உபகாரம் செய்திருக்கிறதாம்." இது ஒரு இந்து வித்யா தர்மசாலை. 11 வருஷங்களாக நடைபெற்று, 5800 ரூபாயுக்கு மேலாக வசூலுமானதாம். காலஞ்சென்ற பிரஸிடென்ஸி காலேஜ் போதகர் ஸ்ரீ. ஆர்...பெயரால் ஒரு மாணாக்கன் ஆதரிக்கப்படும்படியாக அவரது மனைவியார் 1000 ரூ. உபகாரம் செய்தனராம். போர்ட் பிளேயர் என்ற கடற்துறை முகத்திலிருக்கும் ஹிந்துகோவில் கமிட்டியார் இதற்கு உதவி செய்கிறார்களாம். மிஸ்டர் V. K. S. என்பவர் போர்னியோ என்ற இடத்திலிருந்து 586 ரூ. அனுப்பி, ஒரு மாணவர் ஆதரிப்புக்கு உதவியாயிருக்கிறாராம். இவ்வாறு படிப்புக்கு உதவி நடக்கிறது. இது மாததிரமா? இன்னம் சகாயர் பேர் அதிகமிருக்கிறது.

இதுநிற்க, கடந்த 1915 சூலை௴ 8உ கல்கத்தாவில் ஒரு விவாகத்தில் ரூ. 19,000 (பத்தொன்பதாயிரம்) நன்கொடை அளிக்கப்பட்டதாம். அந்த விவாகம் ஆடம்பரத்துடன் நடத்தப்படவில்லையாம்.

நன்கொடை விபரம்.

ஆல்பர்ட் விக்டர் ஆஸ்பத்திரிக்கு	ரூ. 6000
பெனாரிஸ் ராமகிஷ்ணா மிஷன்	ரூ. 5000
கிங்க்ஸ் ஆஸ்பத்திரிக்கு ..	ரூ. 5000
மகாலட்சுமி பாடசாலைக்கு ...	ரூ. 1000
ஜில்லா பஞ்ச நிவிர்த்தி ஸ்தாபனங்களுக்கு ...	ரூ 1000

பாக்கி கல்வி ஸ்தாபனங்களுக்காம்.

தோரணக்கல் மிஷனுக்கும் தோரணக்கல் பாடசாலைக்கும் ஜெபமும் தர்மமும் தேவை. பத்திரிகை படித்த உடனே இருதயங்களை நீர்கால்கள்போல் ஓடச்செய்கிற கர்த்தர் ஜெப தர்ம ஊற்றுகளை தோரணக்கல் சுவிசேஷ வேலைக்காக திறந்துவிடுவாராக. ஆமென்.

இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன்பலனை அடையாமற்போகான் என்பது நமதாண்டவர் வார்க்கு. மிகவும் சிறியராகிய ... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்பது பூலோகத்தார் யாவரையும் கூட்டிச்சேர்த்து நிறுத்திக்கொண்டு சொல்லும் நமதாண்டவர் வார்த்தை.

டேவிட் தேவசகாயம்.

ஸர் மானியர் உல்லியம்ஸ் என்கிற சமஸ்கிரத வித்வான் மரிக்கும் சமயத்தில்: நான் இயேசுவை நேசிக்கிறேன்; இயேசு என்னை நேசிக்கிறார். இதைவிட வேறென்னதான் எனக்கு வேண்டும்? என்றார்.

பளியர் மிஷன் கடிதம்.

கர்த்தர் தமது அளவற்ற இரக்கத்தினால் இம்மலங்காட்டில் ஏழைகளான பேதை ஜனங்களுக்குள் தமது மகிமையை வெளிப்படுத்தியிருக்கிறார். எத்தனையோ விரோதிகள் கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் பிள்ளைகளுக்கு விரோதமாகவும் எழும்பியும், அவர்கள் வெட்கப்படவும் கர்த்தருடைய சித்தமே நிறைவேறவும் அவர் அருள் செய்திருக்கிறார். அவருக்கே புகழ் உண்டாவதாக.

கர்த்தருடைய கிருபையினால் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தின நாள் தவச உற்சவ ஆராதனை வைத்தோம். பளியர்கள் உற்சாகமாய்த் தங்களுக்குக் கிடைத்த தவசத்தில் காணிக்கை படைத்தார்கள். அன்று சாயந்தர ஆராதனைக்கு எல்லா ஜனங்களும் உற்சாகமாய் வந்து கூடினார்கள். ஆராதனை முடிந்ததும், கர்த்தர் பிறந்த பண்டிகையில் சந்தோஷத்தைக் காட்ட ராத்திரி 12 மணி வரைக்கும் கணப்புகள் மூட்டி, தவுலடித்தும், பாட்டுகள் பாடிக்கொண்டும் ஜனங்களிருந்தார்கள். மகாகனம் உல்லியம்ஸ் பிஷப்பம்மாளவர்கள் பளியருக்கு கிறிஸ்மஸ் இனாமாக துணிமணிகள் நமதன் புள்ள செக்ரற்றெரியவர்கள் மூலமாக அனுப்பியிருந்ததை இரவு 2 மணி சுமாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தோம். அவைகளைப் பெற்றதும் நன்றியறிதலுள்ளவர்களாய், மகாகனம அம்மாளவர்களுக்கு கர்த்தர் நீடிய ஆயுளைக் கொடுக்கவும், கிறிஸ்துவுக்காகத் தங்களுக்கு அதிக நன்மைசெய்கிற I. M. S. சங்கத்தார் வாழ்வுக்காகவும் பிரார்த்தித்தார்கள். அப்பால் ஜனங்களெல்லாரும் தங்களுக்கு இனாமாகக் கிடைத்த துணிமணிகளை உடுத்திக்கொண்டு, வெகு சந்தோஷமாய் விடியற்கால ஆராதனைக்கு வந்துகூடினார்கள். பிறப்புக்குரிய நாலு பாட்டுகள் பாடி, ஆராதனையைத் துவக்கினோம். பிரசங்கத்தில் கர்த்தருடைய பிறப்பு மேய்ப்பருக்கு வெளிப்படுத்தப்பட்டதைக் கேட்ட சில பளிய வயோதிபர்கள் தங்களுக்கும் தம்மை வெளிப்படுத்தின சந்தோஷத்தால், "ஆமடா, நல்ல ஏசுநாதன்டா, நம்மமேலும் இரங்கினாண்டா" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பனியும் குளிரும் ஜாஸ்தியாயிருந்தும், பண்டிகையின் சந்தோஷம் அதையெல்லாம் பார்க்கவிடவில்லை. பளியர் ஆராதனையைக் கண்ணுற்றால், கண்ணீர் ததும்பி பரமானந்தம் உண்டாகிவிடும்.

என் மனைவியை பேறுகாலத்திற்காக வீட்டுக்கனுப்ப கனம் செக்ரற்றெரியவர்களுக்கு லீவுக்காக எழுத நினைத்திருந்தேன்; அப்போது இவ்வேழை ஜனங்களின் ஆவலான வேண்டுகோளின்பேரில் மலையிலேயே நிறுத்திக்கொண்டேன். பேறுகாலத்தால் என் மனைவி சற்று வருத்தப்பட்டதைக் கண்ட இவ்வேழை ஜனங்கள் "ஏசுநாதா, எங்க அம்மாளுக்கு இப்பம் புள்ள பிறக்கணும்டா, உம்ம நம்பி கிடக்கதடா, அப்பா மறக்காதடா, உம்ம புள்ளகள் காட்டுச் சாதிகள் கூப்பிடுரம்டா" என்று ஓயாத ஜெபத்தில் நின்றார்கள். பேறுகாலக் குச்சு முழுவதையும் பெண்கள் வளைந்துகொண்டார்கள். அவர்கள் ஜெபமும் உதவியும் ஜாஸ்தி. அவர்கள் வேண்டுகோளுக்கிசைய கர்த்தர் அடுத்த ஆண்குழந்தையையும் கொடுத்தார். மலையில் பிறந்த என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் பளியர்தான் பேறுகாலம் பார்த்தார்கள். கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவருக்கே ஸ்தோத்திரம். எத்தனையோ கஷ்டங்கள் மலையிலுண்டென்றாலும், அவையெல்லாம் இவ்வேழை ஜனங்களின் முகத்தைக் கண்டவுடனே ஒழிந்துபோகிறது.

கிறிஸ்தவப் பளியர்களைப் பார்த்து, கிறிஸ்துமார்க்கத்துக்குச் சுத்த விரோதிகளான இந்துப் பளியர்களுக்குள் அதிக மாறுதலுண்டாகியிருக்கிறது. சீக்கிரமாக கர்த்தருடைய மந்தைக்கு அவர்களும் பங்காளிகளாவார்கள் என்று நம்ப இடமுண்டு.

பளியருக்குள் பள்ளிக்கூடத்து வேலை ஒழுங்காயும் நாம் நினைத்தபடியும் நடத்த முடியாது. அவர்கள் வெள்ளாண்மை விரு

த்திபடைத்து, அவர்களுக்கு உண்ணச் சரியான ஆகாரமுண்டாகும்வரைக்கும் பள்ளிக்கூடச் சங்கடம் ஜாஸ்தி. நமது மிஷன் ஸ்டேஷனிருக்கிற இடம் ஏலத்தோட்டங்களிருக்கிற இடங்களுக்குத் தூரமாயிருப்பதால், இவ்வேகழை ஜனங்கள் அன்றுடகம் இங்கிருந்து போய், வேலை செய்துவிட்டு மறுபடித் திரும்புவது அசாத்தியம். அதனால் அவர்கள் பெண்பிள்ளைகளோடு தூர இடங்களிலிருக்கிற ஏலத்தோட்டங்களுக்குப்போய், இரண்டொரு வாரம் தங்கி, அங்கு கூலிவேலை செய்கிறதும் பின் மிஷன் ஸ்டேஷனுக்குத் திரும்பிவந்து, ஐந்து அல்லது ஆறு நாள் இருந்து இப்படிப் போகிறதும் வருகிறதுமே பள்ளிக்கூட வேலைக்குச் சங்கடம். மாசம் ரூ. 8 சர்க்கார் கிராண்டு இருப்பதால், சர்க்கார் பரீட்சைக்கு ஏற்றவிதமாய்ச் சொல்லிக்கொடுக்க எவ்விதவழியுமில்லை. இதற்கு எல்லாம் பளியர் பஞ்சந்தான் காரணம். என்றாலும் கர்த்தருடைய கிருபையினால் 11 பிள்ளைகள் வாசிக்கப் பழகியிருக்கிறார்கள். இக்கஷ்டத்தை நீக்கப் பளியருக்குள் சரியான வெள்ளாண்மை விருத்தி செய்யவேண்டியது இன்றியமையாத அவசியம். இதற்குப் பணக்கஷ்டந்தான் தடை. செய்காலுக்குக் கொண்டுவந்திருக்கிற நிலம் போதாது. பளியக் கிறிஸ்தவர்களுக்கு மார்க்க வைராக்கியம் ஜாஸ்தி. முன் பேய்க்கு அதிகமாய்ப் பயந்தவர்கள் இப்போது அதைநாசியாக நினைக்கிறார்கள். கர்த்தரே சகல தடைகளையும் இடையூறுகளையும் போக்கி, தமது மந்தையைப் போஷித்து ஆதரித்துக் காப்பாற்றுவாராக.

பளியக்குடியேற்றுக்கும் மிஷன் ஸ்டேஷனுக்கும் வேண்டிய நிலங்கள் இன்னும் முடிவாகவில்லை. கவர்ண்மென்ரார் நமக்கு வேண்டிய நிலங்களை அளந்து எல்லைக் கற்கள் நடுகிறார்கள். நாம் 1910-ம் ஸ்ல மனுச் செய்தபோது ஏக்ருக்கு ரூ ஒன்று வீதம் நிலங்கள் சரிசெய்யப்பட்டன. இப்போது புஞ்சை ஏக்கர் ரூ. 3 ஆகவும் நஞ்சை நிலம் ஏக்கர் ரூ 50 ஆகவும் இருக்கிறதாக அறிகிறேன். நமக்கு அனுகூலமான விதமாய் சங்கை நிவான் அவர்களும் கலெக்டர் துரையவர்களும் ஷாங்கிஷன் செய்யும்படி கர்த்தரை நோக்கி இன்னும் ஊக்கமாய் ஜெபிப்போமாக.

A. டேவிட்.

ஜெபமே ஜெயம்.

அமெரிக்கா தேசத்தில் மின்னோற்ற என்ற ஓர் மகாணம் உண்டு. அம்மகாணத்தின் விசேஷம் அபரிமிதமாய் அதில் விளையும் கோதுமையே.

1876-ம் வருஷம் வசந்தகாலத்தில் இதின் மூன்றில் இரண்டுபாகத்தில்—அதாவது, ஐம்பதினாயிரம் சதுர மைல் சுற்றளவுள்ள பூமியில் வெட்டுக்கிளிகள் திரள் திரளாய் வந்து, தங்கள் முட்டைகளினால் தளாயை நிரப்பிவிட்டன. சமுசாரிகள் கஷ்டம் சொன்ன சஞ்சமல்ல. பஞ்சம் வந்தது. அநேககுடும்பங்களில் பசியும் பட்டினியுமாகிவிட்டது. வெட்டுக்கிளிகளைத் தடுக்கவோ ஒருவராலும் கூடாதிருந்தது. எவ்வளவோ செழிப்பான அந்த மாகாணம் பாழ்வனாந்தரமாகிற நிலைமைக்குச் சமீபித்துவிட்டது.

இப்படிப்பட்ட சமயத்தில் விசுவாசிகள் அநேகர் தேவனைப் பற்றிப்பிடிக்க ஆரம்பித்தார்கள். வெட்டுக்கிளிகளை தேவன் "என் பெரிய சேனை" என்று சொல்லியிருக்கிறார் என்பதையும், தமது ஜனங்கள் தம்மிடத்திற்குத் திரும்பும்போது, "வெட்டுக்கிளிகள் பட்சித்த வருஷங்களின் விளைவை நான் திரும்ப அளிப்பேன்" என்று அவர் சொன்ன வாக்கையும் நினைவுகூர்ந்து, அநேகர் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். தேவன்தாமே இரங்காவிட்டால், மின்சோற்று மாகாணம் பாழாய்ப்போய்விடுமென்று சகலரும் சொல்லத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டது. அப்படியிருக்கும் தருணத்தில் அம்மாகாணத்தின் கவர்னர் ஏப்ரல்மீ 26ஆ உபவாசித்து ஜெபஞ்செய்யும் நாளாக ஆசரிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்து, விளம்பரஞ்செய்தார். காஸ்திகரும் தேவபயமற்றவர்களும் கவர்னர் விளம்பரத்தைக்கண்டு பகடிபண்ணினார்கள். சிலர் இவ்விதஓர்

இயற்கையான காரியத்தில் தேவன் தலையிடுவாரா என்பதுபோல சந்தேகித்தார்கள். என்றாலும், பக்தர் பலரும் விடாமுயற்சியாய் அந்த ஜெபநாளுக்காக ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

ஏப்ரல் 26ஆ வந்தது. வெட்டுக்கிளிகளின் கஷ்டம் மகா பரிதாபமாக அன்று காணப்பட்டது. முட்டைகளால் தரை முழுவதும் வெள்ளையாய்த் தோன்றினது. மென்மேலும் முட்டைகள் பெருகும்போது அவைகள் குஞ்சுபொரிக்கபொரிக்க, வெட்டுக்கிளிகள் திரள்திரளாகப் பெருகி, ஒரு பச்சை இலை முதல் தலைமேல் இல்லாமல் சமூலமாய் அழித்துப்போடும். என்றாலும், உபவாசநாள் ஆசரிக்கப்பட்டது. ஜனங்கள் தங்கள் சகல வேலை ஜோலிகளையும் விட்டுவிட்டு, யாதொரு சகாயமும் அற்றவர்களாக தேவ சமுகத்தில் வந்து முழங்காலூன்றினார்கள்.

பன்னிரண்டு மணி நேரங்களுக்குள்ளாக மாறுதல் உண்டானது ஏப்ரல் மாசத்தில் வழக்கமாய் மழைபெய்யாதென்றாலும், திடீரென்று புசலும் உறைந்த மழையும் உண்டாகி, இரண்டு நாள் விடாப்பிடியாய் அடித்தபினால், மாகாணம் முழுவதிலும் பனிக்கட்டி தரையை மூடினது. வெட்டுக்கிளிகளும் முட்டைகளும் அழிந்துபோயின. மழைக்குத் தப்பி, ஊடேஊடே நின்ற சில வெட்டுக்கிளிகள் எழுந்திருந்து எங்கேயோ ஓடிவிட்டன. சில இடங்களில் சற்று அதிகமாய் மீந்திருந்த வெட்டுக்கிளிகளுங்கூட யாதொரு தீங்கும் செய்யாமல் பறந்து போய்விட்டன. சில நாட்களுக்குப்பின் மாகாண முழுவதிலும் ஒரு சதுர அடி பூமியிலுங்கூட ஒரு வெட்டுக்கிளியாவது ஒரு முட்டையாவது காணப்படவில்லை. அடுத்த வருஷம் நாலு கோடி புசல் கோதுமை அம்மாகாணத்தில் விளைந்தது. அதற்குமுன்னுள்ள பின்னுள்ள அவ்விதவிளைவு ஒருநாளும் இருந்ததில்லை. "ஜெபமே ஜெயம்!"

ஆவிக்குரிய விஷயங்களிலும் ஜெபமே ஜெயம். இருநூறு வருஷங்களுக்குமுன், ஐரோப்பா அமெரிக்கா தேசங்களிலுள்ள சபைகளின் ஆவிக்குரிய நிலைமை எவ்வளவோ பரிதபிக்கப்படத்தக்கதாயிருந்தது. மெய்ப்பக்தி என்பது சமூலமாய் அற்றுப்போகிற நிலைமைக்கு வந்திவிட்டது. ரோஸ்திகமும், தன்மார்க்கமும், லௌகீகமுமே எங்கும் காணப்பட்டன. கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கம் கேள்விப்படுவது அரிதாயிருந்தது. லண்டன் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கோவில்களிலும் ஒருவர்போய்ப் பிரசங்கம் கேட்டபோது, அவைகளில் பிரசங்கித்தவர்கள் மகமது மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ, புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ, கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ என்று தாம் அறியக்கூடாதிருந்ததாக ஒருவர் சொல்லுகிறார். இப்படிப்பட்ட காலத்தில் தேவனும் கிரியைசெய்ய ஆரம்பித்தார். 1729-ம் வருஷம்போல ஜான் உவெஸ்லியுர், அவருடைய சகோதரன் சார்ல்ஸ் உவெஸ்லியும் இன்னும் சிலரும் ஆக்ஸ்போர்ட் நகரில் ஒரு சங்கமாகக் கூடினார்கள். புதிய ஏற்பாட்டை மூல பாஷையில் ஆராய்ச்சி செய்யவும், ஒழுங்காய் உபவாசஞ்செய்யவும், குறிக்கப்பட்ட நேரங்களில் தனிஜெபம் பண்ணவும், வியாதியஸ்தரையும் எளியவர்களையும் சந்திக்கவும் தீர்மானம்பண்ணினார்கள். சரியான ஜெபக்கூட்டத்தில் காணப்படவேண்டிய 4 குறிப்பும் இதில் காணப்பட்டன; வேத ஆராய்ச்சி, தனி ஜெபம், உபவாசம், சுய வெறுப்பான ஜீவியம். இந்த ஜெபக்கூட்டத்தினால் வந்த நன்மை எத்தனை ஏராளம்! கிறிஸ்துவைப்பற்றிய ஒரு பிரசங்கம் இல்லாத இடத்தில் எங்கும் ரகசியத்தில் செய்தி கூறப்பட்டு, தேவன் கிருபை செய்தார். 1731-ம் வருஷமுதல் 60 வருஷக் காலங்களாக, வருஷந்தோறும் 800 பிரசங்கம் வீதம் உவெஸ்லி மாத்திரம் பிரசங்கித்திருந்தார். சார்ல்ஸ் உவெஸ்லி, 6000 கீதங்கள் உண்டாக்கினார். அவர்களுடைய வேலைகளின் மூலமாய் எவ்வளவு குணப்படுதல் உண்டாயின என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஜெபமே ஜெயம்.

இதே காலத்தில் அமெரிக்காவில் யோனத்தான் எட்வார்ட்ஸ் என்ற ஒருவர் எழு

ம்பி, 1747-ல் தமது நடுவில் காணப்பட்ட ஆவிக்குரிய செத்தநிலைமையைக் கவனித்து "உலகம் முழுவதும் ஆவியானவர் ஊற்றப்படும்படி எல்லா தேசங்களிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ஏகமாக விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்று விளம்பரம் ஆனுப்பினார். எங்கும் ஜெபங்கள் நடந்தன. நாற்பது வருஷத்திற்குப் பிற்பாடு, இந்தியாவின் முதல் இங்கிலிஷ் மிஷனெரியாகிய உல்லியம் கேரி என்பவரும். அவரோடு சேர்ந்த கூட்டத்தாரும் அந்த விளம்பரத்தைத் திரும்ப இங்கிலாந்து தேசத்தில் பிரசுரித்தார்கள். அப்போது ஆரம்பித்த ஜெபத்தின் பலகைவே சர்ச்சுமிஷன் சங்கம், சன்மார்க்க புஸ்தக சங்கம், வேதாகம சங்கம் இவைகள் உண்டாயினவென்று சொல்லலாம்

தற்காலத்திலும் ஜெபிக்கும்படி தேவன் தமது பிள்ளைகளை அழைக்கிறார். மின்சாரத்திற்குரிய ஓர் பிரமாணமுண்டு. மின்சாரம் உண்டாக்குவதற்கு சில மண்பாத்திரங்களில் திராவகம் விட்டு மருந்துகள் போட்டிருக்கும். மின்சாரத்தை அதிகப்படுத்த வேண்டுமானால், செய்யவேண்டியதென்ன? பாத்திரங்களைப் பெரிதாக்குவதினாலல்ல, பாத்திரங்களின் தொகையை அதிகரிப்பதினாலேயே சத்து அதிகப்படும். அதுபோலவே, ஜெபத்தின் வல்லமையும் அதிகப்படவேண்டுமானால், அதிகமாய் சிலர் ஜெபிக்கிறதுமட்டும் போதாது. அதிகமான தேவனுடைய பிள்ளைகள் ஜெபிப்பதினாலேயே வல்லமை அதிகப்படும். நமக்கு விரோதமாய் அணிவகுத்து நிற்கும் சத்துருக்களை ஜெயிப்பதற்கு சிலர் போதாது உலகத்திலிருக்கும் பாவத்தையும், கிறிஸ்தவர்களில் காணப்படும் குளிர்ச்சியையும், தேவனுடைய பிள்ளைகளையுங்கூட ஆண்டுகொண்டிருக்கிற லௌகீகத்தையும் கவனிக்கும்போது, ஜெபிக்கிறவர்கள் தொகை போதாது என்றே சொல்லவேண்டும். வாசிக்கிறவனே, இதுமுதல் நீயும் ஜெபிப்பாயா? ஜெபமே ஜெயம்.

ஜெபிக்கிற ஆத்துமாதான், அதரிசனமான தேவனுடைய வல்லமையை உணரக்கூடும். ஜெபிக்கிற ஆத்துமா மாத்திரம் அன்றாடகம் பூரண கீழ்ப்படிதலாய் தேவனோடு ஜீவிக்கக்கூடும் ஜெபிக்கிற ஆத்துமாதான் எந்த வருத்தம் சங்கடங்கள் நடுவிலும், பொறுமையாயும் தைரியமாயும் இருக்கக்கூடும். ஜெபிக்கிற ஆத்துமாவே எத்தனை அதைரியசம்பவங்கள் நேரிட்டாலும், நம்பிக்கையுள்ளதாக இருக்கும். சகல துர்க்குணங்களையும், கோபதாபங்களையும் சாந்தப்படுத்துகிற அன்பு ஜெபிக்கிற ஆத்துமாவுக்கே கூடியதாயிருக்கும். தேவசாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படுகிற பரிசுத்தம் ஜெபிக்கிற ஆத்துமாவிலேயே காணப்படக்கூடும். பரிசுத்தத்தின் இரசசியம் ஜெபமே. புறமதஸ்தர் ரக்ஷகரின் அன்பை உணரும்படி செய்யும் வல்லமை ஜெபமே. அப்படியானால், "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும்" ஜெபிக்கக்கடவோம்.

சூரியானி சபைகளின் சுவிசேஷ பிரபல்ய முயற்சி.

கீழ் சபைகளின் கிளை ஒன்று அப்போஸ்தலனாகிய தோமாவால் ஸ்தாபிக்கப்பட்டு, இந்தியாவின் மேல்பாகத்தில் பதனொன்பது நூற்றாண்டுகளாக இருந்துவருகின்றது. அது பாபிலோனியா, அந்தியோகியா தேசத்து தாய்ச் சபைகளோடு சம்பந்தப்பட்டுள்ளது. திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களின் சுதேச மன்னர் இக்கிளைச் சபைக்கு அநேக சலாக்கியங்கள் அளித்து செப்புத் தகடுகளில் அவைகளை வரைந்து கொடுத்திருக்கின்றனர். இத்தேசத்துச் சபைகளில் அது சிறப்பும் செல்வாக்குமுள்ளது. பிரதி வருஷம் தொகையில் வளர்ந்து, தற்காலம் சூரியானி கிறிஸ்தவ சீர்திருத்த சபைகளில் நாலு லக்ஷம் கிறிஸ்தவர்கள் உண்டு. ஆரம்ப காலத்தில் சுவிசேஷ வேலை முயற்சியுடைய ஓர் சபையாய் அது இருந்தது. பின்னர் ரோமானித்தர், மகமதியர், இந்துக்கள் முதலியவர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டது. என்றாலும், தன் ஒருமைப்பாட்டையும் சுயாதீனத்தையும் ஆதிக்கொள்கைகளையும் விடாமல், கிறி

ஸ்துவின் வல்லமைக்கு ஓர் பெரிய அத்தாக்ஷியாக விளங்கிநின்று வருகிறது. நாளடவில் இச்சபை தன் உத்தரவாதத்தையும் தான் இந்தியாவில் வைக்கப்பட்ட மேலான நோக்கத்தையும் மறந்து, திருவாங்கூர் ராஜ்யத்துக்கு வெளியே சுவிசேஷம் செல்லும்படியான யாதாமொரு முயற்சியும் செய்யாமல், தனது காரியம் ஒன்றைமட்டும் நோக்கிக்கொண்டு, காலம்தள்ளி வந்தது. பசுமையான நெல் வயல்களும், வானத்தை அளாவும் தென்னந் தோப்புகளும், பளிங்கு போன்ற காயல்களும், அழகான சமுத்திரக் கால்வாய்களும், குன்றுகளும் பள்ளங்களும் செறிந்த வழப்பமான தேசத்திலிருந்தும், இப்பூர்வ திருச்சபையானது கிறிஸ்துவின் சுவிசேஷம் தென்னிந்தியாவிலுள்ள இதர மதஸ்தருக்குள் செல்லவேண்டுமென்ற அவசியத்தை உணராது விட்டுவிட்டது. மகமதியர், ரோமான் சபை கிறிஸ்தவர்களின் மார்க்க விரோதங்களும், உயர்ந்த மலைகளும் சமுத்திரமும் சூழ்ந்த இந்நாட்டின் தனமையும் இக்கிறிஸ்தவர்கள் எவ்வித விசேஷ முயற்சி செய்வதற்கு ஓர் முக்கிய தடையாயிருக்கலாம். அன்னவரின் குறை எவ்வாறிருப்பினும், இருளடைந்த தேசத்தில் இச்சபை அருளொளிக் குன்றாக இருந்து வந்திருப்பதுமன்றி, சத்திய வேதபோதனைக்கும் சபைச் சுவாதீனத்துக்கும் அது விடாமுயற்சியாய்ப் போராடி வந்திருப்பதற்காக எம்பெருமான் இணையடி தொழக் கடன்பாடுடையேம். சில வருடங்களாய் இச்சபையானது கல்வி கலைக்கியான முதலியவற்றில் முன்னேறிச் சென்றிருக்கிறது. பிராமணருக்கு அடுத்தாற்போல், நம் தேசத்தில் கல்வி அறிவடைந்து வந்திருக்கும் ஜனங்கள் இக்கிறிஸ்தவர்களே.

சென்றகாலத்து மார்க்க சண்டைகளின் பலாபலனாக இச்சபையில் பல பிரிவுகளும் அவைகளுக்குள் கொடிய விரோதங்களும் இருந்துவருவதைக் காணலாம். பூர்வீக கல்தேய சபை ஓர் பிரிவாக இன்னும் இருக்கிறது இது மார் தீமோத்தேயு என்னும் மெத்திராணியர் ஆளுகைக்குட்பட்டுள்ளது. இதில் 18,000 கிறிஸ்தவர்கள் உண்டு. பெரிய தொகையான கிறிஸ்தவர்களடங்கிய பிரிவுகள் யாக்கோபியர், மார்தோமியர் என்னும் இரண்டு சபைகள். மார்த்தோமியர் சீர்திருத்த சபையார். சொற்ப ஜனங்களுள்ள மற்றும் பிரிவுகளுமுண்டு.

மேற்கூறிய இரு பெரிய சபைப் பிரிவுகளில் வாலிபரான தலைவர்களில் சிலர் ஆசியாவெங்குமுள்ள திருச்சபைகளில் தற்சமயம் வியாபித்திருக்கும். சுவிசேஷ பிரபல்ய உற்சாகத்தைக் கண்ணுற்று, அதில் வாஞ்சை மிகுத்தவர்களாய், திருவாங்கூர் ராஜ்யத்தின் சமஸ்த சபைகளுக்குட் சென்று விசேஷித்த கூட்டங்கள் நடத்தும்படி மான் எடி துரையவர்களை அவாவுடன் வேண்டினர். தீர ஆலோசனைகள் செய்த பின்னர், வட திருவாங்கூரிலுள்ள பல பிரிவான கிறிஸ்து சபைகள் எல்லாவற்றிலுமிருந்து பிரதிநிதிகள் சேர்ந்த ஓர் ஐக்யகமிற்றி ஏற்படுத்தப்பட்டது. சுவிசேஷ பிரபல்ய முயற்சி சித்தியாயும் சிரத்தையோடும் நடந்தேறுவதற்கு உதவியாக கன்வென்ஷன் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஸ்ரீமான் பௌலர் துரையும் சூரியானிக் கிறிஸ்தவ தலைவரில் சிலரும் வேண்டிய ஒழுங்குகள் ஆரம்பிக்கும்படி முன்சென்றனர். ஒரு மாசத்துக்குள் சூரியானி கிறிஸ்தவ சபைகள், ஆங்கிலேய திருச்சபை, தென் இந்திய ஐக்ய சபை, இரட்சண்ய சேனை, சகோதர ஐக்ய சபை முதலிய இத்தியாதி சபைகளின் பிரதிநிதிகளடங்கிய காரியகர்த்தா சபைகள் அமைத்து, ஐந்து இடங்களில் கன்வென்ஷன் கூட்டங்கள் நடக்கும்படி அநேக உபகழங்களும் ஏற்பாடாயின. ஷை கூட்டங்களுக்குச் செல்லும் செலவு விஷயத்துக்காக சுமார் ரூ 2,000 சவரித்தனர். உத்தேசம் 5,000 ஜனங்கள் வீதம் உட்காருவதற்கு வசதியான ஐந்து பந்தல் சமர்ப்பித்தனர். அவசியந் தேவையான உதவிக்காரவா ஒவ்வொரு இடத்திலும் ஏற்படுத்தினர். கன்வென்ஷன் கூட்டங்களுக்குப்பின் நடந்தேறவேண்டிய வேத ஆராய்ச்சி, ஜெபம், சுவிசேஷ ஊழியம், சமுதாய பணிவிடை முதலியவற்றிற்குரிய ஒழுங்குகள் செய்தனர். இம்முயற்சிகளுக்கு துணை

யான நூல்கள், புஸ்தகங்கள், தாள்ப்பிரதிகள் மலையாள பாஷையில் எழுதுவதற்கும் பிரசுரிப்பதற்கும் தக்க வழிவகைகள் உண்டுபண்ணினர். ஒரு மாசத்துக்குள் இவை யாவும் நிறைவேற்றப்பட்டது மாட்சிமையான ஓர் காரியமல்லவா? இதற்குமுன் எக்காலத்திலாவது இத்தியாதி சபைக் கிளைகள் யாவும் ஏகோபித்து ஒன்றுசேர்ந்து மார்க்க சம்பந்தமான ஊழியம் செய்யத் தலைப்பட்டிருப்பதே கிடையாது. இந்த வேலையில் சம்பந்தப்பட்ட யாவரும் மெய்யாகவே கர்த்தர் தமது கிரியையை வல்லமையாய் நடத்தினாரென்று பரீஷ்காரமாய் அறிந்தார்கள். "இம்முயற்சியில் விளங்கும் அரிய விசுவாசமும், ஆத்திரமான வாஞ்சையும், உள்ளான ஒருமைப்பாடும், மனரம்மியமான ஊழியமும் மிகவும் வியக்கப்படத்தக்கது. பெரிய காரியங்களை எதிர்பார்க்கலாம்" என்று ஸ்ரீமான் பௌலர் துரை ஓர் கூட்டத்தில் மொழிந்தனர்.

ஸ்ரீமான் எடி துரையவர்களும், அஸாம் நாட்டு மகாகனம்: உவால்ஷ் அத்தியக்ஷரவர்களும், பென்சில்வானியா கலாசாலைக் கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீமான் பக்மான் துரையவர்களும் இக்கூட்டங்களை நடத்தினார்கள். கொச்சியிலுள்ள குன்னன்குளம், திருவாங்கூரிலுள்ள கோட்டையம், திருவில்லா, மாவேலிக்கரை, கொட்டாரக்கரை முதலிய இடங்களில் கன்வென்ஷன் கூட்டங்கள் நடைபெற்றன. குன்னன்குளத்தில் 3,000 ஜனங்களும், கோட்டையத்தில 5,000 பேரும், திருவில்லாவில் சராசரி 8,000 பேரும், மாவேலிக்கரையில் 12,000 ஜனங்களும், கடைசியாய் கொட்டாரக்கரையில் 6,000 புருஷர், ஸ்திரீகளும் கூட்டங்களுக்கு வந்திருந்தனர். திருவில்லாவில் ஒருநாள் 17,000 கிறிஸ்தவர்கள் ஆஜரானார்கள்!

ஓர் பெரிய இந்து திருவிழாவுக்கு ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வண்டியிலும் கால்நடையாயும் செல்லுவதுபோல, வண்டிகளில் ஏறியும் தீவெட்டி வெளிச்சம் போட்டுக்கொண்டு கால்நடையாயும் கிறிஸ்தவர்கள் கூட்டங்களுக்கு வந்துகொண்டிருந்தனர். சில கிராமங்களிலிருந்து புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் யாவரும் கூட்டங்களுக்கு வந்துவிட்டதால், அக்கிராமங்கள் குடிபோனவைகள்போலக் காணப்பட்டன. 12 மைல், 20 மைல், 30 மைல் தூரத்திலிருந்தும்கூட ஜனங்கள் பவுஞ்சு பவுஞ்சாய்க் கால்நடையாய் வந்தார்கள். திருவில்லாவில் சுமார் நாலாயிரம் ஸ்திரீகள் சுத்த வெண்வஸ்திரம் தரித்துக்கொண்டு, ஓர் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த காட்சி பார்ப்பதற்கு மிகவும் மனோகரமாயிருந்தது. கல்தேய சபைமெத்திராணியராகிய மார் தீமோத்தேயு அவர்கள் குன்னன்குளம் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மகாகனம் கில் அத்தியக்ஷரவர்கள் கோட்டயம் கூட்டத்தை ஆரம்பித்து, அதின் முடிவுவரையிலும் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தவறாமல் வந்தனர். திருவல்லாவில் திருமனசு மார் தீத்து தோமா அத்தியக்ஷர்/கூட்டங்கள் பலவற்றிற்கு விஜயமானர், திருமனசு குரில்லா அத்தியக்ஷர் கூட்டத்துக்கு வாழ்த்துதல் அனுப்பினர். யாக்கோபியர் சபையைச் சேர்ந்த திருமனசு மார் டயோனிசஸ் என்னும் மெத்திராணியார் கூட்டம் நடத்தினவர்களை ஆசீர்வதித்து ஏற்றுக்கொண்டதுமன்றி, கூட்டங்கள்மீது தங்கள் சந்தோஷமிருப்பதாகவும் வெளியிட்டனர். மார் அதனாசியஸ் அத்தியக்ஷரும் மார் செவரியஸ்ரும் சில பிரசங்கிமாரை உபசரணை செய்தனர். கல்குத்தா மகாகனம் மெத்திரானியார் அவர்கள் கூட்டங்களுக்குத் தங்கள் ஆசீர்வாதம் அனுப்பினர்.

கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் அநேகர் பிரசங்கங்களை மிகவும் கவனத்தோடு கேட்டதுமல்லாமல், பாவ உணர்வடைந்து மனமாறுதலடைந்தவர்களாய்த் தங்களிடம் திரும்பினர். கூட்டங்கள் வைக்கப்பட்ட முக்கிய நோக்கம் ஜனங்கள்முன் எப்போதும் எடுத்துக் காட்டப்பட்டது. பின்னான வேலைக்குரிய ஒழுங்குகள் விமரிசையாய்ச் செய்யப்பட்டன.

ஸ்ரீமான் எடிதுரை அவர்கள் உவால்ஷ் அத்தியக்ஷரவர்கள் பிரசங்கங்கள் மலையாள பாஷையில் தருஜிமால் செய்யப்பட்ட போதிலும், வந்திருந்த கிறிஸ்தவர்கள் பல மணி நேரமாய் மிகுந்த கவனத்தோடு பிரசங்கங்களைக் கேட்டார்கள். இக்கூட்டங்களின் மூலமாகவும் ஸ்ரீமான் பக்மான் துரையின் தனி ஆள் சம்பாஷணை முயற்சிகளினாலும் வெகு பேர் தங்கள் பாவ ஜீவியத்தையும் விசுவாசக் குறைவுகளையும் சுயநயத்தையும் விட்டுவிட்டு கிறிஸ்துவின் நாமமகிமைக்காக ஊக்கமாய் ஊழியஞ்செய்வதாக வாக்குப்பண்ணினார்கள். தனி ஆள் சம்பாஷணை நடத்துவதற்கு ஓர் கூட்டத்தார் கன்வென்ஷன் கூட்டம் நடந்த ஒவ்வொரு இடத்திலும் தெரிந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டனர்.

அநேக நூற்றாண்டுகளாகத் தூங்கிக் கொண்டிருந்த இந்த சூரியானி சபையானது, தன் நித்திரையை விட்டெழும்பிவிட்டது என்றும் ஓர் நற்காலம் அச்சபைக்குப் பிறந்துவிட்டதென்றும் நானாப் பிரிவையும் சேர்ந்த சபைத் தலைவர் மொழிந்து கர்த்தரைத் துதித்தார்கள். சுவிசேஷ பிரபல்ய முயற்சி சம்பந்தமாய் இப்போது ஆரம்பித்த வேலையைக் கொண்டுசெலுத்துவதற்கேதுவாக நாலு ஐந்து காரியதரிசிகளை நியமித்து, ஆதரிப்பதற்காக ரூ. 4,000வரை ஜனங்கள் முன்சொல்லிய ஐந்து இடங்களிலும் வாக்குறுதிபண்ணினர். தவிரவும், சூரியானி சபையைச் சேர்ந்த இரு முக்கிய பிரிவாரும் தங்களுடைய சபை ஆலோசனை சங்கத்தின்கீழ் தங்கள் சொந்த சபைகளில் சுவிசேஷ முயற்சி விஷயமாய் உழைக்கும்படி திறமையுள்ள வாலிபரில் சிலரைப் பிரித்துவைத்திருக்கிறார்கள். இவர்கள் தம்தம் சபைக்குட் சென்று, தனி ஆள் சம்பாஷணை, வேத ஆராய்ச்சி, ஜெபம், ஈகைமுதலியவைகளில் ஜனங்களை அனல்மூட்டி ஏவி எழுப்பிவிடுவார்கள்.

இந்தியாவின் ரக்ஷிப்புக்குத் தன் கடமையைச் செய்யும்படியாக இப்பூர்வ திருச்சபையை கர்த்தர் சந்தித்து, அழைத்திருக்கிறார். இச்சபைக் கிறிஸ்தவர்கள் இப்பரம அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, நவீனமாய்த் தங்களைப் பிரதிஷ்டை செய்து, சுவிசேஷ ஊழியஞ்செய்ய உடன்பட்டிருக்கின்றனர். புது ஊழியம் புது பெலனை அருளுவது திண்ணமே. இந்தியாவிலுள்ள கிறிஸ்து சபை யாவும் ஏகோபித்து, முன்னொரு கால முமிராதவண்ணம் கிறிஸ்துவின் அன்பை இப்பெரிய தேச முழுவதிலும் உயர்த்திக் காட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். தென் இந்திய ஐக்ய சபைகள், தென் இந்திய அத்தியக்ஷாதீன சபைகள், உவெஸ்லியன் சபை, தெலுங்குநாட்டு லுதரன் சபை, வடமத்திய இந்தியா பிரஸ்பித்தரியன் சபை, மஹராஷ்டிர நாட்டுச் சபைகள் முதலிய பல சபைகள் விசேஷித்த பிரகாரம் சுவிசேஷப் பிரசங்க வேலை நடத்திவரும்படி ஏற்பாடுகள் நடைபட்டுவருகின்றன. நம் தேசத்துக்காகவும் தேவனுக்காகவும் உழைக்கும்படி யாவரும் அழைக்கப்படுகிறோம். இந்தியாவின் கோடிக்கணக்கான ஜனங்கள் ரக்ஷிப்புக்காகவும் அதின் நல்வாழ்வுக்காகவும் தேவனின் கொத்தடிமைகளாக உழைக்கவும் கஷ்ட நஷ்டங்களனுபவிக்கவும் இக்காலம் இந்தியாவிலுள்ள கிறிஸ்து சபைக்கு ஏற்ற அனுக்கிரக காலம். இத்தேசத்தின் கண்ணுள்ள கிறிஸ்தவர்களான புருஷர், ஸ்திரீ, பிள்ளைகள் யாவரும் விடாப்பிடியான ஜெபத்தினாலும், அன்பும் சுயவெறுப்புமான ஊழியத்தினாலும் இந்த மகிமையான வேலையை முழு மனதோடும் உள்ளக் கனிவோடும் செய்வது அவசியம். கர்த்தர் அருள்புரிந்து, துணை செய்வாராக.

"பிதாவின்" சுபாவம்: அன்பு.

அன்புக்கு அத்தாக்ஷி: கொடை.

ஆகவே, பிதா குமாரனை உலகத்துக்குக் கொடுத்தார்.

"குமாரன்" தம்மைத் தாமே பிராணத்தியாகமாகக் கொடுத்து, பிதாவை உலகத்திற்கு வெளிப்படுத்தினார்.

மரணத்தின் வழியாய் ஜீவனையும், சிலுவையின்மூலமாய் கிரீடத்தையும் பெற்றுக்கொண்டார்.

"கிறிஸ்தவனும்" உலகத்துக்குப் பிதாவை வெளிப்படுத்தவேண்டியது அன்பினால் பிறக்கும் சுயவெறுப்பான ஊழியத்தினாலேயே.

மரணத்தினால் ஜீவனையும் சிலுவையை சுமப்பதினால் கிரீடத்தையும் அவ்வாறே அவனும் பெறுவான்.

பத்திராதிபர் குறிப்புகள் (தொடர்ச்சி).

"ராமநாதபுரம் சரகத்தில் பிறந்து, பர்மாவில் சர்க்கார் உத்தியோகம் வஹிக்கும் ஓர் வாலிப சகோதரன் தாபத்தத்துடன் எழுதுவது: மிஷனெரி ஊழியத்தில் ராமநாதபுரம் சபைகள் உதவிசெய்யாமலும், தாங்களே சுவிசேஷ பிரபல்ய முயற்சி உற்சாகமாய்ச் செய்துவராமலும் இருப்ப ராமநாதபும் தைப்பற்றி மிகவும் துக்கப் மிஷன். படுகிறேன். அதேக தேசங்களில் ஆவிக்குரிய எழுப்புதல்கள் உண்டாகியிருப்பதுபோல ராமநாதபுரம் மிஷன் சபைகளிலும் பெரிய மார்க்க எழுப்புதலுண்டாகும்படி தான் மிகவும் ஊக்கமாய் ஜெபித்துவருகிறேன். மிகவும் பிரியமுள்ள ஐயாவே, நீங்களும் என் சொந்த நாட்டு சபையை உங்கள் ஜெபத்தில் நினைத்துக்கொள்ள அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். செலவுக்கான நிதிக்காவது, சங்கத்தின் பொது ஊழியத்திற்காவது, பத்திரிகை சந்தா விற்காவது, காணிக்கை ராமநாதபுரம் சரகத்திலிருந்து இதுவரை வந்திருப்பதாக அறியேன். நமது மிஷனெரி வர்த்தமானப் பத்திரிகையை வாசிக்காதது ஓர் பெரிய தடை என்கலாம். நான் சிலருக்குப் பத்திரிகை வாங்கியனுப்பத் தவறினது என்மீது ஒரு குற்றமென எண்ணி, ஏழு பிரதிகள் மாசா மாசம் என் சகோதரருக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இதின் மூலமாயாவது, மற்றவர்கள் பத்திரிகை வாசகவும் சுவிசேஷ முயற்சியில் அனல்மூளவும் தொடங்கலாம் என் தாய்ச் சபையின் நல்வாழ்வைக் கருதினவனாய், அதற்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டாகும்படி, என் காணிக்கையை இனிமேல் ராமநாதபுரம் சபையின்கீழ் பதிய அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். என் மாதிரியைப் பார்த்து, ஒருகால் அதேகர் காணிக்கை அனுப்பு ஏவப்படலாம்" என்பதே. நம் காட்டு வாலிபர் இவ்வபிமானம் காட்டக் கர்த்தர் கிருபை செய்திருப்பதையறிந்து, கர்த்தனைத் துதிக்கிறோம். இச்சரகத்தை நினைத்து, நண்பர் ஜெபிக்கவும் அன்பாய்க் கோருகிறோம்.

நாளது மார்ச்சுமீ 31உயோடு நமது சங்கத்தின் பதிமூன்றுவது வருஷக் கணக்கு முடிவுபெறும். சங்க ஊழியம் கடைசி நாள் விர்த்தியடையும்ப சங்க வருஷ டி கர்த்தர் அனுக்கிரசம்செ முடிவு. ய்திருக்கிறார். மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷர வர்கள் சங்கத்துக்கு அதிகச் செலவு நேராதபடி தங்களாலியன்றமட்டும் தனது மு றைகளைக் கையாடி வேலையை விர்த்தியாக் கிவருகிறார்கள். எவ்வளவு செட்டிமை யுபயோகித்தாலும், சங்க வருமானமும் அதிக்கிக்கவேண்டியது இயற்கையே ஆகலால் கண்பரும் சேவ ஊழியரும் அதிக முயற்சியுடன் உழைத்து, காணிக்கைகளை ஷெ தேதிச்சுள் அனுப்பிவிக்க அன்பாய் ஞாபகப் படுத்துகிறோம். ஜனங்கள் மனப்பூர்வமுள்ளவர்களாகும்படி ஜெபம் தேவை. ஜெபிக்கிறவர்களே நமது சங்கத்தின் பெலன். வாசிக்கும் சகோதரனே, சங்கத்திற்காக நாடோறும் ஜெபிப்பதுண்டோ, மற்றவர்களும் ஜெபிக்கும்படி அழைப்பாயா?

நமது பத்திரிகையின் பிரயோஜனத்தை அறிக்கையிட்டுப் பல கடிதங்கள் வந்திருப்பதையறிந்து கர்த்தரைத் துதிக்கிறோம்.

சந்தாப் பாக்கியிருப்பதி நமது பத்திரிகை. தம் சிலருக்கு ஜனவரிமு பத்திரிகை அனுபவில் லை சிலர் காளது வருஷச்சில் அதிகப் பிரதிகள் அனுப்பும்படி கேட்டருக்கிறார்கள். யத்தத்தினால் கடதாசி விலையம் அதிகரித்திருக்கிறது. பத்திரிகையம் பெரிதாகி புஸ்தகமாகக் கவருடன் வெளியாகிறது. சந்தா அதிகரிக்கவில்லை வாசிப்புத் தெரிந்த ஒவ்வொரு கிறிஸ்தவ தரகத்திலும் நம் பத்திரிகை பிரவேசிக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்தினால்தான் இச்சொற்பக் கிரயத்துக்கு பத்திரிகை அச்சிட்டு பிரகரிக்கப்பட்டு வருகிறது. இவ்விஷயத்தில் அச்சாபீஸ் உதவிமெத்த. பத்திரிகையும் கய ஆகரவுமுறையிலிருக்கும்படி அபேகிக்கிறோம். சந்தாவுடன் பேப்பருக்காக ஏதாவது விசேஷ நன்கொடை அனுப்பினால், சன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளுவோம்.

மார்ச்சு 1916. Vol. XIII. No. 3.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

2 - MAR 1916

யூதர்.

எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; உன்னே நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக (சங். 122: 6).

"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று சுமார் 2,000 வருஷங்களுக்கு முன்னே யூதர்கள் பிலாத்துவினிடத்தில் சொன்னார்கள். யூத ஜனங்களின் பிற்கால சரித்திரத்தைப் பார்க்கும்போது, அவர்கள் கேட்டுக்கொண்டபடி, குற்றமற்றவருடைய இரத்தத்தைச் சிந்தின பழி அவர்கள் மேலேயே சுமத்தப்பட்டிருக்கிறதோ என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது நமது இரட்சகர் பூலோகத்திலிருந்த காலத்தில், ஓரு ஜாதியாராய், யூதர் தங்கள் தேசத்தில் குடியிருந்துவந்தார்கள். ரோமர் ஆளுகைக்குட் பட்டிருந்தபோதிலும், அவர்கள், சுயாதீன ஜாதியார்போலவேயிருந்து, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி எருசலேம் தேவாலயத்தில் பலி செலுத்திபண்டிகைகளை ஆசரித்துவந்தார்கள். ஆனால் இரட்சகர் மரித்து, சுமார் 40 வருஷத்திற்குப்பின், அவர்களில் லட்சக் கணக்கான பேர் பட்டயத்திற்கு இரையாக விழுந்தார்கள். மீதியானவர்களில் அதேகர் கைதிகளாகப் பல தேசங்களுக்கும் கொண்டுபோகப்பட்டார்கள். எருசலேம் தேவாலயமும் அழிக்கப்பட்டு, அதின் மதில்களிலுள்ள கற்கள் ஒன்றின்மேலொன்றில்லாதபடி நிர்மூலமாக்கப்பட்டது. யூதஜாதியார் தங்கள் தேசத்திலிருந்து வேரோடே பிடுங்கப்பட்டு, உலக முழுவதும் சிதறடிக்கப்பட்டார்கள்.

சிதறடிக்கப்பட்ட ராஜ்ஜியங்களில் அவர்கள் பட்ட கஷ்டங்களும் நிஷ்டூரங்களும் கொஞ்சமல்ல. அதேக ராஜ்ஜியங்களில் நிலம்வாங்கக்கூடாதென்று விலக்கப்பட்டிருக்கார்கள். உத்தியோகங்கள் வகிப்பதற்கு அவர்களுக்குப் பாத்தியதை கிடையாது. தாங்கள் யூதர்கள் என்று காட்டும்படியாக தங்கள் உடையில் ஒரு விசேஷ அடையாளம் போடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். கச்சேரிகளில் அவர்களே சாட்சி கோரமுடியாது. அவர்கள் பிரமாணமாய்ச் சாட்சி சொல்லவேண்டுமானால், முள்களினால் பின்னின ஒரு வராை அரையில் கட்டி, தண்ணீரில் நின்று, தங்கள் கையில் வேத சுருளை வைத்துக் கொண்டு, தான் பொய்ச்சாட்சி சொல்லும் விஷயத்தில், தாகமானின் குஷ்டமும், ஏலியின் சாபமும், கோராவின் பிள்ளைகள்மேல் வந்த அக்கினியும் என்மேல் வருவதாக என்று சொல்லி பிரமாணம்பண்ணினால் தான், அவர்கள் சாட்சி ஒப்புக்கொள்ளப்படும் என்று ஒரு தேசத்தில் சட்டம் இருந்தது. இச்சட்டம் சில இடங்களில் இன்னும் நடந்துவருகிறது. மற்ரோர் தேசத்தில் யூதர்கள் யாதொரு விதமான கண்ணியதிற்கும் பாத்திரமல்ல என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் செய்யும் வியாபாரத் தொழில்களை யூதர்கள் பின்பற்றக்கூடாது என்ற கட்டளை அதேகதேசங்களில் இருந்தபோதிலும், கிறிஸ்தவர்களுக்கு விலக்கப்பட்டிருந்த தொழிலாகிய லேவாதேவி மாத்திரம் யூதர்கள் செய்யக் கூடியதாயிருந்தது. ஆகவே, நாவக்கத்தில்

ருந்தே வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்குவதில் யூதர்கள் பேர்பெற்றவர்களாஞர்கள். இத்தத் தொழிலிலுலே அவர்கள் முன்னிலும் அதிகமாய்ப் பகைக்கப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் பணம் அதிகப்பட்டவுடனே, ராஜாக்களும் அவர்களிடம் கடன்வாங்கும்படி கோரிட்டது. அதுமுதல் யூதர்களின் சொற்சக்தி அதிகப்பட ஆரம்பித்தது. தற்காலத்திலும் உலகத்தின் பெரிய பாங்குகளையும் பண விஷயங்களையும் நடத்துகிறது யூதகுலத்தைச் சேர்ந்த ராத்சயில்ட் (Roths child) குடும்பமே. அநேக தேசங்களில் அவர்களை ஒடுக்கும்படியாக வகுக்கப்பட்ட சட்டங்கள் இப்போது நீக்கப்பட்டுப்போயிற்று. யூதர்களில் அநேகர் ராஜ்ஜியங்களின் மந்திரிகளாகவும், ஆலோசனைக்காரராகவும், சட்டநிர்வாக சங்க மெம்பர்களாகவும் இருக்கிறார்கள்.

இவ்வளவு தன்பங்களின் மத்தியிலும் யூதர் தங்கள் கப்பிதங்கள் மதாசாரங்களை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பதைக் கவனிக்கும்போது, ரொம்ப ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. அவர்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருந்தபோதிலும், தங்கள் முன்னோர்களின் சிறப்பையும், தங்கள் ஜாதிப் பெருமையையும் ஒருபோதும் மறக்கிறதில்லை. இங்கிலாந்து தேசத்திலிருந்த ஒரு கண்யவானனை யூதன் அத்தேசத்து பிரபுக்களில் ஒருவருடைய மகளை மணம்புரியும் நோக்கமாய், அப்பெண்ணின் தகப்பனிடம் போய், மகளை தனக்கு மணம் செய்துகொடுக்கும்படியாகக் கேட்டாராம். அந்தப் பிரபு உயர்ந்த குலத்தைச் சேர்ந்த தன் குடும்பத்துப் பெண்ணை, அவமதிக்கப்பட்ட யூதன் மணம்புரிய விரும்பும் தணிகரத்தை நினைத்து ஆச்சரியப்பட்டு, கோபத்தோடு "நிநேகிதனே, உனக்கும் என் குடும்பத்திற்முன்ன வித்தியாசம் தெரியுமா" என்று கேட்டார். அதற்கு அந்த யூதன் "ஆம், தெரியும். ஆனல் நான் உம்முடைய மகளுக்காக அந்த வித்தியாசத்தைக் கவனியாமல் பொறுத்துக்கொள்ளுகிறேன்" என்றார். பிரபு இன்னும் கோபங்கொண்டு "நீயா பொறுத்துக்கொள்ளுகிறாய்" என்று கேட்டதற்கு, யூதன் "ஆம் ஐயா, என் முன்னோர்கள் அரசர்களாய் பொன் உடைதரித்து, தந்த மாளிகைகளில் வீற்றிருக்கும் போது, உம்முடைய முன்னோர்கள், இருந்தார்கள். ஆனலும் நான் அதைப் பொறுத்துக்கொண்டு, உம்முடைய மகளை மணம்புரிந்துகொள்ளுகிறேன்" என்றாராம். இச்சிறிய சரித்திரம் யூதர்கள் தங்கள் முன்னோர்களின் சரித்திரத்தையும் பெருமையையும் எவ்வளவு விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று காட்டுகிறது.

உலகமுழுவதிலும் சுமார் 1,20,00,000 யூதர்கள் இருக்கிறார்கள். அதில் சுமார் 50 லட்சம் பேர் ருஷியா தேசத்தில் குடியிருக்கிறார்கள். யூதர்களில் மிச்சமான பேர் ஐரோப்பிய கண்டத்தில்தான் வசிக்கிறார்கள். சென்ற இராஜதானியில் திருவாங்கூர் மாகாணத்திலும், கொச்சியிலும் சிலர் உண்டு. இந்த ஏராளமான ஜனங்களில், சுமார் ஒருலட்சம்பேர்தான் கிறிஸ்தவர்கள். மற்றவர்கள் எல்லாரும் இன்னும் யூதமார்க்கத்தை அனுசரித்து பழைய ஏற்பாட்டில் சொன்ன மேசியா இன்னும் வரவில்லை; சீக்கிரம் வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மேசியா இயேசுகிறிஸ்துதான், அவர் வந்து இரட்சண்ய கிரியை முடித்துப் போயிருக்கிறார் என்னும் சத்தியத்தை ஒரு யூதன் அறிந்தபின், அவனைப்போல் வல்லமையுள்ள கிறிஸ்தவன் கிடையாது. ஏராளமான யூதர்கள் கிறிஸ்தவர்களாகி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புறமதஸ்தர்களுக்கு கொண்டுபோகும் கருவிகளாகும் விஷயத்தில் அது எவ்வளவு ஆசுகத்முள்ளதாயிருக்கும்!

யூதரின் நன்மைபதற்காக ஐரோப்பாவின் ராஜ்ஜியங்களெல்லாம் விசேஷித்த பிரயத்தனங்கள் எடுக்கின்றன. பலஸ்தீனதேசத்தில் அநேக ஆலயங்களைக்கட்டி, அவர்களுக்குள் வேலைசெய்துவருகிறார்கள். பலஸ்தீனுவில் மாத்திரம் சுமார் ஒரு லட்சத்திற் கதிகமான யூதர்களிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். இவர்களுக்காக திருகெல்

வேலி கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபிக்கிறோமா? திருச்சபையானது யூதர் குணப்படவேண்டிய அவசியத்தைதன்குணர்ந்து, பெரிய வெள்ளிக்கிழமையன்று அவர்களுக்காக ஜெபிக்கவும் சேகரிக்கப்படும் காணிக்கையை அவர்களுக்குள் நடத்தப்படும் மிஷன் வேலைக்காகக் கொடுக்கவும் தீர்மானித்திருக்கிறது. நமதருமை இரட்சகர் யூதனுய்ப் பிறந்தாரென்றும், யூதர் ஆண்டவருடைய விசேஷித்த ஜனங்களென்பதையும் நாம் உணருவோமானுல், அவர்களைப் பற்றி நமக்கிருக்கிற அஜாக்கிரதையைவிட்டு அவர்களுடைய ரட்சிப்புக்காக ஆண்டவரை நாம் விசேஷமாய் கெஞ்ச ஏவப்படுவோம். சுவிசேஷம் முதலாவது யூதருக்கும், பிற்பாடு புறஜாதியாராகிய நமக்கும் அறிவிக்கப்பட்டது. ரட்சகர்தாமே அறிவித்தபடி, காணுமற்போன வீட்டாராகிய இஸ்ரவேலருக்காகவே முந்தி அனுப்பப்பட்டார். வாஸ்தவந்தான், அவர்கள் சுவிசேஷத்தை தள்ளிவிட்டதினுல்தான், சுபாவக் கிளைகளாகிய அவர்களை முறித்து, காட்டொலிவ மரங்களாகிய நம்மை ஒட்டவைத்திருக்கிறார். ஆயினும் "சுபாவக் கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?" ஆகையால் அவர்களும் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்படும்படி நாம் ஜெபிக்கவேண்டியது மிகவும் அவசியம். யூதரும் புறஜாதியாரும் ஒன்றாய் ஆண்டவனைத்தொழுதுகொள்ளும் காலம் வரும்போது அது எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! பரி. பவுல் சொல்லுகிறதுபோலே "அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது! மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்குமல்லவோ?" ரோமர் 11: 15.

S. G. G.

பரிசுத்தமாயி ஜீவிப்பதற்கு முன்று விதிகள்:

1. எப்படி உன் நேத்தைப் பின்னிடிகிறாய் என்பதைப்பற்றிக் கவலையாயிரு.

2. நீ செய்கிற சகல காரியத்திலும், தேவனுடைய கனத்தையும் மகிமையையுமே நாடு.

3. தேவனுடைய சமுகத்தைஉணர்ந்தவனுய் எப்போதும் ஜீவி.

தேலுங்குநாட்டுக் கடிதம்.

சுவிசேஷப் பிரசங்க முயற்சி.—தோர்ணக்கல் சபையார், பள்ளிப்பிள்ளைகள் ஏற்றுக்கொண்டபடி, மூன்று மைல் தூரத்திலுள்ள இரண்டொன்று தவிர, மற்றெல்லாக் கிராமங்களையும் பட்டிதொட்டிகளையும் சந்தித்து, சுவிசேஷ செய்தியை சேவ ஒத்தாசையினல் கூறி யறிவித்திருக்கிறார்கள். வெளியரங்க பஜன் காணப்படாவிட்டாலும், வாசியான் தண்டாவிலும், லாலுகான் தண்டாவிலும் அதிக மூர்க்க விரோதிகளாயிருந்தவர்கள் ராம ராம் என்னும் பேரைவிட்டு, இயேசு சுவாமியின் பேரை உச்சரிப்பதாய் தாங்களே அறிக்கையிட்டிருக்கிறார்கள். பழைய தோர்ணக்கல்லில் ஓர் மாதிகக் குடும்பத்தார் ரட்சகரை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள்.

தோர்ணக்கல் தவச உற்சவம்.—போன மாதக் கடைநேரளில் இங்கே தவச உற்சவம் (ஆனந்தப் பண்டிகை) சந்தோஷமாய்க் கொண்டாடப்பட்டது. கோவிலில் இடம் போதாததால், ஜனங்களே மரங்கள் இலவல் வாங்கி, ஓர் பெரிய பந்தல் போட்டார்கள். உதயம் 7½-மணிக்கு நற்கருணையாராதனை நடத்தது. அப்போது மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷாவர்கள் இப்போர்ப்பட்ட தவச அறப்புப்பண்டிகை காளில் படைக்க வேண்டியது வினவின் பலன்கள் மாத்திரமன்று, கிறிஸ்துவை ஒப்புக்கொள்ளுகிறதற்கு ஆயத்தமாயிருக்கும் ஆத்துமாக்கள், தனிஜெபம், சீர்ப்பட்ட நடக்கையுள்ள கிறிஸ்தவர்கள் முதலான ஆவிக்குரிய நற்பலன்களையும் படைப்பது தகுதியானதென்று தெரிவித்தார்கள். மத்தியானம் 1-மணிக்கு காணிக்கைகள் படைக்கப்பட்டன. பையன்கள் பெண்பிள்ளைகள்கூட தங்கள் இறைச்சியை ஒறுத்தும், விசேமயங்களில் விறகு பொறுக்கி விற்றும், அற்பசொற்ப வேலைகள் செய்து பணம் சம்பாதித்தும் கைப்பொருள்கள் செய்து படைத்தார்கள். மேசை, ஸ்டூல், வினையாட்டு வண்டி, ரூலர், குறுங்கட்டில் முதலியன செய்தார்கள். சேவுத்தொழிலில் பழகும் பையன்கள்

நமது சாலையில் நெய்த துவாலைகள், தாவணி முதலியன கொண்டுவந்தார்கள். கோழிகள், கூடைகள், பழவர்க்கங்கள் கூட வந்தன. தையல்வேலை செய்து கைக்குட்டைகள், பாவாடை, உடுப்புகள், தொப்பி, சட்டைகளும் காணிக்கையாய்ப் படைக்கப்பட்டன. பலகாரங்களும் விற்கப்பட்டன. சாமான்களின் விற்பனைத் தொகையும் காணிக்கையுடன் சேர்க்கப்படும். காணிக்கையாக வந்த தொகை சுமார் 80 ரூபாய்க்குக் குறைவில்லை.

நேசவுசாலை.—தேவகிருபையால் இந்த வாரத்திற்குள் புதுக்கட்டடம் முடிவாகும். இதில் நாட்டுக் குழித்தரி 14-க்குமேல் போடக்கூடும். பள்ளிக்கூடங்களுக்கும் சபை விதவைகளுக்கும் சிறிதுகாலத்திற்குமுன் புடவைகள் நெய்தோம் இப்போது நந்தியால் எஸ். பி ஜி. மிஷன் பாடசாலைக்கு வேண்டிய துணிகள் நெய்ய ஆர்டர் வந்திருக்கிறது. சீக்கிரத்திற்குள் சபைகளிலிருந்து ஆட்கள் வந்து படிக்கவும் அதனால் சபைகள் விருத்தியடையவும் ஏதுவாயிருக்கும். சபைகளுக்கும் நமது மிஷனுக்கும் இந்த நெசவுசாலை பிரயோஜனமாயிருக்கும்படி பிரார்த்தித்துவர வேண்டிக்கொள்ளுகிறேன்.

S. V. சுவாமிதாஸ்.

கிறிஸ்தவ சேவகம்.

பதினெட்டுப் பிராயமான ஆங்கிலேய புருஷரில் சுகதேகிகளான யாவரும் யுத்தத்துக்குப் போகும்படியான சட்டம் இங்கிலாந்து தேசத்தில் இப்பொழுது பிறப்பித்திருக்கிறது. கொஞ்சப் பேர் மிகுந்த கஷ்ட நஷ்டங்களனுபவித்து, போர்முனையில் தங்கள் பிராணனையும் பாராமல், தேசத்துக்காக அமர்புரிந்து வருகையில், பலர் தங்கள் வீடுகளில் சொகுசாயிருந்துகொண்டு, யுத்தத்தின் பலனாக வரும் நன்மைகளை மாத்திரம் அனுபவிப்பது தகுதியல்லவே. தன் தேசத்திற்காக உழைப்பதும் பாடனுபவிப்பதும் ஒவ்வொரு மனுஷன்பேரிலும் விழுந்த கடமையே. ஆதலால்தான் இச்சட்டம் இப்போது ஏற்பாடாகியிருக்கிறது. இதிலிருந்து கிறிஸ்து சபையின் அங்கங்களான ஒவ்வொருவரும் சிறந்த பாடம் படிக்கவேண்டுமென்று மகாகனம்: சென்னை அத்திய க்ஷரவர்கள் எழுதுகிறார்கள். எப்படி ஒரு மனுஷன் தன் ராஜ்யத்தின் நல்வாழ்வுக்காகவும் சுகபத்திரத்திற்காகவும் தனது காரியத்தைப் பெரிதாகப் பாராட்டாமல் உழைக்கவேண்டியதிருக்கிறதோ அப்படியே கிறிஸ்தவனொவ்வொருவனும் தீமைக்கும் நன்மைக்கும், தேவனுடைய ராஜ்யத்துக்கும் பிசாசின் ராஜ்யத்திற்கும் இவ்வுலகத்தில் நடந்துவரும் பெரிய போரில் எப்போதும் தன் பங்கைச் செய்யவேண்டியவனாயிருக்கிறான். தேவனுடைய ராஜ்யத்தின் சேவகத்திலோ மனப்பூர்வமான ஊழியத்தையே கர்த்தர் கேட்கிறார். மனசார சுயவெறுப்பு காட்டவேண்டும். சுயவெறுப்புற்ற ஊழியத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது செய்யமாட்டோமென்றுவிடலாம். தேவனுடைய ராஜ்யத்தின் புத்தரராக மனப்பூர்வமாய் நம்மை வெறுத்து, கர்த்தருக்காகவும் அவருடைய ராஜ்ய விர்த்திக்காகவும் உழைப்பதே நமது சலாக்யம். தூர நிற்பது தகுதியாகாது. தற்காலத்தில் நம் தேசத்தில் எவ்வளவோ வேலைசெய்யவேண்டியதிருக்கிறது! குடி, அசுத்தம், அறிவீனம், அன்புத்தாழ்ச்சி, ஏழைகளை ஒடுக்குதல், மூடபக்தி முதலிய பல தீமைகளுக்கு விரோதமாய்ப் போர்புரிந்து, அவைகள் நீங்கவும், அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, சாந்தம், விசுவாசம், தன்னடக்க முதலிய சிறந்தகுணங்கள் காணப்படும்படியாகவும் கிறிஸ்தவன் உழைக்கவேண்டியவனாயிருக்கிறான். இதை நன்குணர்ந்து, கிறிஸ்தவர்கள் யாவரும் தங்கள் பெலனை அணிந்துகொண்டு, கிறிஸ்துவை உயர்த்திக்காட்டவும் அவருடைய அன்பும் தூய நடக்கையும் இந்தியாவின் சுதந்தரமாக முயற்சிக்கவும் எழும்புவார்களாக.

திருநெல்வேலி பாஸ்ற்றரேற்றின் சுவிசேஷ பிரபல்ய முயற்சி.

பாஸ்ற்றரேற்றிலுள்ள புறமதஸ்தருக்குள் சுவிசேஷ வேலை முன்னிலும் சிரத்தையாய் நடைபெறத்தக்கதாக "பாஸ்ற்றரேட்டு சுவிசேஷ பிரபல்ய ஐக்யம்" என்னும் ஒரு சமாஜ் ஆரம்பித்திருக்கிறது அதற்கு கனம். ஐயரவர்கள் முதலாளியாகவும் ஒரு லே மெம்பர் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றர்வகளைக் கிறிஸ்துவக்காக ஆதாயம்பண்ணுவது கிறிஸ்தவனொவ்வாருவனுடைய முதல் கடமையென்று புகுட்டுவதும், பாஸ்ற்றரேற்றுமுழுவதிலுமுள்ள புறமதஸ்தருக்கு சுவிசேஷத்தை அறிவித்து ரக்ஷாபெருமான் பாதத்தண்டை அவர்களைச் சேர்ப்பதற்குக் கூட்டப்பிரசங்கங்களினாலும் தனிஆட் சம்பாஷணைகளினாலும் ஆத்திரத்துடன் பிரயாசப்படுவதுமே இவ்வைக்கியத்தின் நோக்கம் என்கலாம். பரி. நற்கருணை சேர்ந்தயாவரும் தவறாமல் இவ்வைக்கியத்தில் அங்கங்களாகவேண்டுமென்பது விருப்பம்.

மேற்கண்ட நோக்கம் சித்தியாய் நிறைவேறும்படி பாஸ்ற்றரேற்று ஐந்து பாகங்களாப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்துக்கும் ஒரு தலைவர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். தம்தம் பாகத்திலிருந்து மூன்றுமைல் சுற்றளவுள்ள கிராமங்களை ஒவ்வொரு ஞாயிறிலும் சந்திக்கும்படி ஏற்பாடு செய்வது இத்தலைவரின் வேலைகளிலொன்று. மறுதலித்துப்போனவர்களைத் தேடி சந்தித்துப் போதனை சொல்லி, சபையில் திரும்பவம் சேரும்படி செய்வதும், புறமதஸ்தரை விசேஷமாய் அவர்களுடைய வீடுகளில் சந்தித்து கிறிஸ்துவைப்பற்றிய அறிவைப் புகட்டுவதும் இவ்வைக்கியத்தாரின் முக்கிய கடமையாயிருக்கும்.

நானது வருஷத்தில் குறைந்தபக்ஷம் 100 அத்துமாக்களை ரக்ஷகரண்டை வழி நடத்தவேண்டுமென்பது இந்த ஐக்கியத்தின் விசேஷ வாஞ்சை. வெவ்வேறான பவுஞ்சுகளைச்சேர்ந்த அனைவரும் மாசத்தில் ஒருமுறை ஓரிடத்தில் கூடி, ஐக்யமாய்ப் பிரசங்கவேலை செய்வார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஆலயத்தில் சுவிசேஷ ஊழிய வேலையின் சித்திக்காக விண்ணப்பம் செய்யும்படி ஒரு ஜெபக்கூட்டம் வைக்கவும். ஒவ்வொரு பவுஞ்சின் தலைவரும் தங்கள் பாகத்தில் மார்க்க ஆராய்ச்சிக்காரர், எழுப்புதலடைந்த புறமதஸ்தர் பெயர்களை ஜெபத்திற்காக அக்கூட்டத்திற்கு அனுப்பும்படியும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மாசத்தில் ஓர் முறை கல்வியறிவுள்ள மேல்வகுப்பாரான இந்துக்களுக்குப் பஜனை முதலிய காலக்ஷேமங்கள் பட்டணத்தில் ஒழுங்குசெய்து பிரசங்கம் செய்யவும் தீர்மானித்திருக்கிறது கர்த்தர் தமது ஆவிஙானவரால் இம்முயற்சியை நடத்தியருளுவாராக.

P. N. D.

பணமும் மிஷனெரி ஊழியமும்.

மிஷனெரி ஊழியத்தின் அவசியத்தை எடுத்துக்கூறுவது கடனேயன்றி, அவ்வூழியம் நடந்தேறுவதற்கு வேண்டிய பண உதவி பொருளுதவியைப்பற்றிப் பேசுவதும் பத்திரிகைகளில் எழுதுவதும் பிசகெனச் சொல்வார் சிலர் உண்டு. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்து ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லாமல், சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்த ஆதித் திருச்சபைக்கு இப்படி எடுத்துரைப்பது அவசியமாயிருக்கவில்லை. இக்காலத்திலோ, யாவரும் பணமே பெரிதெனப் பாராட்டுகிறார்கள். இந்நிலையற்ற ஜீவகாலத்தில் கஷ்டப்பட்டு உழைப்பது எதற்காக? பணத்தைச் சம்பாதிக்கும்படி அல்லவா? இவ்வுலகத்தைவிட்டுப் பிரியும்போது தங்களருமைப் பிள்ளைகளுக்குதவியாகப் பெற்றோர் பின்வைத்துப்போவது எது? பணமும் ஒன்று அல்லவா? ஆகவே பணம் மகா முக்கியமானது; மகா அருமையானது. ஆதலின் அது ஆண்டவருக்கும் படைக்கத்

தருத்த காணிக்கையாகிறது. ஒரு மனுஷன் தான் மதியாத ஒரு பொருளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுக்கலாமோ? அவனே அதை அருமையாக எண்ணுவிட்டால், கர்த்தர் அதை அருமையாய் எண்ணுவாரோ? நாம் கர்த்தருக்குக் கொடுக்கும் காணிக்கை நமது தகுதிக்குத்தக்கதாகவும், அதற்கு மிஞ்சியும் இருந்தால்தானே நமக்கு அது அருமையானதென்றும், கர்த்தருக்குப் பிரியமானதென்றும் எண்ணலாம். இரண்டு காசைத் தருமப்பெட்டியில் போட்ட ஏழை விதவையை அருமை இரட்சகர் வியந்துகொள்ளுவானேன்? அவள் தன் பரிபூரணத்திலிருந்து அல்ல; தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்திற்குண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். இவ்விதமாய் நாம் நம் தகுதிக்குத்தக்கதாகக் காணிக்கைகளைச் செலுத்தாவிட்டால், கர்த்தர் நம்முடைய காணிக்கைகளையும் அற்பமாய் எண்ணுவார். மேலும், இதை எடுத்துக்காட்டாதிருப்பது தவறேயன்றி, நம்முடைய ஜனங்களின் குறைவு நிவர்த்திக்கப்படும் பொருட்டு அதைத் தெளிவாய்க் கூறுவது தவருகாது. ஆலயத்தின் தாபரிப்புக்கென்று ஆண்டவர் காணிக்கை கொடுக்கச் கட்டளையிடவில்லையா? நமது அருமை இரட்சகரும் தம்மிடம் வந்த வாலிபனைப் பார்த்து: உனக்குண்டான யாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடு என்றாரே. பிரஸனெரி ஊழியத்திற்கு நமது பணத்தைக் கொடுப்போமா, கொடுக்கவேண்டாமா? நான் கொடுக்கவேண்டிய அவ்வு மிஷனெரி ஊழியத்திற்குப் படைக்கிறேனு, இல்லையா என்ற பல வினுக்கள் நமது மனதில் எழும்புவதே நாம் இவ்விஷயத்தை விசேஷித்துக் கவனிப்பதற்கான ஓர் காரணமாகிறது. மல்கியாத் தீர்க்கதரிசனம் 3: 10-ல் சொல்லியபிகாரம் கர்த்தருக்குக் காணிக்கை படைப்பதினால் நாம் குறைந்துபோவதில்லை. இடங்கொள்ளாமற்போகுமட்டும் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். நீங்கள் என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று உறுதி மொழி கூறுகிறார். ஆண்டவருடைய வசனத்தைப் பிடித்து, அவருடைய வாக்கை நம்பி, அவருக்குக் கொடுப்போமாக. நமது அவசியத்தை முதலாவது யோசித்துப்பார்ப்பது நமது இயல்பு. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தின் மகிமையைத் தேடுவதே நமது கடமை. மலைப்பிரசங்கத்தில் உரைக்கப்பட்டதென்ன?

முதலாவது, 'தேவனுடைய ராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்பதே. கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியைத் தேடுவோம். விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும், எவர்கள் மேலும் அது பலிக்கும்படியாகத் தேடுவோம். இந்தியாவின் ஏராளமான ஜனங்களுக்குள்ளே அது பலிக்கும்படி தேடுவோம் அப்படியானால், இயேசு மகாராஜாவின் ராஜ்யம் விரியும். இவ்வண்ணம் இவைகளையே நாம் முதலாவது தேடினால், மற்றவைகளெல்லாம் நமக்குக் கூடக்கொடுக்கப்படும்.

"தேவனுடைய மகிமை" (தேவ ஒளி) கிறிஸ்துவின் மனுஷீகமாகிய கூடாரத்தின் வழியாய் உலகத்தில் வினங்கினது (யோவா, 1:.14).

"கிறிஸ்துவின் மகிமை" (கிறிஸ்துவின் ஒளி) கிறிஸ்தவனுடைய சரீரமாகிய கூடாரத்தின் வழியாய் உலகத்தாருக்குப் பிரகாசிக்க வேண்டியது தேவ ஒழுங்கு. (2: கொரி 4: 6, 5: 1)

கிறிஸ்துவின் சரீரம் மரணத்தினால் கிழிக்கப்பட்டபோது, அவருடைய ஜீவனின் மகிமை பரிஷ்காரமானது.

அவ்வாறே கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்து, கிறிஸ்துவின் மரணத்தை எப்பொழுதும் தன் சரீரத்தில் சுமந்து திரியும்போதுதான், கிறிஸ்துவின் மகிமையை விசுவாசியாத உலகத்தாருக்குக் காட்டக்கூடும்.

மார்ச்சுமீ Vol. I. No. 1.

திருநெல்வேலி மதுரை அத்தியகூடாதின

பத்திரிகை

முன்று மாசத்துக்கொருமுறை பிசுரமாகும்.

ஈஸ்ற்றர் பண்டிகை

உயிர்த்தெழுந்த பண்டிகையென்பது திருச்சபை யேற்பாட்டில் ஓர் கால மாறுதலைக் குறிக்கிறது. காலமாறுதல் பொதுவாகத் துக்கசம்பந்தமுள்ளதாயினும், ஈஸ்ற்றர் பண்டிகையின் ஆனந்தம் துக்கத்தை முற்றிலும் மறந்துபோகச் செய்கிறது. 2 கொரி. 5: 17ல் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்றிருக்கிறது. இந்த வாக்கியத்தின் கடைசி பாகம்: "எல்லாம் புதிதாயின"வென்றல்ல, "பழையவைகளெல்லாம் புதிதாயின"வென்றே சொல்லுகிறது. எவைகள் புதிதாயின வென்று பார்ப்போம். பாவம், சாத்தான் இவற்றின் அடிமைத்தனத்துக்குட்பட்ட புருஷர், ஸ்திரீகள் யாவரும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பெற்றுப் புது உயிர் அடைகிறார்கள். பூமியையே பற்றிக் கொண்டிருக்கும் ஆசை, நம்பிக்கை மாறி நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையுண்டாகிறது. இவ்வுலகத்தின் மேன்மையைப் பெறக்கூடிய நமதருமையானவர்கள் பலர் நித்தியத்துக்குட்பட்டு கிறிஸ்துவோடு ஐக்யமாகும் அதிமேன்மையான புது நிலைமையை அடைகிறார்கள். பரி. பவுலப்போஸ்தலன் அத்தேனே பட்டணத்தில் 'அறியப்படாத தேவனுக்கு'ச் செய்த வணக்கத்தை ஜனங்கள் விட்டுவிட்டு, கிறிஸ்துவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் பற்றிய ஜீவனுக்கேதுவான அறிவடையக் கருவியாயிருந்ததுபோல பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் கைக்கொள்ளப்பட்டுவருகிற புராதன பழக்கவழக்கங்கள், நிர்மூடமான பேயாராதனைகள் ஒழிந்து, கிறிஸ்து இயேசுவின் சவிசேஷ ஒளி பிரகாசிக்கின்றது. பழைய ஜாதிக்கட்டுகளாலுண்டாகிய மாம்சப் பற்று தேவனுடைய திருச்சபையாகிய பரிசுத்த குடும்பத்தின் ஐக்யமாக மாறுகிறது. இவ்விதமாய்ப் பழையவைகளெல்லாம் ஒழிந்து புதிதாகிக்கொண்டுவருகின்றன. ஆனால் சகலமும் இன்னும் புதிதாகவில்லை. வருஷா வருஷம் தேவன் பூமியின் ரூபத்தைப் புதுப்பிக்கிறார். நூதன பயிர்வகைகள், விருக்ஷங்கள் பூமியில் முளைத்தெழும்பவும், பறவைகள், மிருக ஜாதிகள் புதிதுபுதிதாய் உண்டாகவும் செய்கிறார். அதுபோலவே ஆவிக்குரிய விஷயத்திலும் நாம் தேவனே விசுவாசித்து அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றபோது, நம்மில் ஆரம்பித்த புது ஜீவனுனது வருஷந்தோறும் அவருடைய குமாரனின் உயிர்த்தெழுதலைக் குறித்து நாம் சிந்தித்துத் தியானிக்கிறதினாலே அதிகமாய் வளர்ந்து பெருகும்படி விரும்புகிறார்.

ஆகையால் நான் உங்கள் நடுவில் கொண்டாடும் இந்த முதலாவது உயிர்த்தெழுந்த பண்டிகையில் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லியனுப்பும் ஜெபமாவது:—தேவ ஆவியானவர் உங்களுக்குண்டாயிருக்கும் ஆவிக்குரிய புது ஜீவன் மிகுதியாய்ப் பெருகி வளரச்செய்து, உங்கள் சிந்தனைகளும் செய்கைகளும் கிறிஸ்து இயேசுவுக்கு ஏற்றவைகளாயிருக்கத் தினம்தினம் புதுப்பித்தருளுவாராக.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்:

1. இயேசு தேவ குமாரன் என்பதற்கு ருப காரம் (ரோ. 1: 4).

2. நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு நீச்சயம் (ரோ. 4: 25).

3. நம்முடைய சரீர உயிர்த்தெழுதலுக்கு அத்தாகி (1 கொரி. 15: 22).

சுவிசேஷப் படைமுயற்சி.

"ஆட்டுக்குட்டியானவர் எங்கேபோனாலும் அவனைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" பாவ வல்லமையிலிருந்து விடுவிக்கும்படியாகவே நேவ ஆட்டுக்குட்டியானவர் தமது சிம்மாசனத்தை விட்டிறங்கி, பாவ உலகில் பிரவேசித்தார். நனமை செய்கிறவராகவும், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவராகவும் அவர் அக்காலத்தில் சுற்றித்திரிந்தார். உலகத்தின் பாவத்தை நீக்கும் பலியாகத் தம்மைத்தாமே எருசலேமில் பிரணத்தியாகம் செய்தார். "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்னும் கட்டளையைத் தாம் பரத்துக்கெழுந்தருளுமுன் கொடுத்துப்போனார். அவர் தமது ஆடுகளை வெளியே விடும்போது, தாமே அவைகளுக்கு முன்செல்லுகிறார். நாம் அவரைப் பின்பற்றுகிறவர்களானால், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர் புறப்பட்டுப்போனபோதுபோலவே, நாமும் போகவேண்டும். அவ்வாறு புறப்படப்போகாவிடில், நாம் அவரைப் பின்பற்றுகிற ஆடுகளல்ல; அவர் காட்டும் பாதையை விட்டு விலகி, வேறு பாதைகளில் அலைந்து திரியும் ஆடுகளுக்கு ஒப்பாயிருப்போம்.

நம்முடைய சொந்த மிஷனரி சங்கமொன்று நமது அத்தியக்ஷாதீனத்தில் ஸ்தாபகமாயிருப்பது மேற்கூறிய விஷயம் உண்மையென்பதற்குப் போந்த அத்தாக்ஷியல்லவா? சபையின் உயிருக்குச் சிறந்த அடையாளம் சுவிசேஷ பிரபல்ய வேலையே. புறமதஸ்தருக்குள் சுவிசேஷத்தை சபையார் கூறி அறிவித்துவருவது நன்றியறிதலான ஓர் விஷயம். தவிரவும், விசேஷித்த முயற்சியுடன் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் ஆலோசிக்கப்பட்டுவருவதும் ஓர் நல்ல காரியமே. எனவே இச்சுவிசேஷப் படைமுயற்சியினால் உத்தம ஆசீர்வாதம் வரவேண்டுமானால், ஆழ்ந்த யோசனையுடன் காரியாதிகளை நடத்தவேண்டும். சில குறிப்புகளை உங்களுக்குமுன் வைக்கிறேன்.

நோக்கம். சுவிசேஷப் பிரபல்ய விஷயமாய் பெரும் பிரயத்தனம் ஒன்று ஏர்தடவை செய்துவிட்டு, பின்னர் பழைய மாமூல்படி சுவிசேஷப் பிரசங்கவேலை அசதியாய்ச் செய்வதை நாம் இப்போது ஆரம்பிக்கும் சுவிசேஷ ஊழிய ஏற்பாட்டின் நோக்கமல்ல; சுவிசேஷ பிரபல்ய வேலையினால் விருந்த பலன் எப்போதும் உண்டாகத்தக்கதாக நிலையும் ஸ்திரமான ஒழுங்குகளை ஆரம்பித்து, அத்தியக்ஷாதீன முழுமையிலும் அவைகளைக் கிரமமாய் கையாடிவருவதே இச்சுவிசேஷப் படைமுயற்சியின் நோக்கம். ஆகவே, இந்நோக்கம் சிதறாது நிறைவேறவேண்டுமானால், ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றிலும் தகுந்த ஏற்பாடுகளும் பிரயத்தனமும் எக்காலத்துக்குமென்று செய்வது இன்றியமையா அவசியம்.

முறைகள். சுவிசேஷப் பிரபல்ய வேலை மிக்கும் ஸ்திரமாய் நடைபெறுவதற்கு நாம் கையாடவேண்டிய சில முறைகளாவன:—

முதலாவது, ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றிலும் ஓழுங்கான ஜெபம். அந்தந்த சபைத்தின் குருவானவர் இது விஷயமான ஏற்பாடு சபைகளில் செய்யவேண்டும்.

இரண்டாவது, சம்பளமின்றி, சுதாவில் சுவிசேஷப் பிரசங்க வேலையைக் கிரமமாய்ச் செய்துவருவதற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் ஓர் கூட்டத்தாரை ஒவ்வோர் சபையிலும் சேர்த்தல். இவர்கள் (1) வாலிபர் சங்கங்களிலிருந்தும், (2) பாடசாலை உபாத்திமார், உபாத்தியாயினிகள், பள்ளிப்பிள்ளைகளிலிருந்தும், (3) தாய்மார் கூட்டங்களிலிருந்தும், (4) சபையின் மற்ற அங்கங்களிலிருந்தும் சேர்த்துக்கொள்ளப்படலாம். (பட்டகள் படிப்பதில் பிள்ளைகள் மிகவும் உதவி புரியக்கூடும்.)

மூன்றாவது, வாரத்திற்கோர்முறை அல்லது இருமுறை ஒழுங்காய்க் கூட்டப் பிரசங்கம் செய்யப்போவது மாத்திரமல்ல, புறமதஸ்தனைத் தனிமையாகச் சந்தித்து, அவர்களோடு சம்பாஷணை செய்யும்படியான ஏற்பாடு செய்தல். இவ்விஷயத்தில், நமது பாடசாலைகளில் கல்வி பயிலும் புறமதஸ்தரான பிள்ளைகளின் பெற்றோரைக் கண்டு பேசுவதையே ஆரம்ப வேலையாக வைத்துக்கொள்ளலாம். அவர்களை ஒழுங்காய்ச் சந்திப்பது மெத்த பிரயோஜனமாயிருக்கும்.

நாலாவது, சுவிசேஷ ஊழியம் செய்வதற்குதவியாகப் பாடகக[illegible] ஒழுங்கு செய்தல். சுவிசேஷ ஊழியத்தைப்பற்றிச் சரியான போதனையடையாத ஊழியர் அதிகப் பயன் விளைவிக்கும் வேலை செய்வது கூடாத காரியம். மேலும், இவர்கள் சீக்கிரம் சோர்வடைந்துபோவார்கள்.

ஐந்தாவது, கிறிஸ்தவர்களுக்கும் புறமதஸ்தருக்குமேற்ற தாள்ப்பிரதிகள், புஸ்தகங்கள் தயார்செய்து பிரசுரித்தல். இது முக்யமான ஓர் வேலை. அத்தியக்ஷாதீன முழுமைக்கும் பொதுவான ஓர் 'மத்திய கமிற்றி' (Joint Central Committee) இக்கடமையை நிறைவேற்றும்படி ஏற்படுத்தப்படும்.

ஏற்பாடுகள் பாஸ்ற்றரேற்றுகளே முக்கிய வேலையை நடத்தவேண்டுமெனினும், பாஸ்ற்றரேற்றுகளோடு கடிதப் போக்குவரவு செய்து, வேண்டும்போது அவைகளுக்கு உதவிசெய்யக்கூடியதாக, அத்தியக்ஷாதீனத்திலுள்ள இரு ஆலோசனைச் சங்கங்களிலிருந்தும் (ஜி. எம். எஸ். சர்ச்சு கவுன்சல், திருநெல்வேலி புரோவின்வியல் சர்ச் கவுன்சல்) தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளமைந்த இரண்டு "காரியகர்த்தாசபை" ஏற்பாடாகும். அவைகளின் கடமை பின்வருமாறு:—

1. வாலிப கிறிஸ்தவ சங்கம் (Y. M. C. A.), தாய்மார் ஐக்யம் (Mothers' Union), பரி. யோசேப்பின் ஐக்யம் (St. Joseph's Guild), உழைப்போர் ஐக்யம் (Workers' Union) முதலிய கூட்டத்தாரோடு கடிதப் போக்குவரவுசெய்து, அவர்களை உற்சாகப்படுத்துவதுமன்றி, எந்தெந்த சபைகளில் இக்கூட்டத்தாரின் உதவியைக் குருமார் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்களென்று அறிந்து, வேண்டியவர்களுக்கு அக்கூட்டத்தாரின் உதவி ஒத்தாசை கிடைக்கும்படி ஒழுங்குசெய்தல்.

2. தனித்தனி பாஸ்ற்றரேற்றுகள் சர்க்கிள்களோடு கடிதப்போக்குவரவு செய்து, அதனதற்குரிய அவசியங்களை அறிந்து, வேண்டிய உதவி அளித்தல்.

3. உதவி தேடும் குருமாரின் வேண்டுகோளைத் தேசாந்தரம் கூட்டத்தாருக்குத் தெரிவித்து, அவர்களுடைய ஒத்தாசை கிடைக்கும்படி பார்த்தல்.

4. கிறிஸ்தவர்களை எவி எழுப்பி அனல் மூட்டிவிடுவதற்குப் புற உதவி தங்களுக்குத் தேவையென்று எக்குருமார் விரும்புகிறார்களோ அச்சபைகளில் போய்ப் பிரசங்கம் நடத்துவதற்கு ஏற்ற ஆட்களை ஒழுங்குபண்ணுதல்.

5. அத்தியக்ஷாதீன முழுமைக்கும் பொதுவான மத்திய கமிற்றி (Joint Central Committee) யோடு சேர்ந்து, எக்கனவே பிரசுரமாகியிருக்கும்வைகளிலிருந்து சுவிசேஷப் பிரபல்ய விஷயத்திற்கு ஏற்ற நூல்களையும் தாள்ப்பிரதிகளையும் தெரிந்தெடுக்கவும் நூதன நூல்கள் இயற்றவும் அனுபோகஸ்தரான திறமையுள்ளவர்களை ஏற்படுத்துவது.

6. மற்ற இடங்களில் நடைபெறும் சுவிசேஷப் படைமுயற்சி ஊழியத்தின் அநுபவமுறைகளை ஆராய்ச்சி செய்து, குருமாருக்கும் ஊழியருக்கும் பிரயோஜனமாக வெளியிடல். (அம்முறைகளை ஓர் புஸ்தகமாக 'மத்திய கமிற்றி' பிரசுரிக்கும்.)

7. அத்தியக்ஷாதீனம் முழுமையிலும் கன்வென்ஷன் கூட்டங்கள் பல தொடர்ச்சியாய் நடைபெறும்படியான ஏற்பாடு செய்வது இவ்வேலையின் நிலவரத்துக்கு அநுகூலமான தூணையாகுதென்றாலும், வழக்கமாய் நடந்துவரும் கன்வென்ஷன் கூட்டங்களிலும் இரண்டொரு விசேஷ கன்வென்ஷன் கூட்டங்கள் முக்கிய மிஷன் ஸ்தானங்களில் வைத்தும் 'சுவிசேஷ பிரபல்ய வேலை'யை முக்கியப்படுத்திக்கொள்ளுவது மிகவும் நன்று. சுவிசேஷ பிரபல்ய ஊழியத்திற்காக ஜெபிப்பதும், உற்சாகமாய் உழைப்பதும், காணிக்கை கொடுப்பதும் தங்களுடைய கடமையென்று கிறிஸ்தவர்கள் உணரும்படி அவர்களை எவி எழுப்பிவிடுவதற்காக ஒவ்வொரு சர்க்கிள் (சேகரம்) களிலும் பாஸ்ற்றரேற்றுகளிலும் விசேஷித்த மிஷன் கூட்டங்கள் ஒழுங்குசெய்வது மிகவும் முக்கியம்.

அத்தியக்ஷாதீனத்திலுள்ள இரண்டு சர்ச்சு கவுன்சல்களிலிருந்தும் (D. C. C. & T. P. C. C.) ஏற்பாடாகியிருக்கும் இரு காரியகர்த்தா சபைகளும் அதனதன் கவுன்சலின் ஆதீனத்துக்குட்பட்ட பாஸ்ற்றரேற்று

களில் வேலைசெய்வது, மிகுந்த பயன் விளை விக்குமென்பது நமது அபிப்பிராயம்.

மேற்கண்ட இரு காரியகர்த்தா சபைகளுக்கும் பொதுவாக, கொஞ்சப்பேர் அமைந்த ஓர் 'மத்திய கமிற்றி' (Central Committee) ஒன்று ஏற்படுத்த நினைக்கிறோம். கிறிஸ்தவர்களுக்கும் புறமதஸ்தருக்கும் வேண்டிய புஸ்தகங்கள் தயார்செய்வது; அவசியமென்று காணுங்கால், இரண்டு கவுன்சல்களுக்கும் பொதுவான விசேஷ மிஷன் ஒழுங்குசெய்வது; விசேஷ பிரசங்கிகளும் தேசாந்தரக் கூட்டத்தாரும் இரண்டு கவுன்சல்களோடு சேர்ந்த சபைகளுக்கும் பிரயோஜனமாக ஒன்றாய் உழைக்கவேண்டிய சமையங்களில் அதற்குத் துணையாக ஏற்பாடுசெய்தல் முதலிய பொது விஷயங்களை நடத்தி, அத்திய கூதீனத்தின் இம்முக்கிய ஊழியத்தை ஒருமைப்படுத்துவது இந்தக் கமிற்றியின் கடமையாகும். என்றாலும், அதின் முக்கிய வேலை ஊழியரையும் சபையாரையும் அனல்மூட்டி சுவிசேஷ ஊழியத்திற்கு எவி எழுப்பிவிடுவதே.

கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகிய யாவரையும் ஜீவனேயளிக்கும் ஆவியானவர் தமது வல்லமையினாலும் ஜீவனாலும் பரிபூரணமாய் நிரப்பியருளுவாராக.

அத்தியகூதீன தின ஜெப ஒழுங்கு.

தெற்கு.

1 அத்தியகூர்; மிஷனெரிமார்; இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கும் மிஷனெரிமார், சுவிசேஷப் பிரசங்கிகள்.
2 பரளையங்கோட்டை சர்க்கிள், மதுரை சேகரம்.
3 குருமார், சபை ஊழியம் நடத்தும் ஊழியர், குருப்படிப்புக்கு ஆயத்தப்படுகிறவர்கள், சபைகள்.
4 ஆள்வாநேரி சர்க்கிள், நாசரேத் சரகம்.
5 வேதசாஸ்திர, கார்மல் பாடசாலைகள்.
6 செவல் சர்க்கிள், நாதாபுரம் சேகரம்.
7 காலேஜ்கள், ஹைஸ்கூல்கள்.
8 இடையன்குடி சேகரம், டோனவூர் சர்க்கிள், [illegible].
9 போ[illegible] பாடசாலைகள்.
10 பண்ணிகுளம் சர்க்கிள், புதியம்புத்தூர் சேகரம்.
11 கிராமப் பள்ளிக்கூடங்கள்.
12 பண்ணைவிளை சர்க்கிள், சாயற்புரம் சேகரம்.
13 கன்வென்ஷன் கூட்டங்கள்.
14 மெஞ்ஞானபுரம் சர்க்கிள், கிறிஸ்தியா நகரம் சேகரம்.
15 இந்திய மிஷனெரி சங்கம்.
16 முதலூர் சேகரம், நாலுமாவடி சர்க்கிள்
17 புறமதஸ்தர், தேசாந்தரக் கூட்டங்கள்.
18 கூடன்குளம் சேகரம், சாத்தான்குளம் சர்க்கிள்.
19 கிறிஸ்தவ வாலிபர்: வாலிப ஐக்ய சங்கம், பரி. யோசேப்பின் ஐக்யம்.
20 தூத்துக்குடி சேகரம், சுவிசேஷபுரம் சர்க்கிள்.
21 கிறிஸ்தவப் பிள்ளைகள்: வேதாகம ஐக்யக் கூட்டம், பிள்ளைகள் மிஷன்கள்.
22 நல்லூர் சர்க்கிள், புதுக்கோட்டை சேகரம்.
23 சர்ச்சு கவுன்சல், திருநெல்வேலி புரோவின்ஷியல் சர்ச்சுகவுன்சல்.
24 சுரண்டை சர்க்கிள், குளத்தூர் சேகரம்.
25 பெண்களுக்குள் செய்யப்படும் வேலை; வைத்திய மிஷன்கள்.
26 சாகுபியாபுரம் சர்க்கிள், நாகலாபுரம் சேகரம்.
27 சர்ச்சு மிஷனெரி சங்கம்.
28 ராமநாதபுரம் சேகரம், வாகைக்குளம் சர்க்கிள்.
29 இந்தியா இலங்கை உயிர்ப்பிக்கப்பட.
30 எஸ். பி. ஜி சங்கம்.
31 மற்றும் மிஷன்கள்.

திருநெல்வேலி சபையானது உள்ளபடி கிறிஸ்துவின் சரீரமாயிருக்கவேண்டுமானால், சபை மொத்தமாக அத்தியகூதீனத்தின் ஒவ்வொரு பாகத்திற்காகவும் ஸ்திரமாய் ஜெபித்து, தேவாவியானவரின் ஒத்தாசைக்காகவும் கடத்துதலுக்காகவும் விண்ணப்பத்தில் ஒருமனப்படுவது இன்றி

மையா அவசியம். ஆதலால் மாதத்தின் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கவேண்டிய விஷயங்களடங்கிய "ஜெப ஒழுங்கு" ஒன்று தயார் செய்திருக்கிறோம். இந்த அத்தியகூதீனத்தின் ஓர் பெரிய பாகத்தில் ஜெப ஒழுங்கு ஒன்று ஏற்கனவே வழங்கிவருகிறது. அதை முழுவதுமாக மாற்றுவது உசிதமாய் தோன்றவில்லை. ஆகவே, நமது அவசியங்களுக்கு இசைய, எவ்வளவு சொற்ப மாறுதல் செய்யக்கூடுமோ அவ்வளவு மாறுதல் மாத்திரம் அதில் செய்திருக்கிறோம். ஓர் தினத்தில் முன் ஜெபித்துவந்த சர்க்கிளோடு ஒரு சேகரத்தைச் சேர்த்திருக்கிறோம். திருஷ்டாந்தமாக, 2-ம், 4-ம், 6-ம் தேதிகளில் பாளையங்கோட்டை, ஆள்வாநேரி, செவல் சர்க்கிள்களுக்காக முறையே ஜெபித்துவரும் ஒழுங்கில், மதுரை, நாசரேத், ராதாபுரம் சேகரங்களை முறையே சேர்த்திருக்கிறது. ஆகையால், இரண்டு இடங்களில் ஒருகாளில் நம் மன்றாட்டில் நினைத்துக் கொள்ளுவோமாக. ஒற்றை லக்கமுள்ள தேதிகளில், குருமார், வித்யா ஸ்தாபனங்கள், கன்வென்ஷன் கூட்டங்கள், சுவிசேஷ பிரபல்ய ஊழியங்களுக்காகப் பிரார்த்தனை செய்யும்படி குறிப்பிட்டிருக்கிறது. பொதுவான ஆராதனையில் மாத்திரமல்ல, வீடுகளில் சபையாரும் மேற்காட்டிய ஜெப ஒழுங்கை உபயோகித்து வர அன்பாய் அழைக்கிறோம்.

ஆராதனையில் "ஜெப ஒழுக்கை" உபயோகிப்பதற்கு உதவியாக ஓர் முறையை இங்ஙனம் கூறுவோம். குருவானவராவது ஆராதனை நடத்தும் உபதேசியாராவது அந்தந்த தேதிக்குரிய ஜெபப் பொருளை முதலாவது அறிவிக்கவேண்டும். பின்பு குறிக்கப்பட்ட விசேஷித்த ஜெபத்தைச் சொல்லவேண்டும். திருஷ்டாந்தமாக, 1, 2, 3, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20, 22, 24, 26, 28-ம் தேதிகளில் "குருமாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபத்தை" தவறுது வழங்கவேண்டும். இந்த ஜெபத்தைச் சொல்லுமுன், "குருமாருக்காகவும் சபையாருக்காகவும் விசேஷமாய் (2-ம் யாகூல்) பாளையங்கோட்டை சர்க்கிளிலும் மதுரை சேகரத்திலுமுள்ள குருமாருக்காகவும் சபையாருக்காகவும் ஜெபம்பண்ணக் கடவோம்" என்று சொல்லவேண்டும். அப்பால் ஜெபத்தில் "அவர்கள் விசாரணைக்குட்பட்ட எல்லாச் சபைகள்மேலும்" என்ற வாசகத்துக்குப்பின், "விசேஷமாய் பாளையங்கோட்டை சர்க்கிளிலும் மதுரை சேகரத்திலுமுள்ள குருமார் சபைகள்மேலும்" என்ற வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்லி, ஜனங்கள் அமரிக்கையாகத் தனிஜெபஞ் செய்யத்தக்கதாக சற்று நிறுத்தி, பின்னர் "ஆரோக்கியம் தருகிற உம்முடைய இரு பையுள்ள ஆவியை" முதலிய வார்த்தைகளைச் சொல்லி ஜெபத்தை முடிக்கவேண்டும்.

மற்ற தேதிகளில் பின்கண்ட விசேஷ ஜெபத்தைச் சொல்லலாம்:—

பரம பிதாவே, திருச்சபையில் வெவ்வேறான வரங்களையும் ஊழியங்களையும் உமது ஆவியானவரால் உமது ஜனங்களுக்கு நியமிக்கத் திருவுளங்கொண்டவரே, இந்த அத்தியகூதீனத்தில் ஊழியஞ்செய்யும்படி நீர் ஏற்படுத்தியிருக்கும் உமது ஊழியக்காரரின் வேலைகளை ஆசீர்வதித்தருளும். விசேஷமாக * . . . . . .

. . . . மேலும் உம்முடைய திருபாகடாட்சத்தையும் பரம ஆசீர்வாதத்தையும் அனுக்கிரகித்தருளும்படி கெஞ்சுகிறோம். இந்த ஊழியங்களின் மூலமாய் நாங்களனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்

* 5-ம் யாகூல், "எங்கள் வேத சாஸ்திர கார்மல் பாடசாலைகள்மேலும்," அப்படியே 7, 9, 11-ம் களில் அந்தந்த நாட்களுக்குரிய பொருளைச் சொல்லவேண்டும். 15-ம் யில், "எங்கள் மிஷனெரி சங்கத்தின் ஊழியத்தின்மேலும்" என்றும் 17, 23, 25, 27, 30, 31-ம் தேதிக்களில் அப்படியே அந்தந்த நாட்களுக்குரிய பொருளைச் சொல்லவேண்டும். 13, 17, 19-ம் களால், "கன்வென்ஷன் கூட்டங்கள்மேலும்," "வாலிப ஐக்ய சங்கத்தின் மேலும்," "பிள்ளைகள் மிஷன்கள்மேலும்" என்று முறையே சொல்லவேண்டும்.

படி அருள்புரியும். உமது ஒரே குமாரனும் எங்கள் புண்ணியகாதருமாகிய இயேசுகிறிஸ்து வினிமித்தமே. ஆமென்.

"மிஷன் வர்த்தமானக்காகச் சொல்லிய ஜெபம்" என்னும் காட்டன் அத்தியகூரின் பிரார்த்தனை இன்னும், இலங்கைக்காக ஜெபிக்கும்படி குறித்திருக்கும் 29ஆக்கு மிகவும் ஏற்றது.

மேற்காட்டிய விசேஷ ஜெபங்கள் ஜெப ஒழுங்காக உபயோகிக்கத்தக்கதாக ஆலோசனையாக மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விசேஷ சமயங்களுக்கேற்ற மற்றும் ஜெபங்களும் குருமாருக்குத் தெரியவந்திருக்கலாம். அவைகளை வழங்குவதற்கும் ஆக்ஷேபனையில்லை. ஒரே நோக்கத்திற்காக யாவரும் ஒரே மனசோடு ஜெபிப்பதே காரியம். ஏனெனில் நாம் ஒருமனப்பட்டு கேட்கும் மன்றாட்டுகளுக்கு உத்தரவு அருளிச்செய்வதாக அருள்நாதர் வாக்குரைத்திருக்கிறார்.

அத்தியகூரவர்களின் சுற்றுப்பிரயாணம்.

ஜனுவரி 14—18. மதுரையில் காலை தினங்களைப் பின்னிட்டேன். இது அமெரிக்க மிஷனைச் சேர்ந்த ஓர் மிஷன் ஸ்தானம். அமெரிக்க மிஷன் வசம் இப்பட்டணத்தை ஒப்புவித்த காலத்தில், அம்மிஷனே ஐக்யமாயிருக்க விரும்பாமல், தாங்கள் முன்னிருந்த சபையோடேயே ஐக்யமாயிருக்கவேண்டுமென்று விரும்பிய சபையார் அக்காலமுதல் இதுவரை நம் சபையோடு ஐக்யமாக இருந்து வருகிறார்கள். இச்சபையார் ஸ்திதிபற்றி. தங்கள் குருவைத் தாங்களே தரபரித்துவருகிறார்கள். இத்தப் பாஸ்ற்றரேற்றுணது ஏதாவது மிஷனரி சங்கத்தைச் சேர்ந்ததாயிராமல், நேரே அத்தியகூரின் ஆளுகைக்குட்பட்டது. சபையின் தொகை சுமார் 300. ஆங்கிலேய கிறிஸ்தவர்கள் ஆராதித்துவரும் பரி. ஜியார்ஜ் ஆலயத்தில்தான் இவர்களும் தேவாராதனை செய்துவருகிறார்கள். இவ்வாலய ருஷாப்தர தினத்தில் (ஜனுவரிமீ 15ஆ) நான் அங்கு இருந்தேன். 16ஆ ராயிறில் ஆங்கிலேய சபையின் சற்கருணை ஆராதனையும் தமிழ்ச் சபையின் சற்கருணை ஆராதனையும் பிரசங்கமும், மாலையில் ஜக்ய ஸ்தோத்திர ஆராதனையுமாக மூன்று ஆராதனைகள் நடக்கன. காலை இரு ஆராதனைகளிலும் ஏராளமான சபையார் வந்திருந்தார்கள். மாலையில் ஆலயமாத்திரமல்ல, அதின் விராந்தாக்களும் நிரம்பியிருந்தன. வெளி 11: 15-ல் "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின" என்ற வசனத்தின்பேரில் பிரசங்கஞ்செய்தேன். கிறிஸ்தவ ராஜ்யத்தின் உத்தரவாதம் இன்னதென்பதைக் காட்டினதுமன்றி, ஒரே திராச்சபையை உலகத்துக்கு ஈவாக அளித்திருப்பதை நன்றாணர்ந்து, இந்தியரும் ஐரோப்பியரும் ஒன்றாகச் சேர்ந்து ஏகமனதோடு சேவனஸ்தோத்திரிப்பதைப் பார்க்கிறது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னமாகுதலே ஆசிக்கும் அனைவருடைய உள்ளத்திலும் புதுகம்பிக்கையை உண்டாக்கி அணல்மூட்டவேண்டியது என்றும் சொன்னேன்.

இச்சபையின் குருவாகிய கனம் A. A. எசேக்கியேல் ஐயாவர்கள் தாங்கள் விட்டுவந்து சென்னை அத்தியகூரதீனத்தில் ஊழியஞ்செய்வதற்குத் திரும்பவும் போகிறார்கள். அவர்களின் ஸ்தானத்தில் சங்கூன் பட்டணத்தில் நிரப்பணிவிடை நடப்பித்துவந்த கனம். வெள்ளையா ஏசுதாசன் ஐயாவர்கள் இப்போது குருவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்களிருவருக்காகவும் மதுரை சபைக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இச்சபையின் தன்மை சில விஷயங்களில் விசேஷ கஷ்டங்களுள்ளது. அது தனித்த சபையாக இருப்பதுமன்றி, ஓர் சபையாக சுவிசேஷ பிரசங்க வேலை செய்வதற்குப் போந்தசமயமும் வழி வகைகளுமில்லை.

நான் இங்கிருந்த காலத்தில் இந்திய கிறிஸ்தவ ஐக்ய சங்கத்தாரின் கூட்டமொன்றில் உபந்நியாசம் செய்தேன். இச்சங்கத்தின் ஓர் விசேஷமென்னவென்றால், புருஷரைப்போலவே ஸ்திரீகளும் இச்சங்கத்தின் சகல சலாக்கியங்களுக்குமுள்ளான அங்கங்களாகலாம். இது புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஓர் சங்கம். அதின் அவயவங்கள் இச்சங்க விர்த்திக்காகவும் மிகவும் ஊக்கமாய் உழைத்துவருகிறார்கள். கிறிஸ்தவர்களின் புறமபான கல்வாழ்வுக்காகமாத்திரமல்ல, ஆவிக்குரிய ஊழியங்களிலும் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்வார்களானால், இச்சங்கம் மதுரை கோயில் ஓர் வல்லமையுள்ள சத்துவமாயிருக்குமென்பது திண்ணமே.

ஜனுவரி 18—21ஆ. இராமநாதபுரத்தில் பின்னிட்டேன். இச்சேகரம் விசாரணை குருவாகிய கனம். A.D. லிம்ரிக் ஐயாவர்கள் ராஜாவின்பேரில் சீமைக்குப் போயிருப்பதால், அவர்கள் ஸ்தானத்தில் கனம். D. S. பாக்கியநாதன் ஐயாவர்கள் மிசே சேகரத்தை விசாரித்துவருகிறார்கள். இங்கு ஓர் ஹைஸ்கூலும், ஆண், பெண் போர்டிங் பாடசாலைகளும், ஓர் அச்சுக்கூடமும், இந்தப்பெண்களின் பாடசாலையும், ஸ்திரீகளுக்கு ஓர் ஆஸ்பத்திரியும், ஒரு பூத்தையல் பாடசாலையும் இருக்கின்றன. இவ்வெல்லா ஸ்தாபனங்களுக்கும் போனேன். கனம். லிம்பிரிக் அம்மாளுக்குப் பதிலாக கனம். ஆடம்ஸ் துரைசானி பெண்களின் பாடசாலைகளை மேற்பார்த்துவருகிறார்கள். குடும்பஜோலியாய் பெரு வரிமாசக் கடைசியில் அந்த அம்மாள் தக்கள் வேலையை விட்டுவிடவேண்டியதாயிருப்பது துக்கமான விஷயமே. வைத்திய வேலையை டாக்டர் உவால்ற்றர்ஸ் துரைசானியவர்கள் மேல்விசாரணை செய்துவருகிறார்கள்.

ஒருதின முழுவதும் குருமாரோடு செலவழித்தேன். ஆராதனைகளும் ஒரு கான்பரன்ஸ் கூட்டமும் நடந்தன. அக்கூட்டத்தில் சுவிசேஷ பிரசங்க வேலை, சபை ஊழியம், சுய ஆதரவு முதலிய பல விஷயங்களைப்பற்றிப் பேசினேன். சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு ராமநாதபுரம் மிஷனில் கஷ்டங்கள் பலவுண்டு. அங்குள்ள தேவ ஊழியரை நமது ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுவது மிகவும் அவசியம். ஹைஸ்கூல் புதுக்கட்டட்டத்தைப் பிரதிஷ்டை செய்தேன். மாணாக்கர் கூடும் ஓர் அறையாகவாவது, காலை வகுப்புகள் வைக்கக்கூடிய காலை அறைகளாகவாவது அதை உபயோகிக்கலாம். இக்கலித்தியாச லையில் சுமார் 200 பேர் கல்விகற்கிறார்கள். அதின் தலைமை ஆசிரியராகிய Mr. G. F. என்றி என்பவரின் முயற்சியினால் பாடசாலை வருத்தியாகிக் கொண்டுவருகிறது. மாணாக்கர்கள் நாளது வருஷத்தில் ராமநாதபுரம் காற்பந்தாட்டத்தில்வெற்றியடைந்து, கேடகவிருது பெற்றார்கள்.

ஆண்களின் போர்டிங் சாலையில் 80 பையன்கள் சாப்பிட்டுக்கொண்டு ஹைஸ்கூலில் கல்வி கற்றுவருகிறார்கள். கட்டடம் வீஸ்தீரணமுள்ளது. ஆனால் இப்பையன்களை நடத்தும் விஷயத்தில் இன்னமும் தேர்ச்சி அவசியம். இங்குள்ள ஆலயப் பாடகரின் தலைவராகிய Mr. யோசுவா என்பவரின் விசாரணையில் பெண்களின் போர்டிங் சாலை இருக்கின்றது. இப்பாடசாலையின் வேலை எனக்கு மெத்த திருப்திகரமாயிருந்தது. டாக்டர் உவால்ற்றர்ஸ் துரைசானியின் கீழ் பல இந்தியரும் ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறார்கள். ஆஸ்பத்திரியோடு சேர்த்து ஒரு கட்டடமும் ஒரு புது பங்களாவும் கட்டுவதற்கு ஏற்பாடு நடக்கிறது. இந்த இரண்டு கட்டடங்களும் மிகவும் அவசியம்தான். ஆஸ்பத்திரியின் மூலமாய் நல்ல வேலை நடந்துவருகிறது. இதற்களும் மகமதியரும் டாக்டர் துரைசானியை அடிக்கடி தங்கள் வீடுகளுக்கு அழைத்து, வைத்திய சிகிச்சை செய்துகொள்வது சந்தோஷகரமான விஷயமே.

ஜனுவரி 21—28ஆ. ராத்துக்குடியில் ஒரு வாரம் பின்னிட்டு, இம்மிஷன் ஸ்டேஷனைச்சேர்ந்த பல இடங்களையும் சந்தித்தேன்.

22ஆ சனிக்கிழமையன்று காலேவல் ஹைஸ்கூலில் நடப்பதற்காக ஆயத்தமாயிருந்த 28 பையன்களை அழைத்து, அடுத்த நாளில் அவர்கள் செய்யப்போகும் பிரதிக்ஞைகளைப்பற்றி அவர்களோடு பேசினேன். அப்பால், நிடப்பதற்கு ஆயத்

தப்பட்டுக்கொண்டிருந்த இரண்டு ஐரோப்பிய போலீஸ் உத்தியோகஸ்தரோடு சமபாஷித்தேன். அதன்பின்பு, மிஷன் பங்களாவில் தோட்ட விருந்தளிக்கப்பட்டது. அச் சமயம் அங்கிலேயரான சபையார் யாவரையும் கண்டுபேச்சுக்கூட்டமாயிருந்தது. இந்த உபசரணைக் கூட்டம் அங்குள்ள தாமார் தாசாஞ்மாரின் அன்பான முயற்சியினால் ஏற்பாடுசெய்யப்பட்டது.

ஜனுவரிமீ 23உ. தமிழ்க் கோவிலில் பரி. கற்கருணை ஆராதனையும், அப்பால் காலை ஆராதனையும் பிரசங்கமும்இருந்தது. திரளான ஜனங்கள் ஆராதனைக்கு வந்திருந்தார்கள். பிற்பகலில் கால்டுவேல் பாடசாலையின் ஆலயத்தில் 28 பையன்களும் மேற்கூறிய இரு போலீஸ் உத்தியோகஸ்தரும் திட்பத்தில் பெற்றார்கள். ஆங்கிலேய புருஷரும் தமிழ்ப் பையன்களும் ஒன்றாகத் தங்கள் பிரதிஷ்டைகளைச் செய்தது கிறிஸ்துவுக்குள்ளான ஒருமைப்பாட்டிற்கு ஓர் சிறந்த திருஷ்டாந்தமே. முற்காலத்தில் டேனியரின் ஆலயமாயிருந்த அத்தப் பூர்வீகக் கோவிலில் மாலை ஆராதனையும் பிரசங்கமும் நடந்தது. ஆலயம் நிரம்ப ஜனங்கள் வந்தார்கள்.

ஜனுவரிமீ 24உ. சாயர்புரத்துக்குப் போய், இரவும் பகலும் அங்கு தாமதித்தேன். பையன்கள் பெண்களின் பாடசாலைகளையும் ஆஸ்பத்திரியையும் அநாத சாலையையும் பார்த்தேன். சாயர்புரம் ஒருகாலத்தில் முக்கிய மிஷன் ஸ்தானமாயிருந்தது. போக்குவரவுக்குரிய வசதியில்லாதினால், இச்சேகரத்தின் வடபாகமாகிய தூத்துக்குடியில்தான் இப்பொழுது வேலை வர்த்தியாகிவருகிறது. மாலையில் அங்குள்ள அலங்காரமான ஆலயத்தில் ஆராதனை நடந்தது. திரளான ஜனங்கள் கூடிவந்தார்கள்.

ஜனுவரிமீ 25உ. சூரிய உதயத்திற்கு முன் தோணியைக் கடந்து, புதுக்கோட்டை சேரும்படி கால்கடையாய்ப் புறப்பட்டோம். 7-மணிக்கு பரி. கற்கருணை ஆராதனை நடத்தினேன். இது ஓர் சிறு சபை. ஸ்திதபக்தர் பூச்சியம். ஆனால், ஆராதனைக்கு ஜனங்கள் உற்சாகமாய் வந்திருந்தார்கள்.

மேலூரிலுள்ள பையன்கள் பாடசாலையையும் விக்டோரியா பெண்பாடசாலையையும் சந்தித்து, மீதிப் பகலை தூத்துக்குடியில் பின்னிட்டேன். இவ்விரு பாடசாலைகளுக்கும் இடம் போதாது. கால்டுவேல் ஹைஸ்கூலில் ஹாஸ்டல் விஸ்தரமான ஒழுங்கு திருப்திகரமாய் வர்த்தியாகிவருகிறது. இரண்டு மெத்தையுள்ள சேர்த்திபான சாப்பாட்டு அறைகள் சமீபகாலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. பையன்களின் சுகத்துக்கு அவை ஏற்கனவே அனுகூலமானவைகளாக விளங்குகிறது. அனுசாயக்காரரும் அத்தகாலும் குருமாருக்கு அமர்க்கையான தினங்களாக இருந்தது. தேவனுடைய தீர்மானம் எதுவென்றும், அதில் குருமார் செய்யவேண்டியது என்னவென்றும், சபையின் கடமை எதுவென்றும் கவனித்தோம். வெவ்வேறான ஊழியங்களுக்காகவும் தேவனுடைய உத்தம ஊழியராகக் காணப்படும்படி எங்களுக்காகவும் விண்ணப்பஞ்செய்தோம். அப்பால் சுவிசேஷப் படைமுயற்சி வேலையைப்பற்றி ஒரு கான்பரன்ஸ் கூட்டம் நடத்தினோம். நாகலாபுரம் கனம். J. மனுவேல் ஐயரவர்கள் ஓர் பிரபந்தம் வாசித்தார்கள். அதிலுள்ள பல விஷயங்களைப் பின்னல் எடுத்துப் பேசுவேன். சுய ஆதரவு, சுய ஆளுகை, சபைகள் விஷயமாய் குருமாரின் கடமைகள் இவைகளையும் சிந்தித்தோம்.

ஜனுவரிமீ 26உ. புகைவண்டி மார்க்கமாய் அதிகாலையில் தட்டப்பாறை சேர்ந்தோம். Mr. சிம்மன்ஸ் தம்முடைய குதிரை வண்டியில் எங்களைப் புதியம்புத்தூருக்கு அழைத்துக்கொண்டுபோனார். சபையாரைச் சந்தித்தபின் அங்குள்ள பையன்கள் பெண்கள் போர்டிங் பாடசாலைகளைப் பார்வையிட்டேன். பள்ளிக்கூடத்துக்கு ஏற்ற ஓர் இடத்தையும் பார்த்தேன். தற்சமயம் பள்ளிக்கூடம் ஓர் வசதிக்குறைவான கட்டடத்தில் நடக்கிறது. பள்ளிக்கூடம் கட்டுவதற்கு கல்ல இடம் சில வருஷங்களுக்கு முன் அக்கினி வாதையான பழைய கோவில் இருந்த பூமிதான். ஆலய மண்டபம் ஒன்றுதான் நிற்கிறது. தற்சமயம் பண

மில்லை. அதுவரை பள்ளிக்கூடத்திற்கு வேறு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சாயர்புரம் சுவாமிசந்நிதியில் ஒரு சிறு கோவில் பிரதிஷ்டைசெய்வதற்குப் போனேன். வழியில் மாஜாவின் கோவில் என்னும் கிராமத்தைச் சந்தித்தோம். ஜனங்கள் எங்களை மிகவும் அன்பாய் ஏற்றுக்கொண்டார்கள். சுவாமிசந்நிதியில் ஆலயம் கொள்ளக்கூடாதபடி ஜனங்கள் பிரதிஷ்டை ஆராதனைக்கு வந்திருந்தார்கள். இப் பார்சந்நிதியிலுள்ள அநேக கிராமங்கள் முன் ஒருகாலத்தில் முழுவதும் கிறிஸ்தவ கிராமங்களாயிருந்தன. சரியானபடி ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை நடத்திவராதால் அநேர் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். இந்தக் கிராமத்தின் ஜனங்களிலும் அநேகர் அவ்வாறு மறுதலித்துப்போனவர்களே. இப்போது அங்கு ஒரு சிறு சபை மாத்திரம் இருக்கிறது. முந்தின ஆலயம் அழிக்கப்பட்டுப்போக இந்த நல்ல சிறு கோவிலை ஜனங்கள் கட்டியிருக்கிறார்கள். கஷ்டமான இத்தனை வருஷங்களுக்குப்பின், திரும்பவும் நல்ல அறுப்பைக் கர்த்தர் கட்டளையிடுவார் என்று நம்ப இடமுண்டு.

ஜனுவரிமீ 27உ. தட்டப்பாறையைச் சந்தித்தேன். இது இலங்கை தோட்டக்காட்டுக் கூலியாட்கள் வழியில் தாபரிக்கும் குடியேற்று ஸ்தலம் இங்கு சுமார் 60 கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். ஒரு ஜெப வீடும் உண்டு. பரி. கற்கருணைக்கு இவர்கள் புதுபம்புத்தூருக்காவது தூத்துக்குடிக்காவது போய்வருவார்கள். காலை ஐந்து குடும்பங்களை வீடுகளில் சந்தித்து, மிஷனெரி கான்பரன்ஸ் கூட்டத்துக்கு ஆஜராயிருக்கும்படி பாளையங்கோட்டைக்குத் திரும்பினேன்.

ஜனுவரி 31உ. நாசரேத்துக்குப்போய் ஒரு வாரம் அங்கு தாமதித்தேன். ஆண் பெண் பாடசாலைகள், நார்மல் அப்பியாசப் பள்ளிக்கூடங்கள், கைத்தொழிற்சாலை, ஆஸ்பத்திரி முதலிய ஸ்தாபனங்களைப் பார்த்தேன். சுவிசேஷப் பிரசங்க வேலைக்குத் துணையாக ஆஸ்பத்திரி வேலை கடக்க வேண்டியது. வைத்திய வேலைக்காக வந்திருக்கும் கனம். உவெல்ஸ் டாக்டர் துரை தங்களுடைய நேரத்தில் மிச்சமான பாகத்தை சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களைச் சந்தித்து, சுவிசேஷ வேலை செய்வதில் செலவழிப்பார்கள். இவ்வகையான ஊழியமே ஒரு மிஷன் ஆஸ்பத்திரி வைக்கப்பட்டிருப்பதின் நோக்கம். கிறிஸ்தவர்களுடைய வசதிக்காக மாத்திரமல்ல, கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, வியாதியஸ்தரை குணமாக்கவும், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவுமே வைத்திய மிஷன்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

நாசரேத்திலிருந்த காலத்தில் மூக்குப்பீறி, கடையனோடை, பன்றிமடல், உடையார்குளம், ஆழ்வார்திருநகரி முதலிய இடங்களையும் சந்தித்தேன். மூக்குப்பீறியில் பருவங்கடந்தவர்களான ஏழு ஜனங்களும் மூன்று பிள்ளைகளும் பரி. ஞானஸ்நானம் பெற்றார்கள். கடையனோடை சபை தற்சமயம் திருப்திகரமான நிலைமையிலில்லை. தங்களைச்சுற்றிலும் அந்தகாரத்திலிருக்கும் ஜனங்களுக்கு இக்கிறிஸ்தவர்களுடைய ஒளி பிரகாசிக்கத்தக்கதாக திருச்சபையின் விண்ணப்பம் அவசியம். பன்றிமடலில் ஜனங்கள் ஓர் புது ஆலயம் கட்டியிருக்கிறார்கள். உடையார்குளத்தில் பரி. கற்கருணை ஆராதனை நடத்தினேன். ஜனங்கள் உற்சாகமாகத் திருப்பந்தியில் சேர்ந்தார்கள். ஆழ்வார்திருநகரியில் பையன்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. சுவிசேஷ சத்தியத்தை இக்கூட்டங்களுக்கு அறிவிக்கும் சாதனமாக அக்கலாசாலை நடத்தப்படுகிறது.

நாசரேத்தில் சிறுபிள்ளைகளின் பண்டிகையும் கொண்டாடப்பட்டது. சுமார் 1,100 பிள்ளைகள் ஆலயத்தில் கூடினார்கள். ஆராதனையில் விளக்குகள் மூலமாக அவர்களுக்கு நல்ல போதனை கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் மிகவும் கன்ருய் விளைகொடுத்தார்கள். வருஷாந்தரப் பரிசம் அச்சமயம் அளிக்கப்பட்டது. பிள்ளைகள் தங்கள் காணிக்கைகளையும் படைத்தார்கள். அது ஓர் மிகுந்த மனமகிழ்ச்சி நாளாயிருந்தது. அன்று சாயங்காலை டாக்டர் உவெல்ஸ்

துரையவர்களின் பெண் குழந்தை பரி. ஞானஸ்நானத்தினால் திருச்சபையில் சேர்க்கப்பட்டது.

தூத்துக்குடியில் நடத்தினதுபோல இங்கும் குருமாருக்கு ஒரு அமரிக்கையான நாளும் கான்ப்ரன்ஸ்கூட்டமும் வைத்தேன்.

பெப்ருவரிமீ 10, 11உ. கொல்லத்துக்குப்போய், அலகபாத்தில் எங்களுக்கு மிஷன் செக்ரற்றரியாயிருந்த என் பழைய சிநேகிதராகிய மகாகனம் கில் அத்தியக்ஷரவர்களுடன் இன்பமாய் சம்பாஷித்து, மிகவும் பிரயோஜனமான பல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டோம். அவர்களுடைய ஸ்தானத்தில் நான் செக்ரற்றெரியாக இருக்க சலாக்கியம் பெற்றதுமன்றி, அவர்களுடைய பாதையில் பின்சென்று, நானும் தென் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். அவர்களுடைய அநுபவமும் ஆலோசனைகளும் எனக்கு மெத்த உதவியாயிருந்தன. அதிக உற்சாகமுமடைந்தேன்.

பத்திராதிபர் குறிப்புகள்.

நாளது 1916-ம் வருஷமுதல் திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்துக்கென்று பிரத்தியேகமான பத்திரிகையொன்று மூன்று மாசத்துக்கோர்முறை பிரசுரிக்க ஆரம்பித்திருக்கிறோம். சுவிசேஷ பிரபல்யமே இவ்வத்தியக்ஷாதீனத்தின் முக்கிய ஊழியமாதலால், இவ்வருஷத்துப் பத்திரிகையைச் 'சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி'யோடு சேர்த்துப் பிரத்தியேகமான தலைப்போடு பிரசுரிக்கிறோம் இவ்வத்தியக்ஷாதீனத்துச் சபைகளில் வாசிக்கத் தெரிந்த யாவரும் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டுமென்ற ஆசையினாலேயே இதைத் தமிழில் பிரசுரிக்கிறோம்.

பத்திரிகை.

சில வருஷங்களாய் சி. எம். எஸ் சேகரத்தில் உபதேசிமார் வகுப்பு நின்றுபோயிருந்தது. நாளது வருஷம் சூன்மாசம் முதல் பழையபேட்டையைச்சேர்ந்த 'Retreat' ஒன்னுமிடத்தில் 6 பேர் குருப்பட்டத்துக்கும் 12 பேர் உபதேசிமார் வேலைக்கும் படிக்கத்தக்கதாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. கனம். G. T. செல்வின் ஐயரவர்களும் கனம். M. V. ஜாண் ஐயரவர்களும் ஷை வகுப்புகளை நடத்துவார்கள், நாசரேத், செமினெரி பாடசாலையிலுள்ள பழைய மாணாக்கர்கள் அவரவர் சேகரங்களுக்கு உபதேசிமாராகப் போய்விட்டார்கள். புது செமினெரி வகுப்பையும் நார்மல் வகுப்பையும் ஏககாலத்தில் ஆரம்பிப்பது உசித்மென்றெண்ணி, இவ்வருஷத்து வகுப்பு 1917-ம் ௵ சூன்மாசத்தோடு முடியவும் புது நார்மல், வேதசாஸ்திர செமினெரி வகுப்புகள் இரண்டும் இனிமேல் சூன் மாசத்திலேயே ஆரம்பிக்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

வேதசாஸ்திர வகுப்புகள்.

நாளது வருஷம் மார்ச்சுமீ 19உயாகிய லெந்து நாடகளில் வரும் இரண்டாம் ஞாயிறு தினத்தில் பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்தில் அடியிற்காட்டிய நால்வருக்கும் உதவிக் குருப்பட்டாபிஷேகம் கொடுக்கப்படும்.

பட்டாபிஷேகம்.

கனம். V. தேவவீரன் ஐயரவர்கள் கைலாபுரம் (C. M. S

,, J. D. டேயர் ஐயரவர்கள், பெ[illegible]டல்பட்டி (C. M.

,, P. சாமுவேல் ஐயரவர்கள், மூ[illegible]

,, N. P. வேதமுத்து ஐயரவர்கள், யாக்கோபுபுரம் (S. P. G.)

எஸ். பி. ஜி. சேகரத்துக்கென்று கனம் A. P. ரர்ண்டல் ஐயரவர்கள் மிஷனெரியாக பெப்ருவரிமீ 9உ தூத்துக்குடிக்கு வந்து, பாஷை படித்துக் கொண்டிருக்கிறார்கள். யுத்தகாலத்தில் திருநெல்வேலிக்கு ஓர் புது மிஷனெரியவர்கள் வரப்பெற்றது பெரிய சலாக்கியமே.

புது மிஷனெரி.

நமது அத்தியக்ஷாதீனம் முழுவதிலுமுள்ள எல்லாச் சபைகளிலும் தினந்தோறும் ஆராதனை சமயத்திலும் வீடுகளிலும் வழங்கத்தக்கதாக ஓர் ஜெப ஒழுங்கு இப்பத்திரிகையின் இன்னோரிடத்தில் வருகிறது. தனிப்பிரதிகள் வேண்டுபவர்கள் பின்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெப ஒழுங்கு.

கனம் R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள்,
பிஷப்ஸ் சேப்ளன்,
பாளையங்கோட்டை.

ஏப்ரல் 1916. Vol. XIII. No. 4.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

40-ம் சங்கீதம்

இந்தச் சங்கீதம் இருபிரிவுள்ளது. முதல் பதினொரு வாக்கியங்களிலும் தேவன் செய்த உபகாரங்களுக்கு நன்றியறிதலான காணிக்கையாக கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவர் மகிமையைப் பிரஸ்தாபிக்கும்படி தற் பிரதிஷ்டையும், மென்மேலும் அவர் கிருபை கிடைக்கும்படி ஜெபமும் அடங்கியிருக்கிறது. இரண்டாம் பாகத்தில், எண்ணிக்கைக்கு அடங்காத சத்துருக்கள் கையிலிருந்து தீவிரமாய் விடுவிக்கப்படும்படி செய்யும் மன்றாட்டு கண்டிருக்கிறது. இவ்விரு பாகங்களிலும் நடைவேறு, போங்குவேறு, பொருள்வேறு. மேலும் 13-17 வரையுள்ள வசனங்களும் 70-ம் சங்கீதமும் ஒன்றுபோல இருக்கின்றன. 40-ம் சங்கீதத்தின் ஒரு பாகம் 70-ம் சங்கீதமாயிற்றோ, அல்லது பிரத்தியேகமாயிருந்த ஓர் கீதம் 40-ம் சங்கீதத்துடன் சேர்க்கப்பட்டதோ திட்டமாய்ச் சொல்ல வழியில்லை. இந்தப் பாடத்தில் முதல் பதினொரு வசனங்களை மாத்திரம் தியானிப்போம்.

இச்சங்கீதத்தின் ஆக்கியோன் இன்னாரென்றாவது சந்தர்ப்பம், இன்னதென்றாவது தெளிவாய்க்கூற ஏதுவில்லை. கீழ்ப்படியாமையினால் சவுல் ராஜ்யபாரத்தை இழந்தபின், தாவீது சிங்காசனம் ஏறுமுன் இவ்வாறு தன் தீர்மானத்தைத் தெரிவித்துப் பாடியிருந்தாலுமிருக்கலாம். 'பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் நல்லது' (1சாமு. 15:22) என்று சவுலுக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகளைத் தன்னுள்ளத்தில் கொண்டவனாய், வா. 6 ஐ தாவீது பாடினானோ?

இச்சங்கீதத்தில் சுமார் எட்டுவரிகளுள்ள நாலு சரணங்களுண்டு. (1) வா. 1-3; (2) வா. 4, 5; (3) வா. 6-8; (4) வா. 9-11.

1. கர்த்தருடைய கிருபை. வா. 1-3.

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்.
அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என்கூப்பிடுதலைக் கேட்டார்.
அழிவின் குழியிலும், உளையான சேற்றிலும் [நின்று
அவர் என்னைத் தூக்கி எடுத்து,
என்பாதங்களைக் கற்பாறையின்மேல் நிறுத்தி,
என் அடிகளை உறுதிப்படுத்தி,
நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை
அவர் என் வாயில் கொடுத்தார்;
அநேகர் அதைக்கண்டு பயந்து, கர்த்தரை நம்புவார்கள்.

இதுவே சங்கீதக்காரன் கீதத்துக்குக் காரணம். என் ஜெபத்தைத் தேவன் கேட்டார். பயங்கரமான ஸ்திதியிலிருந்து என்னைமீட்டார். என்னைப் பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தினார். என் ஆத்துமா என் இரட்சகரில் ஆனந்தம் கொள்ளும்படி செய்தார். இதை மற்றவர்கள் அறியும்போது அவரை நம்புவார்கள் என்கிறான்.

2. கர்த்தரைப்பற்றும் நம்பிக்கை வா. 4,5.

அகங்காரிகளுக்கும் துரோகிகளுக்கும் நேராகத் திரும்பாமல்,
கர்த்தரையே தன் நம்பிக்கையாக்கியிருக்கும்
மனுஷன் பாக்கியவான்!
என் தேவனாகிய கர்த்தாவே,

தேவரீர் எங்களுக்காகச் செய்திருக்கும் அதிசயங்கள் ஏராளம்!
உமது கிரியைகளையும் எங்கள் பேரிலுள்ள உமது நினைவுகளையும்
கோர்வையாய் விவரிக்கமுடியாது! [தால்,
அவைகளைச் சொல்லவும் விவரிக்கவும் புகுந்
அவைகள் எண்ணிக்கைக்குமேலானவைகள்!

தமது பக்தர் பேரில் தேவனுக்கிருக்கும் தயவுள்ள சிந்தைகளும் அவர்கள் விஷயமாய் அவர் செய்யும் அதிசயங்களும் வாயினால் விவரிக்கக்கூடியவையல்ல. ஆகவே, அவரை நம்பிப் பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறவன் எவ்வளவு பாக்கியவான் என்று ஆர்ப்பரிக்கிறான். மேலும் கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்கும் அவருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன் என்று கேட்கிறாப்போலிருக்கிறது. உத்தரவை அடுத்த சரணத்தில் காணலாம்.

3. சங்கீதக்காரன் பிரதிஷ்டை. வா. 6-8.

இரத்தப்பலியையம் பானபலியையும் நீர் விரும்புகிறதில்லை,
எனக்குச் செவிகளை அமைத்தீர்.
சர்வாங்க தகன பலியையும் பாவநிவாரண
நீர் கேட்கவில்லை; (பலியையும்
அப்பொழுது நான்: இதோ, வந்தேன்,
புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது.
என் தேவனே! உமது சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறேன்.
உமது நியாயப் பிரமாணம் என் உள்ளத்தில் இருக்கிறது என்றேன்.

இரத்தப்பலி, போஜன்பலி, சர்வாங்க தகனபலி, பாவநிவாரண பலி முதலிய நாலு வகைப் பலிகளில் உமக்கு விருப்பமில்லை. செவிகளைத் தந்த நீர் நான் உமது சொற்கேட்டு நடந்து, உமது சித்தத்தை நிறைவேற்றவேண்டுமென்றே ஆசிக்கிறீர்! இதோ கர்த்தாவே வந்தேன்! உமது நியாயப் பிரமாணத்தைக் கற்றுக்கொண்டேன்; அதில்கண்ட உமது சித்தத்தை நிறைவேற்ற வாஞ்சிப்பேன் என்று சங்கீதக்காரன் தன்னைத் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புவிக்கிறான். தேவ கிருபையைப் பெற்று அனுபவித்தவர்கள் செலுத்தத்தக்க சிரேஷ்டமான பலியும், செய்யத்தக்க உத்தமநேர்ச்சையும் இதுவே. தேவனுடைய சித்தப்பிரகாரம் ஜீவிக்கும்படி தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் (ரோ. 12: 1).

எபி. 10: 5—7-ல் இவ்வசனங்களை இயேசுநாதர் தாமே சொல்லுவதாக எடுத்துக்கூறியிருக்கிறது. 'எனக்குச் செவிகளை அமைத்தீர்' என்பதற்குப்பதிலாக 'ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணினீர்' என்று கிரேக்கதிருப்புதல் வேதாகமத்தில் கண்டபடி எபிரேய நிருப ஆக்கியோன் பெயர்த்தெழுதுகிறார். பழைய ஏற்பாட்டுப் பலிகளையல்ல, கீழ்ப்படிதலையே தேவன் விரும்புவதாகப் பக்தன் பாடின வார்த்தைகளை மேற்கோளாகக்கொண்டு, இயேசுநாதர் தமது பூரண கீழ்ப்படிதலினாலே நிறைவேற்றி முடித்த இரட்சண்ய கிரியை அப்பூர்வ பலிகளைப் பூராவாய் ஒழித்துவிட்டதினால், இயேசுநாதரே இவ்வார்த்தைகளைச் சொன்னாற்போல் எடுத்துக்கூறி தமது நியாயத்தை ஸ்தாபிக்கிறார். இவ்வார்த்தைகளை இவ்வாறு உபயோகித்திருப்பதினாலேயே இச்சங்கீதத்தை பெரிய வெள்ளிக்கிழமை வாசிக்கிறோம்.

4. பக்தன் சாட்சி. வா. 9—11.

மகா சபையிலே நீதியின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்,
என் உதடுகளை மூடவில்லை—
கர்த்தாவே நீர் அதை அறிவீர்!
உமது நீதியை நான் என் இருதயத்திற்குள் ஒளித்துவைத்துக்கொள்ளவில்லை.
உமது உண்மையையும் உமது இரட்சிப்பையும் நான் சொல்லியிருக்கிறேன்.
உமது கிருபையையும், உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடி நான் மறைத்துக்கொள்ளவில்லை;
கர்த்தாவே உமது உருக்க இரக்கங்களை எனக்குக் கிடைக்காமற் போகப் பண்ணாதேயும்.
உமது தயவும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது.

கீழ்ப்படியும்படி செவிகளை அமைத்த தேவன் பேசும்படி உதடுகளையும் உண்டாக்கினாரல்லவா? தேவனுடைய சற்பனைகளுக்குச் செவிகொடுப்பது மாத்திரமல்ல, அவ

ருடைய அன்பையும், தயவையும், கிருபையையும், உண்மையையும் மற்றவர்களுக்குச் சாட்சியாக உதடுகளால் விவரிப்பதும் தன் கடமையென்று சங்கீதக்காரன் ஒப்புக்கொள்ளுகிறான்.

இரட்சிக்கப்பட்டவன் ஒவ்வொருவனுக்கும் இவ்விருகடமையுமுண்டு: கீழ்ப்படிதல், சாட்சி சொல்லுதல். தேவன் செய்திருக்கும் உபகாரங்களுக்கு ஈடாகச் செய்யும் பிரதிஷ்டை எதுவென்றால்: அவர்கட்டளைக்குச் செவிகொடுக்கும்படி சரீரத்தை அவருக்குக் கையளிப்பதும், ஜனங்கள் மத்தியில் உதடுகளை மூடாமல் அவருக்காகச் சாட்சி பகருவதுமேயாம். சாட்சி சொல்லாத கிறிஸ்தவன் நன்றிகேடன். பாவிகள் நடுவில் உதடுகளை மூடுகிறவன் உத்தமனல்ல. பிறர் இரட்சிப்புக்காகப் பிரயாசப்படாதவன் பராபரன் அன்பை ருசித்தவனல்ல. ஆகவே சங்கீதக்காரனைப்போல நாமும் 'மகா சபையிலே நீதியின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன், என் உதடுகளை மூடவில்லை; கர்த்தாவே நீர் அதை அறிவீர்' என்று உண்மையாய்ச் சொல்லத்தக்கதாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முன் செல்லுவோமாக.

அர்மீனிய கிறிஸ்தவர்களின் கஷ்டங்கள்

ஆசியா கண்டத்தின் மேல்பாகத்தில் வசிக்கும் நாகரீகமுள்ள ஜாதியாருக்குள் அர்மீனியரே அதிபூர்வீகமானவர்கள். கஸ்பியன் கடல், கருங்கடல், மத்தியதரைக் கடல்களுக்கு இடையிலுள்ள மலைப்பிரதேசம் இவர்களுடைய நாடு. நோவாவின் பேழை தங்கின ஆரராத்துமலை இந்நாட்டு மலைத்தொடர்களின் உயர்ந்த சிகரம். ஓர் தேசமாக கிறிஸ்துமார்க்கத்தை முதலாவது ஏற்றுக்கொண்டது அர்மீனிய ராஜ்யமே. அர்மீனியர் ஓர் பலத்த ஜாதியார், மிகவும் நாகரீகத் தேர்ச்சியுற்றோர். இதரமதஸ்தரான ஜாதியாரால் இவர்களுடைய தேசம் பலமுறை ஜெயிக்கப்பட்டு வந்தபோதிலும், இக்கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தை விடாது உறுதியாய்ப் பிடித்து நிற்கிறார்கள்.

நம் ராணிவிக்ரோரியா சக்கிரவர்த்தினி அம்மாள் காலத்தில் மகமதியாரால் அர்மீனியருக்கு ஒரு பெரிய நிஷ்டூரம் நடந்தது. துருக்கி இங்கிலாந்தோடு சிநேக சம்பந்தமாயிருந்ததால், அந்நிஷ்டூரங்களுக்கு முடிவு வரக்கூடிய ஏற்பாடு ஒன்றும் செய்வது கூடாது போயிற்று. கிளாட்ஸ்ற்றன் என்னும் ஆங்கிலேய மந்திரி வெகுவாய் அர்மீனிய கிறிஸ்தவர்கள் பக்ஷம் பேசியும் காரியம் வாய்க்கவில்லை. 'ஐரோப்பா கண்டத்து வியாதிஸ்தன்' ஆகிய துருக்கி ஆங்கிலேய அரசாட்சியின் பெலனால் தண்டனையடையாதுவிடப்பட்டது.

தற்காலத்தில் நடைபெறும் பயங்கரமான யுத்தத்தின் காரணமாக துருக்கியர் சுமார் எட்டுலக்ஷம் அர்மீனியரை சித்திரவதை செய்து, சர்வ சங்காரம் செய்திருக்கிறார்கள். கீர்த்தி பிரதாபமுற்ற குருமார், வித்யாபாரகர், வியாபாரிகள், தனவந்தர், சர்க்கார் உத்தியோகஸ்தர் தெருவீதிகளில் தூக்குண்டும், அவையவங்கள் தரியுண்டும், ஜலத்தில் அமிழ்த்தப்பட்டும், பட்டயத்துக்கு இரையாகவும் மாண்டிருக்கிறார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளுமடைந்த அவதி மெத்த. பட்டாளத்தார் இம்சை கொஞ்ச நஞ்சமல்ல. கொள்ளைக்காரரின் இடுக்கண்கள் கணக்கு வழக்கிலடங்கா. வீடுகளிலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்களுடைய சகல பொருட்களும் சொத்துக்களும் நாணயமும் திடீரென அவர்களிடமிருந்து பறித்துக்கொள்ளப்பட்டது. உடுக்க உடையும் புசிக்க ஆகாரமுமின்றி, தெருவீதிகளிலும் காடுகளிலும் தங்க நேர்ந்தது. ஸ்திரீ ஜனங்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள். பாலிய ஸ்திரீகளும் கன்னிகைகளும் துருக்கிய உத்தியோகஸ்தரின் அந்தப்புரஸ்திரீகளாக கற்புநிலை குலைக்கப்பட்டார்கள். சிலர் சந்தைகளில் மகமதியருடைய சொத்துக்களானார்கள். பையன்களும் சிறுபெண்களும் அடிமைகளாக 7 அல்லது 8 ரூபாய்க்கு விற்கப்பட்டார்கள். சிறுவர் பலர் மகமதிய மூல்விகளிடம் கொடுக்கப்பட்டு, பள்ளி

வாசல்களிலிருக்கத்தக்கதாக பலவந்தமாய் மகமதியராக்கப்பட்டார்கள். மரணமே பெரிய பாக்யமாயிருந்தது. ஏனெனில் ஸ்திரீகள் தங்கள் பர்த்தாக்களின் அவஸ்தையான மரணத்தைப் பார்ப்பதும், பெண் மக்கள் பலாத்காரமாய் அவமானமடைவதும் சகிக்கவொண்ணா மனவேதனையாயிருந்ததுமன்ற, ஸ்திரீகளின் வஸ்திரக்களே மகமதியர் உரித்துகொண்டு, நிர்வாணமாய் பகலின் சூரிய உஷ்ணத்திலும் இரவின் கொடிய குளிரிலும் வனாந்தரமார்க்கமாய்ப் பிரயாணம் பண்ணும்படி பலவந்தம் செய்தார்கள். சில தாய்மார் கோட்டிகொண்டு, தங்கள் பிள்ளைகளை சுமந்துகொண்டு போக முடியாமல் தூர எரிந்துவிட்டார்கள். ஆகாரமும் தண்ணீருமில்லாமல், ஜீவரக்ஷணைக்கான ஜனங்கள் பசியினாலும் பட்டினியினாலும் வருந்தி, வழியிலேயே மாண்டுபோனார்கள். பெரும்பாதை மார்க்கம் இருபக்கங்களிலும் பிரேதங்களினால் நிறைந்தது. இந்த ஜாதியாரில் சுமார் முக்கால்வாசிப் பேர் நிர்மூலமாகிவிட்டதாகத் தோன்றுகிறது. தாமர்லேன் காலத்திற்குப்பின் இவ்விதக் கொடூரம் கடந்தேறியதாக சரித்திரங்களில் நாம் வாசிக்கிறதில்லை என்று ஒருவர் எழுதுகிறார்.

சுமார் 5,000 பேர் எகிப்திலும் சுமார் 2½ லட்சம்பேர் ருஷியாவிலும் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். பலர் துருக்கியரின் காரத்திற்குத் தப்பினபோதிலும், அத்தகைய துன்பமுகங்களில் வியாதியினாலும் குளிரினாலும் பசியினாலும் மிக்க வருத்தமடைகிறார்கள். அவர்கள் படும் அவஸ்தைக்கு அளவில்லை. அர்மீனியருக்கு உதவிபுரியும் நோக்கமாக இங்கிலாந்தில் ஓர் "நிதி" ஏற்பாடாகியிருக்கிறது. இச்சங்காரத்துக்கு அமெரிக்கரும் ஐரோப்பியரும்மான கிறிஸ்தவ ஜாதியாரே காரணம் என்று ஒருவர் கூறுகிறார். காரியம் எப்படியிருந்தாலும் சரி, அடிமைத்தனத்திலும் அந்தப் புராதன யூதருக்கும் சிறுவரும் ஸ்திரீகளும் விடுவிக்கப்படவும், பாதுகாப்பின்றியும் ஆகாரமின்றியும் விடப்பட்டிருக்கும் அர்மீனியருக்காக சேகரிக்கப்படும் நிதிக்கு ஜனங்கள் தாராளமாய்க் கொடுக்கும்படியாகவும், துருக்கியின் நிஷ்டூரத்திலிருந்து அவர்களுடைய நாடு காக்கப்பட்டு, கிறிஸ்தவ ஜாதியாரின் ஆளுகைக்குட் வரவும் ஜெபிப்போமாக.

ஆர்மீனியாவின் பிரதான பட்டணமாகிய எர்ஸரோம் ருஷியரின் கைவசம் கடந்தமாசம் வந்திருக்கிறது. நிலையான ஜெயம் பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்கும் அவர்களோச் சேர்ந்த இஷ்ட ராஜ்யங்களுக்கும் சீக்கிரம் கைகூடும்படி கர்த்தர் அநுக்கிரகிக்கவும் யுத்தம் ஓய்ந்து, நீதியும் சமாதானமும் வளர்ந்தோங்கவும் கர்த்தர் கிருபை அருளுவாராக.

சீனா. சுதேச கிறிஸ்தவர் ஓர் மகாசபை கூடி, சபை கிரமமாய் சுவிசேஷப் பிரசங்க வேலை செய்வதற்குத் திட்டமான ஒழுங்கும், சீனமான ஒருவனை அத்தியக்ஷராக ஏற்படுத்தவும், ஐக்ய வேத சாஸ்திரசாலை ஸ்தாபிக்கவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

யாங்சீன்விபூ என்பவர் தற்காலத்திலுள்ள சீன தேசாபிமானிகளில் சிறந்தவர். தன் தேசத்தவர் சன்மார்க்கத்தில் முன்னேற வேண்டுமென்பதே இவருடைய போவல். சிறிதுகாலத்துக்குமுன் தன் சொந்தப் பணத்தில் ரூ.3000-க்குமேல்செலவிட்டு, 5000 புதிய ஏற்பாடுகள் வாங்கி, மற்றவர்களுக்கு இலவமாய்க் கொடுக்க ஒழுங்குபண்ணினார். தன் உத்தியோகத்தை ஒக்கிரத்தில் விட்டுவிட்டு, வேதாகமத்தைப்பற்றிப்பிரசங்கித்து, அதைப் பாம்பச்செய்வதில் தன் வாணாளைச் செலவழிப்பதாகச் சொல்லியிருக்கிறார். தான் இலவமாய்க் கொடுக்கும் ஒவ்வொரு புதிய ஏற்பாட்டுப் பிரதியிலும் வாசிக்கிறவர்களுக்கு யோசனையாக சில விஷயங்கள் எழுதிவைத்திருக்கிறார். அதில் விசேஷமானது:—

"சத்தியமானது அளவிடப்படாத சமுத்திரம். வேதத்தை ஆராய விரும்புவீர் கல்விமான்கள் பூரணமாய் ஆராய்ச்சிசெய்யாது மேற்பார்வையாகப் பார்த்து பின்பு விட்டுவிடுகிறார்கள். இது அதிக விசனமானகாரியம். ஆனால் நீங்கள் இதைக் கருத்தாய் ஆராய்ந்தால், அதுவே நான் எடுத்துக்கொண்ட அற்பப் பிரயாசத்திற்குப் போக்த பிரதியுபகாரமும்' என்பதே.

அஸிஸி பட்டணத்து பிரான்சிஸ்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பா கண்டத்தில் மிகுந்த குழப்பமும் சச்சரவும் எங்கும் பரவியிருந்தது. மற்ற தேசங்களைப்போலவே இத்தாலியாதேசத்திலும் ஓயா யுத்தம் நடந்துவந்தது. கொள்ளைக்காரருக்கு அஞ்சி, காட்டுப்புறங்கள் குடியோடிப்போயின. தேசமுழுவதும் பல கக்ஷிகளாகப் பிரிந்து, ஒன்றோடொன்று சண்டைசெய்து, ஒருவரை யொருவர் எப்படி விழுங்கலாமென்று ஜனங்கள் வகைதேடிக்கொண்டிருந்தார்கள். பஞ்சமும் கொள்ளைநோயும் சகஜம். ஏழைகள் பட்ட அவதி மெத்த. அவர்களுக்குச் சகாயம் செய்வாரில்லை. என்றாலும், ஸ்திரீ ஜனங்களுக்கும் உதவியற்றவர்களுக்கும் உதவிசெய்து, அநியாயத்தை அடக்குவதாகப் பிரதிக்ஞைசெய்து, சிற்றின்பப் பாடல்களைப் பாடிக்கொண்டு, ஐரோப்பாவின் தென்பாக முழுமையும் சிற்சிறு கும்பலாக அலைத்துதிரிந்த ஓர் கூட்டத்தார் இக்காலத்தில் உண்டு. ஜனங்களைப்பற்றிச் சொல்லக்கூடிய ஓர் நற்காரியமென்னவென்றால், நன்மையோ, தீமையோ, எதைச் செய்தாலும், அவர்கள் முழுப் பலத்தோடும் முழு மனதோடும் செய்வார்கள் என்பதே.

திருச்சபையின் நிலை குறைவுள்ளதாகவே இருந்தது. ஆராதனைகள் உயிரற்றதாக இருந்தன. மார்க்க அனுஷ்டானங்களும் கைவேத்தியங்களும் கருத்தறியாமல் நடந்தன. கிறிஸ்துமார்க்க நியமங்களினால் சாதாரண ஜனங்கள் இஷ்டித்தேனும் பயனடைய வழியில்லாதிருந்தது. ஆவிக்குரிய ஜீவியம் ஜனங்களில் காண்பது அரிது. பொருட்களினால் தேவநிருபையைச் சம்பாதிக்க முயன்றார்கள். சடங்காசாரங்களை மாத்திரம் பெரிதாகப் பாராட்டி, உள்ளான பரிசுத்த ஜீவியத்தை அலட்சியஞ் செய்தார்கள். அத்தியக்ஷர்கள் பரிதானப் பிரியரும் குருமார் ஞான ஜீவனற்றவர்களுமாயிருந்தார்கள். ஜனங்களுக்கு இவர்களைப் பற்றிய மதிப்பு அற்றுப்போயிற்றென்றாலும், அவர்களுக்குஅதிகமாய்ப்பயந்தார்கள்; என்றாலும் பல இடங்களில் கலகம் ஆரம்பமாயின. சமயாசமயங்களில் ஜனங்கள் தங்களை விசாரிக்கும் குருவானவருக்கு விரோதமாக எழும்பி, அவரைத் தங்களுடைய பட்டணத்திலிருந்து துரத்திவிட்டதுமுண்டு. பாப்புவானவர் கலகம்பண்ணும் சபையாரைச் சபைக்குப் புறம்பாக்கி, கிருபையின் எத்தனங்களுக்கு விலக்கிவைத்தார். ஆதேகர் அகம்பிக்கையின் உளைக்குள் அமிழ்ந்துபோனது ஆச்சரியமல்ல. பெரிய ஆபத்தினால் மாத்திரம் விமோசனமுண்டாகுமென்பது பலர் அபிப்பிராயம். இவைகளின் மத்தியிலும், தேவ பக்தியும் தேவ அன்புமுள்ள பலர் இருந்தார்கள். தங்களைச்சுற்றியுமுள்ள அவபக்தியையும் பாவத்தையும் பார்த்து மனவேதனையடைந்துவந்ததுமன்றி, சபையில் ஓர் மார்க்க எழுப்புதலுண்டாக, நல்ல ஸ்திதி சீக்கிரம் வருமென்று ஆவலோடு எதிர்பார்த்தார்கள். பல பிரிவார் எழும்பி, சீர்திருத்தமுண்டாக்க முயற்சித்தார்கள். சிலர் உத்தம நோக்கத்தோடு காரியாதிகளை நடப்பித்தார்கள். சிலர் ஆழ்ந்த யோசனையின்றியும், சிலர் தன்மார்க்க எண்ணமுள்ளவர்களாயும் காணப்பட்டார்கள். லியன்ஸ் பட்டணத்தில் வர்த்தகனாயிருந்த பீற்றர் உவால்டோ என்பவனோடு சிலர் சேர்ந்து, சபையைவிட்டுப் பிரிந்து, ஆஸ்திபாஸ்தி யாவையும் விற்று, சுவிசேஷ பிரபல்ய ஊழியத்திலும் நற்கிரியைகளிலும் தங்கள் சேமத்தைச் செலவுசெய்துவந்தார்கள். ஐரோப்பாக் கண்டம் எங்கெங்கும் இவர்கள் அலைந்து திரிந்து, ஜனங்கள் கொடுக்கும் ஆகாரத்தை அருந்தி, அவர்களுக்கு சுவிசேஷ சத்தியத்தைக் கூறி அறிவித்து, ஆவிக்குரிய செத்த நிலைமையிலிருந்து எழும்பவும் உயிருள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவும் ஜனங்களை ஏவி எழுப்பி அனல்மூட்டிவிட்டனர். இதின் பலனாக மார்க்க சுயாதீனம் காணப்பட்டது. அடிமைகள் சுயாதீனத்தை நாடி, தங்களை ஒடுக்கினவர்களுக்கு விரோதமாய் எழும்பி, போர்புரிய முதலாய் ஆரம்பித்தனர்.

1202-ம்வரு இத்தாலிதேசத்தின் வடபாகத்திலுள்ள அஸிஸிபட்டணத்து ஜனங்

கள், பிரபுக்களுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, அவர்கள் வீடுகளை அக்கினிக்கு இரையாக்கவும், பொருட்களைக் கொள்ளையடிக்கவும் தலைப்பட்டார்கள். பிரபுக்கள் தங்கள் பட்டணத்துக்கு அடுத்துள்ள பெருகியா நகரத்தாரை ஒத்தாசைக்காக அழைக்க, ஓர் பெரிய யுத்தம் நடந்தது. அஸிஸி ஜனங்களில் அநேகர் சிறைகளானார்கள். இவர்களில் ஒருவன் இருபத்தொரு பிராயமுள்ள பிரான்சிஸ் பெர்னாடன் என்பவன். இவன் அஸிஸிபட்டணத்து வியாபாரி ஒருவருடைய குமாரன். பிரான்சிஸ் மிகவும் உல்லாசப்பிரியனாயும், படபடப்புள்ள சுபாபியாயும், கையிட விரும்பும் எக்காரியத்தையும் தீர்ந்த புத்தியோடும் தளரா முயற்சியோடும் முடிக்கிறவனுமான வாலிபன். இவன் மூலமாய்க் கர்த்தர் பெரிய மார்க்க எழுப்புதலை நடப்பிக்கச் சித்தங்கொண்டார். ஒரு வருஷத்துக்குப்பின் இரண்டு நகர்களுக்கும் சமாதானமுண்டாயிற்று. கைதிகள் விடுதலைபெற்றார்கள். பிரான்சிஸிடம் அவன் தோழரும் ஆரம்பத்தில் உல்லாசத்திலும் களியாட்டிலும் காலத்தைப் போக்கினார்கள்.

சிலகாலத்துக்குப்பின் பிரான்சிஸ் வியாதியாகி, மரணத்தருவாயிலிருந்து சுகம்பெற்றான். சிற்றின்பத்திற்கும் உலக வேடிக்கைக்கும் வியாதிகாலத்தில் இடமில்லை. பிரகியாதையடைந்து யாவராலும் மதிப்புப் பெறவேண்டுமென்ற அவாவு இயற்கையிலேயேயுள்ளவனாதலால், உலகப்பிரகாரமான கீர்த்திப்பிரதாபத்திற்கடுத்த விஷயங்களையே எப்போதும் தியானித்து, தன் இருதயத்தில் போற்றிவந்ததுண்டு. ஆனால் சீக்கிரம் அவனுடைய மனசில் மாறுதலுண்டானது. முன் சந்தோஷங்கொடுத்த காரியங்கள் அவனுக்கு வெறுப்பாயின. மிகவும் பெலவீனனாகவும் நிர்ப்பாக்கியனாகவும் தன்னைக் கண்டுகொண்டான். இருதயத்தில் ஓர் ஆசை எழும்பினது. அது இன்னதென்று அறியவாவது, அதைத் திருப்தி செய்யவாவது சக்தியற்றிருந்தான். இரண்டு வருஷக்காலமாக என்னசெய்யவென்று அறியாதிருந்தான். உள்ளான போராட்டங்கள் அதிகம். வேளாவேளைகளில் பழைய சிற்றின்பங்களை நினைக்கும்படி மனமேவினபோதிலும், எத்தனையாக அவைகளை நினைத்தானோ அத்தனை அதிகமாக அவைகளை வெறுத்துத்தள்ளவும், ஜனசஞ்சாரத்தைவிட்டு விலகி, தனிமையாக நாட்டுப்புறத்தில் இயற்கைப்பொருட்களோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கவும் நாடினான். நாளடவில் உலகத்துக்கடுத்த காரியங்களின் பற்று படிப்படியாய் அவனை விட்டுவிட்டது தெய்வீக ஒளி அவனுடைய இருதயத்தில் உதித்தது. எப்போதும் உதாரத்துவமுள்ளவனாய், ஏழைகளுக்கு அதிகமாக உதவிசெய்தான். அவர்களுடைய அன்பே இவனுக்கு ஆறுதலளிக்கும் யத்தனமாயிற்று. அவன் செய்த தருமங்களினால் ஜனங்களை நேசிக்கவும் அவர்களுடைய துக்கங்களில் மெய்யான அநுதாபங்காட்டவும் பழகினான். இச்சுபாவம் தகப்பனுக்குப் பிரியமில்லை. ஆகவே தந்தைக்கும் மகனுக்குமுள்ள பொருத்தம் வரவரத் தனிந்தது.

அநேக நாட்களாக இருதயத்தில் இருந்துவந்த தாகம் கடைசியாகத் தீரும் சமையம் வந்தது. ஒலிவத்தோப்பின் மத்தியில் அஸிஸிபட்டணத்துக்குச் சமீபமாயிருந்த பரி. டேமியன் ஆலயத்தில் பிரான்சிஸ் ஒரு நாள் உட்கார்ந்து, "மகிமையும் கனமும் மிகுத்த தேவனே, இயேசு ஸ்வாமியே, அந்தகாரம் நிறைந்த என் இருதயத்தில் உங்கள் ஒளியை வீசியருளுங்கள். ஆண்டவரே, உம்முடைய பரிசுத்த சித்தத்திற்கு ஏற்றவைகளை மாத்திரம் எல்லாக் காரியங்களிலும் நான் செய்யும்படி எனக்கு உம்மை காண்பித்தருளும்" என்று முழங்காலில் நின்று அமரிக்கையாய்ச் சொன்னான். அதே மாத்திரத்தில், தம்முடைய ஊழியத்திற்கு அழைக்கும் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டான். பிரான்சிஸ் சற்றாகிலும் திகைக்கவில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு, சிலுவையிலறையுண்டவரைப் பின்பற்றுவதே தான் செய்யவேண்டிய காரியமென்று

திட்டமாய்க் கண்டான். அந்த நாளில் தேவ அன்பின் அக்கினி அவனைப் பற்றிக் கொண்டது. ஜீவகாலமெல்லாம் அது அவனை ஆட்கொண்டு நெருக்கி ஏவினது. அந்த ஆலயத்திலேயே இயேசுபெருமானை ஆச்சரியமான அன்புடன் நேசிக்க ஆரம்பித்தான். தன்னுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் தன்னை ஆட்கொண்ட எஜமானுக்குப் பிரதிஷ்டைசெய்தான். தன் ஜீவகாலமெல்லாம் அவரையே உத்தமமாய்ப் பின்பற்றிவந்தான்.

தனக்குண்டான எல்லாவற்றையும் பூராவாய்த் தத்தம்செய்யும்படிக் கேட்ட எஜமானே அவன் சுபாவத்திற்குப் பொருந்தின எஜமானானார். தன் சிறந்த மாதிரியாகிய எஜமானுக்கு ஒப்பாகும்படி, தகப்பனின் கோபத்தையும் சிநேகிதரின் நிந்தையையும் பொருட்டாக எண்ணாமல், தனக்குண்டான மீதி ஆஸ்தியாவையும் விற்று, தன் வீட்டையும்விட்டு வெளியேறினான். அமரிக்கையான தியானத்திலும், குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்வதிலும், தன் ஊருக்கருகிலுள்ள பரி. டேமியன் ஆலயத்தையும், ஸென்ட் மேரி ஆலயத்தையும் பழுதுபார்ப்பதிலும் பல மாசங்களாக தன் நேரத்தைப் பின்னிட்டுவந்தான். கர்த்தரோ இதிலும் மேலான ஊழியத்திற்கு அவனை அழைத்திருந்தார். ஓர்நாள் ஸென்ட் மேரி ஆலயத்தில் தேவனை ஆராதித்துக்கொண்டிருக்கையில், சுவிசேஷ வாக்கியமாக குருவானவர் வாசித்த வார்த்தைகள் கிறிஸ்துவின் சத்தமாக அவனுக்குக் காணப்பட்டது. சிலுவைநாதரின் சத்தத்தை மீளவும் ஒருமுறை கேட்டான். அவ்வார்த்தைகளாவன:— போகிற இடமெல்லாம் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது, வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது தேடிவைக்கவேண்டாம். வேலை ஆள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்புதே. இவ்வார்த்தைகளைக் கேட்கவே, பிரான்சிஸின் இருதயம் சந்தோஷத்தினால் நிறைந்தது. இதுவே என் வாஞ்சை என்றான். கிறிஸ்து அவனை அழைத்து மூன்று வருஷங்களுக்குப்பின், ஒருநாள் அஸிஸிபட்டணத்துக்குள் போய் பிரசங்கிக்கும்படி நின்றான்.

பிரான்சிஸின் மனமாறுதலும் அதற்குப்பின் அவன் செய்த வழக்கத்துக்கு விதியாசமான செய்கைகளும் பட்டணத்தில் பெரிய அசைவை உண்டாக்கிவிட்டது. பட்டணத்திலுள்ள யாவரும் அவனை இனம் அறிந்திருந்தார்கள். ஒரு யாசகனைப் போல வஸ்திரம் தரித்துக்கொண்டு, சந்தையில் நின்று பேச ஆரம்பிக்கவும் பெருந்திரள்கூட்டம் கூடினது. அக்காலத்தில் அத்தியக்ஷர்கள் மாத்திரம் பிரசங்கம் செய்யலாம். பிரபுக்களைப்போல இவர்கள் ஜீவித்து, தங்கள் மந்தைக்குப் பிரயோஜனம் விளைவியாத விஷயங்களில் ஜோலியுள்ளவர்களாயிருந்தார்கள் ஆகவே, பிரசங்கம் அபூர்வமாய்த்தான் நடக்கும். நடந்தாலும் ஓர் ஆசாரமாகமாத்திரமிருக்கும். பிரான்சிஸின் பிரசங்கமோ ஒரு சம்பாஷணை மேலாயிருந்தது. தன் அநுபவத்தினால் அறிந்ததை ஊக்கத்தோடும் அனலோடும் பேசினதுமன்றி, தேவனுடைய அன்பு இன்னதென்றும் இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவும் அவருடன் பழகி சிநேக சம்பந்தம்பண்ணுவது இன்னதென்றும் கேட்போருடைய மனதைக் கவரத்தக்கவிதமாய்ப் பேசினான். சொந்த அநுபவத்திலிருந்து பேசின வார்த்தைகள் வானத்திலிருந்து வந்த சத்தமாக ஜனங்களுடைய காதுகளில் தொனித்தது. இயேசுவின் அன்பினிமித்தம் ஜனங்களும் தங்களுடைய தெல்லாவற்றையும் அவருக்காகத் தத்தஞ்செய்யும்படி அழைத்தான். தன் எஜமானுடைய ஊழியத்திற்கென்று தனக்குண்டான யாவற்றையும் அவருடைய பாதத்தில் படைத்துவிட்டதால், ஊசியைக் காந்தம் இழுக்குமாறு அவனுடைய வார்த்தைகள் கூடிவந்தஜனங்களை இழுத்தன. கிறிஸ்துவுக்கும் மனுஷ

ருக்கும் இடையிலுள்ள திரையை நீக்கி, இறிஸ்துவே யாவரும் ஈழ்ப்படியவேண்டிய எஜமானன் என்றும், உலகத்தில் உதித்த வீரர் யாவரிலும் மேலானவர் அவர் என்றும், உள்ளன்புடன் அன்புகூரவேண்டிய எவ்வன்பரிலும் மகா அருமையான நேசர் அவரே என்றும் காட்டினான்.

அவனுடைய பிரசங்கத்தினால் ஜனங்களில் காணப்பட்ட உணர்வு ஆச்சரியப்படத்தக்கது. அவன் வருகிறதைக் கேள்விபுற்று, பட்டணத்தார் யாவரும் கூடி வருவதுண்டு. ஓர் தடவை அத்தனை திரளான ஜனங்கள் கூடிவிட்டதால், அவன் பட்டணத்துக்குட் பிரவேசியாமல், இரண்டு மைலுக்கப்பாலுள்ள ஒரு ஆலயத்துக்குப் போனான். கூடின திரள்கூட்டம் அவ்வாலயத்துக்கு அவனைப் பின்சென்றது. 'மிகுந்த அறுப்புண்டானது. உலகத்தை வெறுத்தத்தள்ளி, தேவ அன்பில் பலர் மூழ்கினார்கள்' என்று ஒரு சரித்திரக்காரன் எழுதி வைத்திருக்கிறான். பெலோனே பட்டணத்துக்குப் போனபோது பார்க்கவந்த கூட்டம் அவ்வளவு திரளானதால், சபையை வெளிக்குப் போய்ச் சேருவது மிக்கக் கஷ்டமாயிருந்தது. பிரான்சிஸ் பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்பட்டு பேசினதால், அவருடைய சத்தம் மனுஷசத்தமாகவல்ல, தேவதூதனுடைய சத்தமாகத் தோன்றினது. ஸ்திரிகளும் புருஷருமான திரள் கூட்டத்தாரின் இருதயத்தில் அவர் பேசின வசனம் கூரிய அம்புபோல் தைக்கவே, அவர்கள் யாவரும் மனந்திரும்பி கர்த்தருக்குத் தங்களை ஒப்புக்கொடுத்ததாக அதே சரித்திரக்காரன் இன்னோர் இடத்தில் எழுதிவைத்திருக்கிறான்.

பிரான்சிஸ் என்பவரின் பிரசங்கத்தின் வல்லமையினால் இழுப்புண்டு, பலர் அவரிடம் வந்து, அவரோடு சேரவும், அவர் காட்டின மாதிரிப்படி பூரணமாய் இயேசுவைப் பின்பற்றவும் விரும்பினார்கள். இப்படி வந்தவர்களில் முதலாவதானவர் அசிஸிப்பட்டணத்திலுள்ள ஒருபிரபு. இவர் தன்னுடைய ஆஸ்தி பாஸ்திகள் யாவையும் மற்றவர்களுக்குக் கையளித்துவிட்டு, குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்வதில் ஸெண்ட் பிரான்சிஸோடு சேர்ந்துகொண்டார். பிற்பாடு ஓர் அதிபரும் ஆலயக்குருவும் மற்றும் பேரும் சேர்ந்தார்கள். இக்கூட்டத்தாருக்கு வீடு இடையாது. காடு முழுவதும் அலைந்து திரிந்து, ஜனக்களோடு சஞ்சரித்து, அவர்களுடன் வயிலில் வேலைசெய்து, சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவர்களுடன் சம்பாஷித்துப் பிரசங்கம் நடப்பித்து வந்தார்கள்.

தரித்திரராக ஜீவனம்பண்ணி, சுவிசேஷ பிரசங்கவேலைக்கும் நற்கிரியைகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுக்கும் ஒரு சகோதரத்துவக்கூட்டத்தை ஏற்படுத்தும் நோக்கம் பிரான்சிஸ் மனதில் உண்டானது. காரியாதிகளும் இதற்கு அனுகூலமாயிருந்தன; ஆகவே ஓர் வகுப்பு ஆரம்பமானது. அநேகர் இவ்வகுப்பைச் சேர்ந்தார்கள். அவர்களுடைய நடக்கைக்கு உதவியாக சில சட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. ரோமாபுரி பாப்புவானவரும் இவ்வேற்பாட்டுக்குச் சம்மதமளித்தனர். சகோதரக் கூட்டத்தைப் பலர் சேரவே, அநேக சங்கியாசிமடங்களும் ஸ்தாபகமாயின. ஒவ்வோர் மடத்திலும் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இம்மடங்களிலிருந்து பிரசங்கிமார் எங்கும்போய் சுவிசேஷவேலை செய்துவந்தார்கள்.

பின்னர், ஸ்திரீ ஜனங்களும் தாறவரம் பூண்டு, இறிஸ்துவுக்காக ஊழியஞ்செய்ய ஆசித்தார்கள். அவர்களுக்கு வறிய கிளார்ஸ் என்னும் இரண்டாம் வகுப்பை பிரான்சிஸ் ஏற்படுத்தினார். உலகத்திலிருந்து பிரிந்த வர்களான புருஷரிலும் ஸ்திரீகளிலும் பலர் குடும்பஸ்தராக ஜீவனம்பண்ணி, பிரசங்க ஊழியத்திலும் நற்கிரியைகளிலும் தங்கள் வாஞ்ஞைச் செலவுசெய்ய அபேக்ஷித்தார்கள். இவர்களுக்கென்று மூன்றாவதான ஓர் வகுப்பை ஏற்பாடு செய்தார். அவர்கள் பச்சாதாப சகோதரிகள் சகோதரர் என்று அழைக்கப்பட்டார்கள். இக்கூட்டத்தாரால் உண்டான நன்மை கொஞ்சமல்ல. பிரான்சிஸின் கூட்டத்தார் உலகத்தைக்கடந்த காரியங்களிலிருந்து முழுவதும்

பிரிந்து ஜீவித்தார்கள். ஸ்திதிபந்தரான வர்கள் தங்கள் ஆஸ்தியில் பெரும்பாகத்தைத் தரித்திரருக்குக் கொடுத்து உதவினார்கள். எல்லாவற்றிலும் மேலாக அவர்களுடைய ஒரே நோக்கம் ஆத்மாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ணுவதாகவே இருந்தது.

தன்னுடைய மூதல் சீஷருக்கு பிரான்சிஸ் கொடுத்த கட்டளை பின்வருமாறு:— 'தேவன் தம்முடைய மிகுந்த இரக்கத்தினால் நம்மை அழைத்திருப்பது நமது சொந்த ரக்ஷிப்புக்காக மாத்திரமல்ல, மற்றவர்களையும் ரக்ஷிக்கும்படியாகவே. ஆதலால் நாம் உலகமெங்கும் போய், மனுஷர் தங்களுடைய பாவங்களைவிட்டு மனந்திரும்பவும், கிறிஸ்துவின் கட்டளைப்படி நடக்கவும் ஏவி எழுப்பிவிடுவோமாக. நம்முடைய வார்த்தைகளைவிட நமது ஜீவியமே அவர்களுக்குப் பிரசங்கமாயிருக்கவேண்டும். தேவன் பேரில் விசுவாசமாயிருங்கள். அவர் உலகத்தை ஜெயித்திருக்கிறார். விசுவாசிக்கும் உங்களிலும் உங்கள் மூலமாயும் தேவ ஆவியானவர் பேசுவார்' என்பதே. உலக முழுவதும் ரக்ஷிக்கப்பட வேண்டுமென்பதே பிரான்ஸுவா அவருடைய கூட்டத்தாரும் கொண்ட நோக்கம். ஆகவே பிரான்ஸ, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பேயின், சிரியா, பலஸ்தீன, எகிப்து முதலிய நாடு தேசங்களிலும் பிரயாணம்பண்ணி. சுவிசேஷத்தை அறிவித்தார்கள். மொரோக்கோ தேசத்துக்குப் பிரசங்கிகளாகப்போன கூட்டத்தார் கவிசேஷத்தினிமித்தம் இரத்தசாக்ஷிகளாக மாண்டார்கள். என்றாலும், இம்மிஷனரி ஆவி இரண்டு நூற்றாண்டுகளுக்கு மாத்திரம் இருந்தது. மகமதியருக்கு முதல் மிஷனரியாகப் போன ரேமண்டு லல் என்பவருக்கு மிஷனரி ஆவி உண்டானது வெண்ட பிரான்சிஸ் என்பவரின் ஜீவியத்தினாலேயே.

இக்கூட்டத்தார் அனுபவித்த கஷ்டங்கள் மெத்த. தங்கள் வீடுகளில் தங்கும்படி ஜனங்கள் இவர்களுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள், பைத்தியக்காரரென்றும், போக்கிரிகளென்றும், திருடரென்றும் அவமதித்து வந்தார்கள். கோவில் மண்டபங்களிலும், கூடங்களிலும் பறைகளிலும் தங்கினார்கள். தங்களுக்கு வேண்டிய ஆகாரம் தங்கள் கைவேலையினால் சம்பாதித்துக்கொள்ளக்கூடாத சமயங்களில், தாங்கள் பிரசங்கித்த ஜனங்களிடத்தில் சாப்பாடு யாசகம் வாங்கி சாப்பிட்டுவந்தார்கள். பணம் ஒருநாளும் மற்றவர்களிடமிருந்து வாங்கக்கூடாது என்பது பிரான்சிவின் கட்டளை.

பலமுறை ஜனங்கள் இக்கூட்டத்தாருக்கு விரோதம் செய்ததுண்டு. சிலர் அவர்கள்மேல் சேற்றை எறிந்துவிடுவார்கள். மற்றவர்கள் அவர்களுடைய கைகளில் சொக்கட்டான் கட்டைகளை வைத்து, சூதாடும்படி அழைத்துப் பரியாசம்பண்ணுவார்கள். இன்னும் சிலர் அவர்களுடைய உடையைப் பிடித்து இழுத்துப் படிசெய்வது வழக்கம். ஆனால் இச்சங்கியாசிக் கூட்டத்தார் தங்களுடைய கொடிய துன்பத்தின் மத்தியிலும் எப்போதும் முகமலர்ச்சியும் சந்தோஷமுமுள்ளவர்களாயிருந்துவந்தார்கள். தங்கள் வசம் பணம் வைத்துக்கொள்வதுமில்லை; பிறரிடமிருந்து காசு வாங்குவதும் இடையாது. ஒருவர்போல் ஒருவருக்கு இருந்த உள்ளான அன்பினால் கிறிஸ்துவின் உத்தம சிஷ்யராகத் தங்களை விளக்கப்பண்ணினார்கள். இவைகளைப் பார்த்து, அவர்களுக்கு இடங்கண செய்தவர்களில் பலர் தாங்களாகவே இருதயத்தில் குத்துண்டு, தாங்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்கப் போனதுண்டு. அப்போது இந்த சங்கியாசிகள் முழுமனதோடும் அவர்களுக்கு மன்னித்து விடுவதுமன்றி, 'கர்த்தர் உங்களுக்கு மன்னிப்பாராக' வென்று சொல்லி, அவர்களுடைய ஆன்மா ரக்ஷிக்கப்படுவதற்கு நல்ல யோசனைகளும் கொடுப்பார்கள்.

பிரான்சிவின் கூட்டத்தாரில் சிறந்த விளக்கின குணசிலம்: இன்பமுகமும் ஆனந்த சந்தோஷமுமே. கன்முப்பாடுவார்கள், ஆனந்தங்கொண்டு களிகூறுவார்கள், உரத்த சத்தமாய்ச் சிரிப்பார்கள். உலகத்தில் தங்களுக்குண்டான யாவற்றையும் கொடுத்

துவிட்டபோதிலும், சகல சம்பூரணமுள்ளவர்களைப்போல பூரிப்புள்ளவர்களாயிருந்தார்கள். வறுமையும் கீழ்ப்படிதலும் மகிழ்ச்சியுமே இக்கூட்டத்தாரின் சட்ட வாக்கியம். ஓர் சகோதரன் துக்கமுகமாய்க் காணப்பட்டபோது, பிரான்சிஸ் பின்கண்ட வார்த்தைகளால் அவனைக் கண்டித்தார். 'உன் துக்கத்தை உன் தேவனுக்கும் உனக்குமுள்ளதாகவைத்துக்கொள். எனக்கும் மற்றவர்களுக்குமுன்பாக எப்போதும் சந்தோஷமுள்ளவனாயிருக்க நாடு. தேவனுடைய ஊழியக்காரன் மற்றவர்களுக்குமுன்பாக துயரமடைந்தவனாகவாவது மனத்தாங்கலுள்ளவனாகவாவது காணப்படுவது தகுதியல்லவே.' ஆரம்பத்தில் இக்கூட்டத்தாரில் பெரும்பான்மையோர் வாலிபர் என்பது கவனிக்கப்படத்தக்கது. பிரான்சிஸைப் பின்பற்ற ஆட்கள் தொடங்கினபோது அவருக்கு வயது 27.

பிரான்சிஸின் நிகரற்ற வல்லமைக்கு ரகசியம் யாது? மேனியில் அவர் சிறந்தவரல்ல, அதிகக் கல்விகற்றவரல்ல, உயர் குலத்தவருமல்ல. என்றாலும் அப்போஸ்தலர் காலத்து ஜீவியமும் வல்லமையும் பூமியில் திரும்பவும் காணப்படும்படி அவர் செய்தார். அவருடைய பிரசங்கம் சாமானியமானதுதான். ஆழ்ந்த உபதேசங்களில் கவனம்செலுத்தவில்லை. சன்மார்க்க ஜீவியத்தைக் கருதினாரேயொழிய, பெரிய சீர்திருத்தம் செய்துமுடிக்க முயலவில்லை. கடைசிவரை தன் சபையின் உத்தம அவயமாகவே இருந்துவந்தார். தேவ அன்பு, மனந்திரும்புதல், பாவமன்னிப்பு இவைகளே அவர் செய்த பிரசங்கம்.

அவருடைய வல்லமைக்கு ரகசியம் கிறிஸ்துவுக்காக ஜூவாலித்து எரிந்த அன்பே. எப்படி ஒரு அடுப்புக்கறி தீப்பற்றி எரிகிறதோ அவ்வாறே தேவ அன்பினால் தீபமேற்றப்பட்டவராக விளங்கினார். இவ்வன்பினால் கிறிஸ்துவினிடத்தில் சேர, பேரன்பர் தம் அன்பைப் பொழிந்தருளினார். ஆகவே தன் ரக்ஷகர் எப்போதும் தம்முடனிருப்பதாக உணர்ந்தார். அழகான பொருட்கள் யாவிலும் தன் ரக்ஷகரை மகா சௌந்திரியவானாகக் கண்டார். அவருடைய சாயலுக்கு ஒப்பாக வளருவதே அவருடைய ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்தது.

பிரான்சிஸின் ஜெப ஜீவியம் மிக்க ஆச்சரியப்படத்தக்கது. மலைகளிலுள்ள குகைகளிலும், காடுகளிலும், வயல்வெளிகளிலும் ராத்திரி முழுமையையும் பின்னிட்டு, தேவனோடு சம்பாஷித்துவருவது வழக்கம். 'தன் ஆத்துமாவுக்கு அருமையானவராகிய இயேசு ஸ்வாமியை கண்ணீரோடும் விண்ணப்பத்தோடும் தேடுவார். அவரை இரு தயக்கண்ணால் தரிசித்து, ஒருக்கால் தன் ஆண்டவராக மிகுந்த பக்திவிநயமாயும், மற்றோர்கால் நியாயாதிபதியாக அவருக்கு முன் உத்தரவுசொல்லுகிற பாவனையாயும், இன்னோர்கால் ஒரு தகப்பனளவாகவும், பின்னர் ஒரு தோழனோடு சம்பாஷிக்கிற வகையாகவும் நடந்துகொள்வார்.' ஜெபிக்குமுறை எத்தனை ஆச்சரியமானது!

அவருடைய வல்லமைக்கு முதல் ரகசியம் கிறிஸ்துவின்மேலுள்ள அன்பு என்றால், இரண்டாவதானகாரியம் மனுஷர்மேலுள்ள அன்பே. பிதாவாகிய தேவனோடு அவ்வளவு நெருங்கிய சம்பந்தமுள்ளவராய்ப் பிழைத்துவந்ததால், சிருஷ்டிக்கப்பட்ட யாவரும் பிரான்சிஸிக்கு சகோதரராயிருந்தார்கள். ஜனங்களுடைய துக்கங்களும் இடுக்கண்களும் தமக்கு நேரிட்டவைகளாகப் பாராட்டி, ஆத்துமாவின் துக்கத்தை எவ்வாறு நீக்க முயன்றாரோ அதே அளவாக மனுஷர்படும் சரீர நோவிலும் துன்பங்களிலும் அவர்களுக்கு உதவிசெய்ய சர்வ ஜாக்ரதையுள்ளவராயிருந்தார். குஷ்டரோகிகளுக்காகக் கவலைப்பட்டு, உருக்க இரக்கங்களுடன் அவர்களுக்கு உதவிசெய்ததைப் பார்த்த பல அவிசுவாசிகள் இப்படிப்பட்ட காரியக்களைச் செய்யும்படி ஏவும் மார்க்கம் விசேஷமானது என்று கண்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதுண்டு.

தவிரவும், பிரான்சிஸ் எப்போதும் மரியாதையும் நல்லொழுக்கமுமுள்ளவராயிருந்தார். மரியாதை தேவசுபாவத்திலொ

ன்று; அது அன்பின் சகோதரி, ஏனெனில் விரோதத்தைத் தணித்து, அன்பை 'அனல் மூட்டிவிடும்' என்பார். இச்சுபாவத்தினால் தான் மனஸ்தாபங்களை ராசிபண்ணவும் சமாதானமும் ஒற்றுமையும் தாம் கையிடும் சகல விஷயத்திலும் வளர்ந்தோங்கவும் சக்தியுள்ளவராய் விளங்கினார். பிரபுக்களில் பலர் தங்கள் அடிமைகளை நிஷ்டூரப்படுத்திரத்தஞ்சிந்தும் பழிபாதங்களுக்கு அஞ்சாது நிற்குங்கால், சமாதானமும் அன்புமுள்ளவர்களாக ஜீவிக்கும்படி அவர்களை நடத்தக் கூடியவராயிருந்தார்.

இந்த மரியாதையும் நல்லொழுக்கமுமான சுபாவத்தினால் தேவகாரியங்களில் வணக்கமான சிந்தையுள்ளவராயிருந்தார். தேவ ஆராதனை கவலையற்றவிதமாய் நடக்கச் சகிக்கமாட்டார். ஆலயம் சுத்தமில்லாமலிருந்தால், மிகவும் விசனப்படுவார். அசுசியாயிருக்கும் ஆலயங்களைப் பெருக்கிச் சுத்தஞ்செய்வதற்காக ஒரு துடைப்பம் எடுத்துக்கொள்வதுமுண்டு. எல்லாம் ஒழுங்கும் கிரமமாய் நடக்க விரும்புவார். குருமாருக்கு அதிகக் கண்யம் செலுத்துவார். 'ஆத்ம ஆதாயம் தேவனுக்கு மிகவும் பிரீதியானது, குருமாரை விரோதித்துக்கொள்ளும் சமயத்தைப்பார்க்கிலும் அவர்களோடு இணக்கமாயிருக்கும்போது அதிகச் சுளுவாய் ஆத்மாக்களை, ஆதாயம்பண்ணலாம். ஆதலால் உங்களுக்கு மேலானவர்களுக்கு அடங்கிநடவுங்கள். குருமாருடைய பாவங்களை மூடுங்கள். அவர்களுடைய குறைவுகளை நிவிர்த்தியுங்கள்.' இப்படிச்செய்யும் போதும் மகா தாழ்மையுள்ளவர்களாயிருங்கள். அப்போது சபையாரைமாத்திரமல்ல, குருமாரையும் ஆதாயம்பண்ணிக்கொள்ளுவீர்கள்' என்று பிரான்சிஸ் தம்முடையகூட்டத்தாருக்குச் சொல்லுவார். தற்காலத்து கிறிஸ்தவர்களுக்கும் என்ன சிறந்த மாதிரி!!

பிரான்சிஸ் வகுப்பைச்சேர்ந்த குருமார் தற்காலத்தில் ரோமான்மார்க்க ஸ்வாமிமாரில் உண்டு. அவருடைய சிறந்தமாதிரிப்படி இவர்கள் நடக்கத்தவறுகிறது வாஸ்தவந்தான். ஆனால் அவருடைய ஜீவியமும் போதனையும் இருண்ட யுகம் என்றழைக்கப்பட்ட காலத்தில் ஜனங்களை உயிர்ப்பிக்கும் யத்தனமாகக் கர்த்தர் உபயோகித்தார். அவருடைய அன்பும் சுயவெறுப்பும் பரிசுத்தமும் நாளதுவரை அநேகருக்கு உற்சாகங்கொடுத்து, அனல்மூட்டிவருகிறது. அவருடைய ஜீவியசரித்திரத்தை வாசிக்கும் அநேகர் அவருடைய அன்பும் ஆத்மதாகமும் கொண்டவர்களாகிவிடுகிறார்களென்பது பலருடைய சாட்சியம்.

தம்முடைய முழுமனதோடும் உத்தம அன்போடும் தம் எஜமானாகிய அருள்நாதரின் ஜீவியத்தைப் பின்பற்றும்படி தம்மை ஒப்புக்கொடுத்தார். பலன் என்ன? பெரிய சம்பவங்கள் நடந்தன. கர்த்தர் தன்னை எவ்வாறு உபயோகிப்பாரென்று கிஞ்சித்தும் எண்ணாமல், கர்த்தருக்குத் தன்னைப் பிரதிஷ்டைபண்ணினார். ஆனால் இப்பிரதிஷ்டை பூரணமாயிருந்தது. ஆகவே தேவ தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அவரை ஆச்சரியமான கருவியாகக் கர்த்தர் உபயோகித்தார்.

இக்காலத்திலும் உலகத்துக்கடுத்த காரியங்களும் உலகப் பொருளும் பெரிதாகக் காணப்படுகிறதில்லையா? தேவன் பேரிலுள்ள அன்பும் மனுஷர் மீதுள்ள அநுதாபமும் எவ்வளவு சொற்பம்! ஆத்மாக்களபேரிலுள்ள தாகம் எங்கே? கிறிஸ்துவுக்காகப் பைத்தியக்காரர் என்று பிரான்ஸிசைப் போல எண்ணப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கும் மனுஷர் இக்காலத்திலும் தேவை? தான் மரிப்பதற்கு சில காலத்துக்குமுன் எழுதின ஜெபத்தின் பிரகாரம் பிரான்சிஸ் ஜீவித்துவந்ததுபோல இந்நாட்களிலும் ஜீவித்துவரும் புருஷரும் ஸ்திரீகளும் எழும்புவார்களானால், உலகத்தில் என்னமாறுதல் நடந்துவிடும்!! அந்த ஜெபத்தை இங்ஙனம் வரைவோம். சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நீர் பரிசுத்தர், இரக்கமிகுத்தவர், நிர்ப்பாக்கியராகிய நாங்கள் உமது சித்தமென்று அறிந்த யாவையும் உமது நிமித்தம் செய்யவும் உமக்குப் பிரியமானதை எப்போதும் விரும்பவும் கிருபை அருளும். ஆவியானவரின் திவ்ய அக்கினியினால் அனல்மூண்டு, பிரகாசிக்கப்

பட்டு; உள்ளத்தில் பரிசுத்தமாக்கப்பட்ட வர்களாய், ஏக்கள் ஆண்டவரும் உமது நேச குமாரனுமாகிய இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்க அருள்புரிக்தரு ளும்.' ஆமென்.

சுவிசேஷ படைமுயற்சி.

சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்த மாய் மகாகனம் அத்தியக்ஷரவர்களின் ஆலோசனைகளைக் கடந்தமாச சஞ்சிகையில் பிரசுரித்தோம். எஸ். பி. ஜி. ஜில்லா ஆலோசனைக் கவுன்சல் சம்பந்தமாயும் ஸி. எம். எஸ். ஜில்லா ஆலோசனைக் கவுன் சல் சம்பந்தமாயும் முறையே ஒவ்வோர் 'காரியகர்த்தா சபை' ஏற்பாடாகுமென்று மகாகனம் அத்தியக்ஷரவர்கள் சொன்னார் கள். அப்பிரகாரம் ஏற்பாடாயிருக்கும் ஸி. எம். எஸ். கவுன்சலைச்சேர்ந்த 'காரிய கர்த்தா' சபையார் பின்வரும் விஷயங்களை தங்களுடைய கவுன்சல் சம்பந்தமான குரு மாருக்கும் சபையாருக்கும் உதவியாக ஆலோசனை சொல்லுகிறார்கள்.

நோக்கம். சுவிசேஷ பிரபல்ய ஊழிய விஷயமாய் இரு குறைகள் சொல்லப்பட்டு வருகின்றன *கிறிஸ்தவர்களில் பெரும்பான் மையோர் சுவிசேஷ வேலையில் அக்கறை கொள்ளாதவர்களாயும் நிர்விசாரிகளாயுமி ருக்கிறார்களென்பது ஓர் குறைவு. கற் சமயம் நாம் செய்துவரும் முயற்சிகளினால் கொஞ்சப்பேர் மாத்திரம் ஒவ்வொரு வரு ஷமும் கிறிஸ்து சபையில் சேருகிறார்க ளென்பது மற்றொன்று. ஆகவே இப்ப டைமுயற்சியின் நோக்கம்: 1-வது, இவ் வித்தியக்ஷாதீனத்திலுள்ள ஒவ்வொரு சபை யிலும் சுவிசேஷப் பிரபல்ய வாஞ்சையை யும் சிந்தையையும் உண்டாக்குவது. 2-வது, புறமதஸ்தரைக் கண்டுபேசி, அவர்களை ஆதாயம்பண்ணுபடியாக, கிறிஸ்தவர்கள் யாவரும் ஜெபமும் நிலைவரமுமான ஏற்பா டுகளைச் செய்து, ஒன்றுசேர்ந்து உழைப்பது மே.

ஏற்பாடுகள். சுவிசேஷ பிரபல்ய ஊழி யம் சித்தியாயும் நிலைவரமாயும் அத்திய கூர்தின முழுமையிலும் நடைபெற்று வர வேண்டுமாகையால், ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றி லும் தருக்த முயற்சியும் ஏற்பாடுகளும் ஒழுங்குசெய்வது இன்றியமையா அவசியம். ஆகவே, ஒவ்வொரு பாஸ்ற்றரும் தம் பாஸ் ற்றரேற்று ஊழியரையும் சபையாரையுங் கொண்டு, அந்தந்த இடத்துக்குப் பொருத் திய முறைகளைக் கையாடி, சுவிசேஷ படைமுயற்சி ஊழியத்தை உடனே ஆரம் பித்து நடத்தக்கேட்டுக்கொள்ளப்படுகிறார் கள். படைமுயற்சி காரிய நிர்வாக சபை யாரின் வேலை பொதுவாக சபைகளை உற் சாகப்படுத்திவிடுவதாகவே இருக்கும்.

தருமாருடைய வேலை.

1. தங்கள் விசாரணைக்குட்பட்ட மிஷன் ஊழியரை முதலாவதாகவும், அப்பால் பற் பல சபைகளையும் கூடியசீக்கிரம் கூடிவரச் செய்து, சுவிசேஷ பிரபல்ய முயற்சியின் அவசியத்தை கன்குணர்த்தி ஜெபத்திலு ம் ஒற்றுமையான ஊழியத்திலும் இவ் வேலைக்குக் கைகொடுக்கும்படி ஜனங்க ளைக் கேட்கவேண்டும்.

2. ஒவ்வொரு சபையிலும் இவ்வூழியத் தை நினைத்து நிட்டமான ஜெபம் நடத்து வர ஒழுங்குசெய்யவேண்டும். திருஷ்டாந் தமாக வாரத்தில் ஓர்நாள் மாலை ஆராதனை மிஷனரி ஊழியத்திற்காக விசேஷ விண்ணப்ப ஆராதனையாகப் பிரித்துவைக்க லாம்.

3. சுதாவாகப் பிரசங்க வேலைசெய்ய விரும்பும் ஆட்களை ஒவ்வொரு சபையிலும் பேரெழுதி, மிஷனரி ஐக்ய கூட்டமாகச் சேர்க்கவேண்டும். அவர்களுக்கு ஒரு செக் ரற்றெரியும் ஏற்படுத்தலாம். சபையிலுள்ள ஸ்திரீகள் புறமதஸ்தரான ஸ்திரீ ஜனங் களுக்குள் சுவிசேஷ வேலைசெய்யும்படியாக ஒழுங்கு ஏற்பாடாகவேண்டும்.

4. சுவிசேஷ வேலைசெய்யசம்மதிப்போ ருக்கு வாரா வாரம் ஒரு பாடக்கூட்டம் நடத்தவேண்டும். எனெனில் போதனை யடையாத ஊழியரால் அதிகப் பிரயோஜ னம் உண்டாகிறதுமில்லை, அவர்கள் நே ரத்தில் சோர்ந்துபோகிறார்கள். மகா

கனம். அசரியா அத்தியக்ஷரவர்கள் இயற் றிய 'அப்போஸ்தலர் நடபடி ஆகம பாடங் கள்' இத்தப் பாட வகுப்புகளில் ஒழுங்காய் உபயோகித்துவரலாம். வாரத்தா விசேஷ ஜெப நாளிலேயே இப்பாடக் கூட்டமும் நடக்கலாம்.

ரோமாந்தரத்தில் பாடவகுப்புகள் ஏற்பாடா கும் நோக்கமாக 'அப்போஸ்தலர்' பிரதி ஒன்று ஒரு அணு வீதம் வேண்டும் சபையாருக்கு விற்கப் படும். ஒரே நடவையாக 25 புஸ்தகங்கள் வாங் கவேண்டும். பாளையங்கோட்டையிலிருக்கும் இந் திய மிஷனரி சங்க செக்ரற்றரிக்கு முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒவ்வொரு சபையிலும் சுவிசே ஷப் பிரசங்கவேலை உடனே ஆரம்பித்து கிரமமாய் நடத்தவேண்டும். உதாரண மாக, குறைந்த பக்ஷம் வாரத்துக்கு ஒரு முறை தெருப்பிரசங்கமும் புறமதஸ்தரை வீடுகளில் சந்தித்து சம்பாஷிப்பதும் அவ சியம். விசேஷமாய், நமது பள்ளிக்கூ டங்களில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோரைக் கண்டு பேசலாம். ஒற் றைத்தாள்ப்பிரதிகளை இத்துக்களுக்குக் கொடுக்கலாம். (வேண்டிய தாள்ப்பிரதி கள் பாளையங்கோட்டை ஸி. எம். எஸ். ஆபீ சிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்). வேதா கம பங்குகளை விற்கலாம். தெருப்பிரசங் கம் செய்யும்போதெல்லாம் நாம் செய்ய வேண்டிய ஓர் காரியம் வேதபங்குகளை இலவசமாகவாவது இலாயத்துக்காவது ஜனங்களுக்குக் கொடுப்பதாம்.

6. ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றிலு முள்ள புறமதஸ்தரின் கிராமங்கள், செய்ய வேண்டிய வேலையின் தன்மை என்னவென் று அறிந்து, சமயத்துக்கும் இடத்திற்கும் தக்கதாக விசேஷித்த முறைகள் ஏற்பாடு செய்யவேண்டும். திருஷ்டாந்தமாக, ஒவ் வோர் இந்து கிராமத்தை ஒவ்வோர் கிறிஸ் தவ கிராமத்தாருக்குக் கொடுத்து, அக்கிரா மத்திற்காக ஜெபிக்கவும் அங்கேயேபோய்ப் பிரசங்க ஊழியம் எப்போதும் செய்து வர வும் அக்கிறிஸ்தவர்களைக் கேட்கலாம். அல் லது ஒவ்வோர்கிறிஸ்தவ குடும்பத்தார் சு ற் றி யுள்ள ஓர் இந்து குடும்பத்தவரை ஒழுங்காய்க் கண்டுபேசவும் அவர்களுக்காக ஜெபித்துவரவும் ஒழுங்குசெய்யலாம். உற் சவம், சந்தைகாட்சிகளைக் கவனித்து, அவ்வி டங்களில் விசேஷித்த கூட்டவேலை நட க் கும்படி ஏற்பாடு பண்ணலாம். மார்க் கத்தைவிட்டு மறுதலித்துப் போனவர்க ளோடு பேசி, அவர்கள் ரக்ஷகரை மீளவும் ஏற்றுக்கொள்ளும்படி விசேஷ பிரயாசம் எடுக்கலாம்.

7. விசேஷித்த அவசியங்களை அல்லது சம்பவங்களைக் கவன்சல் முதலாளியவர்க ளுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர்கள் படைமுயற்சி காரியகர்த்தா சபைக்குத் தெரிவிப்பார்கள். உடம், ஓரிடத்தில் பலர் ரக்ஷகரை ஏற்றுக்கொள்ளவாவது மார்க்க ஆராய்ச்சி செய்யவாவது ஆவலாயிருக்கு தல்; பெரிய இந்து கிராமம் அல்லது பட்ட ணத்தில் சுவிசேஷ படைமுயற்சி வேலை நடப்பித்தல். இப்படிப்பட்ட விஷயங்க ளில் படைமுயற்சி காரியகர்த்தா சபையார் வேண்டும் புறஉதவி புரிவார்கள்.

சர்க்கிள் கேயர்மென்களின் கடமைகள்.

1. தேவ ஊழியரின் மாதாந்தக் கூட் டங்களிலும், அவர்களுக்காக வருஷா வரு ஷம் நடத்திவரும் சுன்னெவன்ஷன் கூட்டங் களிலும் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தைப் பற்றி முக்கியமாய்ப் பேசவேண்டும்.

2. அவசியமென்று கண்டால், ஜோன்ஸ்பண்டி உபதேசியாரை சுவிசேஷ படை முயற்சி ஊழியத்திற்காக உபயோகித் துக்கொள்ளலாம்.

கவனிப்பு. சுவிசேஷப்படை முயற்சி சம்பந்தமான ஓர் விசேஷ ஊழியம் காளது வருஷம் அம்பாசமுத்திரத்திலும் சிவகாசி யிலும் புறமதஸ்தருக்குள் நடத்தப்படும். அதற்காக விசேஷமாய் ஜெபித்துவரக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

படை முயற்சி சம்பந்தமாய் நடக்கும் வேலை களின் தன்மை, பலன்முதலிய விஷயங்களை எழுதி யனுப்புவது உசிதம்.

தேவனுடைய பிள்ளையென்பதின் கருத்து தேவனைப்போலிருப்பது.

தெலுங்குநாட்டுக் கடிதம்

1914-ம்வரு செப்தெம்பர்மீ முதல் 1916-ம்வரு மார்ச்சுமீ வரை திருப்பணி விடைக்காக பாடம்படித்து, ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்பாடங்களை முன் எழுதியிருந்தேன். ஏசாயாவின் புஸ்தகம், 1 கொரிந்தியர், ஜெபபுஸ்தகம் முதலியவைகளை மகாகனம். தோர்ணக்கல் அத்தியட்சரவர்களே சமையம் கூடியபோதெல்லாம் படித்துக்கொடுத்தார்கள். திருச்சபை சரித்திரம், விசுவாசப்பிரமாண விளக்கம், வேதசித்தாந்தப் பிரமாணம் முதலியவற்றை கனம். D. S. தாவீது ஐயரவர்கள் படித்துக் கொடுத்தார்கள். மீதப்பாடங்களை நானே படித்துக்கொண்டேன். மகாகனம். அத்தியட்சரவர்களே பாடங்கள் யாவையும் படித்துக்கொடுக்க வேண்டுமென்றெண்ணினார்கள். ஆனால் அவர்கள் வேலையினிமித்தம் கூடாமற்போயிற்று. என்றாலும் பரீட்சை அடிக்கடி வைத்து, எவ்விதமாய் படிக்கவேண்டுமென்று காட்டினார்கள். கடையில் பரீட்சை நன்றாய் எழுதத்தக்கதாக கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார்.

கர்த்தர் என்னை ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரிய இருளிலிருந்து விடுவித்து, தம்முடைய மெய்யான ஒளியைக் கண்டுகொள்ளக் கிருபை செய்தார். என்னுடன் சிலர் இறிஸ்துவையறிந்துகொண்டு, அவருடைய பிள்ளைகளாகப் பிரயாசப்பட்டார்கள். தன்பம் வரவே பின்வாங்கிப்போனார்கள். என்னையோ அங்கிருந்து தப்புவித்து, இதுவரைக் காப்பாற்றி வந்திருக்கிறார். பாளையங்கோட்டை ஹைஸ்கூலில் படிக்கும் சமையத்தில், இவ்வளவு கிருபையாய் இவ்வொளியைக் கண்டுகொள்ள கிருபைசெய்த கர்த்தருக்குமகிமையுண்டாக இருளடைந்த நிலத்தில் சுவிசேஷத்தையறிவிக்கவேண்டுமென்றெண்ணக்கொண்டு, இந்த மிஷனுக்கு ஒப்புக்கொடுத்தேன். கர்த்தர் கிருபையாய் என்னைப்பலப்படுத்தி, நான் கிறிஸ்தவனுக வந்து கொஞ்சக்காலம் மாத்திரம் ஆனபோதிலும், என் எல்லாக் குறைவையும் பாராமல், இப்பரிசுத்த ஊழியத்திற்கு கிருபையாய்த் தெரிந்துகொண்டார்.

மார்ச்சுமீ 9-ம் தேதி முதல் பட்டாபிஷேகம் பெறப்போகிறவர்களுக்கு ஆயத்தக்கூட்டம் வைக்கப்பட்டது. உதவிக்கு ருப்பட்டத்திற்கு மூவரும், குருப்பட்டம் பெற ஏழுபேருமாக பத்துப்பேர் வந்திருந்தோம். தினந்தோறும் காலையில் ஆராதனையும் பிரசங்கமும் நடந்தது. மதியம் மன்றாட்டு ஜெபங்கள் செய்யப்பட்டன. சாயந்திரம் சபையில் நடத்தவேண்டிய ஆராதனை முதலியவைகள் படிப்பித்துக் கொடுக்கப்பட்டன. இரவு ஆராதனையும் பிரசங்கமும் நடந்தது. காலையிலும் மாலையிலும் ஆராதனைகள் குருப்பட்டத்திற்கென்று வந்திருந்தவர்கள் வரிசையாய் செய்தார்கள். பிரசங்கம் மகாகனம். அத்தியட்சரவர்களே செய்தார்கள். 12ம்தேடக்கும் குருப்பட்டாபிஷேக ஆராதனை பக்திவிசுவாசமாய் நடந்தேறத்தக்கதாக ஒவ்வொருவரு பிரக்கவேண்டிய ஒழுங்கையும் சிலருடைய கடமைகளையும் 11ம் சாயரட்சை சனிக்கிழமை திட்டமாய் அத்தியட்சரவர்கள் சொன்னார்கள். 12ம்தேக காலை பட்டாபிஷேக ஆராதனை யாவும் நன்றாய் நடந்தது. அநேக மாடக்களிலிருந்து ஆட்கள் வந்திருந்தார்கள்.

கனம் தேவசகாயமய்யரவர்கள் திருநெல்வேலிக்கு ஆறுமாத ராஜாவில் போவதால், நான் அந்தக்காலத்தில் அவர்களிருக்க மானுக்கோட்டையிலிருந்துகொண்டு அவர்கள் பார்த்துவந்த சபைகளை பார்த்து வரப்போகிறேன். எனக்காகவும் என் வேலைக்காகவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாதம் 16ம்தேயன்று சிரிராமபுரியில் தவச உற்சவப்பண்டிகை நடந்தது. அதற்கு கனம். தேவசகாயமய்யரவர்களும் கனம். ஐயத்துரையவர்களும், நானுமாகப் போனோம். முந்தினநாள் இரவு ஆயத்த ஜெபக்கூட்டம் வைக்கப்பட்டது. அநேகர் பண்டிகைக்காக ஜெபித்தார்கள். காலையில் பரி. இராப்போஜனம் பரிமாறப்பட்டது. மதியம் காணிக்கை படைக்கப்பட்டன. சுற்றுப்பக்கத்திலிருந்து ஜனங்களெல்லாரும் வந்தார்கள். காணிக்கையாக வந்த

ரூபாய் 15. இது முந்தின வருஷத்தைப் பார்க்கிலும் 10 ரூபாய் அதிகமாம். சாயந்திரம் 7 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இரவு கனம். ஐயாத்துரையவர்கள் மோட்ச பிரயாணத்தைப்பற்றிய மந்திர தீப படம்காட்டி, அதிலிருந்து மோட்சகனா பேர்ச்சேரவேண்டுமானால், மத்தியில் வரும் கஷ்ட நஷ்டங்களிலெல்லாம் பொறுமையாயிருந்து கடைசிவரை ஸ்திரமாயிருக்கவேண்டுமென்று விவரித்துக்காட்டினார்கள். அது புதுக்கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. கிறிஸ்தவர்கள் தவிர மற்ற ஜனங்களும் வந்து பார்த்தார்கள். இவ்விதமாய் முப்பாரம், மேடிதப்பல்லி முதலிய இடங்களிலும் படங்கள் காட்டி, அவர்களே தெலுங்கில் பிரசங்கம் செய்தார்கள். மறுநாள் காலை முப்பாரத்திற்கு பண்டிகைக்காகப் புறப்பட்டோம். மத்தியில் போல்லாடாவென்ற ஊரில் மதியம் இருந்தோம். சாயந்திரம்போல் அங்கு சிலருக்குஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கொஞ்சக்காலத்திற்கு முன் கனவு சாமானே விலைக்கு வாங்கினதினிமித்தம் கைதியாயனுப்பப்பட்டு விடுதலையாகிவந்த ஒருவன் தன் ஜனங்கள் கிறிஸ்தவர்களானதையறிந்து தானும் கிறிஸ்தவனானான். அவனுக்கு கிறிஸ்துமார்க்க போதனைகள் நன்றாய் போதிக்கப் பட்டிருக்கிறதாவென்று அறிந்தபின், கனம தேவசகாயமய்யரவர்கள் அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவன் கிறிஸ்தவனுக யோக்கையில், அவன் மனைவி கிறிஸ்துமார்க்கத்திற்கு வரமாட்டேனென்றாளாம். நீ வராவிட்டால், என்னுடன் இருக்கமுடியாதென்று அவன் சொல்லவே, அவள் தன் தாய் வீட்டிற்குப் போய்விட்டாள். இப்பொழுது அந்தப் பிள்ளையின் தகப்பன் இவனைக் கூட்டிக்கொண்டு போகச்சொல்லியும், இவன் கூட்டிக்கொண்டு வரவில்லை. நீங்கள்: நீ உன் மனைவியைக் கூட்டிகொண்டுவா, பின்னால் அவள் உன்னுடைய ஜெப ஜீவியத்தைப் பார்த்து கிறிஸ்தவளாவாள் என்றோம்.

மறுநாள் முப்பாரம்போனோம் அந்த ஊரில் 200 பேருக்கு அதிகமாய் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அது ஒரு பாஸ்டரேட்டாயுமிருக்கிறது. அதில் சரியான ஊழியரில்லாததால், அந்தச் சபை நன்றாய் சீர்திருத்தவில்லை. பின்னர் மேதெபல்லிக்குப் போனோம். அங்கு 21-ம்தேதி பண்டிகை நடந்தது. இந்தச் சபை நமது முதல் சபைகளில் ஒன்றானதால், மற்ற சபையைப் பார்க்கிலும் விர்த்தியே காணப்பட்டது.

தோர்ணக்கல் டையோசிஸிலுள்ள மிஷன்களெல்லாம் ஒன்று சேர்ந்து, காணிக்கை சேகரித்து, ஒரு புது இடத்திற்கு ஓர் சுவிசேஷ ஊழியனை அனுப்பி, பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பணம் அதற்கென்று கொஞ்சம் சேகரிக்கப்பட்டிருக்கிறது. வாரங்கல் பக்கத்திலுள்ள முலுகு என்ற யிடத்திற்கு ஆள் அனுப்பும்படியாக யோசித்திருக்கிறார்கள். அங்கு ஊழியம்செய்ய இருவர் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். கர்த்தர் இவ்விதபுது வேலையை ஆசீர்வதிக்க ஊக்கமாய் ஜெபிப்போமாக.

1915-ம் வருஷம் டிசம்பர் மாதம் 30-ம் தெதியன்று 14 புது மாதிரி தாங்கள் வைத்து நெசவுத்தொழில் படிப்பிக்க, ஒரு கட்டடத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அஸ்திபாரம் போடும்தினம் கட்டடத்திற்கு வேண்டிய ரூபாயில்லை. கொஞ்சம்தானிருக்கிறது; பணம் கிடைக்கும்படி ஜெபிக்க வேண்டுமென்று மகாகனம் அத்தியட்சரவர்கள் சொன்னார்கள். நினையாத பிரகாரம் அதற்குவேண்டிய ரூபாய் கிடைத்தது. கட்டடத்தின் நீளம் 67 அடி, அகலம் 36 அடி. ரூபாய் 966—2 அணா இதற்காக செலவாகியிருக்கிறது. மார்ச்சுமீ 22ம் கட்டடம் பிரதிஷ்டையானது. அந்தக் கட்டடத்தை போர்டிங் பிள்ளைகள், உபாத்திமார் ஜோடித்தார்கள். செயில்வேஸ் டேஷனிலிருந்து சிலர் வந்திருந்தார்கள். மகாகனம் அத்தியட்சரவர்கள் வந்திருந்த சிலர் இங்கிலீஷ்மாத்திரம் தெரிந்தவர்களானதால், அவர்கள் நிமித்தம் சேவு தொழிலின் பிரயோஜனத்தைப்பற்றி இங்கிலீஷில் பேச, கனம் பாக்கியராஜன் ஐயரவர்கள் தெலுங்

தில் விவரமாய்ச் சொன்னார்கள். பின்னல் மகாகனம் அத்தியட்சரவர்கள் ஜெபமும் ஆசீர்வாதமும் கூறினார்கள். கூட்டம் முடிந்தது. இந்த சேவு வேலை இங்குள்ள கிறிஸ்தவர்களின் தொழிலானதால், அவர்கள் 3 மாதத்திற்குள் படித்துக்கொள்ளக் கூடியவர்களாயிருக்கிறார்கள். சபையாரும் இரைப்பிடித்து தாங்கள் நன்றாய்ப் பிழைக்க ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்கள். பள்ளிப்பிள்ளைகளிலும் சிலரைப் படிப்பித்து சபையில்இவ்விதவேலைசெய்து, சபையைப் பார்க்க ஏற்பாடாகவும் இது ஆரம்பிக்கப் பட்டது. இவ்விதமுயற்சியினால் சபைக்கும் மிஷனுக்கும் பிரயோஜனமாயிருக்க கர்த்தர் கிருபை செய்வாராக. தரி ஒன்று 40 ரூபாய் செல்லும். இன்னும் பத்து தரிகள் தேவை. தனிமையாகவாவது, சபையாகவாவது தரி இனாமளிப்பார் யார்?

ஜான் ஸ்ரீனிவாசகம்.

இந்திய கிறிஸ்தவர்களின் பல பொருட்காட்சி

சீனத்தின் வருஷாந்தரக் கூட்டத்தினமாகிய வருகிற ஜூலை 13உ திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்க சம்பந்தமாய் வழக்கமாய் நடந்துவரும் நன்கொடை சாமான் விற்பனையோடு ஒரு பலபொருள் காகஷி ஜூலை 11உமுதல் 13உவரை வைத்து நடத்தும்படி தீர்மானித்திருக்கிறது. வழக்கம்போல நன்கொடை சாமான் விற்பனைக்குப் படைக்கிற சாமான், பொருள்கள், ஜீவப் பிராணிகள், தாவரவஸ்துகள் முதலியவை பாளையங்கோட்டை, ஸ்ரீமான் J. செல்வநாயகம் ஆசிரியரவர்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். பலபொருட் காகஷிக்கு சாமான் அனுப்புகிறவர்கள் பாளையங்கோட்டை, ஸ்ரீமான் J. ஞானமுத்து, B. A. L. T. வித்யாபாகருக்கு அனுப்ப வேண்டும்.

அதோடு பலபொருட்காகஷிக்கும் சாமான்கள் அனுப்பும்படி இந்த அத்தியக்ஷாதீனத்துக் கிறிஸ்தவர்களையெல்லாம் எவி எழுப்பி உற்சாகப்படுத்தவும், இதின் பலாபலன்களைக் குறித்து எல்லோருக்கும் சொல்லவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படி சமயா சமயங்களில் பல பொருள்காகஷி வைப்பதினால் இந்த அத்தியக்ஷாதீனத்துக் கிறிஸ்தவர்கள் என்னென்ன செய்ய சாமர்த்தியமுள்ளவர்களென்று மற்றவர்களும் நம்மில் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளுகிறதுமல்லாமல், என்னென்ன மாதிரி சாமான் எங்கெங்கே என்னென்ன விலைக்குக் கிடைக்கும், யார் யார் எதெதை நன்றாய்ச் செய்யக்கூடும் என்று எல்லோருக்கும் தெரியவருகிறதினால், கைத்தொழிலும் வர்த்தகமும் விருத்தியாகி, இந்திய கிறிஸ்தவர்கள் லாபமடைய வழியுண்டாகும். இப்படிப்பட்ட காகஷிகளினால் கைத்திறமை அதிகரித்து, விருத்தியடைய வேண்டுமென்கிற விருப்பத்தினால் ஒவ்வொருவரும் தன் தன் புத்தியைக் கூர்மைப்படித்தி, தன் தன் வேலைப்பாடு சேர்த்தியாயிருக்கப் பிரயாசப்படும்படி ஏவப்படலாம். இப்படி நமது திறமையை வாய்த்த சமயங்களில் காட்டுகிறதினால் எல்லா வரங்களையும் நமக்கு ஈகின்ற பரம தகப்பனுடைய நாமம் மகிமைப்பட எதுவாயிருக்கும்.

ஆகையால் பின் சொல்லிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன:—

(1) 1916-ம்ஜு ஜூலை 11, 12, 13 தெய்திகளில் பல பொருட்காகஷி பாளையங்கோட்டையில் நடந்தேறும். நமது அத்தியக்ஷாதீனத்துக்குள்ப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் கைப்பட்டச் செய்த எந்தப் பொருளையும் எட்டு நாளைக்குமுன்னதாக அதாவது ஜூலை 3உக்குள்ளாக அனுப்புகிறவரின் பேர், ஊர், சாமான்பேர், விலை, பிரவேசக் கட்டணம் முதலியவைகளோடு அனுப்ப வேண்டும். பிரவேசக் கட்டணம் சாமானுக்கு அணு ஒன்று.

(2) சாமான் அனுப்புகிறவர் தான் அனுப்பின சாமான் அல்லது பொருள் தன் சொந்தக்கையால் செய்யப்பட்டது, அல்லது தான் பயிரிட்டதின் பலன், அல்லது தான் வளர்த்தது என்று ஒரு கையெழுத்துப் பத்திரம் ஒரு குருவானவரிடத்திலிருந்தாவது, ஒரு உயர்தரப் பள்ளிக்கூடத்து தலைமை யுபாத்தியாயரிடத்திலிருந்தாவது, ஒரு கிராம

மே 1916. Vol. XIII. No. 5.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

தற்பரதிஷ்டைக்கு அழைப்பு.

(கனம். லார்சன் ஐயர் எழுதியதிலிருந்து)

அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (பரி. யோவா. 17: 19).

1. **சுவிசேஷப்பணிமுயற்சி ஊழியம் சபையின் வேலை.** இவ்வூழியத்தை சிரத்தையாய் நடத்துவதற்கு விசேஷ ஊழியரும் திறமையுள்ளவர்களமைந்த காரியகர்த்தா சபைகளும் அவசியம். வேண்டிய ஊழியர் கிடைக்கும்படி நாம் செய்யவேண்டியதென்னவென்று அருமை ஆண்டவர் சொன்னதை (மத். 9: 38) ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோமாக.

சுவிசேஷ ஊழிய சம்பந்தமாய் கவனிக்க வேண்டிய பெரிய காரியம் யாதுவென்றால், திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் புறமதஸ்தருக்கும் உலகத்தாருக்கும் என்ன மாதிரிகாட்டுகிறார்களென்பதே. கொரிந்து சபைக்கிறிஸ்தவர்களைப்பற்றி பரி. பவுல் பேசுகிறதுபோல, கிறிஸ்து சபையின் அவயவங்களாகிய நாம் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டு இருக்கிற நிருபங்களா? (2 கொரி. 3: 3) கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்கிற கிறிஸ்தவர்கள் மூலமாகவே மனுஷர் கிறிஸ்துவண்டை சேரவும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் திட்டமான தீர்மானம் செய்துகொள்ளுகிறார்களென்பது எத்தனை உண்மை!

2. **இவ்வூழியம் மனுஷரால், தேவன் மாத்திரமே செய்யக்கூடிய வேலை.** நம்முடைய பொருள் அவசியந்தான். நம்முடைய உத்தம முயற்சிகளும் வேண்டியதே. ஆனால் மனுஷர் ரக்ஷிக்கப்பட்டவேண்டுமானால், கிரியை நடப்பிக்கவேண்டியது கர்த்தரே. ஆதலால், நாம் தேவனோடு ஒருங்கி இணைபிரியாஐக்கியமாய் இன்ப சகவாசம் செய்து கர்த்தர் நமது மூலமாய்க் கிரியை செய்யவும் நம்மில் மனுஷர் கர்த்தரைக் காணவும் பார்ப்பதே முக்கிய காரியம்.

3. **ஆண்டவரோடே ஐக்கியப்படும் ஜீவியத்தில் வளர்த்தக்கதாக, கிருபையின் யுத்தனங்களைக் கையாடுவது அவசியம்.** ஆதித் திருச்சபையானது தெய்வீக சுபாவத்தில் வளருவதற்கு கருவியாயிருந்தது கிருபையின் யுத்தனங்களென்று அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தில் பார்க்கிறோமல்லவா? "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2: 42).

விசேஷித்த கூட்டங்களினிமித்தம் சபையின் ஜாதனைகளை அசட்டையாய் விட்டுவிடக்கூடாது. எழுப்புதலான பிரசங்கங்களையும் கீதங்கள் இன்பமாய் பாடுவதையும் பொறுதி பாராட்டி, பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஏனம் பண்ணுவது மோசமே. நாம் இதுவரை அனுஷ்டித்து வரும் கிருபையின் எத்தனங்களும் புதுமுறையாய் நடப்பிக்கும் சுவிசேஷ வேலையும் பொருந்தாதவை என்று நினைத்தேனும் எண்ணவாவது, நாம் அப்படி நினைத்து நடக்கிறோமென்று மற்றவர்கள் மனதில் படவாவது நாம் சற்றும் இடங்கொடுக்கக் கூடாது.

தேவனுடைய வசனம் நமது கால்களுக்குத் தீபமாயும் நமது ஆத்மாவுக்கு ஆகாரமாகவும் இருக்கிறது மாத்திரமல்ல, கர்த்தருடைய யுத்தத்தை நடத்தி, ஜெபங்கொண்டு வரும்

"ஆவியின் பட்டய" (எபே. 6: 17) மாயுருமிக்கிறது. நாம் ஒவ்வொருவரும் பிரசங்கஞ் செய்ய அவசியமில்லாதிருக்கலாம்; ஆனால் யாவரும் ஊழியத்தைச் செய்ய வேண்டியவர்கள். ஆகையானால், "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயிருப்பது அவசியம். அதற்காக ஒவ்வொருவரும் தனித்தனியாக வேதத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டும். வேதாகமத்தில் நமக்கு விளங்கக் கூடாதவைகளைக்கண்டு கலங்கவாவது திகைக்கவாவது வேண்டியதில்லை. நாம் அறியக்கூடிய சத்தியங்களே நமது நடக்கைக்குப்பிரமாணமாக உபயோகிப்பதே நாம் செய்ய வேண்டிய மேலான காரியம். நாம் வாசித்து தியானிக்கும் சத்தியங்களே நமதுஜீவியத்தின் அனுஷ்டானங்களாக வேண்டுமானால், **தற் சோதனையும் ஜெபமும்** இன்றியமையா அகத்தியம் தேவை.

சுவிசேஷ வேலைக்காக மாத்திரமல்ல, நமது ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் நாம் ஜெபித்து வரவேண்டும். ஜெபக்குறைவே நமது அபஜெயங்களுக்கும் தவறுதலுக்கும் காரணம் (மாற். 9: 29). ஸ்தோத்திரமும் பரிந்துபேசும் மன்றாட்டும் நமது ஜெபங்களின் விசேஷ அம்சங்களாக இருக்கவேண்டும். எவைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டுமென்று அறியும்படி நேரப்பட்ட சிந்தித்துப்பார்ப்போமாக. தேவனுடைய் பண்டகசாலையிலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தம வழி நன்றியறிதலான இருதயமே. 'நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்றிருக்கிறாய்" (மாற். 10: 51) என்று கேட்கும் கேள்விக்கு திட்டமான மாறுத்தரம் கொடுக்கத்தக்கதாக மன்றாட்டுப் பிரார்த்தனைக்கென்று குறித்த மணி அல்லது வேளை வைத்துக்கொள்ளவேண்டும். அது மாத்திரமல்ல, தேவனுடைய ஊழியம் செய்துவருகையில், நமது குறைவுகளே உணரும் எச்சமயத்திலும் தேவனே நோக்கத்தக்கதாகவும், மனதில் எழும்பும் நல்ல விருப்பங்கள் யாவையும் விண்ணப்பங்களாகப்படைக்கத்தக்கதாகவும் எப்போதும் ஜெபிக்கும் சிந்தை நமமிலுண்டாக ஜாக்ரதையாயிருப்போமாக. "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 7: 7).

தேவுக்குநாட்டுக் கடிதம்

கடந்தமாதம் அப்பாய் பாளையம், உல்லிப்பல்லி, தர்மாபுரம், ஐதர்சாபேட்டை முதலிய கிராமங்களில் 52 பேர் பரிசுத்த ஞானஸ்னானத்தினால் சபையிற் சேர்க்கப்பட்டார்கள்.

கிட்டத்தட்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் வைசூரி நோயிருக்கிறது. தெட்லப் பாட்டில் அதிக அகோரம். நம்முடைய கிறிஸ்தவர்களில் சிலருக்கு நோய்கண்டு, மார்த்தாள் என்னும் ஒரு நல்ல கிறிஸ்தவ ஸ்திரீ மரித்துப்போனாள். அவளுடைய முதல் மகன் முன்னால் மரித்துப்போனான். அவளுடைய இரண்டாம் குமாரனும் வைசூரியினாலுண்டான வயிற்றழைச்சலால் மிகவும் கஷ்டஸ்திதியிலிருக்கிறான். இந்தப் பையனும் மரிப்பதானால், அவளுடைய புருஷனுமாகிய யோவான் தன் மனைவியையும் பிள்ளைகளையும் இழந்ததால் ஒண்டியாளாவானான். இவன் அவ்வளவு ஸ்திர விசுவாசியான கிறிஸ்தவனல்ல. இக்குடும்பத்தாருக்கு நேர்ந்த சோதனைகளால் விசுவாசத்தில் சோர்ந்து போகாதபடி, இவர்களை நினைத்து ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாதம் 5ஆ முதல் பத்து தினங்களாக தெலுங்கு சர்ச்சுமிஷன் சங்கத்தைச் சேர்ந்த எல்லூர் டிஸ்டிரிக்ட்டிலுட்பட்ட கானமூரு, சிரிவாடா என்னும் இரண்டு பாஸ்ட்ரேட்டு மத்திய ஸ்தானங்களில் கிறிஸ்தவர்களுக்கு கன்வென்ஷன் கூட்டங்கள் வைத்து நடத்திவந்தேன். இப்படியே இந்த டிஸ்டிரிக்ட்டிலுள்ள நானுபாகங்களிலும் பற்பலரால் விசேஷ கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களால் மிகுந்த நன்மையுண்டாகுமென்று நம்புகிறேன்.

நமது நாட்டில் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் இருப்பதுபோல், தோர்ணக்கல் அத்தியட்ச மண்டலத்திலுங்கூட கடந்த வருஷமுதல், தோர்ணக்கல் அத்தியட்ச மண்டல மிஷனெரி சங்கமென்ற

ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கம்மாமெட்டு சர்ச்சுமிஷன் சபையாரும், நமது தோர்ணக்கல் மிஷன் கிறிஸ்தவர்களும், சிங்கரேணி மிஷனைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் பணம் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். இச்சங்கத்துக்குப் பிரசிடென்று மகாகனம் அத்தியட்சரவர்களே. இச்சங்கத்தின் காரியாதிகளை ஓர் கமிற்றிமார் நடத்துகிறார்கள். மானுக்கோட்டைத் தாலுகாவைச் சேர்ந்த வாரங்கால் ஜில்லாவின் தென்மேல் கோடியில் இருக்கும் முலக் தாலுகாவில் சுவிசேஷ வேலை ஆரம்பிக்கவேண்டுமென்று இக்கமிற்றிமார் தீர்மானித்திருக்கிறார்கள். அங்கே போய் சுவிசேஷ வேலை செய்வோமென்று மூவர் மனுச்செய்திருக்கிறார்கள். இவர்களைப் பரீட்சை செய்யும்படி ஐந்துபேருள்ள ஒரு சப்கமிற்றி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அக்கமிற்றிமார் பரீட்சித்து ஒப்புக்கொள்ளுகிறவர்கள் மூலக் தாலுகாவில் சுவிசேஷ வேலை செய்யும்படி அனுப்பப்படுவார்கள். இவ்வருஷம் அக்டோபர் மாதத்தில் நடத்தப்படும் வேனிர்க்காலப் பள்ளிக்கூடத்தின் கடைசி தினத்தில் அவர்களுக்கு ஒரு விசேஷ பயணுபசாரக் கூட்டம் வைக்கப்படும். அதற்கு முன்னதாகவே இவ்விடத்திலிருந்து ஒரு கூட்டத்தார்போய், மூலக் தாலுகாவைச் சுற்றிப்பார்த்து, சில தினங்கள் அங்கு சுவிசேஷ வேலையும் செய்து, எந்தெந்த இடங்களில் எம்முறையாய் வேலை ஆரம்பிக்கிறதென்பதைப்பற்றி கமிற்றிமாருக்கு விபரமாய் ஓர் ரிப்போர்ட்டு செய்யவேண்டுமென்றும், இப்பரிசோதனைக்கு நேரும் செலவு மிஷனெரி சங்கத்து பண்டிலிருந்தல்லாமல் விசேஷ முயற்சியாய்ச் சேகரிக்கப்படும் தொகைகளைக்கொண்டு செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ் வேற்பாட்டுக்கிசைய, பெருமுயற்சி நடக்கிறது. கம்மாமெட்டு சர்ச்சுமிஷன் சபைகள் சம்பந்தமாக 10 பேரும் நம்முடைய மிஷனிலிருந்து சிலரும் போவார்கள்.

மேலும் முலக் தாலுகாவிற்போலவே இவ்விடங்களிலும் விசேஷ சுவிசேஷ பிரசங்கக்கூட்டங்கள் நடத்தப்படுவதற்கு வழி வகைகள் மிஷனெரி சங்கத்தாரின் நிதியின் உதவியின்றியே செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விரண்டு விசேஷ ஊழியங்களுக்கும் உகவி செய்யத்தக்க வழிகளே மூன்று பிரிவாகக் காட்டலாம்.

1. தங்கள் சொந்தச் செலவுசெய்து கொண்டு, கொஞ்சக்காலமாவது சுவிசேஷ வேலை செய்கிறவர்கள். (யார் யார், எங்கெங்கே—முலக் தாலுகாவிலா மற்ற தாலுகாக்களிலா—எவ்வளவு காலம் சுவிசேஷ வேலை செய்யக்கூடும்?)

2. இவ்விசேஷ வேலை செய்யப்போக மனமிருக்கிறது; ஆனால் பணம் இல்லையே என்பவர்கள். (பணம் கிடைத்தால், யார் யார் எவ்வளவு காலம் போகக்கூடும்?)

3. நாங்கள் போக எங்களுக்கு மனமே; என்றாலும்போகக்கூடியதாயில்லை; ஆதலால் எங்களுடைய ஸ்தானத்தில் எங்களுக்குப் பதிலாக யாரையும் அனுப்பினால், அவர்கள் செலவுக்குப்பணம் கொடுப்போம் என்பவர்கள். இப்படி அனுப்பப்படுகிறவர்களுக்கு தினம் சராசரி மூன்று அணா செலவாகும். இவ்வீதாசாரப்படி பார்த்தால், காலணா அல்லது கால்படி தானியம் கொடுக்கிறவர் ஒவ்வொருவரும் தன் ஸ்தானத்தில் தனக்குப் பதிலாக மற்றொருவர் ஒருமணி நேரம் சுவிசேஷ வேலை செய்ய வழி செய்வதாகும். இவ்வாறாக, யார் யார், எத்தனை மணி நேரம், அல்லது எத்தனை தினம் ஊழியத்திற்காகப் பொருளுதவி செய்வார்கள்? தொகை, அல்லது பொருள் எவ்வளவு?

ஒருவேளை இம்மூன்று வகையிலும் சகாயம்செய்யவகையற்றவர்கள் இருப்பார்களோ? அப்படிப்பட்டவர்களிருந்தாலும், அவர்களுங்கூட இவ்விசேஷ முயற்சிக்கு உதவிசெய்யாதிருக்கக் காரணமில்லை. ஒருவர் தப்பாமல் யாவரும் செய்யத்தக்க ஒரு சிறந்த உதவியுமுண்டு. கர்த்தர் ஆசீர்வதிக்கத்தக்கதாக ஜனங்களே அவர்முன் ஏறெடித்துப் படைத்தலே அவ்வுதவி. ஊக்கமான விசுவாசத்தோடும் ஆவலோடும் நாம் ஜெபத்தில் ஏறெடித்துப் படைக்கிறவர்களைத்தான் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார் என்பது சத்தியமல்லவா? இச்சத்தியத்தை மனதிற் பற்றிப்பிடித்தவர்களாக, முலக் தாலுகாவிலும் இவ்விடங்களிலும் மேய்ச்

தில் விசேஷ சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்களையும், செய்யப்படும் ஊழியத்தையும், ஊழியம் செய்யப்படும் ஸ்தலங்களிலுள்ள ஜனங்களையும் குவித்த உங்கள் கைகளால் கர்த்தருக்கு உயர்த்திக் காட்டுகிறவர்களாயிருக்கும்படி உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அமலேக்கியரின்மேல் அடைந்த ஆச்சரிய ஜெயத்துக்கு முக்கிய காரணம்: யுத்தத்தை நடத்திய யோசுவாவா? கைகளை உயர்த்திநின்ற மோசேயா? கரத்தைத் தாங்கிய ஆரோனும் ஊருமா? நமக்குத் தெரிந்ததுதானே. முக்கியகாரணரைப்போல கைகளை உயர்த்தி நிற்போமாக. மூல காரணம் முக்கியமே. என்றாலும் உபகரணங்களும் வேண்டியவைகள்தானே. உபகரணங்களும் போதுமானமட்டும் கைகூட ஜெபியுங்கள்.

உங்கள் சகோதரன்,

S. பாக்கியநாதன்.

செலவுக்கான கையிருப்புநிதி.

மாசாமாசச் செலவுக்குப் பர்த்தியாக ரூ. 6000 சேரிக்கவேண்டுமென்று நமது சங்கக் கமிற்றிமார் கடந்த ஜூலைமீ தீர்மானஞ்செய்தார்கள். நாளது மேமீ 1உவரை வரவு ரூ. 4274—8—5. கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. இத்தொகையைச் சர்க்கிள் சர்க்கிளாக இங்ஙனம் காட்டுவோம்.

		ரூ.	அ.	பை.
பாளையங்கோட்டை	...	712	15	10
ஆள்வானேரி	...	70	4	0
செவ்வல்	...	281	8	4
டோனாவூர்	...	66	4	0
பண்ணிகுளம்	...	12	10	0
பண்ணைவிளை	...	329	13	9
மெஞ்ஞானபுரம்	...	216	10	2
நாலுமாவடி	...	...	...	...
சாத்தன்குளம்	...	29	8	0
சுவிசேஷபுரம்	...	6	6	0
நல்லூர்	...	209	8	0
சுரண்டை	...	140	15	0
சாக்கியாபுரம்	...	102	0	0
வாகைக்குளம்	...	99	0	0
நாசரேத்	...	73	13	6
சாயர்புரம்	...	56	0	0
தூத்துக்குடி	...	5	0	0
ராதாபுரம்	...	2	0	0
மதுரை	...	57	4	0
ராமநாதபுரம்	...	55	4	0
	ரூ.	2573	12	1

இன்னும் வேண்டிய தொகை சுமார் ரூ. 1800. பல சர்க்கிள்களும் சேகரங்களும் தங்கள் திராணிக்குத் தக்கதாக இதுவரை கைகொடுக்கவில்லை. வருஷாந்தரக்கூட்டத்துக்கு முன் (ஜூலைமீ 13உ) இத்தொகை கிட்டும்படி நண்பர் உழைக்கவும் ஜெபிக்கவும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம். உடனே கொடுக்கிறவன் இரு மடங்கு கொடுக்கிறான் என்பது ஓர் ஆங்கிலேய சுலோகம்.

செஞ்சிலுவைக் கூட்டத்தார்.—செஞ்சிலுவைக் கூட்டமென்னும் ரெட்கிராஸ் சங்கத்தாரில் பெரும்பான்மையோர் ஸ்திரீகளே. இவர்கள் தம்முயிரையும் பெரிதென்று பாராமல், போர்க்களத்திற் சென்று, அவயவங்கள் முறிந்தும் தேகம் கிழிவுண்டும், மயங்கி விழுந்துகிடக்கும் போர்வீரரை கட்டில்களிலிட்டுத் தூக்கி, ஒதுக்கிடங்களுக்குக் கொண்டுபோய், தங்களாலியன்ற முதற் பரிகாரங்களைச் செய்து, மனக்கிலேசம், இனஜன பந்துக்கள் நினைவு முதலியவற்றால் பேதலித்து அழன்று உழன்று பரிதபிப்போருக்கு அன்பான வார்த்தைகளினாலும், சுயநயமற்ற மகா பிரயத்தனத்தினாலும், தைரியமுண்டாக்கி, அவர்களை ரணவைத்தியசாலைகளுக்குக் கொண்டுபோய் சிகிச்சைகளும் செய்து, அவர்களுக்கு மிகவும் அருமையான பந்துக்களைவிட அதிகக் கரிசனையோடு அரவணைக்கிறார்கள். எவரும் பிரமிக்கக்கூடிய தன்னயமற்ற இம்மாது சிரோமணிகளின் அன்பான அரவணைப்பைப்பற்றி மரணத்தருவாயிலுங்கூட மிகவும் வியந்து கூறிய போர்வீரரின் நற்சாட்சிகளை சகல புதினப் பத்திரிகைகளிலும் ஏராளமாய்க் காணலாம்.

மனுஷ மீன்பிடிகாரர்

'என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' (மாற். 1: 17).

கர்த்தராகிய இயேசு மீன்பிடிகாரனான சீமோனைக்கண்டு, 'என் பின்னே வா' என்றார். அவன் உடனே அவருக்குப் பின்சென்றதினால், கோழைத்தனமுள்ள சீமோனை (சீமோன்—கோழைத்தனமுள்ளவன், நிலையற்றவன்) கெட்டியும் உறுதியுமாய் இருக்கத்தக்க கற்பாறையாக்கிவிட்டார் (பேதுரு—கற்பாறை). எரிச்சலும் கோபகுணமுமுள்ளவர்களான யாக்கோபு, யோவான் (இடிமுழக்கத்தின் மக்கள்) ஆகிய இரு சகோதரர் அன்புள்ள இரட்சகரைப் பின்சென்று, பேரன்பரின் நெருங்கிய சகவாசத்தால் அன்புள்ள அப்போஸ்தலராக மாறிவிட்டார்கள், தேவனுடைய சபையைப் பாழாக்கி, கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தின சவுலை, கிறிஸ்துவுக்காக வைராக்கியங்கொண்டு, சபைகளை ஸ்தாபித்து, அவைகள் மீதுற்ற அன்பினால் அநேக நல்ல நிருபங்களை எழுதும் பவுல் ஆக்கிவிட்டார். கர்த்தராகிய இயேசுவின் தரிசனையும் அன்புள்ள தொடுதலும் செய்த மகத்துவங்கள் இவை அல்லவா?

இன்னும் மிஷனெரி சரித்திரங்களிலிருந்து சில திருஷ்டாந்தரங்களைக் கவனிப்போம். இங்கிலாந்தில் ஏழை நெசவுகாரனாயிருந்த வாலிபன் ஒருவன் தன்னை மிஷனெரி ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தபோது, பலர் அவரை மிஷனெரி ஊழியத்திற்கு தெரிந்துகொள்ள முதலில் ஆக்ஷேபித்தார்கள். பின்பு, கல்வியில் குறைந்தவராயிருப்பதினால் இவரை ஆப்பிரிக்காவிலுள்ள காப்பிரிகள் மத்தியில் ஊழியஞ்செய்ய அனுப்பினார்கள். அவர் அங்கு போய், சுமார் 30000 மைல் அங்கும் இங்கும் கால்நடையாகவே நடந்து திரிந்து தேசத்தின் கஷ்டத்தையும் காங்கையையும் எண்ணாமல், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அநேக காப்பிரிகளை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம்பண்ணி, கடைசியில் முழங்காலில் நின்று ஜெபிக்கும்போதே அத்தேசத்தில் மரித்துப்போனார். இவர்தான் பேர் போன டேவிட் லிவிங்க்ஸ்ற்றன்! அமெரிக்காவில் விறகுவெட்டியாயிருந்த ஆபிரகாம் லின்கன் என்பவர் கர்த்தராகிய இயேசுவைப் பின் சென்றதால், மிகக்கொடியதான அடிமை வியாபாரத்தை நீக்கிப்போடத்தக்க வல்ல கருவியாயிருந்தாரே. இங்கிலாந்தில் செருப்புத்தைத்து ஜீவியம் பண்ணிவந்த சக்கிலியன் உல்லியம் கேரி. இந்தியாவுக்கு மிஷனெரியாக வந்து, அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம்பண்ணி, நல்ல ஸ்திரமானகலாசாலைகளையும் ஏற்படுத்தி, அச்சு யந்திரசாலையும் ஸ்தாபித்து, அநேக பாஷைகளில் வேதாகமத்திலுள்ள சில பாகங்களை மொழிபெயர்த்து பிரசுரிக்கக்கூடியவராயிருந்தார். இதற்கு இரகசியம் என்ன? கர்த்தராகிய இயேசுவின் வல்லகரம் அவ்வாலிபனைத் தொட்டதினாலல்லவா? தகரக் கடைக்காரனாயிருந்த ஜான் பனியன் என்பவர் மிகப் பிரயோஜனமான 'மோட்ச பிரயாணம்' என்ற புஸ்தகத்தை எழுதக்கூடிய வல்லமையை கிறிஸ்துவைப் பின்சென்றதினால் பெற்றாரே. 'எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் அவருடைய கரத்தினாலே ஆகும்' (1 நாளா. 29: 12).

கிறிஸ்தவனே, நீ உன் ஒன்றுமில்லாமையை உணருகிறாயா? உன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர். உன்னையும் பரிசுத்தப்படுத்தி, வல்லமையுள்ள கருவியாக உபயோகிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய திருச்சித்தத்துக்கு உன்னை ஒப்புவி. நீயும் பிரயோஜனமும் மனுஷரைப் பிடிக்கிறவனுமாவாய். உன் பெலவீனத்தில் அவருடைய பெலன் வெளிப்படும்.

சுவிசேஷபடைமுயற்சி.

ஸ்திரீ ஜனங்களுக்குள் ஸ்திரீகளால் சுவி. சேஷ வேலை.

ஒவ்வொரு தேசத்திலும் இயேசுவுக்காக சாக்ஷி கொடுக்கும் வேலை அவருடைய நாமத்தைத்தரித்து, அவருடைய ரக்ஷிப்பை ஏற்றுக்கொண்டவர்களையே பொறுத்தது. நமது பிரமாண்டமான தேசம் அருள்நாதரின் பாதம் கொண்டுவரப்படவேண்டுமானால், இந்திய கிறிஸ்தவரான ஒவ்வொருவரும் தத்தம் கடமையை நன்குணர்ந்து, சுவிசேஷப் பிரபல்ய வேலைக்குத் தங்களைப் பிரதிஷ்டை

செய்து, எப்போதும் அவ்வழியத்தை உற் சாகமாய் உடப்பிக்கிறதினாலேயே மாத்திரம் ஆகும். புருஷர் மாத்திரமல்ல, ஸ்திரீகளும், மிஷனில் சம்பளம் பெற்று சுவிசேஷ வேலை பார்க்கிறவர்கள் மட்டுமல்ல, சபையிலுள்ள தாய்மார், சகோதரிகள் யாவரும் ஏகமாய் இவ் வேலை செய்வதாயிருந்தால், நாம் கொஞ்சப் பேராயிருந்தாலும் பெரிய காரியங்களைச் செய்து விடலாம். எதனாலில் சர்வவல்லமை யுள்ள தேவன் நமது பக்கத்தில் இருக்கிறார். அவர் நமது சேனையின் அதிபதியாக நமக்கு முன் செல்லுகிறார். இயேசு பெருமான் பேரில் உண்மையான அன்பும், அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து அவர் காட்டும் பாதையில் செல்லும் மனசும், அழிந்துபோ கும் ஆத்மாக்கள் மீதுற்றதாகமும்தான் வேண் டியது. உள்ளான அன்புக்கு முன் எவ்வித கஷ்டமும் பறந்தோடி விடுமென்பது திண் ணமே.

இம்முயற்சி நமது அத்தியக்ஷாதீனத்தில் அநுகூலமாய் நடந்தேறும் பொருட்டு, ஸ்திரீ களமைந்த ஒரு உபகழகம் சி. எம். எஸ் கவுண் சல் சம்பந்தமாய் ஏற்பாடாகியிருக்கிறது. கனம். பிரால்ஸ் அம்மாளவர்கள் காரியதரிசி. இக்கூட்டத்தார் பின்கண்ட ஆலோசனைகளை சபைகளுக்கு அனுப்புகிறார்கள்

1. தங்கள் கிராமத்திலாவது, அடுத்து ள்ள கிராமத்திலாவது உள்ள இந்து ஸ்திரீ களைக் கண்டு பேசி, கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்குச் சொல்லும்படியாக விசேஷ முயற்சி ஒவ்வொரு சபையிலும் ஏற்பாடாக வேண்டும். குருவானவரின் மனைவியாவது, உபதேசியார் மனைவியாவது, உபாத்திச்சியா வது, அல்லது சபையாரில் திறமையுள்ள ஓர் ஸ்திரீயாவது தலையாக இருந்து, மற்றக் கிறிஸ்தவ ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் சேர்த்து, சுவிசேஷ வேலை நடத்தவேண்டும்.

2. கிறிஸ்தவ ஸ்திரீகள் இந்துக்களோடு பொதுவாக பழக்கமில்லாதவர்களாயிருப்பதால், இந்து ஸ்திரீகளுடைய மனப்போக்கை அறிவதும் அவர்களோடு சகவாசம் பண்ணிக் கொள்வதும் இயற்கையாக சற்று கஷ்டம். அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ சத்தியங்களை அவர்களுக்கு விளங்கக்கூடிய விதமாயும் இன் பமாகவும் புகட்டுவதும் அரிது. ஆகவே, வேதாகம ஸ்திரீகளிருக்கும் கிராமங்களில், கிறிஸ்தவ ஸ்திரீகள் அவர்களோடுவாராவாரம் சுவிசேஷ வேலைக்குப்போய், தங்கள் அநுபவ சாட்சியைச் சொல்வதும் பாட்டுகள் படிப்ப தும் வேதாகம ஸ்திரீகளுக்கும் அவர்களிடத் தில் மார்க்க ஆராய்ச்சிசெய்து வரும் ஸ்திரீ களுக்கும் உற்சாகங் கொடுப்பதுமன்றி, சுவி சேஷ வேலையில் கிறிஸ்தவ ஸ்திரீகளே அது பவமடைவதற்கு வழியுமாகும்.

3. கூடுமானால், வேத ஆராய்ச்சி வகுப் புகள் சபைகளில் ஆரம்பமாக வேண்டும். சுவி சேஷ சரித்திரங்கள், ரக்ஷகருடைய அற்புதங் கள் உவமைகளை ஜனங்களுக்குப் பிரியமுண் டாக்கும் விதமாகச் சொல்வதற்கும் கிறிஸ் தவ தாய்மார் சகோதரிகள் பயிற்றுவிக்கப் படவேண்டும். மாற்கு சுவிசேஷத்தின் பேரி ல் ஆராய்ச்சிக் குறிப்புப்பாடங்கள் ஒரு அஞ் கிரயத்திற்கு பாளையங்கோட்டை, சி. எம். எஸ். அச்சுக்கூடத்திலிருந்து பெற்றுக்கொள் ளலாம். இப்புஸ்தகத்தையாவது, அப்போஸ் தலர் நடபடி ஆகமப்பாடங்களையாவது வேத ஆராய்ச்சி வகுப்புகளில் உபயோகிக்கலாம்.

கலிவரும், கிறிஸ்தவப் பெண்களில் அநே கர் வாசிப்புத் தெரியாதிருப்பது விசனகரமா ன காரியமே. வேதாகமத்தை வாசிக்க முடி யாதென்றால், தேவ சித்தத்தை அவர்கள் எப் படி அறிவார்கள்? வேத அறிவில்லாமல், கர்த் தராகிய இயேசுவை எப்படி அறிந்து நேசிக் கக்கூடும்? அவரை அறியாவிட்டால், எப்படி அவருக்காக சாட்சிகூறக்கூடும்? கிறிஸ்தவ ஸ்திரீகள் அறிவீனரும், நிர்விசாரிகளும், உல கத்தாரும், பாவம் நிறைந்தவர்களுமாயிருப் பதை இந்து ஸ்திரீகள் பார்த்தால், அவர்கள் கிறிஸ்தவர்களாக விரும்புவார்களா? ஒருபோ தும் அல்லவே. ஆகவே, கிறிஸ்தவ ஸ்திரீக ளைப் படிப்பிப்பது நமது முதல் கடமையல்ல வா? ஆதலால் நன்றாய் வாசிப்புத்தெரிந்த ஒவ் வொரு ஸ்திரீயும் வாசிப்புத்தெரியாத ஒருத்தி க்காவது வாசிப்பு கற்றுக்கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். கிறிஸ்துவின் நிறந்த மாதிரியை முன்வைத்து, ஒவ்வொருவரும் ஜீவிப்பதும் இன்றியமையா அவசியம். ஆகவே, வாசிப் புப்பாடம் கற்றுக்கொடுக்கும்போதே வேத சரித்திரங்களைச் சொல்லி, இயேசுவைப்பற்றி சம்பாஷிக்கும் சமயங்களாக அவைகளை உப யோகிக்கவேண்டும்.

அன்றியும், ஒருவர் மற்றவருக்காக ஜெபிப் பதிலும் விடாமுயற்சி யுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமது மன்றாட்டுக்கு திட்டமான மாறுத்தரம் கிடைக்கும்வரை விசுவாசத்து டன் பிரார்த்தித்து வரவேண்டும்.

4. இக்குப் பின் ளைகள் படிக்கவரும் பாடசாலைகளிலுள்ள உபாத்திச்சிமார் அப் பிள்ளைகளின் தாய்மாரைக்கண்டு பேசவேண் டும். சந்தோஷமாய் தங்கள் வீடுகளில் ஏற் றுக்கொள்ளுவார்கள்.

5. சுவிசேஷ ஊழியஞ் செய்வதற்கு ஏற்ற ஆயத்தம்: இந்துக்களோடு நிநேச சம்பந் தம் உண்டாக்கிக்கொள்வதே. இதற்கு உசித மான வழிவகை யாதென்றால், எவ்விதமான பெருமையையும் மேன்மையையும் காட்டா மல், மிகுந்த பாசத்துடனும் தாழ்மையுடனும் இந்துஸ்திரீகளோடு உறவாடிக்கொள்ளுவதே.

6. நமது போர்டிங் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் பெண்கள் ராஜா காலத்தில் இப்படைமுயற்சியில் உதவிசெய்ய மிகவும் தாபந்த முள்ளவர்களாயிருக்கிறார்கள். பாடு வதிலும், சிறு பெண்களுக்கும் பிள்ளைகளுக் கும் வாசிப்பு தையல் கற்றுக்கொடுப்பதிலும் பாடம் சொல்லிக்கொடுப்பதிலும், வியாதிஸ் தருக்கு உதவிசெய்வதிலும் அவர்களுடைய ஒத்தாசையை அந்தந்த கிராமங்களிலுள்ள தலைவிகள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், போர்டிங் பள்ளிக்கூட உபாத் திச்சிமார் வேத ஆராய்ச்சிக் கூட்டங்கள் ஆரம் பிப்பதற்கும், தலைவிகளை பயிற்றுவிப்பதிலும் மெத்த உதவி புரியக்கூடும்.

7. பாளையங்கோட்டை தயாஸ்தலம், பார்க்கர் மிசி அம்மாளவர்களும், சாகூயா புரம், மீச்சல் மிசி அம்மாளவர்களும் தங்கள் சுற்றுப்பிரயாணங்களில் சபையிலுள்ள ஸ்திரீ களைச் சேர்த்து, சுவிசேஷ பிரபல்ய முயற்சி சம்பந்தமான ஒழுங்குகள் செய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். குருமாரின்மனைவிகள் முதலிய சபையிலுள்ள முக்கியஸ்தரான ஸ்திரீகள் அவர்களுடைய ஒத்தாசையைத் தேடிக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

ஓர் மகமதிய கிறிஸ்தவனின் ஜீவியம்.

பெர்சியா தேசத்தில் கிறிஸ்தவர்களாகிற வர்களுக்கு எக்காலத்திலும் கொடிய கஷ்டங் களும் ஆபத்துகளுமுண்டு. யுத்தம் நடந்து வருகிற இக்காலத்திலோ இடுக்கண்கள் கொஞ்சநஞ்சமல்லவாம். என்றாலும் பலர் தங்களுடைய ஜீவியத்தினாலும் பிரசங்கங் களினாலும் ரக்ஷாபெருமானுக்கு உத்தம ஊழி யம் மிகுந்த தைரியத்துடன் செய்துவருகி றார்களென்பது மிஷனெரிமார் சாட்சியம். ஓர் திருஷ்டாந்தம் இங்ஙனம் வாசிப்போம்:

எஸ்ட் பட்டணத்தில் ஓர் மகமதியன் பாரவீக பாஷையில் நடந்த ஆராதனைக்கு ஆரம்பத்தில் வந்துகொண்டிருந்தான். பின் னர் மார்க்க ஆராய்ச்சிக்காரனாகி, கிறிஸ்து வை ஏற்றுக்கொண்டு, ஞானதீக்ஷையினால் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டான். அப்பால் திடப்படுத்தலும் பெற்றான். கிறிஸ் தவனானதினிமித்தம் அவனுடைய மாமனார் மிகவும் துன்பப்படுத்திவந்தார். கிறிஸ்தவனை மாமனார் செய்யும் சகல நிஷ்டூரங்களுக்கும் துன்பங்களுக்கும் கைமாறாக நன்மையே செய்து எப்போதும் மாமனுக்குப் பட்சமும் அன்பும் பாராட்டினான். கிறைச்சாலையில் மாமன் அடைபட நேரிட்டபோது, அவனை அடிக்கடிபோய்ப் பார்த்துவருவது வழக்கம். ஆகவே, ஓர் அளவு விரோதம் தணிந்தது. ஏழுமாதம் ஐந்து வருஷங்களுக்குப்பின் அவன் மேஷ்டு என்ற இடத்துக்குப் போய், தச்சு வேலையாகிய தன் தொழிலை நடத்தி, ஜீவ னோபாயம் செய்துவந்தான். அப்பால் சுவி சேஷ பிரசங்கியாக மிஷனில் ஊழியம் செய் தான். அதற்குமுன்னும் கிறிஸ்துவுக்காக சாட்சிகருவதில் அதிக ஜாக்கிரதையுள்ள வனாயிருந்தான். ஒய்வுநாட்களில் புறமதஸ் தானாலயத்துக்கு அழைத்துக்கொண்டுவரு வான். வாரத்தில் தினங்களில் ஜனங்களுடன் தனிச் சம்பாஷணைசெய்து, மிஷனெரியும் அவர்களோடு பேசும்படி அழைத்துக்கொண் டுவருவது வழக்கம். வேதாகமங்களையும் வேத பங்குகளையும் விற்று, பட்டணக்காயிலும் பட்டிதொட்டிகளிலும் பிரசங்கித்து, இயேசு தன்னில் செய்திருக்கும் ரக்ஷண்ய கிரியை யைப்பற்றி தெளிவாயும் திட்டமாயும் சாட்சி

பகருவான். சுவிசேஷத்தைப் பிரசங்கித்த நிமித்தம் இருகடவை அடிகளைச் சகிக்க வேண்டியதிருந்தது. ஒருமுறை அவனுக்குண்டான யாவற்றையும் திருடிக்கொண்டு போனதுமன்றி, நிஷ்டூரங்கள் செய்து மரித்துப்போனானென்றெண்ணி, கள்ளர் அவனை விட்டுப் போனார்கள். மார்க்க விரோதிகள் அவனைக் கொன்றுபோடுவதாகப் பயங்காட்டி பலமுறை எச்சரித்ததுண்டு. இவைகளினால் திஞ்சித்தாயினும் மனச்சோர்வு அடையாமல், கிறிஸ்துமார்க்கப் பிரபல்யத்திற்காக ஊக்கத்துடன் உழைத்துவந்தான். வேதாகமத்தை நன்றாய் வாசித்துவந்தான். தன்னுடைய வேலையில் எப்போதும் உண்மையும் உத்தமமாய் விளங்கினதுமன்றி, ஜனங்களோடு பட்சமும் சாந்தமுமாய்ப் பேசி, அவர்களை ஆதாயப்படுத்திவந்தானென்பது அவனைப்பற்றிய சாட்சி. கடந்த ஜூன்மீ 11உ விஷஜ்ஜுரத்தினால் மரணமடைந்தான். மரித்த தினத்தன்று காலையில் தன் குடும்பத்தாரை தன்னிடம் அழைத்து, தான் பிரியவேண்டிய காலம் வந்துவிட்டதென்றுசொல்லி, ஒவ்வொருவராக யாவரையும் இயேசுவின் பாதுகாப்புக்கு ஒப்புவித்து, சமாதானமாய் தன் ஏஜமான் சமுகம் அடைந்தான். இந்த எழை மகமதிய கிறிஸ்தவன் நமக்கு என்ன திறந்தமாதிரி!

உகண்டாதேசம்.

1. அதின் முன்னிலைமை.

கிறிஸ்துமார்க்கத்தை உகண்டாதேசத்தவர் ஏற்றுக்கொள்ளுமுன் அத்தேசம் எப்பேர்ப்பட்ட நிலைமையிலிருந்ததென்பதைப் பார்ப்போம்.

நீல நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய விக்டோரியா, அல்பர்ட் எரிகளின் அருகாண்மையில் உகண்டர் இருக்கிறது. அது நிலவளமும் நீர்வளமும் பொருந்திய ஓர் அழகான தேசம். சுகத்துக்கு மிகப்பொருந்தினது. ஜனங்கள் சற்று நாகரீகமுடையவர்கள், பெலசாலிகள். புருஷர் புத்திதீர்க்கமும், கைவேலை தேர்ச்சியுமுள்ளோர். ஸ்திரீகளே திருவுத்தொழில் செய்வார்கள். ஜனங்கள் பொதுவாக சுத்தமான வஸ்திரம் தரித்திருப்பார்கள். அவர்கள் பகாண்டா ஜாதியார் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய குடிசைகள் வைக்கோலினாலாவது புல்லினாலாவது மூலை சார்புகளில் கட்டப்பட்டிருக்கும். முன் வாசல் மூலைகளுக்கு நேராக இருக்கும். மழை காலத்தில் மூலையிலிருந்து பாயும் ஜலம் குடிசைகளை அழித்துவிடாதபடி, ஒரு களிமண் சுவர் எவ்வொரு குடிசையின் முன்பக்கத்திலும் முண்டு. வாழைப்பழமும் இறைச்சியும் இவர்களுடைய முக்கிய ஆகாரம். கை கழுவாமல் சாப்பிடவேமாட்டார்கள். வாழையிலையினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஓர் பந்தலுக்குள்ளிருந்து சாப்பிடுவார்கள்.

இந்த ஜாதியாரில் பெரும்பான்மையோர் காப்பிரிகள் வம்சத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் காப்பிரிகளுக்கும் இவர்களுக்கும் பழக்க வழக்கங்களிலும், பாஷையிலும் அதிக வித்தியாசமுண்டு. பகாண்டா ஜாதியாரில் பல வகுப்பாருண்டு. ஒவ்வொரு வகுப்பாரும் ஒவ்வொரு மிருகத்தின் பெயரால் அழைக்கப்படுகிறார்கள். அம்மிருகத்தின் இறைச்சியை அந்தக் குலத்தவர் சாப்பிடமாட்டார்கள். பயிரிடுகிறவர்கள் எல்லாரிலும் தாழ்ந்த வகுப்பாராக எண்ணப்படுகிறார்கள்.

இந்த ஜாதியாரின் ராஜாங்கத்தைப்பற்றி சில வார்த்தைகள் உரைப்போம். ஆங்கிலேய கிறிஸ்தவர்கள் அங்கு போகுமுன் ராஜாவின் இஷ்டந்தான் சட்டம். அத்தேசம் முழுவதுக்கும் ஒரே அதிகாரி அரசனே. ராஜாங்கத்தில் பல சட்டங்களுள. ராஜாவின் மூத்த குமாரன் பட்டத்துக்கு வரலாகாது என்பது ஒன்று. அவனுடைய மற்ற ஆண்பிள்ளைகளில் யாரையாவது தேசத்தின் முக்கியஸ்தர் அரசனுக்குத் தெரிந்துகொள்ளவேண்டும். பட்டத்திற்கு வராத மற்ற ஆண்மக்களைக் கொன்றுபோடுவார்கள். ராஜாவுக்கு சக்கரவர்த்தியென்று அர்த்தங்கொள்ளும் ஒரு பட்டப் பெயரும் வழங்கும். அதே பட்டம் ராஜகுடும்பத்திலுள்ள இரண்டு பெண்களுக்கும் கூட்டப்படும். ராஜாவுக்குக்கீழ் மந்திரியும் மற்றும் அநேக உத்தியோகஸ்தருமுண்டு.

வெளித்தோற்றப்படி இத்தேசத்தில் பல விஷயங்களிலும் தேர்ச்சி காணப்பட்டது. ஆனால் உற்றுராய்ந்தால், ஜனங்களுக்கு

இருந்தநிஷ்டூரமும் துன்பமும் கொஞ்சமல்ல. "ஏட்டுக்கு சுரைக்காய் கறிக்கு உதவுமா" என்றபடி, நல்ல சட்டங்களிருந்தும் அவைகளை உபயோகியாவிட்டால் பயன் என்ன? நல்ல பாதைகள் கிடையாது. ஜனங்களுடைய பொருளுக்கும் உயிருக்கும் எவ்விஷயத்திலும் பாதுகாப்பு இல்லை. நீதி நியாயம் என்ற பேச்சு பேசப்படாது. "பெரிய மீனுக்கு சின்ன மீன் இரை" என்றபடி எழைகள், பெலவீனர் முதலியோரைப் பலமுள்ளோர் தங்கள் இஷ்டப்படி இம்சைப்படுத்தி, இடுக்கண் செய்துவந்தார்கள். மனுஷனைக் கொலை செய்வது ஜனங்களுக்கு அதிகப் பீரீதி. ஒவ்வொரு மனுஷனுடைய சொத்தும் உயிரும் எப்போதும் மோசத்திலேயே இருந்தது. கள்ளர் தொந்தரவு ஜாஸ்தி. ரஸ்தா மார்க்கமாய்த் தனிமையாகப் பிரயாணம்செய்யும் வழிப்போக்கரைப் பிடித்து, சாமானைப் பிடுங்கிக்கொண்டு, உயிர்மோசம் செய்வது சகஜம். எழைகளுக்கு இப்பேர்ப்பட்ட துன்பம், கஷ்டம் நேரிடுங்கால், ராஜாங்கத்தில் விசாரணையே கிடையாது. ஜனங்கள் ஒருவரையொருவர்ஒடுக்குகிறதைப்பார்க்கிலும், ராஜாங்கக் கட்டளைகள் அதிகக் குரூரமாயும் பயங்கரமாயுமிருந்தன. எனென்றால் சில ராஜாக்களுக்குப் பிரஜைகளைச் சர்வசங்காரம் செய்வதே அதிகப் பிரியம். அதுவுமன்றி, ராஜாக்களுக்கும் ஜனங்களுக்கும் நரபலியின்மேல் அதிக விசுவாசமுண்டு.

கூ என்பவன் அரசனாயிருந்தபோது, தன் மந்திரியை அனுப்பி, ஜனங்களைச் சர்வசங்காரம்செய்யும்படி தீடீரென ஓர் கட்டளை பிறப்பித்தான். அப்படியே திரள் ஜனங்கள் காரணமின்றி கொல்லப்பட்டார்கள்.

இந்தக் குரூரமான ராஜா மரித்தபின் அவனுக்குக் கல்லறை கட்டும்போது, நரபலி அவனுக்கு அதிகப் பிரியமென்றெண்ணி, அப்பட்டணத்துக்கு வந்த எல்லா சமூசாரிகளையும் எழைகளையும் சேவகர் பிடித்து, அவர்கள் சாமான்களை அபகரித்துக்கொண்டு, குற்றமற்ற அந்த ஜனங்களை யாதொரு நிமித்தமில்லாமல் குரூரவதை செய்து, அவனுக்குக் காணிக்கையாகக் கொலைசெய்தார்கள். சுமார் 2000 பேர் மாண்டார்கள். இன்னொருதடவை இந்த அரசனின் மகன் வியாதியினால் பீடிக்கப்பட்டிருப்பதை ஜனங்கள் கண்டு, இவ்வியாதி நரபலியினால் தீர்ந்துவிடுமென்றெண்ணி, ஓர் பெரிய சங்காரம் செய்தார்களாம். பட்சி, மிருகங்களை நாம் வேட்டையாடுவதுபோல, அத்தேசத்தில் மனுஷரை வேட்டையாடுவது சகஜம்.

குற்றவாளிகளைக்குரூரவதை செய்வதில் இந்த ராஜாங்கத்தார் பேர்போனவர்கள். எதுதப்பென்று ராஜா நினைப்பானோ அதற்கெல்லாம் உடனே 'உயிர் வாங்குதல்'தான் தண்டனை. குற்றங்கள் செய்யுங்கால், குற்றவாளிகளின் அவயவங்களில் எதையாவது ஒன்றைத் தரித்துவிடுவார்கள். சண்டைபோடுகிறவர்களைப் பிடித்து, தாங்கள் செய்த தப்பிதத்திற்கு ஈடாக எதாவது கொடுக்குமட்டும், குட்டைகளில் அடித்துவைப்பார்கள். எல்லாக் குற்றங்களுக்கும் சட்டங்களிருக்கின்றபோதிலும், மிச்சமான கொலைபாதகங்கள் தண்டியாமலே விடப்படுவதுண்டு. ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம். பெரிய உத்தியோகஸ்தனின் மகனொருவன் தனக்குத் தகப்பனின் பட்டம் வேண்டுமென்கிற வீருப்பமிருப்பதாக ராஜாவினிடம் சொன்னமாத்திரத்தில், அரசன் "உன் தந்தையைக் கொன்றுவிட்டு, பட்டத்தை யெடுத்துக்கொள்" என்று சொன்னான். உடனே அச்சிறுவன் தன் தந்தையைக் கொன்றுவிட்டு அடுத்த நாள் பட்டத்துக்கு வந்தானும். அவன் செய்தது தப்பென்று கண்டிப்பார் ஒருவருமில்லை.

தேசம் செழிப்பானதாகவும் ஜனங்கள் பெலசாலிகளாகவு மிருந்தபோதிலும், எப்போதும் அவர்கள் சோம்பேறிகளாய்த் தானிருப்பார்கள். தங்களுக்கு எதாவது வேண்டுமானால், தங்களைச் சுற்றியிருக்கும் மற்ற ஜாதியாரை அடிக்கடி கொள்ளையடிப்பார்கள். எழை ஜனங்களின் வீடுகளைத் தீக்கொழுத்தி, புருஷரை யெல்லாம் சர்வசங்காரம் செய்து, ஆடுமாடுகளைத் தங்களுக்கு எடுத்துக்கொண்டு, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் அடிமைகளாக்குவதே அவர்களுடைய காடோடிய வழக்கம். ஒவ்வொரு வகுப்பாரிடமும் அடிமைகள் உண்டு. ஆகவே, அடிமைவியாபாரம் ஜாஸ்தி. அரபியருக்கு அடிமைகளை விற்பார்கள். இவ்

வடிமைகள்படும் இம்சை மெத்த. சுவிசேஷ மில்லாத ஜாதியாரிடம் விஷ்ரேம் அடைவ தைப் பார்க்கிலும் சாவதே உத்தமமென்றெ ண்ணி, அநேகம் பெண்கள் தற்கொலை புரிந் து கொள்வார்கள்.

உகண்டாவில் இக்கஷ்டங்கள் அடிமை களுக்குமாத்திரமல்ல, சகல ஜனங்களுக்கு முண்டு. இத்தேசத்தின் பரிதபிக்கப்படத்தக் கநிலமையை ஆஷ்துரை பின்வருமாறு உரைக்கிறார்: ''ஒவ்வொருநாளும் ஜனங்களி ன் அங்கலாய்ப்பின் சத்தமும் கூக்குரலுந் தான் இத்தேசத்தில் கேட்கிறது. அவர்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்வார் ஒருவருமில் லை. அற்ப குற்றத்துக்கும் கூர்மையான மூங் கில்தக்கால் அடித்து இம்சைப்படுத்துவார்கள். அதுவுமல்லாமல், குற்றமற்ற அடிமைகளையும் ஏழை ஜனங்களையும் நெருப்பிலே கொஞ்சங் கொஞ்சமாய் உயிர்போகச்செய்து, சொல்ல வொண்ணா நோவுடன் அத்திகள் சாவதையும் பார்க்கலாம். சில ஜனங்களின் தேகங்கள் கண்டகண்டமாய் வெட்டிக்கிடப்பது காடோ டிய காட்சி''.

இப்பேர்ப்பட்ட குரூரசிந்தையும் அந்த காரமும் நிறைந்த ஜாதியாரின் மார்க்க கோட் பாடுகளும் சிறந்தவைகளல்ல. இவர்கள் சொரூபங்கள் வைத்து பூஜை செய்கிறவர்கள ல்ல. ஆவிகளை தங்களுக்குத் தெய்வங்களாக வைத்துக்கொண்டு, அவைகளை நம்புவார்கள். இந்த ஆவிகளை இடி, பூமியதிர்ச்சி முதலிய பெயர்களால் அழைக்கிறார்கள். கொள்ளை நோய், வைசூரி முதலிய பிணிகள் ஆவிகளா ல் உண்டாகிறது என்னும் தப்பான அபிப் பிராயம் உண்டு. தெய்வம் ஒவ்வொன்றும் ஒவ்வொர் காரியத்தின் மேல் வல்லமையுடை யதாக நினைத்துக் கொள்வார்கள். தண்ணீ ரிலுள்ள ஆவிகளுக்குக் காணிக்கையாக சாமான்களை வரிகளில் எறிந்து விடுவார்கள். எனென்றால் அந்த ஆவிகளுக்குக் கோபம் வந்தால், வரியைக் கடக்காதபடி ஜனங்களை நிறுத்திவிடுமென்று பயந்து, அப்படிச் செய் வார்கள்.

இவர்களுடைய மார்க்கத்தில் குருக்களு முண்டு. செத்தவர்களுடைய ஆவி அவர்களி டம் தங்கியிருப்பதாக நினைத்துக் கொள்வார் கள். வெள்ளை அல்லது கருப்பு ஆட்டுத்தோலை ஆடையாக அணிந்துகொண்டு, கையில் எப் போதும் இரும்பு கொக்கிகளும், மணிகளு முள்ள ஒரு தடிக் கட்டையை குருக்கள் வைத் திருப்பார்கள். இவர்கள் பார்வைக்குப் பயங் கரமாயிருப்பதுமன்றி, ஜனங்களைத் தங்கள் பேச்சுகளினாலும் செய்கையினாலும் பயப் படுத்துவதுண்டு. குருக்களின் கீழ் பலவித தமான ஜோசியர்கள் இருப்பார்கள். ஆவி களைப் பிரியப்படுத்தும்படியாக ரஸ்தா பக்க ங்களில் சிறு குடிசைகளைக்கட்டி, அதில் மந்தி ரங்களை எழுதித் தொங்க விடுவார்கள். அவைகளைத் தங்கள் வீட்டின் கதவுகளிலும் தங்கள் தேகங்களிலும் போட்டுக் கொள்வார் கள். இப்படி அந்தகாரத்திலும் அறிவீனத் திலும் மூழ்கியிருந்தவர்களும், குரூர இருதய முடையவர்களாகிய இந்த ஜனங்களின் மத்தியில் கிறிஸ்து மார்க்கம் போகவேண்டி யது எவ்வளவோ அவசியமாயிருந்தது! மெய் மார்க்கத்தை அறியாததால்தான் இப்பேர்ப் பட்ட நிர்ப்பந்த நிலைமையில் இருந்தார்கள்.

சென்னைக் கிளைச்சங்கத்து முதலாம் அறிக்கை—1915

ஆரம்பம். 1914-ம் வருஷ இறுதியில் இம்மாநகரிலுள்ள கிறிஸ்தவ சிநேகிதர் சிலர் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத் தின் கிளை ஒன்று சென்னையில் ஸ்தாபிப்பது அவசியமென உணரவே, 1914-ம்ஷ டிசம் பர்மீ 18உ மெமோரியல் ஹால் என்னும் சபா மண்டபத்தில் இந்திய கிறிஸ்தவரின் மகா சபைக் கூட்டமொன்று நடைபெற்றது. ஸ்ரீமான் M. D. தேவதாஸ் பாரிஸ்டர் அவர் கள் பீடம் வஹித்தார்கள். மகாகனம் தோர் ணக்கல் அத்தியக்ஷரவர்களும், இந்திய மிஷ னெரி சங்கத்தின் பொக்ஷதாராகிய ஸ்ரீமான் G. தேவதாசன் அவர்களும், ஹோம் மிஷனராகிய கனம். A. சவரிமுத்து ஐயரவர் களும் கேட்போர் மனதில் மிகுந்த எழுப்பு தல் உண்டாக, நிஜாம் ராஜ்யத்தில் தெலுங்க ருக்குள்ளும், திருவாங்கூர் சமஸ்தானத்தில் மலைப்பளியருக்குள்ளும், திருநெல்வேலி இந் திய மிஷனெரி சங்கம் நடத்திவரும் சுவி சேஷ ஊழியத்தைப்பற்றி சவிஸ்தாரமாய்ப்

பேசினார்கள், பின்னர் கிளைச்சங்கத்திற் குறிய ஏற்பாடு அக்கூட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் முதலாளியாகவும், ஸ்ரீமான் M. D. தேவதாஸ்பிள்ளை அவர்கள் பிரதிமுத லாளியாகவும், ஸ்ரீமான் A. C. ஆசீர்வாதம் நாடார் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றார்கள். கூட்டத்தின் முடிவில், இக்கி ளைச்சங்கத்திற்குப் பண உதவி செய்வதாக 24 பேர் வாக்கு கொடுத்தார்கள். வாக்குப் பண்ணின தொகையின் மொத்தம் ரூ. 230—8—0. சென்னையிலுள்ள இந்திய கிறிஸ் தவர்கள் பலரை வீடுகளிற் சந்தித்துக் கண்டு பேசினதின் பின்பு, பெப்ரவரிமீ 20உ சங் கத்து அங்கத்தவரின் முதலாம் பொதுக்கூட் டம் நடந்தது. அன்றையதினம் மெம்பர்க ளின் மொத்தத் தொகை 113. வாக்குப்பண் ணின காணிக்கை ரூ. 1008—4—0.

மெம்பர்கள். நாளதுஷ இக்கிளையைச் சேர்ந்த மெம்பர்களின் தொகை 155. இது வரையும் இம்முயற்சியில் சேராமலிருக்கும் நண்பர் நாளது 1916-ம்ஷத்தில் இக்கிளை யின் அங்கங்களாகி, மிஷனெரி ஊழியத்தில் உடன் பங்காளிகளாவார்களென நம்புகிறோம். தற்சமயம் மெம்பர்களாயிருக்கிறவர்கள் தங் கள் சிநேகிதரில் இன்னமும் அநேகரை இக் கிளைச் சங்கத்தின் மெம்பர்களாகும்படி எவ வும் அவ்விதமாய் இச்சங்கத்தின் பிரயோஜ னம் விர்த்தியாகும்படி பார்க்கவும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கூட்டங்கள். மெம்பர்களின் முதலாம் பொதுக்கூட்டம் 'பிராட்வே' நூற்றாண்டு மண்டபத்தில் நடந்தது. இக்கிளைச்சங்கத் தின் முதலாளியவர்கள் அக்கிராசனராயிருந் தார்கள். முன் நியமிக்கப் பெற்ற சங்க உத்தி யோகஸ்தர்கள் அவ்வவ்வுத்தியோகங்களில் உறுதிபண்ணப்பட்டார்கள். ஒரு உபகாரிய தரிசியும், பொக்ஷதாரும், கமிற்றிமெம்பர் களும் நியமுகம் பெற்றார்கள். காரியதரிசி தயாரித்திருந்த கிளைச்சங்க சட்டங்கள் தீர ஆலோசிக்கப்பட்டு, பொதுவாய் ஒப்புக்கொள் ளப்பட்டன. அச்சட்டங்களை ஒழுங்குப் படுத்துவதற்கு ஓர் உபகழகத்தார் ஏற்படுத்தப் பட்டார்கள். அடுத்த பொதுக்கூட்டம் 1915 -ம்ஷ ஆகஸ்ற்றுமீ 28உ சத்தியாகதன் மெமோரியல் மண்டபத்தில் நடந்தது. உப கழகத்தார் ஆஜர் செய்த சட்டங்கள் இக்கூட் டத்தில் உறுதிபண்ணப்பட்டன.

இவ்வருஷத்தில் மானேஜிங் கமிற்றிமார் மூன்று முறை கூடி ஆலோசனை செய்தனர். முதலாவது கூட்டத்தில் கிளைச்சங்க வேலை நடந்தேறுவதற்கான ஆபீஸ் சாமான்கள் முத லியன சவதரிப்பதைப்பற்றி ஒழுங்குசெய்யப் பட்டது. ஜூலைமீ 10உ நடந்த இரண் டாம் கூட்டத்தில் உபகழகத்தாரால் ஏற்படுத் தப்பட்ட சட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு ஒப் புக்கொள்ளப்பட்டன. அப்பால் இந்திய மிஷனெரி சங்கத்தைப்பற்றிய சுருக்கச் சரித் திரமொன்று இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதி பிரசுரிக்கும்படியாகத் தீர்மானித்து, அதற் கென ஒரு சப் கமிற்றியும் ஏற்படுத்தி, அவர் கள் பாளையங்கோட்டையிலிருக்கும் இந்திய மிஷனெரி சங்கக் காரியதரிசியினிடமிருந்து வரப்பெற்ற விபரங்களை அமைத்து, ஓர் பிர பந்தம் இயற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட் டார்கள்.

மூன்றாவது கூட்டம் 1915-ம்ஷ அக் டோபர்மீ 3உ நடந்தது. அதில் 'செலவுக் கான கையிருப்பு நிதிக்கு'ப் பணம் சேகரிப் பதற்குதவியாகிய கார்டுகள் அச்சடிக்கவேண் டியதென்றும், மானேஜிங் கமிற்றியிலுள்ள ஒவ்வொரு மெம்பரும் அந்நிதிக்காக சுமார் 50 ரூபாய் சேகரிக்கும்படி பிரயாசப்படவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷ மண்ட லத்தின் புது அத்தியக்ஷரவர்களுக்கு நல்வர வளித்து, உபசரணைகள் செய்யும் விஷயம் ஆலோசிக்கப்பட்டது. அத்தியக்ஷாபிஷே கம் பெற்று திருநெல்வேலி நாட்டுக்குப் போகும் சமையம் சென்னைமாநகரில் அவர் களுக்கு வாழ்த்துதல் பத்திரம் ஒன்று சமர்ப் பித்து, அப்பத்திரத்தை சித்திரத்தீர்த்த அழ கிய பெட்டியினுள் வைத்துப் படைக்கவேண் டுமென்றும், அதற்கு நேரும் செலவை கிளைச் சங்கத்து மெம்பர்களும் சிநேகிதருமானவர்கள் அளிக்கும் விசேஷ நன்கொடையைக் கொண்டு நடத்திக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

உபகழகத்தாரின் இரு கூட்டங்கள் செக்ரெற்றேரியின் கிரகத்தில் நடந்தன. முதற் கூட்டம் சட்டங்களைப்பற்றியது. அடுத்த கூட்டம் இந்திய மிஷனெரி சங்கத்தின் சுருக்க சரித்திரம் பிரசுரிப்பதைப்பற்றியது. மக-ா-ா-ஸ்ரீ Y. G. பானல் P. B. அவர்களும், கனம். C. P. ஞானமணி ஐயரவர்களும் தமிழில் இயற்றிய இரு பிரபந்தங்களையும் ஒன்றுசேர்த்து அமைத்ததுமன்றி, தமிழ் பிரபந்தத்தின் மொழிபெயர்ப்பாக இங்கிலீஷில் நாலு பக்கங்கொண்ட ஓர் பிரதி பிரசுரிக்கவும் தீர்மானித்தார்கள்.

1915-ம்௵ ஆகஸ்ற்றுமீ 28௳ இக்கிளையின் முயற்சியாக மிஷனெரிக் கூட்டமொன்று சிந்தாதிரிப்பேட்டை சத்தியநாதன் மெமோரியல் ஹாலில் நடந்தேறியது. பிரதி முதலாளியவர்கள் பீடம் வஹித்தார்கள். கனம். E. லாங்டேல் சிமித் ஐயரவர்கள் 'தேவன் எவர்கள் மனதை ஏவினாரோ அவர்கள்' (1 சாமு. 10: 26) என்னும் வசனத்தைத் தெரிந்துகொண்டு, மிஷனெரி ஊழியத்தின்பேரில் ஓர் எழுப்புதலான உபந்நியாசம் தெய்தார்கள். முடிவில் சென்னை கிளைச்சங்கமாகிய இச்சிறு கூட்டம் ஆரம்பத்தில் தேவனுக்காகக் காட்டின வைராக்கியத்தில் மென்மேலும் வளர்ந்தேற வேண்டுமென்பதாக மிக எழுப்புதலாய்ப் பேசி உற்சாகப்படுத்தினார்கள். கனம். E. லாங்டேல் சிமித் ஐயரவர்கள் எங்களுடைய இவ்வேலையில் மிக்க அனுதாபம் காட்டுவதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லுகிறோம்.

1915-ம்௵ டிசம்பர்மீ 6௳ இக்கிளைச் சங்கத்திற்கு ஓர் சந்தோஷகரமான தினம். திருநெல்வேலி மதுரை மகாகனம் உவாலர் அத்தியக்ஷரவர்களையும் அவர்கள் அம்மாளவர்களையும் அன்று மெமோரியல் ஹாலில் சந்தித்து, தென் இந்தியாவுக்கு நல்வரவு கூறி, வந்தனோபசாரப் பத்திரமொன்றளித்தோம். அப்பத்திரம் பட்டில் அச்சிடப்பட்டு, சந்தனக்கட்டையில் பணிப்படுத்தப்பட்ட சிறு பெட்டிக்குள்ளடைத்து வைக்கப்பெற்றது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் எங்கள் அன்பை நன்கு மதித்து, போந்த வார்த்தைகளால் மறுமொழி பகர்ந்தார்கள். ரோஜாப்புஷ்பம் பரிமாறப்பட கூட்டம் முடிந்தது. சென்னையிலுள்ள இந்திய கிறிஸ்தவர்கள் யாவரும் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அன்றையத்தினம் நேரிட்ட செலவுக்காக சங்கத்து மெம்பர்களும் சிநேகிதரும் விசேஷ நன்கொடை கொடுத்துதவிபுரிந்தார்கள். இதன் வரவு செலவு கணக்கு இத்துடன் பிரசுரிக்கிறோம்.

பொக்கிஷம், இவ்வருஷத்தில் மொத்த வரவு ரூ. 1133—10—0. இதில் ரூ. 882—1—0 தாய்ச்சங்கத்தின் உபயோகத்திற்காக அனுப்பப்பட்டது. நாளது வருஷம் இக்கிளையின் ஆரம்ப வருஷமானதால், ஆபீசுக்கு வேண்டிய சாமான் முதலியன சவதரிப்பதில் சற்று ஜாஸ்தி செலவு நேரிட்டிருக்கிறது. ஆகவே இனிவரும் ஐந்து வருஷங்களில் இவ்விஷயமாய் அதிகச் செலவிருக்கமாட்டாதென நம்புகிறோம். வரவு செலவு கணக்கு விபரம் இத்துடன் வெளிப்படும்.

முடிவு. திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் செய்யும் சிறந்த வேலையில் சொற்பமாயினும் உதவிபுரிவதற்கு எங்களுக்குக் கிருபையளித்த பரம பிதாவுக்கு உள்ளக்கனிவுடன் தோத்திரஞ் செலுத்துகிறோம். நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவையும் அவரது ரக்ஷண்ய வல்லமையையும் நம்தேசத்தார் யாவரும் கண்டுகொள்ள வேண்டுமானால், சென்னையில் இப்போது ஆரம்பித்திருக்கும் இச்சிறு வேலையைப் போலொத்தவேலை இன்னமும் அநேக இடங்களில் ஆரம்பிப்பது இன்றியமையா அவசியம். இம்மிஷனெரி ஊழியத்திற்கு கடந்த வருஷத்தைவிட 1916-ம் வருஷத்தில் நாங்கள் அதிக உதவி புரியக் கர்த்தர் கிருபையளிக்க வேண்டுமென்பதே எங்கள் விண்ணப்பம். புதுவருஷம் நமது சங்கத்து மெம்பர்களுக்கும் நண்பருக்கும் சமாதானமும் ஆசீர்வாதமும் பொருந்திய வருஷமாயும், நமது பரம எஜமானுக்கும் நம் சுயதேசத்தவர்க்கும் ஊழியஞ் செய்வதற்கு ஏற்ற நல்வேளையமைந்த ஆண்டாயும் இருப்பதாக.

M. D. தேவதாஸ், பிரதிமுதலாளி.
Y. தேவநேசன், பொக்கிஷதார்.
A. C. ஆசீர்வாதம், காரியதரிசி.
A. V. மோசஸ், உபகாரியதரிசி.

I. M. S. T. சென்னைக்கிளைச்சங்கம்.

(i) மகாகனம் உவாலர் அத்தியக்ஷரவர்களின் உபசரணைக்கூட்டத்து வரவு செலவு கணக்கு.

வரவு.	ரூ.	அ.	ப.	செலவு.	ரூ.	அ.	ப.
சந்தா புஸ்தக விபரப்படி சேகரமான மொத்தத் தொகை...	101	4	0	தந்திச்செலவு ...	4	0	6
				புஷ்பம் ...	16	0	0
				பணிப்பெட்டி ...	18	0	0
				இந்திய கிறிஸ்தவ பாடகர் சங்கம்	2	0	0
				மெமோரியல் ஹால் வாடகை ...	17	8	0
				முத்திரைச்செலவு ...	4	2	6
				அச்சடிப்புக்கூலி ...	25	0	0
				சந்தா சேகரிப்பதற்காக Mr. G. A. துரைசாமி அவர்கள் செலவு...	2	0	0
				மொத்தம் ரூ.	88	11	0
				கிளைச்சங்க பொக்கிஷதாரிடம் இருப்பு ...	12	9	0
மொத்தம் ரூ.	101	4	0	மொத்தம் ரூ.	101	4	0

(உண்மையான நகல்)
A. C. ஆசீர்வாதம்.

(ஒப்பம்) Y. தேவநேசன்.
31—3—16.

(ii) 1915-ம்௵ வரவு செலவு கணக்கு.

வரவு.	ரூ.	அ.	ப.	செலவு.	ரூ.	அ.	ப.
ஆரம்ப செலவுக்காக நன்கொடை...	25	0	0	மெமோரியல்ஹால் வாடகையுட்பட முதல் மிஷனெரிக் கூட்டச் செலவு	41	0	0
வருஷத்தில் சேகரமான சந்தா ...	1108	10	0	C.M.S. நூற்றாண்டு மண்டபத்தில் நடந்த முதல் பொதுக்கூட்டம்...	10	2	0
				அயலிடங்களிலிருந்து மெம்பர்கள் சேர்ப்பதற்குச் செலவு ...	10	0	0
				புஸ்தகங்கள், அச்சிட்ட தலைப்புள்ளி கடுதாசிப்பாரங்கள் முதலியன ...	54	9	0
				அச்சடிப்பு செலவு ...	14	4	0
				தபாற்செலவு, சிப்பந்திச்செலவு ...	29	0	3
				காரியதரிசியிடம் சில்லறைக் கையிருப்பு ...	5	0	0
				பொக்கிஷதாரிடம் சில்லறைக் கையிருப்பு ...	3	0	0
				தாய்ச்சங்கத்துக்காக சென்னை பாங்கியில் போடப்பட்டது ...	882	1	0
					1049	0	3
				பொக்கிஷதாரிடம் கையிருப்பு ...	84	9	9
மொத்தம் ரூ.	1133	10	0	மொத்தம் ரூ.	1133	10	0

ளைப் பரிசோதனைசெய்து சரியென்று கண்டேன்.
S. P. அருமைநாயகம்.

Y தேவநேசன், பொக்கிஷதார்.
12—3—16.

கனம். T. உவாக்கர் ஐயர்.

1. முகவுரை.

அருந்தவம் பெற்ற பிள்ளை பெற்றோருக்கு எப்படி அருமையும் பெருமையுமாய் இருக்குமோ அதுபோலவும், திராண்ட ஆவலின்பேரில் கொடுக்கப்பட்ட கனி எவ்வளவு விருப்பமும் இன்பமுமாய் இருக்குமோ அதுபோலவும், அன்பின் வேண்டுகோளின் கனியாய் அருளப்பட்ட மகான் உவாக்கரும் திருநெல்வேலித் திருச்சபைக்கு அருமையும் அன்பும், தேவதா பக்தியும் ஊழியச் சிறப்பும் பொருந்திய ஒரு அலங்காரக் கோபுரம் போல் எழும்பிநின்றார்கள் என்னலாம். அதைச் சற்று விளக்கிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்மாதிரியாயும், நான் வியந்து, ஆவலாய்ப் பின்தயர்ந்து நடக்கக் கூடிய யோக்கியதா பட்சம்பொருந்திய கண்ணிய அவயவங்கள் சிலர் நம் பாளையங்கோட்டை சபையில் வசித்தனர். சபையின் அபிவிர்த்திக்கு எதுவானதென்று தங்களுக்குத் தோன்றியதை தங்களுக்கு மோலாயுள்ள குருமாருக்கு அறிவிப்பார்கள். அவர்களால் சுயமாய் முயற்சித்து செய்யக்கூடாத விசேஷித்த காரியங்களைப்பற்றி, சென்னை சி. எம். எஸ். கமிற்றிக்கும் சீர்மை தாய்க் கமிற்றிக்கும் பல நியாயங்கள் கண்டு விண்ணப்பம் எழுதி, சபையின் வளர்ச்சிக்கு நன்மையான காரியங்களைச் செய்யப் பிரயாசப்படுவார்கள். அவைகளில் சில முயற்சிகள் சித்திக்குவந்தன. பாளையங்கோட்டை சபைக்கு நான் அங்கமாய் வந்தபின்னர் அப்படி கடந்த இரண்டு முக்கியமான சம்பவங்களை விவரிக்கிறேன்.

சுதேச போதகர்களாகக்கூடியவர்களுக்கு தக்க கல்வி பயிற்றுவிக்கும்பொருட்டும், அவர்களின் பிள்ளைகளுக்கும் சபையைச்சேர்ந்த சகல பிள்ளைகளுக்கும் உயர்ந்த கல்வி நாகரீகம் படிப்பிக்கும் பொருட்டும், ஒரு முதல்தர கல்லூரி ஸ்தாபிக்கவேண்டுமென்று சில முக்கியஸ்தர்கள் விண்ணப்பஞ்செய்தார்கள். அதன் பலனாய் திருநெல்வேலி சி. எம். எஸ். காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு நன்மையும் சிலாக்கியமுமாய் இருக்கிறதென்று நாமெல்லாரும் ஒப்புக்கொள்வோம்.

தவிரவும், சபையின் நன்மையைக் குறித்த கண்ணியவான்கள் அதே மாதிரியாய் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள படிப்பாளிகளான இந்துக்களுக்கு சுவிசேஷத்தை சரியானபடி போதிக்கத்தக்க கல்வித்திறமையும், சாஸ்திரப் பயிற்சியும், வேதசாஸ்திர நிறமையுமடைந்து அஸ்திவாரமுள்ள ஆவியினால் நடத்தப்பட்ட சுத்த சுவிசேஷ போதகர்கள் தேவையென சீர்மை தாய்க் கமிற்றிக்கு அநேக நியாயங்களை எடுத்துக்காட்டி விண்ணப்பஞ்செய்தார்கள். அதன் பலனாக இரண்டு பெயரை விசேஷமாய்த் தெரிந்தெடுத்து, திருநெல்வேலி நாட்டிற்கு அனுப்பினார்கள். அதில் ஒருவர்தான் கனம் T. உவாக்கர் ஐயரவர்கள். இவர்கள் பாளையங்கோட்டை வந்துசேர்ந்தவுடன் வந்தனைபசாரம் அளித்தோம். புஷ்ப ஆரம் சூடினோம். அதுமுதல் அவர்கள் தங்கள் தேவ ஊழியத்தை வெகு சிறத்தையோடும் ஆவியோடும் ஆரம்பித்தார்கள். நூதனமாய் வந்தாலும், வெகு அறிவாளியானதால், துவக்கமுதல் சிலாக்கியமான நல்ல ஊழியஞ்செய்தார்கள்.

அவர்களுடைய நற்குணாதிசயங்கள் அனந்தம்: (1) மெய்ப் பக்தன், (2) பரிசுத்தன், (3) சத்தியவாக்கன், (4) தைரிய நெஞ்சன், (5) விவேகசாலி, (6) பரமஞானி, (7) பகுத்தறிவாளி, (8) சுகுணன், (9) மௌனி, (10) வித்வான், (11) தவராசன், (12) தாழ்மையுடையோன். சுருக்கிச் சொல்லில், அவர் தேவ மனிதன்.

எல்லாக் குணாதிசயங்களையும் இப்போது விவரியாமல், தாழ்மை ஒன்றைப்பற்றிமாத்திரம் இங்கு எடுத்துரைக்கிறேன். அவர்கள் வளவு தாழ்மையும் சுயநய வெறுப்புள்ளவராயிருந்தார்களென்பது நம்மில் சிலருக்குத் தெரிந்த விஷயம். திருவுளமாக:—அவர்கள் திருநெல்வேலி நற்செய்தி ஊழியராய் வந்து இருபத்தைந்து வருஷமானதை ஞாபகப்படுத்த விரும்பினதென சில சிநேகிதர் எழுதினதின்

பேரைப்பற்றியாவது, தன் வேலையைப்பற்றியாவது சிலாக்கியமான யாதொரு நல்ல வார்த்தைகளும் சொல்லப்படுவதை தான் கேட்க பிரியமில்லையென்றும், ஆனால் ஒரு மிஷனரி போதகக்கூட்டம் வைத்தால், அதற்குத் தான் வந்து ஸ்தோத்திர ஜெபத்திற்கு இருந்து பிரசங்களுஞ்செய்வதாய் வாக்களித்தார்கள். அப்படியே அந்தக் கூட்டமும் நடந்தேறியது. அவர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்கள் வேலையைப்பற்றி யாரும் புகழ்வதை காதாரக் கேட்கவும் பிரியப்படமாட்டார்கள் என்றறிந்த நான், அவர்கள் மரித்துப்போனாலும் அவருடைய குணாதிசயங்களைப்பற்றி நான் பூரணமாய் நம்பாத யாதொரு வீண் ஸ்துதியை ஸ்தோத்திரமாய் எழுதுவது எனக்குப் பிரியமில்லை. என் அந்தரங்க எண்ணத்தில் எது உண்மையோ, எது பிறருக்குப் பிரயோஜனமாயிருக்குமோ, எது நம் ரட்சகா பெருமானின் சபை விர்த்திக்கு ஏதுவாயிருக்குமோ, எதனால் இன்னும் சபைக்கு அனந்த நன்மை விளையுமோ அப்படிப்பட்ட சில முக்கிய விஷயங்களை எடுத்து அவர்கள் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றும்பொருட்டு எழுதிப் பிரசுரஞ் செய்ய முயலுகிறேன்.

அன்றியும், தாழ்மையென்ற பாடம் நான் அவர்களிடம் கற்றுக்கொண்டதின் திருஷ்டாந்தத்தையெடுத்து விளக்கிக்காட்டுகிறேன். நான் வைக்கீல் உத்தியோகத்தைவிட்டு நீங்கி, தேவநாமத்திற்கு மகிமையாக இந்துக்கள் மத்தியில் சுவிசேஷப் பிரசங்க ஊழியஞ் செய்யவேண்டுமென்று ஆரம்பித்தபோது, கிறிஸ்மஸ் ராஜாவில் அவர்களோடு போய் ஒரு வாரம் தங்கியிருந்தேன். அங்கிருக்கும்போது தினசரி காலை ஜெபத்திற்கு நாங்கள் யாவரும் போவோம். முதல் நாள் போனபோது கோவில் முன்பக்கத்தில் எனக்கு ஒரு நாற்காலியும், என் கூடவந்திருந்த T. A. ஜோதிநாயகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு நாற்காலியும் போடப்பட்டிருந்தது. ஜெபம், பிரசங்கம் நடந்தேறிக்கொண்டிருக்கும்போது, கனம். உவாக்கர் ஐயர் வர்கள் வாக்காணுமே என்று கவனித்தோம். அவர்கள் எங்கள் கிட்ட உட்காரவில்லை. யாதொரு நாற்காலியில் உட்காரவுமில்லை. கோவிலில் பாதித்தூலைக்கு அப்பால் சபையார்கள் பிள்ளைகள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு மத்தியில், ஒரு தாவள்ளியமான வெள்ளைச் சட்டைபோட்டுக்கொண்டு, குதிகால் மடக்கி, ஒரு ஆள் ஜெபத்திற்கு உட்கார்ந்துகொண்டிருந்ததைக் கவனித்தோம். அது அந்த ஐயர் அவாகளே. அந்தக் காட்சியைக் கண்டபிறகு எனக்கு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்க மனம் வரவில்லை. அதனால் மறுநாள் முதல் நாங்கள் இருவரும் அப்படியே அவர்களுக்குப் பின் தரையில் உட்கார்ந்து ஜெபம் செய்தோம். தாழ்மையென்ற பெரிய பாடத்தை அது முதல் கற்றுக்கொண்டோம்.

அவர்கள் ஊழியத்தினால் விளைந்த நன்மைகள் அனந்தம். சபை மொத்தமாகப் பார்த்தாலும், அநேக ஆத்துமாக்களைத் தனித்தனியே கவனித்தாலும், அவர்கள் செய்திருக்கின்ற நன்மைகள் ஏராளமாயுண்டு. என் சொந்த ஆத்துமாவுக்கே நல்ல அனுகூலம் அடைந்திருக்கிறேன். அப்படியே இப்போ விசேஷித்த போதகர்களும் உபாத்திமார் அநேகரும் சாட்சிபகரக்கூடும். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது பழமொழி. அப்படியானால் ஆத்துமார்த்தமான நன்மைகளை விளைவித்தவர்களை நித்தியமாய் நினைவுகூறவேண்டுமல்லவோ? அவர்கள் எத்தனை எண்ணிறந்த ஆத்துமாக்களுக்கு நன்மைகளை விளைவித்திருக்கிறார்கள் என்பது நித்தியந்தான் நமக்கு வெளிப்படுத்தவேண்டும்.

அவர்கள் பாளையங்கோட்டைக்கு வந்தது முதல் எனக்கு நல்ல பழக்கமுண்டு. சங்கை பொருந்திய பிஷப் சார்ஜென்று அவர்கள் கூடவே வேனல் காலத்தில் மலைக்கு ஐயாவர்கள் தேக வசதிக்குப் போயிருந்தார்கள். நான் அவர்கள் விருந்தாளியாகப்போய், அவர்களுடன் சிலநாள் தங்கியிருந்தேன். அவர்கள் இருவரும் என் வரவை எதிர்பார்த்து, கைக்குழந்தை வீசி, சந்தோஷமாய் எதிர்நின்று, மலர்ந்த முகத்துடன் என்னை ஏற்றுக்கொண்ட காட்சி இன்னும் என் நினைவை விட்டு அகலாதிருக்கின்றது. அங்கிருக்கும்போது பலபொருளின்பேரில் அவர்களுடன்

சம்பாஷித்திருக்கிறேன். அவர்கள் ஒரு அந்நியன் போல நடந்துகொள்ளவில்லை. ஆனால் வெகு அந்நியோந்நியமாய் இருந்தோம்.

தவிர்வும்,பிஷப் சார்ஜென்று இறந்துபோனபின் கனம. பார்ட்டன் ஐயரவர்கள் வந்து அநேக மாறுதல்கள் செய்தார்கள். அதில் ஒன்று திருத்துவ ஆலயத்தில் நாற்காலிகள் முன் போட்ட மாதிரியை மாற்றி, வேறுவிதமாக இப்போ இருக்கிற மாதிரி ஒழுங்கு செய்துவிட்டார்கள். அதினிமித்தம் அநேக பெரிய மனுஷர்ள் மனஸ்தாபப்பட்டு, கோவிலுக்கு வராமல் நின்றுகொண்டார்கள். வேறு சிலர் தங்களுக்காக தனிக்கோவில் கட்ட பணம் சேகரித்தார்கள். பின்னும் சிலர் ஊரத்தில் மூலே முடுக்குகளில் வந்து உட்கார்ந்துவிட்டு, ஆராதனைமுடிந்தவுடன் சொல்லாமல் பறையாமல் சாந்தமாய்ப் போய்விடுவார்கள். நான் இந்தக் கடைசி வகுப்பைச் சேர்ந்தவன். அச்சமயம் கனம். உவாக்கர் ஐயரவர்கள் திருநெல்வேலி சி. எம். எஸ். விசாரணைக்குருவாக நியமகம் பெற்றூர்கள். அதனால் அந்த பாளையங்கோட்டை சபையில் இருந்த ஓர்கேட்டை திருத்தும்படி பல முயற்சிகள் செய்தார்கள். பலரையும் கண்டுபேசி சமாதானம் சொல்லி இணக்கினர்கள். என்னிடம் வந்து நீ முன் பக்கம் உட்காரவேண்டுமென்று வருந்திக்கேட்டார்கள். நான் சம்மதிக்கவில்லை. 'நீ முன்னுக்கு உட்காராவிட்டால் நான் எப்படி உற்சாகமாய்ப் பிரசங்கிக்க முடியும் சொல்' என்று வருந்திப் பிடித்துக் கொண்டார்கள். அது அவர்கள் அந்தரங்க உண்மையென்பதாய் என் மனதில் நிச்சயமாகப்பட்டது. அதனால் இணங்கி, அவர்கள் கேடடுக்கொண்டபடியே உட்கார்ந்தேன். அவர்கள் மனசு திருப்தி அடைந்தது, சந்தோஷப்பட்டது. இப்படியே இன்னும் சிலரையும் இணக்கி வசப்படுத்தினர்கள். வேறுகோவில் கட்டவேண்டுமென்ற பிரயத்தனமும் நின்றுவிட்டது. கோவிலுக்கு வராத அநேகரும் வர ஆரம்பித்தார்கள்.

அப்படியே கலியாணத்திற்காக ஆலயத்தில் அறிக்கை வாசிக்கும்போது சகப்பன் பெயருடன் ஜாதிப்பட்டம் பெயரைச் சேர்க்கக்கூடாதென்ற உத்திரவு பிஷப்பிடமிருந்து வந்திருக்கிறதே, அந்தப்படி செய்யவேண்டுமே என்று என்னிடம் கலந்தார்கள். பட்டப்பெயரை நீக்குவது இழிவு என அநேகருடைய அபிப்பிராயம். அதைக்குறித்து மறுக்கடியோடே நாங்களிருவரும் ஆலோசித்துக்கொண்டிருந்தோம். சீர்மையில் தகப்பன் பெயரைச் சொல்வது வழக்கமில்லை. அப்படியே இங்கு செய்வோம் என்று உபாயம் சொன்னார்கள். நானும் சம்மதித்தேன். பின்னும் சிலரும் சம்மதித்தார்கள். அது தான் ஊர்ஜிதத்திற்கு வந்தது. அவர்கள் கெட்டிக்காரர் மட்டுமல்ல, விவேகசாலி. சமயோர்ஜிதமாய், கிடிரென பொருத்தமான நல்ல ஆலோசனை சொல்லுவார்கள்.

A. S. அப்பாசாமி.

The Working Balance Fund.

செலவுக்கான கையிருப்பு நிதி.

உமது காந்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

		ரூ.	அ.	ப.
முன் ஒப்புக்கொண்ட தொகை		3579	2	9
பாளையங்கோட்டை				
Mrs. J. S. தேவசகாயம்	...	18	0	0
S. அருமை அம்மாள் S. T. C.	...	1	0	0
Mr. J. S. பொன்னையா	...	7	0	0
,, G. S. ஆபிரகாம் T. C. M.	...	5	0	0
,, P. தேவசகாயம்	...	5	0	0
திருநெல்வேலி.				
ஹாஸ்டல் "பைபண்டு"	...	13	9	0
Mrs. S. T. பேரின்பம்	...	3	0	0
மருதகுளம்				
Mr. J. சந்தோஷம்	...	1	0	0
,, D. J. தாமஸ்	...	2	0	0
,, G. தானியேல்	...	1	0	0
,, E. P. துரைசாமி	...	1	0	0
,, V. பாஞ்சோதி	...	1	0	0
D. தாபம்மாள்	...	1	0	0
தாழ்ந்த வரவு	...	1	0	0
மூன்றுடைப்பு				
Mr. ராஜமணி	...	1	0	0
,, ஞ. குருபாதம்	...	1	0	0

ஜூன் 1916. Vol. XIII. No. 6.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்தின் சென்னை உத்சவிச்சங்கம்

இந்தியா, பர்மா, தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களிலும், இலங்கை, சிங்கப்பூர் முதலிய தீவுகளிலும் இருக்கிற இந்திய கிறிஸ்தவ சகோதரர்களுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:

ஒரே குலையை ஈன்று ஒழிந்துபோகிற விருட்சத்துக்கு என்றைக்கும் வாழ்ந்திருப்பதென்னும் பொருளுடைய வாழை என்ற பெயர் வாய்ந்தது எதனால்? வாழையானது கனிகொடுக்கப் பக்குவமடைந்தவுடனே தனக்குப் பின்னின்று சமுசாரிக்குப் பலன் தரத்தக்க பல கன்றுகளைத் தன்னைச் சுற்றிலும் பிறப்பித்து வைத்துக்கொள்ளுவதனாலல்லவோ? அவ்விதமே ஒரிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவ சபையானது தன் முயற்சியாலும் ஏதுக்களாலும் வேறு ஒரு சபையையோ அல்லது பல கிளேச்சபைகளையோ பிறப்பிக்காவிடில் அச்சபை இன்னமும் பூரண பக்குவமடையவில்லை என்னலாம்.

இந்தியாவின் பல மாகாணங்களுக்குள், திருநெல்வேலி ஜில்லாவில்தான் கிறிஸ்தவர்கள் தொகை அதிகமென்றும் குருமாரும் ஆலயங்களும் தேவாராதனைகளும் சிறப்பாயிருக்கிறதென்றும் சாதாரணமாயெவரும் பேசிக்கொள்வதுண்டு. ஆயினும் அதன் உண்மை 'திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்' தோன்றின பின்னர்தான் ருபிக்கப்பட்டது.

1. இந்திய மிஷனெரி சங்க உற்பத்தி. 'அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணக்கூடும்' என்றபடி, 1897-ம் வருஷத்தில் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்குள்ளே, கிறிஸ்துமார்க்கம் செல்லாத அயல் நாடுகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்கிற ஆவல் உண்டானது. இந்த விஷயத்தைக் குறித்துப் பலரிடத்திலும் பேசி ஆலோசனை செய்ததில், சிலர் 'இப்படியும் சிலர் அப்படியும் சொன்னபடியால், காரியம் வெளிப்படையான தொடக்கம் பெறுதிருந்தது. 1902-ம் வருஷத்தில் அவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, ஜெபம்செய்து, ஓர் சுதேச மிஷன் சங்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சிறு பத்திரிகையை அச்சிட்டு பிரசுரம் செய்தார்கள். பாளையங்கோட்டையில் சி. எம். எஸ். வருஷாந்தர சங்கக்கூட்டம் அதே காலத்தில் கூடிற்று. அதற்கு வந்திருந்தவர்களில் சில மிஷன் ஆசாமிகளும் சபையாரும் இந்திய மிஷனெரி சங்க உற்பத்தியைக் கண்டு களிகூர வேண்டுமென்ற ஆவலோடு வந்திருந்தார்கள். இவர்கள் யாவரும் ஓர் சிறிய அறையில் மூன்றிரவுகளாய்க் கூடி மேற்படி சங்கத்தின் சட்டதிட்டங்களைத் தயாரித்து, 1903-ம் வருஷம் பெப்ரவரி 12-ம்தேயைக் குறிப்பிட்டு, அத்தேதியில் இச் சங்கத்தைப்பற்றிய விருப்பமுள்ளவர்கள் யாவரும் குறித்ததோர் இடத்தில் கூடி வரும்படி தனித்தனியமயான அழைப்புக் கடிதங்களை அனுப்பினர்கள். அதன்படிக்கு 8 ஐயர்மாரும் சபையாரில் ஏறக்குறைய 25 பேரும் கூடி மேற்கண்ட தேதியில் இந்திய மிஷனெரி சங்கத்தை ஏற்படுத்தினர்கள். அன்று தொடங்கின இச்சிறு சங்கம் முதலில் கொஞ்சப் பேரோடு ஆரம்பித்ததாயினும், வரவர திருநெல்வேலியிலுள்ள சி. எம். எஸ். சபைக

னைத்துக்குமுரிய சங்கமாக அங்கீகரிக்கப் பட்டது. அதன்பின் இச்சங்கத்தின் உற்சாகமான முயற்சியையும் தீவிரமான விருத்தியையும் கண்டு, முதலில் திருநெல்வேலியிலுள்ள சி. எம். எஸ் கவுண்சிலாரும் பின்னர் எஸ். பி. ஜி. ஜில்லாக் கவுண்சிலாரும் இச்சங்கங்களுக்கு உசாவு துணையாக இருக்கத் தீர்மானங்கள் செய்தபடியால், இப்போது இவ்விருமிஷன்களுக்கும் இது பொதுவானதாக ஒப்பக்கொள்ளப்பட்டு, அவ்வவ்விடத்துச் சபைகளாலும், போர்டிங் பிள்ளைகளாலும் உதவி பெற்று வருகிறது.

2. இச்சங்கம் வேலை செய்யத் தெரிந்துகொண்ட இடம். தமிழ்ப்பாஷை பேசப்படும் ஜில்லாக்களில் இன்னும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத பலவிடங்களிருந்தும், அவ்விடங்களுக்குச் சமீபமாய் உழைத்து வருகிற இதர மிஷனெரிமார் தாங்கள் அவ்விடங்களில் வேலையாரம்பிப்பதாகச் சொல்லிவிட்டமையால், தெலுங்கு நடுகளைப் பற்றி யோசிக்கவேண்டியதாயிற்று. தெலுங்குநாட்டில் ஐதிரபாத்திலுள்ள வாரங்கால் ஜில்லாவின் மாபூபபாத் தாலுகாவானது எந்த மிஷனாலும் எடுத்து வேலைசெய்யப்படாமல் காலியாயிருந்ததை யறிந்து, அவ்விடத்தில் நமது இந்திய மிஷனெரி சங்கத்தின் வேலையை ஆரம்பிக்கவேண்டியதாயிற்று. இத்தாலுகாவின் விஸ்தீரணம் 778 சதுரமைல். ஜனத்தொகை ஏறக்குறைய ஒரு லக்ஷம். கிராமங்கள் 158. இந்திய மிஷனெரி சங்கம் இவ்விடத்தில் வேலை தொடங்கினது தேவசித்தத்தின்படிக்கும் தேவ தீர்மானத்தின்படிக்குமே நடந்திருக்கிறதென்பதற்கு ஐயமில்லை. எப்படியெனில் மகமதிய அரசனால் ஆளப்படுவதும் வருஷத்தில் பல மாதங்களில் கொடிய மலேச்சுரத்திற்கு இடமானதுமான பல கஷ்டங்களினிமித்து எவரும் வேலைசெய்யத் துணியாதிருந்தமையால், அவ்விடத்தில் அஞ்ஞான அந்தகாரம் மிகுந்து, கொலை, களவு, குடி, விபசாரம் முதலிய பசாசின் கிரியைகள் ஏராளமாந் தாராளமுமாய் நடந்துகொண்டிருந்தன. ஆனதால் அவ்விடத்திற்குக் கிறிஸ்துவின் திருமுகத்தொளிவீச வேண்டியது நமது இந்திய மிஷனெரி சங்கத்தால்தான் என்று நிச்சயங் கொண்டு, அவ்விடத்தில் வேலை ஆரம்பிக்கப் பட்டது.

3. இச்சங்கத்தின் மிஷனெரிமார். ஆரம்பமுதல் இச்சங்கத்தின் மிஷனெரிமாராக, தேவநாம மகிமைக்கென்று தங்களை முழுவதும் ஒப்புக்கொடுத்தவர்களும் உலக ஆதாயத்தை விரும்பாதவர்களுமான ஊழியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஜெபத்தோடு அனுப்பப்படுகிறார்கள். 1904-ம் வருஷத்தில் முதல் மிஷனெரி அனுப்பப்பட்டார். மறுவருஷத்தில் இரண்டாவது மிஷனெரியாக ஒருவர் அனுப்பப்பட, இவர்களிருவருமாக துரிதத்தில் தெலுங்கு பாஷையைக் கற்றுக்கொண்டு, தோர்ணக்கல்லைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்துவந்தார்கள். அவர்களது முயற்சியால் 1906-ம் வருஷம் ஆகஸ்டுமீ 23-ம்உ 33 பேர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாக்கப்பட்டு, மகா கனம: சென்னை அத்தியகூசரவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டு, முதற்பலன்களாய்ச் சபையோடு சேர்க்கப்பட்டார்கள். அதே நாளில்தான் அத்தியகூசரவர்கள் தோர்ணக்கல் மிஷன் வீட்டையும் பிரதிஷ்டை செய்தார்கள். அன்று முதல் அத்தியகூசரவர்களும் அம்மாளவர்களும் இச்சங்கத்தின்பேரில் மிகுந்த அன்பு பாராட்டி, அதிகக் கரிசனையெடுத்து வருகிறார்கள். இப்புதிய சபையில் தேவாராதனைகளை நடத்துவதற்கு அபிஷேகம் பெற்ற ஊழியர் அத்தியாவசியமெனக்கண்டு, முதல் மிஷனெரியாகிய சாமுவேல் பாக்கியநாதனவர்களையே மூக்கன் பட்டத்திற்குக் 'கமிற்றிமார் சிபார்சுசெய்ய, 1906-ம்வு ஜூன்மீ 29உ (பரிசுத்த பேதுருவின் திருநாள்) யில் அத்தியகூசரவர்கள் பட்டம் கொடுத்தார்கள்.

இச்சங்க மேற்படுவதற்கு தேவ ஒத்தாசையை முன்னிட்டு மூலகாரணராயிருந்த வி. எஸ். அசரியா அவர்கள் (இப்பொழுது பிஷப்) 1909-ம்வு ஏப்பிரல் மாதத்தில் ஒரு மிஷனெரியாக நம்மையும் ஒப்புக்கொடுத்த படியால், கமிற்றிமார் அதிகச் சந்தோஷத்துடன் அவர்களை யேற்றுக்கொண்டு தோர்ணக்கல் மிஷனுக்கு சூப்பிரண்டெண்டிங் மிஷனெரியாக நியமித்தனுப்பினர்கள். அவர்கள் மகாகனம் சென்னை அத்தியகூசரவர்களாலேயே வேதசாஸ்திரத்திலும் தேவ பணிவிடைக்கு அவசியமான மற்றும் விஷயங்களிலும் மூன்று மாதக்காலம் பயிற்றுவிக்கப் பட்டு, அவ்வருஷத்தில் (பரி. பேதுருவின் திருநாளில்) டீக்கன் பட்டம் பெற்றார்கள். இவர்கள் மூலமாய் தோர்ணக்கல்லின் குழந்தைச் சபையானது துவக்கம் முதலே சுயவிருத்தி, சுய ஆதாவு, சுயஆளுகை ஆகிய நன்முயற்சிகளில் தேர்ச்சி பெற்று வருகிறது கனம். அசரியா ஐயரவர்கள் ஒய். எம். சி. ஏ. சம்பந்தமாகவும் இந்திய மிஷனெரி சங்க விஷயமாகவும் செய்திருக்கிற முயற்சிகளையும் அவர்களது சிரேஷ்டமான தாலந்துகளையும் அனுபவத்தையும் நோக்கிய இந்தியாவிலுள்ள ஆங்கிலேய பிஷப்மார் அவர்களையே முதலிந்திய பிஷப்பாகத் தெரிந்துகொண்டு, 1912-ம்வு டிசம்பர்மீ 29உ கல்குத்தா பரிபவுல் அத்தியகூசராலயத்தில் அபிஷேகித்தனர். அதிலிருந்து தோர்ணக்கல் ஓர் புதிய அத்தியகூசரீனமாயிற்று. இவ்வத்தியகூசரீனத்தில் தோர்ணக்கல் மிஷன், சிங்கரேனி மிஷன், கம்மாமெட் ஸி. எம். எஸ். மிஷன் ஜெட்சர்லாமிஷன் ஆகிய இந்நான்கும் அடங்கியிருக்கின்றன. இவ்வாறாக திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்தின் அற்பமான முயற்சிகளை ஆசீர்வதித்திருக்கிற பரமபிதாவுக்குச் சகல துதியும், கனமும் மகிமையும் சதாகாலமும் உண்டாவதாக.

4. இச்சங்கம் இம்மட்டும் செய்திருக்கிற வேலை. இங்கிய மிஷனெரி சங்கம் வேலைசெய்ய ஆரம்பித்தபொழுது மாபூபபாத் தாலுகாவில் கிறிஸ்தவர்கள் ஒருவரும் இருந்ததில்லை. இப்பொழுதோ ஏறக்குறைய 1700 பேர் இருக்கிறார்கள். ஏறக்குறைய 48 கிராமங்களில் 800 பேருக்குமேலாய் ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் இவர்களுக்குள் திருப்பணி விடைசெய்ய அபிஷேகம் பெற்ற குருமார் இரண்டுபேர் திருநெல்வேலியிலிருந்து வந்த தமிழ் ஊழியர் 5 பேர். தெலுங்காசாமிகள் 30 பேர், இருக்கிறார்கள், இந்த 30 பேரில் 14 பேர் இந்த மிஷனரிலேயே கிறிஸ்தவர்களாகி இந்திய மிஷனெரிமாரால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். இவர்களில் 7 பேருடைய மனைவிகள் தோர்ணக்கல் பள்ளிக்கூடத்திலேயே படித்துத் தேறினவர்கள். எழுவருஷத்திற்குமுன்னே எழுதவாசிக்கத் தெரிந்தவர்கள் இவ்விடத்தில் ஒருவருமில்லை. இப்பொழுதோ 300 பேருக்குமேலான வர்கள்தெலுங்கு வேதாகமத்தை வாசிக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள். சிற்றின்பப் பாடல்களும் மதுபான அமளிகளும் கேட்டுக்கொண்டிருந்த கிராமங்களில் இப்பொழுது கிறிஸ்தவ கீர்த்தனைகளும், தொழிற் பாடல்களும் எப்போதும் பாடக் கேட்கலாம். 20 கிராமப் பள்ளிக்கூடங்களும் இரண்டு ஆண், பெண் போர்டிங் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. இவைகளிலிருந்தே இம்மிஷனுக்குத் தேவையான ஊழியர் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். வேதபாடம் தினமும் இரண்டு மணி நேரத்துக்கு நடத்தப்படுகிறது. சிறுவருக்கு விபசாயம், தச்சுத்தொழில், நெசவு தொழில் முதலிய கைத்தொழில்கள் பயிற்றுவிக்கப்படுகிறது. சுயாதீன ஊழியம் செய்வோர் சங்கமொன்றை உண்டாக்குவதற்கு ஏதுவாய் இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியான மகா-ன-ன-ஸ்ரீ ஏ. எஸ். அப்பாசாமி பிள்ளையவர்கள் 1000 ரூபாய்க்கு நிலங்களை வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். அதன் வருமானத்தைக்கொண்டு இரண்டு தெலுங்காசாமிகள் சம்பளமில்லாமல் ஊழியம்செய்து வருகிறார்கள். வேறொருவர் தச்சுவேலை செய்துகொண்டே தேவஊழியம் செய்கிறார். இலங்கையிலிருக்கிற மகா-ன-ன-ஸ்ரீ குலசேகரம் பிள்ளையவர்களும் இவ்வகைக்கென்று ஒரு நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்பாலிய சபையின் உதாரகுணம் மிகவும் புகழப்படத்தக்கது. 1914-ம்வருஷத்தில் இந்த ஜனங்கள் கொடுத்திருக்கிற காணிக்கை ரூ. 643—8—5. அவர்களுடைய கொடிய தரித்திரத்தையும் புறம்பான கஷ்டத்தையும் நோக்குங்கால், இத்தொகை அவர்கள் திராணிக்கு மிஞ்சினது என்று அறிந்து தேவனுக்குத் துதி செலுத்தித் தையிரியங்கொள்ளக் கூடும். இவ்விடத்துச் சபையார் அறிவிலும் கிறிஸ்தவ சீலங்களிலும் விருத்தியடைவதற்கான பலமுயற்சிகளும் செய்யப்படுகின்றன. அவற்

றில் பாலியர் மிஷன், மிஷனரி சங்கம், ஸ்திரீகளின் சுவிசேஷ ஊழிய உதவிச் சங்கம், சுதேச ஆலோசனைச் சங்கம் என்பவைகள் ஏற்பட்டுச் சிறப்பாய் வேலை நடக்கின்றன. ஞானஸ்நானத்திற்கும் திடப்படுத்தலுக்கும் ஆயத்தப்படுகிறவர்களை மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் தாமே படிப்பிக்கிறார்கள். வேனிற்காலப் பள்ளிக்கூடங்கள், மௌனதியானங்கள் முதலியவை நடத்தப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சி பெருகி வருகிறது. சபையார் தனித்தியானம் செய்யவும் வேத ஆராய்ச்சி செய்யவும் சுயாதீன ஜூழியம் செய்யவும் ப்யிற்றுவிக்கப்படுகிறார்கள். திருநெல்வேலி இந்திய மிஷனரி சங்கமானது தெலுங்கு நாட்டில் வேலை செய்வதுமன்றி 1908-ம் ஸ்ரு முதல் மேல்காத்து மலைகளிலுள்ள பளியர்களுக்குள்ளும் வேலை செய்கிறது. இவ்வேலை முன் ஸி. எம். எஸ். சங்கத்தாரால் நடத்தப்பட்டு மேற்சொன்ன வருஷத்தில் நமது சங்கத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. பூர்வீக திராவிட வகுப்பைச் சேர்ந்த இப்பளியர் குள்ளரும், சுருண்டமயிருள்ளவர்களும், மலைக்குகைகளில் வசிப்பவர்களும் பெரும்பாலும் காய், கனி, கிழங்குகளைத் தின்று பிழைப்போருமாயிருக்கின்றனர். பேய் வணக்கமே அவர்கள் மார்க்கம். 1908ம்ஸ்ரு-த்தில் அவர்களுக்குள் கிறிஸ்து மதத்தைத் தழுவினவர்கள் 120 பேர். ஞானஸ்நானம் பெற்றவர்கள் 50 பேர். இப்பொழுதோ 363 பேர் மனந்திரும்பியிருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றிருக்கிறவர்கள் 178. தேவ நற்கருணைக் காரர் 21. இச்சாதியார் வீடு கட்டி நிலையாய் ஓரிடத்தில் குடியிராமையினலும், அவ்விடம் மலைச்சார நாடாயிருப்பதினலும் அவர்களுக்குள் வேலை செய்வது மிகப்பிரயாசமே. நாகரீகமற்ற மிலேச்சரான இப்பளியருக்குள் உண்டாகியிருக்கிற மாறுதலையும் கிறிஸ்தவ சேஷ்டையும்பார்த்தால், கிறிஸ்துமார்க்கத்தின் மகா வல்லமையைக் கண்டு பிரமிப்படைவோம்.

5. **இச்சங்கம் இன்னும் செய்ய முயற்சிக்கிற காரியங்கள்.** இதுகாறும் நாம் எதிர்நோக்கிருப்பதெல்லாம் இச்சங்கத்தின் பாலிய ஸ்திதியே தவிர வேறென்ன? இன்னும் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. சுதேச அரசாட்சி நாடுகளில் கிறிஸ்தவக் கோயில்கள் கட்டுவதற்கு அனுமதி கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. ஆதலால் ஜனங்கள் மரங்களினடியிலும் தெருத்திண்ணைகளிலுமிருந்து தேவாராதனை செய்யவேண்டியதிருக்கிறது. மழை, காற்று, வெயில், பனி முதலியவற்றால் இவ்விதமாய் ஆராதனை செய்வதற்கு மிகுந்த தடையுண்டாகிறது. ஆதலால் இனி நமக்கு அநேக கோயில்கள் கட்ட நிலங்களும் பணங்களும் தேவை. தோர்ணக்கல் அத்தியக்ஷாலயத்திற்கு 1915-ம்ஸ்ரு ஜனுவரி மாசம் 15-ம்உ மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களால் அஸ்திபாரம் போடப்பட்டு, இன்னும் வேலை தொடங்காமற் கிடக்கிறது. அதற்கு இச்சங்கத்தின் ஒநேகிதர் 6000ரூ. கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் 10,000ரூ. வேண்டியதிருக்கிறது.

சுவிசேஷம் செல்லாத இடங்கள் இன்னமும் ஏராளமாய் இருக்கின்றன. தாற்றுக்கணக்கான உபாத்திமாரும் சுவிசேஷகரும் நியமிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. மாபூபப்பாத்தாலூகாவின்வடபாகத்திற்கு அவசியமாய் ஒரு மிஷனெரி தேவையிருக்கிறது. போர்டிங் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டிராளான பிள்ளைகள் வருகிறார்கள். அவர்களைப் போஷிக்கப் பணமோ இல்லை. வருஷமொன்றுக்கு ஒரு பிள்ளைக்கு 36ரூ செல்லும். பளியர் மிஷனுக்கும் கோவில்களும் பள்ளிக்கூடங்களும் கட்டுவதற்கான நிலங்களும், பொருளும் தேவையாயிருக்கிறது.

உலக இரக்ஷிப்பு கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் வசம் ஒப்புவித்திருக்கும் பொருள். உலகத்தை ரக்ஷிப்பது எப்படி?

(1) விசுவாசமுள்ள ஜெபத்தினல்,
(2) நல்ஜீவியத்தின் சொல் வாக்கினல்,
(3) பட்சமான எச்சரிப்புகளினல்,
(4) வசப்படுத்தும் பிரசங்கத்தினல்.

45-ம் சங்கீதம்

'நேசப்பாட்டு' என்று முகவுரையில் பேர் பெற்ற இவ்வின்ப கீதம் யாரால் எச்சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டதென்று திட்டமாய்ச் சொல்ல எதுவில்லை. ஓர் ராஜாவின் விவாஹ மஹோற்சவத்தில் பாடிய மங்கள கீதம் என்று தோன்றுகிறது. சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணினபோது (1 ராஜா 3: 1) பாடப்பட்டதாயிருந்தாலும் இருக்கலாம்.

யாரைப்பற்றி முதல் முதல் இக்கீதம் எழுதப்பட்டபோதிலும், மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனம் இதிலிருப்பதாக பூர்வ முதல் யூத வியாக்கியானிகளும் திருச்சபை பிதாக்களும் கூறிவந்திருக்கிறார்கள். தேவ பக்தியும், மேனி அழகும், மனே பலமுமுள்ள எந்த யூத ராஜ குமாரனைப்பற்றியும் இவன்தான் தேவனுல் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவோ என்று யூதர் எக்காலத்திலும் எண்ணினபடியால், ராஜ மகத்துவத்தைப்பற்றி வர்ணிக்கும் பக்தர் பூலோகத்தில் ஓர் ராஜாவைப் புகழுவதுபோலல்ல, தெய்வீக நியமுகமும் அதிகாரமும் பெற்று, சதாகாலமும் அரசாளும் மேசியாவைப் போற்றுவதுபோலவே போற்றிப் புகழ்ந்து பாடினுர்கள் என்று அனுமானிக்கலாம். இக்கீதத்தில் இது விசேஷித்த விதமாய்த் தெரியவருகிறது. ராஜாவைப்பற்றிச் சொல்லியவை மானிட ராஜாவில் நிறைவேறக்கூடியவைகளுமல்ல, ராஜகுமாரத்தியைப்பற்றிக் கூறியவை மானிட ராஜகுமாரத்தியைப்பற்றி உண்மையாயிருக்கக்கூடியவைகளுமல்ல. ராஜாவைப்பற்றிச் சொல்லியவை பூரணமாய் இயேசு ராஜாவுக்கே செல்லும். அப்படியானுல், ராஜகுமாரத்தியைப்பற்றிச் சொல்லியதினைத்தும், அவரது ஞான மணவாட்டியாகிய திருச்சபைக்குச் செல்லுபவை. தேவனுடைய ஜனத்தை தேவனுடைய மணவாட்டியாகக் கூறுவது தீர்க்கதரிசிகளுக்கும் சகஜமே. (ஏசா. 54: 5; ஓசி. 2: 19; எரே. 31: 3, 4).

இவ்வாறு அர்த்தம்பண்ணி தியானிப்பது இச்சமயத்தில் தகுதியாயிருக்கும். சங்கீதத்தின் முக்கிய பிரிவுகள் இரண்டு. (1) மணவாளன் சிறப்பு வா. 2—9. (2) மணவாட்டி சிறப்பு வா. 10—15. இவற்றிற்கு முன்னும் பின்னும் ஓர் முகவுரையும் ஓர் ராஜ வாழ்த்தும் உண்டு.

(1) முகவுரை வா. 1,

என் இருதயம் நல்லவிசேஷத்தினல் பொங்குகிறது.

நான் ராஜாவைக்குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்.

என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி.

இயேசு ராஜாவின் சிறப்பைக்கூற எப்பேர்ப்பட்ட எழுத்தாணியும் பேனுவும் போதுமோ?

(2) மணவாளன் சிறப்பு வா. 2–9.

i. மணவாளன் அழகு வா. 2.

மனுப்புத்திரரில் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்!

உமது உதடுகள் அருள்பொழியப் பெற்றவை!

ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதித்திருக்கிறர்.

இயேசு ராஜாவுக்கு இவ்வர்ணிப்பு நன்ருய்ப் பொருந்தும். அவரது திருமேனியும் அவர் திருவாய் மொழியும் விசுவாசிக்கு மகா சிரேஷ்டமானவைகள்தான். அந்தத் திருமேனியல்லவா நீசப்பாவிகளுக்காக அடிபட்டு, வேதனையடைந்து, மரணபரியந்தம் பாடுகள்பட்டது! அவர் திருவாய் மலர்ந்த அருள்மொழியல்லவா பாவிக்கு ஜீவனையும் நம்பிக்கையையும் அருளிச்செய்தது!

ii. மணவாளன் வல்லமை வா. 3—5.

வல்ல வீரனே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உமது பட்டயத்தை நீர் உமது அரையில் கட்டிக்கொள்ளும்!

சத்தியத்தினிமித்தமும், சாந்தத்தினிமித்தமும், நீதியினிமித்தமும் உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிச்செல்லும்!

உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்குப் படிப்பிப்பதாக!

உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள்!

அவைகள் ராஜாவின் சத்துருக்கள் இருதயத்திற்குட்செல்லும்.

ஜனசமூகங்கள் உமக்கு கீழே விழுவார்கள்!

மகிமையும் மகத்துவமும் அவர் பட்டயமாம். சத்தியத்திற்காகவும், சாந்தத்திற்காகவும், நீதிக்காகவும் அவர் யுத்தம் செய்கிறவராம். சத்துருக்கள் திகிலடையத்தக்க வல்ல கிரியைகளை அவர் வலது கரம் விளங்கப்பண்ணுமாம்! அவர் அம்புகள் அங்கும் இங்கும் பாயும்போது, ஜனங்கள் கும்பு கும்பாய் அவர் பாதத்தின் கீழ் விழுவார்களாம்! இயேசு சுவாமி விஷயமாய் இது எத்தனை உண்மை! சத்தியத்தையும், நீதியையும், மனத்தாழ்மையையும் ஸ்தாபிக்கும்படி இயேசுராஜா படை எடுத்துச் செல்லுகிறார். அவருடைய வார்த்தையாகிய அம்புகள் செல்லுமிடமெங்கும் ஜனங்களும் ஜாதிகளும் கும்பு கும்பாய் அவர் பாதாரவிந்தம் சேருகிறார்கள். சவுரியவானே, உமது மகத்துவத்திலே இன்னும் ஜெயமாக ஏறிச்செல்லும்!

iii. மணவாளன் ராஜரீகம் வா. 6, 7.

உமது சிங்காசனம் தேவசிங்காசனம்;

உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியின் செங்கோல்;

நீர் நீதியை நேசித்து, அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர்.

ஆதலால், தேவன், உம்முடைய தேவன். உமது தோழருக்கு மேலாக, உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணியிருக்கிறார்.

மானிட ராஜாவுக்கு இவை பொருந்தக்கூடிய வார்த்தைகளல்ல. தேவனுடைய ஜனங்களின் அரசன் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தானென்ற கொள்கையினால் இவ்வாறு பேசியிருக்கிறது. தோழர் என்றால் மற்ற ராஜாக்கள், பிரபுக்கள் என்றர்த்தம். இயேசு ராஜாவுக்கே இதுவும் பூரணமாய்ப் பொருந்தும். அவர் சிங்காசனமே தேவ சிங்காசனம். அவர் செங்கோலே நீதியின் செங்கோல். நீதியை நிலைநிறுத்தின சம்பூரண பரிசுத்தர் அவரே. 'துக்கம் நிறைந்தவரும் பாடனுபவித்த'வருமாயிருந்தபோதிலும், உலகம் தரக்கூடாத சமாதானத்தையும் நிறைந்த சந்தோஷத்தையுமுடையவர் அவரே. அவருடைய சம்பூரணத்திலிருந்து நாமெல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெறுகிறோம்.

iv. மணவாளன் மணவறை வா. 8, 9.

உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம், லவங்கம், சந்தனம்!

தந்த அரமனைகளிலிருந்து தந்த வாத்தியங்கள் உம்மை மகிழ்ச்சியாக்கும்!

உமது நாயகிகளுக்குள்ளே அரசர் குமாரத்திகளுண்டு.

ராஜஸ்திரீ ஒப்பீரின் தங்கமயமாய் உமது வலது பாரிசத்தில் நிற்கிறாள்!

வாசனைத் திரவியங்கள், மேளதாள சங்கீத ராகங்கள், உயர்குலப் பெண்கள் முதலியவற்றை பூர்வகாலத்து ராஜாக்கள் சம்பிரம உல்லாசத்துக்கு அறிகுறிகளாக எண்ணினார்கள். வாசனைத் திரவியங்களால் கமகமவென்று பரிமளித்தவராய், இங்கித கீதவாத்திய ராகங்கள் காதில் விழ, ராஜா எழுந்து பெண்களிருக்கும் அறைக்கு விஜயமாகிறாராம். அவருடைய பெண்களில் அரசர் குமாரத்திகள் உண்டாம். ராஜ ஸ்திரீயோ அவர்களனைவரிலும் சிரேஷ்டமானவளாய், ஒப்பீரின் தங்கமணிந்து, அவர் வலது பாரிசத்தில் நிற்கிறாளாம்!

இயேசு ராஜா தமது மனையாட்டியைத் தேடி வந்தபோது, ராஜாவாகவல்ல, ஏழைப் பிள்ளையாய்; தந்த அரமனையிலல்ல, மாட்டுக் கொட்டிலில்; கந்தவர்க்கம் நிறைந்த உடை தரித்தல்ல, கந்தைத்துணி போர்த்தவராய்; மேளதாள வாத்தியங்கள் நடுவிலல்ல, மாட்டுத் தொழுவத்தின் கதறுதல் மத்தியில், தன்னந் தனிமையாய்த் தோன்றினார்!

நாடி எனைத்தயவாய்—மணஞ்செய்ய
தேடி வந்தீர் அரசே!

3. மணவாட்டி சிறப்பு வா. 10—15.

(i) மணவாட்டிக்குப் புத்தி வா. 10—12.

குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக்கொள்:—

உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு;

அப்பொழுது, ராஜா உன் அழகில் பிரியப்படுவார்;

அவர் உன் எஜமான், ஆகையால் அவரைப் பணிந்துகொள்.

அப்பொழுது தீருகுமாரத்தி காணிக்கையுடன் வருவாள்.

ஜனங்களின் ஐசுவரியவான்களும் உன் தயவுக்காகக் கெஞ்சுவார்கள்.

ராஜ ஸ்திரீயாகும் மணவாட்டி தன் சொந்த வீட்டை மறக்க வேண்டியது கடமையே. திருச்சபைக்கு இது எவ்வளவு நன்றாய் பொருந்தக்கூடியது! சபையானது உலக ஆசை, உலக இன்பம், உலக சம்பந்தத்தை மறந்து விடும்போது, அதுவும் தன் மணவாளனுக்குப் பிரியமானதாகும். தான் விட்டு வந்த பழைய உலகத்தோடு சேர்ந்து, அவ்வுலகத்தின் பழக்க வழக்கத்தைப் பின்பற்றும் போது, தன் வல்லமையை இழந்துபோகும். ஆனால் உலகத்தைவிட்டுப் பிரிந்து, தன் ரக்ஷகரைத் தன் எஜமான் என்று ஏற்றுக்கொண்டு அவரைக் கனப்படுத்தும்போது, உலகத்தார் அதின் தயவை நாடிக்கெஞ்சி நிற்பார்கள்.

ii. மணவாட்டி சிங்காரிப்பு.

உள்ளேயிருக்கும் ராஜகுமாரத்தி பூரண மகிமையுள்ளவள்.

அவள் உடை பொற் சரிகை.

சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவாள்.

அவள் பின் செல்லும் அவள் தோழிகளாகிய கன்னிகைகளும் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்.

மகிழ்ச்சியோடும் களிப்போடும் கூட்டிக்கொண்டு வரப்பட்டு, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.

திருச்சபையும் பூரண மகிமை பொருந்தியதே. மணவாளனுக்காக மணவாட்டி சிங்காரிக்கப்படுவதுபோல, இயேசு ராஜாவுக்காக பரிசுத்த ஆவியானவர் இச்சபையை நாடோறும் பரிசுத்தப்படுத்தி சிங்காரிக்கிறார்.

4. முடிவுரை—ராஜ வாழ்த்து வா. 16,17.

உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்.

அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்.

எல்லாத் தலைமுறைகளும் உமது நாமத்தை நினைவுகூறும்படி செய்வேன்.

இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் துதிப்பார்கள்.

கீர்த்தி பிரதாபமடைந்த முற்பிதாக்கள் உமக்கு இல்லாதிருந்தாலும், கீர்த்தி பிரஸ்தாபமடையும் பிள்ளைகள் உமக்கிருப்பார்கள். அவர்கள்மூலமாய்த் தலைமுறை தலைமுறையாக பூமியெங்கும் உமது நாமம் புகழ்ந்து போற்றப்படும் என்று வாழ்த்துகிறான். இதுவும் இயேசு ராஜாவுக்கே சொல்லக்கூடியது. அவருடைய சீஷரே பூமியெங்கும் பிரபுக்களாகிறார்கள். பூலோகத்தையும் பரலோகத்தையும் நியாயந்தீர்க்கிறவர்களும் தேவனுடைய ராஜ்யத்தில் நியாயாசனங்களில் உட்கார்ந்திருக்கிறவர்களும் அவர்களே. அவர் நாமமே சதாகாலங்களிலும் தலைமுறை தலைமுறையாகத் துதித்து தோத்திரிக்கப்படுகிறது.

நாமும் நமது ஆண்டவரை இவ்வாறே வாழ்த்துவோமாக. அவர் தாசர் பூமியெங்கும் அவர் நாமத்தைப் பிரஸ்தாபிக்கச் செல்லுவார்களாக! அவர் திருநாமம் சதாகாலங்களிலும் பூமியெங்கும் புகழப்படுவதாக! ஆமென் ஆமென்.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

கடந்த எட்டு வருஷங்களில் நமது தச்சு கலாசாலையின் அபிவிருத்தி:—

நமது தச்சுப்பள்ளிக்கூடத்தில் முதல் முதல் படிக்கும்படி வந்தவர்கள் பூர்வம் எருக்கல வகுப்பைச் சேர்ந்த மூன்றுபேர், பூர்வம் ஒட்டர்குலத்தைச் சேர்ந்த இரண்டுபேர், பூர்வம் மால குலத்தைச் சேர்ந்த நாலுபேர். இவர்கள் ஒன்பதுபேரில் சிலர் தப்பிதத்தினிமித்தம் பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். ஒட்டர், எருக்கலர் ஐவரில் நால்வர் மார்க்கத்தை விட்டுப் பின்வாங்கிப் போனார்கள். ஒருவர் பாளையங்கோட்டை சபாமண்டபத்தில் வந்து சாட்சிசொன்ன தோமாஸ். முன்னால் இவருடைய சொந்தத் தொழில் கூடைகள் பின்னுகிறதும் தட்டிகள் பின்னுகிறதும் களவு செய்கிறதுமே. இவ்வேலையினால்மாசம் ரூ. 2 சம்பாதிப்பது அரிது. இப்பொழுது தச்சுவேலையினால் மாசம் ரூ. 10-க்குமேல் சம்பாதிக்கிறான். இவர் மனைவி நமது போர்டிங் பெண்பாடசாலையில் முதலாம் வகுப்பு படித்துக்கொடுக்கிற பிரேமம்மாள். இவளுக்கு மாசம் ரூ. 4 சம்பளமாகக் கொடுக்கிறார்கள். இவள் தங்கை நமது போர்டிங் பாடசாலையில் படித்துவருகிறாள்.

இவளுடைய தாயும் தகப்பனும் கிறிஸ்துமார்க்கத்தில் உண்மையாய் நிலைத்திருக்கிறார்கள்.

நமது போர்டிங் பையன்களில் 8 பையன்கள் காலை 1½ மணி நேரமும் 10 பையன்கள் மாலை 1½ மணி நேரமும் தச்சுவேலை படித்து வருகிறார்கள். இவர்களில் V. சுதரிசனம், சி. லூக்கா என்ற இருவர் வேத பாடம் படித்தபின் முழுநேரமும் தச்சுவேலை செய்கிறார்கள். இப்பொழுது சுகர்சனம் மாசம் சராசரி ரூ. 5 சம்பாதிக்கிறான். இதில் சாப்பாட்டிக்காக மாசம் ரூ. 3 எடுத்துக்கொள்ளுகிறோம். மீதியை நமது மிஷன் சேவிங்ஸ் பாங்கில் போட்டுவைக்கிறோம். சுரண்டை போர்டிங் பிள்ளைகள் ஆதரவு இனி வேறொரு பையனுக்குப் போகும்.

அப்படியே சிலுக்க லூக்காவும் பாளையங்கோட்டை ஹைஸ்கூல் பையன்களால் ஆதரிப்புப்பெற்று படித்தவன். இவனும் இப்பொழுது மாசம் ரூ 3. சம்பாதிக்கிறான். படிப்பைப் பார்க்கிலும் கைத்தொழில் படிக்கிறது தங்களுக்கு மிகுந்த லாபமென இவர்கள் நினைக்கிறார்கள்.

கடந்த மார்ச்சு மாசம் நடந்த ஆனந்தப் பண்டிகைக்கு காலை, மாலை 1½ மணி நேரம் படிக்கும் பையன்களும் மற்றவர்களும் சேர்ந்து சொந்த மரம் வாங்கி, சொந்த நேரத்தில் கட்டில், நாற்காலி, பெட்டி, ரூலர்கள் முதலிய சாமான்கள் செய்து, உற்சாகமாய்க் கர்த்தருக்குக் காணிக்கையாகப் படைத்தார்கள். இவைகளின் கிரையம் சுமார் ரூ. 18 பெறுமானது.

பள்ளிக்கூட ஆரம்பத்தில் பையன்களுக்கும் பிராயமானவர்களுக்கும் படித்துக் கொடுக்க இடம் கிடையாமல், முதலாவது வில்லேத்திர மாதத்தின் கீழும், இரண்டாவது புளியமாத்தின் கீழும், மூன்றாவது ஒரு சிறு குடிசையின் பிராந்தாவிலும் அவர்கள் தச்சுத் தொழில் படித்தார்கள். தேவகிருபையாலும், கைத்தொழில் சாலைகள் அதிக விருத்திக்குவரவேண்டுமென நினைத்து மகாகனம் அத்தியக்ஷரவர்கள் செய்த பிரயத்தனங்களை கமிற்றிமார் ஒப்புக்கொண்டதாலும், கடந்த செப்டெம்பர்மீ முதல் ரூ. 1000 செலவுசெய்து கட்டப்படும் ஒரு கட்டடத்தில் வேலை செய்கிறோம். இது 75 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ளது. மரங்கள் வைப்பதற்கு ஒரு அறையும் தச்சு சாமான்கள் வைப்பதற்கு ஒரு அறையும் இரண்டு கோடியிலுமுண்டு. தச்சுவேலைக்கு வெளியேயிருந்தும் ஆடர்கள் அனேகமாய் வருகிறபடியால், வேலைசெய்ய இன்னும் ஆட்கள் வேண்டியதிருக்கிறது. அப்படி பெரிய ஆட்களை எடுத்துப் பயிற்றுவிக்கவேண்டுமானால், மாசம் ஒன்றுக்கு ரூ. 5 வருஷாந்தரம் அவர்களுக்குச் செலவு பிடிக்கும். ஆகவே பிள்ளைகளையே நாளடவில் பயிற்றுவிக்க வேண்டும். இவ்வாறு தொழில் பயிலுகிறவர்கள் காலா காலத்தில் சுயஆதரவு ஊழியராய் சபைகளைப் பார்த்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

நாளது வருஷமுதல் இப்பள்ளிக்கூடத்தில் கம்மாமெற்றுப் பையன்கள் படிக்கிறார்கள். அத்தியக்ஷ மண்டல முழுவதிற்கும் இது இவ்வாறு பிரயோஜனப்படுகிறது சந்தோஷம். கம்மாமெற்றுப் பையன்களில் ஒருவன் சூலைமாசம் முதல் தன்னை ஆதரித்துக்கொள்ளக்கூடியவனுவான்.

எனக்கு அதிக உதவி செய்கிறவர் Mr. R. E. தேவதாசன். இவர் குலமாணிக்கபுரத்திலிருந்து குணப்பட்டு, இங்கே வந்தபின் ஞானஸ்நானம் பெற்றவர். நான் ராஜாவுக்கு வந்திருந்த காலத்தில் தச்சுப்பள்ளிக்கூடத்தை இவரே பார்த்தார். இப்போது ஒரு வகுப்புக்குப் படிப்பித்து வேலைகளனத்தையும் மேற்பார்ப்பதுடன் தாமும் வேலை செய்வார். இவ்வாறு கடந்த வருஷத்தில் கம்மாமெட்டி மிஷனுக்கு ஏழு ராப்போஜன மேஜைகள், பாத்திரங்கள் வைக்க பெட்டி, அத்தியக்ஷரவர்கள் பீடம், பயிற்சிசாலை மாணவர் வசிக்கும் வீட்டு மரவேலை, செசவு சட்டட மரவேலை, நெசவுத்தரிகள் முதலிய தளவாடங்கள், கண்ணாடி ஜன்னல்கள், அல்மைராக்கள், கட்டில்கள், பெஞ்சுகள், ரெயில்வேயில் சில வண்டிகள் முதலிய வேலைகள் இங்கே நடந்திருக்கிறது.

வேலையை இன்னும் அதிகமாய் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படிக்கும் இங்கு நடைபெறும் மிஷன் வேலைக்கு இன்னும் அதிக சகாயம்கிடைக்கவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

——— K. முத்துசாமி.

திருநெல்வேலி, மதுரை

அத்தியக்ஷாதீன பத்திரிகை

மூன்று மாசத்துக்கொருமுறை பிரசுரமாகும்.

திரித்துவ ஞாயிறு

கிறிஸ்து சபை ஆசரிக்கும் பெரிய பண்டிகைகளில் கடைசியானதை இம்மாசம் கொண்டாடுகிறோம். கிறிஸ்தவ ஜீவியத்துக்குதவியான போதனைகளைச் சிக்கிரப்பதற்கு இனிவரும் ஒய்வுநாட்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. திருச்சபையின் வருஷம் அட்வெந்து நாட்களில் ஆரம்பிக்கிறது. தேவன் மனுஷருக்குள் வாசம்பண்ணுவதையும் அவர் மனுஷீகத்தைத் தரித்துக்கொண்டதையும் அந்நாட்களில் தியானிக்கிறோம். மனுஷரை நியாயந்தீர்க்கும்படி அவர் வரும் இரண்டாவது வருகையை மாத்திரமல்ல, தம்மைப்பற்றி அவர் எப்போதும் கொடுத்துக்கொண்டு வருகிற வெளிப்படுத்தலைப்பற்றியும் நினைக்கிறோம். இவ்வெளிப்படுத்தலில் இரு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. மனுஷருக்கு அவர் பிறந்தது ஒன்று. கர்த்தராகிய இயேசு ரக்ஷகர் மகிமைபொருந்தினவராக வெளிப்படுவதும் அம்மகிமையில் நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோமென்றும் அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறோமென்றும் அவர் தொண்டர் காண்பதும் மற்றொன்று.

தேவன் மனுஷனையையும் அதனால் மனுஷர் தேவபுத்திராராகும் சலாக்கியம் பெற்றிருப்பதையும் கன்னியாதிதலான இருதயத்துடன் கிறிஸ்மஸ் பண்டிகையில் கொண்டாடினோம்.

பிரசன்ன திருநாளில் மேற்கண்ட சத்தியம் உலகத்தார் யாவருக்கும் வெளிப்படுத்தப்படவேண்டுமென்று கற்கிறோம். கிறிஸ்துவானவர் யூகலாப்போன்ற ஒரு ஜாதியாருக்காவது, ஒரு வர்ணத்தவருக்காவது, ஐசுவரியவான்களுக்காவது, படிப்பாளிகளுக்காவதுமாத்திரம் உரியவரல்ல, காலுநிலமையிலுள்ள யாவருக்கும் உரியவர். 'தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது'. ஆகவே மனுஷரின் ஸ்திதியைக் கவனியாமல், சின ஜாதியாரென்று புறக்கணிக்கப்படுவோருக்கும் உயர் குலத்தாரால் ஒடுக்கப்படுகோருக்கும் இயேசுவை கூறி அறிவிப்பது நமதுபேரில் விழுந்த கடமையே.

அப்பால் கிறிஸ்துவின் சோதனைகளையும் பாடுகளையும் தியானிக்கிறோம். நம்மில் ஒருவராக இயேசுநாதர் இருந்து, நமது துக்கங்களையும் சந்தோஷங்களையும், நமது பெலவீனங்களையும் சோதனைகளையும் அறிந்து, நம்முடன் பூரணமாக அனுதாபப்படுகிறவராயும் நமது துக்கங்களையும் பெலவீனங்களையும் சுமக்கிறவராகவும் இருக்கிறார்.

அப்பால் பெரிய வெள்ளிக்கிழமையில் அவருடைய மரணத்தையும் நம்முடைய மீட்பையும்பற்றி தியானிக்கிறோம். அவர் செலுத்திய பலியினால் நாம் ரக்ஷிக்கப்படுகிறோமாதலால், நாம் அவரைப்போல ஜீவித்து, அவருடைய ஊழியத்திற்கு நம்மைப் பிரதிஷ்டைசெய்ய ஏவப்படுகிறோம். அதுமாத்திரமல்ல, உலகத்தார் யாவருக்காகவும் அவர் மரித்திருப்பதால், அவர்களை அவரிடத்தில் கொண்டுவரும்படி உழைக்கவும் தூண்டப்படுகிறோம்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகையாகிய ஈஸ்தர் தினம் நமக்கு சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் அருளுகிறது. அவர் மரணத்தை ஜெயித்துவிட்டார். அவர் பேரிலுள்ள விசுவாசத்தினால் இம்மையிலே

புதிய ஜீவியம் செய்ய ஆரம்பிப்போமானால், நாம் அவரோடு சதாகாலங்களும் பிழைப்போம்.

கிறிஸ்துவானவர் பிதாவினிடத்திற்குப் போய், நமது இருதயங்களில் வாசம்பண்ணும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பிக்கொண்டிருப்பதினால், மாம்சப்பிரகாரமாக அவர் இனி பூமியிலிருப்பது அவசியமில்லையென்று கிறிஸ்துவின் பாமேறுதல் நமக்குப் போதிக்கிறது. அவர் பரலோகத்திலிருக்கிறதினால், அவர் எப்போதும் நம்முடன் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் திருநாளைக் கொண்டு நமக்குப் புகட்டப்படும் சத்தியத்தை அதிகக் கவனமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நல்லவர்களாகக் காணப்படும் சிலருக்குமாத்திரம் அருளப்படும் விசேஷ ஈவு அல்ல, சபையில் கிறிஸ்துவின் பிரசன்னமே பரிசுத்த ஆவியானவர். விசுவாசிக்கிற எல்லோருடைய இருதயத்திலும் அவர் இருக்கிறார். நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம்; ஆவியானவர் இச்சரீரத்தில் வாசம்பண்ணுகிறார். நம்முடைய சபைகளிலும், ஆலோசனைச் சங்கங்களிலும், நாம் நடப்பிக்கும் எல்லாக் கிரியைகளிலும் அவர் பிரசன்னமாயிருக்கிறார். சுயநயத்துக்கு நாம் இடங்கொடுக்கும்போது, அவரை வெளியே துரத்திவிடுகிறோம். ஆவியானவர் நமது மத்தியில் பிரசன்னமாயிருப்பதை உணர்ந்து, நாம் செய்யும் சகல காரியங்களையும் கொஞ்சப்பேருடைய நன்மைக்கென்றல்ல, கிறிஸ்துவின் நாம மகிமைக்காகவும் அவருடைய ஜனங்களின் நல்வாழ்வுக்காகவும் செய்யும்பொழுது மாத்திரம் கிறிஸ்து சபை விருத்தியடையக்கூடும். பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட சம்பவத்தைத் தியானிக்கும் இந்நாட்களில் ஆவியானவரில் விசுவாசமுள்ளவர்களாக நமது ஜீவியத்தைப் புதிதாக ஆரம்பிப்போமாக. நம்முடைய சுயசித்தத்தை ஒழித்து, நம்மைச் சமூலமாக அவருடைய நடத்துதலுக்கு ஒப்புக்கொடுப்போமாக. நாம் கையிடும் ஒவ்வொரு விஷயத்திலும் 'கர்த்தாவே, உம்முடைய சித்தத்தை நடப்பிக்கக் கிருபை அருளும்' என்று சொல்லுவோமாக.

திரித்துவஞாயிறில் எல்லாச் சத்தியங்களையும் ஒன்றாகத் தியானிக்கிறோம். தேவன் நம்முடைய பிதா. பூமியிலுள்ள மிகவும்பட்சமான சந்தை தன் புத்திரனை நேசிக்கிறதைப் பார்க்கிலும் மிக்க அருமையாய் அவர் நம்மை நேசிக்கிறார். தேவன் மனுஷனாகி, மரித்து, நமக்காக உயிர்த்தார். பாவத்தை ஜெயிப்பதில் பெலனருளுவதற்காகவும், நாம் செய்ய விரும்பும் யாவற்றிலும் நம்மை ஒரே சகோதர ஐக்கியத்தில் இணைக்கும்படியாகவும் தமது பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளுகிறார்.

அத்தியக்ஷரவர்களின் சுற்றுப்பிரயாணம்.

பெப்ருவரி மீ 14உ அத்தியக்ஷாதீனத்தின் தென்பாகத்திலுள்ள மிஷன்ஸ்தானங்களைச் சந்திக்கும்படி புறப்பட்டேன். முதலாவதாகப்போன இடம் டோனாவூர். நாங்குனேரியிலும் பெரும்பத்திலுமுள்ள சில ஜனங்கள் எங்களை வழியில் சந்தித்தார்கள். என்ஜினியர் துரையவர்களின் மோட்டார் வண்டியில் பிரயாணஞ் செய்ததால், நாங்கள் நினைத்ததற்கும் ஜனங்கள் எதிர்பார்த்ததற்கும் ஏற்கனவே நாங்குனேரிபோய்ச் சேர்ந்து விட்டோம். ஆகவே, தாங்கள் ஒழுங்குகள் செய்திருந்த பிரகாரம் ஜனங்கள் எங்களுக்கு நல்வரவுகூறக்கூடாது போயிற்று. என்றாலும் அவர்கள் எங்களை மிகவும் பட்சமாய் ஏற்றுக்கொண்டார்கள். டோனாவூரில் ஓர் இரவு தாமதித்தேன். கனம் கார்மிக்கேல் மிசி அம்மாளவர்கள் மிகுந்த அன்புடன் எங்களுக்கு உபசரணைகள் செய்தார்கள். சிறு பெண்களுக்கு அவர்கள் கட்டியிருக்கும் வீடுகளைப் பார்த்தேன். நிர்ப்பந்தமான ஜீவியம் செய்வதிலிருந்து ரட்சிக்கப்பட்டிருக்கும் இச்சிறுமிகளின் முகக்களையும் சந்தோஷமும் வியக்கப்படத் தக்கதே "குமாரன் உங்களை விடுதலையாக்குவார்" என்று ரக்ஷாபெருமான் மொழிந்த சத்தியத்திற்கு இச்சாலை மகத்துவமான ஓர் சாட்சியமாக இருக்கிறதல்லவா?

பெப்ருவரி 15உ. குருமாருக்கும் பிரசங்கிமாருக்கும் விசேஷித்த ஆராதனைகளும் கூட்டங்களும் வைத்தேன். தவிரவும், போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தையும் சுற்றிப் பார்வையிட்டேன். இக்கலாசாலை நல்ல ஸ்தியிலிருப்பதாகத் தெரிகிறது. அன்று இரவு இடையன்குடிக்குப் புறப்பட்டு, அதிகாலை ஆங்குபோய்ச் சேர்ந்தேன். வழியில் யாதாமொரு சந்திப்புமில்லாமல், ஊர்போய்ச் சேருவதாக ஏற்பாடுசெய்திருந்தபோதிலும், மேளதாள வாத்தியங்களோடு ஓர் பெரிய கூட்டத்தார் எனக்கு வந்தனமளிக்கக் காத்து நின்றார்கள். அவர்கள் பாராட்டின அன்பை நான் மதியாததாக ஓர் கால் எண்ணியிருக்கலாம். காரியமென்னவென்றால், ராவேளைக்குரிய உடைதரித்திருந்ததால், வண்டியிலிருந்து வெளியே வரவாவது ஜனங்கள் கொண்டுவந்திருந்த இரதத்தில் ஏறி பவனி செல்லவாவது எனக்கு மனசு வரவில்லை.

பெப்ருவரி 16உ. மகாசனம் கால்டுவேல் அத்தியக்ஷரவர்கள் குடியேற்று கிராமமாகிய அவ்வூரையும் அவ்வத்தியக்ஷரவர்கள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் ஆலயத்தையும் மிகுந்த சந்தோஷகரமாய்ச் சுற்றிப் பார்த்து வந்தேன்.

பெப்ருவரி 17உ. ஆண்கள் பாடசாலை, போர்டிங் கட்டம், பெண்கள் பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி, புஸ்தகசாலை முதலிய ஸ்தாபனங்களைப் பார்ப்பதில் பின்னிட்டேன். ஆண்கள் பாடசாலை மிகவும் நல்ல ஸ்திதியிலிருக்கிறது. நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பெண்பிள்ளைகளுடைய பள்ளிக்கூடத்துக் கட்டடம் போந்ததும் வசதியானதுமல்ல. இரண்டு பள்ளிக்கூடங்களிலும் நல்ல வேலை நடந்து வருகிறது. ஆஸ்பத்திரி சிறியது என்ற போதிலும், அவ்விடத்திற்கு அவசியமானதே. புஸ்தகசாலையை ஜனங்கள் அதிகமாக உபயோகித்து வருவதாகத் தோன்றவில்லை.

பெப்ருவரி 13உ. இந்நாள் ஓர் அமரிக்கையான தினமாகக் கொண்டாடப்பட்டது. அநேக குருமார் கூடிவந்தார்கள். சி. எம். எஸ். சுவிசேஷபுரம் சர்க்கிளிலிருக்கும் இரு குருமாரும் வந்திருந்தார்கள். ஒன்றாய்ப் போஜனம் அருந்தி, ஆலயத்தில் ஆராதனை நடத்தி, எங்களுடைய வேலையைப்பற்றிப் பேசிக்கொண்டது மிகவும் இன்பமாயிருந்தது.

பெப்ருவரி 19உ சிறுவரின் பண்டிகை நாள். முதல் ஆராதனையின் மத்தியில் அவ்விடத்து குருவானவர் திடீரென மூர்ச்சையற்று விழுந்தார். மற்றப்படி இவ்விசேஷநாளின் ஆராதனைகள் யாவும் நன்றாய் நடந்தன. கேள்விகள் மூலமாய்ப் பிள்ளைகளுக்குப் போதனை கொடுக்கும் முறை சிறுவர் கிறிஸ்துமார்க்க சத்தியங்களை நன்றாய் அறிந்துகொள்ளுவதற்கு ஏற்ற துணையே.

பெப்ருவரி 20உ ஓய்வுநாள். வழக்கமான ஆராதனைகள் நடந்தது. மாலை ஆராதனைக்குப் பின் உவரி என்ற ஊரில் சுவிசேஷப் பிரசங்கம் நடந்தது. இரண்டு இடங்களில் பேசினோம். ஜனங்கள் நன்றாய் வசனத்தைக் கேட்டார்கள். சாலொமோனின் கப்பல்கள் போய் வந்த ஒப்பிர் என்னும் துறைமுகம் உவரி என்றும், இத்தலம் ஒரு காலத்தில் பெரிய துறைமுகப்பட்டணமாயிருந்ததென்றும் கால்டுவேல் அத்தியக்ஷரவர்கள் எழுதியிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷம் விளைவித்தது. குரங்குகளுக்கும் மயில்களுக்கும் எபிரேய பாஷையில் வழங்கும் பதம் தமிழ் வார்த்தையென்றும் இந்த ஜீவப்பிராணிகள் ஒப்பீரிலிருந்து வந்தனவென்றும் அத்தியக்ஷரவர்கள் காட்டுகிறார்கள்.

பெப்ருவரி 21உ திங்கள்கிழமை சமாரியா (திசையன் விளை) வுக்குப் போனோம். சபையார் எங்களைச் சந்தித்தார்கள். பேரிவியாபாரக் கம்பெனியார் டிராம் வண்டியில், இடைச்சிவிளைக்குப் போனோம். இங்கு நல்லம்மாள்புரம் சபையாரில் சிலவாச் சந்தித்தோம். அப்பால் தட்டான்மடம் சேர்ந்து, அங்கு ஜனங்களோடு ஒரு ஜெபக்கூட்டம் நடத்தினோம். இவ்விடத்திலிருந்து மாட்டு வண்டியில் போலையர்புரம் சென்றோம். ஜனங்கள் மிகுந்த அன்புடன் வந்தனோபசாரமளித்தார்கள். அங்கிருந்து முத

ஊருக்குப் போனோம். சாயந்தரம் ஓர் ஆராதனை நடத்தினோம். அதில் ரோமன் கதோலிக் சபையைச் சேர்ந்த 20 ஜனங்கள் நமது சபையில் சேர்க்கப்பட்டார்கள். மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்கள் இங்கு வந்த காலத்திலும் 53 பேரை நமது சபையில் சேர்த்ததுண்டு.

மீலை ஆராதனை பிள்ளைகளின் பண்டிகையின் ஆரம்ப ஆராதனையாக நடந்தது. 22-ம் உயாகிய மறுநாளில் மற்றும் ஆராதனைகள் நடந்தன. அன்று பிற்பகலில் கிறிஸ்தியாநகரத்துக்குப் புறப்பட்டுப் போனோம். வழியில் கிடாக்ஷபுரம் சபையாரும் இன்னோர் சபையாரும் எங்களுக்கு வந்தனோபசாரமளித்தார்கள். இருட்டின பின் கிறிஸ்தியாநகரம் சேர்ந்தோம். ஜனங்கள் வெற்றிலை பயிர்செய்து வருகிறார்கள். இவ்வித கொடிக்கால் ஜீவனம் அவர்களுக்கு மிகவும் வரும்படியுள்ளதாக இருக்கிறதாம். ஆராதனைக்கு மிகவும் கொஞ்சப்பேர் மாத்திரம் வந்திருந்தார்கள். கொடிக்கால்வேலையினால் ஜனங்கள் ஆலயத்திற்கு வரக்கூடவில்லையென்று சொல்லப்பட்டது. சிறு பிள்ளைகளின் உற்சவமும் நடந்தது.

சுவிசேஷ பிரபல்ய வேலை

நாம் செய்யவேண்டிய சுவிசேஷ பிரபல்ய வேலையை எப்படி பலிதமாய்ச் செய்யப்போகிறோம்? இவ்வூழியம் பலப்படுத்தப்படவேண்டியது மிக்க அவசியம். சில ஜனங்கள் மாத்திரம் கிறிஸ்துவை அறிந்து, சகல சலாக்கியங்களையும், நாகரீகத்தையும், செல்வாக்கையும் அனுபவிக்கவேண்டுமென்பது தேவன் கிறிஸ்துவை உலகத்துக்கு அனுப்பி, அவர் பிராணத்தியாகம் செய்யும்படி கொண்ட தீர்மானத்தின் நோக்கமல்ல. மனுஷர் ஒவ்வொருவரும் தேவபுத்திரராகி, பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதே தேவசித்தம். நம்மையடுத்துள்ள எவராவது, கிறிஸ்துவை அறியாதிருக்குமளவும், நாம் நிந்தைக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறோமென்பது திணணமே. இந்த நிந்தை நீங்கும்படி கிரியைசெய்வோமாக.

இவ்வேலையைச் செய்யவேண்டியவர்கள் யார்? சம்பளம் பெறுகிறவர்கள் மாத்திரம் செய்யவேண்டுமென்று அவர்கள் வசம் இவ்வூழியத்தை விட்டுவிடுவது காரியசித்திக்கு வழியாகாது. மெய்தான், அவர்கள் நல்லவேலை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் இவ்வூழியம் யாவற்றையும் செய்வது அவர்களுக்கு மிஞ்சினது. தேவனுடைய ராஜ்ய விர்த்திக்காக ஜெபிப்பதும் உழைப்பதும் திருச்சபையில் விசேஷ ஊழியங்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியர் மாத்திரமென்பது அவர்களையும் சேர்ப்புண்டாக்கும்; நாமும் பெற்றுக்கொள்ளவேண்டிய ஆசீர்வாதங்களைச் சரியாய்ப் பெற்றுக்கொள்ளாமற்போவதற்கு வழியாகும். மற்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி கிறிஸ்தவனொவ்வருவனும் ஊக்கமாய் முயற்சிப்பது அவன்பேரில் விழுந்த கடமை. நம்முடைய தொழிற்துறைகளில் புறமதஸ்தரைச் சந்திக்கிறோம். நமது வீடுகளில் அவர்களைப் பார்க்கிறோம். ஒவ்வொருவருக்கும் அவர்கள்பேரில் கொஞ்சமாவது சொல்வாக்குண்டல்லவா? கிறிஸ்துவுக்காக அதை உபயோகிப்போமாக. பள்ளிக்கூடம் அல்லது காலேஜ்களில் வாசிக்கும் வாலிபரும் வாலிப ஸ்திரீகளும், ஆபீசில் அல்லது மற்றும் இடங்களில் வேலை நடப்பிக்கும் புருஷரும் ஸ்திரீகளும் தாங்கள் சந்திக்கும் யாவருக்கும் உதவி ஒத்தாசை புரிந்து கிறிஸ்துவின் அன்பைக் காட்டலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் வருஷத்துக்கு ஒரு ஆளை கிறிஸ்துவினண்டை வழி நடத்தினால், நம்முடைய சபைகள் எவ்வளவாய் விர்த்தியாகக்கூடும்!

இவ்வேலையை எப்படிச்செய்ய வேண்டியது.

1. ஜெபம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்காக ஒவ்வொரு ஆலயத்திலும், சபையிலும், வீட்டிலும் விண்ணப்பம் நடக்கவேண்டும். புறமதஸ்தரை ரக்ஷியுமென்று பொதுவாகப் பிரார்த்திப்பது மாத்திரம் போதாது. நாம் அறிந்த ஜனங்களைக் கிறிஸ்துவின்முன் நிறுத்தி, தனித்தனி ஆட்களுக்காக மன்றாட்டுசெய்யவேண்டும்.

2. வேத ஆராய்ச்சி. நாம் ஒன்றாகக் கூடி, வேதத்தை வாசித்து, புறமதஸ்தருக்கு என்ன சொல்லவேண்டுமென்று கண்டுபிடிக்க ஜாக்ரதையாயிருக்க வேண்டும். கிறிஸ்தவனாக இருப்பதினால் நீ அடைந்திருக்கும் நன்மையென்ன? அறிவு, நாகரீக விஷயமான காரியத்தைக் குறித்து நான் பேசுகிறதில்லை. பாவத்தை ஜெயிப்பதில் வல்லமை பெற்றிருக்கிறாயா? தேவன் உன் பரமபிதாவாயிருப்பதை உணர்ந்து வருவதினால், துக்கம், கவலை நேருங்கால் ஆறுதலும் மன அமைதியுள்ளவனாக உன் ஜீவியத்தில் காட்டுகிறாயா? ஜெபங்களுக்கு உத்தரவு பெறுவது உன் அநுபவமா? கிறிஸ்தவர்களோடு சம்பாஷித்து தோழமையாய் நடப்பது உனக்குச் சந்தோஷமா? தேவ ஆராதனை வேளையிலும் பரி. இராப்போஜனத்திலும் தேவன் உனக்குச் சமீபமாயிருப்பதை உணர்ந்து வருகிறாயா? இவைகளைப் பற்றி மற்றவர்களுக்குச்சொல். மற்றவர்களுக்கு இவைகளைப்பற்றி அநுபவசாட்சி சொல்லத்தக்கதாக, அதிகமாய்க் கற்றுக்கொள்ள முயலு.

வாரந்தோறும் ஜெபத்துக்கும் வேத வாசிப்புக்கும் ஒன்றாய்க்கூடும் ஓர் கூட்டம் ஒவ்வொரு சபையிலும் ஸ்தாபிக்கப்படும்படி மிகவும் ஆசிக்கிறேன். சில சபைகளில் ஒன்றுக்கு அதிகமான கூட்டத்தார் இருப்பது வசதியாயிருக்கும். கிறிஸ்துவிலுள்ள சந்தோஷமும் சலாக்கியங்களும் எவையென்று கர்த்தருடைய வேத ஆராய்ச்சினாலும் ஜெபத்தினாலும் அதிகமாய்க் கற்றுக்கொள்ளக்கூடும்.

3. பிரசங்கம். கிறிஸ்துவைப் பற்றி ஜனங்களிடத்தில் பேசுவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். ஜனங்களை அறிந்து அவர்களுடன் பழகிக்கொள்ளத்தக்கதாக, ஒரே இடத்துக்கு அடிக்கடியாவது வாரத்தில் குறித்த ஒருநாளிலாவது போய்ப் பிரசங்கம் நடத்தும்படி தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். புறமதஸ்தருக்குப் பாடக்கூட்டங்கள் வைத்து, இப்பாடக்கூட்டங்களுக்கு அவர்கள் வரும்படி முயற்சிக்க வேண்டும். அவர்களோடு சம்பாஷணை செய்ய வழிவகைகள் தேடிக்கொள்ளுவது அவசியம், உபாத்திமார், உபாத்திச்சிமார் தங்களிடம் கல்வி கற்கவரும் பிள்ளைகளின் வீடுகளில் பெற்றோரைச் சந்தித்து, அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பைச் சொல்லி, அவர்களை ஆதாயம் பண்ண வேண்டும்.

சுவிசேஷ பாகங்களையும் தாள்ப்பிரதிகளையும் புறமதஸ்தருக்குக் கொடுத்து, உன்னை அடுத்துள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப்பற்றி அறியும்வரைக்கும் அமர்ந்திராதே.

உங்கள் சபையிலாவது கிராமத்திலாவது சுவிசேஷ வேலை செய்வதற்கு ஏதாவது விசேஷ ஒத்தாசை வேண்டுமானால், சி. எம். எஸ். ஜில்லா ஆலோசனை சங்கத்தாருக்கும் எஸ் பி. ஜி. ஜில்லா ஆலோசனை சங்கத்தாருக்கும் இவ்விஷயமாய் ஆலோசனை கொடுக்கும்படி ஏற்படுத்தியிருக்கும் கமிற்றிக்கு ஸ்தல குருவானவர் எழுதி உதவி பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர் குறிப்புகள்

நாளது வருஷம் ஆகஸ்ற்றுமீ 4உ யுத்தத்துக்காக ஜெபிக்கவேண்டிய ஜெபநாளாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய விசேஷித்த ஜெபமுறைமை ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. இவ்வத்தியக்ஷாதீனம் முழுவதிலும் அன்றையத்தினம் நமது ராஜாங்கத்தாருக்காகவும் ஐக்கிய தேசத்தாருக்காகவும் விசேஷித்த ஜெபநாளாய் ஆசரிக்கப்பட குருமார் சபைகள்தோறும் ஏற்ற ஏற்பாடுகள் செய்யக் கேட்கிறோம்.

ஜெபநாள்.

மார்ச்சுமீ 19உயாகிய லெந்துநாட்களில் வரும் இரண்டாம் ஞாயிறு தினத்தில் பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்தில் டீக்கன் பட்டம் பெற்றிருந்த நால்வர் குருப்பட்டாபிஷேகம் பெற்றார்கள். பட்டாபிஷேக ஆராதனைக்கடுத்த ஒழுங்குகள் யாவும் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தபடியால், சகலமும் மிகுந்த பக்திவினயமாக

பட்டாபிஷேகம்.

நடந்தன. பட்டம் பெறப் போகிறவர்களும் குருமாரும் மகாகனம் அத்தியக்ஷரவர்களும் கீதத்தோடு பவனிவர, கனம் மூர் ஐயரவர்கள் பீடம் சென்று, ஜெப அழைப்பை வாசித்துப் பிரசங்கம்செய்தார்கள். பின்னர் குருப்பட்டம் பெறப்போகிறவர்களை மகாகனம் அத்தியக்ஷரவர்களிடம் நிறுத்தினார்கள். ஸ்தலம் குருவாகிய கனம். M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் லித்தானியா பிரார்த்தனையை வாசித்தார்கள். மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பட்டாபிஷேக ஆராதனையையும் பரி. நற்கருணை ஆராதனையையையும் நடத்தினார்கள். குருப்பட்டம் பெற்ற நால்வரையும் ஆண்டவர் தமது மகிமைக்கென்று வல்லமையாய் உபயோகிப்பாராக.

கலியாண லைசென்ஸ்.

அறிக்கை வாசிக்காமல் விவாகம் நடத்தத்தக்க அதிகாரம் இதுவரை திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்தில் மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களின் அநுமதியின்பேரில் மகாகனம். திருநெல்வேலி அத்தியக்ஷரவர்களுக்குமாத்திரம்உண்டு. அவர்களே சரோகேற்றாகவிருந்து (Surrogate) விவாஹம் நடத்தி வந்தார்கள். நாளது வருஷத்தில் நமது அத்தியக்ஷரவர்களின் பிரயாசத்தின் பேரில் தூத்துக்குடியிலிருக்கும் கனம். W. E. இவான்ஸ் ஐயரவர்களும், பாளையங்கோட்டையிலிருக்கும் கனம் E. A. L. மூர் ஐயரவர்களும் அறிக்கை வாசிக்காமல் விவாகம் நடப்பிப்பதற்கு அதிகாரம் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது திருநெல்வேலி சபைக்குக் கிடைத்திருக்கும் ஓர் வசதியே. முதல் அப்பிளிக்கேஷன் செய்யும்போது மாப்பிள்ளை வீட்டார் மாத்திரம் சரோகேட் முன்னிலையில் வந்து காணப்படுவது போதும். அப்ளிக்கேஷன் செய்த நேரமுதல் நான்கு நாட்கள் பூரணமானால் தான் லைசென்ஸ் கொடுக்கப்படும்.

பிஷப் அவர்கள் சுற்றுப்பிரயாணம்.

இப்பத்திரிகையின் வேறோரிடத்தில் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் சூன், சூலை, ஆகஸ்ற்று மாசங்களில் செய்யப்போகிற சுற்றுப் பிரயாண ஊழியத்தின் ஒழுங்கு பிரசுரித்திருக்கிறது. அத்தியக்ஷாதீனத்திலுள்ள குருமார், தேவஊழியர், சபையார் யாவரும் இவ்வூழியம் திருச்சபைக்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும்படி ஜெபிக்கக் கேட்கிறோம். சந்திக்க வேண்டிய இன்னும் சில இடங்களுண்டு. அவைகளுக்குரிய ஒழுங்கு பின்னால் தெரிவிக்கப்படும்.

சுவிசேஷப் படைமுயற்சி.

அத்தியக்ஷாதீனம் முழுவதிலும் சுவிசேஷ ஊழியம் முயற்சியாய் நடைபெற வேண்டுமென்ற ஆத்திரம் சபையாருக்கும் தேவஊழியருக்கும் இருக்கிறதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சில சபைகளில் இவ்வூழியத்தை நூதன முறையாய்ச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இம்முறையை யாவரும் எளிதில் அறியும்பொருட்டு தூத்துக்குடி கனம். W. E இவான்ஸ் ஐயரவர்கள் ஓர் புஸ்தகம் தமிழில் பிரசுரித்திருக்கிறார்கள். அதின்விலை 6 பை. பிரதிகள் வேண்டியவர்கள் அவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். நாளது மேமீ டக்கரம்மாள்புரத்தில் நடந்த கன்வென்ஷன் கூட்டத்திலும் சுவிசேஷ ஊழியமே முக்கியப்படுத்திப் பேசப்பட்டது. இரண்டு கான்பரென்ஸ் கூட்டங்களும் நடந்தன. அத்தியக்ஷாதீனத்து இரு சங்கங்களுக்கும் பொதுவான ஓர் கமிற்றி மகாகனம். அத்தியக்ஷரவர்களால் ஏற்பாடாகி வருகிறது.

அசீரிய கிறிஸ்தவர்கள்

கூர்டிஸ்தானிலுள்ள அசீரிய கிறிஸ்தவர்கள். துருக்கிய சேனைகளால்படும் கொடிய கஷ்டங்களை நிவிர்த்திக்க பணச்சகாயம் தேவையாயிருக்கிறது. அவர்கள் நமது தேசத்தின் மேல்கரையில் வசிக்கும் சூரியானிய கிறிஸ்தவர்களோடு சேர்ந்தவர்கள். ஆகையால் இந்துதேசக் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சுதேசக் கிறிஸ்தவ அங்கத்தராகிய அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது நமது கடமை. பெல்ஜிய தேசத்தாரும் அர்மீனியரும் எவ்வளவு துன்பமடைந்தார்களோ அவ்வளவு கஷ்டத்துக்குள் இவர்களும் இருக்கிறார்கள். கந்தர்புரி பிரதம அத்தியக்ஷரவர்கள் இவர்கள் நடுவில் ஊழியம் நடப்பிக்கும்படி ஓர் மிஷன் ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாய்த் தான் இக்கிறிஸ்தவர்களனுபவிக்கும்

கடுந்துன்பத்தையறிந்து, அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற விண்ணப்பம்நமதுகல் குத்தா மெற்றிராணியவர்களால் ஒவ்வோர் அத்தியக்ஷாதினத்துக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அசீரிய கிறிஸ்தவர்கள் படும் துன்பத்தைச் சில வார்த்தைகளால் சொல்வது ஏற்றது. ருஷியர்களின்சேனை இவர்கள் நாடுகளை விட்டு எடுபட்டதும், துர்க்கர், கூர்ட்ஸ் ஜாதியார் அவர்கள் நாட்டுக்குள் பிரவேசித்து, 70 கிறிஸ்தவ கிராமங்களைக் கொள்ளையிட்டு, 10,000 பேரைக் குரூரமாய்க் கொன்று வதைத்தார்கள். ஆண்கள், பெண்கள், பிள்ளைகளான 15,000 பேர் வனாந்தர வழியாய்க்கால் நடையாய் நடந்து, ஆகாரமின்றி 7 நாள் பிரயாணம் செய்ய நேரிட்டதில், அவர்களில் பலர் மாண்டு பலவித கஷ்டங்களை அனுபவித்தார்கள். அவர்களில் பட்டணங்களிலிருந்த 25,000 பேரும்துர்க்கியரால் இம்சிக்கப்பட்டு, தங்கள் வீடுகள், பொருள்கள் சகலமும் இழந்து, ஆகாரம், வஸ்திரம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது எவ்வளவு அவசியம்! பண உதவி செய்பவர்கள் மகாகனம் திருவாங்கூர் கொச்சின் அத்தியக்ஷரவர்களுக்கு அனுப்பலாம்.

ஜெப விஷயங்கள்.

உலகமெங்கும் நடந்தோறும் இங்கிலாந்து திருச்சபையின் ஊழிய சம்பந்தமாய் இங்கிலாந்தில் கனம் கனோன் புள்ளக் உவெப்ஸ்ற்றர் ஐயரவர்கள் இங்கிலீஷில் பிரசுரிக்கும் குவாட்டர்லி ஜெபஸ்தோத்திர அறிக்கைப் பத்திரிகை யொன்று தமிழிலும் கடந்த 6 வருஷங்களாய்ப் பிரசுரமாகி வருகிறது. தனிப்பிரதி வேண்டியவர்கள் கனம் G. H. லாம் ஐயரவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். அப்பத்திரிகையை இப்பத்திரிகையோடு சேர்த்துப் பிரசுரிப்பது அசாத்தியமாகையால், அதிலுள்ள சிலபொது விஷயங்களை மாத்திரம் காட்டி அவைகளுக்காக ஜெபிக்கக் கேட்கிறோம்.

1. தேவரீருடைய ராஜ்யத்தை விஸ்தீரணப்படுத்துவதில் அடியாரிற் காணப்பட்ட தவறுதலுக்காக எங்களுக்கு மெய்யான பட்சாதாபத்தை அருளிச்செய்ய.

2. எங்கள்மேல் பரிதாபங்கொண்டு, பரிசுத்த ஆவியின் சத்துவத்தால் எங்கள் பிரிவினைகளை அகற்றி, திருச்சபையின் ஐக்கியத்தைப் புதுப்பித்தருள.

3. சுவிசேஷ பிரபல்ய அழைப்பைப்பற்றி உன்னத உணர்வடையும்படி திருச்சபையின் அங்கங்களாயிருக்கும் எங்களெல்லாரையும் உயிர்ப்பிக்க.

4. நிர் ஆதரவாகவும், அடைக்கலம் தேடிக்கொண்டும் திரியும் அர்மீனியர் அசீரியருக்கு அனுதாபங்காட்டி, அவர்கள் இழந்துபோன வீடுகளுக்கு அவர்களைத் திரும்பக் கொண்டுசேர்க்க.

5. பலஸ்தீனாவை மகமதிய கொடுங்கோன்மையினின்று விடுவித்து, ஓர் கிறிஸ்தவ ஜாதியின் அரசாக்ஷிக்கொப்புவிக்க.

6. ஐரோப்பியரையும் சுதேசிகளையும் பிரித்துக்கொண்டிருக்கும் தடுப்புச் சுவர்களை அகற்ற ஜெபம்.

தனிப்பிரதி வேண்டியவர்கள் தயவு செய்து தங்கள் விலாசங்களை எழுதக்கேட்டுக் கொள்ளுகிறேன். பிரதி ஒன்று தபாற் கூலி நீங்கலாக வருஷம் ஒன்றுக்கு அணா 2.

சென்னை மிஷன் பிரதிநிதி மகா சங்கம்.

மிஷனெரி ஊழிய சம்பந்தமான விஷயங்களை ஆலோசித்து நடத்துவதற்காக, தென் இந்தியாவில் சுவிசேஷ வேலை நடத்தும் புறதேச மிஷன் சங்களில் முக்கியமானவைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கங்கள் சேர்ந்த மகா சங்கம் ஒன்று இருக்கிறது. தற்காலத்தில் நடைபெற்றுவருகின்ற சுவிசேஷ படைமுயற்சி வேலை மிகுந்த பலனடைவதற்கு உதவியாக இம்மகா சங்கத்தார் ஓர் கமிற்றி சென்னையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக்கமிற்றிக்கு மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் தலைவர். இக்கமிற்றிமார் "சுவிசேஷ படைமுயற்சிக்குரிய தூதிகை" என்னும் ஒரு பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள். அதின் முன்னுரையாக மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் எழுதியதை இங்ஙனம் வரைவோம்:—

படைமுயற்சி இற்றைக்கேறக்குறைய ஒரு வருஷக்காலம் நடந்திருக்கிறது. தென்னிந்திய சபைகளை உயிர்ப்பித்து, சுவிசேஷ

பிரபல்ய உத்தரவாத வளர்ச்சியை அவைகளுக்குள் புகட்டுவதில் இது இதுகாறும் செய்துள்ளது அதிகம். கடவுள் சபைகளை அழைத்திருக்கிற வேலைக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுமாறு ஜெபத்திலும் வாசிப்பிலும் தரித்திருப்பதே தற்காலத்துக் கவசியமான காரியம். ஏதாவதொரு பெருத்த முன்னேற முயற்சி முடியக்கூடிய காரியமாகவேண்டுமாயின், முதலாவது சபையின் ஞான ஜீவன் முதிரவேண்டும். சபைகளுக்கு ஆலோசனை கூறி, உதவிபுரிந்து, உற்சாகப்படுத்தி, அனுபவ மூட்டும் ஸ்தாபனமாகி, புஸ்தகங்களைச் சவதரித்து, படைமுயற்சியின் புரோகதி விவரங்களை அறிவித்துக்கொண்டிருப்பது இக்கவுன்சலின் கடமை. இது மிகவும் பிரயோஜனமான வேலை; நம்மெல்லாருக்கும் பிரயோஜனம். ஏகோபித்து இயற்றும் பணி விடை இக்கமிற்றியாலுண்டாகும் என்று நிச்சயித்திருக்கிறேன். இக்கமிற்றியின் சித்தியை நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன்; சகல ஆசீர்வாதங்களும் இதின்மேல் தங்கித் தரிக்குமென்பது என் நம்பிக்கை.

குருமார் மாறுதல்.

கடந்த பெப்ருவரிமீ 28உ நடந்த மகா கனம் அத்தியக்ஷரவர்களின் ஆலோசனைச் சங்கத்தில் அடியிற்காட்டிய குறுமாரின் மாற்றுதல்கள் நடந்தன.

கனம். N. P. வேதமுத்து ஐயரவர்கள், யாக்கோபுபுரத்திலிருந்து எதிரணப்பட்டிக்கும்,

,, N. வேதமுத்து ஐயரவர்கள், எதிரணப்பட்டியிலிருந்து யாக்கோபுபுரத்துக்கும்,

,, R. சாமிதாசன் ஐயரவர்கள், நாகலாபுரத்திதூரிலிருந்து இடையன்குடி புதூருக்கும்,

,, V. சாமுவேல் ஐயரவர்கள், இடையன்குடி புதூரிலிருந்து குலையன் கரிசலுக்கும்,

,, D. பாக்கியநாதன் ஐயரவர்கள், சாயர்புரத்திலிருந்து புதியம்புத்தூருக்கும்,

,, D. பவுல் ஐயரவர்கள், புதியம்புத்தூரிலிருந்து சாயர்புரத்துக்கும்,

,, Y. ஞானமுத்து ஐயரவர்கள், குலையன் கரிசலிலிருந்து குலசேகரபட்டணத்துக்கும் மாற்றப்பட்டார்கள்.

திருநெல்வேலி ஜில்லா ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானப்படி மகாகனம் அத்தியக்ஷரவர்களின் அனுமதியின்பேரில் அடியிற்கண்ட குருமாரின் மாற்றுதல்களும் நடந்திருக்கின்றன.

கனம். A. மாசில்லாமணி ஐயரவர்கள், தர்மநகரத்திலிருந்து கடாக்ஷபுரத்திற்கும்,

,, V. ஞானமுத்து ஐயரவர்கள், கடாக்ஷபுரத்திலிருந்து உக்கிரன்கோட்டைக்கும்,

,, V. தானியேல் ஐயரவர்கள், உக்கிரன்கோட்டையிலிருந்து சாந்தபுரத்திற்கும்,

,, M. V. ஜாண் ஐயரவர்கள், சாந்தபுரத்திலிருந்து வேதசாஸ்திர வகுப்பு ஆசிரியராகவும்.

மதுரையில் 7 வருஷம் வேலைபார்த்து வந்த கனம். A. எசேக்கியேல் ஐயரவர்கள் தாங்கள் விட்டுவந்த சென்னை அத்தியக்ஷாதீனத்திற்குப் போய்விட, ரங்கூனில் வேலை பார்த்துவந்து, சில குடும்ப அசந்தர்ப்பங்களினிமித்தம் மறுபடியும் அவ்விடத்துக்குப் போகக்கூடாமலிருந்த S. V. ஏசுதாசன் ஐயரவர்கள் மதுரைத் தமிழ்ச் சபையின் குருவாக நியமுகம் பெற்றார்கள்.

மதுரையில் ஓர் ஐரோப்பிய சபையும் அதற்கென்று பிரத்தியேகமான ஓர் கவர்ண்மென்று க்ஷாப்ளனும் நமது அத்தியக்ஷாதீனத்தில் இருந்து வந்ததுண்டு. ஆனால் சில வருஷங்களாய் மதுரையிலுள்ள க்ஷாப்ளன் மாற்றப்பட்டுப்போக, திருச்சினாப்பள்ளியிலுள்ள க்ஷாப்ளனே இச்சபையையும் விசாரித்து ஆராதனை முதலியவை நடத்திவருகிறார். தற்சமயம் அவ்விடத்தில் க்ஷாப்ளனாக இருப்பவர் கனம். F. F. புள் ஐயரவர்கள் கொடைக்கானலில் உஷ்ணகாலத்துக்கென்று போகிற ஐரோப்பியருக்காக கனம். ப்ரௌன் உல்கின்ஸன் ஐயரவர்கள் க்ஷேப்ளனாக நியமுகம் பெற்றிருக்கிறார்கள். அவ்விடத்திலுள்ள இந்தியகிறிஸ்தவர்களுக்கென்று கனம். S. ஜெகநாதன் ஐயரவர்கள் நியமிக்கம்பட்டிருக்கிறார்கள்.

ஜூலை 1916. Vol. XIII. No. 7.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

முதல் மிஷனெரிமார்

'மிஷனெரி' என்னும் பதம் தூரதேசங்களிலிருந்து நம்முடைய தேசங்களுக்கு வருகிற ஐரோப்பியரையே குறிக்கும் என்பது அநேக கிறிஸ்தவர்கள் மனதில் உள்ள தப்பிதமான ஒரு எண்ணம். நம்முடைய மிஷனெரி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, ஊழியர் இங்கிருந்து தெலுங்குநாட்டிற்குப் போனதிலிருந்து, 'இந்தியரும் மிஷனெரிகள் ஆகிக்கொள்ளலாம்போலிருக்கிறது' என்று அன்னோர் எண்ணி, 'மிஷனெரி' என்னும் பதத்தின் அருத்தத்தை சற்று விரிவாக்கியிருக்கிறார்கள். ஆனால் அதின் உண்மையான அருத்தம் சிலருக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது.

'மிஷனெரி' என்றால் 'அனுப்பப்பட்டவன்' என்று அருத்தம். 'அப்போஸ்தலன்' என்னும் பதமும் அதே அருத்தமுடையது. கடவுளால், அவருடைய காரியத்தின் சம்பந்தமாக அனுப்பப்படுகிறவன் ஒவ்வொருவனும் மிஷனெரிதான்.

இப்பொழுது முதல் மிஷனெரிகளைப் பற்றிப் பார்ப்போம். ஒருவயல் வெளியில் இரவில் கொடிய குளிரில் விரைத்து ஆடிக்கொண்டு ஒரு கும்பலாக சில எளிய மனிதர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் மடங்கிக்கொண்டிருக்கும் ஆட்டு மந்தைகளைப் பார்த்தால் இவர்கள் மேய்ப்பர்கள் எனத் தோன்றுகிறது. திருடரும் துஷ்டமிருகங்களும் மந்தைக்குள் புகுந்துவிடாதபடி விழித்துக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று பட்டப்பகல் வெளிச்சம்போன்ற பிரகாசம் அவர்களைச் சுற்றிலும் தோன்றுகிறது. பயமடைந்து கண்களை ஏறிட்டுப்பார்க்கையில் ஒளிமயரூபி ஒருவன் தைரியப்படுத்தும் பார்வையோடு 'பயப்படாதிருங்கள்' என்று சொல்லி கலக்கத்தை நீக்குகிறான். இன்னமும், சகல ஜனங்களாலும் விரும்பப்படத்தக்கவரான ஒரு ராஜ குமாரன் பிறந்திருக்கிறதாகவும், யூத ஜனங்கள் மகிழும்படி அவர் தாவீதின் குமாரனாகத் தோன்றியிருக்கிறார் என்றும் சொல்லி, உலகம் முழுவதும் தூங்கிக்கொண்டிருந்தும் அவர்கள் போனால் ராஜகுமாரனைப் பார்க்கலாம் என்று சொல்லி ஏராளமான ஜனங்களின் மத்தியில் அந்தப் பிள்ளையைக் கண்டுகொள்ளும்படி அவர்களுக்கு அடையாளமும் கொடுத்தான். இதைக் குறித்து ஆச்சரியப்படுகையில், அந்தத்தினத்தில் பூவுலகில் மட்டுமல்ல விண்ணுலகிலும் அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிருந்ததினால் பரமசேனையின் திரள் திடீரெனத் தோன்றி மகிமைக் கீதம்பாடி முழங்கி தேவனைத் துதித்து மறைந்தது.

தெய்வ கணங்களைப் பார்த்தோம், தெய்வமகிமையையுங் கண்டோம் என்று அம்மேய்ப்பர் அங்கேயே திருப்தியுடன் இருந்துவிடாமல் நடந்ததாகத் தங்களுக்குச் சொல்லப்பட்ட அதிசயத்தைப் பார்க்க விரைந்துசென்றார்கள்.

தெய்வத்தால் முன்னறிவிக்கப்பட்டபடியினால் தடுமாற்றம் சந்தேகமின்றி, தெய்வமகிமையை உரிந்து வைத்துவிட்டு மனுஷகோலமெடுத்து உதவியற்ற சிசுவாகக் கிடந்த ராஜாதிராஜனுடைய ஏகசுதனைத் தரிசித்தார்கள். ஏழைப் பெற்றோருக்குப் பிறந்து ஏழைக்

கோலத்தில் கிடந்த பிள்ளையை, சுற்றிலும் உள்ளவர்கள் அவமதித்து எட்டிப்பாராதிருந்தும், தெய்வ எவுதல் பெற்ற இந்த மேய்ப்பர் உலகம் முழுவதையும் ஆளக்குறிக்கப்பட்டிருந்த மேசியாவைக்கண்டு களித்தார்கள்.

தாங்கள் அனுபவித்த சந்தோஷம் போதுமென்று இருந்துவிடாமல், மற்றெல்லாரும் இந்தப் பிள்ளையைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்று, கண்டவர்கள் எல்லாரிடத்திலும் 'மேசியா தோன்றிவிட்டார், நாங்கள் அவரைப் பார்த்தோம். அவர் உங்கள் நடுவில்தான் இருக்கிறார்' என்று தெரிவித்தார்கள். அதைக்கேட்டவர்களுக்கு அது ஒரு புதுமையாகத் தோன்றினது. அந்தப்பிள்ளை வளர்ந்து தான் யூதருடைய ராஜா, தெய்வகுமாரன், மனுஷர் நடுவில் தங்கும்படி அவதரித்த மனுஷகுமாரன், தெய்வத்தோடு ஒரே தன்மையுடையவர் என்று தம்முடைய வல்லமையான, அன்பு நிறைந்த ஜீவியத்தால் வற்புறுத்தி விளங்கப்பண்ணினபோதிலும் வெகு சொற்பப்பேர்தான் அவரை அறிந்து அவரோடே சேர்ந்துகொண்டார்கள்.

மிஷனேரி அழைப்பு எங்கேவரும்? சிறிதாயினும் பெரிதாயினும், தாழ்வுள்ளதாயினும் உயர்ந்ததாயினும், தெய்வத்தால் கொடுக்கப்பட்ட கடமையைச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில், இடத்தில் தெய்வ அழைப்பு வரும். கடமையின் பாதை மகிமையின் வழி ('The path of duty the way to glory')

அழைப்பு யாருக்குக் கிடைக்கிறது? படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும், ஞானிகளுக்கும் பேதைகளுக்கும், ஐசுவரியவான்களுக்கும் ஏழைகளுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும், பெரியோருக்கும் சிறியோருக்கும் அந்த அழைப்பு உண்டு.

மிஷனேரி வேலையின் நிபந்தனை என்ன? பரம தரிசனம் பெறவேண்டும். கர்த்தரைத் தரிசிக்கவேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். பரம தரிசனம் பெறுதவன் பூமியின் கடைகோடிக்குப் பிரசங்கிக்கப்போனாலும் மிஷனெரி ஆகமாட்டான்.

மிஷனேரி வேலை என்ன? தான் பெற்ற பரம தரிசனத்தை அதை அறியாதவர்களுக்கு அறிவித்து, அவர்களையும் அந்த உன்னத சிலாக்கியத்திற்கு நடத்துவதே. தேவனைத் தரிசித்த பிள்ளைகளே, மிஷனெரி அழைப்பு வரவில்லை என்றிருக்கிறீர்களோ? கர்த்தரைக் கண்ட அந்நிமிஷத்திலிருந்தே மிஷனெரி பொறுப்பு உங்கள்பேரில் இருக்கிறது. உங்களைப் பார்க்கிறவர்கள், உங்களோடிருக்கிறவர்கள் பரலோகத்தின் பிதாவுடைய சமுகத்தை, அருமையை அறிந்து அவரை மகிமைப்படுத்தும்படி உங்களிலுள்ள தெய்வப்பிரகாசம் அவர்கள்முன் விளங்கக்கடவது. பேச்சிலும் நடத்தையிலும் கர்த்தர் உங்களோடிருக்கிறார் என்று விளங்கப்பண்ணி, யாவரும் அவரண்டை வரும்படி உங்கள் சகல பலம், வல்லமை, நேரம், தாலந்துகளையும் பிரயோகியுங்கள்.

ஆனால் மிஷனேரி வேலையின் பலன் என்ன? உங்களைப் பார்க்கிறவர்கள் கேட்கிறவர்கள் எல்லாரும் மறுபேச்சில்லாமல் உங்களை நம்பி கிறிஸ்தவர்களாக சாடிவிடுவார்களோ? சிலர் சிரிப்பார்கள், சிலர் இகழுவார்கள், சிலர் ஆச்சரியப்படுவார்கள்; சிலர் கிறிஸ்துவைச் சேருவார்கள். ஆனால் வேலையின் பலன் உங்கள் காரியமல்ல, எஜமானுடைய காரியம். 'நீ புறப்பட்டுப்போ. சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி. நான் உன்னோடிருக்கிறேன்.' இதுதான் அனுப்புகிறவருடைய வாக்குறை.

பரலோகத்திலிருக்கிற பிதாவினுடைய சித்தத்தின்படி செய்கிறவன் அவருடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான்.

இம்மானுவேல்.

பரி அப்புரோஸ் என்பவரின் ஜெபம்..

யாவர் பேரிலும் இரக்கம் வைக்கிற கர்த்தாவே, என் பாவங்களை என்னைவிட்டு அகற்றி, உமது பரிசுத்த ஆவியாகிய அக்கினியைத் தயவாய் என்னில் மூட்டியருளும். கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, உம்மை நேசிக்கவும் வணங்கவும், உம்மில் களிகூரவும் உம்மைப் பின்பற்றவும் அனுபவிக்கவும் சதையான இருதயத்தைத் தந்தருளும். கிறிஸ்துவினிமித்தமே. ஆமென.

சங்கீதம் 42, 43.

சங்கீதாகமம் எபிரேயு வேத புஸ்தகத்தில் ஐந்து நூல்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. அப்பிரிவுகள் பின்வருமாறு:—

1-ம் நூல்.....சங். 1—41
2-ம் நூல்.....சங். 42—72
3-ம் நூல்.....சங். 73—89
4-ம் நூல்.....சங். 90—106
5-ம் நூல்.....சங். 107—150.

இவ்வைந்து பிரிவுகளின் இறுதியிலும் ஓர் துதிப்பல்லவியைச் சேர்த்திருப்பதைக் காணலாம், (150-ம் சங்கீதம் ஓர் சிறேஷ்ட ஸ்தோத்திரப்பாட்டாயிருப்பதினால் அதற்கு மாத்திரம் அவ்வித பல்லவி இல்லை). நாம் இப்போது தியானிக்கும்படி தெரிந்திருக்கும் 42-ம் 43-ம் சங்கீதம் இரண்டாம் நூலின் ஆரம்ப கீதம்.

இவ்விரண்டாம் நூலின் விசேஷ லக்ஷணங்கள் எவையெனில் **கர்த்தர்** என்ற எகோவாவின் நாமத்திற்குப்பதிலாக **தேவன்** என்ற பதத்தை உபயோகித்திருப்பதும், ஒவ்வொரு சங்கீதத்திற்கும் முகவுரைக் குறிப்பு வாக்கியம் சேர்த்திருப்பதுமாம். முதலாம் நூலில் **கர்த்தர்** என்ற பதம் 272 தடவையும், **தேவன்** என்ற பதம் 15 தடவையும் வர, இரண்டாம் நூலிலோ **கர்த்தர்** என்பது 30 தடவையும் **தேவன்** என்பது 164 தடவையும் வருகிறது.

சில எபிரேயு பிரதிகளில் சங். 42-ஐயும் சங். 43-ஐயும் ஒரே சங்கீதமாகச் சேர்த்து எழுதியிருக்கிறது. சங். 43-க்கு முகவுரைக் குறிப்பு ஏதுமில்லை. இவற்றைக் கவனிக்குங்கால் இது ஆரம்பத்தில் முந்தின சங்கீதத்தோடு சேர்த்திருந்ததாக அநுமானிக்கலாம். அவ்வாறே இரண்டையும் சேர்த்து இச்சமயத்தில் தியானிப்போம்.

இதைப்பாடின சங்கீதக்காரன் ஓர் காலத்தில் பண்டிகைக்கூட்ட ஆசரிக்கும் ஜனக்கூட்டத்தோடு சேர்ந்து தேவனைத் துதித்துப் பாடினவன். இப்போதோ, ஏதுகாரணத்தையிட்டோ, எருசலேமுக்கு வெகு தூரத்தில் அவன் வனசஞ்சாரம் செய்கிறான். யோர்தான் தேசத்திலும், ஏர்மோன் மலைகளிலும், அதாவது யோர்தான் உற்பத்தியாகும் எர்மோன்மலை அடிவாரத்தில், கலிலேயாக்கடலுக்கு வடக்கே இருக்கிறான். தேவாலயத்திற்காகவும், ஆராதனைகளுக்காகவும் இவன் ஏங்குகிறதைப் பார்க்கும் சத்துருக்கள் உன் தேவன் உன்னைக் கைவிட்டாரென்று சொல்லிப் பரியாசம் பண்ணுகிறார்கள். தன் தாபத்தத்தையும், ஏக்கத்தையும் இச்சங்கீதத்தில் தெரிவிக்கிறான்.

இதில் மூன்று சரணங்களும், ஒவ்வொரு சரணத்தின் கடைசியிலும் சேர்த்திருக்கும் பல்லவியும் உண்டு.

1-ம் சரணம். வா. 1—4.

நீரோடைகளை வாஞ்சித்துக் கதறும்மான்போல,
தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது!
என் ஆத்துமா, தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேல், தாகமாயிருக்கிறது.
நான் வந்து தேவசந்நிதியில் காணப்படுவதெப்போதோ?
உன் தேவன் எங்கேயென்று அவர்கள் ஓயாமல் என்னிடத்தில் சொல்லுகையில்
என் கண்ணீரே இரவும் பகலும் எனக்கு உணவாயிற்று!
கூட்டத்தோடே—திருநாள் ஆசரிக்கும் ஜனக் கூட்டத்தோடே—நான் சென்றதையும்,
களிப்பும் துதியுமான ஆர்ப்பரிப்போடே அவர்களைத் தேவாலயத்திற்கு நடத்தினதையும்
நினைப்பேன்; நினைத்து, என் ஆத்துமாவை ஊற்றிவிடுவேன்!

பல்லவி. வா. 5.

என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்?
ஏன் எனக்குள் தியங்குகிறாய்?
தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு!
என் முகத்தின் ஒத்தாசையும் என் தேவனுமாயிருக்கிறவரை
நான் இன்னும் துதிப்பேன்.

முன்னே தேவ சந்நிதானத்தில் அவன் அடைந்த சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் நினைத்தபோது தேவன்பேரில் நம்பிக்கை வைக்கவும் அவரிடத்தில் தன் ஆத்துமாவை ஊற்றிவிடவும் ஏவப்படுகிறான். தற்சமயம்

162427

அவர் சமுகப்பிரசன்னமும் அவனுக்குக் கிடையாதிருந்தபோதிலும் முன்னே அவர் சமுகத்திலிருந்து ஒத்தாசையும் சகாயமும் வந்ததென்பதை நினைவுகூர்ந்து நம்பிக்கையோடு காத்திருக்கிறான். தேவ சமுகத்தின் இன்பத்தை இழந்துவிட்ட பக்தனே, நீயும் நம்பிக்கைகொள். உன் உள்ளத்தை அவர் சமுகத்தில் ஊற்றிவிடு. அவரே இன்னும் உனக்குச் சகாயர். அவரே உன் தேவன்.

2-ம் சரணம். 6—10.

என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது!

ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும்,

மீசார்மலையண்டையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.

உமது மதகுகளின் இரைச்சலில் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது!

உமது அலைகள், திரைகளெல்லாம் என்மேல் புரண்டுபோகிறது!

ஆனாலும் கர்த்தர் தமது கிருபையைப் பகற்காலத்தில் கட்டளையிட்டதுண்டு!

அவரைப் பாடும் பாட்டும், என் ஜீவனுள்ள தேவனை நோக்கிச்செய்யும் விண்ணப்பமும், ராக்காலத்திலே என்னிடத்திலிருந்ததுண்டு!

நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி முறையிடுவேன்:—

'ஏன் என்னை மறந்திருக்கிறீர்'?

'சத்துருவின் ஒடுக்கத்தினால் நான் துக்கமாய் திரிகிறேன்'?

'உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறார்கள்'.

'அவர்கள் என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோலிருக்கிறது.'

பல்லவி. வா. 11.

என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்?

ஏன் எனக்குள் தியங்குகிறாய்?

தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு!

என் முகத்துக்கு ஒத்தாசையும் என் தேவனுமாயிருக்கிறவரை

நான் இன்னும் துதிப்பேன்.

கலக்கம் அதிகம், துன்பம் விஸ்தாரம், நிந்தனையும் பெருகுகிறது. ஆனால் சங்கீதக்காரன் இச்சரணத்தில் தேவனை நோக்கிப் பேசப் படித்துக்கொண்டான். முதலாம் சரணத்தில் என் ஆத்துமா என்று தனக்குள் தானே பேசிக்கொண்டான். இரண்டாம் சரணத்தில், 'என் தேவனே!' என்று ஆரம்பிக்கிறான். மலைத்தேசத்தில் வெள்ளம் அடித்துக்கொண்டு போகும் சமயத்தில் ஒன்றைவிட ஒன்று பலத்தோடு அலைகள் புரளுவதுபோல துன்பங்கள் மென்மேலும் இவன் மேல் புரண்டுபோகிறது. (மீசார்மலையென்பது ஓர் சிறுமலையாயிருக்கவேண்டும்) ஆனால் அலைகளையாவும் 'உமது அலைகள்' என்று இப்போது கண்டுகொண்டான். பூர்வகால ஞாபகமும் வருகிறது! தற்சமயம் இரவும் பகலும் கண்ணீரே இவன் அன்னபானம். முன்னொரு காலத்திலோ தேவகிருபையும், அவரைப் பாடும் கீதமும், விண்ணப்பமும் இரவும் பகலும் இவன் ஜோலியாயிருந்ததுண்டு. ஆகையால் திரும்பவும் நம்பிக்கைகொண்டு தேவனிடத்திலேயே முறையிடுகிறான்.

தேவ சமுக இன்பத்தை இழந்துவிட்ட பக்தனே, துன்ப அலைகளால் அலசடிப்பட்டுத் தியங்கும் தாசனே, உன்னையே உற்றுப் பாராதே. உன் தேவனை நோக்கிப் பார். அவரிடத்தில் உன் மனவியாகுலத்தைச் சொல். அவருடைய பூர்வகால இரக்கங்களையும் கிருபைகளையும் கணக்கிட்டுப் பார். தைரியங்கொள்ளுவாய். சீக்கிரம் வெளிச்சம் உதிக்கும்.

3-ம் சரணம். 43: 1—4.

தேவனே, என்னை நியாயந்தீர்த்து, பக்தியில்லாத ஜாதியோடு எனக்காக வழக்காடும்!

சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்!

என் அரணான தேவன் நீர்! என்னை ஏன் தள்ளிவிட்டிருக்கிறீர்?

சத்துருவின் ஒடுக்கத்தினால் நான் ஏன் புலம்பிக்கொண்டு திரிகிறேன்?

உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்!

அவைகள் என்னை நடத்தட்டுமே!

உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் அவைகள் என்னைக் கொண்டுபோகட்டுமே!

அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டை சேருவேன்.

எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்குப் பிரவேசிப்பேன்.

தேவனே, என் தேவனே, சுரமண்டலத்தால் உம்மை ஸ்தோத்திரிப்பேன்.

பல்லவி. வா. 5.

என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்?

ஏன் எனக்குள் தியங்குகிறாய்?

தேவனை நோக்கிக் காத்திரு!

என் சமுகத்திற்கு ஒத்தாசையும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

தேவனிடத்தில் முறையிட்டதின் பலனை இச்சரணத்தில் காண்கிறோம். தைரியம் வந்துவிட்டது. வெளிச்சம் உதித்துவிட்டது, சந்தோஷமும் களிப்பும் உண்டாகிவிட்டது!

பக்தனே, கர்த்தருடைய வெளிச்சமும் உண்மையும் உன்னையும் மெய்யாகவே நடத்தும். அவர் உன்னை இருளில் நடமாடவிடமாட்டார். தமது உண்மையை உன்னில் விளங்கப்பண்ணுவார். பலிப் பீடத்தண்டைக்கு அவை உன்னையும் நடத்துவதாக! இருள் நீங்கி வெளிச்சம்தோன்றும்போது, துதியின் பலிகளைச் செலுத்து. ஸ்தோத்திரித்துப்பாடு. சாட்சிசொல். உன்னையே பானபலியாக வார்த்துவிடு. உன் முகத்திற்குச் சகாயமும் உன் தேவனுமானவர் அவரே.

'இந்த வீண்செலவு என்னத்திற்கு?'

அல்லது

ஹென்ரி மார்ட்டின் என்பவருடைய ஜீவியம்.

மரியாள் அருமை ரட்சகருடைய சிரசை வீலேயேறப்பெற்ற தைலத்தால் அபிஷேகம் செய்தபோது, பக்கத்திலிருந்தவர்கள் 'இந்த வீண்செலவு என்னத்திற்கு?' என்று முறுமுறுத்தார்கள். இப்படி முறுமுறுத்தவர்களில் கிறிஸ்துவின் சேஷ்தான் முக்கியம். 'இந்த தைலத்தை உலகம் முந்நூறு பணத்திற்கு அதிகமாகக் கொள்ளுமே, என் இது வீணாக செலவழிக்கப்பட்டது?' என்று உலக சிந்தையோடு மரியாளைக் கடிந்துகொண்டு வருத்தம் அடைந்தார்கள்.

அந்தக்காலம் முதல் இன்றைத்தினம் வரையிலும் உலகம் வியக்கக்கூடிய அநேகர் தங்கள் தாலந்துகளை எஜமானுடைய ஊழியத்திற்கென்றே அவருடைய பாதத்தில் படைத்துவிட்ட கிறிஸ்துவின் அடியார்கள் இருந்திருக்கிறார்கள்.

இந்தியாவிலும் பெர்சியாவிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உயர்த்திக் காட்டி, கீழ்த்திசை பாஷைகளில் சுவிசேஷத்தைத் திருப்பி நல்ல வாலிப வயதிலேயே எஜமானுடைய சந்தோஷத்திற்கு அழைக்கப்பட்ட ஹென்ரி மார்ட்டின் இப்படிப்பட்டவர்களில் ஒருவர்.

இவர் 1781-ம் வருஷம் பெப்ருவரி 18-ம் தேதியில் இங்கிலாந்து தேசத்தின் தென் பாகத்தில் காண்வல் மாகாணத்திலுள்ள ட்ரூரோ என்னும் ஊரில் பிறந்தார் இவருடைய குடும்பம் சுகவீனமான குடும்பம். இவருடைய தகப்பனார் எளிய நிலக்கரி சுரங்கம் தோண்டுவோனாய் இருந்து தம் சொந்தப் பிரயாசத்தினால் தகுந்த நிலைமைக்கு வந்தவர். ஹென்ரி மார்ட்டின் எட்டாவது வயதில் தேர்ந்த வித்துவானாய் இருந்த கார்டியு போதகரால் நடத்தப்பட்ட பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அவரைப் பார்த்த யாவரும் பெருந்திறமையுடையோனென்று அவாமதித்தார்கள். இவர் தன் மட்டிலேயே திரியும் சுபாவம் உடையவராயிருந்தமைபற்றிப் பாடசாலைப் பையன்கள் எல்லாரும் இவரை அதிகமாய்க் கேலிபண்ணி வருத்தப்படுத்தி வந்தார்கள். சுறுசுறுப்பாய் பிரயாசம் எடுக்காமலே பாடங்களில் தேர்ச்சி அடைந்து கொண்டுவந்தார். படிப்பில் கஷ்டப்பிரயாசை இவரிடத்தில் காணப்படவில்லை.

பதினைந்து பிராயமானபோது, ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையில் சேரும்படி பிரயாசப்பட்டார். எல்லாம் அறிந்த கடவுள்

அந்தப் பிரயாசத்தைக் கைகூடச் செய்ய வில்லையாகையால், பரீட்சையில் முதல்தரமாய் தேறினபோதிலும், கலாசாலையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவர் எண்ணம் சித்திபெற்றிருக்குமாயின் கிறிஸ்துவின் சபையும் இந்தியாவும் ஒருநாளும் இவரால் பிரயோஜனம் அடைந்திருக்கவேமாட்டாது.

மறுபடியும் பழைய பாடசாலைக்கு வந்து இரேக்கு லத்தீன் கிரந்தங்களைப்படித்துக் கொண்டு வந்தார். இவருடைய அருமை சிநேகிதன் ஒருவர் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் அடைந்த உயர்ந்த சித்தியைக் கண்ணுற்று தானும் அதே சர்வகலாசாலையைச் சேர்ந்த சேய்ன்ற் ஜாண்ஸ் காலேஜில் 1797-ம் வருஷம் பிரவேசித்தார். சில மாதங்களாக முழுவதும் சோம்பல்தனமாயே கழித்துவந்தார். ஆனால் சீக்கிரத்தில் சுறுசுறுப்பாய் படிக்க ஆரம்பித்தார். இந்தக் காலங்களில் அதிக முரட்டுத்தனமும் மூர்க்கமும் உண்டு. ஒருதடவை ஒரு வாக்குவாதத்தில் ஒரு மாணவர் பேரில் கத்தியை வீசி எறிந்துவிட்டார். இவருடைய ஜீவியம் தெய்வத்தைப்பற்றி யாதொரு எண்ணமுமற்றேயிருந்தது.

காலம் நிறைவேறினபோது இரண்டுபேரைக் கொண்டு கடவுள் இவரில் தம்முடைய கிரியையை ஆரம்பித்தார். இவருக்கு உற்ற சிநேகிதனும் தெய்வபக்தி உள்ளவருமான ஒரு மாணாக்கர் ஒருவர். மற்றொன்று பரம குணசீலியென்று சொல்லக்கூடிய இவர் சகோதரி. படிப்பு நாட்களில் அந்த சிநேகிதனும், விடுமுறை நாட்களில் இவர் சகோதரியும் அடிக்கடி இவரோடும் இவருக்காகவும் ஜெபித்தும், கிறிஸ்துவைப்பற்றிப் பேசியும் வந்தார்கள்.

வீட்டில் இவருடைய தகப்பனாரோடும் சகோதரியோடும் இவர் பேசுகிற வெடுவெடுப்பான பேச்சுகளும் எரிந்து எரிந்து விழுகிற கோபகுணமும் இவருக்கே பிற்காலத்தில் மனவியாகுலமாயிருந்ததுண்டு.

1799-ம் வருஷம் கிறிஸ்மஸ் தினத்தை அதிக சந்தோஷத்தோடு தகப்பனாரோடு கழித்த இவர், ஜனுவரீ காலேஜில் இருக்கும்போது அவர் மரித்துப்போனார் என்கிற செய்தியைக் கேட்டு துக்கசாகாரத்தில் அமிழ்ந்தினார். இந்தத் துக்கம் அவரைத் தெய்வத்திற்கு நேரே திருப்பினது. ஆனாலும் வெளியரங்கமான கிறிஸ்தவ ஜீவியமே ஒழிய உள்ளான பக்தி கொஞ்சமும் காணப்படவில்லை. அதோடுகூட தன்னைப்பற்றிய பெருமையும் இயற்கையாகவே இவரில் இருந்ததால் கிறிஸ்துவுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்த மனமற்றிருந்தார்.

இந்தக் காலத்தில் சர்வ கலாசாலையைச் சேர்ந்த சார்ல்ஸ் சிமியன் என்னும் போதக ரோடு பழக்கம்பெற்றார். அவருடைய சம்பாஷணைகளினால் கிறிஸ்துவின் அறிவில் விருத்தி அடைந்தார் எத்தனையோ காலம் ஜெபத்தில் இவருக்காகக் காத்திருந்து, இவருடைய ஜீவியத்தில் யாதொரு மாறுதலையும் காணுமே என்று வியாகுலப்பட்டுக்கொண்டிருந்த சகோதரிக்கு இவர் மாறுதலடைந்த செய்தி அளவற்ற ஆறுதலைக் கொடுத்தது.

துக்கத்தோடு துக்கமாய் அரிய பிரயாசை எடுத்து 1801-ம் வருஷம் ஜனுவரீ எல்லா பரீட்சைகளிலும் மேற்பட்ட பதவியையுடையதும், அரிதான சக்தியுடையவர்களேயன்றி வேறெருவரும் பெறக்கூடாததுமான சீனியர் ரேங்ளர் (Senior Wrangler) என்னும் பட்டத்தைப் பெற்றார். இக்காலத்திலும் மெய்த்தேவபக்தியின் ஆழம் இவரிடத்தில் இல்லாததைக் கண்டு இவர் சகோதரி அதிகக் கவலைகொண்டாள். இந்தக் குறைவும் சீக்கிரம் நீங்கினது. அந்த வருஷத்தில் உஷ்ண கால ரஜா நாட்களில் இவர் வீட்டிற்குப்போகாமலே காலேஜில் ஏகாந்தமாய் இருந்தார். அப்பொழுது தெய்வத்தினுடைய அமர்ந்த மெல்லியசத்தம் இவரோடு பேசிக்கொண்டேயிருந்து கிறிஸ்துவே, தனக்கு எல்லாவற்றிலும் எல்லாம் என்று சொல்லக்கூடிய விதமாய்க் கிரியைச் செய்தது. இதே காலத்தில் இவரோடு பழகிக்கொண்ட சில கிறிஸ்தவ மாணாக்கர்களால் எவப்பட்டு கிருப்பணி விடையில் பிரவேசிக்க தீர்மானித்தார். வக்கீல் பட்டத்திற்குப் படிக்கவேண்டும் என்று அவாவற்றிருந்த இவருக்கு கிறிஸ்துவுக்காக எளிய ஊழியஞ்செய்ய வேண்டும் என்ற வாஞ்சை வந்தது எவ்வளவோ சுயவெறுப்பு

தான். உலகம் இன்னமும் அவருக்கு இனிமையாய்த் தோன்றும்படி இந்தக் காலத்திற்குப் பிறகும் அநேக சர்வ கலாசாலை கௌரவப்பட்டங்கள் இவருக்குக் கிடைத்தன.

இப்படியிருக்குங்காலையில் இந்தியாவில் மிஷனெரியாக இருந்து தனிமையாக சிறந்த ஊழியஞ்செய்த **வில்லியம் கேரி** என்னும் பக்தனைப்பற்றி சிமியன் போதகர் அடிக்கடி இவரிடம் பேசி வந்தார். இன்னமும் வட அமெரிக்க இந்தியருக்குள் அப்போஸ்தல வல்லமையோடும் வைராக்கியத்தோடும் உழைத்து, முப்பத்திரண்டு வயதிலேயே சொல்லமுடியாத சந்தோஷத்தோடு ஜீவனை விட்ட பிரேய்னர்ட மிஷனெரியைப்பற்றி இவர் வாசித்துவந்தார்.

வாசிக்கவே, இந்த பக்தனைப் பின்பற்ற வேண்டும் என்ற வாஞ்சை எழும்பிற்று ஆனால் தேசாபிமானமும், சிநேகிதர்பேரில் நீங்காத பற்றும், சகோதரியின்பேரில் அளவற்ற அன்பும் உடைய இவர், இவர்களை விட்டு முன்பின் தெரியாத தேசங்களுக்கு மிஷனெரியாகப் போவது எப்படி? கொடிய போராட்டமும் திகிலும் மனதில் உண்டாயிற்று. ஆனால், தான் நேசிக்கும் எஜமானுடைய நாமம் எங்கும் பரவி மகிமை அடைய வேண்டும் என்கிற வைராக்கியம் மனதில் எழும்பி மிஷனெரி ஊழியத்திற்கு இவனை முற்றிலும் திருப்பிவிட்டது. இருள்மூடிய இடங்களுக்குச் சென்று தாழ்வான ஊழியம் என்று உலகம் சொல்லுகிற மிஷனெரி ஊழியம்செய்து, இனஜனம் பார்க்கக்கூடாதபடி மரணம் அடையவேண்டும் என்று உன்னத தீர்மானம் இருக்கும்போது, சொந்த தேசத்தில் உறவினர் உற்றார் மத்தியில், உயர்ந்த ராஜாங்க வேலையைச் சிறந்த கௌரவங்களோடு இவர் எப்படிப் பார்க்கக்கூடும்?

1803-ம் வருஷம் அக்ற்றோபர்மீ 22-ம் தேதி குருப்பட்டம் பெற்று இரண்டு வருஷங்களாக கலாசாலையிலேயே உயர்ந்த உத்தியோகம் பார்த்து வந்தார். இந்தியாவுக்குப் புறப்படுகிறதற்கு சில காலங்களுக்கு முன் குடும்ப சொத்து முழுவதையும் இழந்த இவரும் இவருடைய சகோதரியும் கவலைக்கு இடமானார்கள். இங்கிலாந்திலேயே இருந்தால் தாம் அருமையாய் நேசிக்கும் சகோதரிக்கு ஆதரவாயிருக்கலாமே என்று எண்ணி இந்தியாவுக்குப் போகிறதைப்பற்றி தடுமாற்றங் கொண்டார். தம் சொந்தப்பணமே செலவிட்டு ஊழியஞ்செய்வதற்குத் தடை உண்டாகி விட்டதே என்றும் எண்ணிப் பின்வாங்கினார்.

ஆனால் தடைகளை நீக்குகிறவர் இவர் முன்னே சென்றபடியினால் ஈஸ்ற் இந்திய கம்பனியின் கூப்பனாக நியமனம் பெற்று இந்தியாவிற்குப் போக சிலாக்கியம் கிடைத்தது. 1805-ம் வருஷம் ஜூலைமீ 17-ம்உ கப்பல் ஏறினார். அடுத்தவருஷம் எப்ரல்மீ 22-ம் தேதி சென்னை நகரில் கால் மிதித்து, சில நாட்கள் அங்கே தங்கி கப்பல் மார்க்கமாய் கல்கத்தாவுக்குச் சென்றார்.

இந்தியாவின் தரையை மிதித்ததும் அவர் கண்ணுக்கு எதிர்ப்பட்ட அஞ்ஞான காட்சிகளும், கோவில்களும் சிலைகளும் அவர் மனதை வைராக்கியத்தால் நிரப்பின. இவர்களுக்காக பரிதபிக்கிறேன் என்று இவருடைய இருதயம் புலம்பினது கல்கத்தாவில் இவரைப் பார்த்ததும் ஏற்கனவே அங்கிருந்த ஊழியர் பரவசமடைந்து, இந்தியாவின் அரசுப்புக்கு எஜமான் ஊழியக்காரரை அனுப்பும்படி அநேக நாட்களாய் தாங்கள் வேண்டிக்கொண்ட விண்ணப்பத்தின் உத்தரவைக் கண்டு களித்தார்கள். கல்கத்தாவில் கங்கா நதிகரையில் இருந்த ஒரு அஞ்ஞானக் கோவிலே இவர் வசிக்கும் இடமும் மெய்த்தேவனை ஆராதிக்கும் ஸ்தலமுமாயிற்று.

மிஷனெரி ஊழியத்தின் வேலையைப் பற்றி அல்ல, அவ்வூழியத்தின் அழைப்பு, அதில் அடங்கிய சுயவெறுப்பு இவைகளைப்பற்றியே எழுதுவது என்னுடைய நோக்கமாதலால் இனிமேலுள்ள சரித்திரத்தை சுருக்கி எழுதுகிறேன்.

1806-ம் வருஷம் டைனப்பூரில் ஊழியஞ்செய்ய நியமிக்கப்பட்டார். இதற்குள்ளாக இந்துஸ்தானி சமஸ்கிருதம் ஆகிய இரண்டு பாஷைகளையும் கற்றுக்கொண்டார் தம்முடைய முனுஷிகளோடு எப்பொழுதும் மார்க்க சம்பாஷணை செய்துவந்தார். கல்வி

யின் மூலமாய் கிறிஸ்துமார்க்க சாரத்தை ஊட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு முதல் முதலாய் இந்தியாவில் மிஷன் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தினது இவரே. தம் சொந்த செலவிலேயே சில பள்ளிக் கூடங்களை நடத்திவந்தார். இந்தப் பள்ளிக் கூடங்களில் படிப்படியாக மகா விவேகத்தோடு வேதசரித்திரங்களைப் போதிக்கத் தொடங்கினர். கலியாணங்கள் நடத்துவதற்கென்று 80 அல்லது 100 மைல் தூரம் போகவேண்டிய சம்யங்களும் இருந்தன. இக்காலத்தில்தான் விலையேறப்பெற்ற கிறிஸ்தவ பொக்கிஷங்களாகிய சத்தியவேதம், ஜெபபுஸ்தகம் இவைகளை சுதேசிகள் அனுபவிக்கவேண்டும் என்று விரும்பி சுயபாஷையில் திருப்பத்தொடங்கினர். இவ்வேலைக்கென்று ராப்பகல் முழு நேரத்தையும் ஊக்கமாய் செலவிட்டு ஜெபபுஸ்தகத்தை இந்துஸ்தானியில் திருப்பிமுடித்தார். முதல் தடவையாக சுதேசிகள் தங்கள் சொந்தப்பாஷையில் ஆராதித்தபோது அவருக்கு உண்டான பரவசம் இம்மட்டென்றில்லை. சீக்கிரம் புதிய எற்பாடும் இந்துஸ்தானியில் திருப்பி முடிந்தது. எளிதான பாஷை நடை இல்லாதால் இந்த வேலை அதேகரால் குறை கூறப்பட்டது இவருக்கு அதிக் மனமடிவாயிருந்தது. பள்ளிக்கூட வேலையையும் பாஷை திருப்புதல் வேலையையும் விடாமுயற்சியோடு செய்து வந்ததனால் பிறப்பிலிருந்தே குடும்ப வியாதியுடைய இவருக்கு சுகம் குறைந்துகொண்டே வந்தது. சுகம் குன்றி மரணம் பயமுறுத்தினாலும் ஜீவனுள்ளாகிலும் சாவினுலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தில் மகிமைப்படவேண்டும் என்ற வைராக்கியத்தோடு உழைத்துக்கொண்டே இருந்தார். இதைக்கண்டு கவலையடைந்த இவருடைய உடன் ஊழியர் எல்லாரும் இவர் சுயதேசம் போய்த் திரும்பவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

தன்னைப் பெற்று வளர்த்த தாய்போலில் சொல்லமுடியாத அன்பு இருந்தபோதிலும் விவாகஞ் செய்துகொண்டு மனைவியோடு ஏக சரீரமாய் இசைந்து அவளைவிட்டுப் பிரியமாட்டாத புருஷனைப்போலவே, இந்தியாவை விட்டுப்போவது மார்ட்டினுக்குக் கஷ்ட சாத்தியமாயிருந்தது. ஆனாலும் சுகமடைந்து மறுபடியும் இங்கு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு இங்கிலாந்துக்குப் போக சம்மதித்தார்.

1811-ம் வருஷம் ஜனுவரிமீ இந்தியாவை விட்டு பெர்சியா மார்க்கமாய் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார்.

பெர்சியாவைச் சேர்ந்தவுடனே அங்குள்ள மகம்மதியருக்குள் சிலகாலம் வேலை செய்ய ஆரம்பித்து ஷிராஸ்பட்டணத்தில் தங்கினர். புதிய ஏற்பாட்டை அராபி பாஷையில் திருப்ப ஆரம்பித்தார் இந்த இடத்தில் சிலுவைக்கொடியை உயர்த்தத் தொடங்கி கிறிஸ்துவுக்கும் மகம்மதுவுக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றியும், கிறிஸ்து வே தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட சர்வ லோக ரட்சகரும் நபியும் நியாயாதிபதியும் என்னும் சத்தியத்தையும் வைராக்கிய வல்லமையோடு வற்புறுத்தி வந்தார். பாரசீக பிரபுக்கள் முன்னும், கண்ணியமான குருக்கள் (முல்லாக்கள்) முன்னும் ஞானமாய் எத்தனை தடவையோ தர்க்கிக்கவேண்டியதிருந்தது.

இதோடுகூட மார்க்க நியாய தோஷணைகளையும், கிறிஸ்துமார்க்க மூல ஆதாரங்களையும், சத்திய சுவிசேஷ போதனைகளையும் பிரதிகள் மூலமாய் வெளியிட்டுவந்தார். அநேகருடைய இருதயத்தின் ஆழங்கள் கலங்கவும், மெய்ம்மார்க்க ஆராய்ச்சி உண்டாகவும் தக்கதான மகா சொற்சாதுரியத்தோடும் ஆவியின் வல்லமையோடும் மார்க்க வாக்குவாதங்கள் நடந்தன. இவருடைய படிப்பின் மேன்மையை அறிந்து எல்லாரும் இவரை கண்ணியமாய் எண்ணினர்கள்.

இவ்வளவு நெருக்கங்களின் மத்தியிலும் மொழிபெயர்ப்பு வேலை வெகு சுறுசுறுப்போடு நடந்துவந்தது. 1812-ம்ஷ பெப்ரு வரிமீ புதிய ஏற்பாடும் மார்ச்சுமீ சங்கீதப் புஸ்தகமும் பாரசீக பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு முடிந்தன.

பிறகு தம்முடைய வீட்டுப் பிரயாணத்தைத் தொடங்கினர். வழியில் அனுபவித்த

கஷ்டங்களும் பலவீனங்களும் அதிகம். இவ்விதமாய் கஷ்டவேலைசெய்து, கொடிய பல வீனத்தைப்படைத்து நெடும்பிரயாணஞ்செய்த பக்தனுக்கு வீடு வெகு சீக்கிரமாய்க் கிட்டும் படி பிரயாணிகளுடைய ஏஜமான் கிருபை செய்தார். வழியிலே வியாதிப்பட்டு பெர்சியாவிலுள்ள தொக்காத் பட்டணத்தில் தங்கும்படி நேர்ந்தது. அவ்விடத்தில் மும்முரமாயிருந்த கொள்ளைநோயினுல் பீடிக்கப்பட்டோ, அல்லது தம்முடைய குடும்ப வியாதியின் கொடுமையினுல்தானே அக்டோபர்மீ 12ஷ முப்பத்திரண்டாம் வயதில் மரணமடைந்து தேவனுடைய ஜனங்களுடைய இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார்.

இவருடைய கடைசி நேரத்தில் இவரோடுகூட இருந்தவர்கள் அவருக்கும் அவருடைய தெய்வத்திற்கும் அந்நியரானவர்கள், அறிமுகமானவர்களும் சொந்தத்தாரும் இல்லாத இடத்தில் தம்முடைய சுதந்தர வீதத்தைப் பெறும்படியாகச் சென்றுவிட்டார்.

இதை வாசிக்கும் கிறிஸ்துவினுடைய பிள்ளைகளுக்கு இவருடைய ஜீவியத்திலிருந்து சில சத்தியங்களை ஞாபகப்படுத்துகிறேன்.

(1) நம்முடைய ஜீவியத்தின் ஆரம்பம் எவ்வளவு குறைவுள்ளதாயும், சாதாரணமாயும், பெரிய காரியங்கள் எதிர்பார்க்கப்படக் கூடாததாயும் இருந்தபோதிலும் அதன் முடிவு, எஜமானுக்காகச் செய்யப்படும் வீலையுயர்ந்தஊழியத்தினுல் உண்டாகும் மேன்மையோடும் மகிமையோடும் விளங்கக்கூடும்.

பால பிராயத்தில் ஹென்ரிமார்ட்டினைப் பார்த்த அல்லது அறிந்த எவர்கள் அவருடைய மகத்துவமான மிஷனெரி ஊழியத்தையும் அதன் மகிமையுள்ள முடிவையும் முன்னறிந்திருக்கக்கூடும்!

(2) நம்முடைய ஜீவியத்தைப் பரமஎஜமான் நடத்தும்படி நம்மை முற்றிலும் அவருக்கே ஒப்புவித்து விடுவோமானுல் நமது விஷயமாய் அவர் கொண்டிருக்கும் மகிமையானநோக்கம் மகத்துவமாய் முற்றுப்பெறும். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விசேஷித்த நோக்கத்தோடு தேவனுல் அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடாதிருப்போமாக.

(3) மிஷனெரி ஊழியம் என்றுல் லகுவான ஊழியம், தகுந்த சம்பளங்கிடைக்கக்கூடிய ஊழியம், பெரிய பங்களாக்களில் சவுகியமாகஉட்கார்ந்துகொண்டு எல்லாரும் கண்ணியமாய் சலாம் செய்யும்படியான ஊழியம் என்று நினைப்பது மகா அறிவீனம். இவ்வித ஊழியம் மிஷனெரி ஊழியமே அல்ல. எஜமான் அனுப்பும்இடத்திற்குத் தாமதமின்றி பணிந்த இருதயத்தோடும் வைராக்கிய ஆவியோடும் புறப்பட்டுப்போய் எவ்வித கஷ்டங்கள், நஷ்டங்கள், நம்பிக்கையிழவுகள், அவமானங்கள் மத்தியிலும் தன்னேத்தான் வெறுத்து எஜமானையும் அவருடைய அன்பையுமட்டுமே முன்னிறுத்தி வார்த்தையினுலும் ஜீவியத்தினுலும் உயர்த்திக்காட்டும் ஊழியமே மிஷனெரி ஊழியம், அப்போஸ்தல ஊழியம்.

ஹென்ரிமார்ட்டின் தம்முடைய சர்வ கலாசாலையின் உன்னத கண்ணியத்தையும் அதினுல் கிடைக்கக்கூடிய சகல மேன்மையையும் எஜமானுடைய பாதத்தில் ஊற்றி விட்டாரே. உயர்ந்த பரீட்சைகளில் தேறிப் பட்டாதாரிகள் ஆகிற எத்தனை கிறிஸ்தவ வாலிபர் கிறிஸ்துவின் ஊழியத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து ஹென்ரிமார்ட்டினுடைய மங்காத மகிமைக்குப் பாத்திரவான்கள் ஆகப் போகிறீர்கள்?

மனிதரில் முதற்பேருனவர்களும் முதற் தரமானவர்களும், தாலந்துகளில் அரிதான வைகளும், பலிகளில் பழுதற்றவைகளும் கர்த்தருக்குவேண்டும். அவைகள் **கர்த்தருக்குப் பரிசுத்தம்.**

என்னுடைய முதற்தரமானதைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்வேனாக.

என்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கிகரிப்பீர்;
புத்தி, கல்வி யாவையும்
சித்தம்போல் ப்ரயோகியும்.

திருநெல்வேலி இந்திய மிஷனேரி சங்கத்தின் சென்னை உதவிச்சங்கம்

(தொடர்ச்சி.)

இந்திய மிஷனரி சங்கத்தின் சில புதிய ஏற்பாடுகளைக் குறித்தும் இவ்விடத்திற் கூற வேண்டியதிருக்கிறது:—

1வது வரவு செலவு விஷயமாக 1914-ம் வருஷத்தில் நமது சங்கத்தின் மொத்த வரு மானம் ரூ 13232—9—10 இதில் தெலுங்கு நாட்டிற்கு அனுப்பப்பட்டது ரூ. 11231-0-0 பளியர் வேலைக்குச் செலவானது 1725ரூ ஆபீஸ்செலவு, அச்சுக்கூலி, ஹோம் மிஷனரி சம்பளம் ஆகியவைகளுக்கு ரூ1900. இவ் வருஷத்திலோ செலவு வருமானத்தைப் பார்க்கிலும் மிகுத்து வருகிறது. ஆதலால் செலவுகளைக் குறைக்க வேண்டி மூலஸ்தானத் தில் சம்பளம்பெற்று வேலை செய்கிறவர்களுக் குப் பதிலாக சுயாதீனமாய் உழைக்கிறவர்களை நியமிக்க வேண்டியதாயிற்று. அப்படிச்செய் ததினால் மாதம் ஒன்றுக்கு 150ரூ லாபம் இருந் தும் வேலை அத்தனை நன்றாய் நடக்கவில்லை. இதினிமித்தம் மூலதனமாய் வைத்து வேலை செய்வதற்கு உபயோகமாக ரூ 6000 சேர்க்கும் படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெ ன்று அநேக சிநேகிதர் மனோற்சாகம் காட்டி யிருக்கிறார்கள். சிலஸ்திரீகள் தங்கள் பொன் வெள்ளி, ஆபரணங்களைக் கொடுத்திருக்கிறார் கள். ஒரு அம்மாள் தன் ஆபரணங்களையெல் லாம் கழற்றிக் கொடுத்து விட்டார்கள். ஒரு விருத்தாப்பியர் தாம் அணிந்திருந்த கடுக்கன் களைக் கழற்றிக் கொடுத்தார். அநேகர் தங்கள் முதல் மாச் சம்பளத்தையும் சிலர் தங்கள் சம்பளத்தில் உயர்த்தப்பட்ட தொகையையும் வேறு சிலர் தங்கள் வருமானத்தில் தசமபாகத் தையும் தந்திருக்கிறார்கள் இதுபோலொத்த பல உதார செய்கைகள் சொல்லக்கூடும். ஆனால் இச்சங்கத்திற்கு ஒரு காசு முதலாய்க் கொடாதவர்களும் இதன் வேலையிற் கிஞ்சித் தும் சிரத்தை யெடாதவர்களுமான கிறிஸ்தவ ர்கள் கணக்கற்ற பேர் இருக்கிறார்கள்.

இரண்டாவது: ஆதரிப்போர் தொகை விருத்தி விஷயமாக:—

பல்லாயிரம் வயல்களிற் பாய்ந்து செழிப் பிக்கும் நதியானது வெகு தூரத்திலுள்ள ஓர் மலைவெடிப்பிலுதித்துச் சிற்றருவிச் சிறிது தூரம் ஓட அதனோடு பல உபநதிகள் இரு புறத்திலும் கூடி அவ்வாற்று நீரைப்பெருக்கி அதன் உபயோகத்தையும் மிகுக்கச் செய்வது போல் திருநெல்வேலியில் ஆரம்பித்த இந்திய மிஷனரி சங்கமென்னும் ஆற்றுக்குக் கிளைச் சங்கங்களாகிய பல உபநதிகள் தோன்ற வேண்டியதிருக்கிறது. தேவ ஒத்தாசையை முன்னிட்டு 1914-ம் வருஷம் டிசம்பர்மீ சென்னை மெமோரியல் ஹாலில் மகாள்ரீ எம். டி. தேவதாஸ் அவர்களின் அக்கிராசனத் தின் கீழ் நடைபெற்ற கூட்டத்தில் திருநெல் வேலி இந்திய மிஷனரி சங்கத்தின் சென்னை கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அதிக சிரத்தை யோடு வேலை செய்துவருகிறது. இப்படிப் பட்ட கிளைச்சங்கங்கள் பர்மா கோயம்புத்தூர் மூணூர், என்னுமிடங்களிலும் சிதிதாய் ஆரம் பித்திருக்கின்றன. இன்னும் பலவிடங்களி லும் கிளைச்சங்கங்கள் ஆரம்பிக்குமென ஆவ லோடு எதிர்பார்க்கின்றோம். இவ்வித விருத் திக் கேதுவாய் எற்கனவே தோன்றி அச்சிட் டனுப்பப்படுகிற மாதாந்தர பத்திரிகையாகிய 'மிஷனர் வர்த்தமானம்" என்னும் 8 பக்கங் கொண்ட பத்திரிகையைச் சகல கிறிஸ்தவர் க்களும் வாங்கி வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளு கிறோம். அதன் விலை தபாற்கூலியுட்பட வருஷத்துக்கு 6 அணை.

6. இச்சங்கத்தின் விருத்திக்கு வேண் டிய உபகரணங்கள். 1-வது "அறுப்புமிருதி வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால் அறுப் புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட் களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள்" என்று திருச்சபை நாயகர் கட்டளையிட்டிருக் கிறார். ஆதலால் நாம் இச்சங்கத்திற்குச் செய் யத்தக்க பேருதவி "ஜெபம் தான்." ஜெபத் தின் வல்லமையால் தான் இச்சங்கம் இம்மட் டும் வளர்ந்திருக்கிறது. இந்த நிருபத்தை வாசிக்கும் சகோதர சகோதரிகள் தங்கள் குடு ம்ப ஜெபங்களிலும் தனிஜெபங்களிலும் ஊக் கத்தோடும், விடாமுயற்சியோடும், நம்பிக்கை யோடும் இச்சங்க விர்த்தினைக்காக ஜெபம்பண் ணக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" என வாக்களித்த

கர்த்தர் தமது ராஜ்ஜிய விருத்திக்காக எதைத் தான் தரமாட்டார்?

2-வது ஜெபத்திற்கடுத்தது "ஊழியம்" என்று சொல்லலாம். பல கஷ்ட நஷ்டங் களுள்ள இடங்களிற் சென்று ஊழியஞ் செய்யத் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழு வதையும் தத்தம்செய்யத்தக்க ஆட்கள் தேவை தான். மிகுதியானவர்கள் அப்படிச் செய்ய முடியாது. ஆயினும் ஒவ்வொருவரும் தாம் இருக்கும் இடத்திலிருந்துகொண்டே இச் சங்க விஷயமாக வேலைசெய்யக்கூடும். ஜெபக் கூட்டங்கள் நடத்தியோ, மிஷனெரி பிரசங் கங்கள் செய்தோ, கடிதங்கள் எழுதியோ, தையல் தைத்தோ, வேறு பலவிதமாகவோ, வேலைசெய்து இச்சங்கத்துக்கு உதவிபுரிய லாம்.

3-வது. வாயினால் வல்லதைச் சொல்ல லாம். மனதினால் அரிய காரியங்களை நிதா னிக்கலாம். ஆயினும் கண்ணிற் புலப்படத் தக்க எந்த வேலைக்கும் பணமில்லாமல் முடியு மோ? தற்காலத்தில் நடக்கும் கொடிய யுத்தத் தில் தினமொன்றுக்கு எத்தனையோ கோடி ரூபாய் செலவாகிறது. எத்தனையோபேர் சுயவெறுப்போடும் வைராக்கியத்தோடும் போ ர்முனைக்குப் போகின்றனர். சாத்தானோடும் அவன் தூதரோடும் அஞ்ஞான அந்தகாரத் தோடும் அமர்புரிகின்ற நமது ஞான யுத்தம் வெளியே யுத்தத்தைவிட முக்கியமானதன் றோ? இதற்கு எவ்வளவு திரவியம் வேண்டி யிருக்கிறது. எவ்வளவோ சுயவெறுப்பும் தேவ வைராக்கியமும் தேவையாயிருக்கிறது. தங்களைத் தத்தம் செய்து மலைச்சார பூமிகளில் வேலைசெய்யப் போயிருக்கிறவர்களை வயிறு வாடவிடலாமோ? வேலையாள் தன் கூலிக் குப் பாத்திரனல்ல இருக்கிறானே, போரடிக் கிற மாட்டின் வாயைக் கட்டலாமோ? வனாந் தரத்தில் அநேகாயிரம் ஜனங்கள் மூன்றுநாள் பட்டினியாய்க்கிடந்தபோது கர்த்தர் தமது சீஷர்களைப் பார்த்து "நீங்களே அவர்களுக் குப் போஜனம் கொடுங்கள்" என்று சொன் னதுபோல் இன்றைக்கும் இதை வாசிக்கும் கண்பரே உம்மைப் பார்த்து நீங்களே அவர் களுக்குப் போஜனம் கொடுங்கள் என்று கர்த் தர் உரைக்கிறார். எவ்வளவுக்கு அதிகமாய்க் கொடுக்கிறீரோ அவ்வளவுக் கதிகமாய் இச் சங்கத்தின் வேலையும் விர்த்தியாகும். கொடுக் கிறவர்களுக்கு ஆசீர்வாதமும் பெருக்கமாய்க் கிடைக்கும். தெலுங்கு நாட்டு இழிவான ஜனங்களுக்குள்ளும் மிலேச்சரான பளியருக் குள்ளும் கிறிஸ்துமார்க்கம் பரம்பச் செய்கிற நமது இந்திய மிஷனரி சங்கத்துக்கு நீங்கள் கொடுப்பதைக் கடைசி நாளில் நியாயாதிபதி யானவர் வியந்து பேசி "மிகச் சிறியரான இவர்களிலொருவனுக்கு நீங்கள் எதைச் செய் தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று சொல்லி உங்களை வாழ்த்தித் தமது பரமானந்த பதவியில் சேர்ப்பார்.

"ஆகையால் கொடுங்கள் அப்பொழுது உங் களுக்கும் கொடுக்கப்படும்".

இங்ஙனம்.

உங்கள் நன்மையை நாடுகிற

I. M. S. T. சென்னை கிளைச்சங்கத்தார்.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

வேனில்கால ராஜாவுக்கு வீட்டுக்குப் போன பிள்ளைகள் சுகமாய்ப் பள்ளிக்கூடம் திரும்பினார்கள். வியாதி முதலிய கா ரணங்களால் தடைப்பட்டவர்கள் ஐந்துபேர். விடுமுறை காலங்களில் 7 பையன்கள் தத் தம் ஊர் உபாத்தியாருடனும், 6 பெண்பிள் ளைகள் தத்தம் ஊர் உபாத்திச்சியாருடனும் சேர்ந்து ஒரு மைல் முதல் 24 மைல் வரை யும் பிரயாணம் செய்தும், ஒருநாள்முதல் ஏழுநாட்கள் வரை பின்னிட்டும் சுவிசேஷ வேலை செய்தார்கள். அவர்கள் விதைத்த விதைகளை தேவன் முளைக்கச்செய்ய பிரார்த் திப்போமாக.

புதிதாய்ச் சேர்க்கப்பட்டவர்கள். பை யன்கள் ஆறுபேரும், பெண்பிள்ளைகள் 5 பேரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப் போதுதான் எருக்கலர், ஒட்டர் பையன்கள் போர்டிங் பள்ளிக்கூடத்தில் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தட்டிப்பள்ளி யிலிருந்து இரண்டுபேரும், உல்லிப்பள்ளியி லிருந்து இரண்டுபேரும், பஞ்சாயிலிருந்து ஒரு பெண்பிள்ளையும் வந்திருக்கிறார்கள். இந்த ஊர்களிலிருந்து இப்போதுதான் முதல் விசையாக போர்டிங் ஸ்கூலுக்குப் பிள்ளை

கள் வந்திருக்கிறார்கள். இவர்களை ஆதரிப் போர் தேவை. இவர்களையல்லாமல், எருக் கலர் வகுப்பைச் சேர்ந்த ஓர் பெண்பிள்ளைப் பிள்ளைக்கும், ஓர் பையனுக்கும், ஒட்டர் வகுப்பைச் சேர்ந்த ஓர் பையனுக்கும் ஆதரிப் போர் தேவை.

செல்ல அந்தியோ. இவன் ஒட்டர் ஜாதியைச் சேர்ந்த பையன். இவனுக்கு வயது சுமார் 13. இவன் ஜாதியார் மண் வேலை எல்லாம் செய்வார்கள். அதாவது கிணறு வெட்டுதல், மண்வீடுகட்டுதல், கால் வாய், குளம் பண்படுத்தல் முதலிய வேலை செய்து காலம் கழிப்பார்கள். சிறுபிள்ளை கள் பன்றி வளர்ப்பார்கள். தங்களை மாலர், மாதிகர் ஜனங்களைப் பார்க்கிலும் உயர்ந்தோர் என்பார்கள். ஆகையால் அவர்களுடன் கலப்பது இழிவு என்பார்கள். பெற்றோர் இவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது, அவர்களுடன் சாப்பிட்டால் குலம் தாழ்ந்து போம் என்றார்கள். இப்போது இவன் மால, மாதிக, ஜனங்களுடன் கலந்திருக்கிறான். போர்டிங்கில் சேர்க்கப்பட்ட முதல் ஒட்டப் பையன் இவன்தான்.

கோனேட்டி ராமடு. இவன்-மாதிகர், மா லர், ஒட்டர்களைவிட உயர்ந்த ஜாதி என்னப் பட்ட எருக்கலகுலத்தைச் சேர்ந்தவன். எருக் கலர்-இவர்களுக்கு என்னதெரியும்? வீட்டு வீட்டுக்குத்திரிந்து எருக்கலபெண்பிள்ளைகள்-ஒருகூடையில்-பிரம்பினல்செய்து "சோவிப்" தித்தபொம்மை ஒன்றையும் இரண்டு மூன்று விரல் பருமனுள்ள ஒரு முடிக்குச்சு ஒன்றை யும் போட்டுக்கொண்டும் வீடு வீடாய் ஓ— அம்மா—எருக்கடுகண்டமோ என்று கத்திக் கொண்டும் செல்லுவார்கள். குறிகேட்கிற வன் எதிர்ப்பட்டால் அவன் கையில் அந்தக் குச்சை எடுத்துக் கொடுப்பார்கள், அவன் அந்தக் குச்சியின் அடியைப் பிடித்து அந்தப் பொம்மையைத் தொட்டு வணங்கினபின்— மறு நுனியைத் தானும் பிடித்துக்கொண்டு இருவரும் அந்தக் குச்சை நாலுதிசைக்கும் ஆட்டிக்கொண்டே நலம், புலம், பரிகாரம் சொல்ல அவனுக்குக் கொடுக்கும் அளைப்படி சோளத்தை அந்தக்கூடையில் பொம்மை மேல் போடுவான். பின்பு, அந்த எருக்கலத்தி அதின்மேல் சில அடையாளங்களைப்போட் டுப் போய்விடுவாள்.

இன்னும் சிலருக்கு மருந்துச்சீடிகள் மூலிகைகள் நன்றாய்த்தெரியும் என்கிறார்கள். அப்போதைக்கப்போது மருந்தும் சொல்லு வார்கள்.

அங்கங்கே நடமாடும் திருடர்களின் போக்கு வரவு அவர்களுக்கு நன்றாய்த் தெரி யும் என்றும் எண்ணுவதால் அவர்களுக்கு போலீஸாரால் உபாதையும் அதிகம்.

சாதாரணமாய்க் காட்டுக்குப் போய்மிலா றுகள் அறுத்துக்கொண்டுவந்து, கூடைகள் முதலியவைகள் செய்வார்கள். எருக்கல மனு ஷர், திருட்டுத்தனத்தில் பேர்போனவர்கள் என்பது ஜனங்களின் சொல். பூனை, எலி, பெருச்சாளிகளையும் கிடைக்குமானல் தின் பார்கள் பன்றிகளையும் வளர்க்கிறார்கள். இந்த ஜாதியிலிருந்து பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட முதல்பையன் இவன்தான் என்று நினைக்கிறேன். புதிதாய்ச் சேர்க்கப் பட்டவர்களுக்குப் போஷிகர்கள் கிடைக் கும்படி ஜெபிப்போமாக. முதல் ஒட்டப் பையனை, முதல் எருக்கலப்பையனை ஆதரிக் கும் சிலாக்கியம் பெறுகிறவர்கள் பெரிய பாக் கியவான்களல்லவா? முதலாவதாக உல்லிப் பள்ளி என்ற கிராமத்திலிருந்து வந்த இரு வர். இப்போதே நமது பள்ளிக்கூடத் தில் மாதிகர், ஒட்டர், எருக்கலப்பையன்கள் கலந்திருக்க, தேவன் கிருபைசெய்திருக்கிறார். குலபேதமில்லாமல் இவர்கள் பயிற்சிபெற தேவனை வேண்டிக்கொள்ளக் கேட்கிறேன்.

கம்மாமேட்டுக்கு உயர்தரக் கல்விக்காக இந்த வருஷம் நாலு பேர் அனுப்பப்பட்டி ருக்கிறார்கள், இவர்கள் 7-ம் வகுப்புவரை அங்கே படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கி றது. தச்சு வேலைக்காக இரண்டுபேரும் கொசவுவேலைக்காக ஒரு பையனும் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

நமது ஸ்கூலில் ஒரு பையன் தச்சுவேலை பழகவும், இரண்டுபேர் கொசவுவேலை பழக வும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

S. V. சுவாமிதாஸ்.

ஆகஸ்டு 1916. Vol. XIII. No. 8.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

46-ம் சங்கீதம்.

சனகெரிப்பின் கையிலிருந்து எருச லேம் அற்புதமாய்த் தப்புவிக்கப்பட்ட சம் பவத்தை இக்கீதத்தில் கொண்டாடிப் பாடியிருக்கிறதென்பது வேதசாஸ்திரிக ளின் பெரும்பான்மையோர் அபிப்பிராயம். எருசலேமைப் பிடித்துத் தாழ்த்தும்படி சனகெரிப் ராஜனான சேனையுடன், தன் சேனைபதிகளை அனுப்பி, எருசலேமை ஒப்புக்கொடுக்கும்படி கேட்டான். ராஜா மணமில்லாமலிருந்ததை சேனைபதிகள் லிப்னாவிலிருந்த சனகெரிப்பிடத்தில் சொல்லவே, அவன் எசேக்கியாவுக்கு நிருபம் ஒன்று எழுதி, தேவன்பேரில் ராஜா வைக் கும் நம்பிக்கை வீண் என்றும், 'யகோவா அப்பட்டணத்தைத் தன் கையிலிருந்து விடு விப்பதில்லை என்றும் பயமுறுத்தினான். (2 ராஜா 19: 10—13). எசேக்கியாவோ அந்நிருபத்தைக் கர்த்தருக்கு முன்பாக வரித்து, ஜெபித்து, நம்பிக்கையோடிருக்க வே, தீர்க்கதரிசியாகிய ஏசாயா கர்த்தரு டைய செய்தியை ராஜாவுக்குத் தெரி வித்து ஜனங்களைத் தைரியப்படுத்தினான் (2 ராஜா 19: 21—34.)

"அன்று ராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால்: கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் லக்ஷத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங் கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க்கிடந்தார்கள்." (2 ராஜா 19: 35) இவ்வித ஆச்சரிய விடுதலையை கவிஞன் கினைத்து இச்சிறந்த கீதத்தை எழுதியிருக்கலாம்.

இரண்டுவிதமாய் நாம் இச்சங்கீதத்தை அர்த்தம்பண்ணலாம்: அன்பங்கள், கஷ்டங் கள், சோதனைகளின் கடுவில் தேவன் தன் னோடிருக்கிறார் என்ற தைரியத்தினால் விசு வாசி பாடும் ஜெய கீதமாக எண்ணிக்கொள் ளலாம். அல்லது, பூலோகத் தத்தளிப்பு கள், ராஜ்யங்களின் குளப்பங்கள், சத்து ருக்களின் உபத்திரவங்களின் கடுவில் கிறிஸ்து சபை நம்பிக்கையோடு பாடும் ஆர்ப்பரிப்பாகவும் கினைத்துக்கொள்ளலாம்.

இச்சங்கீதத்தில் மூன்று சரணங்கள் உண்டு. ஏழாம் வாக்கியமும், பதினோராம் வாக்கியமும் பல்லவிகள் என்று தோன்று கிறது. மூன்றும் வாக்கியத்திற்குப் பின் னும் அப்பல்லவி இருந்திருக்கலாம்.

(1) தேவன்பேரிலுள்ள நம்பிக்கை வ. 1-3

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனுமா னவர்,
அவரே ஆபத்தில் அனுகூல தஞ்சமுமானவர்.
ஆகையால், பூமி மாறிப்போனாலும்,
மலைகள் நடுச்சமுத்திரத்திற்குட் சாய்ந்து விழுந் தாலும்,
அதின் ஜலங்கள் கொந்தளித்துக் கோஷ்டித்தா லும்,
அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தா லும்,
நாம் பயப்படோம்.
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்!
யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த கோட் டை!

சீயோன் திருச்சபைக்கு உவமானம். எருசலேம் அற்புதமாய்த் தப்புவிக்கப்பட்

டதுபோலவே திருச்சபையும் எத்தனையோ தொந்தரவுகள், உபத்திரவங்களிலிருந்து அதிசயமாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது. இனி மேலும் அப்படியே நடக்கும். ராஜ்யங்கள் தத்தளித்து, நாடுகள் பாழாக்கப்பட்டு, அதின் பட்டணங்களும், கூடகோபுரங்களும், மாடமாளிகைகளும் நிர்மூலமாக்கப் பட்டாலும் அச்சபை குன்றாமல் நிலைத்து வளர்ந்தோங்கிப் பெருகும். ஏனெனில் இம்மானுவேலர் கம்மோடிருக்கிறார்.

(2) அந்நம்பிக்கைக்கு காரணம். வா. 4—7.

ஓர் நதி! அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும்
உன்னதமானவரின் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.
தேவன் அதின் (அந்நகரத்தின்) நடுவில் இருக்கிறார், அதை அசைக்கமுடியாது.
அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.
ஜாதிகள் கொந்தளித்தன! ராஜ்யங்கள் அசைந்தன!
அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார்!-பூமி உருகிப்போயிற்று.
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்!
யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த கோட்டை.

எருசலேம் பட்டணம் சமுத்திர ஓரத்திலாவது, நதிதீரத்திலாவது நிற்கவில்லை. 'மெதுவாய் ஓடுகிற சீலோவாவின் ஊற்றை அங்குள்ள நதி. (ஏசா. 8: 6 பார்க்க) சீலோவாம் பார்வைக்கு ஓர் சிறு சுனை போன்றதே. இதுவே தேவனுடைய நகரத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்துக்கும் தண்ணீர் அளித்த ஆறு. தேவசமுகத்திற்கு இதை உவமானமாக்கி சங்கீதக்காரன் இங்கே பேசுகிறான். பட்டணத்துக்குப் பெரிய நதியல்ல, சமுத்திரமல்ல, மலையல்ல—பார்வைக்குத் தென்படாமலிருந்தாலும் நிச்சயமாய் அதின் நடுவில் வாசம் பண்ணும் தேவசமுகமே அதின் உயர்ந்த கோட்டை. அவர் சமுகமே நதி. அவர் அருளும் இருபைகள் நகரத்தைச் சந்தோஷிப்பிக்கும் என்கிறான்.

திருச்சபையைப்பற்றிய நம்பிக்கைக்குக் காரணமும் அதின் நடுவில் வாசம்பண்ணுகிற தேவ ஆவியே. ஜாதிகள் கொந்தளிக்கட்டும்! ராஜ்யங்கள் நடுங்கி அதிரட்டும்! திருச்சபையோ பயப்படவில்லை. அதை அசைப்பவன் யார்?

தேவ நதி இப்பொழுதும் நமது மேல் ஓடுகிறது. அதின் நீர்க்கால்கள் கம்பையும் சந்தோஷிப்பிக்கப் போதுமானது. அன்று போலவே இன்றும் சத்துருக்களை முறியடிப்பார். நமக்குச் சகாயம்பண்ணுவார்.

(3) அந்நம்பிக்கையின் பலன். வா. 8—11.

கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள், பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிறவர் அவரே—
அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்,
வில்லை ஒடிக்கிறார், ஈட்டியை முறிக்கிறார்.
இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.
நீங்கள் சும்மா இருங்கள்; நானே தேவன் என்று அறியுங்கள்;
ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்!
யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த கோட்டை!

பலன் இரண்டு. (1) யுத்தத்தை ஓயப்பண்ணினாலும், யுத்தமின்றியே தமது ஜனங்களைக் காப்பாற்றுகிறார். (2) அவர் தேவன் என்று புறஜாதிகள் அறிந்துகொள்ளச் செய்கிறார். "நீங்கள் சும்மா இருங்கள்" என்ற வார்த்தை தேவன் தாமே புறஜாதிகளைப் பார்த்துச் சொல்லுவது. யுத்தம் செய்து அழித்துபோகவேண்டாம், நான் தேவன் என்கிறார்.

கற்காலத்தில் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தை நினைத்தவர்களாய்க் கடைசிச் சாணத்திலடங்கிய வாக்கைச் சொல்லி ஜெபிப்போமாக. யுத்தங்களை ஓயப்பண்ணுகிற தேவனே! இந்த யுத்தத்தையும் ஓயப்பண்ணும்! நீரே தேவன் என்று புறஜாதியார் அறிந்துகொள்ளத்தக்கதாக இக்கொடியபோரை ஒண்டெடுத்தும். சும்மா இருங்கள்! என்று இன்றும் சொல்வீராக! ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திரும்! பூமியிலே உயர்ந்திரும்! ஆமென்.

ஒரு பாலிய மிஷனேரியின் சரித்திரம்.

'ஜீவனாலாகிலும் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தில் மகிமைப்படவேண்டும்'.

மனுஷனுடைய வீரச்செய்கைகளும், உலகம் பார்த்து வியக்கக்கூடிய செயல்களும், இன்னும் மற்றும் வெளியரங்கமான வேலைகளும் கடவுளுடைய கணக்கில் பெரியவைகளாய் மதிக்கப்படாமல். அவனுடைய ஜீவியத்தின் வைராக்கியம், வாஞ்சை, சிநானங்கள், அதாவது, உலகம் கணக்கிடக் கூடாததும், பார்க்கக்கூடாததுமான அந்தரங்க ஜீவியமே விலையேறப்பெற்றதாய் இருக்கின்றது என்று பேர்போன கவியாகிய ராபர்ட் பிரௌணிங் (Robert Browning) எழுதியிருக்கிறார். மனுஷன் முகத்தை அதாவது வெளிக்தோற்றத்தை, வெளியரங்கமான பேச்சுகள், செய்கைகளைப் பார்ப்பான்; கர்த்தரோ அத்தோற்றத்தின் உற்பத்தியாகிய இருதயத்தைப் பார்க்கிறார். ஆகையால் நம்முடைய ஜீவியத்தின் நோக்கம் கடவுளுக்கு முன்பாக உகந்ததாயிருந்தால், அந்த நோக்கம் நிறைவேறுவிடினும், மேலான பலனுக்குப் பாத்திரராயிருப்போம். என் ஜீவகாலத்தில் எண்ணேமுற்றிலும் என் எஜமானுக்காக ஊற்றிவிடவேண்டுமென்று தீர்மானஞ்செய்து ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்த எண்ணிக்கையற்ற வாலிபர் தங்கள் கிரீடங்களை முன் வைத்து சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரை முகமுகமாய்த் தரிசித்துத் தொழுதுகொண்டிருக்கிறார்கள்.

மோட்ச வாசிகளைத் திறந்தமுகமாய்ப் பார்க்கும் சலாக்கியம் நமக்குக் கிடைக்குமானால், நான் உங்களுக்கு முன்பாக நிறுத்தப்போகிற வாலிபனை முன்சொன்ன கூட்டத்திற் காணலாம். வாலிபரைத் தமது ஊழியத்திற்குத் தெரிந்துகொள்ளுவது தேவனே. அவர்கள் இருதயத்தில் பரிசுத்த வைராக்கியத்தை மூட்டிவிடுகிறவர் அவரே. அவ்வாஞ்சையை நிறைவேறுமல் தடுத்தும், நோக்கின வேலை தடைபடாமல் கொண்டு செலுத்துகிறவரும் அவரே.

பலஸ்தீனாவிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் யூதஜனங்களுக்குள் ஊழியம்பண்ணி வரும் யூத மிஷனேரி சங்கத்திற்குத்தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு வாலிபன், மிஷனேரி வைத்தியனாக உழைப்பதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் 'உன் நோக்கம் போதுமானது, உன் ஊழியம் தடைபெறுமல் தடைபெறும்' என்ற திவ்விய வாக்கைப் பெற்றுக் காணப்படாமல் மறைந்துபோனான். இன்றைக்கும் அவன் இருந்திருக்கவேண்டிய இடத்தில் அவன் விரும்பிக் காத்திருந்த ஊழியம் நடந்தேறி வருகிறது.

யுஸ்டேஸ் மாக்ஸ்வல் என்ற இவன் 1876-ம் வருஷம் பெப்ருவரி 12-ம் தேதி பர்மிங்ஹம் பட்டணத்தில் பிறந்தான். இவனுடைய தகப்பனார் அவ்விடத்தில் ஸ்தாபகமாயிருந்த ஒரு குருவானவர். 1885-ம் வருஷம் எடின்பரோ கோட்டையில் உள்ள ஒரு பாட்சாலைக்கு அனுப்பப்பட்டான். அவ்விடத்தில் உள்ள ஆசிரியரோடு அதிகமாய்ப் பழகிக்கொண்டு அன்போடும் தகுந்த மரியாதையோடும் நடந்துகொண்டு தன் காரியங்களெல்லாவற்றையும் அவரிடத்தில் சொல்லிவருவான்.

இளமையிலேயே தெய்வ சாயல் இருதயத்தில் தோன்றி வந்தாலும், பாவத்தை விட்டு நீங்கி தெய்வத்தோடு ஐக்யப்பட்டு ஜீவிக்கவேண்டும் என்ற பிரியமும், பாவத்தைப்பற்றிய வெறுப்பும் 1887-ம் வருஷம் கிறிஸ்மஸ் காட்சியில் திட்டமாய் உண்டானது. எப்படியெனில், சிறு பிள்ளைகளுக்காக ஒரு விருந்து இவனுடைய வீட்டில் வைத்திருக்கையில், ஆசோஸ்மித் என்னும் ஒரு புது இருதயத்தைப்பற்றிப் பிள்ளைகளுக்குப் பேசினார். உடனே அதைப்பற்றிய வாஞ்சை இவனுக்கு உண்டானது. அன்று இரவில் அழுது கண்ணீரும் சிந்திய மூக்குமாய் படுக்கையிலிருந்து எழும்பி தாயினிடத்தில் தனக்குப் புது இருதயம் வேண்டுமென்று அழுதான். பாவம் மன்னிக்கப்பட்டால்தான் புது இருதயங்கிடைக்கக்கூடும் என்று தாய் சொல்ல உடனே இருவரும் முழங்காற்படியிட்டுப் பாவத்தை அறிக்கையிட்டு புது இருதயத்திற்காகக்

கெஞ்சினார்கள். அப்பொழுது தோன்றிய முகமலர்ச்சியும் உள்ளக்களிப்பும் மரணத்திலும் மங்காமலேயிருந்தது.

தான் பெற்றுக்கொண்ட சந்தோஷத்தை மற்றவர்களும் பெற விரும்பித் தன் உடன் மாணாக்கர் வேத ஆராய்ச்சி வகுப்பில் சோ.பிராயாசப்பட்டுவந்தான். ஆவிக்குரிய விஷயத்தில் முற்றிலும் முழுகிப் போய் சரீரத்திற்கேற்ற காரியக்களேக் கவலையில்லாமல் விட்டுவிடவில்லை. வாலிபப் பிராயத்தில் தூக்கோடி விளையாடக்கூடிய சகல விளையாட்டுகளிலும், வேட்டை முதலிய வைகளிலும் அதிக சிரத்தை எடுத்து வந்தான். (ஆவி உற்சாகமாயிருக்கவேண்டுமானால் சரீரமும் ஏற்ற பலமும் தகைபுமுள்ளதாயிருக்கவேண்டும்).

1893-ம் வருஷம் ராஜாவுக்குப் போகுமுன் பள்ளிக்கூட ஆசிரியரில் ஒருவரான பர்னே என்பவர் 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுங்கள்' என்ற வசனத்தை எடுத்துக் கொண்டு ஊழியங்கள் தொடர்ந்துகொள்ளுவதைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். அதன் பயனாக இவ்வாலிபன் முற்றிலும் தீர யோசித்து வைத்திய மிஷனரி ஊழியஞ் செய்யத் தீர்மானஞ் செய்தான்.

பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடனே கேம்ரிட்ஜ் சர்வ கலாசாலையில் சேரவேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அங்கே படிப்பதற்குத் தகுந்த பண உதவி கிடைக்கக் கூடாததினால் பர்மிங்ஹாம் பட்டணத்திலுள்ள மேசன் காலேஜில் சேரவேண்டியதாயிருந்தது. அதினால் அதிக வருத்தத்தை அடைந்தபோதிலும் அங்கே போவதற்கு முற்றிலும் சம்மதித்தான்.

ஒவ்வொரு நாளிலும் செய்யவேண்டிய வேலைகளுக்கெல்லாம் திட்டமான கால ஒழுங்கு ஏற்படுத்தி அவ்வொழுங்குப்படி ஒரு நிமிஷ அளவும் தவறாமல் நடந்து வருவான். ராஜா நாட்களிலும் அவ்விதமாய்த்தான் நடப்பான். மூன்று வகையான ஊழியம் இக்காலத்தில் செய்துவந்தான். முதலாவது, வாலிபர் ஐக்கிய கூட்டத்தை வேலை; இரண்டாவது, ஓய்வுநாள் பள்ளிக்கூட வேலை; மூன்றாவது, பாட்டுக்கூட்ட வேலை. பாட்டு, சங்கீதம் என்றால் அவனுக்கு அதிக பிரியம். எப்பொழுதும் பாடிக்கொண்டேயிருப்பான். தன்னை முற்றும் ஆண்டவருக்குக் கையளித்த பிறகு, பக்திக்கேதுத்த பாட்டுகளைத் தவிர வேறெந்தப் பாட்டும் பாடுவதில்லை என்று தீர்மானஞ்செய்துகொண்டான். வாவர உலக ஆசை அவனைவிட்டு நீங்க இறிஸ்துவோடு ஐக்கியம் அதிகரித்துக்கொண்டே வந்தது.

இவ்வாறிருக்கையில், அவனுக்குத் தெரியாமலே ஒரு சிநேகிதர் அவன் கேம்ரிட்ஜ் சர்வ கலாசாலையில் படிப்பதற்கு செல்லும் செலவு முழுவதையும் தான் கொடுப்பதாகச் சொல்லி அவனை அங்கே அனுப்பும்படி ஒழுங்கு செய்தார். பரோபகாரியான அவர் யார் என்று கடைசிவரைக்கும் அவன் அறிந்ததில்லை.

இச்சமயத்தில் பலஸ்தீன காட்சிஒன்று பர்மிங்ஹாம் நகரில் வைக்கப்பட்டு, யூத ஜனங்களுக்குள் செய்யப்படும் வேலையைப் பற்றி பிரசங்கங்கள் நடந்தன. இதுவே கடவுளுடைய சொந்த ஜனங்களான யூதர் பேரில் அவனுடைய மனதைச் செலுத்தின ஆதியாயிருந்தது. தமஸ்குப்பட்டணத்தில் யூத மிஷனரி சங்கத்தின் கீழ் வைத்திய மிஷனரியாக ஊழியஞ்செய்யத் தீர்மானஞ் செய்துகொண்டான். தன்னுடைய குடியிருப்புப் பாலோகத்தில் இருக்கிறது என்கிற நம்பிக்கையினாலும் நிச்சயத்தினாலும், தனக்குக் கிடைக்கவேண்டிய குடும்ப சொத்து முழுவதையும் தன் சகோதரனுக்கு எழுதிக் கொடுத்து விட்டான். தன்னுடைய உல்லாச தோழர் எல்லாரையும் விட்டுவிட்டு பக்தியில் தேர்ந்த சிநேகிதரைத் தெரிந்துகொண்டான்.

அந்த வருஷம் (1894) வேனிற்கால விடுமுறை நாட்களில், போர்ட் எரின் (Port Erin, Isle of Man) என்ற இடத்தில் சிறுவரின் விசேஷ ஊழிய மிஷன் (Children's Special Service Mission) சம்பந்தமாய் நடத்தப்பட்ட கூட்டங்களுக்குப் போனான். அதற்குப் போகுமுன்னமே அதைப் பற்றி அவனுக்கிருந்த அபிப்பிராயம் இன்னமட்டென்றில்லை

அவ்விடத்தில் அநேக பிரசங்கங்கள் செய்து, பிள்ளைகளைக் கவரக்கூடிய விதமாய் அவர்களோடே கூடி விளையாடி, அவர்களைச் சந்தோஷப்படுத்தினான். அவனுடைய பிரசங்கத்தைப்பார்க்கிலும், அவன் பேசின ஆசீயின் உற்சாகமும், தைரியமும், களிப்பும் அதிக வல்லமையாயும் ஆழமாயும் கிரியைசெய்தது என்று அதைக் கேட்ட அனைவரும் சாட்சிகொடுக்கிறார்கள். தன் அனுபோகத்தில் கண்டறிந்த சத்தியத்தை பேதிரசங்கித்ததினால் அதிகவல்லமையாய்க் கிரியை நடந்தது. ஜெபத்தில் அவனுக்கிருந்த நம்பிக்கையும், கொஞ்சமும் நம்பிக்கையே யில்லாத சமயங்களில் அவனிடத்தில் காணப்பட்ட நிச்சய நம்பிக்கையும் அங்கே வந்திருந்த ஊழியரெல்லாரையும் தாக்கினது. இதோடுகூடத் தனித்தனியாய் இரவின் நேரங்களில் அநேகரோடு சம்பாஷணை செய்து அவர்களைக் இறிஸ்துவோடு ஐக்கியப்படுத்திக்கொண்டுவந்தான்.

வாலிபரே, ஒரு வாலிபன் செய்யக்கூடியது எவ்வளவு, என்று தெரிகிறதா? இவ்வளவு பெரிய காரியங்களை வாலிபர் இறிஸ்துவுக்காகச் செய்யக்கூடும் என்று நாம் அவர்களுக்கு உணர்த்திவருகிறோமா? அந்தக் கூட்டங்களில் அநேகர் இந்த வாலிபன் மூலமாய் இறிஸ்துவின் சேனையில் பதிந்து கொண்டார்கள்.

காலேஜில் படிக்கும்போதும் இவ்வளவு மகத்துவமாய் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யமுடியுமா? பார்ப்போம். யுஸ்டேஸ் கேம்ரிட்ஜ் கலாசாலையில் இருக்கும்போது அநேகர் அவனை விரும்பி அவனோடு பழகிக்கொள்ளக்கூடிய விதமாய் எல்லா சேமும் மலர்ந்த முகமும் சந்தோஷம் நிறைந்த பார்வையுமுடையவனாய் இருப்பான்.

அதிகாலையில் எழும்பி 'காலை தியானம்' (Morning Watch) என்று அழைக்கப்படுகிற வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் தரித்திருப்பான். இதுவே பகல் முழுவதும் அவனுடைய ஜீவியத்தில் காணப்பட்ட வல்லமையின் ரகசியமாயிருந்தது. இறிஸ்துவை அறிந்திராத வாலிபர் கூடிக் களித்து மகிழுகிற கூட்டத்திலும் அவர்களோடு கூடி காலேஜ் விளையாட்டுகள், பந்தயங்கள், இவைகளைப்பற்றிப் பேசிவருவான். அதாவது அவர்கள் தகாத காரியங்களைப்பற்றிப் பேசி கல்லொழுக்கத்தைக் கெடுத்துவிடாதபடி இவ்விதமாய்ச் செய்துவந்தான். இன்னமும் காலையிலும் மாலையிலும் நடத்தப்படவேண்டிய ஜெபங்களுக்கு வரும்படி அநேக மாணாக்கரை வசப்படுத்தினான். மற்றையாரிடத்திலும் போக்குச்சொல்லிவிட்டாலும் இவனிடத்தில் அது முடியாததாயிருந்தது.

இறிஸ்துவின் ஒளியைப்பெற்றுப் பிரகாசிப்பதும், இருளடிய ஆத்துமாக்களின் அந்தகாரம் நீங்க அவ்வொளியை உட்செலுத்துவதும் தானே இறிஸ்தவ ஊழியம். இறிஸ்துவாகிய ஒளி ஜீவியத்தை நிரப்பிக் கொண்டிருக்கும்போது, அந்த ஜீவியம் பிரகாசியாமல் இருக்கமுடியாது. இதை வாசிக்கும் அருமையானவர்களே, அவ்வொளி வீட்டிலும், வெளியிலும், வேலையிலும் விளையாட்டிலும், காலேஜிலும் பள்ளிக்கூடத்திலும், எவ்விடங்களிலும் எக்காலங்களிலும் பிரகாசிக்கக்கூடும், பிரகாசிக்கவேண்டும்.

யுஸ்டேஸ் அவ்வருஷத்தின் படிப்பை முடித்து டிசம்பர் மீ 5-ம் தேதி இறிஸ்மஸ் ராஜாவுக்காக வீட்டிற்குப்போனான். தான் கேம்ரிட்ஜ் கலாசாலையில் செய்துவந்த இறிஸ்தவ ஊழியத்தைப்பற்றித்தான் மகாளிப்போடு பேசிக்கொண்டிருப்பான். டிசம்பர் மீ 13-ம் தேதி செவ்வாய்க்கிழமை வாலிபர் ஜெப ஐக்கியக் கூட்டத்தில் 'பிள்ளையாண்டான் சுகமாயிருக்கிறானா?' (2 சாமு. 18: 29) என்பதின்பேரில் இருதயங்கள் உருகத்தக்க விதமாய்ப் பிரசங்கம் செய்தான்.

இறிஸ்மஸ் வாரத்தில் சிறுவருக்கென்று விடுமுறைக் கூட்டங்கள் நடத்தும்படி

ஒழுக்குசெய்திருந்த இவன், டிசம்பர்மீ 19-ம் தேதி புதன்கிழமை திடீரென்று அவனுடைய ஞானத்தகப்பனாரைப் போய்ப் பார்த்துவரும்படி விரும்பி அழைக்கப்பட்டான். சனிக்கிழமையன்று சாயங்காலத்தில் வீட்டிற்குத் திரும்பவேண்டியது. கடோத்திரிமட்டும் இவன்வரவேண்டிய ரெயில் வண்டி வரவில்லை. காலை மூன்று மணிக்கு வந்தது. புஸ்ற்றேஸ்ஸும் திரும்பிவந்தான். ஆனால் தாயாரை முத்தஞ்செய்யக்கூடாதபடி அவனுடைய வாயும், தழுவக்கூடாதபடி அவனுடைய கைகளும், தன் எஜமானுக்காக விலாந்துசெல்லாதபடி அவனுடைய கால்களும் விரைத்துப்போயிருந்தது. முகத்தில் களிப்பும் மலர்ச்சியும் மாணத்திலும் மங்காமலேயிருந்தது. இவன் ஏறிவந்த ரெயில்வண்டி வேறொரு வண்டியோடு மோதி அதேகர் கொல்லப்பட்டார்கள். அவ்வேளையில் அமரிக்கையாய்த் தூங்கிக்கொண்டிருந்த இவனும் மரணத்தைக் காணுதபடி எடுத்துக்கொள்ளப்பட்டான். எதிர்பாராத சமயத்தில், ''உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும் அறிந்திருக்கிறேன்.' உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று அழைப்பு வந்துவிட்டது.

ஊழியனுக்கு முடிவுவந்தது ஆனால் ஊழியம் முடிந்துவிடவில்லை. 'புஸ்ற்றேஸ் மெமோரியல் பண்ட்' என்று ஒரு ஞாபகநிதி ஏற்படுத்தப்பட்டது. இவனை அறிந்த எல்லாரும் மகா உற்சாகமாய் அதற்குப் பணம் அனுப்பினார்கள். இன்னமும் அனுப்பிவருகிறார்கள். அந்த நிதியின் வருமானத்தைக்கொண்டு புஸ்ற்றேஸ் விரும்பியபடி தமஸ்கப் பட்டணத்தில் யூகருக்குன் ஒருவைத்திய மிஷனெரி எப்போதும் ஊழியஞ் செய்துவருகிறார். அவனுடைய ஜீவனுலும் சாவினுலும் கிறிஸ்து அவனுடைய சரீரத்தில் மகிமைப்பட்டுவருகிறார்.

ஒரு வாலிபன் கர்த்தருக்காகச் செய்யக்கூடியதை இவனுடைய ஜீவியம் வற்புறுத்திக்காட்டுகிறது. எப்பொழுதும் நிறைந்த சந்தோஷமுள்ளவனுயிருந்து மற்றவர்களையும் சந்தோஷமாயிருக்கும்படி செய்யலாம். காலேஜிலும் மற்ற இடங்களிலும், கால ஒழுக்கு, முறைக்கிரமம், எக்காரியங்களிலும் துடுக்கு உற்சாகம் ('இயேசுவானவர் எல்லாக் காரியங்களையும் கன்றுய்ச் செய்தார்.') விடாமுயற்சி, கெட்டிட்காரத்தனம் இவைகளின் மூலமாய் கம்பிலுள்ள விசேஷித்த ஆவியை விளங்கப்பண்ணலாம். ஜெபக்கூட்டங்களுக்கு வரும்படி யாவரையும் வருந்தி அழைக்கலாம். சிறுவரோடு பழகி, அவர்களுடைய அன்பைச் சம்பாதித்து, அவர்களுக்குள் விசேஷித்த ஊழியங்கள் நடத்தலாம். படிக்கிற வாலிபர்தங்கள் உடன் மாணவர் எல்லாரும் கிறிஸ்தவ ஜீவியத்தில் உணர்ச்சியடையும்படியாகவும், அந்த ஜீவியத்தை விரும்பும்படியும் ஜீவித்துவரலாம்.

கடைசியாக, புஸ்ற்றேஸ் தனக்குச் சட்டமாக வைத்திருந்த ஒரு காட்சியையும், ஒரு வாசகத்தையும் அறிவிக்கிறேன். ஒரு கலப்பைக்கும் ஒரு பலிபீடத்திற்கும் மத்தியில் ஒரு எருது நிற்கும் காட்சி. உழவேண்டும், ஒருசமயம் தண்டிக்கப்படவேண்டும்.

''பணிவிடைசெய்ய—பலியிடப்பட
எதற்கும் ஆயத்தம்.''

இதுதான் அந்த வாசகம். ஜீவனுல் பணிவிடை, சாவினுல் பலி. கிறிஸ்துவில் இணைக்கப்பட்டிருக்கும் அருமையானவர்களே,

எதற்கும் ஆயத்தமா?

வருஷாந்தாக்கூட்டத்தில் கனம். பிரசிடென்றவர்கள் செய்த உபந்நியாசம்.

இந்திய மிஷனெரி சங்கமானது நிஜாம் ராஜ்யத்திலுள்ள உவாரங்கல் ஜில்லா வாசிகளுக்குள்ளும் இவ்வத்தியகூரதேசத்து மலை வாசிகளான பளியர், மண்ணுக்கள் முதலிய ஜாதியாருக்குள்ளும் வேலைசெய்யும் பொறுப்பை யேற்றிருப்பதுடன், இவ்வாதீனத்திலுள்ள பட்டணங்களில் சுவிசேஷப் பிர

சங்க ஊழியத்தை நடத்துங் கரிசனையுடையதாயுமிருப்பதால், இவ்வருஷோற்சவ தினத்தில் தேசாந்தர சுவிசேஷப் பிரசங்க விஷயமாய் சில ஆலோசனைகள் சொல்ல விருப்பமுற்று அவ்வூழியம் செய்துவந்த பெரியவர்களின் அபிப்பிராயத்தை ஆதாரமாகக் கொண்டு அவைகளை இங்ஙனம் தெரிவிக்கிறேன்.

நான் கனம். உவாக்கர் ஐயரவர்களின் ஜீவிய விருத்தாந்தத்தை வாசித்தேன். அதில் அவர்களுடைய முதிர்ந்த அனுபவத்தினுலுண்டான சில முக்கியமான வழிவகைகளைக் கண்டு அவைகளைக் கையாடிவரின் மிகுந்த பலனை விளைவிக்குமென்பதைபுன்னி அவைகளை யெடுத்துக் கூறுகிறேன்.

1. தேசாந்தர சுவிசேஷப் பிரசங்க ஊழியத்திற்கு இரண்டு விரக்தரான ஐரோப்பிய மிஷனெரிமார் அவசியமென்று கனம் உவாக்கர் ஐயரவர்கள் சொல்லுகிறார்கள். ஒருவருக்குப் பதில் இரண்டுபேர்களிருந்தால், சுகத்திலும், துக்கத்திலும், களைப்பிலும் இன்னும் பல சமயங்களிலும் ஊழியத்தில் ஒருவருக்கொருவர் உசாவுதுணையாயிருப்பார்களென்கிறார்கள். எனதபிப்பிராயத்திலும் அதுவே சரி என்று காண்கிறேன். ஆனால் அப்படி நியமிக்கப்படுகிற விருவரில் ஒருவர் ஐரோப்பியராகவும், மற்றவர் இந்தியராகவுமிருக்கலாம். அவ்விந்தியரும், கல்வி, பக்தி, வேதசாஸ்திர தேர்ச்சி முதலியவற்றிற் சிறந்தவராகவேயிருத்தல் வேண்டும். எனெனில், புறமதஸ்தருக்கு சுவிசேஷ ஒளியைக்காட்ட முயற்சிக்கும்போது அவர்களுடைய அறிவு ஒழுக்கம் நம்பிக்கை இவை முதலியவைகளை நன்கறியும் பொருட்டு, அவர்களுடைய வேதசாஸ்திரங்கள், புராண காவியங்கள், வழக்கத்திலேற்பட்டிருக்கும் புராதனமும், தூதனமுமான கொள்கைகள் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றறிந்திருக்கவேண்டும். இவ்விஷயமாய் இந்தியர் வெகு பிரயோஜனமாயிருத்தல் கூடும். அறிவாளிகள் நிறைந்துள்ள பட்டணங்களில், இங்கிலீஷ்ப் பாஷையிற் செய்யப்படும் உபந்யாசங்களே பலரைக் கவர்ந்துகொள்ளக்கூடியவைகளாயிருப்பதால், அவ்விஷயத்தில் ஐரோப்பியரே வெகு பிரயோஜனமாயிருத்தல் கூடும். ஆதலின் தற்கால ஜனங்களுடைய நிலைமைக்கேற்ப இருவரிலொருவர் ஐரோப்பியராகவும் மற்றவர் இந்தியராகவு மிருப்பது உத்தமம்.

சில காலங்களுக்குமுன் நான் பிரசங்க ஊழியத்திற்கென்று அயலிடஞ்சென்றபோது, என்னுடன் சகாயத்திற்காக வித்வான் ஜோதிநாயகம்பிள்ளை வந்திருந்தார்கள். சில சமயங்களில் இந்துக்கள கூட்டங்கூட்டமாய் வந்து கேட்டார்கள். அநேகங் கேள்விகளுங் கேட்டார்கள். ஒருவர் தவிப்படைந்தால் மற்றவர் பேசுவதுண்டு. பேசிய பொருளின்பேரில் ஏதாவது வாசிக்கவேண்டுமாயின் மற்றவர் வாசிப்பதுண்டு. கேட்ட கேள்விகளுக்கு ஜவாப் சொல்லும் விஷயத்தில், ஒருவர் சம்பாஷித்துக்கொண்டிருந்தால், மற்றவர் புஸ்தகத்திலிருந்து எடுத்துக்காட்டவேண்டியதைத் தேடியெடுக்கலாம்.

அப்படியே அம்பாசமுத்திரம், தென்காசி, ஊர்காடு, சிங்கம்பட்டி முதலான யிடங்களில் கனம். டக்ளஸ் ஐயரவர்கள் பிரசங்கத்திற்காகப் போயிருந்தபோது நானும் அவர்களுக்குச் சகாயமாய்க் கூடப்போயிருந்தேன். அக்காலத்தில் காலேதோறும் படிப்பாளிகளாயுள்ள முக்கியமான இந்துக்கள் வீட்டிற்குப் போய் அவர்களைக் கண்டு சம்பாஷித்துக் கொண்டிருப்போம். சாயங்காலந்தோறும் குறிப்பிட்டயிடத்தில் எல்லாரும் வரும்படி நோட்டீஸ் கொடுத்து உபந்யாசம் செய்வோம். சிலகாலம் நானும், பலகாலம் அவர்களும் உபந்யாசம் செய்தோம். கூட்டம் முடிந்தபின் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றிய கேள்விகள் கேட்பார்கள். நாங்கள் விடையளிப்போம். இப்படிச் செய்வது நல்லமுறையென்பது எனதபிப்பிராயம். ஆகவே, இருவர் ஒன்றுய்ச் சேர்ந்துபோய் பிரசங்கிப்பது நனறும் நன்மையாயுமிருக்குமென்பது என் சொந்த அனுபவம்

நமதருணதரும், எழுபது பேரையும் பன்னிருவரையும் இரண்டிரண்டு பேர்களாகவே அனுப்பினரென வாசிக்கிறோம். அன்றியும் அவர் அவர்களை யனுப்பும்போது தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்

கிக்கவும், பிணியாளரைச் சொஸ்தமாக்கவும், அதிகாரமளித்துக் கட்டளை கொடுத்தார், அவர்களுந் திரும்பி வந்து, தங்கள் பிரசங்கித்ததையும், அநேகம் பிசாசுகளைத் துரத்தினதையும், அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசி சொஸ்தமாக்கினதையும் இயேசு ராட்சகரிடமறிவித்தார்கள். ஜெபத்தின் வல்லமையால் வியாதிகள் நீங்கும் வரம் மறுபடியும் திருச்சபைக்குப் பூரணமாயருளப்படும் வரை அவிழ்தங்களின் மூலமாக வேணும் வியாதிகளைக் குணமாக்கும் ஊழியத்தைச் சுவிசேஷப் பிரசங்க ஊழியத்துடன் சேர்த்துச் செய்து வருவது கிறிஸ்துநாதர் கையாடிய முறைக்கொத்ததாக விருக்கும். ஆதலால் சுவிசேஷப் பிரசங்கிகளிருவரும் வைத்தியத்தொழிலிலும் தக்க பாண்டித்யமுள்ளவர்களாயிருப்பின் ஊழியத்திற்கனுகூலமும், மிகுந்த பலனை விளைவிக்கக்கூடியதுமாயிருக்குமென்பதிலையமின்று.

2. தேசாந்தரப் பிரசங்கிகள் ஓர் பட்டணத்திற் பிரவேசிக்கையில் அச்சேகரத்திலுள்ள குருவானவர், பிரசங்கிகள், மற்றும் ஆஜாமிகளும், கிறிஸ்தவர்களில் கூடுமானவர்களும், தகுதியானவர்களும் அவர்களோடு சேர்ந்து உழைப்பது இன்றியமையாதவசியம். ஏனெனில், அவர்களது ஊழியத்தின் மூலியமாய், யார் யாருடைய மனதில், கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி நல்லெண்ணமுண்டாயிருக்குமோ, அல்லது கிறிஸ்துமார்க்காராய்ச் சி செய்யவேண்டுமென்ற ஆவல் உண்டாயிருக்குமோ, அப்படிப்பட்டவர்களைப், பிரசங்கிமார் வேறிடங்களுக்குச் சென்றபின் கண்டு சந்தித்துவரவேண்டியவர்கள் யார்? அப்பட்டணத்திலுள்ள தேவ ஊழியரும் கிறிஸ்தவர்களுந்தானே. நல்லுணர்வு காணப்பட்ட ஆத்துமாக்களை அவ்வவ்விடங்களிலுள்ள தேவ ஊழியரும் கிறிஸ்தவர்களும் சந்தித்து வராதபடி விட்டு விடுவதால், தேசாந்தரப் பிரசங்கிகள் செய்யும் ஊழியம் பயனற்றது போலக் காணப்படுவதுண்டு. அந்தந்தயிடத்திலுள்ள ஊழியரும் கிறிஸ்தவர்களும் கவனியாமலிருந்தால், தேசாந்தரப் பிரசங்கிகளின் ஊழியத்தால் காணப்பட்ட உணர்வு அப்படியே மங்கி யொழிந்துபோம். மறுபடியும் அப்பட்டணத்தைப் பிரசங்கிமார் சந்திக்கையில் அவ்வாத்துமாக்கள் முந்தின நிர்விசார நிலைமையிலேயே காணப்படும். ஆதலால், தேசாந்தரப் பிரசங்கிமார் ஓர் பட்டணத்தில் வேலைசெய்து அதைவிட்டு வெளியேறுகையில்தங்கள் ஊழியத்தால் உணர்வடைந்தமனுஷரின் பெயரை ஜாப்தாப்பண்ணி அவ்விடத்து குருவானவரிடங் கொடுப்பதோடு அவர்களை அவர் வசம் ஒப்புவிப்பதும் மிக்க நலம்.

3. சுவிசேஷப் பிரசங்க ஊழியம் விருத்தியடைவதற்குச் சுதேசக்கிறிஸ்தவர்களைச் சுயவெறுப்புக்கு யேவிட வேண்டுமென்று கனம் உவாக்கர் ஐயரவர்கள் சொல்லுகிறார்கள். நம்மில் சுயவெறுப்பு மகா குறைவாயிருக்கிறது மெய்தான். சபையாரில் பெரும் பான்மையோர் தங்களுடைய லோகப் பிரவர்த்திகளில் வெகு சிரத்தையாயிருக்கிறார்களேயன்றிக் கர்த்தருக்கென்று வுழைப்பதில் தங்கள் ஜோலிகளைப் பார்க்கக்கூடிய நேரத்தில் கொஞ்சத்தையேனும் ஒறுக்கிறார்களில்லை. சிலர் அவ்வூழிய சம்பந்தமான பண்டகளுக்குப் பொருளுதவி செய்தவுடன் தங்கள் கடமை தீர்ந்த தென்று எண்ணுகிறார்கள். வேறு சிலர் தங்கள் அந்தஸ்தைப் பெரிய காரியமாக மதித்து வருவதால், இவ்வூழிய விஷயமாய்ப் பொருட் சகாயமும், ஜெபமும்செய்து வருவது போதுமானது பிரசங்கிக்கப்போவதுஅந்தஸ்துக்குக்குக் குறைவென்றெண்ணுகிறார்கள். இவர்களெல்லோரும், எருசலேம் தேவாலயத்தில் காணிக்கை போட்டவாவருள்ளும் ஓர் ஏழை விதவை இரட்சகரால் புகழ்ந்து கொள்ளப்பட்டதைத் தியானிக்க விரும்புகிறேன். அவள் சுயவெறுப்பினின்று அக்காணிக்கை போட்டதால் வியந்து கொள்ளப்பட்டாள். அப்படியே சுயவெறுப்பினின்று செய்யப்படும் ஒவ்வொரு கிரியைகளையுந்தான் அருள்நாதர் விசேஷமாய் மதிக்கிறார். ஓர் உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஐசுவரியவான் ஆயிரக்கணக்கான திரவியத்தை இவ்விஷயமாய்க் கொடுப்பதோடு அவன் தன் அந்தஸ்தையும் சொகுசான ஜீவியத்தையும் ஒறுத்து மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதில் செலவிடும்கொஞ்ச நேரமே ஆண்டவர் பார்வையில் அருமையானது. போதனையிலும் சாதனையே சிறந்தது என்னும் பழமொழிப்படி தோர்ணக்கல் கிறிஸ்தவர்களிடமிருந்து இது சம்பந்தமாக ஓர் சிறந்த முன் மாதிரி நமக்கு வந்தெட்டியுள்ளது. அதாவது நூதனமான கிறிஸ்தவர்கள் தாங்கள் வசித்துவரும் கிராமத்தைச் சுற்றி மூன்று மைல் தூரத்திலுள்ள சகல கிராமங்களிலும் தாங்களே சுயமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவைகளிலுள்ள ஜனங்களை மூன்று வருஷங்களுக்குள் கிறிஸ்துவின்பாதசேவைக்குக்கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அதையனுசரித்து முயற்சித்து வருகிறார்கள். இம்முயற்சி ஆரம்பிப்பதற்கு முன் 40 கிராமங்களில் மாத்திரம் கிறிஸ்தவர்களிருந்தார்கள். இப்பொழுதோ 120 கிராமங்களில் கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். தோர்ணக்கல் பிரஷ்பவர்கள் சென்னப்பட்டணத்து உதவி சங்கத்து முதலாவது வருஷாந்தரக்கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசியதாய் Xtain Patriot பத்திரிகையில் வாசிக்கிறோம். இது நமக்கு எவ்வளவோ சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறதல்லவா? அது போலவே திருநெல்வேலியிலுள்ள சகல கிறிஸ்தவர்களாகிய நாமும் ஆலோசித்துத் தங்கள் தங்கள் கிராமத்திற்குப் பக்கமாயுள்ள இந்துக்களுக்குள் சுவிசேஷத்தைப் பிரபல்யஞ்செய்ய முயற்சிக்கலாம்.

கிறிஸ்தவர்களுக்குள் மிஷனெரி ஆவியை விர்த்திசெய்யவும் சுவிசேஷப் பிரசங்க முயற்சியை அனல் மூட்டி விடவும் தேசாந்தரப் பிரசங்கிகளை யுபயோகிக்கலாமென்று கனம் உவாக்கர் ஐயரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏன தபிப்பிராயமும் சம்மதமும் அதுவே. சபைகளில் வேலை செய்து வரும் உபதேசிமார், உபாத்திமார், குருமார், இவர்களுக்குக் குறிக்கப்பட்ட வேலை போதுமானதாயிருப்பினும் அவர்கள் சுயவெறுப்புடன் அந்தந்தக் கிராமங்களிலுள்ள கிறிஸ்தவர்களை சுவிசேஷப் பிரசங்க ஊழியத்திற் கழைத்துக் கொண்டு போகவேண்டும்.

அப்படிச் செய்துகொண்டேவரின் தங்களிலேயே சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையை அனல் மூட்டிக்கொள்வதுடன் மற்றக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் அவ்வாவியின் அனலை எழுப்புபவராவார்கள்.

இம்முறையான வழிவகைகளைத் திருநெல்வேலி நாட்டிற் கையாடுவதுபோலவே தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்திலும் கையாடப்படவேண்டுமென்பது எனதபிப்பிராயம்.

இப்படிப்பட்ட உத்தமமான வேலை நடை பெற்றேருங்க ஆவியானவர் அருள்புரிவாராக.

ஜடிச்சர்லாமிஷன்

ஜடிச்சர்லாவைப்பற்றி ஜனுவரி சு. பி. வர்த்தமானி மூலமாய் கேயர்சல் கொஞ்சம் அறிந்திருப்பார்கள். இம்மிஷனைப் பற்றி இன்னும் தெளிவாய் எழுதினால் இதற்காக இன்னும் அதேகர் ஜெபிக்க ஏவப்படுவார்கள் என்றெண்ணி இதை எழுத ஆரம்பிக்கின்றேன்.

திருநெல்வேலியின் மக்களைக்கொண்டு இந்திய மிஷனெரி சங்கத்தின் மூலமாய் ஆண்டவர் செய்திருக்கும் அதிசயக் கிரியைகளைக் கண்ணுற்று, சிங்களேனி மிஷனை ஏற்படுத்தின மகாகனம் சென்னை அதிகியட்சரவர்கள் ஜடிச்சர்லாவிலும் திருநெல்வேலியின் பிள்ளைகள் வந்து வேலைசெய்யத் தக்கதாக, இந்தமிஷனை மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்களுக்குக் கொடுத்தார்கள். தோர்ணக்கல்லிலிருந்து மிகவும் தூரத்திலிருப்பதால் முதலில் மகாகனம் அத்தியட்சாவர்கள் மறுத்தபோதிலும், திருநெல்வேலியின் பிள்ளைகள் தெலுக்குகாட்டில் வந்து வேலைசெய்ய தேவன் இன்னொரு மிஷன் மூலமாய் வாசலைத் திறந்திருக்கிறார் என்றெண்ணி சம்மதித்துக் கொண்டார்கள் என்பது கடந்தவருடம் டக்கரம்மான்புரம் கூட்டங்களுக்கு வந்திருந்தவர்களுக்குத் தெரியும்.

இம்மிஷன் 6 வருஷங்களாய் ஐரோப்பிய மிஷனெரியால் பக்குவப்படுத்தப்பட்ட ஸ்திதியில் சிங்களேனி மிஷனெரி விசாரணைக் குருவாகிய கனம். D. S. தாவீது ஐயரவர்கள் அதின் காரியதரிசியை ஒப்புக் கொண்டார்கள். அம்மிஷனெரி இவ்விடத்தில் 54 ஏக்கர் நிலம் வாங்கி, திருக்க

ரோடே பலமாய்ப் போராடி இச்சிலத்தி னூடே போன பாதையைத் தடித்து, அதைச்சுற்றி கம்பியால் வேலியடைத்து பங்களாவும், ஆஸ்பத்திரியும், உபதேசிமா ருக்கும் வேலைக்காரருக்குமாக ஆறு வீடுக ளும் கட்டி, இரண்டு கிணறுகளும் தோண்டி, கோவில் கட்டுவதற்கும் உத்த ரவு பெற்றுக்கொண்டனர். (கிறிஸ்தவ ராஜ் யத்தில் மாட்டுத்தொழுவு கட்டக்கூட சற் கார் உத்தரவு வேண்டும்). மிஷன் காம்ப வுண்டுக்கென்று சற்கார் ஒரு காவல்காரன் கொடுத்திருந்தபோதினும், தினை சுற்றுக் கிராமங்களில் கூடாரமடித்து வேலைசெய் யும்போது, கிராம அதிகாரிகள் அவருக்கு வேண்டிய வசதிகள் செய்துதரும்படி உத் தரவும் கொடுத்திருந்தார்கள். தினையும், துவரைசானியும் தங்கள் செல்வாக்கினாலும், ஆஸ்பத்திரி வேலையினாலும் அநேகமாய்ப் பேர் வாங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் செய்த வேலையின் ஒரு பல னாக கிறிஸ்தவப் பிரசங்கிகள் தடையின்றி எந்த ஜாதியார் வீட்டிலேயும் பிரவேசிக்க லாம். தாழ்ந்த ஜாதியாரென்று எண்ணப்படு கிறவர்களை மார்க்கத்தில் சேர்க்கப் பிரயாசப் பட்டிருந்தால், சில வருஷங்களுக்கு முன் னேயே இவ்விடங்களில் சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கலாம். ஏது காரணத்தினால் அப் படிச் செய்யவில்லையோ திட்டமாய்த் தெரி யாது. நமது தேசத்தில் ஆறில் ஒரு பங்கு ஈன ஜாதியென்று புறக்கணிக்கப்படுகிற வர்கள். சற்று சிரத்தையெடுத்து இவர் களை அடிக்கடி சந்தித்து வேலைசெய்தால் இவர்களில் சிலராவது சீக்கிரம் கிறிஸ்தவர் களாவார்களென்பது திண்ணம். நமது காட்டுக் கிறிஸ்தவர்கள் இதை மனதில் வைத்து மாத்திரம் வேலை செய்தால் கூடிய சீக்கிரம் பெரிய பலன் கிடைக்கும் என்ப தற்கையமில்லை.

இம்மிஷன் ஸ்தானம், தோர்ணக்கல், சிங்கரேனியிலிருந்து 200 மைல் தூரத்தி லிருக்கிறது. இதில் 60 மைல் குதிரை அல் லது மாட்டுவண்டிப் பிரயாணம். இப் போது இந்த 60 மைலுக்கும் ரெயில்வண்டி போகிறது.

இந்தப் புது ரெயில்பாதை முடிந்து விட்டால் தோர்ணக்கல்லிலிட ஜடிச்சர்லா வே திருநெல்வேலிக்குச் சமீபமாயிருக்கும். தோர்ணக்கல் பக்கங்களைப்போல, இது மாஞ்செடிகளடர்ந்த காடல்ல. துருக்கர் அதிகம். அரபிகளுமுண்டு. ஜனங்கள் நாக ரீகமுள்ளவர்கள். தெருவிலே பெண்கள் கண்ணுடிபோட்டுத் தைத்துக்கொண்டிருப் பதைப் பார்க்கலாம். திருக்க ராஜ்யமா னபடியால் எல்லாம் திருக்கரே என்ற எண்ணம் அநேகருக்குண்டு. அப்படியல்ல, மிச்சமானபேர் இந்துக்களே. நமது நாட் டைப்போலவே, பெரிய இந்துக்கோயில் கோபுரங்களும், திருவிழாக்களும் சில இடங்களிலுண்டு.

தேவகிருபையால் இம்மிஷனின் முதற் பலனாக 13 பேர் கடந்த வருடம் ஞானஸ் நானம் பெற்றார்கள். இன்னும் சிலர் இந்த மாசம் ஞானஸ்நானம் பெறுவார்கள். கிறிஸ் தவர்கள் தேவகிருபையால் மார்க்கத்தில் உறுதியாயிருந்து தங்கள் பெந்தகோஸ்தே க்கும் மற்றவர்களுக்கும் சாட்சிசொல்லுகி றார்கள்.

Mr. ராயப்பனவர்களும், 2 தெலுங்கு உபதேசிமாராக இதுவரையும் நான்கு மைல் சுற்றுக்குட்பட்ட கிராமங்களில் சுவி சேஷ வேலைசெய்துவந்திருக்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் மழைகாலம் முடிந்தவுடன், (ஜூன் முதல் செப்தெம் பர் வரைக்கும் இங்கே மழைகாலம்.) சுற் றுப்பிரயாணம் செய்ய ஆரம்பிப்போம்.

ஏப்ரல் மாசம் முதன்முதலாய் ஜடிச்சர் லா தெருவில் ஒளிச்சித்திரப் படம் காட்டி னேம். அப்பொழுது 2 போலீஸ் புலிகள் வந்து "எங்கள் உத்தரவு இல்லாமல் நீங்கள் எப்படிப் படம் காட்டலாம். இனிமேல் உத்தரவில்லாமல் இப்படிச் செய்யக்கூ டாது" என்று தெலுங்கிலே சொன்னார் கள். அவர்களிருவரும் போகும்பொழுது (வெள்ளைக் குதிரை ஏறிவந்த வேகத்தினா லோ என்னமோ) திருக்க பாஷையில் உள நிக்கொண்டுபோனார்கள். பின்னாலே எங் களுக்குத் தெரியவந்தபடி அதின் அருத் தம் என்னவென்றால் "காலைக்கு இங்கே வந்தால் வாந்தியுடைத்துப்போடுவோம்" என்பதே.

இது போலீஸ்காரருடைய மொட்டை அதிகாரமே. ஏனென்றால் போலீஸ்இன்ஸ்பெக்ற்றர் நல்ல மனிதன். தன்னுடைய குதிரைக்காரன் ஞானஸ்நானம் பெறுவ தற்கு யாதொரு தடையும் செய்யவில்லை. மேலும் ஓய்வுகாலத்தில் அநேகரை ஒழுங்காய் அனுப்பிவிடுவார். ஒரு பெண் பிள்ளை அதிகமாய்க் குடித்து மயக்கமெடுத் துக்கிடந்தபடியால், சாராயக்கடைக்காரன் அளவுக்குமிஞ்சி விற்றதற்குப் பிரம்புப் பூசை கொடுத்தார். சமீபத்திலுள்ள ஒரு ஊரில் வைரூசியினால் சிலர் இறந்துபோனார் கள். மாரியம்மனுக்குக் கொடைகொடுத்தும் நிற்கவில்லைபோலும். ஆகையால் ஊரார் அந்தஅம்மன் பூசாரிக்குப்பூர்த்தியாய்க்குடிக் கக்கொடுத்து, முன்பற்களைப் பிடுங்கி அவ னைப்பலவிதமாய் அவமானப்படுத்தினார்கள். ஷைபோலீஸ் இன்ஸ்பெக்ற்றர் இதுவிஷயத் திலும் லஞ்சம் யாதொன்றும் வாங்காமல் நியாயத்தை நடப்பிக்க முடன்றார். ராஜாக் களின் இருதயத்தை நீர்க்கால்களைப்போல திருப்ப வல்ல ஆண்டவர் இம்மகமதிய ராஜ் யத்திலுள்ள உத்தியோகஸ்தர் மனசையும் கிறிஸ்துமார்க்கத்துக்கு அநுகூலமாகத் திருப்புவாராக.

மோசேயைக் காப்பாற்றக்கூடாத நீலை மையிலிருந்த தாய்க்கு, சம்பளம் கொடுத்து அவனை வளர்க்கச்சொன்னபோது உண்டா யிருந்த சந்தோஷத்தை அளவிட யாரால் முடியும்? அப்படியே, திருநெல்வேலி இந் திய மிஷன் ஜடிச்சர்லா வரைக்கும் வியா பிக்கக்கூடாத நிலைமையிலிருக்கிறபோது இன்னொரு இடத்திலிருந்து வருகிற பண உதவியைக்கொண்டு, திருநெல்வேலியின் பின்னாலே இங்கும் வேலைசெய்ய சலுக் கியம் கிடைத்திருப்பது, இந்திய மிஷனெரி சங்கத்தாராகிய தமிழ்நாட்டாருக்கு எவ்வள வோ சந்தோஷத்தை உண்டாக்கவேண்டிய தல்லவா!

இவ்வூழியத்திற்குத் திருநெல்வேலி சாட் டாரின் பணச்சகாயம் அவசரமில்லையென் பதால், ஜெபத்திலுதவிசெய்யப் பின் னிடலாமா? இந்திய மிஷனெரி சங்கத்துக் காக ஜெபிக்கிற அவ்வளவு உரித்தோடே ஜடிச்சர்லா மிஷனுக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்பது திருநெல்வேலியின் மக்களின் கடமையல்லவா?

இதுவரையும் இம்மிஷனுக்காக ஜெபித் துவருகிறவர்களுக்கும் மிகவும் நன்றி சொல்லுகிறதோடே, இன்னும் அநேகர் இதற்காக ஒழுங்காய் மன்றாடவும் கர்த்த ருக்குள் அன்பாய் வேண்டிக்கொள்ளுகி றேம்.

3—6—16, ஜடிச்சர்லா. } I. J. ஐயாத்துரை.

தெலுங்குநாட்டுக் கடிதம்

தோர்ணக்கல் காரியங்களையிட்டு எழு தித் தெரிவிப்பது நமது தேசத்தார்களுக் குப் பிரயோஜனமாயிருக்குமென்று நம்பு கிறேன்.

கடந்த சில மாதங்களுக்குள்ளாக விவா கங்கள் தோர்ணக்கல்லிலுள்ள நமது மிஷன் கோவிலில் நடத்தப்பட்டிருக்கிறது. இவைகளில் 4 திருநெல்வேலியானவர்க ளுக்கும், மற்ற 2-ம் நமது தோர்ணக்கல் மிஷனைச் சேர்ந்த இத்தேசத்தவர்களுக் கும் நடத்தப்பட்டது.

இவ்விவாகங்களில் மாப்பிள்ளைகள் Mr. I. E. தேவதாசன் Mr. கத்தனியேல் அப் பாசாமி இருவரும் தாங்கள் மாத்திரம் கிறிஸ்தவர்களாகி, தோர்ணக்கல் கைத்தொ ழிற் பயிற்சிசாலையிற் படிப்பிக்கப்பட வருகிற வர்கள். மற்றொரு விவாகத்தில் பெண் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்க ளின் மருமகள் இம்மூவருக்கும் தாய் தகப் பனை மகாகனம். அத்தியட்சரவர்களும், அம்மாளவர்களுமாக அத்தியட்சரவர்கள் வீடே பெற்றோரின் வீடாயிற்று. மாப் பிள்ளைகளுக்குப் பெண்களும், பெண் ணுக்கு மாப்பிள்ளையும் நமது மிஷன்

பழைய காம்பவுண்டில் வந்திறங்கியிருந்தார்கள். அந்தக்கம்பவுண்டிலுள்ளவர்கள் பெண் அல்லதுமாப்பிள்ளை வீட்டாராகவும், அத்தியட்சரவர்கள் கம்பவுண்டிலும், நமது மிஷனை புதுக்கம்பவுண்டிலுமுள்ளவர்கள் மாப்பின்னை அல்லது பெண்வீட்டாராகவும், பாவித்துக்கொண்டார்கள்.

விவாகங்கள் வேறு வேறு நிலங்களில் நடக்கின. அவைகள் ஒவ்வொன்றையும் விவரித்துரைப்பது அவசியமன்று. எல்லாவற்றையும் விவரிக்கப் புகின் விரியும். புத்திரிகையிலும் இடமிருப்பதரிது. இதுவு மன்றி முக்கிய விஷயங்களொவ்வொன்றிலும் எல்லா விவாகமும் ஒன்றுபோலிருந்தால் அவைகளை மட்டும் இங்கனம் எடுத்துரைத்தலுசிதமாகும்.

(1) விவாகத்திற்கு அழைக்கப்பட்டவர்கள்:—யாதொரு பேதமுமின்றி கிறிஸ்தவர்கள் யாவரும் விவாகத்திற்கும், பின் நடக்க உபசாரணைக்கும், விருந்துக்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

(2) நகை நட்டுகள், கொடுக்கல் வாங்கல்களையிட்ட ஏற்பாடுகள்:— எவ்வளவு போடுவீர்கள், என்ன கொடுப்பீர்கள், என்று ஒரு நிர்மானமும் செய்துகொள்ளப்படவுமில்லை. என்னென்ன போட்டுக்கொண்டு வந்திருக்கிறது, என்ன கொடுத்தார்கள் என்று கேட்பாருமில்லை. என்கலியாணப்பட்டு இவ்வளவு, உன் கலியாணப்பட்டு இவ்வளவு என்ற பேச்சும் கூட பேசுவாரில்லை.

(3) பந்தற்செலவு:-அந்தக்காரியங்களை நடத்திக்கொள்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சபைமிட்டிகளில் ஒன்றிய அலங்கரிப்பு சப் கமிற்றிமார் இதைச் செலவின்றி பிள்ளைகள் பெரியோருடைய சகாயத்தைக் கொண்டு செய்துவைத்தார்கள்.

(4) வாத்தியங்கள்:-மேளங்கள் கம்புருக்களுக்குப் பதிலாய் தேர்ணக்கல் போர்டிங் ஆண்பள்ளிக்கூடப் பிள்ளைகள் பத்தளங்களையும் கைத்தாளங்கள், நாயர்ங்கில் முதலியவைகளையும் வெகு நியமமாயும் இன்பமாயும் உசாராய் வாசித்தார்கள். கே. முத்துசாமியவர்களும் ஜே. ஹேம்றிக்வர்களும் பிடில்களைப்பிடித்து இன்பமாய் வாசித்தார்கள். ஆண், பெண், போர்டிங் பிள்ளைகள் வெகு உற்சாகமாயும், ராகங்களுக்கும் தாளக்களுக்கும் முற்றும் இசைந்தும் பாடினார்கள். நேர்களுக்கின்பமாயிருக்கும் வெறும் வாத்திய தொனிக்காக எவ்வளவு பணத்தைச் செலவிடுகிறார்கள். இங்கேயோ நேருடைய செவிக்கின்பமாயிருந்த வாத்தியத்தொனிகள் மட்டுமல்ல, சரீரின் ஆத்துமாவுக்கும் தேவனுடைய செவிக்கும் இன்பமான கீர்த்தனைகளும் அவைகளுக்கிசைந்த பாடப்பட்டன. களித்ததோ பரமும் பூமியும், காசுச்செலவோ ஒன்றுமில்லை.

விருந்து:—விவாகமாகிவந்தவுடன் சகல கிறிஸ்தவர்களுக்கும் பலகாரங்களும்,பானமும் கொடுக்கப்பட்டது. பின்போ மாப்பிள்ளை பெண்ணுடன் இனஜன இஷ்ட விஷயமாகவும் ஊழிய விஷயமாகவும் சம்பந்தப்பட்ட யாவருக்கும் ஒருவேளை விருந்தளிக்கப்பட்டது. இத்தடன் விவாக விருந்து முடிந்தது.

(6) விருந்துண்டவர்கள்:—முன் சொல்லப்பட்ட விவாகக்களிலொன்றை உத்தேசிக்கும்போது, அவ்விருந்து கிறிஸ்தவ ஐக்கியத்திற்குச் சிறந்த சாட்சியாயிருந்தது. கிறிஸ்தவர்களாகாதிருந்தால் 9 வருப்பாயும்,வெவ்வேறு கூட்டமாயும் 9 இடங்களில் போஜனம்செய்யத்தக்கவைகளாயிருந்த 9 இந்துப் பிரிவுகளிலிருந்து சேர்க்கப்பட்டவர்கள் ஒரே கிறிஸ்தவக் கூட்டமாய் ஐக்ய பந்தியிலுட்கார்ந்து போஜனம்செய்தார்கள். இவ்விருந்தானது ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துப் பந்தியை ஞாபகப்படுத்துவதாயிருந்தது. மேலும் அத்தியட்சரவர்கள்முதல் அநேக கூலியான ஒரு சிறிய கிறிஸ்தவன்வரைக்குமுன்ன பல நிலைமையுள்ளவர்களும் ஒரே விருந்தில் ஒய்யாரமாய் உட்கார்ந்து, உவப்பான சம்பாஷணைகள் செய்துகொண்டு விருந்துண்டது எவ்வளவு இன்பமாயிருந்தது இவ்விருந்துகளில் எவ்விதமான மனதேவும் அதற்குரிய ஜாடையும்கூட காணப்படவில்லை. இதையல்லவா கலியாண விருந்தெனத்தகும்;

செப்ற்றெம்பர் 1916. Vol. XIII. No. 9.

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

22 SEP 1916

வருஷாந்தரக்கூட்டத்தில்

அத்தியக்ஷரவர்கள் செய்த உபந்நியாசம்.

இவ்வருஷாந்தரக் கூட்டம்தான் கடையாய் சேமையில் ஆஜராயிருந்த சி. எம். எஸ். தாய்ச்சங்கத்தார் வருஷாந்தரக்கூட்டத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது. பல விஷயங்களில் இரு கூட்டங்களுக்கும் ஒற்றுமையுள. பெரிய சபா மண்டபங்கள் நிறைய இரு கூட்டங்களிலும் ஜனங்கள் கூடிவந்திருந்தார்கள். ஜனங்களுடைய உற்சாகம் மெத்த. புறதேச சுவிசேஷ ஊழியம் நடக்கும்இடங்களிலிருந்து மிஷனெரிமார் வந்து கூட்டத்தில் பேசினார்கள். எல்லாவற்றிலு முக்கியமான சம்பந்த மெதுவென்றால், இரு சங்கங்களுக்கும் கஷ்டங்களிருக்கின்றன. சி. எம். எஸ். சங்க விஷயமாயிருந்த கஷ்டம் யுத்தம். சில மிஷன்களை நிறுத்தவேண்டியதாயிருந்தது. மிஷனெரிமாரில் சிலர் கைதிகளாக எதிரிகளால் கொண்டுபோகப்பட்டார்கள் மிஷனெரி ஊழியத்துக்கு வேண்டிய பணம் இட்டுமோ வென்பதைப்பற்றி பலருக்குள் சந்தேக மெழும்பினதுண்டு. வருத்தங்கள் எவ்வளவுக்கு அதிகமாய்க் காணப்பட்டதோ அவ்வளவுக்கு அதிகமாய் ஜனங்கள் மனநிர்ணயமுள்ளவர்களானார்கள். நமது மிஷனெரி சங்க சம்பந்தமாயும் வருத்தங்களிருக்கிறதாகப் பேசப்பட்டது. இது நம்மை உற்சாகப்படுத்தி, மிஷனெரி ஊழியத்தில் அதிக கருத்துள்ளவர்களாக்கவேண்டியது. எங்கேகஷ்டங்கள், வருத்தங்கள் இருக்கின்றனவோ அங்கேயே மிஷனெரி ஊழியம் தழைத்து வளருகிறதென்பது மெய்யான அநுபவம். சுவிசேஷ பிரபல்ய வேலை மற்றும் தேசங்களைப்போலவே இத்தேசத்திலும் சங்கடங்கள் நிறைந்துள்ளது. ஜனங்கள் மார்க்க திருப்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆனால் மிஷனெரிமாரையோ, பிரசிங்கிகளையோ ஏற்றுக்கொள்ளுகிறார்களில்லை. காரமோ அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். சுவிசேஷத்தைக் கொடுப்பதற்கு நிர்ணயம் செய்துகொள்ளவேண்டும்.

இருவகையாய் யாவரும் மிஷனெரி ஊழியத்திற்கு உதவிசெய்யலாம். முதலாவது, ஜெபம், சங்கத்தின் ஊழியத்தைப் பற்றி அறிய ஆசைப்படு. மிஷனெரி பத்திரிகையை வாங்கி வாசி. வேண்டியது இன்னது என்பதை அறிந்துகொள். ஊக்கமாய் ஜெபி. இரண்டாவது பொருளுதவி. ஒவ்வோர்வரும் சங்கத்திற்கு ஏதாவது பொருளுதவி செய்யவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு சபையும், ஒவ்வொரு பாஸ்ற்றரேட்டும், ஒவ்வொரு சர்க்கிளும் சேகரமும் நமது மிஷனெரி சங்கத்திற்குக் காணிக்கை கொடுப்பதைப் பார்க்கு மட்டும் என் வாஞ்சை திருப்தியாகமாட்டாது. தற்கால அவசியத்திற்கு காணிக்கை இருமடங்காகவேண்டும். ஒவ்வொரு வரும் கொஞ்சம் கொடுத்தால், இத்தொகை கைகூடிவிடுமல்லவா? வாரத்துக்கு ஒரு பென்னி சி. எம். எஸ், சங்கத்திற்குக் கொடுக்கும் லட்சத்து நாற்பத்து சொலாயிரம் ஆட்கள் தேவையென்று நான், எழுதினேன். ஐம்பதினாயிரம் ஆட்கள் கண்டு பிடித்தோம். தேவையான பணம் இவ்விதத

மாய் வந்துவிட்டது. அப்படியே நமக்கும் வாரந்தோறுமோ, மாசந்தோறுமோ கிரமமாய்க் கொடுக்கும் புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் கண்டுபிடிக்கவேண்டும். அதிகத் தொகை காணிக்கையாகக் கொடுக்கும் சிலஸ்திதிபந்தரல்ல. கொஞ்சமானலும் ஒழுங்காய்க் கொடுக்கும் பலரே சங்கத்துக்குப் பலன். கிரமமாய் ஜெபித்து, கிரமமாய்ப் பொருளுதவி செய்யும் பலர் நமது அத்தியக்ஷ்தானத்தில் எழும்பிவிட்டால்; திருஸெல்வேலி நாடு எத்தனை மகிமையாயிருக்கும்! தேவன் நம்மை இந்தியாவிற்காக உழைக்க அழைக்கிறார். ஒவ்வொருவரும் ஒழுங்காக ஜெபிப்போமாக. ஏதாவது கிரமமாய்க் கொடுப்போமாக. தனித்தனியே ஆண்டவருக்காக ஊழியஞ்செய்வோமாக.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

கனம். தேவசகாயம் ஐயாவர்கள் திருஸெல்வேலிக்குப் போனதால், மானுக்கோட்டை மூப்பாரம் பாஸ்ற்றரேற்றிலுள்ளவர்களுக்கு பரி. நற்கருணை பரிமாறவும் பருவங்கடந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், கனம். பாக்கியநாதன் ஐயாவர்கள் தான் தோர்ணக்கல்லிலிருந்து வருவார்கள். மானுக்கோட்டை மூப்பாரம் பாஸ்ற்றேற்றில் இன்னும் நிடப்படுத்தல் கொடுக்கப்படாததால், சபையாரில் ஒருவரும் பரி. நற்கருணையில் சேரவில்லை. ஊழியர்களுக்குமாத்திரம் மாதத்தில் இரண்டாம் ஞாயிறன்று 'மானுக்கோட்டைக்கு வந்து கனம். பாக்கியநாதன் ஐயாவர்கள் பரி. நற்கருணை பரிமாறுவார்கள். இவ்விதமாய் ஆகஸ்ற்மீ 13உ வந்து ஊழியர்களுக்கெல்லாம் பரி. நற்கருணை பறிமாறி, அத்தநாள் திங்கட்கிழமை மானுக்கோட்டையிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள பர்வதகிரி என்ற இடத்துக்குப்போனேம். அவ்வூரார் எட்டி மாசத்துக்கு முன் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்தவர்கள். மூன்றுவீட்டார் மாத்திரம் வந்திருக்கிறார்கள். அதில் இரண்டு குடும்பத்தார் அண்ணனும் தம்பியுமாக வெஸ்லியன் மிஷனரிலிருந்து வந்தவர்கள். தம்பியும் அவன் ரூபெத்தாரும் முன்னமே ஞானஸ்நானம் பெற்றவர்கள். அண்ணனும் அவன் குடும்பமும் ஞானதீக்ஷை பெறவில்லை. இங்கு வந்தபின் அதற்காக ஆயத்தப்படுத்தி ஞானஸ்நானம் கொடுத்தோம். மூன்றாம் வீட்டார் அந்த ஊரில் கிராமுனிசீபு (கர்ணம்) கையின்கீழ் வேலை செய்யும் தலையாரியின் குடும்பம். தலையாரியின் பெற்றோர் அதிக வயது சென்றவர்களாயிருக்கிறார்கள். அவன் குமாரர் ஏழு பேரிருக்கிறார்கள். அதில் நாலு குமாரருக்கு விவாகம் நடந்திருக்கிறது. மூவருக்கு விவாகமாகவில்லை. இவர்களில் விவாகமான ஒருவன் தன் மனைவியுடன் வேறே ஊருக்கு வேலைக்குப் போய்விட்டதினால் ஞானஸ்நானம் பெறவில்லை. இவர்கள் இருவர் தவிர மற்ற யாவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். வயதுசென்ற இருவரும் ஞானஸ்நானம் வேண்டாமென்றார்கள். மொத்தம் அந்த ஊரில் பதினெரு பருவங்கடந்த ஞானஸ்நானமும் பதினெரு குழந்தைகள் ஞானஸ்நானமும் நடந்தது. இவர்கள் இவ்வளவு காலத்துக்குள்ளாக விசுவாசப் பிரமாணமும் இயேசுகிறிஸ்துவின் ஜீவியசரித்திரமும் நன்றாய்ச் சொல்லுவார்கள். ஞானஸ்நானத்தின மேன்மை அதின் அவசியத்தைப்பற்றி நன்றாய்ப் போதிக்கப்பட்டிருந்ததினால், அவர்களே தங்களுக்குச் சீக்கிரத்தில் ஞானஸ்நானம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஞானஸ்நான சமையத்தில் அதிக பக்திவிசுவாசமாயிருந்தார்கள். அவ்வூர் உபாத்தியார் மறுநாள் காங்கள் கட்டிப்பல்லி என்ற இடத்துக்குப் போனபின், வயது சென்ற இருவர் ஞானஸ்நாமம் பெறுதலினால் அவர்கள் பேரை ரிஜிஸ்ட்டரிலிருந்து எடுத்துப்போட்டோமோவென்றும், இனி அவர்களுடன் சகவாசம் செய்யக்கூடாது, அவர்கள் நமக்கு அந்நியர்கள் போலிருக்கிறார்கள் என்றும் சொல்லவே, பிள்ளைகள் எல்லாரும் பிழைவர்களுடன் எங்களுக்குப் பங்கில்லை, எங்களுடன் ஞானஸ்நானம் பெறவில்லையே, அவர்களுடன் நாங்கள் ஏன் கலக்கிறோம். அவர்கள்

செத்தாலும் நாங்கள் தூக்கமாட்டோம் வேறே யாராவது தூக்கிக்கொண்டுபோகட்டுமென்றார்களாம் கிறிஸ்தவர்களானபின் எவ்வளவோ மாறுதல் காணப்படுகிறது!

கிறிஸ்தவர்களானபின் சிலர் குடிவெறியை நிறுத்தியிருக்கிறார்கள். ஏழு எட்டுப்பிள்ளைகள் வாசிக்கப்படிக்கிறார்கள். இவர்களைப் பார்த்து, இன்னோர் குடும்பத்தார் தங்கள் பிள்ளைகளையும் படிக்க அனுப்புவதாகவும் பின்னால் தாங்களும் கிறிஸ்தவர்களாவதாகவும் சொல்லுகிறார்கள்.

ஒருநாள் பர்வதகிரி என்ற இடத்திலே யே கிறிஸ்தவனை ஒருவனுடைய மனைவி கூலிவேலை செய்யப்போனாள். அவள் தன் கூலியைப் பெறும்போது, மறுநாளும் வேலை செய்ய வரும்படி கூலி சேர்த்துக் கொடுத்தான். இதைப் பார்த்திருந்த இன்னொரு சமுசாரி, 'நீ நேற்று அவனுக்கு வேலை செய்தாயல்லவா, இன்றைக்கு எனக்குச் செய், அவன் உனக்குக் கொடுத்த கூலியை நான் கொடுத்துவிடுகிறேன்' என்றான். அப்படியே அவள் ஒப்புக்கொண்டு வேலை செய்தாள். இவளுடைய புருஷன் அவ்வழியாய்ப் போகையில், முந்தினநாள் வேலை வாங்கின சமுசாரி நான் உன் மனைவிக்குக் கொடுத்த கூலியை ஏன் திரும்பக் கொடுக்கவில்லை என்று கேட்கவே, இவன் அடுத்தவன் கொடுத்திருப்பான் என்று யோசித்தேன்; கொடுக்கவில்லையானால் தருகிறேன் என்றான். உடனே அவன் தன் கையிலிருந்த கம்பினால் கிறிஸ்தவனை மூன்று அடி அடிக்க, பக்கத்திலிருந்தவர்கள் பிடிக்கவே அடியை நிறுத்திவிட்டான்.

இதோடு, இன்னொரு கிறிஸ்தவன் தான் கிறிஸ்தவனாகிறதற்கு 6 வருஷங்களுக்கு முன் ஊரிலுள்ள இரண்டு மூன்று பேரோடே சேர்ந்து பனைமரத்தில் ஏறிக் கள்குடித்திருக்கிறான். அந்தக் கள்ளத்தனத்துக்காக, இட்சையுமடைந்திருக்கிறான். இப்போதும் அவ்வூர் கிராமுனிசீபு கிறிஸ்தவன் பேரில் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்கவகை தேடுகிறான். ஆறு மாசத்துக்குமுன் அங்கே ஒருவனுடைய கமலைக்கூனைக் காணமல் போய்விட்டது. கிராமுனிசீபு இவன்பேரில் சமுசயமாக நினைத்து, பஞ்சாயத்து வைத்துப் பேசினதில், இவன் எதிர்த்திருக்க மாட்டானென்று தீர்மானித்தார்கள். ஆனாலும் கிராமுனிசீபு அந்தக்குற்றத்தை இவன்பேரில சாட்டத்தக்கதாக வகை பார்த்துக்கொண்டிருக்கிறான். இந்தப் புதுக்கிறிஸ்தவர்கள் தளர்ந்துபோகாமலிருக்க இவர்களுக்காக ஜெபிப்போமாக.

மறுநாள் தட்டிப்பல்லியில் மூன்று குழந்தைகளும் நாலு பெரியவர்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மற்றவர்களெல்லாரும் இதற்கு முன்னமே ஞானஸ்நானம் பெற்றவர்கள். இங்கிருந்து மூவர் தோர்ணக்கல் பாடசாலையில் வாசிக்கப்போயிருக்கிறார்கள். இன்னொருவன் சிறுவனையிருப்பதால் அடுத்த வருஷம் போவான். இவ்வூர் உபாத்தியார் மேடிப்பல்லியிலிருந்து போய் தோர்ணக்கல் பாடசாலையில் பயிற்றுவிக்கப்பட்டு வந்தவர்.

அடுத்த நாள் 8 மைல் தூரத்திலுள்ள பொஜ்ஜெனனப்பேட்டை என்ற இடத்துக்குப்போனேம். அக்கே 60 வயதுள்ள ஓர் ஸ்திரீ ஞானஸ்நானம் பெற்றாள். அவளிடம் கேட்ட கேள்விக்கெல்லாம் நன்றாய் உத்தரவு சொன்னாள். 'இன்று நீ ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் மந்தையில் சேரக் கிருபை பெற்றதினால், நீ மாத்திரமல்ல, மற்றவர்களும் ரட்சிக்கப்படப் பிரயாசப்படவேண்டும்' என்று கனம். பாக்கியநாதன் ஐயாவர்கள் சொன்னதற்கு, உபாத்தியார், உபாத்திச்சியுடன் சேர்ந்து தினம் ஒரு நேரம் ஜெபிப்பதாய் ஒப்புக்கொண்டான்.

பிற்பாடு ஸ்ரீராமபுரிக்குப் போனேம். அன்று இரவு ஒரு குழந்தையும் ஒரு பெரிய ஆளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மறுநாள் அதிகாலையில் மானுக்கோட்டை மூப்பாரம் பாஸ்ற்றரேற்றிலுள்ள ஆசாரிகள் அவர்களுடைய மனைவிமார் யாவருக்கும் பரி. நற்கருணை பரிமாறப்பட்டது.

இவ்விதமாய் இத்தப் பிரயாணத்தில் 16 பெரியோரும் 18 சிறுவர்களும் ஞானஸ்நானத்தினால் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் முடிவு பரியந்தம் நிலைநிற்கும்படியாகக் கர்த்தர் அருள்புரிவாராக!

ஜான் ஸ்ரீனிவாசகம்.

நம்பிக்கையின் விதைப்பு.

உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல்ப் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிர. 11: 1.) இது பிரசங்யின் அனுபோக சாக்ஷி. நிலத்தில் போடுகிற விதைகள் முளைத்து வளர்ந்து பலன் கொடுக்கும். தண்ணீர்களில்ப் போடுகிற விதைகளோ எக்காலத்திலும் முளைக்கிறதுமில்லை, வளர்ந்து பலன்கொடுக்கிறதுமில்லை. பூலோக சமுத்திர ஜலங்களில் கணக்கற்ற கப்பல்கள் மூழ்கி, ஏராளமான விதைகள் தண்ணீர்களில் விதைக்கப்பட்டதுண்டு. அது முளைக்கிறதுமில்லை, வளர்ந்து பலன்கொடுக்கிறதுமில்லை. ஆனால் சாலொமோனாகிய பிரசங்கியோ உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல்ப் போடு. அநேக நாட்களுக்குப்பின்பு அதின் பலனைக் காண்பாய் என்கிறான். இது இயற்கைப் பிரமாணத்தை முதலாய் ஜெயிக்கக்கூடிய விசுவாசமே.

சுவிசேஷ வசனமாகிய விதையை விதைத்தல். மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்திறங்கி, அவ்விடத்திற்குத் திரும்பாமல், பூமியை நனைத்து அதில் முளை கிளம்பி விழையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பிய காரியமாகும்படி வாய்க்கும் (ஏசா. 55. 10—11). இப்பூலோகத் தானிய வித்துக்கள் தங்களுக்கேற்பட்ட காலத்தின்படியே முளைத்து வளர்ந்து பலன்கொடுக்கும். ஆனால் தேவ சுவிசேஷ வசனமாகிய விதைகளோ உடனே முளைத்து வளர்ந்து பலன்கொடுக்கிறதுமுண்டு; நீடியகாலஞ்சென்று பலன் கொடுக்கிறதுமுண்டு. அது தேவசெயலின்காலத்திட்டப்படியே நடக்கும். திருஷ்டாந்தமாக, பரி. பேதுரு பெந்தெகோஸ்தே நாளில் சுவிசேஷ விதைகளை விதைத்தபோது அன்றயத்தினமே மூவாயிரம்பேருள்ளங்களில் அவைகள் முளைத்து வளர்ந்து பலன்கொடுத்துவிட்டன.

சுமார் கி. பி. 80ஆ அருமையான பரி. தோமா அப்போஸ்தலன் இந்தியாவின் கறைவந்து சேர்ந்து, இந்திய சன்னியாசி காசிவஸ்திரம் பூண்டு, திருவனந்தபுரம், கொல்லம், காயன்குளம் முதலான இடங்களுக்குச் சென்று, மகத்துவ கிறிஸ்துவின் இரட்சண்ணிய வசனங்களை அறிவித்து வருங்காலத்தில் திருவாங்கூர் ராஜாவின் அரமனை கொல்லத்துக்கடுத்த காயன்குளம் பக்கத்திலிருந்தது. அக்காலத்தில் இவ்வரசன் குடும்பத்தில் ஓர் கலியாணம் நடந்தபோது அதை இராக சங்கீதங்களினாலும் சிறப்பிக்க மகாராஜா சங்கீதங்களில் மிகச் சிறந்து விளங்கிய கொச்சியிலிருந்த சில யூதர்களை அழைத்திருந்தார். அவர்கள் எல்லோருக்கும் மகாஇன்பமான கீதங்கள், பாடிக்கொண்டிருக்கையில் மேற்சொன்ன பரி. தோமா அப்போஸ்தலன் சந்நியாசி காசிவேஷத்தோடு அவ்வரமனை ஓரமாய் நடந்துபோகையில், அவ்வின்ப இராகங் கேட்டு, ஆ! இது எபிரேய இராகமல்லோ என் ஜனமாகிய யூதருமிங்கு வந்துவிட்டார்களாவென்று அதிசயமுற்று, அவர்களைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி, அவ்வரமனைக்குள்ச் சென்றபோது உடனே அவ்வரசன் அப்பண்டாரப்பயலை அடித்து வெளியே துறத்துவென்று காவல்ச் சேவகனுக்குக் கட்டளையிடவே, உடனே அவன் அவரை அடித்துத்தள்ள, அவர் அதை மகா பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, அங்கிருந்த சகலரையும் புன்சிறிப்போடு பார்த்துவிட்டு வெளியேவந்தார். உடனே சிலர் இம்மகா சாதுவைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி, அவரிடம் வந்து, நீர் இத்தீங்கை மகா சந்தோஷத்துடன் பொறுமையாய்ச் சகித்த முகாந்திரமென்னவென்று கேட்கவே, அதற்கு அவர் லோக மீட்பராகிய கிறிஸ்துவின் அளவற்ற அதிசய அன்பும் அவரின் நீடிய சாந்தமுமேவென்றுரைத்தார். உடனே அத்தனைபேரும் அருமைக் கிறிஸ்து மீட்பரை தங்கள் பாவங்களைப் போக்கும் பலியாக நம்பி அவரை அறியும்படி தொடங்கி, தங்களுக்குமார் தோமா சபையாரென்று பெயரிட்டு ஓர் சுயாதீன சபையாக நடத்திவர ஏற்பட்டார்கள்.

மகத்துவ கிறிஸ்துவின் இரட்சணிய வசனங்களாகிய விதைகளை விதைக்கிற தேவனுடைய பிள்ளைகளே, நாம் எக்காலத்திலும் பூரண நம்பிக்கையோடு விதைப்போமாக. நம்பிக்கையோடு விதைக்கிறவன் கெம்பீரத்தோடு அறுப்பான்.

R. Y. J.

47-ம் சங்கீதம்

இச்சிறந்த மிஷனெரி கீதம் 46-ம் 48-ம் சங்கீதங்கள் எழுதப்பட்ட சமயத்திலேயே எழுதப்பட்டிருக்கவேண்டும். அஞ்ஞான ராஜாவாகிய சனகெரிப்பின் சேனையை அற்புதமாய் அழித்து, தமது ஜனத்தை ரக்ஷித்த தேவனை புறஜாதிகளென்னப்பட்ட சகல ஜாதிகளும் சகல தேசத்தாரும் வணங்கி, ஸ்தோத்திரிக்கும்படி சங்கீதக்காரன் அழைக்கிறான். சுவிசேஷப் பிரசங்க கீதம் என்று இதற்குப் பேரிடலாம்!

இது யூத ஜெப ஆலயங்களில் வருஷப் பிறப்பு தினத்தன்று பாடும்படி குறிக்கப்பட்ட ஸ்தோத்திர கீதம். எக்காளப் பண்டிகையிலும் இது பாடப்பட்டதென்று தோன்றுகிறது. இங்கிலாந்து திருச்சபையில் இயேசுநாதர் பரத்துக்கேறின திருநாளில் வாசிக்கும்படி குறித்திருக்கும் சங்கீதங்களில் இது ஒன்று. அதற்கு இது எவ்வாறு ஏற்றதென்பது கீழே கண்டிருக்கும் குறிப்புகளினால் தெரியவரும்.

இச்சங்கீதத்தில் நன்னான்கு வரிகளுள்ள ஐந்து சரணங்களுண்டு.

1. புறஜாதிகளுக்கு அழைப்பு. வா. 1, 2

சகல ஜனங்களே, கைகொட்டுங்கள்!
கெம்பீர சத்தத்துடனே தேவனுக்கு ஆர்ப்பரியுங்கள்!
உன்னதமானவரும் பயங்கரமானவருமான ஏகோவா
பூமியனைத்தின் மீதும் மகா ராஜா!

'ஜனங்களே'—என்ற வார்த்தை எப்போதும் புறஜாதியாரான ஜனங்களைக் குறிக்கும். புறஜாதிகளனைவரும் தேவனைத் தங்கள் ராஜாவாக அங்கீகரிக்கும்படி இக்கீத ஆக்கியோன் ஏவுகிறான். ரப்சாக்கே அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பைக் குறித்துப் பேசும்போது, 'அசீரியா ராஜாவாகிய மகா ராஜாவானவர்' என்றான் (ஏசா. 36: 4). சங்கீதக்காரனோ, அவனல்ல, அவன் சேனைகளை ஒரே இரவில் அழித்து வெற்றி சிறந்த ஏகோவாவே மகா ராஜா என்கிறான்.

2. இவ்வாறு அழைப்பதற்குக் காரணம். வா. 3-8.

(a) அவரது வல்லமை. வா. 3, 4.

அவர் ஜனங்களை எங்களுக்கு வசப்படுத்துகிறார்!
ஜாதிகளை எங்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துகிறார்!
தாம் நேசித்த யாக்கோபின் சிறந்த தேசத்தை
எங்களுக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிக்கிறார்!

யெகோவா இஸ்ரவேலைத் தமதன்பால் நேசித்து, அவர்களுக்கு நேர்த்தியான ஓர் தேசத்தைச் சுதந்தரமாக அளித்து, அத்தேசத்தைத் தமது அற்புத கிரியைகளினால் பாதுகாத்து, அதைத் தாக்க வரும் சத்துருக்கள் மேலாக ஜெயம் அடைகிறார் என்பதே சங்கீதக்காரன் சொல்லுங்காரணம். ஏகோவாவின் அன்பும், வல்லமையும், ஜெயமுமே அவர் சகலராலும் துதிக்கப்படப் 'பாத்திரர் என்று ரூபிக்கும் அத்தாக்ஷி.

புறமதஸ்தரை நாம் அழைப்பதற்கும் இதுவே காரணம். தமது அன்பினால் அவர் எங்களைத் தெரிந்துகொண்டு, தமது வல்லமையினால் பரலோக ராஜ்யமாகிய சிறப்பான தேசத்துக்கு எங்களைச் சுதந்தரராக்கி, தமது கிருபையினால் எங்கள் ஆத்தும சத்துருக்களை நாடோறும் எங்களுக்குக் கீழ்ப்படுத்துகிறார். வாருங்கள், நீங்களும் அவரைப் பாடிப் புகழுங்கள் என்று கிறிஸ்தவர்கள் சொல்லக்கூடுமானால், அது எத்தனை உத்தம சாட்சி!

(b) அவரது ஜெயம். வா. 5, 6.

தேவன் ஆர்ப்பரிப்புடன் எழுந்தருளினார்!
ஏகோவா எக்காள சத்தத்துடன் எழுந்தருளினார்
தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்;
எங்கள் ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

'எழுந்தருளினார்' என்றால், பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்றும் அர்த்தமல்லவா? தமது ஜனங்களுக்காக சனகெரிப்பின் சேனைக்கு விரோதமாய் யுத்தம்செய்ய இறங்கின ஏகோவா ஜெயவேந்தராய் இப்போது பரலோகத்துக் கெழுந்தருளியிருக்கிறார்; ஆகையால் அவரைப் பாடுங்கள் என்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் நமது தேசத்தின் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கும், மிஷனெரி வேலை நடத்துவதற்கும் இதுவே காரணம். பூமியின் தாழ்

விடங்களில் இறங்கின இயேசு பெருமான் தூதர் ஆர்ப்பரிப்பின் மத்தியில் ஜெயவேந்த ராய்ப் பரலோகம் சென்றிருக்கிறார். 'வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கியுங்கள்' என்று அவர் தாமே திருவுளம் பற்றினார். ஆகையால்தான் சகல ஜனங்களே, அவரைப்பாட வாருங்கள் என்று நாமும் அழைக்கிறோம்.

(c) அவரது மகத்துவம். வா. 7, 8.

தேவன் பூமி யனைத்துக்கும் ராஜா!
கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்.
தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார்!
தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்!

எழுந்தருளிப் போனவர் யாக்கோபுக்கு மாத்திரமல்ல, பூமியனைத்துக்கும் ராஜா! சகல ஜாதிகளையும் ஆண்டு நடத்துகிறவர் அவரே. தமது சிங்காசனத்தில் வீற்றிருந்து காத்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் நீங்களும் அவரை அறிந்து அவரைப் பாடுங்கள் என்ற வாறு. கிறிஸ்தவர்களாகிய நமக்கு இதுவும் ஓர் நியாயமே. பரத்துக்கெழுந்தருளிப் போனவர் யாரென்றால், சிலுவையில் மரண மடைந்து, உயிர்த்து, வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைப் பெற்றவர் (பிலி. 2: 9, 10, 11); எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்துக்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும் ஆளுகை செய்கிறவர் (1 கொ. 15: 25). அவருடைய தாசராகிய நாம் இவ்வேலையைத் துரிதப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். இயேசு ராஜா பூமியனைத்துக்கும் ராஜா! சகல ஜாதிகளுக்கும் ராஜா! ஆகையால் சகலமான பேரும் அவரைக் கருத்துடன் போற்றிப் பாடும்படி அவர்மேல் வருந்தி அழைப்பது நமதுமேல் விழுந்த பாரம்.

3. விசுவாசத்தின். வா. 9.

ஜனங்களின் பிரபுக்கள் சேர்க்கப்படுகிறார்கள்.— ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

பூமியின் கேடகங்கள் தேவனுக்குச் சொந்தமானவைகள்,
அவர் மகா உன்னதமானவர்!

கடைசியாக, சங்கீதக்காரன் தன் கண்களை ஏறெடுத்து வெகுதூரம் பார்க்கிறான். அவன் ஆசை விருப்பத்தின்படி, புறஜாதிகளின் பிரபுக்கள் தங்கள் பிரஜைகளோடுங் கூட தேவனுடைய ஜனமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறதைக் காண்கிறான். 'உனக்குள் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்' என்று தேவனருளிய வாக்கு நிறைவேறிவிட்டதாம். இஸ்ரவேலைப் போலவே, பூமியின் கேடகங்கள், அதாவது பூமியின் பிரபுக்கள் அனைவரும் எகோவாகிய தேவனுக்குச் சொந்த ஜனங்களாகிவிட்டார்களாம்; இவ்விதமாய் அவர் மகா உன்னத மாட்சிமையை அடைந்து, மகிமை பொருந்தினவராய் விளங்குகிறாராம்!

புறஜாதிகள் தேவனுடைய சொந்த ஜனங்களாவார்கள் என்று இந்த யூத சங்கீதக்காரன் விசுவாசக்கண்களால் கண்டு ஆனந்தங் கொள்ளுகிறான். இது கிறிஸ்து சபையிலேயே நிறைவேறி வருகிறது! தேசா தேசங்களின் ராஜாக்களும், பிரபுக்களும், அதிபதிகளும், நானாவித ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரரும் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்குச் சொந்த ஜனங்களாக்கப்படுகிறார்கள்! இயேசுராஜா சகலமான பேர்களின் இருதயத்திலும் உன்னத மகிமை பொருந்தியவராய் வீற்றிருக்கிறார்.

நமக்கும் இந்த விசுவாசம் தேவை. சகல ஜாதிக்காரரும், வர்ணத்தாரும், பாஷைக்காரரும் இயேசுவின் மூலமாய்த் தேவனுக்குச் சொந்த ஜனங்களாவார்கள் என்று விசுவாசிப்போமாக. அந்த விசுவாசத்தினால் புறமதஸ்தரை அழைப்போமாக. அவர்களுக்காக உழைப்போமாக! நிச்சயமாகவே இயேசுராஜா உன்னதமானவர்! அவர் ராஜாதி ராஜா! 'கர்த்தாதியாகிய இயேசுவே! நீர் வீற்றிருக்கிறீர். ஆளுகை செய்கிறீர். இந்தியாவின் ஜனங்களும் பிரபுக்களும் உம் சொந்தமாவார்கள் என்பது நிச்சயம். விசுவாசத்தோடு அவர்களை அழைக்க எங்களுக்கும் பெலன்தாரும்' ஆமென்.

சி. எம். எஸ். ஆலோசனை சங்கத்தில் அத்தியக்ஷராவர்கள் செய்த உபந்நியாசம்.

நூற்றண்டு கொண்டாட்டம். 1816-ம் ஆம் மேமீ 8உ திருவாங்கூர் சமஸ்தானத்தில் முதல் சி. எம். எஸ். மிஷனெரிமார் வந்திறங்கினார்கள். நாளது வருஷம் மேய்மீ கடைசி இருதினங்களிலும் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் நடந்தேறின. நானும் கனம். S. G. மதரம் ஐயரவர்களும் அக்கூட்டங்களில் பேசும் சலாக்யம் பெற்றோம். அங்கு நடந்திருக்கும் வேலை மிகவும் ஆச்சரியகரமானது. சி. எம். எஸ். தாய்ச்சங்கத்தாரின் ஆதி நோக்கம்: திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒரு புது சபையை உண்டாக்குவதல்ல, முன்னமே அங்கு இருக்கும் சூரியானி கிறிஸ்தவ சபைக்கு உதவிபுரிவதாக இருந்தது. சூரியானி சபையோ சுவிசேஷ பிரபல்ய வேலையை விருத்திசெய்ய முயலவில்லை. சுதேச ராஜ்யத்து இந்துக்களின் மதிப்பையும் கண்ணியத்தையும் பெற்றுக்கொள்ளுவதற்கு உதவியாக அந்த நாட்டில் அது பிரத்தியேகமான ஓர் கண்ய கிறிஸ்தவ ஜாதியாகத் தன்னைக் காத்துக்கொண்டது. 25 வருஷங்களுக்குப் பின்னர், சி. எம். எஸ். சங்கத்தாரும் சூரியானி சபையாரும் வெவ்வேறாக சுவிசேஷ வேலைசெய்ய ஏற்பாடுசெய்துகொண்டார்கள். புறக்கணிக்கப்பட்ட வர்ணத்தாரிலிருந்து 35,000 பேர் இவ்வேலையின் பலனாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பந்தி லும் ஆலயத்திலும் மத்திபாகத்தில் இக்கிறிஸ்தவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்ததைப் பார்ப்பது ஓர் மாட்சிமையான காட்சியாயிருந்தது. இக்கூட்டம் கிறிஸ்துவின் சுவிசேஷப் பிரசங்கத்தின் ஆச்சரிய வல்லமைக்குப் போந்த அத்தாக்ஷியல்லவா?

நம்முடைய நூற்றாண்டு கொண்டாட்டமும் கிட்டுகிறதே. எப்படிக் கொண்டாடப்போகிறோம்? திருவாங்கூர் கிறிஸ்தவர்களின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் கண்டதப்பிதங்களை விட்டுவிட்டு, நல்ல விஷயங்களைப் பின்பற்றுவோமாக. ஐந்து வருஷங்களாக அவர்கள் ஆயத்தப்பட்டார்கள். நாம் இன்னும் ஆயத்தம்செய்ய ஆரம்பிக்கவில்லையே, நமக்குமுன் மூன்று வருஷங்களாதிரமிருக்கின்றன. மூன்று விஷயங்களை அவர்கள் தங்களுமுன் நிறுத்தினார்கள்: (1) சுய ஆதரவும் சுய விருத்தியும். (2) தங்கள் விசேஷ கூட்டங்கள் நடத்துவதற்கு ஓர் சபாமண்டபம் (நமக்கு இருக்கும் பெரிய சபாமண்டபம்போன்ற மண்டபம் அவர்களுக்கு இல்லை). (3) சுய ஆளுகைக்குவேண்டிய வித்தி. ஓர் அத்தியக்ஷ சினட் சபை ஸ்தாபகமும் அதில் தாங்களே தங்கள் அத்தியக்ஷரைத் தெரிந்துகொள்ளும் சலாக்கியமும் அடைய ஆவலோடு நோக்குகிறார்கள்.

வடதிருநெல்வேலி. வடதிருநெல்வேலி ஓர் பாழான பாகமாகவும் கவுண்சல் உதவி அதற்கு மெத்த அவசியமென்றும் என்னிடம் சொல்லப்பட்டது. என்றாலும் அங்கு நான் பார்த்த சபைகள் எனக்கு மிகுந்த சந்தோஷம் விளைவித்தன. மெய்தான், போதுமான ஊழியரும் பணமும் இப்பாகத்துக்கு வேண்டியது. சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு இங்கு நல்ல சமயம் இருக்கிறது. ஆனால் வருத்தங்களுமுண்டு. கிராமங்கள் ஒன்றுக்கொன்று அதிக தூரத்தில் சிதறியிருக்கின்றன. ஆகவே சபைகளைச் சந்திப்பது மிகவும் கஷ்டம். தூரத்துக்குத்தக்கதாக அதிக ஊழியர் இங்கு வைக்கப்படவேண்டும். தவிரவும், பற்பல வர்ணத்தார் இங்கு வசிக்கிறார்கள், ஆகையினால் அவர்களை நடத்துவதில் அதிக ஞானம் வேண்டும். பற்பல வகுப்பாரையும் ஆதாயம்பண்ணுவதற்கு கல்வி ஓர் முக்ய சாதனம். கல்வி விஷயமான தேற்சிவேண்டுமென்று புறமதஸ்தர் அடிக்கடி என்னிடத்தில் கேட்கிறார்கள். இப்படி உதவிசெய்தால் நமது வேலை சீக்கிரம் விர்த்தியடையும். பிரயாணம் செய்வதற்கு இப்பாகத்தில் அதிக வசதிகிடையாது. ஆகவே, ஊழியர் தனித்துவிடப்படுகிறார்கள். உபாத்திமார், உபதேசிமாருக்கு தகுந்த அறிவு கிடைக்கும்படி நாம் விசேஷ முயற்சி எடுப்பது மிகவும் அவசியம். நான் மூன்று தடவை இப்பாகத்தின் வெவ்வேறான இடங்களில் மௌன தியானக் கூட்டங்கள் நடத்தினேன். இவர்களுக்கு விசேஷித்த பாடக் கூட்டங்கள் (கன்வென்

ஷன் கூட்டமாத்திரம் போதாது) இருப்பது மன்றி, இவர்களுக்குப் பிரயோஜனமாக நமது பத்திரிகைகளில் விசேஷபிரபந்தங்களும் பிரசுரிக்க ஏற்பாடு நடப்பது நலம். கவுண்சலார் இதுவிஷயத்தைக் கவனிக்கவேண்டும். இங்குள்ள ஊழியருக்கு தங்கள் வேலையிலும் அன்றுடகக் கஷ்டங்கள் உண்டு. இவைகளுக்கும் ஏற்ற உதவிபுரியவேண்டும். கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள பலர் ஆசையாயிருக்கிறார்கள். ஒருவன் ஒரு பள்ளிக்கூடமும் கோவிலும் கட்டியிருக்கிறான். தங்களுக்குப் போதிப்பதற்கு ஜனங்கள் ஆட்கள் கேட்கிறார்கள். ஊழியர் கிடைப்பதற்கு ஓர் வழிவகை சொல்லுகிறேன். நல்ல நிலமையிலிருக்கும் தென் திருநெல்வேலி சபைகள், திருஷ்டாந்தரமாக மஞ்ஞானபுரம், செவுல், பண்ணைவிளை சர்க்கிள், வட திருநெல்வேலியில் சுவிசேஷ வேலை செய்வதற்கு தங்கள் செலவில் ஊழியரை ஒரு மாசத்துக்கோ, பல வாரங்களுக்கோ, அல்லது ஆறு மாசங்களுக்கோ அவசியத்துக்குத்தக்கதாக அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்வது தகுதியாயிருக்கும். வட திருநெல்வேலி, விசாரணைக் குருவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கனம். S. G. மதுரம் ஐயரவர்கள் தங்கள் அவசியங்களைத் தென் சபைகளுக்குத் தெரிவித்துவருவது இதற்கு மெத்த உதவியாகும். இருபாகத்து சபைகளும் ஒன்றாய் இணைக்கப்பட்டுவிடும். சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமாய் நாம், விரும்புவதும் நாம் கையாட யோசிக்கும் முறையும் இத்தகைமையதே. அத்தியகூரானீன முழுமையிலும் நடக்கும் ஊழியங்களுக்காக ஜெப விண்ணப்பம் எப்போதும் செய்யாவிட்டால், காரியம் ஒன்றும் நடக்கமாட்டாது. நாம் தாயாரித்திருக்கும் தினசரி ஜெப ஒழுங்கு இன்னும் சபைகளில் சென்று பலிதத்திற்குவரவில்லை. குருமார் இதுவிஷயமாய் அதிகக்கவனம் செலுத்துவார்களென்று நம்புகிறோம். வீடுகளில் மாத்திரமல்ல, ஆலயங்களிலும் வழங்கும்படியாகவே தினசரி ஜெப ஒழுங்கு பிரசுரித்திருக்கிறோம்.

சபை வேலை. சபை விசாரிக்கும் குருமார் போதாது. சுய ஆதரவு முயற்சியென்பது குருமார் தொகையைக் குறைத்துவிடுவது என்றால், அது சுய ஆதரவு என்று பேர் பெறுவதற்குத் தகுதியானதல்ல. பாஸ்ற்ரேட்டு என்று அழைக்கப்படும் ஒவ்வொரு ஸ்தானத்திலும் ஒரு குருவானவர் இருக்கும்படி, குருமார் தொகையை இன்னும் சில வருஷங்களில் அதிகரிக்கவேண்டுமென்று நினைக்கிறேன். குருமார் இப்போ செய்துவருகிற பல ஊழியங்களை முக்கியஸ்தரான சபை மெம்பர்களை செய்துவரலாம்.

கல்வி. பாடசாலை, கல்வி விஷயமாய் நாம் முன்னுக்குநிற்கிறோம் என்றாலும், இவ்விஷயத்தைப்பற்றிய திட்டமான அறிவு நமக்கு இல்லை. பின்காட்டிய சரித்திரம் நான் சொல்ல விரும்புவதை விளக்குமென நினைக்கிறேன். ஓர் மகமதியன் ஓர் கோழி வளர்த்தான். ஒரு, அதை அடித்துக்கொடுப்பதற்கு இரு மூல்விகள் வந்து, குதர்க்கம்பண்ணிக்கொண்டிருப்பதற்குள்ளாக, பிடித்துவிட்டிருந்த கோழி ஓடிப்போய்விட்டது. கல்விவிஷயமான நமது காரியமும் இப்பேர்ப்பட்ட மோசத்துக்குள்தான் இருக்கிறது. இருநிறத்தார் கல்விவிஷயங்களை மேல்விசாரித்துவருகிறார்கள். பிரதம கல்வி கவுண்சல்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. உயர்தர கல்விக்கு மிஷனெரி கான்பரென்ஸ் பொறுப்பானது. உயர்தர கல்விக்கு உத்தரவாதிகளானவர்கள் பிரதம கல்வியை நெகிழவிடுவதாவது, அடுத்த வகுப்பார் உயர்தர கல்வியில் சம்பந்தமற்றிப்பதாவது நல்லகாரியமல்ல, எனெனில் இருவகை கல்வியும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுள்ளதாய் இணைக்கப்பட்டுளதே. நமது பாடசாலைகளை நாம் சரியான பிரகாரம் பரிசோதனை செய்வது அவசியம். அவைகளின் தன்மையாதுவென அறிந்து, நமது கல்விமுறையை எப்படி அபிவிர்த்திக்குக்கொண்டுவரலாம் என்று கவனிக்கவேண்டும்.

நிடப்படுத்தப்பட்டவர்களில் பலர் **பரி. ஓர்டினேஷனம்** பெற்றுக்கொள்ளுகிறதில்லையென்று கவுண்சல் ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறது. காரியம் அப்படி இருக்கலாகாது. பரி. நற்கருணை தேவனுடைய ஜனங்கள் யாவருக்கும் தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கும் விருந்து. இவ்விருந்தைச் சேர்ந்துவரும்படி வாலிபரை எவி எழுப்பிவிடுவது நமது கடமை.

முடிவுரையாக, நமது வேலையின் ஒரே நோக்கம் ஒற்றுமையென்பதை நமது கண்முன் எப்போதும் வைத்துக்கொள்ளுவோமாக. எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவதற்காகவே நாம் உழைக்கிறோம். நமது ஒரே பிதாவிற்குக் கீழ்ப்படிந்து, ஒரே ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளுவோமாகுல், நாம் இலக்கைச் சேருவோம்.

செப்ற்றேம்பர்மீ Vol. I No. 3.

திருநெல்வேலி, மதுரை அத்தியகூரானீன பத்திரிகை

முன்று மாசத்துக்கோருமுறை பிரசுரமாகும்

அத்தியகூரலர்கள் செய்தி

சுவிசேஷப் பிரபல்யம். கிறிஸ்தவனெவ்வொருவனும் சுவிசேஷப் பிரசங்கி, ஆகவே அவன் சுவிசேஷப் பிரசங்கியாயிருக்கவேண்டும். மிஷன் அல்லது திருச்சபை ஊழியரைப் பார்த்து, நீங்கள் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று அருள்நாதர் சொல்லவில்லை. **கிறிஸ்தவர்கள் யாவரையும் நோக்கி:** போய், பிரசங்கியுங்கள் என்றார். **எப்படி.** பிரசங்கம் செய்கிறது அல்லது போதிக்கிறது என்பதைப்பற்றி பலருக்கு அறிவு இல்லை. இது ஓர் பெரிய தடையே. ஆகவே புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் வேதாகம வகுப்புகள் ஆரம்பித்து, கிறிஸ்துவானவர் உலகத்திற்கு அருளும் ஈவு யாவை?, ஓர் புறமதஸ்தனைப் பார்க்கிலும் நான் ஓர் கிறிஸ்தவனாக என் நல்ல சீரிலிருக்கிறேன்? நான் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டிய செய்தி என்ன? அச்செய்தியை நான் நன்றாய் எப்படிச் சொல்லக்கூடும்? முதலிய கேள்விகளுக்கு அவ்வகுப்புகளில் சரியான மாறுத்தரம் கண்டுபிடிக்கவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பொருட்கள் பேரில் சம்பாஷித்துக்கொள்வது மிகவும் பிரயோஜனமான காரியம். இவ்வாறு செய்வதால் கிறிஸ்துவைப்பற்றி அதிகம் கற்றுக்கொள்ளுவோம். புறமதஸ்தர் பிரயோஜனமடையத்தக்கதாக நாம் அவர்களிடம் பேசக்கூடியவர்களுமாவோம்.

2. தாயிமார் ஐக்யம். தாய்மார் ஐக்யத்தைச் சேர்ந்த லோக்கல் செக்ரற்றேரிமாருக்கு ஓர் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். அநேக கிராமங்களில் இவ்வைக்கியம் ஸ்தாபகமாகி பிருப்பது சந்தோஷகரமான விஷயமே. என்றாலும், ஆரம்பித்திருக்கும் கிளைகள் பேதாது. பெரிய சபைகள் ஒவ்வொன்றிலும் இவ்வைக்கியம் ஏற்படுத்தவேண்டியது தகுதியே. தாய்மார் சங்கம் தாயிமாருக்கு மாத்திரம் உரியது என்பதை மறந்துவிடக்கூடாது. இச்சங்கத்தின் நோக்கம் தாய்மார் ஒன்றுகூடி, தங்கள் பிள்ளைகளின் வாழ்வுக்காக ஜெபிப்பதும், அதற்கேற்ற முறைகளை ஆலோசிப்பதுமே. வீடுகளில் பிள்ளைகளைப் படிப்பிப்பது எப்படி, வியாதிகாலத்திலும் சுககாலத்திலும் அவர்களை நடத்தவேண்டிய முறையாது. முதலிய தாய்மாரை யடுத்த விஷயங்களை இக்கூட்டங்களில் பேசிக்கொள்வதும், வேதஆராய்ச்சி செய்வதும், விண்ணப்பமன்றாட்டில் பின்னிடுவதும் இவ்வைக்கியத்து கூட்டங்களின் நடபடிகளாயிருக்கவேண்டும்.

நமது பிரதிநிதி. யுத்தம் செய்யும் போர் வீரரோடு நமக்கும் ஓர் பிரதிநிதி இருக்கவேண்டுமென்று நான் பல நாட்களாக விரும்பிவந்ததுண்டு. ஆகவே, மேசோப் பொத்தோமியாவில் அமர்புரியும் சைன்னியத்திற்கு ஊழியஞ்செய்யும்படி வாலிப கிறிஸ்தவ ஐக்ய சங்கத்தாரின் ஆளாக கனம் R. H. வீலன் ஐயரவர்கள் போகவேண்டுமென்று ஆலோசனை நடந்தபோது, அது எனக்கு மிகவும் பிரீதியாயிருந்தது. இவ்வேற்பாடு முடிவு பெறுவதற்குள்ளாக, ஆஸ்பத்திரி ஊழியத்திற்காக கேம்ப்ளன் குருமார் தேவையென்று சங்கைமெதித்திராணியாரவர்கள் விளம்பரஞ் செய்தார்கள். என்னுடைய ஆலோசனைக்கு இணங்கி, கனம். வீலன் ஐயரவர்கள் இவ்வேலையை ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே, நீதி நியாயத்தை நிலைநிறுத்தும் நோக்கமாக நடந்துவரும் இக்குரூர யுத்தத்தில் கஷ்டநஷ்டங்

களைப் பாராமல், தங்கள் பிராணனையும் தத் தஞ்செய்து வியாதியாயிருக்கும் படைவீர ருக்கு ஊழியஞ்செய்யும் ஜோலியில் நமது பிரதிநிதியும் ஒருவர் இருக்கிறார். நமது ஜெபங்களினால் நமது பிரதிநிதியை நாம் தாங்கவேண்டும். வியாதியஸ்தருக்குப் பிர யோஜனமாயிருக்கும் சாமான்கள், ஆறுதல ளுக்கும் செய்தி முதலானவற்றைச் சபை யார் கனம் வீலன் ஐயரவர்களுக்கு அனுப்பி னால், அவர்கள் அவைகளை நன்கு மதித்து, வியாதியஸ்தருக்குப் பிரயோஜனமாக உப யோகிப்பார்கள். காயப்பட்டவர்கள் வியா திஸ்தர் நடுவில் நமது பிரதிநிதியாக உழைக் கும் கனம். R. H. வீலன் ஐயரவர்களுக்காக ஜெபிக்கும்படி ஆராதனைகளில் குருமார் ஜனங்களைக் கேட்டுக்கொள்வார்களென்று நம் புகிறேன்.

விவாக ஒழுங்குகள்

விவாக சம்பந்தமான திருச்சபை சட்டங் களையும் தேச சட்டங்களையும்பற்றி பலர் அடிக்கடி என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். அதனால் இவ்விஷயத்தில் ஜனங்களுக்குள் ளே மிகுதியான தப்பெண்ணமிருக்கிற தென்று தெரியவருகிறது. பின்வரும் குறிப் புகள் அவ்விதத் தப்பெண்ணங்களை நிவிர்த் திப்பதற்கேதுவாகலாம்.

I. ஜெபபுஸ்தகத்தின் கடைசியில் கண் டிருக்கும் இனமுறை சம்பந்த விவாக அட்ட வணையே நாம் திருச்சபை அங்கங்களாயிருக் கும் அங்கிலேய திருச்சபையின் சட்டம். அவ்வட்டவணையானது அங்கிலேய திருச்ச பையில் எவ்வித விவாகங்கள் திருச்சபை சட்டத்துக்கு விரோதமானவையெனக் காட் டுகின்றது. மரித்துப்போன தன் மனைவி யின் சகோதரியை ஒருவன் விவாகம்செய்ய லாமா வென்ற கேள்வியே அடிக்கடி கேட் கப்படுகிறது. அவ்வித கலியாணத்துக்கு அங்கிலேய திருச்சபையின் அநுமதி கிடை யாது. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் அநேக பாகங்களில் தேசச்சட்டமானது இவ்வித விவாகத்திற்கு அநுமதி கொடுத்திருப்பினும், இத்தேசச்சட்டமானது (தேர்ந்த சட்ட நிருப நியாய சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி) இவ்வித விவாகத்திற்கு இடங்கொடுக்கிற தில்லை. ஆகலின் அவ்வித கலியாணங்கள் அங்கிலேய திருச்சபையின் ஒழுங்குக்கு விரோதமானவை யென்றுமட்டுமல்ல, இத்து தேசத் திறைத்தனச் சட்டத்திற்கும் ஓர்கால் விரோதமானவையெனச் சொல்லலாம். ஆக வே இந்த விஷயம் ஜனங்களின் இஷ்டத் துக்கு விடப்பட்டிருக்கும் ஓர் காரியமல்ல. இவ்வித கலியாணம் செய்துகொள்பவன் தன்னைத் திருச்சபைக்குப் புறம்பாக்கிக்கொள் ளுகிறான்.

2. இந்தியாவிற் சில விடங்களில் நடந் துவரும் சிலவித கலியாணம், திருவிட்டாந்தர மாக, சகோதரன் அல்லது சகோதரியின் மக ளைக் கலியாணஞ் செய்தல் முற்றிலும் முறை கேடானதே. இவ்வித விவாகம் செய்து கொள்ளுகிறவன் சபைக்குப் புறம்பாக்கப்படு வதற்கு தானே வழி செய்துகொள்ளுகிறான்

3. புருஷன் மனைவி ஒருவரை யொரு வர் தள்ளிவிடும் விஷயம் (Divorce) திருச்ச பையை அடுத்ததே அல்ல. இன்னின்ன தைத் தள்ளிவிட வேண்டுமென்ற வேண்டு கோள் வேளாவேளைகளில் என்னிடம் வருவ துண்டு. இதற்கு அதிகாரம் எனக்கில்லை. தள்ளிவிடுதலைக் குறித்து நமதாண்டவர் தெ ளிவாய்க் கூறியிருக்கிறதைக் கவனிக்கையில், ஒருவரை யொருவர் தள்ளிவிடலாகாதென் பதே என்னுடைய விருப்பம். ஜனங்களு டைய இருதயக் கடினத்தினிமித்தம் தேசச் சட்டம் அதற்கிடங்கொடுத்திருக்கிறது; சர்க் கார் நியாயஸ்தலத்தின் மூலமாய் மாத்திரமே தள்ளிவிடுவதற்கு அதிகாரம் கிடைக்கக்கூடி யது. அங்ஙனம் தள்ளப்பட்ட எவர்க்கே னும், தள்ளிவிட்ட புருஷன் அல்லது மனை வி உயிரோடிருக்கையில், மறுவிவாகம் எந்தக் குருவானவரும் நடத்தமாட்டார், நடத்தவும் கூடாது. மேலும் புருஷனும் மனைவியும் ஒரு வரைவிட்டொருவர் பிரிந்து வருஷங்கள் பல வாயிற்றென்ற முகாந்தரமாவது, அல்லது அவர்களிலொருவர் வேறொருவரிடம் சம்பந் தப்பட்டுக்கொண்ட விஷயமாவது 'தள்ளுதல்' ஆகவேமாட்டாது. முன் சொன்னபடி சர்க் கார் நியாயஸ்தலத்தில் மாத்திரமே தள்ளுதல் (Divorce) கிடைக்கக்கூடியது.

4. இந்துக்களில் சில வகுப்பார் விவாக சம்பந்தமான சட்டங்களைப்பற்றி நெகிழ்ச்சி யாயிருப்பதினாலே நாமும் நம்முடைய சட் டங்களில் சற்றே நெகிழ்ச்சியாயிருந்து ஒழுங் னே கலியாணங்களுக்கு இடங்கொடுக்கலா காதாவென சில சமயங்களில் என்னிடம் கேட்கிறார்கள். நமக்கு அப்படிப்பட்ட அதி காரமில்லை. குருமார் சட்டப்பிரகாரமே விவாகம் நடத்தவேண்டும். அவர்கள் சட் டத்தை மீறி, விவாகம் நடத்தும் பட்சத்தில் கடுந்தண்டனைக்குள்ளாவார்கள். இதுவிஷ யத்தில் குருமாருக்குள்ள சட்டமே எனக்கும்.

5. அங்கிலேய திருச்சபையைச் சேராத குருமாருக்கு விவாகம் நடத்தும்படி கொடுக் கப்பட்டிருக்கும் அதிகாரம், மாப்பிள்ளை பெண்ணிருவரும், அல்லது அவர்களிலொரு வர் தங்கள் சபையின் அங்கங்களாயிருந்தால் மட்டும் செல்லும். ஒரு குருவானவருக்கு மற் றோர் சபையைச் சேர்ந்த மெம்பர்களுக்கு விவாகம் நடத்தும் பாத்தியதை கிடையாது. அப்படிச் செய்யின், தன்னுடைய (லைசன் ஸை) அதிகாரப்பத்திரத்தை இழந்துபோக நேரிடும்.

6. அங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த ஒரு மாப்பிள்ளையாவது பெண்ணாவது தாங்க ளிருவரும் வாசம்பண்ணுமிடம் தவிர, வே றோரிடத்தில் விவாகம் செய்துகொள்ளவிரும் பின், இருவரிலொருவர் அவ்விடம் சென்று குறைந்தபட்சம் விவாக அறிக்கை வாசிக்கப் படுங்காலத்திலாவது அங்கே வாசம்பண்ண வேண்டும். அல்லது அத்தியகூரவர்களின் பிரதிநிதிகளாகிய (Surrogates) W. E. இவான்ஸ் ஐயரவர்கள், E. A. I. மூர் ஐயர வர்களாகிய இவர்களிலொருவரிடம் எற்க னவே லைசன்ஸ் பெற்றுக்கொள்ளவேண்டும். லைசன்ஸ் கொடுக்கும்படி மனுச்செய்ததற் கும் அது கிடைப்பதற்குமிடையில் எப்படி யும் நான்கு தினங்கள் (96 மணி நேரம்) இருக்கவேண்டிய தவசியம்.

அத்தியகூரவர்களின் சுற்றுப்பிரயாணம்

முந்தின சஞ்சிகையில் என்னுடைய சுற் றுப்பிரயாணத்தின் தினவர்த்தமானக் குறிப் பை பெப்ருவரிமீ 22உ முடிய எழுதியிருந் தேன். அதுமுதல் நான் சந்தித்த கிராமங் கள் அநேகமாகையால், அவைகளொவ்வொன் றையும் குறித்து விபரமெழுதுவது கூடாத காரியம். முக்கியமானவைகளை மட்டும் எழுதுகிறேன். நான் சந்தித்த கிராமங்க ளாவன:—

தூலசேகாபட்டணம்:—இதிலுள்ள சபை மிகச் சிறிதாயிறும் ஊக்கமுள்ளது.

வெள்ளாளன் விளை:—இந்தக் கிராமம் வெள்ளத்தினால் பெருநஷ்டமடைந்திருக்கி றது. பள்ளிக்கூடத்தை வெள்ளம்கொண்டு போய்விட்டது. இன்னும்கூட ஊரில் மிச் சமான பாகத்தைத் தண்ணீர் அடித்துக் கொண்டு போய்விடும்போலிருக்கிறது.

மெஞ்ஞானபுரம்:—இவ்விடத்தில் தவ சோற்சவத்துக்காக திரள் கூட்டமான ஜனங் கள் வந்தனர். பள்ளிக்கூடங்களைப் பார்வை யிட்டதுடன் சுற்றிலுமுள்ள பாஸ்ற்றரேற்று களின் குருமார்களுக்கு ஒருநாளைத் தியான நாளாக வைத்து கூட்டங்கள் நடத்தினேன். Y M. C. A. என்ற வாலிப கிறிஸ்தவ ஐக் கிய கூட்டமொன்று தழைத்து நடந்தேறி வருகிறதைக் கண்ணுற்றுச் சந்தோஷமடைந் தேன். ஒய்வுநாளிலே அவர்களுடைய கூட் டமொன்றில் உபந்நியாசித்தேன்.

நாகர்கோயில்:—இங்கே திருநெல்வேலி மாகாண சபை ஆலோசனைக் கூட்டம் நடத் தும்படி போனேன். லோக்கல் கவுண்சல், டிஸ்ற்றிரிக்ட் கவுண்சல், ஸென்ற்றல் கவுண் சல் முதலிய கவுண்சல்களை அங்கே எற்படுத் னேம். இவ்விதமான எற்பாடுகளினால் சபைக் காரியங்களை நிர்வகிப்பதற்கு ஜனங்க ளுக்கு முன்னைவிட அதிகப் பொறுப்பு உண் டாகிறது. அதுவே நாம் விரும்புகிற காரியம். இந்தப் புது ஒழுங்குகள் சில விஷயங்களில் C. M. S. ஒழுங்குகளுக்கு விகற்பப்பட்ட போதிலும், அநேக விஷயங்களில் ஒத்திருப்ப தால், நமது அத்தியகூர்னம் முழுவதிலும் ஒரே நீதியான எற்பாடுகளுண்டாவதற்கே,

வாகும். எங்கும் ஒரே சீரான ஏற்பாடுகளுண்டாகுமாயின், அத்தியக்ஷாதீன கவுண்சலொன்று ஏற்படுத்துவது சுலபமாகும்.

மார்ச்சுமீ கடைசியில் ஆசீர்வாதபுரத்தைச் சந்தித்தேன். பழனியப்பபுரத்திலும் பனைக்குளத்திலும் புதிதாய்க் கூட்டிக் கட்டியிருக்கும் ஆலயங்களைப் பிரதிஷ்டை பண்ணினேன்.

மேய்மீ நான் கனம். S. G. மதுரம் ஐயரவர்களுடன் திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள C. M. S. சபையின் நூற்றாண்டு உற்சவக் கூட்டங்களுக்குப் போனேன். அப்பிராந்தியங்களில் கிறிஸ்து சபை அடைந்துவரும் தேர்ச்சியைக் கண்ணுற்று நாங்கள் மிகுந்த தைரியமடைந்தவர்களாய்த் திரும்பினோம்.

சூன்மீ 3உ சனிக்கிழமை திருநெல்வேலி பழையபேட்டையில் ஸ்தாபகமாயிருக்கும் C. M. S. வேதசாஸ்திரசாலை திறக்கப்பட்டது. இதை ஸ்தாபிப்பதற்கு ஆரம்ப முயற்சி செய்த மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களும், கனம். E. லேங்டேல் சிமித் ஐயரவர்களும் அத்தருணம் விஜயம் செய்திருந்தது நமது போதிர்ஷ்டமே. ஷிஷ்தாபனத்திற்குறிய கட்டடங்களையும் அதன் சிறந்த ஆரம்பத்தையும் கண்டு மனமகிழ்ந்தோம். கர்த்தருடைய போராசீர்வாதம் இவ் ஊழியத்தில் தங்கியிருந்து, அவருக்கு மகிமையுண்டாக சிறந்த வேலைகள் அவ்விடத்தில் நடந்தேறுமென உறுதியாய் நம்புகிறோம்.

சூன்மீ 6உ செவ்வாய்க்கிழமை சாகுபுரத்துக்குச் சென்று, அங்கே அநேகநாட்களைப் பின்னிட்டேன். அவ்விடத்தில் நடந்தேறின தவச உற்சவத்துக்கு திரண்ட ஜனங்கள் கூடி வந்திருந்தனர். 8உ வியாழக்கிழமையன்று 24 பேர் ஞானதீட்சை பெற்றனர். எல்லா உபாத்திமார்களையும் மிஷன் ஆசாமிகளையும் கண்டு, அவர்களுடைய ஊழியத்தின் சம்பந்தமாய் அவர்களுடன் கலந்து பேசிக் கொள்ளவும் சமயம் வாய்த்தது.

சிரிவிலிப்புத்தூரையும் சந்தித்தேன். ஹைஸ்கூல் உபாத்திமார்கள் மறவர் ஜாதியாருக்கென்று ஏற்படுத்தி, ஆதரித்து, தாங்களே அதில் போய்ப் படிப்பித்து வருகிற பள்ளிக்கூட மொன்றில் பரிசளிக்கும் சலாக்கியம் கிடைத்தது. இது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் ஓர் சிறந்த காரியம். இவ்விதமாகவே பெரிய கல்விச்சாலைகளெல்லாம் ஏதேனும் கொஞ்சமாவது செய்யுமாஞல், அதன் பலன் பெரிதாயிருக்கும். ஹைஸ்கூலைச் சந்தித்து, அதன் பிரயோஜனத்தை பல திருஷ்டாந்தங்களிஞலறிந்தேன். இச்சமயத்தில் யுத்தத்தைப்பற்றி உபந்நியாசித்தேன். அதைக் கேட்க வந்திருந்தோர் ஏராளம். 4 பையன்களுக்கு ஞானதீட்சையும் கொடுத்தேன்.

சூன்மீ 11உ ஞாயிற்றுக்கிழமை சிவகாசியில் தேவாராதனை நடந்தது. அதன்பின் சாகுபுரத்தில் இங்கிலிஷ் ஆராதனை நடத்தினேன். அதில் ரிசர்வ் போலிஸ் உத்தியோகஸ்தர்கள் தொழுதுகொள்ள வந்திருந்தார். அவர்களிலொருவர் தூத்துக்குடியில் என்னிடம் திடப்படுத்தல் பெற்றவர்.

சூன்மீ 12உ தையல்பட்டி என்னும் கிராமத்தைச் சந்தித்தேன். அங்குள்ள ஜமீன்தார் நமக்கொரு பள்ளிக்கூடம் கொடுத்திருக்கிறதுமன்றி, அவர் தாமே நமக்கென்று கட்டப்போகிற ஆலயத்திற்கு நான் அஸ்திபாரம் போட்டேன். அவர் ஞானஸ்நானம் பெறுவிட்டாலும், நம்முடைய கிறிஸ்தவர்களுக்கு இவ்வித உதவிகள் புரிந்துவருகிறார்.

பனையடிப்பட்டியில் சிலமணி நேரங்கள் தங்கியிருந்து, 50 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன். போனவருஷம் மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்கள் வியாதியினல் இவ்விடத்தில் திடப்படுத்தல் ஆராதனை நடத்தத் தடைப்பட்டுப் போனதால், அதை முடிக்கும்படி என்னிடத்தில் விசேஷமாய்ச் சொல்லியிருந்தார்கள்.

சூன்மீ 13உ வாகைக்குளம் சேர்ந்தேன். தவச உற்சவத்திற்கென்று திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். இங்கேயும் மிஷன் உபாத்தியாயர்களுக்கும் ஆசாமிகளுக்கும் கூட்டம் நடத்தினேன். திருநெல்வேலியின் இந்தப்பாகங்களில் உழைக்கும் ஊழியர்களுக்கு நம்மெல்லாருடைய ஜெபமும் அவசியம். சில விஷயங்களில் இங்கே வேலை செய்வது கஷ்டம். முக்கியமான கஷ்ட

மென்னவெனில், கிராமங்கள் சிதறியிருக்கின்றன. ஆகையால் அவைகளைச் சந்திக்க அதிக ஊழியர் வேண்டியதிருக்கிறது. வட திருநெல்வேலியில் ஒழுங்காய் சுவிசேஷ ஊழியம் செய்யக்கூடுமாயின், ஏராளமான பேர் ஞானஸ்நானம் பெறுவார்கள். ஆகையால் அறிவும் செழிப்பும் வாய்ந்த தென் திருநெல்வேலி சபைகள் உதவி வேண்டிய இடங்களுக்குச்சென்று, ஒருவாரம், அல்லது இரண்டு வாரம், அல்லது கூடுமாஞல் அதற்கும் அதிகமான காலம் அவ்விடங்களில் உழைத்துவரும்படி தங்கள் ஸ்தாபதிகளை அனுப்பமாட்டார்களா? ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்க ஆசைப்படுகிறார்களென்றும், அவர்களுக்குப் பிரசங்கிக்கவோ ஆட்களைக் காணேமென்றும் அநேக கிராமங்களைக் குறித்துக் கேள்விப்படுகிறேன்.

சூன்மீ 17உ சனிக்கிழமை துறையூருக்குச் சென்று, ஞாயிற்றுக்கிழமையும் அங்கே தங்கியிருந்து, 11 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தேன். இங்கேயும் அதிக உதவி வேண்டியதிருக்கிறது. பிரயாணக் கஷ்டமதிகம். வேலையாட்களும் சொற்பம். பக்கத்துக்கிராம மொன்றில் ஒரு பைபிள் ஊமன் நல்ல வேலை செய்து மரித்துப்போக, அந்த இடத்துக்கு இன்னும் ஆள் அனுபபப்பட வில்லை. அதிக சிலாக்கியம் பெற்றிருக்கும் தென் திருநெல்வேலி சபைகள் உதவிசெய்ய முடியாதா?

சூன்மீ 19உ திங்கட்கிழமை மேகாயில் பட்டி சேர்ந்து, வட திருநெல்வேலி குருமார்களுக்கு அந்த நாளைத் தியான நாளாக வைத்துக் கூட்டம் நடத்தினேன். மறுநாள் செவ்வாய்க்கிழமை ஒரு கான்பரன்ஸ் கூட்டம் வைத்து, அதில் ஊழியத்தின் சம்பந்தமாயுள்ள கஷ்டங்களைப்பற்றிப் பேசித் தெளிவடைந்தோம். அதன்பின் அவ்விடத்துப் பெரியோர்கள் தங்களுக்கு மிஷன் பள்ளிக்கூடமாக உபயோகிக்கவேண்டுமென்று ஆசித்த கட்டடமொன்றைப் பார்வையிட்டேன். அங்கிருந்து பண்ணிகுளத்துக்குப் போய், 40 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன்.

சூன்மீ 24உ சனிக்கிழமை நல்லூருக்குப் போனேன். தவச உற்சவம், திடப்படுத்தல் முதலிய விசேஷித்த ஆராதனைக்காக அல்ல, அங்குள்ள பள்ளிக்கூடங்களையும், சர்க்கிள் கஸ்பா வேலையையும் பார்க்கவே போனேன். ஆனல் அங்கே கனம் J. அல்பர்ட் ஐயரவர்கள் மரணப்படுக்கையிலிருக்கக் கண்டது மிகவும் துக்கமான காரியம். நல்லூரிலும் ஆலங்குளத்திலும் பிரசங்கம் செய்தேன். 25உ திங்கட்கிழமை மிஷன் உபாத்திமார்களையும் ஆசாமிகளையும் கண்டு விஜனவிக்கொண்டபின், சுரண்டை போய்ச் சேர்ந்தோம். இங்கே தவச உற்சவம் நடந்தது. கூட்டத்துக்கு வந்திருந்த ஆட்கள் ஏராளம். அவர்களுக்குப் பந்தல் போதாது. ஆகையால் எனக்குத் தமிழ் திருப்ப 3 பேர் வேண்டிய திருந்தது. கனம். R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள் என் பக்கத்திலும் ஒருவர் பந்தலின் மத்தியிலும், மற்றொருவர் ஆலயத்தின் மேல்கோடியிலுமாக நின்றார்கள். ஆலயத்திலும் ஆட்கள் நிறைந்திருந்தார்கள். இவ்விதமாய் எல்லாருக்கும் நன்றாய்க் கேட்கக் கூடியதாயிருந்தது. பந்தலிலும் ஆலயத்திலும் ஆராதனை ஏக காலத்தில் ஒன்றுபோல வாசிக்கப்பட்டது. பிற்பகலில் போர்டிங் செக்கண்டெரி ஸ்கூலைப் பார்த்துவிட்டு மறுதினத்தில் தென்காசிக்குச் சென்றேன். அங்கே பட்டணத்தின் முக்கியஸ்தர்கள் என்னை எற்றுக்கொண்டு ஆண்பள்ளிக்கூடத்தில் எனக்கு நல்வரவு கூறினர். அதன்பின், பகலையும் இரவையும் குற்றாலத்தில் கழித்து விட்டு சேவலுக்குப் போனேன். சூன் 29உ வியாழக்கிழமையின் மிச்சமான பாகத்தை அவ்விடத்தில் செலவிட்டேன். ஜனங்கள் வெகு அன்பாய் என்னை உபசரித்தனர்.

சூலைமீ 1உ பண்ணைவிளைக்குப் புறப்பட்டேன். வழியில் சிரிவைகுண்டத்தில் டாக்டரால் அன்பாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேயிலையருந்தியபின் பண்ணைவிளை சேர்ந்தேன். அங்கே 140 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்துவிட்டு, அங்குள்ள பள்ளிக்கூடங்களையும் பக்கத்து கிராமங்களில் இரண்டொன்றையும் பார்த்து சந்தோஷமடைந்தான். அதன்பின் சூலைமீ 3உ சாயர்புரம் சேர்ந்து, சபையாரில் 160 பேருக்கும், ஆண் பள்ளிக்கூடத்தில் 33 பையன்களுக்கும்,

இடையர்காடு சபையில் 30 பேருக்கும் திடப்படுத்தல் ஆராதனை நடத்திவிட்டு, 5ஃ தூத்துக்குடி சேர்ந்தேன். அங்கே ஹைஸ்கூல் மாணவரில் 30 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன். கை பள்ளிக்கூடத்தில் வியாதியஸ்தருக்கென்று புதிதாகக் கட்டப்பட்டிருந்த அறையை ஜெபத்துடன் திறந்தோம்.

பின்னர் ராமநாதபுரம் நாகலாபுரம் சேகரங்களையடுத்த சபைகளில் சுற்றுப்பிரயாணம் செய்தேன்.

மதுரை, சூலாய் 15—17. ஞாயிற்றுக்கிழமை மதுரையில் தாமதித்தேன். தமிழ்ச் சபையின் கமிற்றியைக் கண்டு பேசினதுமன்றி, 25 பேரைத் திடப்படுத்தி ஆராதனைகளும் நடத்தினேன்.

சூலாய் 17ஃ மதுரைக்கும் ராமநாதபுரத்திற்கும் மத்தியிலுள்ள முக்கிய பட்டணமாகிய பரமக்குடி சேர்ந்து 39 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தேன்.

சூலாய் 18ஃ 15 மைலுக்கப்பாலுள்ள கிளாஞ்சனேக்குச் சென்றேன். இங்கே திடப்படுத்தல்காரர் 34 பேரிருந்தார்கள். இங்குள்ள கிறிஸ்தவர்கள் ஸ்திதிபந்தரல்ல. குருமாருக்குப் பிரயாணக் கஷ்டமதிகம். ஆயினும் திடப்படுத்தல்காரர் நன்முயற்சி பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். இவ்விடங்களில் ஸ்திரமான சுவிசேஷ ஊழியம் அவசியம். உழைப்போர் வெகுசொற்பமானதால், வேலையில் சரியான விருத்தி காணப்படவில்லை. இந்த பாஸ்ற்றரேற்றுகளுக்காக ஜெபம் தேவை.

சூலாய் 20ஃ ராஜசிங்கமங்கலம். இது வேலைசெய்வதற்கேற்ற ஓர் மத்திய ஸ்தானம்தான். முக்கியமாய் மகமதியர் நிறைந்த இக்கிராமத்தில் நமக்கொரு நல்ல பள்ளிக்கூடமும் ஜெபவீடுமிருந்தபோதிலும், அதில் கிறிஸ்தவர்களே கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். இங்கே 13 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தேன்.

சூலாய் 22ஃ கீழக்கரை: இது ராமநாதபுரத்துக்கு நேர் தெற்கேயுள்ள ஓர் மகமதிய பட்டணம். ஜனத்தொகை 15,000 இருக்கும். வியாபாரத்துக்குப் பேர்போன ஓர் துறைமுகப்பட்டணம். மகமதியரல்லாதவர்களுக்குள் நம்மூடைய ஊழியம் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறி வருகிறது. 56 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். நமது மிஷன் ஆலயமொன்றிருப்பதுடன், கிறிஸ்தவர்கள் வசிக்குமிடத்திலும் ஓர் ஜெபவீடு கட்டியிருக்கின்றனர். அதில் மாலை வேளையில் ஓர் பிரசங்கம் செய்தேன். சூலாய் 24ஃ 37 பேருக்கு திடப்படுத்தல் ஆராதனை நடத்திவிட்டு, சாலைக்குளம் போய், அங்கேயும் 32 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன்.

சூலாய் 25ஃ மடத்தாகுளம் சேர்ந்தோம். இது உத்தேசம் 300 கிறிஸ்தவர்கள் கொண்ட ஓர் கிராமம். இங்கு ஓர் உப்பளமிருக்கிறது. அதில் அநேகர் வேலை செய்கிறார்கள். புது ஆலயம் ஒன்று கட்ட அஸ்திபாரம் போட்ட வண்ணமாய் நிற்கிறது. தற்சமயம் அதை முடிக்கப் போதுமான பணமில்லை. பணம் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைக்குறித்து ஆலோசித்தோம். 76 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன். கனத்த மழையினால் பிரயாணம் தடைப்பட்டு, கூட ஒரு நாள் அங்கே தாமதித்து, சூலாய் 27ஃ வீரம்பல் சேர்ந்தோம். இது ஓர் பெரிய கிறிஸ்தவ கிராமம். குடிகளில் அநேகர் பிழைப்புக்காக ரங்கூனுக்குப் போகிறார்கள். இங்கே 45 பேர் திடப்படுத்தல் பெற்றார்கள். இங்குள்ள ஜனங்களுக்கு ஒரு கோவில் கட்டவேண்டுமென்ற ஆவலதிகம். இப்பாகத்தில் அநேக இடங்களிலிருக்கிறதுபோலவே இந்த ஊராருக்கும் உபத்திரவமுண்டு. கிறிஸ்தவர்கள் அதிகத் தன்பப்படுகின்றனர். நாம் அவர்களுக்காக அநுதாபத்துடன் ஜெபிப்போமாக.

சூலாய் 30ஃ ஒய்வுநாளை ராமநாதபுரத்தில் செலவிட்டேன். 67 பேர் திடப்படுத்தல் பெற்றார்கள். இங்குள்ள மிஷன் ஸ்தாபனங்களைப்பற்றி நான் முன்னமே என்னுடைய தின வர்த்தமானக் குறிப்பில் எழுதியாயிற்றுதலால், மறுபடியும் எழுத அவசியமில்லை. இந்த ஜில்லாவில் சுவிசேஷ ஊழியத்தைஸ்திரப்படுத்துவதவசியமென்றும் அப்படிச்செய்யின், சபையின் தொகை அதிகரிக்குமென நம்ப இடமுண்டென்றும் என் மனதில் பட்டது. ஸ்திரப்படுத்துவதென்றால், எவ்

விடங்களிலும் செய்கிறபடி சம்பளம் பெற்ற ஆசாமிகளை ஏற்படுத்துவது மாத்திரமல்ல, ஆண்களும் பெண்களும் வேதாகம ஆராய்ச்சிக் கூட்டங்கள் வைத்து, கிறிஸ்துமார்க்கத்தை தங்கள் அயலகத்தாருக்குத் தாங்களே புகட்டத்தக்கதாய் தங்களை ஆயத்தம்பண்ணிக் கொள்ளவும் வேண்டும். நான் 130 மைல் தூரம் எவ்வித அசௌரியமுமின்றி வண்டியில் பிரயாணம் செய்தேன். கனம் D. S. பாக்கியநாதன் ஐயரவர்கள் செய்த சிறந்த ஏற்பாடுகளுக்காக அவர்களுக்கு அதிக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாளையங்கோட்டையில் சில நாட்களைக் கழித்தபின், ஆகஸ்ற்றுமீ 5ஃ தட்டப்பாறைக்கப்பால் 19 மைல் தூரத்திலிருக்கும் குளத்தூருக்குப் போனேன். இங்கே ஒரு ஆலயமும் பள்ளிக்கூடமுமுண்டு. ஆனால் கிறிஸ்தவர்களின் தொகை அதிகமல்ல. ஆகஸ்ற்றுமீ 6ஃ மூன்று மைலுக்கப்பாலிருக்கும் வேப்பலோடையில் பிரசங்கம் செய்தேன். இங்குள்ள இந்துக்கள் தங்களுடைய பள்ளிக்கூடத்தை மிஷனுக்குச் சேர்த்துக்கொள்ளக் கேட்டுக்கொண்டார்கள். அப்படிச் செய்யலாமென நம்புகிறோம். பிற்பகலில் குளத்தூரில் 34 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தேன். ஆகஸ்ற்றுமீ 7ஃ சிறுவரின் மனமகிழ்ச்சிப் பண்டிகை நடத்திவிட்டு, மாலையில் 7 மைல் தூரத்திலுள்ள குஞ்சியாபுரம் சேர்ந்தோம். அது கடற்கரையோரமாயுள்ள நல்ல இடம். இங்கே ஒரு ஜெபவீட்டுக்கு அஸ்திபாரம் போட்டேன். சிறுவர் ஆராதனையும் நடந்தது. மத்தியானத்துக்கு மேல் 19 பேரைத் திடப்படுத்திவிட்டு, கடற்கரையில் 3 மைலுக்கப்பாலுள்ள வேம்பார் என்னும் கிராமத்துக்கு கால்நடையாய்ச் சென்றோம். இது ரோமான் மார்க்கத்தாருடைய ஓர் முக்கிய ஸ்தானம். நமக்கு உத்தேசம் 90 ஜனங்களடங்கிய ஓர் சிறிய சபையுண்டு. எல்லாரும் ஒன்றுசேர்ந்து, மாலையில் காத்தை ஆராதித்தோம்.

ஆகஸ்ற்று 9ஃ தங்கம்மாள்புரம் சேர்ந்து ஒரு புது ஜெப வீட்டைப் பிரதிஷ்டை பண்ணினேன். இங்குள்ள இந்துக்கள் ஒரு பள்ளிக்கூடம் வைக்கும்படி வேண்டிக்கொண்டதை ஆதரிப்பதற்கேற்ற யோசனைகளும் சொன்னார்கள். அப்படியே ஒரு பள்ளிக்கூடம் திறக்கக்கூடுமென்று நம்புகிறோம். அதன்பின் ஒரு மைலுக்கப்பாலிருக்கும் சுரண்டை என்னும் கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ வீட்டைச் சந்தித்தபின் எதிரணைப்பட்டிக்குப் போனோம். அங்குமாலை ஆராதனை நடத்தி, கனம். வேதமுத்து ஐயரவர்களுடைய குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின் இரவு முழுவதும் பிரயாணம்செய்து குளத்தூர் சேர்ந்தோம். மறுநாள் ஆகஸ்ற்றுமீ 10ஃ மோட்டார் சைக்கிளேறி விளாத்திகுளம் சேர்ந்தோம். அன்று காலையில் திடீரென்று வைப்பாற்றில் வெள்ளமுண்டானதால் அதைக்கடப்பது கஷ்டமாயிற்று. அதன்பின் காலை ஆராதனை நடத்திவிட்டு, இரண்டு மைலுக்கப் பாலிருக்கும் பனையடிப்பட்டி என்னும் ஓர் சிறு கிராமம் சேர்ந்தோம். அங்கே ஒரு புது ஜெப வீட்டைப் பிரதிஷ்டை செய்து விட்டு நாகலாபுரத்துக்குப் போனோம். இது ஒரு கஸ்பா. இங்கே ஓர் நேர்த்தியான ஆலயமும் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் தனித்தனியே போர்டிங் பள்ளிக்கூடமும், ஒரு ஆஸ்பத்திரியுமுண்டு. பள்ளிக்கூடத்தைப் பெரிதாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களல்லாத மாணாக்கர்களுக்கு ஒரு ஆஸ்ற்றல் அவசியம். இங்கே 4 நாளிருந்தோம். ஒய்வுநாளில் சாதாரண ஆராதனை நடத்தி பக்கத்துக் கிராமமென்றில் பிரசங்கித்ததுடன், மிஷன் ஊழியருக்கு விசேஷித்த கூட்டங்களும் ஆராதனைகளும் நடத்தினேன். 55 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்து, ஒரு இந்துப்பையனுக்கு அவன் தகப்பனார் சம்மதத்தை எழுத்தில் வாங்கிக்கொண்டு ஞானஸ்நானம் கொடுத்தேன். இங்கிருக்கையில் ஆற்றங்கரை, வேலடிப்பட்டி, சித்தநாய்க்கன்பட்டி என்னும் கிராமங்களைச் சந்தித்தேன். சித்தநாய்க்கன்பட்டி சபையார் கட்டியிருக்கும் பக்கா ஆலயமொன்றைப் பிரதிஷ்டை செய்தேன்.

ஆகஸ்ற்றுமீ 11ஃ நாகலாபுரம் விட்டுப் புறப்பட்டு 40 மைல் தூரத்திலிலுள்ள சாயர்புத்தூர் சேர்ந்தோம். பழைய ஆர்க்கள், இடத்தில் ஜனங்கள் கட்டுகிற ஜெபம்பிடித்து அஸ்திபாரம் போட்டேன். மிஷனுடைக்கிற

டுக்குள் புதிய ஆலயமொன்றிருக்கிறது. ஆனால் ஊரிலே ஒரு ஆலயம் பிரமாய்க் கிடப்பது ஜனங்களுக்கு வருத்தத்தைக் கொடுப்பதால் அந்த நிந்தையை நீக்கிப்போடத் தீர்மானித்திருக்கிறார்கள். புதியம்புத்தூர், தட்டப்பாறை மற்றும் இடங்களிலுமுள்ள ஜனங்கள் பணம் சேர்க்கிறார்கள். அஸ்திபாரம் போடுகையில் மூலைக்கல்லில் பதித்த தகட்டுக்கு ரூ. 280 சென்றது. கனம். சிமண்ட்ஸ் அவர்களும் மற்றும் பேர்களும் பணம்சேர்க்க அரும் முயற்சி செய்கின்றனர். இந்த வேலை சித்திபெறும்படி நாம் அனுதாபத்துடன் ஜெபிப்போமாக. சாயர்புரம், கைலாசபுரம் இவ்விடங்களிலிருந்து குருமார் வந்திருந்தார்கள். இச்சமையத்தில் நமது இரண்டு மிஷன் களிலுமிருந்து வந்த ஸ்தானுபதிகளைக் கண்டது சந்தோஷமே. சாயங்காலத்தில் கனம். சிமன்ஸ் அவர்கள் வெகு அன்பாய் எனக்கு உபசரணைகள் செய்தார்கள். அதன்பின் பாளையங்கோட்டைக்குத் திரும்பினேன். 'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்' என்ற அபிப்பிராயமே இந்தப் பாகங்களைப்பற்றியும் என் மனதில் பட்டது. ஆகையால் இவ்விடங்களுக்கு அதிக ஊழியர் கிடைக்கும்படி ஜெபிப்போமாக.

கடந்த பெப்ருவரிமீ 29உ நாசரேத்தில் கூடின

திருநெல்வேலி புரோவின்சியல் சர்ச் கவுன்சல் நடபடிகளின் சுருக்கம்.

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பீடம் வகித்து, யுத்தத்தினால் கிறிஸ்துவின் ஊழியத்துக்குண்டாயிருக்கும் பலாபலன்களை எடுத்துச்சொல்லி, திருநெல்வேலிக்கு கனம். A. P ராண்டல் ஐயரவர்கள் புது மிஷனெரியாக வந்திருப்பதைக் கவுன்சிலாருக்குத் தெரிவித்துப் பின்னர், ஆலோசனைச் சங்கத்தின் சட்டங்களில் லெ தூதன மாறுதல்களையும் அவைகளின் முக்கியத்தையும் எடுத்துக் காட்டினார்கள். திருஷ்டாந்தமாக, பழைய சட்ட சங்கக்காணிக்கை ஜாஸ்தியாய்க் ஒருத்தருக்கதாக, லோக்கல் சர்ச் டிஸ்ட்ரிக்ட் சர்ச் கவுன்சல், திருநெல்வேலி மதுரை மத்தியாலோசனைச் சங்கங்களுக்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். ஆனால் தூதன சட்டத்தில் சபையின் தொகைக்கும் சபைச் சங்கத்துக்கும் தக்கதாக ஆட்கள் டி சங்கங்களுக்குத் தெரிந்தனுப்பப்படுவார்கள்.

I. மத்தியாலோசனைச் சங்கத்தின் சட்டங்கள் அத்தனையாய் மாறுதலடையவில்லை. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் எந்தக் கவுண்சிலுக்கும் போகலாம் என்ற சட்டம் தூதனம். ஆலோசனைச் சங்கங்கள் இரண்டு வருஷங்களுக்கு நடபடிக்கை செய்யலாம். புது மெம்பர்கள் தெரிந்துகொள்ளல் டிசம்பர்மாசத்தில் நடக்கும். ஆனால் நாளது வருஷத்தில் மத்தியாலோசனைச் சங்கத்து முதல் கூட்டம் செப்தெம்பரில் கூடத்தக்கதாக கவுண்சில்களுக்கு மெம்பர்களை உடனே தெரிந்து கொள்ள வேண்டியதவசியமென்று பேசித் தீர்மானிக்கப்பட்டது. கூட்டங்கள் கிரமப்படி ஒப்புக்கொள்ளப்பட்டன.

II. அத்தியக்ஷாதனத்தில் சுவிசேஷ ஊழியம் உற்சாகமாய் எப்போதும் நடைபெறத்தக்கதாக 'ஒருவாரத்து விசேஷித்த ஊழியம்' பொதுவாய்அவ்வாரத்துக்குப்பின் காண்ப்படும் தளர்ச்சிக்குக் காரணமாகுமென்று முதலாளியவர்கள் சொல்லி, மனேற்சாகமாய் எப்போதும் இவ்ஊழியத்தைத்தாளுய்ச் செய்யத்தக்க சபையார் எழும்பி, நிலையான விதமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்றுவற்புறுத்தினார்கள். அதோடு இவ்விஷயத்தை விசேஷித்துக் கவனிக்கத் தக்கதாக எஸ். பி. ஜி சேகரத்தில் அடியிற் கண்டவர்களை ஓர் கமிட்டியாக ஏற்படுத்தியிருக்கிறது.

கனம். ஜே. மனுவேல் ஐயரவர்கள் நாகலாபுரம்
" D.M. ஞானசிகாமணி " பிரசங்கக்கூட்டம்.
" P. S. பீற்றர் " இடையன்குடி
" D. S. பாக்கியநாதன் " ராமநாதபுரம்
" D. பாக்கியநாதன் " புதியம்புத்தூர்
" W. E. இவான்ஸ் " தூத்துக்குடி [Convener

மகா-ள-ள-ஸ்ரீ D. தேவவரம் அவர்கள் நாசரேத்

48-ம் சங்கீதம்.

மற்றின் சங்கீதங்களைபோல இதுவும் சனகெரிப்பின் சேனையின் முற்றிகையிலிருந்து எருசலேம் நகர் இரட்சிக்கப்பட்ட சம்பவத்தைக் கொண்டாடிப் பாடின ஓர் தனி கீதம். இவ்வற்புத விடுதலையை சீயோனுக்கு அளித்த யேஹோவாவை 46-ம் 47-ம் சங்கீதங்களிலும், அவ்விடுதலையைப் பெற்ற சீயோனை 48-ம் சங்கீதத்திலும் புகழ்ந்து பாடியிருக்கிறது. சீயோன் திருச்சபைக்கு அடையாளம். சீயோனின் ஜெயத்தைத் திருச்சபையின் ஜெயத்திற்கு ஒப்பிடலாம். சீயோனின் அலங்காரமும், மகிமையும், திருச்சபையின் அலங்காரத்துக்கும் மகிமைக்கும் ஒத்திருக்கிறது. அதின் மகிமைக்கு இரகசியம் அதில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் (1 கொ. 3:16). இதகாரணத்தினாலேயே இக்கீதம் பரிசுத்த ஆவியின்பண்டிகையில் வாசிக்கப்படுகிறது.

இதில் நாலு சரணங்கள் அடங்கியிருக்கின்றன.

I. முகவுரை. வா. 1—3.

யேஹோவா பெரியவர்! மிகுந்த துதிக்குப் பாத்திரர்.
நமது தேவனுடைய நகரமே, அவரது பரிசுத்த பர்வதம்!
வடதிசை சீயோன் மலை பார்வையில் அலங்காரம்-சர்வ பூமிக்கும் மகிழ்ச்சி.
அதுவே மகாராஜாவின் நகரம்—; அதின் அரமனைகளிலே,
உயர்ந்த கோட்டையாக அறியப்பட்டிருப்பவர் தேவனே.

இச்சரணத்தில் சுருக்கிச் சொல்லியிருக்கும் தாற்பரியத்தைப் பொழிப்புரையாக வரைந்தால், பொருள் பிடிபடும்:-"யேஹோவா பெரியவர், அவரே துதிக்கப்படத்தக்கவர். சீயோன் நகரத்தின் காரியத்தைப் பார்த்தால், அவரே மிகுந்த துதிக்குப் பாத்திரர். சீயோன் மலை தேவ பர்வதம். இதை அவர் தங்கும் பரிசுத்த மலையாகத் தெரிந்தெடுத்துக்கொண்டார். யேஹோவா நிவாச பர்வதம் இதுவே. வடதிசையாகநோக்கில், பார்வைக்கு சீயோன் மலை எத்தனை சிறப்பானது! பூலோகத்தார் யாவரும் பார்த்து அகமகிழ்ந்து பூரிக்கும் சிங்கார நகர் இதுவே! ராஜாதி ராஜாவின் நகரமாயிருக்க இது ஏற்றதுதான். ஆயினும், அது நிற்கும் ஸ்தானமல்ல, சிங்காரம் பொருந்திய அதின் கூட கோபுரங்கள் மாட மாளிகைகளல்ல, அதின் அரணன கோட்டைகளுமல்ல—அதில் வாசமாயிருக்கச் சித்தங்கொண்டகர்த்தரே அதற்குப் பெலன். அவரே அதற்கு அரண்!"

திருச்சபை தேவனுடைய ஆலயம். அது தேவ நகர். அது சர்வ பூமியின் மகிழ்ச்சி. ஆனல் அதின் பெலன் 'எது வென்றல், அதில் சேர்ந்திருக்கிறவர்களின் கல்வியும், ஐசுவரியமும், பக்தியுமல்ல-அதில் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரே.

II. திருஷ்டாந்தம். வா. 4—8.

இதோ! ராஜாக்கள் கூடினார்கள், ஏக மாய்க் கடந்துவந்தார்கள்;
கண்டார்கள், பிரமித்தார்கள், கலங்கினார்கள், ஓட்டம் பிடித்தார்கள்!
அங்கே நடுக்கம் அவர்களைப் பிடித்தது!
பிரசவ ஸ்திரீயின் வேதனை அவர்களைப் பிடித்தது!
நீர் கீழ்காற்றினால் தர்ஷீசின் கப்பல்களை உடைக்கிறீர் (அல்லவா)?
சேனைகளின் யேஹோவாவின் நகரத்திலே--நமது தேவனுடைய நகரத்திலே-
நாம் கேள்விப்பட்ட பிரகாரமே, கண்ணாரக் கண்டோம்!
தேவன் அதை என்றென்றைக்கும் ஸ்திரப்படுத்துவார்!

சனகெரிப்பின் சேனைக்கு வந்த கரசம் வெகு அலங்காரமாய் இச்சரணத்தில் வர்ணிக்கப்படுகிறது. "பூலோக ராஜாக்களும் அவர்கள் சேனைகளும் ஏகமாய்க் கூடிவந்து, நகருக்குச் சமீபமாகப் பாளையம் போட்டார்கள். அவர்கள் முடிவென்ன? ஓர் பூர்பெற்ற சேனவீரன்—"வந்தேன், கண்டேன், ஜெயித்தேன்"-(Veni, Vidi, Vici.) என்று சொன்னதுபோலிருந்ததோ? அல்ல, அல்ல. வந்தார்கள், கண்டார்கள், ஆச்சரியப்பட்டார்கள், திகில் கொண்டார்கள், பயந்தார்கள், நடுங்கினார்கள், ஓட்டம்பிடித்தார்கள்! தர்ஷீசின் கப்பல்களை உடைக்கிற

வல்லமையுள்ள தேவனுடைய நீர் இவர்களையும் சின்னபின்னமாகப் போகப்பண்ணினீர். பூர்வகாலத்தில் தேவரீர் உமது ஜனங்களுக்கு அற்புத விடுதலையளித்ததாகவும், அவர்கள் சத்துருக்களை அதிசயமாய் அழித்ததாகவும் எங்கள் பிதாக்கள் அறிவிக்க, எங்கள் காதுகளாலே கேட்டிருக்கிறோம். இப்போதோ அதேவிதமான அதிசயக்களை நீர் தற்காலத்திலும் செய்கிறதை எங்கள் கண்ணாரக் கண்டோம். இவ்வாறு இந்த நகரத்தை இப்பொழுது ரட்சித்த தேவனுடைய நீர் இனிமேலும் என்றென்றைக்கும் அதைப் பாதுகாப்பீர் என்பது நிண்ணம்" என்று சங்கீதக்காரன் பாடுகிறான்.

திருச்சபைக்கு விரோதமாகவும் எத்தனையோ கணக்கற்ற சத்துருக்கள் எழும்பினபோதிலும், அற்புதமாகத் தேவன் அதைக் காப்பாற்றிவருகிறார். யூத சபையைக் காப்பாற்றினதுபோலவே, கிறிஸ்து சபையையும் காப்பாற்றிவருகிறார். இதற்குமுன் பாதுகாத்தவர், இன்னும் பாதுகாப்பார்.

III. துதி: வா: 9—11.

தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே உமது கிருபையைத் தியானித்திருக்கிறோம்.
தேவனே உமது நாமத்தைப்போல உமது துதியும் பூமியின் எல்லைகள் வரைக்கும் செல்லும்.
உமது வலது கரம் நீதியால் நிறைந்திருக்கிறது.
உமது நியாயத்தீர்ப்புகளினிமித்தம் சீயோன் பர்வதம் மகிழ்வதாக!
யூதாவின் குமாரத்திகள் களிகூறுவார்களாக!

ஜெயம் உண்டானபின் சங்கீதக்காரன் தேவனுடைய ஆலயத்துக்குட்பிரவேசித்து, தேவன் செய்த மகத்துவக் கிரியையைச் சிந்திக்கிறான்; சிந்தித்து, தேவன் தங்கள் சத்துருக்களுக்குச் செய்த நியாயத்தீர்ப்புகளினிமித்தம் எருசலேமியர் சந்தோஷித்து, மகிழ்ந்து தேவனைத் துதிக்கும்படி ஏவுகிறான். எருசலேமியர் மாத்திரமல்ல, பூமியின் எல்லைகளெல்லாம் உம்மைத் துதிக்கும் என்கிறான். நீர் நடப்பித்த இந்த மகத்துவக் கிரியையை பூமியின் எல்லைகளெல்லாம் கேட்கும்; கேட்டு உமது நாமத்தை ஸ்தோத்திரிக்கும். உமது நாமம் எங்கெங்கே விளம்பப்படுமோ, அங்கெங்கெல்லாம் உமது துதியும் தொனிக்கும் என்கிறான்.

திருச்சபைக்குத் தேவன் பாராட்டும் கிருபைகளிலுல் அவர் திருநாம சங்கீர்த்தனம் உலகமெங்கும் செல்லவேண்டியதவசியம்.

IV. சாட்சி. வா. 12—14.

பின்வரும் சத்தியத்திற்கு நீங்கள் விவரிப்பதற்காக—

சீயோனைச்சுற்றி நடந்துவந்து,
அதின் கோபுரங்களை எண்ணுங்கள்!
அதின் கொத்தளங்களை நன்றாய்க் கவனித்து,
அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்!
இந்த தேவனே சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்!

மூற்றிக்கையிலுல் பட்டணத்தின் மதிலுக்குள்ளடைப்பட்டு வெளியேறமுடியாதிருந்த ஜனங்களைப் பார்த்து, இவ்வார்த்தைகள் கூறப்படுகிறது. "வெளியேறுங்கள், நகரைச்சுற்றிலும் நடவுங்கள். சனகெரிப்பின் மனுஷர் கோபுரங்களை எண்ணிக் கணக்கிட்டுப்போனார்களே (ஏசா. 33: 18). தீங்குகளும் போய் எண்ணிப்பாருங்கள். ஏதாகிலும் குறைந்திருக்கிறதோ? இல்லையே. ஒருவேளை உங்கள் பலமான கொத்தளங்களிலுல் கோபுரங்களும் அரமனைகளும் இவ்வாறு பாதுகாக்கப்பட்டதென்று நினைக்கிறீர்களோ? கொத்தளங்களையும் அரமனைகளையும் உற்றுப்பாருங்கள்! அவைகள் எண்ணத்துக்காகும்? அல்ல, அல்ல. இவ்விதமான அற்புத விடுதலையை அளித்தவர் உங்கள் தேவன்! தலைமுறை தலைமுறையாய் இதைத் தெரிவியுங்கள்! இது அவர்கள் விசுவாசத்தையும் பலப்படுத்தும். இந்த தேவனே சதாகாலங்களிலும் நம்முடைய கரமில் வாசம்பண்ணும் நித்திய தேவன்" என்கிறார்.

திருச்சபையின் பலத்துக்கும் காரணம் அதின் நடுவில் தங்கும் ஆவியானவரே. அவர் நடப்பிக்கும் மகத்துவ செயல்களையும் நன்றியுக் கவனித்து, தலைமுறை தலைமுறையாகச் சாட்சி சொல்லுவோமாக. இந்த தேவனே யுகாயுகங்களாய் நமக்கும் தேவன்.

இந்தியாவின் அப்போஸ்தலன் ஆகிய சீகன் பால் என்னும் மிஷனேரி.

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்."

பலவீனமானதும் சுகக்கேடு நேரிடக்கூடியதுமான இளமைப்பிராயத்தைத்தாண்டி, கட்டமைந்த தேகத்தோடும் பலத்தோடும் புருஷப்பிராயத்தில் ஜீவிக்கும்போது, மாதாவானவள் பிரசவகாலத்திலும், சிசுவைக் கண்வளராமல் வளர்த்துவந்த காலத்திலும், விட்ட கண்ணீரையும் அடைந்த கஷ்டங்களையும் மனதில் நினைக்கும் பிள்ளைகள் வெகு சொற்பப்பேர்தான். கிறிஸ்துவின் திவ்விய ஒளியில் ஜீவித்து, அவரின் திருவாய் மொழியான வேத வசனத்தை நமது சுயபாஷையில் வாசித்து, அஞ்ஞானமாகிய ராட்சதனைத் தாக்கும்படியான வலுவைப் பெற்றுக் கிறிஸ்துவுக்குள் புருஷராய் இருக்கிற இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவுக்குள் நம்மைப்பெற்றுப் புருஷராக்கிவிட்ட மிஷனெரிமாரையும் அவர்கள் விட்ட கண்ணீரையும் அடைந்த கஷ்டங்களையும் நினைக்கவேண்டும். கர்த்தருடைய பந்தியில் பயபக்தியோடு "உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன அடியார்" எல்லாரையும் நினைக்கும்போது, அவர்களுக்காக நாம் அவருடைய "பரிசுத்த நாமத்தைத் துதித்து, அவர்களோடுகூட நாமும் பரம ராஜ்யத்தில் பங்குபெறும்படி, அவர்கள் காட்டிய நல்மாதிரியைப் பின்பற்ற எங்களுக்குக் கிருபைசெய்தருளும்" என்று ஜெபிப்போமாக.

அப்படியானுல், அவர்கள் கண்ணீரோடு விதைத்த பயனை நாம் கெம்பீரத்தோடு அறுப்பதுபோல, நம்முடைய பின்சந்ததியாரும் கெம்பீரமாய் அறுக்கக்கூடிய பயனை நாம் கண்ணீரோடே விதைப்பதற்கு எவப்படுவோம்.

சரித்திர காலங்களுக்கு முன்னமேயே இருந்து அறிவீனத்திலும் அஞ்ஞானத்திலும் முழுகிக்கிடந்த இந்திய தேசத்திற்கு, உலக ஜோதியின் கதிர்களைத் திருப்பி, மிஷனெரிமார் மகிமையின் ராஜாவோடு உட்பிரவேசிப்பதற்கு, அடைபட்டுக்கிடந்த அநாதி கதவுகளைத் திறந்த தைரிய நெஞ்சனை அப்போஸ்தலன் சீகன்பால் என்பவர்.

இருநூற்று நாலு வருஷங்களுக்குமுன் ஜெர்மனி தேசத்தில் ட்ரெஸ்டன் நகர் சமீபத்தில் பல்ஸ்னிற்ஸ் என்ற ஊரில் ஒரு இருட்டறையில் தகப்பனற்ற ஆறுவயதுள்ள ஒரு சிறுவனும், அவனுடைய மூத்த சகோதரி, மாரும் ஏங்கி ஏங்கி அழுதுகொண்டு, மரணப்படுக்கையில் இருந்த தாயார்ச் சுற்றிநின்று கொண்டிருந்தார்கள். கஷ்டத்தோடு எழும்பிக்கொண்டு, சாகும் குரலோடு "என் கண்மணிகளே, ஒரு பெரிய விலைபெற்ற திரவியத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்" என்று தாய் சொல்ல, மூத்த மகள் தாயினுடைய காதுக்குள் "அது என்ன?" என்று கேட்டாள். "என் வேத புஸ்தகத்தைத் திறந்துபாருங்கள்; அதின் ஒவ்வொரு பக்கமும் என் கண்ணீரால் நனைந்திருக்கும்" என்று தாய் சொல்லி கண்ணை மூடினுள். அந்தக் கண்ணீர் காட்சி இந்தச் சிறுவனுடைய மனதைவிட்டு ஒருநாளும் நீங்கவில்லை. ஆறுவயதிலேயே அநாதபிள்ளையாய் விடப்பட்ட கேன்பால் என்னும் சிறுவனை மூத்த சகோதரி தாய்போல் பராமரித்துவந்தாள்.

கேன்பால் தன் சொந்த ஊராகிய பல்ஸ்னிற்ஸ் என்னும் இடத்திற்குச் சமீபமான ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். பிதினுலு பிராயமானபோது ஹைஸ்கூலுக்கு அனுப்பப்பட்டார். அங்கே படிக்கும்போது இவருக்கு சங்கீத வித்தை (Music) யின் பேரில் அதிகமாய் மிதமிஞ்சின ஆசை உண்டானது. ஒருநாள் சங்கீத வகுப்பில், இவருக்கு மூத்தவரான ஒரு மாணுக்கர் மிக சாதுரியமாய் ஒரு பிரசங்கம் செய்தார். அதின் பொருள் என்னவென்றுல் 'ஆவிக்குரிய ஜீவியம் சங்கீத இனிமையுடையதென்பதும், தெய்வத்திற்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் (ஆதியில் அற்றுப்போயிற்றென்றுலும்) சங்கீத ஒற்றுமையுடையதென்பதுமே.' சங்கீதத்தின்பேரில் பேராசையுடைய இவருடைய மனதில் அந்தப் பொருள் ஆழமாய்ப் பதிந்தது. அவ்வித ஆவிக்குரிய ஜீவியமும், அவ்வித தெய்வ சம்பந்தமும் தன்னுடைய

ஜீவியத்தில் தோன்ற ஆசைப்பட்டார். அந்த மாணாக்கரோடு சிநேகிதராகி, இருவருங்கூடி தினந்தோறும் வேத வசனத்தை வாசித்து ஜெபஞ்செய்துவந்தார்கள். இக்காலத்தில் தான் தன் தாயார் மரணநேரத்தில் சொன்ன வார்த்தைகளின் கருத்தை அறிந்தார். அவர் கள் மரணசாதனமாக வைத்துப்போன வேத வசனம் விலையேறப்பெற்ற பொக்கிஷந்தான் என்று உணர்ந்தார். உணர்ந்து, தன் ஜீவி யத்தில் அதை உபயோகப்படுத்திவந்தார். இன்னமும், சுவிசேஷ ஊழியத்தையே தன் ஜீவிய ஊழியமாகச் செய்யத் தீர்மானித்தார். அதற்காக ஹால் யூனிவர்சிற்றி (Halle University) யைச்சேர்ந்து, ப்ராங்க் வித்தி யாசிரியர் (Prof. Francke) கீழ் பயின்று வந்தார். திடீரென்று அவருடைய சுகம் கெட்டு, வியாதியில் விழுந்ததனால் தான் தெரிந்துகொண்ட ஊழியம் கடவுளுக்குச் சித்தமில்லையோ? என்றும், அல்லது அதற்கு வேண்டிய திறமை இல்லையோ? என்றும் சந்தேகித்து, டாக்ட்டர் ப்ரய்தாப்ற் (Dr. Breithaupt) என்னும் பேர்போன ஞானியிடத்திற் போய் ஆலோசனை கேட் டார். அதிகத் திறமைவேண்டியதல்லாத ஒரு ஊழியம் செய்யக்கூடிய இடத்தைக் காண்பிக்கவேண்டும் என்று அவரிடத்தில் கேட்டார். அதற்கு மறுமொழியாக அவர் 'அஞ்ஞானிகளின் மத்தியிலிருந்து ஒரு ஆத்து மாவைக் கர்த்தரண்டைக்கு நடத்துவது கிறிஸ்தவர்கள் நூறுபேரைக் குணப்படுத்துவ தற்கு சரி. எனென்றால் கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் கணக்கற்ற சிலாக்கியங்களில் ஒன்றுகூட அஞ்ஞானிகளுக்கில்லை' என்று சொன்னார். இந்த வார்த்தைகள் அவர் இரு தயத்தில் அதிக ஆழமாய்ப் பதிந்தன. இந் தியாவுக்கு இவரைச் செலுத்தின எவதற் கருவி இவ்வார்த்தைகளே. இதற்குப்பின் தெய்வ சித்தத்திற்குக் காத்திருந்து, வெவ் வேறு ஊழியங்களை நடத்திவந்தார்.

1621-ம்ஞ டென் மார்க்கு தேசத்துக் குடிகளான டேனியர் இந்தியாவோடு வியா பாரம் நடத்தத் தொடங்கி தஞ்சாவூர் ராஜாவினு டைய அனுமதியின்பேரில் 15 சதுரமையில் விஸ்தாரணமுள்ள தரங்கம்பாடி என்னும் இடத்தைத் தங்கள் வியாபாரப் பட்டணமாக் கினார்கள். தங்கள் வர்த்தகக்கோட்டை யோடுகூட தங்கள் ஆராதனைக்கென்று ஒரு ஆலயத்தையும் கட்டினார்கள். வர்த்தகம் வெகு மும்முரமாய்ப் பரவி, அநேக ஜனங் கள் அவ்விடத்திற் குடியேறினார்கள். ஆனா லும் சுதேச ஜனங்கள் கிறிஸ்துவை அறிய வேண்டும் என்ற எண்ணம் ஒருவருடைய மனதிலும் இடையாது.

நாலாம் ப்ரட்ரிக் என்னும் அரசன் சிம்மா சனம் ஏறியபோது அவருடைய இந்திய குடிகள் சுவிசேஷத்தை அறிய ஏற்பாடு செ ய்யவேண்டும் என்று பக்தர் ஒலர் கேட்ட வேண்டுகோளுக்குச் செவிகொடுத்து, இவ் விதகாரியமாய்ப் போகக்கூடியது யார் என்று விசாரிக்கக் கட்டளை கொடுத்தார். டென் மார்க்கு தேசம் முழுவதிலும் ஒருவர்கூடக் கிடைக்கவில்லை. உடனே அதிக அங்கலாய்ப் போடு அவ்வரசன் "அப்படியானால் ஜெர் மனி தேசத்திலாவது கிடைக்கக்கூடுமா?" என்று விசாரித்தார். ஜெர்மனியிலும் டென் மார்க்கிலும் உள்ள பெருந்திறமையுடையோ ரான புக்தர் சேகன்பாலே மகத்துவமான அவ்வூழியத்திற்குத் தகுந்தவர் என்று தெரிந் தெடுத்தார்கள். கர்த்தருடைய வேலை வந்த தென்று உணர்ந்து, அவரும் உடனே தன் சிநேகிதரான ஹென்ரி பலூட்ஷா (Henry Plutchau) என்பவரோடு ஜெபத்தோடு ஆலோசித்து இருவரும் தங்களை ஒப்புக்கொ டுத்தார்கள். டென்மார்க்கு அரசர் அவர்களை மிகுந்த பட்சமாய் ஏற்றுக்கொண்டார். ஆனால் வேறெருவரும், அத்தியட்சமார்கூட, இவர் களை எனென்றும் கேட்கவில்லை. இதினால் மனச்சோர்வு சிறிதும் இல்லாமல், இருவரும் 1705-ம் வருஷம் நவம்பர்மீ 24-ம் தேதி கப்பல் ஏறி, அடுத்த வருஷம் ஜூலாய்மீ 9-ம் தேதி தரங்கம்பாடியில் வந்துசேர்ந்தார் கள். இரண்டு நாட்களாய்ப் படகுகள் வந்து கொண்டேயிருந்து, எல்லாரையும் கரை கொண்டு சேர்த்தது. இவர்களோ தனிமை யாய்க் கப்பலில் விடப்பட்டார்கள்.

கடைசியாக வேறெரு கப்பல் தலைவன் இவர்கள்பேரில் இரக்கங்கொண்டு, தன் கப்ப லுக்குக் கொண்டுவந்து பிறகு கரைசேர்த் தான். கரையில் இவர்களை விழுவதாரும்

விசாரிப்பாருமே கிடையாது. கவர்னர் நேரில். இவர்களைப் பார்க்குமளவில், பட்ட ணத்திற்கு வெளியேதான் இருக்கவேண்டு மென்று கட்டளையிடப்பட்டது. பகல் சாய்ந் துவருகிற வேளைமட்டும் காத்திருந்த இவர் கள் வெகுநேரத்திற்குப் பிறகு கவர்ணைக் கண்டார்கள். உடனே அரசருடைய கையெ ழுத்தாகப் பெற்றிருந்த அனுமதிப் பத்திரங் களைக் காட்டினார்கள். கவர்ணர் சுருக்கமாய் "உங்களுக்கு ஒன்றும் என்னால் செய்யமுடி யாது. நேற்காலத்தோடே நீங்கள் வந்த வழியே சுயதேசம் போய்ச்சேருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பரிவாரத்தோடே திரும்பிப் போய்விட்டார். இருட்டுகிறவேளையில், கவர் ணருடைய ஆட்களில் ஒருவன் தன் மாமனு ருடைய வீட்டிற்கு இரண்டுபேரையும் அழைத்துப்போய் இராத்தங்குவித்தான். இதின் இரகசியம் என்னவென்றால், டென் மார்க்கு அரசருக்குத் தன் இந்திய குடிகள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற பிரியம் இருந்தாலும், தேசத்தின் பெரி யோருக்கு அது சற்றும் பிரியமில்லை. ரகசி யமாய் அதைக் குலைத்துப்போடும்படியும் பிர யத்தனம் செய்தார்கள். அரசனுக்குத் தெரி யாமலே தரங்கம்பாடி கவர்ணருக்கு எழுதி, மிஷனெரி வேலையைத் தடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கொஞ்ச நாளைக்கப்புறம் சேகன்பாலும் அவர் உடன் ஊழியரும் அஞ்ஞானிகளின் குடியிருப்புக்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட் டில் தங்கிக்கொள்ள உத்தரவு கொடுக்கப்பட் டது. உடனே சேகன்பால் தமிழ்ப்பாஷை படிக்க ஆரம்பித்தார். புஸ்தகங்களும் வாத்தி யாரும் கிடைக்கக்கூடாமல், பள்ளிக்கூடம் வைத்து நடத்திவந்த ஒரு மலையாளத்து வாத் தியாரைத் தங்கள் வீட்டிலேயே பள்ளிக் கூடம் வைத்துக்கொள்ள ஒழுங்குசெய்தார் கள். பள்ளிப்பிள்ளைகளைப் போலவே இவர் களும் மணலில் சம்மணங்கூட்டி, உட்கார்ந்து கொண்டு விரலினால் மணலில் அட்சரங்களை எழுதிப் படித்தார்கள். (ஆ! விந்தையான காட்சி!). ஜனங்களோடு அதிகமாய்ப் புழங்கி சில மாதங்களுக்குள்ளாக இவ்வீரன் நன் றாய்த் தமிழ்ப்பாஷை படித்துக்கொண்டார். உடனே ஓலை ஏட்டுப் பிரதிகளை எராளமாய் விலைக்குவாங்கி, அவைகளை மகா கவனத் தோடு படித்துவந்தார்.

அக்காலத்து வழக்கப்படியே, பஞ்சகாலங் களில் தங்களையே டேனியருக்கு விற்றுப் போட்ட அநேக அடிமைகளை, கவர்ணருக்கு விண்ணப்பம் செய்து, தங்கள் வீட்டிற்கு ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரம் வரவழைத்து அவர்களுக்குப் போதித்தார்கள். மிஷனெரி மார் வேலையை எல்லாவிதத்திலும் கைகொ டுத்து நடத்தும்படி திட்டமாய் இப்பொழுது ராஜ கட்டளையைப் பெற்ற கவர்ணர் எதிர் பேசாமல் இவர்கள் வேண்டுகோளுக்கு இடங் கொடுத்தான். சேகன்பால் வந்துசேர்ந்த பத்தாம் மாதம் ஐந்து அடிமைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அதே வருஷத்தில் ஒரு சிறு ஆலயம் கட்டி முடித் தார்கள். மிகுதியான பணக் கஷ்டத்தோடு 'எருசலேம்" என்ற அந்த ஆலயம் கட்டப் பட்டது.

துவக்கத்திலிருந்தே பாலியனையும் வாலி பனையும் அதிக சிரத்தையோடும் கவனத்தோ டும் நடத்திவந்தார். பாலியனை சன்மார்க்க பாதையில் நடத்தினால் மட்டுந்தான் எந்த தேசமும், ஜாதியும், சபையும், குடும்பமும் செழித்தோங்கும் என்பது சேகன்பாலுடைய உறுதியான கோட்பாடு. (இதை மனதில் வைத்து, இவ்விதமாய்ப் பாலியனைக் கவனிக் கும் தெய்வ ஊழியரும், மிஷனெரிகளும் எத்தனைபேர்?). பாலியருக்கென்று பள் ளிக்கூடங்கள் நடத்தி அவைகளிற் பிள்ளை களை பக்தியின் பாதையில் பழக்கிவந்தார்.

இதற்குள்ளாகத் தமிழ்ப்பாஷையில் சிறந்த வித்துவானாகி, மார்க்க சம்பாஷணை கள் செய்ய ஆரம்பித்தார். வடக்கே நூறு மைலுக்கு அங்கே உள்ள சென்னைபட்டணம் மட்டும் போய் (அக்காலங்களில் ரெயில்வண்டி கள் கிடையாது. பல்லக்குகளும், மாட்டு வண்டிகளும் தான்), தாமாக எழுத்தாணி கொண்டு எழுதிய ஓலைவட்டு சுவிசேஷங்க ளைக் கொடுத்துக்கொண்டு வந்தார். அநேக பிராமணர்களோடு தர்க்கங்கள் செய்து, பழக்கம் பெற்றார். ஆனால் மோசங்களும் இருந்தன. இவர் பேரில் கடும் மூர்க்கங்

கொண்ட பூசாரி ஒருவன் இவர் ஒரு தனி மையான இடத்தில் நித்திரைசெய்துகொண் டிருந்த சமயத்தில் இவரைக் கொலைசெய்யும் படி வர, அதை அறிந்த ஒரு பள்ளிப்பையன் இவரை எழுப்பிவிட்டதினால் தப்பிக்கொண் டார்.

1708-ம்வருஷம் மிஷன் செலவுக்காக இரண்டாயிரம் ரூபாய் அனுப்பும்படி டென் மார்க்கு தேசத்திற்கு எழுதியிருந்தார்கள். ஒரு கப்பலில் ஆயிரம் ரூபாயும், இன்னொரு கப்பலில் ஆயிரமுமாக இரண்டு கப்பல்கள் புறப்பட, ஒன்று கடற் சேதமானது. அடுத் தது, பத்திரமாய்த் தரங்கம்பாடித் துறைமுகத் தில் வந்து சேர்ந்தது. ஜாமான்களை இறக் கும்போது பணம் இருந்த பொதி கடலுக் குள் விழுந்து எடுக்கமுடியாமலே போய்விட் டது. எழை மிஷனெரிமார் திகைத்தார் கள். சத்துருக்கள் பரியாசம்பண்ணினார்கள். ஆனால் எதிரிகளில் மத்தியில் இவ்விடரும் இருந்தார்கள். ஒரு தம்பிடி முதற்கொண்டு இல்லாமல் நியங்கிக்கொண்டிருக்கையில், அநேகர் மறுபடியும் பணம் வரும் வரையில் கடனுதவி தொகை கொடுத்தார்கள். தேவ னுடைய வசனம் சுயபாஷையில் ஜனங்க ளுக்குக் கிடைக்குமட்டும் சுவிசேஷ வேலை அதிகமாய் சித்திபெறாது என்பதை உணர்ந்த சீகன் பால் அதே வருஷத்தில் வேதத்தைத் தமிழ்ப்படுத்த ஆரம்பித்தார். இதோடுகூட வேறநேக விதமாய்க் கர்த்தருடைய வேலை மும்முரமாய் நடந்து வரும்போது, சாத்தான் கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் ஏற்படுத் திய தாசருக்கு விரோதமாகவும் தரங்கம்பாடி யின் அதிகாரிகளைக் கிளப்பிவிட்டான். அவர் களெல்லாரும் ஏகமாய் ஆலோசனை பண்ணி, ராஜ்யத்திற்கு விரோதமான கலகக்காரர் என்று பொய்யான குற்றத்தை ஏற்படுத்தி, இரு மிஷனெரிகளையும் நடுத்தெருவில் கை போட்டுப் பிடித்து, விலங்குமாட்டிக் கொடிய சிறைச்சாலையில் வைத்தார்கள். ஆதி மிஷ னெரிமாரை அற்புதமாய் சிறைமீட்டசர்வ வல்லவர், இவர்கள் சிறையையும் நாலு மாதத் திற்குள் நீக்கினார்.

அநியாயமாய் நடப்பிக்கப்பட்டு, நாலு மாதமாய் சிறையில் இருந்த சீகன் பாலைக் கண்ட சுதேசிகள் ஏகமாய்க் கையைத் தழு விக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் கள். இதோடு மிஷனெரிகள் ஒட்டம்பிடித்து விடுவார்கள் என்று திறந்த கண்களோடு காத் துக்கொண்டிருந்த எதிரிகள், 1709-ம் வரு ஷம் ஜெர்மனி டென்மார்க் இவ்விரண்டு தேசங்களிலிருந்தும் பணமும், மூன்று புது ஊழியரும் வந்து சேர்ந்ததைப் பார்த்து, 'இது என்னமாய் முடியுமோ' என்று சொல்லித் திகில்கொண்டு வெட்கமடைந்தார்கள். இது மட்டுமோ, மிஷனெரிமாருக்கு என்னென்ன உதவி தேவையோ அதையெல்லாம் உடனே கொடுக்கவேண்டுமென்று கண்டிப்பான ராஜ கட்டளை அதே கப்பலில் கவர்ணருக்கு வந்து சேர்ந்தது.

இந்த வருஷத்தில் இங்கிலாந்திலிருந்தும் இந்த மிஷனுக்குப் பணமும் அநேக அருமை யான புஸ்தகங்களும் அனுப்பப்பட்டன.

1710-ம் வருஷம் டென்மார்க் ஸ்வீடன் தேசங்களுக்கு யுத்தம் உண்டாகி, டேனியர் தோல்வியடைந்ததினால் அங்கிருந்து சொற் பப்பணம்தான் வந்தது. இதோடுகூட வெள் ளப்பெருக்குண்டாகி, மிஷன் சொத்து அதிக மான பாகம் அழிந்துபோனது. இச்சமயத் தில் S. P. C. K. சங்கத்தார் அதிகமான பணஞ்சேர்த்து, ஒரு அச்சு யந்திரமும் வாங் கித் தரங்கம்பாடிக்கு அனுப்பினார்கள். வெகு நாளாய் வறட்சியான தரைக்குத் தண்ணீர் எவ்வளவு அவசரமோ அவ்வளவாய் மிஷ னுக்கு ஒரு அச்சுயந்திரம் அவசரமாயிருந் தது. 1711-ம் வருஷம் மேமீ 31-ம் தேதி, "இந்தியாவின் மற்ற எந்தப் பொக்கிஷங் களைப்பார்க்கிலும் விலையுயர்ந்த பொக்கிஷம்" என்று கூறப்பட்ட புதிய ஏற்பாட்டுத் தமிழ்த் திருத்தல் முடிந்தது. அடுத்த வரு ஷம், ஜெர்மனி தேசத்தில் கைத்தொழிலில் மகா நிறமையுடைய ஒரு வாலிபன் தமிழ் அச்சு அட்சரங்களை உண்டாக்கி, தானும் தன் இளைய சகோதரனுமாக மிஷன் வேலைக் குத் தங்களை ஒப்புக்கொடுத்துத் தரங்கம்பாடி வந்துசேர்ந்தார்கள். உடனே தமிழ்ப் புதிய ஏற்பாடு அச்சிட ஆரம்பித்தார்கள். 1714-ம் வருஷம், சீகன்பால் சுகவீனப்பட்டு சுய தேசம் சென்றார். கடற் பிரயாணத்தில்

பழைய ஏற்பாட்டைத் தமிழ்படுத்திக்கொண் டிருந்தார். டென்மார்க் அரசர் இவரைத் தன் சமுகத்திற்கு அழைத்து ஐந்து மணி நேரம் மகா கவனத்தோடும் களிப் போடும் மிஷன் காரியாதிகளைக் கேட்டார். பின்பு ஜெர்மனிக்குத் தம் சொந்த இடங்க ளுக்குச்சென்று, விவாகம் செய்துகொண்டு, 1716-ம் வருஷம் ஆகஸ்ற்றுமீ இந்தியா வில் வந்து சேர்ந்தார். வந்ததும், சுதேச ஊழியரைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு போதக வகுப்பை உண்டாக்கினார். முந்தின கவர்ணர் சுயதேசம் அழைக்கப்பட்டு, மிஷன்பேரில் அநுதாபமுள்ள ஒரு கவர்ணர் ஏற்படுத்தப் பட்டார். சபை விரிவானதினால் முந்தின ஆலயம் காணுமல், "புது எருசலேம்" என்று ஒரு பெரிய ஆலயம், கவர்ணரவர்களால் அஸ் திபாரம் போடப்பட்டு, 1717-ம் வருஷம் கட்டிமுடிந்தது. அடுத்த வருஷம் சீகன் பால் அநேக இடங்களுக்குச் சென்று பிர சங்கஞ்செய்து, எல்லா மார்க்கத்தாருக்கும் அவரவருக்கேற்ற சுவிசேஷ பிரதிகளை அச் சிட்டுக் கொடுத்துவந்தார்.

இவ்வாறு ஏஜமானுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய் எண்ணப்பட்ட ஊழி யம் மனுஷனால் அங்கிகரிக்கப்படவில்லை. தாய்க் கமிற்றியின் செக்ரற்றரி இவர் வேலை யைக் கொஞ்சமும் கிரகிக்கக்கூடாமல், அநி யாயமாய்க் குறைகூறி ஒரு நிருபம் அனுப்பி னர். ஏற்கனவே பலட்சயப்பட்டிருந்த இவ ருடைய சரீரம், இதனால் முறிவடைந்து, 1718-ம் வருஷம் அக்டோபர்மீ வியாதிப் படுக்கையில் விழுந்தார். ஆனாலும் வருஷ முடிவில் சீற்று பலங்கொண்டு கிறிஸ்மஸ் தினத்திலும், வருஷப்பிறப்பு தினத்திலும் கர்த்தருக்குள் தான் பெற்ற பிள்ளைகளுக்கு ஆலயத்தில் பிரசங்கித்தார். பெப்ருவரிமீ 23-ம் தேதி காலையில் "அல்லும் பகலும் அருணோதயமாய் விளங்கும்" பரம காளன் சேர்ந்தார். தேவன் தாமே அவர் கண்ணீர் யாவையும் துடைத்தார்.

பூலோகத்தில் அவர் செய்த வேலை, இந்தி யா முதற்கொண்டு "உலகத்தின் ராஜ்யங்கள் யாவும் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யமாகும்" வரை பரவிக்கொண்டேவருகிறது. இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதிலும் நீதியின் சூரியனு டையகதிர்கள் வீசிக்கொண்டிருக்கின்றன.

"ஆகையால், எனக்குப் பிரியமான சகோ தரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயா சம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களா யும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழு தும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக." பெற்றோரை இழக்கக்கொடுக்கும்போது கண் ணீர்; ஊழியத்திற் கொண்ட எண்ணம் மாற வேண்டும்போது கண்ணீர்; உலகத்தின் எல் லைகளுக்கு அனுப்பப்படும்போது கண்ணீர்: உற்றூர் உறவினரை வழியனுப்பும்போது கண்ணீர்: அந்நிய இடத்தில் கால் மிதிக்கும் போது கண்ணீர்: எதிரிகள் ஈசலிட்டு எழும் போது கண்ணீர்.

ஆம். "அள்ளித் தூவும் விதையைச் சுமக் கிறவன் அழுது (கண்ணீர்விட்டுக்) கொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரி களைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்புவான்". இக்கண்ணீர்த் துளிகளே, உல கத்தைக் கர்த்தரண்டைக்கு இழுத்துக்கொண் டெரும் வெள்ளப் பெருக்கு.

கண்ணீரோடே விதையுங்கள்.
கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

I

பையன்களின் தொகை. தோர்ணக்கல் போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தில் தற்சம யம் படிக்கும் பிள்ளைகளின் தொகை 38. (ஏழுபேர் கம்மாமேட்டில் ஐந்தாம் ஆரும் வகுப்புகளில் படிக்கிறார்கள்). இவர்களில் தச்சுவேலையே முக்கியமாய்ச் செய்து பழகு கிறவர்கள் நான்குபேர். நெசவு வேலையே முக்கிய தொழிலாய்க் கற்றுக்கொள்வோர் ஏழுபேர். கம்மாமேட்டு மிஷனால் நெசவுக் கென்று இருவரும் தச்சுவேலைக்கென்று இருவரும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்). பத்தாவதிற்குக்கீழ்ப்பட்டவர்கள் ஏழுபேர். மூன்றுபேர் 17 வயதுள்ளவர்கள். பாலகர்

முதல் நான்காம்வகுப்பு வரை பாடங்கள் நடக்கின்றன.

பெண் பிள்ளைகளின் தொகை. இவர்கள் 28 பேர் மொத்தம். இவர்களில் ஏழு பேர் புதிதாய்ச் சேர்க்கப்பட்டவர்கள். விக்டோரேனி மிஷன் பிள்ளைகள் இரண்டு பேர். பத்து வயதிற்குக் கீழ்பட்டவர்கள் ஐந்து பேர். பதினைறு வயது வரையுள்ள பிள்ளைகளும் படிக்கிறார்கள். இவர்களுக்கும் பாலகர் முதல் நான்காம்வகுப்பு வரை பாடங்கள் நடக்கின்றன.

பையன்களின் கட்டடம். இது சுமார் நாற்பதடி நீளமும் பன்னிரண்டடி அகலமும் கொண்டது. முன்புறத்தில் 6 அடி அகல முள்ள ஓர் வராந்தாவும் உண்டு. பெட்டிகள்—கம்பளி—கோப்பை—பாய் முதலியவைகளை வைத்துக்கொள்ளவானாலும், மழைகாலம் குளிர்காலங்களில் படித்துக் கொள்வதற்காகவும் கான்கு வகுப்புகள் நடப்பதற்காகவும் விஸ்தீரணம் போதாமலிருக்கிறது. அல்லாமலும் வியாதிக்காரப் பையன்களை வைப்பதற்காகினும்—சேவு தச்சுவேலைப் பையன்கள் மற்றவகுப்புகள் நடக்கும்போது உட்கார்ந்திருப்பதற்காகினும் சற்றென்கிலும் வசதியில்லை. இதையொட்டியே ஓர் சிறு அறையிருக்கிறது. அதில் பள்ளிக்கூடத்திற்கு வாங்கப்படும் சோளம், நெல் முதலியவை காப்பாற்றப்படுகிறது.

பெண் பிள்ளைகளின் கட்டடம். இது ஓர் தனித்த கட்டடம் அல்ல. கீழ்பக்கத்திலும் மேல் பக்கத்திலும் உள்ள அறைகளில் மிஷனரிகள் குடியிருக்க, இடையிலுள்ள மூன்று அறைகளே பெண் பள்ளிக்கூடம். இதற்கு சரியான காற்றோட்டமாகிலும் வெளிச்சமாகிலும் உட்செல்ல வகையில்லை. ஒவ்வொரு அறையும் சுமார் 15 அடிச் சதுரம் கொண்டது. பின் பக்கத்து அறையில் பள்ளிக்கூடத்திற்குவேண்டிய மிளகாய்—புளி—பருப்பு முதலியவை குலுக்கைகளில் போட்டு வைத்திருக்கும். மற்ற இரண்டு அறைகள்தான் பெட்டிகளுக்கும் வகுப்புகளுக்கும் உபயோகமாகும். இங்கே தான் பிள்ளைகள் இரவில் தூங்க வேண்டும்; வியாதிப்பட்டால் அவர்களையும் இங்கே தான் வைக்க வேண்டும். இவைகளைக் கவனிக்கும்போது வேறு கட்டடம் மிகவும் அவசரமே. பிள்ளைகள் அதிகப்பட அதிகப்பட, பெண் பிள்ளைகளுக்கென்று வேறுகட்டடம் மிகவும் சீக்கிரத்தில் தேவை என்று காலுக்கு நாள் மிகத்தெளிவாகிறது. சாதாரணமாக பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் வருகின்றது. இக்கக் காலங்களில் மழை பெய்து தலையும் ஈரமாயிருப்பதால், அதிகக்கஷ்டப்படுகிறார்கள். சேவு தச்சு தொழில்களைப் பார்க்கும்போது பையன்களின் தொகை யதிகமாக வேண்டியது அவசரமாகிறது. அப்படிப் பையன்களின் தொகை அதிகரிக்கும்போது பெண் பிள்ளைகளின் தொகை அதிகரிக்க வேண்டியது அவ்வளவு அவசரம் என்று தெரிகிறது. எப்படியென்றால் பையன்களுக்காயினும் பெண்களுக்காயினும் வகுப்புப் பாடங்களுக்குத் தடைவராதபடி தினம் ஒன்றுக்கு காற்பதுபடி சோளம் மஞ்சள் இடிக்கவும் சமையல் வேலைகளை முடிக்கவும் பெரிய பிள்ளைகள் அதிகப் பெயர் வேண்டியதாயிருக்கிறது. உங்களில் அநேகருக்குத் தெரிந்திருக்கிறபடி சமையலுக்கு வேலையாட்கள்கிடையாது. பிள்ளைகளின் சாப்பாடு திணிமணிகள் எல்லாம் மாதம் ஒன்றுக்கு ரூபர் ஒன்றுக்கு ரூபாய் மூன்றுக்கு அதிகப்படாமல் நடந்து வருகிறது.

உபாத்தியார். பையன்களுக்கு லோயர் செக்கண்டரி வரை படித்த ஒருவரும், கான்காம் வகுப்புவரை படித்த இன்னொருவரும் ஓர் சட்டம் பிள்ளையுமே. இவர்களில் எவரும் நார்மல் ஸ்கூல் பயிற்சி அடைந்தவர்கள் அல்ல. நிலையான உபாத்தியாருமல்ல, நிலையான கல்லபயிற்சியுள்ள உபாத்தியார் கிடைக்கும்படி ஜெபிப்போமாக. இதில் லோயர் செக்கண்டரி தேறின உபாத்தியார் சில காலுக்குள் தன் பாகபரிசில் விஷயமாய்ப் போய் விடுவார்.

உபாத்தீச்சிமார். கடந்த வருஷம் நான்காம் வகுப்புக்கு தகுந்த உபாத்தீச்சி கிடைக்கவில்லை. தேவ ஒத்தாசையினால் இப்போது

லோயர் செக்கண்டரி போதனாமுறை கற்ற ஓர் ஸ்திரீ கிடைத்திருக்கிறாள். மற்ற இரு வரும் நான்காம் வகுப்பு வரை கற்றவர்கள் தான். தையலில் மூவரும் முத்துமணிகள் தான். பிள்ளைகளுக்குக் காட்டிக்கொடுப்பதைப் போல் இவர்களுக்கும் ஒவ்வொன்றையும் அநேக முறை காட்டிக்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது.

பிள்ளைகளைப்பற்றிய குறிப்புகள். இப்போது நடைபெறும் யுத்தத்தினால் கஷ்டப்படுவோருக்குச் சகாயமாகத்தங்கள் சாப்பாட்டைக் குறைத்து, யுத்தகாலம் வரைச் சகாயம்செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால் போனமாதம் செலுத்தின தொகை ரூபாய் ஆறு. மூலக்கிருஷ்ண சகாயத்திற்காக சிலர் முயற்சிசெய்து, மாதாமாதம் செலுத்தும் காணிக்கையைச் செலுத்த பிரயாசப்படுகிறார்கள். ஜெபத்திற்காகவும் வேத வாக்கியங்களைக் கற்றுக்கொள்வதற்காகவும் தூணிமணிகளைக் கவனித்துக்கொள்வதற்காகவும் மற்ற நேக விஷயங்களில் சகாயம் செய்வதற்காகவும் இரண்டிரண்டு பேராக ஏற்படுத்தினதில் சில பையன்கள் சிறுபையன்களை நன்றாகப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். சனிக்கிழமை தோறும் தங்கள் கிராமங்களுக்காகவும் போஷகர்களுக்காகவும் ஜெபம் செய்து வருகிறார்கள்.

மகாகனம் அத்தியக்ஷர்களின் ஆலோசனை. சேவுசாலையைக் கட்டும்போது பதினைஞ்சு தரிகள் போடவேண்டுமென்று கட்டட அளவுக்காக மாத்திரம் யோசிக்கப்பட்டது. இப்போது எமதுகாட்டின் சி. எம். எஸ். பதினைஞ்சு சர்க்கிளின் பேரால் அல்லது எஸ். பி. ஜி. பதினைஞ்சு சேகரங்கள் பேரால் 14 தரிகள் காட்டக்கூடும் என்றும் எந்த சர்க்கிளார் அல்லது சேகரத்தார் ரூபாய் ஐம்பது அனுப்புகிறார்களோ அந்த சர்க்கிளின் அல்லது சேகரத்தின் பேரால் அந்தத் தரிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தின் வெவ்வேறு பாகங்களையும் குறிக்கும் சின்னங்கள் ஓர் அறைக்குள் இருக்கும் என்பது யாருக்குத்தான் சந்தோஷத்தை விளைவிக்காது?

நேசவு வேலை செய்யும் மனுஷருக்கு தினம் ஒரு மணி நேரம் வேதபாடம் நடக்கிறது. அவர்கள் அருமை ரட்சகர் சொன்ன உபமானங்களையும் மகாகனம் அத்தியக்ஷர் வர்கள் இயற்றிய தெலுங்கு ஞானஸ்நான ஆயத்தப்பாடங்களையும் படிக்கிறார்கள்.

சேவுசாலைக்கு அருகாமையில் ஆறு மாங்கன்றுகள் வைக்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன. இவை கன்வேன்ஷன் மரக்களாகப் பாவிக்கப்படலாம்.

பெண் பிள்ளைகளுக்கு ஓர் தொழில். கிராமங்களில் இளம் பிராய விவாகங்கள் நடக்கிற வழக்கமிருப்பதாலும் அந்திய கலியாணங்களுக்கு சோதனைகள் அதிகமாயிருப்பதாலும், பெண்பிள்ளைப் பிள்ளைகளைக் கலியாணம் ஆகும் வரை பள்ளிக்கூடங்களிலேயே வைத்து பிரயோஜனமான வேலைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் இவர்களுக்கு இவ்விடங்களில் அதிக பிரயோஜனமாயிருக்கும் கட்டில் நாடா செய்யும் வேலையைக் கற்றுக்கொடுக்க விரும்புகிறோம். இதற்கு வேண்டிய யந்திரம் ஒன்று ரூபாய் ஐம்பதுதான். இதினால் ஒரு பிள்ளை கல்ல பிழைப்புக் கற்றுக்கொள்ளக்கூடுமாதலால், இதற்குக் கைகொடுக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். யார் கைமேல் உதவி புரிவார்.

S. V. சுவாமிதாஸ்

II

திதலுக்குரோட்டில் சில மாசங்களுக்கு முன் நடந்த விவாகங்களைப்பற்றி ஜூலை மாச சஞ்சிகையில் கூறினேம். இவ்வாறு விவாகங்களிலும் வந்த கலியாணபீஸ் 33ரூ. இவ்விவாகங்களில் யாதொரு சண்டையும், மனஸ்தாபமும், கோவும் அவைகளுக்குரிய யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. பல இடங்களிலும் நடந்த பல விவாகங்களையும் நாம் பார்த்திருப்போமல்லவா? இவைகள் விரும்பப்படத்தக்க சிறந்தவிதமான விவாகங்களென்று நாமெல்லாரும் ஒப்புக்கொள்ளுவோம் என்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விவாகங்களின் சிறப்புக்கு இரண்டு விசேஷ காரணங்களுண்டென்பது, முன்

ஞல் சொல்லப்பட்டிருப்பவைகளைக் கவனித்து வாசித்தவர்களுக்குத் தெளிவாய்த் துலக்கும். அவை யாவை?

(1) கிறிஸ்தவர்களாகிய யாவரும் ஒரே குடும்பமென்ற சத்தியத்தை உணர்ந்து, அதற்கிசைந்த கிறிஸ்தவ ஐக்கியமும் ஒற்றுமையுமுள்ளவர்களாய், விவாகத்துக்குரிய சகல விஷயத்திலும் கடந்துகொண்டது முதற் காரணம். கிறிஸ்தவ அங்கியொன்னியமும் ஐக்யமுமே இவ்விவாகங்களின் சிருக்கும் சிறப்புக்கும் முக்கிய ஆதாரம்.

(2) கலகலட்டுகள், கொடுக்கல் வாங்கல், இவைகளைக்குறித்த எந்த ஏற்பாடும் செய்யப்படாமலும் அவைகளின் சம்பந்தமாய் ஊசி நாட்டுவதற்கும் இடமில்லாமலுமிருந்ததே இரண்டாம் முக்கிய காரணம். தேவ சமூகத்திலும் தேவ சபையின் மத்தியிலும் கேட்கப்படும் கேள்வியை நாம் அறிவோமே. அது "இந்த ஸ்திரியை இந்தப் புருஷனுக்குக் கொடுப்பதார்" என்பதே. ஆனல் சாத்தானின் சமூகத்திலும் சாத்தானின் சபையின் மத்தியிலும் கேட்கப்படும் கேள்விகளுமுண்டு 'அவை எவையென்றல், இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கை போடுகிறீர்கள்? எவ்வளவு வைத்துக்கொடுப்பீர்கள் என்பதே.

போடுகிறதுகையா, அன்னியரும்கூட கலகக்கச்செய்யும் சண்டையா? போடு போடி, கைபோடு என்பது பேச்சு. போடு போடென்று சண்டைபோடுவது சாத்தான் போடும் அவனுடைய சரப்புளி. 'மாப்பிள்ளை வீட்டாருக்கும் பெண் வீட்டாருக்கும் கலியாணப் பந்தல் விருத்திலெல்லாம் ஒருவேளை மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கூட சண்டையென்னும் சரப்பளியை சாத்தான் போடு போடென்று போட்டுவிடுகிறன். வைத்துக்கொடுப்பது எவ்வளவு? வாரியெடுப்பது எவ்வளவு? அவ்வளவுக்கு மவ்வளவு வாரியெடுப்பது மனதோவே.

ஆ! ஆ! எங்கள் பெற்றோரும் முதியோருமாகிய திருநெல்வேலித் கிறிஸ்தவர்களுக்கு அவர்கள பிள்ளைகளும் பசலைகளுமான நாங்கள் என்ன போதனை சொல்லிவிடப் போகிறோம், ஆனல் எங்கள் வைராக்கிய வாஞ்சையாலாகும் பெருமூச்சு நீங்கள் கவனிக்கவேண்டியதுதானே. ஆ! நிறைந்த சபையான எங்கள் தாய் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் சிரிக்கப்படுவதற்கும் இகழ்ந்து நகைக்கப்படுவதற்கும் ஏதுவாயிருப்பதை விட்டுவிட்டு, இனி எந்தாலும் தங்கள் விவாகங்களிலும் மற்றும் விஷயங்களிலும் சிறப்புள்ளவர்களாய் விளங்கத்தக்கதாய் தேர்ணக்கல் விவாகங்களின் நிறைந்த மாதிரியைப் பின்பற்றினல் எவ்வளவு உத்தமம்!

மேலும் இத்தகைய கெலுங்கரு டைய விவாக வழக்கங்களுக்கு நமது கிறிஸ்தவர்களின் விவாகம் எவ்வளவு தேற்சியடைந்திருக்கிறதென்பதைப் பாருங்கள். நமது கிறிஸ்தவர்கள் முன் இந்தக்கலாயிருந்தபோது, தங்கள் பிள்ளைகளுடைய கலியாணத்துக்கென்று பெரும் கடன்கள் வாங்கி, வேடிக்கைகளிலும், மேளவாத்தியக்களிலும், பெரும் விருந்து தினிகளிலும் குடிவெறிகளிலும் அவைகளை அழித்துவிட்டு, தங்கள் ஜீவகாலத்தில் அவைகளிற் பல வேளைகளில் அவைகளின் வட்டியையும் கூட தீர்க்கமுடியாதிருந்து, தங்கள் பிள்ளைகளை அத்தொகைக்கு அடைமான அடிமைகளாய் விட்டுப்போகிற வழக்கமுள்ளவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களானதால், தற்பழக்கங்களையும் டாம்பீக செலவுகளையும் கைவெடிழப் படிப்பிக்கப்பட்டபடியே, செலவுகளைச் சுறுக்கவும், ஆனதுபற்றி கடன் கொஞ்சம் வரைகவும் விவாகமான பின் கூடிய சீக்கிரம் அதைத் தீர்த்துவிடவுமாக விருந்தது. இப்போது கடைசியாக நடந்த தெலுங்குக் கிறிஸ்தவர்களின் விவாகத்தில் ஒரு மாப்பிள்ளையாகிய பெண்டீன் என் பவன் நமது போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்து, இப்போது மகாகனம் அத்தியகூ வர்களின் வீட்டு வேலைக்காரனுயிருப்பவன், தன் சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்துவைத்திருந்த தொகையின் ஏதுவால் யாதொரு கடனும் வாங்காமலே தன் விவாகச் செலவையெலாம் செய்து நிறைவேற்றினன். இதுவே கடன் வாங்காமல், கலியாணம் செய்துகொண்ட நமது முதல் கிறிஸ்தவன் என்னத்தகும். விவாகம் செய்யக் கோரிக்கையாயிருக்கும் வாலிபருக்கும் இவன் மாதிரி பின்பற்றத்தக்கது.

S. பாக்கியநாதன்.

மிஷனரி வர்த்தமானம்.

வேதாகம சங்கம். பிரிட்டிஷ் புறதேச வேதாகம சங்கத்தார் கடந்த வருஷத்தில் ஒரு கோடியே ஒரு லக்ஷத்து அறுபத்திரண்டாயிரத்து நானூற்று பதின்மூன்று (10,162,413) வேதாகமங்களும் வேதாலம பங்குகளும் பிரசுரஞ்செய்திருக்கிறார்கள். நாளது வருஷத்தில்தான் மற்றெந்த வருஷத்தைப்பார்க்கிலும் ஜாஸ்தியான பிரதிகள் செலவாகியிருக்கின்றன. புது பாஷைகளில் ஒன்பது பாஷைகளில் வேதாகமம் பிரசுரிக்கப்பட்டது. நாளது வருஷம்வரை 487 பாஷைகளில் வேதாகமம் அச்சிடப்பட்டிருக்கிறது.

மிஷனரி வீதாசாரம்: அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் 594 பேருக்கு பட்டம் பெற்ற ஒரு மிஷனரி உண்டு. ஆப்பிரிக்காவில் 82,152 ஜனங்களுக்கு ஒரு வரும், கொரியாவில் 123,711 பேருக்கு ஒருவரும், ஜப்பானில் 172,533 பேருக்கு ஒருவரும், இந்தியாவில் 321,448 ஜனங்களுக்குஒருவரும், சீனவில் 476,462பேருக்கு ஒருவருமாம். ஒரு மிஷனரியாவதுவேலை செய்யாத 1557 முக்ய பட்டணங்கள் சீனவில் இருக்கின்றன.

சீன. ஹிங் உவா என்னும் பட்டணத்து சீன கிறிஸ்தவர்கள் தங்களே சுமார் ஐயாயிரம் டாலர்கள் (சுமார் ரூ. 15000) சேகரித்து ஓர் போர்டிங் ஸ்கூல் தங்கள் பிள்ளைகளுக்குக் கட்டியிருக்கிறார்கள். கிறிஸ்து சபையின் வளர்ச்சி, செல்வாக்கு முதலியவற்றையும் சமீபகாலத்தில் சுவிசேஷ பிரபல்ய விஷயமாய் எடுத்துக்கொண்ட பெரிய முயற்சியையும் பார்த்துப் பயன்று, அப்பட்டணத்து விசார வணக்கத்தார் முன் ஒருசார்பும்இல்லாத பிரகாரம் விக்கிரகங்களை ஊர்வலம் பவனி கொண்டு போவதற்குத்தக்க வாகனங்கள் தயார் செய்து அலங்கரித்து ஆயிரக்கணக்கான ரூபாய் செலவுசெய்தார்கள்.

சீனசினட். ஏப்ரல்மீ 14கூ முதல் எட்டு நாட்களாக ஷாங்கே நகரில் சீன அத்தியகூ மகாசபை கூடினது; பதினெரு அத்தியகூர்களிலுமிருந்து 69 பிரதிநிதிகள் கூடினர்கள். இவர்களில் 22 பேர் மாத்திரம் அன்ய தேசத்தார். ஆகவே சீன ரூருமாரும் லே அங்கங்களும்தான் பெரும்பான்மையோர். ஆங்கிலேய திருச்சபையைச்சேர்ந்த சகல மிஷன்களும் மிகுந்த ஒருமைப்பாடுள்ளவைகளாயிருப்பது சீன தேசத்தின் மாட்சிமை. அந்த "சினட்" சபையில் செய்த முக்ய தீர்மானம், சீன சபை மிஷனரி சபையாயிருக்கவேண்டுமென்பதே. ஒவ்வொரு கிறிஸ்தவ சபையிலும் மிஷனரி ஆராதனைகள் இருக்கவேண்டுமென்றும் ஒரு மிஷனரி அத்தியகூர்தினம் ஸ்தாபிப்பதற்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் உற்சாகமாய்க் காணிக்கை படைக்கவேண்டுமென்றும், அதற்காக உழைக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த மிஷனரி அத்தியகூர்தினத்தின் காரியாதிகளை சீனரே நடத்தவேண்டுமென்றும் சமீபத்தில் ஒரு சீனருக்கு அத்தியகூ அபிஷேகம் கொடுத்து அந்த மிஷனில் வைக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருக்கிறது. இதை வாசிக்கும்போல், நமது அருமை தோர்ணக்கல் அத்தியகூர்தினத்தையும் அதின் இந்திய அத்தியகூரையும் நினைக்காமல் இருக்கமுடியாது. நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய சலாக்கியத்திற்காக நாம் எவ்வளவாய்க் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவும் இந்தப் புது அத்தியகூர்தினம் நாளொரு மேனி பொழுதெரு வண்ணம் சகல விஷயத்திலும் விர்த்தியாகத்தக்கதாக ஜெபிக்கவும், அதின் மிஷன்களின் அலுவல்களுக்கு வேண்டிய பொருளுதவி உதாரமாய்க் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா?

பலஸ்தீன. பவுல் என்ற ஓர் கிறிஸ்தவன் உபத்திரவத்தில் பொறுமையாயிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு மகமதியன் கிறிஸ்துவனுகியிருக்கிறதாக சேப்லஸ் ஆஸ்பத்திரியை கடத்தும் மிஷனரி எழுதுகிறார். கிறிஸ்து மகமதுவைப்பார்க்கிலும் பெரியவர் என்ன பவுல் பிரசங்கித்த தினிமித்தம் ஓர்தடவை மகமதியர் அவனைப் பிடித்து மரத்தோடே கட்டிவைத்து,

அடித்து, முகத்தில் துப்பினார்கள். யோசவ் என்னும் மகமதியனும் பவுலை முகத்தில் அறைந்தவர்களில் ஒருவன். அப்பால் அவனுடைய புஸ்தகங்களையும் வேதாகமத்தையும் பிடுங்கி, சந்தையில் பகிரங்கமாய் நெருப்புக்கு இரையாக்கினார்கள். பவுலின் பொறுமை சிறந்தது. அக்கினிக்கு இரையான புஸ்தகங்களிலிருந்து ஒன்றை யோசவ் எடுத்து வாசிக்க, அந்தரங்க சீஷனானான். தான் நேசித்த தாயை மனம் நோகப்பண்ணப் பிரியமற்று, வெகுகாலமாய்க் கிறிஸ்தவனாகவில்லை. கடைசியாகத் தன்னை அடக்கிக்கொள்ள சக்தியற்றவனாய் கிறிஸ்துவைப் பகிரங்கமாய் அறிக்கைசெய்வதற்கு வெளியேறிவிட்டான். எகிப்தில் ஞானஸ்நானம் பெறும்படி அங்கு போயிருக்கிறான்.

இயேசு வென்னும் மகத்துவ நாமம்.

1. இயேசுவெனும் நாமம் சொன்னால்
இகபரமுத்தி தோன்றும்-இக்ஷணமே
பாசவலையெல்லாம் நீங்கும்
பைசாசக்ணம் நடுங்கும்-பற்றொழியும்
ஆசையினிலுழல்கின்ற
ஆத்துமமு மீட்சிபெற்று- ஆனந்திக்கும்
தேசிகனைத் தரிசிப்போர் (னே
தெய்வ புத்திரராவார் —திண்ணந்தா

2. மருவிய பாவம் நீங்கும்
மாதேவனருளுண்டாகும்-மாட்சியான
பொறையொடு பக்தி வாய்க்கும்
புண்ணியமொருங்குமேவும் பூவுலகில்
வெருவிய தீமை நீங்கும் (ன்
விமல ஆனந்தமோங்கும்-விண்ணவனி
இருபாதம் கைப்பிடித்தால்
எப்பதம் வராதபதம்-யர்துமுண்டோ

3. பரனினடிக்கமலம்
பாவி மனத்தில் மலர்ந்தால்-பாக்கியன்
நரனான ஞான பாறு [நாள்
நாரதமண்டலமிருந் -தென்னை நோக்கி
வரனாரின் அருள் நுதலும், [ன்
வாமம்வாய்ந்த வாயழகும்-வல்லவனின்
காமுந் திருவிழியும் [தும்
காண்பரியவதனமுமே-கண்டால் போ

4. நண்ணு மன்பர்க்குள்புரி
நாதனின் திருநாமத்தை—மெய்பக்தி
எண்ண இன்பச் சேவடி யென் [யாய்
இதயத்திலே அமரும்-என்றென்றைக்
புண்ணியத்தின் பொலிவான [கும்
பூரணனின் திருமேனி—பூமியிலே
கண்ணைவிட்டு நீங்காமல் [திப்பேன்
கர்த்தனைக் கண்டென மனதில்-ஆனந்

5. புந்தியை யொருங்க வைத்துப்
புலனகளின் இன்பம் நீக்கிப்-பூரணனும்
எந்தையின் திருக்காயங்கள்
ஐந்துமே மனதில் வைத்து-எண்ணஎ
சிந்தையெலாந் தூய்மையாகித் [ணச்
திருக்கெலாம் நீங்கிச்செல்லத்-தேவன்
சுந்தரமுளை கிழம்பிச் [பெனும்
சூழ்களை பொரிந்துபோகும்-சுத்தனாவாய்

6. உள்ளத்தில் விளக்கையேற்றி
உயரவே திரியைத்தூண்டி—உள்ளன்
வெள்ளைச் சம்பாநெல் லரிசி [பெனும்
வேண்டுமளவா யெடுத்து-நீர்பிசைந்து
கள்ளமெனும் உமிபோக்கிக்
கவரறுசுவையொடுமே-சமைப்பித்து
வள்ளத்தினில் வைத்திருந்தால் (யே
வல்லபிதாவந்தசனஞ் செய்வார்-மெய்

7. நில்லாது இளமை செல்வம்
நிலையாது காயந்தானும்—நீங்கிச்செ
[ல்லும்
பொல்லாநோய்தனில் வருந்திப்
புந்தியெலாங் குலைந்து-போமுன்னாக
வல்லானை இளமையிலே
வந்தித்து வணங்குவோர்தாம்—வான
நல்லான்போல் ஒளிவீசி [லோக
நாயகன்பால் ஆனந்தித்து—நன்கு
[வாழ்வார்

8. மகிமையெலாங் குலைந்து
மண்வீட்டிற்கேகுமுன்னே—மாட்சி
மகுடமுடி மன்னனை [யான
மகத்தான ஐங்காய-முடைய கோனை
முகமுகமாகக் கண்டு
முத்திசெய்து அஞ்சலித்து—முன்
இகபர பாக்கியங்கள் [விழுந்தால்
எல்லாம் பெற்று வாழ்ந்திடுவீர்—
[இன்பமாக

9. மெய்யான விளக்கில்லாமல்
மின்மினிபோல் மறைகின்ற—சிற்
[றின்பத்தைப்
பொய்யான உலகவாழ்வைப்
பூசைசெய்து பூரிப்போரே—புல்லரா
ஐயாவென் இயேசுவெனும் [வார்
அண்ணலுட அருளில்லாமல்-அங்க
வெய்ய சாத்தானுக்கமைத்த [லாய்த்து
வெந்நரகில் வீழ்ந்தழிவார்—மீட்பில்
[லாமல்.

10. என் நாதன்றனை யிகழ்வோர்
எரிநரகில்மிழ்ந்தழிவார்—என்பதுண்
இன்னாவெலாம் போக்கும் [மை

ஜீவனத்திற்குப்போக மீதியை யெல்லாம் மிஷனெரி வேலைக்கே கொடுத்து விடுவதாகத் தீர்மானம் பண்ணினார். இதுவும் போதாதென்று, 23-ம் வயதில் தன்னையே மிஷனெரியாகத் தத்தம்செய்து, தன் நோக்கத்தைத் தன் பெற்றோருக்கும் தன் குருவானவருக்கும் தெரிவித்தார். மனிதர்கள் அனுபவிக்கிற கொடிய வருத்தங்களை ஒழிக்கவேண்டு மென்பதே அவருடைய ஜீவியத்தின் முக்கியமான நோக்கம். மிஷனெரி ஊழியப் பயிற்சி தன் சொந்த செலவிலேயே முடிய வேண்டுமென்று கருதி, காலேஜிற்குப் போவதற்கு சில மாதங்களுக்கு முன் விடாமுயற்சியோடு நூல் யந்திரசாலையில் உழைத்து தனக்கு வேண்டிய பணம் முழுவதையும் சம்பாதித்தார். அவர் முக்கியமாய்ப் படிக்க விரும்பினது வைத்திய சாஸ்திரமே. இவர் ஊரிலிருந்து ஒன்பது மைலுக்கு அப்பாலிருந்த க்ளாஸ்கோ பட்டணத்தில் படித்துவரும்போது, லண்டன் மிஷனெரி சங்கத்திற்குத் தன்னை ஒப்புவித்தார். மிஷனெரி வேலையைப்பற்றி அவருடைய அனுமானம் என்னவென்றால்:- பிரசங்கத்தினாலும், பாலியரைப் போதிப்பிப்பதினாலும், ஜனங்களுடைய லௌகீக விஷயங்களையும், நாகரீகத்தையும், சாஸ்திர அறிவையும் தேற்சிசெய்வதினாலேயுமே சுவிசேஷத்தை உயர்த்திக் காட்டக்கூடும், என்பதுதான். 1838-ம்ஆ லண்டன் பட்டணத்திற்கு மிஷனெரி சங்கத்தாரினிடத்திற்குப் போனார். அவர்கள் இவரை ஏற்றுக்கொண்டு வேதசாஸ்திர பயிற்சிக்காகத் தாங்கள் வைத்திருந்த காலேஜிற்கு அனுப்பினார்கள். லிவிங்ஸ்ற்றனுக்கு ஆயத்தமில்லாமல் திடீரென்று பேசக்கூடிய சக்தி கிடையாது. ஆதலால் இவர் ஊழியத்திற்குத் தகுந்தவரல்லஎன்று காலேஜ் தலைமை ஆசிரியர் ரிப்போர்ட்டு அனுப்பினார். ஆனாலும் தெய்வசித்தம் மாற்றப்படக்கூடாதாகையால், இவருக்குக்கூடக் கொஞ்சக்காலம் கொடுக்கப்பட்டது. முடிவில் மிஷனெரியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

சீனாவுக்கு மிஷனெரியாகப் போக வேண்டுமென்று தீர்மானித்திருந்த இவர், லண்டன் பட்டணத்தில் பேர்போன ஆப்பிரிக்கா மிஷனெரியான டாக்ட்டர் மோப்பற் என்னும் மகானைக் கண்டு அவருடைய வேண்டுகோளுக்கிணக்கி ஆப்பிரிக்காவுக்குப்போகத் தீர்மானித்தார். இன்னமும், அபின் வியாபாரத்தைப்பற்றி இங்கிலாந்துக்கும் சீனாவுக்கும் கொடிய தர்க்கம் நடந்துகொண்டிருந்தபடியால், சீனாவுக்குப்போகக்கூடாதிருந்தது. "என் நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல, என் வழிகள் உங்கள் வழிகளுமல்லஎன்று கர்த்தர் சொல்லுகிறார்."

உடனே ஆப்பிரிக்காவுக்குப் போக வேண்டுமென்று இவர் விரும்பினபடியால் 1840-ம்ஆ டிசம்பர்மீ 8-ம் தேதிக் கப்பல் ஏறினார். புறப்படுவதற்கு முந்தின இரவில், முழுநேரமும் பெற்றோரோடு மிஷனெரி வேலைகளைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அதிகாலையில் 121-ம், 135-ம் சங்கீதங்களை வாசித்து, குடும்ப ஜெபம் செய்யப்பட்டது. அதன்பின், தகப்பனும் மகனும் கால்நடையாக க்ளாஸ்கோவுக்குப் போனார்கள். தகப்பனார் திரும்பினார். பூலோகத்தில் அப்புறம் அவர் தன் மகனைச் சந்திக்கவில்லை.

ஆப்பிரிக்காவில் ஊழியம். ஆப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள கேப்டவுன் (Cape Town) என்னும் இடத்தில் சிறிது காலம் தங்கி, அப்புறம் அதற்கு வடக்கேயுள்ள குருமான் என்னும் மிஷன் ஸ்தானத்திற்குப் போனார். அங்கிருக்கும்போது குருமானுக்கு வடக்கே மிஷன் ஸ்தாபிக்க வேண்டுமென்று கட்டளை பெற்றார். அவ்விடத்து ஜனங்களுக்கு பெச்சூனர் என்று பேர். அவ்விடத்தில் ஆறுமாதம் ஐரோப்பியச் சகவாசம் கொஞ்சமும் இல்லாமலே முற்றிலும் பெச்சூனரோடு புழங்கி அவர்கள் பாஷையைப் படித்தார். 1843-ம்ஆ மேபட்ஸா என்னும் இடத்தை ஸ்தாபித்தார் அவ்விடத்தில் சிங்கங்கள் அதிகமாக இருந்து கிராமத்தாருடைய ஆடுமாடுகளைப் பட்சித்துக்கொண்டிருந்தன. ஒருநாள் லிவிங்ஸ்ற்றனும் அவரோடு இன்னும் சில சுதேசிகளும் சிங்க வேட்டைக்குப் போனார்.

கள். அப்பொழுது ஒரு சிங்கம் இவர்மேல் பாய்ந்து இவருடைய தோளைச் சிதைத்து, எலும்பையும் சேதப்படுத்திவிட்டது.

1844-ம் வருஷம் மோப்பற் மிஷனெரியின் மூத்த மகளைக் கலியாணஞ்செய்தார். அந்த அம்மாளுக்கு சுதேச பாஷை வெகு நன்றாய்த் தெரியும். அதோடுகூட வீட்டுக் காரியங்களை வெகு கெட்டிக்காரத்தனமாய் நடத்தக்கூடியவர்கள். மேபட்ஸாவில் தண்ணீர்க் கஷ்டமும் வேறநேக கஷ்டங்களும் இருந்ததால், நாற்பது மைலுக்கு அங்கே உள்ள கோலோபங் என்னும் இடத்தில் குடியேறினார்கள். இங்கே பாலியருக்கும், சிறு குழந்தைகளுக்கும் தன்னுடைய வீட்டில் பள்ளிக்கூடம் வைத்து நடத்தினார். அவர் காலை பதினொரு மணிமட்டும், சாயங்காலம் நன்றாய் இருட்டுமட்டும் சுதேசிகளுடைய வீடுகளுக்குப் போய் சுவிசேஷத்தை சம்பாஷித்துக்கொண்டு வந்தார். வாரத்தில் மூன்று முறை சாயங்காலம் கூட்டங்கள் வைத்திருந்தார். இதில் வாரத்தில் ஒரு தடவை, லௌகீக விஷயங்களைக் குறித்து, உதாரணமாக, சுகாதாரம், கல்வி, சுத்தம் என்பவைகளைப்பற்றிப் பேசுவார். இன்னமும் வியாதிகாரரைச் சந்தித்து அவர்களுக்கு மருந்து முதலியவைகள் கொடுத்து வந்தார்.

முதல் முதலாக அவரால் ஞானஸ்நானம் பெற்றவர்களில் அவ்விடத்து அதிகாரியான செக்கிலி என்பவன் ஒருவன். அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தபோது திரளான பேர் வந்திருந்தார்கள். அநேகர் அழுதார்கள். ஏனென்று கேட்டபோது, தங்கள் தகப்பனான அதிகாரி பித்தம்பிடித்துப்போய் தன் மூலாசாரங்கள், ஆதிகால வழக்கங்கள் எல்லாவற்றையும் தூர எறிந்துவிட்டதனால் அழுததாகச் சொன்னார்கள். அக்காலத்தில் மழையில்லாமல் தரை வறட்சியாகிவிட்டபொழுது, மழை உண்டுபண்ணக் கூடிய தங்கள் தலைவன் வேற்றுமார்க்கத்திற்குப் பேர்ய்விட்டதனாலும், கோவில் மணி தன்சத்தத்தினால் மேகங்களைக் கலைத்விட்டதனாலுமே வறட்சி உண்டாகிவிட்டது என்று அறிவீனமான அந்த ஜனங்கள் யோசித்தார்கள். அற்பக் காரியங்களிலும், சகல விஷயங்களிலும் தங்கள் தலைவன் நடந்துகொள்ளுகிற மாதிரியே நடக்கிற அந்த ஜனங்கள் மார்க்கவிஷயத்தில் தங்கள் தலைவனைத் தனியே விட்டு விட்டார்கள். வேதாகமத்தை வாசிக்கும்படி படித்துக் கொண்ட செக்கிலி அதின் அருமையை அறிந்துகொண்டு வேறு யாதொரு காரியத்திலுமே மனதைச் செலுத்தாமல் அதையே முழுநேரமும் மடியில் வைத்து வாசித்துக் கொண்டிருப்பான்.

கோலோபங் என்னும் இடத்தில் தண்ணீர்க் கஷ்டம் இருந்தபடியால், வேறு இடம் பார்க்கும்படி யோசித்தார். தூரமான ஒரு இடத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறதாகக் கேள்விபட்டு அதைக் கண்டுபிடிக்கும்படி புறப்பட்டார் கிட்டத்திட்ட 300 மைல் பிரயாணஞ்செய்து, ஒருமாத காலமாய்க் கஷ்டத்தை அனுபவித்து கடைசியாக ஒரு நஞ்சை வழியாகச்சென்று அந்த ஏரியைக் கண்டு பிடித்தார். இதைக் கண்டு பிடித்ததனால் அவருடைய பேர் முதல் முதலாக உலகப்பிரசித்தம் ஆனது. ராஜாங்க பூமி சாஸ்திர சங்கத்தார் இவருக்கு ஒரு தங்கக் கடிகாரம் இனாம் அளித்தார்கள்.

இந்த ஏரிக்கும் அங்கேயிருந்த செபிற்றுவானி என்ற ஓர் தலைவன் இவரைப் பார்க்க ஆசைப்பட்டான். இரண்டு தடவை புறப்பட்டும் முடியாமற்போய், மூன்றாந்தடவை அந்த இடத்தைச் சேர்ந்தார். அங்கிருந்த ஜனங்கள் மக்கோலாலர் என்னப் பட்டார்கள். லிவிங்ஸ்ற்றன் அங்கேபோய்ச் சேர்ந்த சிறிது நாட்களுக்குள்ளாக அந்தத் தலைவன் வியாதிப்பட்டு மரித்துப் போனான். தான் அங்கே போனதினால் தான் அவ்விதமாக நஷ்டம் நேரிட்டது என்று அந்த அறிவீனமான ஜனங்கள் எண்ணி தனக்கு மோசஞ் செய்வார்கள் என்று பயந்தார். ஆனால் அவ்விதமாக ஒன்றும் நடக்கவில்லை. அந்த ஜனங்கள் மிகவும் நல்ல ஜனங்கள். கொடுக்கிற விஷயத்தில் மிகுந்த உதாரத்துவம் காண்பிக்கிறவர்கள்.

(தொடர்ச்சியைக் 162-ம் பக்கம் பார்க்க.)

51-ம் சங்கீதம்.

இது சங்கீதங்களிலெல்லாம் சிரேஷ்ட சங்கீதம். சங்கீதாகமத்தில் மகா பிரகாசமான முத்து. பாவிக்கு இரட்சண்ய வழி காட்டி. பக்தனுக்கு இனியதியானதீபிகை. உள்ளம் கரைந்து, கண்ணீர் சொரிந்து முழங்காலில் நின்று இதை வாசித்து ஆறுதலையும் சமாதானத்தையும் கண்டடைந்திருக்கும் பாவிகள் எத்தனை ஏராளம்! உத்தம நெஞ்சுக்குக்கீதம் இதுவே.

முகவுரையில் இது 'பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கத்தரிசி அவனிடத்தில் வந்து அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்" என்று கண்டிருக்கிறது. ஆயினும் முகவுரைகள் யாவும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டபடியால், இது பிற்காலத்தவருடைய அபிப்பிராயத்தைக் காட்டுமேயொழிய, ஆக்கியோன் இன்னார் என்பதற்கு ரூபகாரமாகமாட்டாது. 18, 19-ம் வசனங்கள் சிறையிருப்பின் காலத்திற்குப் பிந்தின சரித்திரத்தைப்பற்றினதாயிருப்பதாலும், இவ்வசனங்கள் இல்லாவிடில் சங்கீதம் மொட்டையாய் முடிவதாலும், ஏசாயாவின் பிந்தின பாகத்துக்கும், இச்சங்கீதத்துக்கும் பதச்சம்பந்தமும், பொருட் சம்பந்தமும் இருப்பதாலும் (வா 1-ஏசா. 63: 7; வா. 3-ஏசா. 59: 12; வா. 9-ஏசா. 43: 25, 44: 22; வா. 11-ஏசா. 63: 10, 11, 12; வா. 17—ஏசா. 57: 15; 66: 2) சிறையிருப்பின் கடைசிக்காலத்தில் யூதச் சபையின் பேரால் பக்தன் எவனோ ஒருவன் இந்தப் பட்சாதாப கீதத்தை எழுதியிருந்தாலும் எழுதியிருக்கலாம் என்பது தற்கால வேதசாஸ்திரிகள் பலர் அபிப்பிராயம்.

யார் எழுதினாலும் சரி, எச்சமயத்தில் எழுதியிருந்தாலும் சரி—பரிசுத்த ஆவியானவரிலேயே இது ஏவி எழுதப்பட்டதென்பதற்கையமில்லை. பாவமன்னிப்பையும், சமாதானத்தையும் தேடும் பாவி பாடும் கீதமாக எண்ணி இதைத் தியானிப்போமாக.

இவ்வருமையான சங்கீதம் பத்து வரிகளடங்கிய நாலு சரணங்களுள்ளது.

எபிரேயு பாஷையில் பாவத்துக்கு மூன்று பதங்களுண்டு. மீறுதல், அக்கிரமம், பாவம், என்ற வார்த்தைகளால் இவற்றை எப்போதும் தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்த்திருக்கிறது. யாத். 34: 7-லும். சங். 32: 1, 2-லும் இதே மொழிகள் வருவதைக் காணலாம். மீறுதல் என்றால் கட்டளையை மீறும் துரோகம் என்றர்த்தம். அக்கிரமம் என்பதற்குக் கறை உண்டாக்குகிற தீட்டு என்பது பொருள். பாவம் என்னும் பதத்திற்கு இலக்குத் தவறுதல், அதாவது அடையவேண்டிய நிலைமையை அடையாமற்போகுதல் என்பது கருத்து. பாவத்தின் பலன்களை வைத்து இப்பதங்கள் வழங்கப்படுகிறதாகக் காணலாம். பாவம் தேவனுக்கு விரோதமான குற்றம்; பாவம் இருதயத்தைக் கறைப்படுத்தும் தீட்டு; பாவம் நமக்குக் கடவுள் வைத்திருக்கும் நிலைமைக்கு வந்தெட்டாதபடி கெடுக்கும் அரி புழு. இம்மூன்று கருத்தையும் முதல் மூன்று சரணங்களிலும் காணலாம்,

1. பாவம் தேவரீருக்கு விரோதமான குற்றம்: மன்னியும்!

தேவனே உமது கிருபையின்படி என்க்குஇரங்கும்,
உமது இரக்கங்களின் பெருக்கத்தின்படியே
என் மீறுதல்களைக் குலைத்துவிடும்!
என் அக்கிரமம் நீங்க முற்றிலும் என்னைக் கழுவும்.
என் பாவமற என்னைச் சுத்திகரியும்; ஏனெனில்—
என் மீறுதல்களை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.
என் பாவம் எப்பொழுதும் என் முன் நிற்கிறது
உமக்கு விரோதமாக, உமக்கு விரோதமாக மாத்
திரமே, நான் பாவம் செய்திருக்கிறேன்,
உமது பார்வையிலேயே பொல்லாங்கானதை
நடப்பித்திருக்கிறேன்;
நீர் பேசும்போது நீர் நீதியுள்ளவர் என்று தீர்க்கப்
படும்படியாகவும்
நீர் நியாயந் தீர்க்கும்போது சுத்தராய் விளங்கும்
படியாகவும், இதை அறிக்கையிடுகிறேன்.

உத்தம பட்சாதாபம் பிறர்பேரில் குற்றத்தைப் போடாது: தண்டனை நியாயம்

என்று ஒப்புக்கொள்ளும். தேவனுடைய பிள்ளைகள் சிலுவிக்கப்படும்போது இது அநியாயம் என்று மற்றவர்கள் தேவனைக் குறை கூறுதபடி அவர்களே தங்கள் பாவத்தை அறிக்கையிடத் தீவிரித்துக்கொள்ளுவார்கள். நான் பாவஞ்செய்தேன்; தேவரீருக்கு முன்பாகக் குற்றவாளி; மன்னியும், குலைத்துப்போடும் என்பது உத்தம பாவ அறிக்கை.

2. பாவம் என்னைக் கறைப்படுத்தும் தீட்டு: கழுவும்!

இதோ! அக்கிரமத்தில் உருவாக்கப்பட்டேன். எந்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். இதோ உள்ளுக்குள்ளாக உண்மையை விரும்புகிறீர். இருதய ஆழத்தில் ஞானத்தை நான் அறியச் செய்வீர். என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் சுத்தமாவேன்: என்னைக் கழுவியருளும் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கச்செய்யும்- அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களி கூறும். என் பாவங்களைப் பாராதபடி உமது முகத்தை மறைத்தருளும்! என் அக்கிரமங்களையெல்லாம் குலைத்துப்போடும்!

நான் உருவாக்கப்பட்டது பாவத்தில், ஜெனிமித்தது பாவத்தில். இருதய ஆழத்தில் உத்தமத்தை நீர் விரும்புகிறீர், நானே உள்ளுக்குள்ளாக பாவக்கறை பிடித்தவனாயிருக்கிறேன். என்னைச் சுத்திகரியும், என்னைக் கழுவும், பாவத்தீட்டைப் பாராதேயும். அந்த அழுக்கைக் குலைத்துப்போடும் என்பதுதான் இந்த ஜெபத்தின் பொருள். "அவருடைய குமாரனுடைய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்."

3. பாவம் என் பாக்கியத்தையும், பிரயோஜனத்தையும் கெடுக்கும் அரி புழு: உயிர்ப்பியும்!

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலேவரமான ஆவியை எனக்குள்ளே புதுப்பியும், உமது சமுகத்தைவிட்டு என்னைப் புறம்பே தள்ளாதேயும், உமது பரிசுத்த ஆவியை என்னைவிட்டு எடுத்து விடாதேயும்; உமது ரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்தருளும், உற்சாகமான ஆவியால் என்னைத் தாங்கியருளும்:- அப்பொழுது மீறுகிறவர்களுக்கு உமது வழிகளை உபதேசிப்பேன், பாவிகள் உம்மிடத்தில் திருப்பப்படுவார்கள்.

தேவனே, என் இரட்சிப்பின் தேவனே, இரத்தப் பழியினின்று என்னை விடுதலை பண்ணும். என் நாவு உமது நீதியைச் சத்தமிட்டுப் பாடும்.

பாவம் என் முன நிலையைக் குலைத்தது: உமது சமுகப் பிரசன்னத்தைப் போக்கடித்தது. சந்தோஷம் தொலைந்தது, உற்சாகம் குன்றினது, சாட்சிசொல்ல நா எழும்பவில்லை. தேவனே, நான் அநுபவிக்கவேண்டிய இவ்வளவு மேன்மையையும் இழந்தேன். திரும்ப உயிர்ப்பியும், புது இருதயத்தைச் சிருஷ்டியும், புது ஆவியைத் தாரும், பாவத்தின் பலத்தினின்று விடுவியும்—அப்பொழுது உம்மைப்பற்றி சாட்சி சொல்லுவேன், உம்மைப் பாடுவேன், உம்மைப்பிரசங்கிப் பேன்; பாவிகளும் குணப்படுவார்கள். நான் இழந்துபோன நிலைமையைத் திரும்பவும் தாரும் என்பதே இந்தச் சாரணத்தின் கருத்து.

பாவம் பெரிய சத்துரு. நாம் அநுபவிக்கக்கூடிய பாக்கியத்தை அநுபவியாதபடி தெகேற்கிறது. நாம் சொல்லக்கூடிய சாட்சியைச் சொல்லாமல் வாயை அடைக்கிறது. நம்மால் குணப்படத்கூடிய ஆத்துமாக்கள் குணப்படாதிருக்கச்செய்கிறது. அநேகருடைய இரத்தப் பழியை நம்மேல் வரச்செய்கிறது. ஆனால் புது ஜீவன், புதிய சிந்தை, புதிய ஆவி, புதிய சந்தோஷத்தைத் தேவன் தந்தருளும்போதோ, திரும்பவும் பிரயோஜனமுள்ளவர்களாகிறோம்.

4. பாவம் துதியையும் ஊழியத்தையும் தடுக்கும் தடை: நீக்கியருளும்!

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் அதைச் செலுத்துவேன்.

தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவி தான்.

தேவனே நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் அவமதியீர்.

சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மை செய்யும்.

எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகன பலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்.

அப்பொழுது உமது பீடத்தின் மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

உமது துதியை அறிவியாதபடி பாவத்தால் என் உதடுகள் மூடியிருக்கிறது. உமக்குச் செலுத்தப்படவேண்டிய துதி தோத்திரப் பலிகள், ஜெபதூபப் பலிகளும் தடைபட்டிருக்கிறது. என் இருதய தூக்கத்தையும் வியாகுலத்தையும் அங்கீகரித்து என் பாவத்தை மன்னியும், என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உமது புகழை அறிவிக்கும்: நீர் பிரியப்படும் ஆராதனை உமக்கு நேராக உமது ஆலயத்திலிருந்து எழும்பும்!

பாவம் தேவனுக்குச் செலுத்தப்பட வேண்டிய துதி தோத்திரத்தை நிறுத்துகிறது பாவியின் வாயை மூடுகிறது; சபையின் தோத்திரத்தை அபத்தமாக்குகிறது. தாவீதின் பாவத்தால் அவன் கீதம் நின்றது; யூதர் பாவத்தால் ஆலயம் அழிக்கப்பட்டது. சபையின் பாவத்தினால் ஆலயத்தின் ஆராதனை தேவனுக்குகந்ததாயிராமற் போகிறது. உத்தம பட்சாதாபக் கண்ணீர் தேவனுக்கினிய தீபம், நொறுங்குண்ட இருதயம் தேவனுக்கிஷ்டமான பலி.

"தேவனுக் கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்"

"தேவனே நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் அவமதியீர்"

சுவிசேஷப்பத்து

காப்புக்குறள்.

பூவினி மேவுறு மூவரி லொன்ற
ஜீவியே காவின் றுணை.

வெண்பா. வேலையுற்பத்தி

1. உல்கொளி யேற்றி யிருபுகழ் வென்ற
மலரண வேசு வினிமொழி—யலவா
வலகெலாஞ் சிந்துண் டருள்பெறு செய்தி
கலமுற வாழ்த்திடு மின்.

க்கக்கோடல்.

2. வினுங் கடைமொழி மாந்தர்கன் மாள்வுழி
செவிமடுத்தியுன்னுவீர் காளும்—புவி யோர்
கற்குரு வேசு கடைமொழி யேற்றி
பொற்புறு ஆழியஞ் செயும்.

வேலையின் மேன்மை

3. அவிரு ணீக்கி யமல தயாபான்
முகமதை யீர்த்திடு வேலை—துகடற
ii தெசலோனி 1. 14. கிறிஸ்தின் மகிமை யடைதல் பொருட்டு
வரித்திடு மாந்த ரிருப்பு.

4. மேன்மையென் சொல்ல மகத்வமென் கூற
வான்மீ தலவுநற் றூதர்—காண்க
1 பேதுரு 1 12. வாசித்து மன்னர்பாற் கைக்
கொடா ஆழியம்
யோசிக்கின் மாணப் பெரிது

5. ஒண்மிகு நற்செய்தி வானுயர் கோன
றிவு
மண்மீ தறைமாக்கட் கண்டோன்ற—
நண்ணு
ஜீவனீத்து மாழ்வுறு சாலைச் தைத்து கல்
லீவருளு மேன்மையென் கொல்.

6. நன்னுலாயைக் கொண்டில கெய்திய தூதவ
னின்புற கூறுரைப் பாவிக்கு—வன்புரு

பேயது ஜீவனை யாற்றி நிலவுலகில் நேர் சமாதானக் காப்பு.

சுவிசேஷகன் மேன்மை.

7. நட்சத்ர மன்ன வெளிலெய்தி மாண் புற
சானியேல் 12. 3. மகூயனர் முன்பிலங்கா
நிற்கவு—மிச்சை
யுனக்கு மிலேனோ? நார்க்களே நீதிக்
சாய்த்
தினமு நிதியங் கூட்டு.

8. எழில்மிகுமிவ் வேலை நடாத்திய
களிப்புற வெய்து சனமென்—
எசாயர 52. 7. மன்னர் நடங்கள் பொ
லிவேயுமன்றே
கொன்னே பல்பல் விரிப்பு.

வேலையினவசியம்.

9. அறுவடை யாகுமனி வேசு வனந்தங்
கிருப்ப நினைந்தவ ரன்றே யுறுத்தி
அத்தமிகு வேலை நடாத்த பலபலபே
ருக்கன் ஜெபந்தேவை பார்—

10. என்றியம்பு மீட்பர் திருவாக்கைக்
கேட்கு
வின்றே விரைந்தேகு வித்தகர்
தொண்டுசெய
உன்பொரு ளாலிமூன்றுந் தத்தஞ்
செய் யிகூணம்
நன்னெசு நாமத்துக் காய்—

J. G. Sundram.

இயேசுவின் பால பருவம்.

மகாவல்லமையோடு பிரவாகித்து விழுகிற நீர் அருவியைக் கண்ணோக்கும்போது, அற்புதமான இந்த நீரோட்டத்தின் உற்பத்தியைப் பார்க்க வேண்டும் என்கிற விருப்பம் நமது மனதில் உண்டாகிறது. பற்பல நிறங்களோடு சிறந்த மேனியுடன் பரிமளிக்கும் புஷ்பாதிகளைக் கண்ணோக்கும்போது, ஆச்சரியமான அந்நிறங்களுக்கும், மேனிக்கும் உறைவிடம் எதுதான் என்று கண்டு கொள்ள ஆசைப்படுவோம். கடவுளுடைய உன்னத சிருஷ்டிகளான மனிதர், உலகம் முழுவதும் வியக்கவும் நன்மையடையவும் தக்கதான மகா உத்தம ஜீவியம் செய்வதைப் பார்க்கும் போதாவது, கேட்கும் போதாவது அன்னாருடைய இளமைப் பிராயம், ஆரம்பஜீவியம் முதலியவற்றைப்பற்றி அறிய அதிகமாய் விரும்புகிறோம்.

மனிதகுமாரன், தெய்வ மனிதன் என்று கூறப்படுகிற நமது ரட்சா பெருமானின் புருஷ பிராயத்தைப்பற்றிநன்றாய் அறிந்து, அவருடைய அற்புத செய்கைகளைப்படித்து, அவருடைய திருவாய்மொழிகளைவாசித்து, அவருடைய தழும்புகளால் குணமாகி, அவருடைய நிக்கத்தால் ஆறுதலையும் அவருடைய சாவினால் ஜீவனையும் பெற்றிருக்கிற நாம், மகாபயபக்தியோடு 'எங்கள் புண்ணிய நாதருடைய ஆரம்ப ஜீவியத்தை அறிய வேண்டுமே' என்று வாஞ்சிக்கிறோம். ஆனால் திருவுளச் சித்தம் எவ்விதமாக இருந்ததோ, இயேசுவின் புருஷ பிராயத்தைப் பற்றி நான்கு சுவிசேஷகர்கள் மகாவிரிவாக எழுதியிருக்க, அவரின் பால பிராயத்தைப் பற்றி மகா சொற்பந்தான் நமக்கு வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய கண்கள் காணக்கூடாதபடி ஒருதிரைச்சீலை மகா பரிசுத்தமான இந்த பாலபருவத்தை மறைத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், வேத வாக்கியங்களின் அற்புத ஒளி (X. Rays) உட்சென்று, இயற்கையாய்ப் பார்க்கக் கூடாத அதிகசத்தியங்களை நமக்கு வெளிப் படுத்துகிறது. நாம் நிற்கிற இடம் பரிசுத்த பூமியானதால், நமது கால்களில் இருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போட்டு பயபக்தியுடன் உள் நோக்குவோம்.

இயேசுவின் பாலபிராயத்தின் தன்மை.

1. இயற்கையான வளர்ச்சி. தன்னை நிரப்பிக்கொண்டிருந்த பரிசுத்த ஆவியானவரால் தூரமான காட்சிகளைத் தரிசித்த ஏசாயா "இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து தழைத்திருக்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புவார்" என்று இவரைக் குறித்து சொல்லியிருக்கிறான். இளங்கிளை எங்கிருந்து புறப்படுகிறது, எவ்விதமாய் வெளிப்படுகிறது என்று பார்த்தவர்கள் இடையாது "அதற்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அதின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை." வேரானது மரத்தின் ஜீவனுகவும், ஆதாரமாகவும், பலமாகவும் இருந்தாலும் வெளிச்சத்திற்குத் தென்படுகிறதில்லை. இலையில்லாமல் மரமுமில்லை. வேரில்லாமல் விருட்சமுமில்லை.

பிள்ளையாகிய இயேசுவினுடைய ஜீவியம் அமைதியாயும் அமரிக்கையாயும், சத்தடியில்லாமலும், பகட்டில்லாமலும் இருந்தது. அந்தப் பிள்ளையைப் பார்த்தோர் நின்று அதிசயிக்கக்கூடிய விதமாய்ப் பகட்டான, விசேஷமான, வேறுயாரிடத்திலும் இல்லாததான குணாதிசயம் காணப்படவுமில்லை. இந்தப் பிள்ளை மகா விசேஷித்த பிள்ளை, பிற்காலத்தில் ஒரு மகாத்துமாவாக விளங்கும்' என்று சொல்லப்படக்கூடியதாயும் இருக்கவில்லை வளர்ந்து பூரண புருஷனானபோது "இவன் யார்? இவன் யாரோ சேப் பின் குமாரனல்லவா!" என்று யாவரும் சந்தேகிக்கவும் ஆச்சரியப்படவும் தக்கதாய், இளமைப்பிராயம் பகட்டற்றதாயும், சாதாரணமாகவும் இருந்தது. "அவருக்கு அழகுமில்லை, சவுந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது." (ஏசா. 53: 2).

சாதாரணமான பிள்ளைதான். ஆனாலும் சாதாரணமாய்ப் பிள்ளைகளிடத்தில் காணப்படும் தர்ச்சுபாவங்கள் காணப்படவுமில்லை. கீழ்ப்படியாமை, முரண்டுத்தனம், சண்டை, வீண் அலைச்சல், கோபம், மூர்க்கம் இப்படிப் பிள்ளையில் தென்படவில்லை. "அவர் கூக்குரலிடவுமாட்டார்; தம்முடைய சத்தத்தை உயர்த்தவும், அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார்" என்று முன்னறிவிக்கப்பட்டிருந்தது. கள்ளுபிடியாகமங்களில் இந்தப் பிள்ளையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற சதைகள் வியர்த்தமும், வீணும், அவ்பக்தியுமான கட்டுக்கதைகள். "இவன் சிறுபிராயத்தில் துஷ்டப்பிள்ளை, முரட்டுப் பையன், சண்டைக்காரன்" என்று பிற்காலத்தில் இவர்பேரில் பொறுமைகொண்ட

சத்துருக்கள் முதலாய் சொல்ல இடமிருக்கவில்லை. அமரிக்கையான இந்த ஜீவியத்தில் பின் வேறு என்னதான் காணப்பட்டது? இளமைப் பிராயத்திலேயே தான் தெய்வ அம்சம் சர்வலோக தெய்வத்தினுடைய குமாரன் (லூக். 2: 49) என்றும், அவருடைய அகாதி நிர்மானத்தை நிறைவேற்றபூமிக்கு அனுப்பப்பட்டவர் என்றும் உணர்ந்து, மகாமகத்துவமான அந்தோக்கம் நிறைவேற பயபக்தியோடு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார்.

சகல பிள்ளைகளும் வளரும் விதமாகவே இவரும் வளர்ந்தார். இவரிடத்தில் மனித இயற்கைக்கு விரோதமும் விந்தியாசமுமான யாதொரு தேற்சியாவது வளர்ச்சியாவது காணப்படவில்லை. "அவர் மனுஷசாயலாகி மனுஷரூபமாய்க் காணப்பட்டார்."

2. கீழ்ப்படிதல். ராஜாதிராஜா, கர்த்தாதிகர்த்தர் என்னும் நாமத்தைத்தாங்கி, எல்லா நாவுகளும் கர்த்தர் என்று அறிக்கை பண்ணும்படி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைப் பெற்றுக்கொண்ட இத்தப்பிள்ளை பெற்றோரோடுகூட 'அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்". மூப்பது பிராயமளவும் பெற்றோருக்கு அடங்கியிருக்கவும், பிள்ளைக்குரிய கடமையைத் தவறுமல் நிறைவேற்றவும் சம்மதித்தார். தாய் ஏழை; பலவீனமான ஸ்திரீ; என்றாலும் "நீ இத்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் அதை எனக்கு வளர்த்திடு" என்னும் தெய்வ கட்டளையையும் உச்தரவாதத்தையும் பரத்திலிருந்த பெற்றவள். ஆகையால் அடங்கினர், கீழ்ப்படிந்தார். தாயைக் குறும் பத்தை சவரட்சணைசெய்து வந்த காலத்திலும் தாய் சொல்வதை தவறுமல் நடந்தார். ஊழிய ஆரம்பத்தில் ஒரு கலியாண வீட்டில் திராட்சரசம குறைவுபட்டபோது, தாயார் கட்டளையை உடனே நிறை வேற்றவர் என்று அறிந்திருந்த இனத்தார்கள் அந்த அம்மாள் தங்கள் குறைவைக் கண்டுகொள்ளும்படி செய்தார்கள்.

எருசலேமிலிருந்து வந்த மூப்பர், ரபிகள் முதலியோரைக் கண்டித்து, வாயடக்

னைதைப் பார்த்துத் நிலையற்ற இனத்தார்கள், தாபாரைக்கொண்டு அவளைத் திருப்பி விடலாம் என்று பிரயாசப்பட்டார்கள் (மாற்கு. 3: 31, 32).

இவ்விதம் கீழ்ப்படிதல் ஏழைத்தாயும்ஆச்சரியப்படும்படியாக இருந்தது. "அவருடைய தாயார் இத்தச் சங்கதிகளெயெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்".

3. தாழ்மையான வேலை. இயேசுவானவர் தமது ஊழியதின் மத்தியில் ஓர் முறை தாம் வளர்ந்த ஊருக்கு வந்து ஜீவவார்த்தைகளைக் கொடுத்தபோது, அவரைக் குறித்து இடறலடைந்த அவ்வூரார் அவர் வார்த்தைகளைக் கேட்க மனதில்லாமல் "இவன் தச்சன் அல்லவா?" என்று இகழ்ந்து பேசினார்கள். அவர் தச்சனுடைய குமாரனுகமட்டுமல்ல, அவரே தச்சனுகவும் இருந்தார்.

வானுதி வானங்களையும் அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்த அவருடைய சர்வ வல்லமை பொருந்திய கரங்கள், அவர் மனுஷர் நடுவில் கூடாரம் போட்டு சஞ்சரித்தபோது, உளி, சுத்தியல், சம்மட்டி முதலிய ஆயுதங்களைப்பிடித்து வேலை செய்தன. தன்னுடைய மகத்துவ ஜீவியத்திற்குத் தச்சுவேலை, கைவேலை இழிவல்லவா என்று ஒருநாளும் அவர் மனதில் எண்ணம் உதித்ததில்லை. மனுஷன் தன் ஜீவனுர்த்தத்திற்காக உண்மையோடு செய்யும் எந்தத் தொழிலையும் தமது கரத்தின் வேலையினலும், தமது சொந்த மாதிரியினலும் பரிசுத்தப்படுத்தி மேன்மைப் படுத்தினர்.

'என்னுடைய மறைவான வல்லமையினல் இத்தக் கல்லுகளை அப்பமாக்கி விடக்கூடும்' என்று, தெய்வத்தால் கொடுக்கப்பட்ட வல்லமையை அவமாக்காமல், பிற்காலத்தில் அவருடைய மகாபிரதான அப்போஸ்தலன் அறிக்கையிட்டபடி "எனக்கும் என் ஜூடனேகூட 'இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இத்தக் கைகளே வேலை செய்தது" என்று சொல்லக்கூடிய வராக இருந்தார். (சாதாரணமாக எண்ணப்படுகிறபடி, தமது ஊழியத்தின் ஆரம்பத்திற்கு சில வருஷங்களுக்கு முன்னேயே விதவையாய் விடப்பட்டிருந்த) தமது தாயாருக்கும், குடும்பத்திற்கும், ஊழியகாலத்தில் முற்றிலும் தமது பிதாவுக்கடுத்தவைகளிலேயே யிருக்கும்போது, ஜீவாதாரத்திற்கு வேண்டிய சகலவற்றையும், ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன் தமது சொந்தக் கைகளினுல், சுறு சுறுப்போடும் விடாமுயற்சியோடும் சுவதரித்து வைத்தார் என்று நாம் சாதாரணமாக எண்ணலாம்.

4. வேத ஆராய்ச்சி. யூதருக்கு அக்காலத்தில் வேதாகமமாக இருந்த "தியாயப் பிரமாணம் தீர்க்கதரிசனங்களையும்" கசடறக்கற்றார். எந்நிமித்தத்திலும் எந்த நேரக்கத்திற்கும் உடனே எடுத்தாளக்கூடிய விதமாய்த் தளபாடமாக அவ்வாக்கியங்களைப் படித்திருந்தார். சுவிசேஷங்களில் வலாயப்பட்டிருக்கும் அவருடைய வாய் மொழிகளில் அநேகம் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துச்சொல்லப்பட்டவை. தம்முடைய கஷ்டமான, இழைப்பாற நேரமில்லாத தொழிலின் மத்தியிலும் வேதவாசிப்புக்கென்று எப்படியாகிலும் நேரம் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்தார். யாதொரு பள்ளிக்கூடத்திற்கும் போகாமல், (மாற்கு. 6: 2; லூக்., 2: 47. மத்., 11: 28 யோவா 7: 15) சுயபிரயாசையோடு கிடைத்த உதவிகளைக்கொண்டு (லூக். 2:46), வாசிக்கக் கற்றுக்கொண்டு, தேவவசனத்தைவாசித்து வந்தார். பேர்போன ஞானிகளும், அவர்களுடைய பாதத்தில் கல்விகற்ற ஜேஷ்ப் பிள்ளைகளும் வேத அறிவில் அவரை மட்க்கவாவது அவர் கேட்ட வேதக்கேள்விக்கு உத்தரவு கொடுக்கவாவது கூடவில்லை (மாற். 12).

வேறும் வாசிப்பாக அவ்வசனங்களை வாசிக்கவில்லை. தமது மனதை முற்றிலும் அவைகளில் செலுத்தி, பயபக்தியோடும் ஆத்திரத்தோடும், ஆராய்ச்சி ஆவியோடும் கற்றறிந்து உட்கொண்டார். "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களுக்கு" "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லிய

வைகளை விவரித்துக் காண்பிக்கக்கூடியவராக" இருந்தார். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே".

5. ஆயத்தம். சுயஅறிவு வந்த உடனேயே தம்முடைய ஜீவிய கோக்கத்தை அறிந்துகொண்ட அவர், தம்மை அதற்கென்று ஆயத்தப்படுத்தவும் தொடங்கினர், எல்லாம் கடவுளுக்குச் சித்தமான காலத்தில் அவருடைய சித்தத்தின்படியே நடக்கும் என்று சொல்லிக் கவலையற்றவராய் இருந்துவிடவில்லை.

(1) மலைநாடான நாசரேத்தூரில் காணப்படக்கூடிய சகல இயற்கைக் காட்சிகளையும் நன்றுய் நுட்பமாய்க் கவனித்து வந்தார். அடிக்கடி வெளியேபோய் உலாவிச் சுற்றித் திரிந்து 'காட்டுப்புஷ்பங்கள், லீலிபுஷ்பங்கள், காட்டுப்புல், ஆகாயத்துப் பறவைகள், அடைக்கலான் குருவிகள், கழுகுகள், சூரிய உதயம், சூரிய அஸ்தமானம், வானம், மேகம், மந்தாரம், சந்திரன், நட்சத்திரங்கள், வயற்காடு, வயல், வேலைப்பு, முளைக்கும் செடிகள், .கதிருசெடி, திராட்சத்தோட்டம், அத்திமரம், வெள்ளாகென், செம்மறியாகென்' முதலானவைகளைக் கவனத்தோடும், களிப்போடும் பார்த்துக் கொண்டு வந்தார்.

தேவனுடைய புஸ்தகத்தையும் (Book of God), இயற்கையாகிய புஸ்தகத்தையும் (Book of Nature) விடாமல் படித்து வந்தார்.

(2) தம்மைச் சுற்றிலும் உள்ள ஜனங்களின் தன்மை, ஜீவியம், அவசரங்கள், குறைவுகள், முதலியவற்றை அறுதலபத்தோடும், உட்பார்வையோடும், கவனித்துக் கொண்டு வந்தார். ஆயக்காரருடைய அநியாயங்களையும் தாழ்வான நிலைமையையும், பரிசேயருடைய ஜெபதபங்களையும், பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணி விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிற அவர்கள் மாய்மாலத்தையும், ஏரோதியரின் வஞ்சகத்தையும் கூர்த்தகோயும், சதுசேயரின் பேராசை, பணஆசை, மூர்க்கம், உலகநேசம், அவநம்பிக்கை முதலியவற்றையும், வேதபாரகருடைய பெருமை, தற்புகழ்ச்சி தன்னயத்தையும், சாதாரண ஜனங்களுடைய அறிவீனம், தீமை தீமையென்று மாறிவிடும் தன்மையையும் அதிகத் திட்டவட்டமாய்த் தெரிந்து கொண்டார். ஒவ்வொரு வகுப்பாரையும் சீர்திருத்துவதற்கென்று இவ்வாறு கவனித்து வந்தார்.

(3) பிதாவோடு வெகு நேரத்தைப் பின்னிட்டு அவருடைய ஆலோசனைகள், சித்தம், தீர்மானங்களை அறிந்து வந்தார். மலையில்போய் அதிகமான நேரத்தை ஜெபத்தில் பின்னிவது அவருக்கு "வழக்கமாக" இருந்தது. எந்த எந்த இடத்தில், எந்த எந்த காலங்களில் என்னென்ன ஊழியஞ்செய்ய வேண்டுமென்பதை ஜெபத்தோடு முன் குறித்துகொண்டு வந்தார். அவருடைய திட்டமான கால ஒழுங்குப்படியே ஊழியத்தையும் நடத்தினர். ஊழியத்தின் இடங்கள், ஊழியத்திற்கு உதவிபாட்கள், ஊழிய முறைகள் எல்லாவற்றையும் காலத்திற்கு முன்னதாகவே பிதாவுக்குள் ஒழுங்குசெய்து வைத்திருந்தார்.

6. தேகாப்பியாசம். கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பயபக்தியோடும், தங்கள் ஜீவியத்தின் மாதிரியாகவும் ஆராய்ந்து படிக்கிற அநேகர் இதைக் கவனிக்கிறதேயில்லை. ரட்சகருக்கு ஒரு சரீரம் இருந்தது; அது காலொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்துகொண்டே வந்தது என்று எண்ணுவார் முதற்கொண்டு, வெகு சொற்பம். ஆவியின் உற்சாகத்தை சரீரத்தின் பலம்தான் தாங்கவேண்டியது என்று உணர்ந்த அவர் சரீரத்தைக் கவலைதாழ்ச்சியாக விட்டுவிடாமல் தேகாப்பியாசத்தோடும் சுகாதார முறைகளோடும் அதைப் பேணி வந்தார். மூன்றரை வருஷகாலமாய் இரவும் பகலும் ஓய்வில்லாமல், இளைப்பாறவும் நேரமில்லாமல் இருந்தும், சுகம் கெடாமல்பலம்குன்றுமல் உழைத்துவர சக்தி எப்படிக்கிடைத்தது? தெய்வ அம்சத்தோடுகூடியசரீரம் உடையவராயிருந்ததினுலா? இல்லவே யில்லை. இளமைப் பிராயத்திலும் வாலிபப் பிராயத்திலும் தேகத்தை சரியான படி கவனித்துப் பழக்கி வந்ததினுல்தான்.

பசி, தாகம், மழை, குளிர், பனி, வெயில் உஷ்ணம், எதிலும் அவருடைய ஆவியும் சரீரமும் பின் வாங்கவில்லை. பாடுபட்டவாரத்தில், வியாழன் சாயங்காலத்தில் ஆகார்ம் அருந்தின அவர், குத்து, காயம், கொடிய நோவு, ரதசோரி, வேதனைகளோடு வெள்ளிக்கிழமை பிற்பகல் மட்டும் தம்மைத் தாங்கிக்கொள்ளக்கூடியவராக இருந்தார். பிதாவினுடைய சித்தத்தை ஆவியிலும் சரீரத்திலும் நிறைவேற்றி வந்தார். "நாம் முழுஇச்சயமாய் நம்புகிற சங்கதிகளை ஆரம்ப முதல் கண்ணுக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் நமக்கு ஒப்புவித்தபடியே. அவைகளை ஒழுங்காய் நமக்கு எழுதின" லூக்கா சுவிசேஷகன் "ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிந்து" இயேசுவின் பால பருவம், வாலிப பருவத்தையும் பின்வருமாறு குறித்திருக்கிறார்:—

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்".

மனிதர் யாவராலும் நேசித்து, அவர்களால் நேசிக்கப்பட்டும் வந்தார்.

இதோ! இந்த மனிதன்! இதுவே தேவகுமாரனுடைய பாலபருவம், வாலிபப்பிராயம். மனிதனுடைய ஜீவியத்தின் உன்னதமாதிரி. தெய்வ மனிதனுக ஜீவிக்க விரும்புகிற ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சட்ட ஜீவியம். "அவர் தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு சகலவிதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது." பாவியரே, வாலிபரே, "இவரே நம்முடைய தெய்வம், இவருக்காகவே காத்திருந்தோம், இவரே நம்மை ரட்சிப்பவர்". இவரோ "நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்"

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. இயேசுவை நோக்குங்கள்.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

சி. எம். எஸ் கம்மாமேட்டு டிஸ்ட்ரிக்டில் ஊழியஞ்செய்யும்படியாக கடந்த 18 மாதங்களாக மருலிபட்டணத்தில் ஆயதப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு டோர்ணக்கல்லிலேயே மகாகனம் அத்தியக்ஷரவர்களின் சமீபத்தில் சில மாதங்களாலுலும் பின்னிடக்கூடியதான பெரிய சிலாக்கியம் கிடைத்ததற்காக நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். எத்தனையோ வருஷங்களாய்ப் பார்க்கும்படி ஆசித்த டோர்ணகல்லில் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி வந்து இறங்கினோம். அடுத்த நாள் ஆராதனைக்கென்று பாட்டுகள், அன்று சாயங்காலத்தில் ஆயத்தம்பண்ணும்படி ஆண், பெண், பிள்ளைகள் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பங்களாவுக்கு வந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்தது எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. காடுமேடாய் அலைந்து, உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் கிடைக்காமற் கஷ்டப்பட்டுப் பொய், தாஷணம் முதலியவைகளைத் தாராளமாய்ப் பேசின இந்தப் பிள்ளைகள் இவ்வளவு சுத்தமாய் உடுத்தி, ஒழுங்காயிருந்து அருமை ரட்சகரின் சமூகத்திற்கு ஸ்துதி செலுத்தும் பாட்டுகளைப் பாடுவதைப் பார்த்ததைப் பார்க்கிலும் பெரிய அற்புத காட்சி வேறொன்றும் வேண்டுமோ?

மறுநாளாகிய ஓய்வுநாளில் ஆராதனைக்குப் போய் இங்கிருக்கும் கிறிஸ்தவர்கள், மிஷனெரிமார் எல்லாரையும் பார்த்தோம். எல்லாருடைய மனதும் ஒரே சோகத்தினமேலிருக்கிறதாக காணப்பட்டது. அதாவது அந்த வாரம் கம்மாமேட்டில் கூடக்கும் ஆவிக்குரிய கூட்டங்களின் மேல்தான். என்னைப் பார்த்த சகோதரர் எல்லாரும், ஐயா நீங்கள் கம்மாமேட்டிற்கு வருகிறீர்களா?" என்றுதான் கேட்டார்கள். நானும் தேவகிருபையால் அக்கூட்டத்திற்குச் செல்லும் சிலாக்கியம் பெற்றேன். கம்மாமேட்டில் அக்டோபர் மாதம் 3-ம் தேதிமுதல் 10-ம் தேதிவரையிலும் நடந்தேறின ஆவிக்குரிய கூட்டங்கள் ஆயிரா

னவரால் நடத்தப்பட்டன என்று தெளிவாய் துலங்கினது. டோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களினத்திற்கு வெளியிலிருந்து எல்லூர் கனம் றெனர் ஐயரவர்களும் அம்மாளும், கந்தியாவிலிருந்து உல்பிராம் மிஸியம்மாளவர்களும், பெஸ்வாடா டிஸ்ற்றிக்டிலிருந்து கனம் சாலொமோன் பாக்கியநாதன் ஐயாவர்களும் இக்கூட்டங்களுக்கு வந்து கேட்டோர் மனதை பரவசப் படுத்தத்தக்கதாக பிரசங்கங்கள் செய்தார்கள். மகாகனம். அத்தியக்ஷரவர்கள் அதேக பிரசங்கங்கள் செய்ததோடு பிலிப்பியர் நிருபத்தை காலை தோறும் யாவருக்கும் பிரயோஜனமாகவும் எளிதில் விளங்கக்கூடியதாகவும் கற்றுக் கொடுத்தார்கள். அத்தக் கூட்டங்களுக்கு ஒவ்வொருநாளும் ஊழியர்கள் ஆணும், பெண்ணும் தங்களே பிரயாசப்பட்டு எழுதிக்கொண்டு வந்த குறிப்புகளே அவர்கள் இக்கூட்டங்களில் எவ்வளவு உற்சாகமாயிருந்தார்களென்று காண்பித்தது. மேலும், பிரதிசாயங்காலத்திலும், கிராம சபைகளுக்கு ஆராதனை நடத்தி வேதபாடங்களைக் கற்றுக் கொடுக்கும் விதத்தைப்பற்றி அத்தியக்ஷரவர்களே போதனைசெய்து, அங்கு வந்திருந்த சில சபையாருக்கு மாதிரி பாடம் கற்றுக் கொடுக்கும்படி சிலரை ஏற்படுத்தி இவ்விதமாக ஊழியர்களுக்கு அதிக பிரயோஜனமுண்டாகச் செய்தார்கள். அதே நேரத்தில் பெண்களுக்கென்று கனம் மிஷப் அம்மாளவர்களும், உல்பிராம் மிஸியம்மாளவர்களும், கம்மாமேட்டுக் கனம் டாக்டர் மிஸியம்மாளவர்களும், கூட்டங்கள் நடத்தினார்கள்.

8-ம் தேதி ஞாயிறு காலையில் பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. அதில் 300 பேருக்கு அதிகமானவர்கள் பங்கு பெற்றார்கள். அந்த ஆராதனையில் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் கர்த்தருடைய ராப்போஜனத்திற்கு வருவோர் செய்யவேண்டிய ஆயத்தம், அதில் பங்கு பெறுவோருடைய உத்தரவாதம் முதலியவைகளைப்பற்றி அதிக ஊக்கமாய் பிரசங்கம் செய்தார்கள். அன்று சாயங்கால ஆராதனைமுடிந்தபின், ஊழியர்கள் பவுஞ்சு பவுஞ்சாகக்கம்மாமேட்டின் பல விடங்களுக்கும் சென்று சுவிசேஷ எக்காளத்தை ஊதினார்கள். அப்போ டோர்ணக்கல்லிலிருந்து வந்த சபையாரில் சிலர் கிறிஸ்து மார்க்கம் தங்கள் ஜீவியத்தில் செய்திருக்கும் பெரிய மாறுதலைப்பற்றி சாட்சி கொடுத்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் சிறு வயது முதல் திருட்டுத் தொழிலில் பழகி அநேக கில்லறை களவுகளை கடப்பிதது இப்போ கிறிஸ்துவின் ஆவியால் மறுஜென்மடைந்தவர்களானதால் அவர்களுடைய சாட்சி அதிகப் பலனை கொடுக்கும் என்பதற்கு சந்தேகமில்லை.

10-ம் தேதி செவ்வாய் ஒரு விசேஷ தினமாயிருந்தது. அன்று சுவிசேஷ பிரபல்லியத்தில் சபைகள் எவ்வளவு தூரம் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி ரிப்போர்ட்டுகள் கொடுக்கப்பட்டதோடு, புதிதாக ஆரம்பித்திருக்கும் டோர்ணக்கல் டயோசிஸ் மிஷனெரி அசோஷியேஷன் சம்பந்தமாக முழுக் காலுகாலில் வேலை செய்யும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஊழியர்கள் இருவரும் தாங்கள் அவ்விடம் போய் பார்வையிட்டு வந்ததைப்பற்றி ரிப்போர்ட் சொன்னார்கள். இந்தப் புதிய மிஷனில் தேவ ஆசீர்வாதம் பூரணமாய் விளங்கும்படியாக ஜெபிப்போமாக. மேலும் திருநெல்வேலியின் பிள்ளையாகிய டோர்ணக்கல் இவ்வளவு சிறுபிராயத்திலே மிஷனெரி ஊழியத்தில் பிரவேசிக்கும் ஸ்வாக்கியத்தை பெற்றதற்காக காம் பரம பிதாவைத் துதித்து, அவர் தாமே இந்த முயற்சியை டோர்ணக்கல் சபைக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக்கும்படி ஜெபிப்போமாக. அன்று ராத்திரி ஆலயத்தில் நடந்த கலைசி கூட்டத்தை ஒருவருக்கும் மறக்க முடியாது. தேவ ஆவியானவர் அக்கூட்டத்தில் பலமாய் இறங்கி செய்து அநேக ஆத்துமாக்கள் தங்களை முழுவதுமாய்க் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்யும்படி செய்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம். இந்தக் கூட்டங்களுக்குச் சென்ற ஊழியர்கள் எல்லாரும் தாங்கள் அங்கே பெற்ற ஆசீர்வாதங்களை இழந்து போகாமல் அவைகளின் ஜீவனாய் தங்கள் சபைகளுக்கு

அவர்கள் பேராசீர்வாதமாயிருக்கும்படி தேவன் தாமே கிருபை செய்வாராக.

செவ்வாய் இரவிலும், புதன் காலையிலுமாக இங்கிருந்து போன ஊழியர்கள் எல்லாரும் தோர்ணக்கல்லுக்குத் திரும்பினோம். கம்மாமேட்டு மிஷனெரியாகிய கனம் எல்லியற் ஐயரவர்கள் அங்கு வந்திருந்த எல்லாருக்கும் விசேஷமாக அந்நிய நாட்டாரான தமிழ் ஊழியர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் வெகு அருமையாய் ஒழுங்கு செய்திருந்தார்கள்..

ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யும்படியாக தெலுங்கு நாட்டின் பலவிடங்களிலும் சிதறியிருக்கிற உங்கள் சகோதரராகிய எங்களுக்காக ஊக்கமாய் ஜெபியுங்கள்.

ஜெபமே ஜெயம்.

W. T. சிமியோன்.

(டேவிட் லிவிங்ஸ்ற்றன் தொடர்ச்சி.)

இவ்விடத்தில் இருக்கும்போது லிவிங்ஸ்ற்றன் 130 மைல் பிரயாணஞ்செய்து, பிரமாண்டமான ஸாம்பஸி என்னும் நதியைக் கண்டு பிடித்தார். இந்த இடத்தில் ஒரு மிஷன் ஸ்தாபிக்க விரும்பினார். ஆனால் மக்கோலாலருடைய இடம் சதுப்பு நிலமாயும், அடிக்கடி காய்ச்சல் வரக்கூடிய இடமாயும் இருந்தபடியால் தன் மனைவி பிள்ளைகளை யெல்லாம் இங்கிலாந்திற்கு அனுப்பி விட்டார். செபிற்றுவானியின் மகன் செக்களற்று இப்போது தலைவனாக இருந்து, மிஷனெரிக்கு வேண்டிய சகலவற்றையும் கொடுத்து வந்தான். ஆனால் வேதம் வாசித்தால் தன் ஜீவியத்தை மாற்றி தன் இன்பங்களை விட்டுவிட வேண்டியதிருக்கும் என்று எண்ணி வேதமே பக்கத்தில் வரக்கூடாது என்று சொல்லி விட்டான். ஆனால் அவனுடைய மாமனும், மற்றும் சிலரும் அதை வாசிக்கப்படித்து, அதில் மோசமான ஒரு காரியமுமில்லை என்று சொன்னபோது, அவனும் அதை வாசிக்க பிரியப்பட்டான். லினியான்ற்றி என்ற இந்த இடத்தில் இருக்கும்போது, லிவிங்ஸ்ற்றன் கொடிய காய்ச்சலினால் பீடிக்கப்பட்டார். ஆதலால் சுகத்திற்கு அனுகூலமான வேறொரு இடத்தைப் பார்க்கும்படிப் புறப்பட்டார். ஆப்பிரிக்காவின் மேற்குக் கரைக்குப்போய் அங்கே சரியான இடம் காணக்கூடாமல், பிறகு கிழக்குக்கரைக்குப் போனார். செக்களற்றும் இவரோடேயே சென்று கொண்டிருந்தான். ஒரு தடவை கொடிய மழை பெய்தபோது தன்னுடைய மேல் வஸ்திரத்தை மிஷனெரிக்குக் கொடுத்துவிட்டுத் தான் ஈரத்தரையில் படுத்துக்கொண்டான். இந்தப் பிரயாணத்தில் தான் லிவிங்ஸ்ற்றன் ஸாம்பஸி நதியின் மகத்துவமான அருவியைக் கண்டு பிடித்து, சக்கரவர்த்தினியின் பேரால் அதை விக்ற்றோரியா அருவி என்று குறித்தார்.

இவ்விதமாகப் பதினாறு வருஷம் உழைத்துவிட்டு இங்கிலாந்திற்குப் போனார். போன சமயம் கிறிஸ்மஸ் பண்டிகை நாட்கள். ஒரு பெரிய சங்கக்கூட்டத்தில், மகா ஷாப்ற்ஸ்பரி பிரபு இவரைக் குறித்துப் புகழ்ந்து பேசி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடப்பட்ட வானலோகத்தின் கீதத்திற்கு இசைவாகத் தன் ஜீவியத்தையும் ஊழியத்தையும் நடத்தினவர் என்று சகல ஜனங்களுக்கும் தெரிவித்தார். இன்னமும் பெரிய கௌரவங்கள் இவருக்குக் கொடுக்கப்பட்டன. இவருடைய வற்புறுத்துதலினால் ஆக்ஸ்பர்ட், கேமரிட்ஷ் சர்வகலாசாலைகள் ஆப்பிரிக்கா மிஷன் ஒன்று ஸ்தாபித்தன. விக்ற்றோரியா ராணியம்மாள் ராஜ சமுகத்திற்கு இவரை அழைத்து அரைமணி நேரம் அன்பாய் பேசிக்கொண்டிருந்தார்கள். இங்கிலாந்தில் ஒரு வருஷம் பூராவாக செலவிட்ட பிறகு, 1858-ம் வருஷம் வேறு சிலரோடும், தன் மனைவியோடும் ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன், சுதேசிகளோடு எவ்விதமாய் நடந்து கொள்ள வேண்டும், அவர்கள் கொடுப்பவைகளை அன்போடு ஏற்றுக்கொள்ளுவது, அவர்களை அதிக பட்சமாய் நடத்துவது முதலியவைகளைப்பற்றி தன்னோடிருந்தவர்களுக்குத் திட்டமான கட்டளைகள் கொடுத்தார்.

68-ம் சங்கீதம்.

இது ஓர் ஜெய கீதம். ஏகோவாவின் வல்லமையையும் மகிமைப் பிரதாபத்தையும் இதில் ஆர்ப்பரிப்புடன் கொண்டாடிப் பாடியிருக்கிறது. பாஷை நடையும் செய்யுள் இயலும் மகா சிறப்பானதென்று எபிரேயப் பண்டிதர் சொல்லுவர். இதின் செய்யுளடிகள் ராஜகோலத்துக் கேற்றவை. இதின் பொருள் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் சக்தியுள்ளது. இதின் வார்த்தைகள் ஆவியை உற்சாகப்படுத்தும் தன்மையுடையவை.

எக்காலத்தில், யாரால், இது பாடப்பட்டதென்று திட்டமாய்ச் சொல்ல வழியில்லை. சரித்திரச்சுட்டுகளையும் பாஷை ஒற்றுமையையும்புகவனிக்குங்கால், சிறையிருப்புக் காலத்தின் கடைசிப்பாகத்தில்—அதாவது, ஏசாயா. 40—66 வரை எழுதப்பட்ட அதே காலத்தில்—இதுவும் எழுதப்பட்டிருக்கலாம். என்பது பல வேத சாஸ்திரிகளின் அபிப்பிராயம். காலக்குறிப்புத் தெளிவில்லாததால் பொதுவாக வியாக்கியானக் கஷ்டம் மெத்த. அதிலும் தமிழ் வேதாகம மொழி பெயர்ப்பின் வேறுபாட்டினால் பல வாக்கியங்கள் கருத்து மயங்கி நிற்கிறது.

இச்சங்கீதத்தை முக்கிய மூன்று பாகங்களாக வகுக்கலாம்:—

(1) முகவுரை வா. 1—6.

(2) தேவ வல்லமைக்குச் சரித்திரத் திருஷ்டாந்தம். வா. 7—18.

(3) அவர் சம்பூரண ஜெய மடைவார் என்ற தீர்க்கதரிசனம். 19—35.

I. முகவுரை

சரணம் 1.

தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்து
[ருக்கள் சிதறுண்பார்கள்!
அவரைப்பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக
[ஓடிப்போவார்கள்!
புகை பறக்கடிக்கப்படுவது போல,
அவர்களை நீர் பறக்கடிப்பீர்!
மெழுகு அக்கினிக்கு முன் உருகுவதுபோல,
துன்மார்க்கர் தேவ சமுகத்தில் அழிவார்கள்.
நீதிமான்களோ தேவசமுகத்தில் சந்தோஷித்து,
மகிழ்ந்து களி கூறுவார்கள்.

சரணம் 2.

தேவனைப்பாடி அவருடைய நாமத்தைக் கீர்த்
(தனம் பண்ணுங்கள்!
வனாந்தர வழியாய் ஏறி வருகிறவருக்கு பெரும்
(பாதை போடுங்கள்!
அவர் நாமம் யேகோவா! அவருக்கு முன்
பாகக் களிகூருங்கள்!
தமது திரு உறை விடத்திலிருக்கும் தேவன்,
திக்கற்றவர்களுக்குத் தகப்பன், விதவைகளுக்கு
(நியாயாதிபதி.
தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல்
(ஏற்படுத்துகிறார்.
கட்டுண்டவர்களை வெளியேற்றி, வாழ்விக்கிறார்.
துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்.

வனாந்தரத்தில் உடன்படிக்கைப் பெட்டி புறப்படும்போது சொல்லப்படும் வார்த்தைகளைச்சொல்லி, இச்சங்கீதம் ஆரம்பிக்கிறது. (எண். 10: 35). "தேவன் எழுந்தருளி, தமது சத்துருக்களை அழிக்க வருகிறார். அவரைப் போற்றி வாழ்த்திப்பாடுங்கள். வனாந்தரத்தில் வழியை ஆயத்தப்படுத்துங்கள். (ஏசாயா. 40: 3)! அவர் திக்கற்றவர்களுக்குக் கதி; சிறைப்பட்டவர்களை விடுதலையாக்குகிறவர்!" என்று இச்சரணங்களில் சங்கீதக்காரன் ஜனங்களை அழைக்கிறான்.

II. தேவவல்லமைக்குச் சரித்திரத் திருஷ்டாந்தம்.

சரணம் 3.

தேவனே, நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்
பாகச் சென்று
வனாந்தர வழியாய் நடந்து வருகையில்—பூமி
அதிர்ந்தது!
தேவனுக்கு முன்பாக வானமும் பொழிந்தது!
இஸ்ரவேலின் தேவனாகிய தேவனுக்கு முன்பாகவே
[இந்தச் சீனாய் மலையும் அசைந்தது!
தேவனே சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணி
[னீர்.
உமது சுதந்தரம் இளைத்திருந்தபோது அதைத்
(திடப்படுத்தினீர்.
உமது சபை அதிலே குடியேறிற்று.
தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைக
(ளைப் பராமரிக்கிறீர்!

இஸ்ரவேல் ஜனங்களை முதல் முதல் கர்த்தர் முன்னின்று நடத்தி அவர்கள் சுதந்தர பாகமான கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்ததை இச்சரணத்தில் விவரித்திருக்

கிறது. தேவரீர் உமது ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்தபோது வனாந்தரத்தில் எத்தனை மகத்துவ அதிசயங்களைக் காட்டினீர். "சீனாய் மலையில் பூமியதிர்ச்சியும், மின்னலும், மழையும் உண்டாகச் செய்தீர். இவ்விதமகிமைப் பிரதாபத்துடன் அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, அவர்களை உமது சுதந்தரமாகிய கானான்தேசத்தில் குடியேற்றி, அடிமைப்பட்டிருந்த அந்த ஜனங்களுக்குச் செழிப்பான தேசத்தைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றினீர்; நீர் ஒடுக்கப்பட்டவர்களைப் பராமரிக்கிற தேவனன்றோ" என்ற வாறு. இச்சரணத்தில் ஆரம்ப வார்த்தைகள் தெபோராளின் கீதத்திலிருந்து எடுக்கப் பெற்றது. (நியா. 5: 4, 5).

சரணம் 4.

ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகிறார்—
ஜெயத்தைப் பிரசித்தப்படுத்துகிற ஸ்திரீகள் ஓர் [பெரியசேனை! (யாத். 15: 20.) 1 சாமு. 18: 6.)
சேனைகளின் ராஜாக்கள் ஓடுகிறார்கள்!, ஓடுகிறார்கள்! (நியா. 5: 12.)
வீட்டிலிருக்கிறவள் கொள்ளையைப் பங்கிடுகிறாள்! (நியா. 8: 30)
நீங்கள் தொழுவங்களின் நடுவே இடங்காலும்
நியா. 5: 16.)
புருச்சிறகுகளில் வெள்ளி மூடியிருக்கும்; அதின்
இறகுகளில் பசும் பொன் ஜொலித்திலங்கும்!
சர்வவல்லவர் அதில் ராஜாக்களைச் சிதறடித்த போது
அசல்மோனில் உறை மழை பெய்கிறதைப்போலிருந்தது!

இது கஷ்டமான ஓர் சரணம். பற்பல காலங்களில் சர்த்தர் தமது ஜனத்துக்கருளின ஜெயத்தைச் சுருக்கிச் சொல்லிப் பாடியிருக்கிறது. சேவன் திருவாய் மலர்ந்து ஒரு வார்த்தை சொல்வதுதான் தேவை. பிற்பாடு ஜெயகீதம் பாடவேண்டியதுதான். ஜெயத்தைப்பாடும் ஸ்திரீகள் சேனை சேனையாய்ப் புறப்படுவார்கள்! (யாத். 14: 15; 15: 20.) கர்த்தரின் வார்த்தை பிறந்தால் ராஜாக்கள் ஓட்டம் பிடிப்பார்கள்; வீட்டுப்பெண்கள் கொள்ளையைப் பங்கிட வேண்டியதுதான்! ரூபனைப்போல பலர் கர்த்தர் பக்ஷத்தில் யுத்தத்திற்கு வராமல் சொந்த வேலையைப் பார்த்துகொண்டு, தங்கள் தங்கள் மாட்டுத் தொழுவங்களிலேயே இருந்துவிட்டாலும் (நியா. 5: 16.), கர்த்தர் அருளால் இஸ்ரவேலர்—அதாவது எகோவாவின் காட்டுப்புரு (சங். 74: 19.) உள்ளே சமாதானமும் புறம்பே அலங்காரமும் பெற்றிலங்கும். சர்வவல்லவர் இப்படிப்பட்ட ஜெயத்தை அருளும்போது, ராஜாக்கள் ஓடும் ஓட்டம் சல்மோன் மலையில் உறைமழை பெய்யும்போது, உறைபனி கட்டிக் கட்டியாக அடிபுரண்டு விழுவதுபோலிருந்தது!

ஆ! கர்த்தாவே, இப்போதும் எழுந்தருளும்! ஓர் வார்த்தை மாத்திரம் சொல்லும்! உமது சத்துருக்கள் உமக்குமுன் ஓடுவார்கள்! உமது திருச்சபைக்கு ஜெயத்தை அருளும்! எங்களிலும் தொழுவங்கள் நடுவே கிடக்கிற வர்கள் அநேகர் உண்டு; சுகஜீவிகள் உண்டு; நிர்விசாரிகள் உண்டு; ஆனலும் மன்னியும்-இறங்கும்—சிதறடியும். சத்துரு ஜெயங்கொள்ளாதபடி செய்யும்! உமது ராஜ்யம் வருவதாக! உமது திருச்சபை பரிசுத்த அலங்காரம் பெற்றிலங்கும்படி அருள்புரியும்.

ஆமென்.

போலிகார்ப் என்பவரின் சரித்திரம்.

சிமிர்ணு தேசத்து அத்தியட்சராகிய போலிகார்ப் என்பவர், இரண்டாவது நூற்றாண்டின் திருச்சபை சரித்திரத்தில் மிகவும் பேர் பெற்றவர். இந்த கீர்த்தியானது, அவருடைய கல்வி சர்மார்த்தியத்தினால் வந்ததல்ல, எனினில் அவர் அதிகக் கல்வித்திறமையுடையவரல்ல. ஆனால் அவருடைய உத்தம ஜீவியத்தினாலும், அந்த ஜீவியத்தின் நீடிய ஆயுசினாலும் உண்டானது. இவர் முதலாவது நூற்றாண்டின் கடைசி முப்பது வருஷத்துக்குமுன் பிறந்து, இளம்பிராயத்திலேயே அத்தியட்சராகி தம்முடைய உத்தியோகத்தை 86 வயது மட்டும் பார்த்து வந்தார். இவர் குறைந்தது ஒரு அப்போஸ்தலனையாவது தாம்பார்த்ததாக சொல்லியிருக்கிறார். ஆனால் அவர், நம்முடைய கர்த்தரின் சீஷர்களிடத்திலிருந்து அநேக சங்கதிகளை முகமுகமாய்க் கேட்ட, அநேகம்பேரைப் பார்த்திருக்கக் கூடும். அவர் காலத்திற்குப் பிந்தின தலைமுறையார், முதல் நூற்றாண்டின் திருச்சபை

யின் காரியங்களைக் குறித்து விசாரிக்கவேண்டுமானால் அவனைத்தான் தேடிப்போவதுண்டு. இவருடைய ஜீவியத்தின் பிந்தின காலத்தில் சாதாரண கிறிஸ்தவர்களுக்குத் தெரியாத அநேக கொள்கைகள், அப்போஸ்தலர்கள் கொடுத்ததாகத் திருச்சபையில் சேர்க்க சிலர் எழும்பினார்கள். இப்பேர்ப்பட்ட குழப்பமான காலங்களில், கள்ள உபதேசங்களைத் தள்ளிவிட போலிகார்ப் அப்போஸ்தலக் கொள்கையைக் குறித்துக்கொடுத்த சாட்சி மிகவும் உபயோகமாயிருந்தது. போலிகார்ப் ரோமாபுரிக்குப் போயிருக்கும்போது அவருடைய சாதனையானது கள்ள போதனைக்காரரான மார்சியன், வெலன்சியஸ் என்பவர்களின் சீஷர்களைக் குணப்படுத்தினதாக (Irenaeus) இரேனியஸ் சொல்லுகிறார். திருச்சபைக்குச் செய்த அநேக ஊழியத்தோடுகூட இவர்கடைசியாக ரத்தசாட்சியாகவும் மரித்தார். இவர் தன்னுடைய ஜீவியத்தின் அந்திய காலத்தை அடைந்தபோது சின்ன ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரையும் தண்டிக்க உத்தரவு பிறந்தது. அப்போது திருச்சபையின் தலையாக இருந்த இவர் நிலைமைதான் மிகவும் அபாயத்திலிருந்தது. இவர் இரத்தசாட்சியாய் மரிக்கவேணுமென்று விரும்பவுமில்லை. இரத்தசாட்சியாய் மரிக்க பயப்படவுமில்லை. கூடுமான அளவு தப்பித்துக்கொள்ளப் பிரயாசப்பட்டார். முடியாதென்று கண்டவுடன், தைரியமாக தான் வெகுகாலம் ஊழியம் செய்துவந்த எஜமானின் அன்பைக் குறித்து சாட்சிகொடுத்து, தைரியமாகவும், சாதுவாகவும் தன் ஜீவனைக் கொடுத்தார். இந்த உன்னத ஜீவியமும் அதின் சிறந்த முடிவுந்தான் திருச்சபை சரித்திரத்தில், இவருக்கு கனத்தையும் கீர்த்தியையும் உண்டாக்கிற்று.

இவர் அப்போஸ்தலர்களால் பயிற்சிக்கப்பட்டும், கிறிஸ்துவைப் பார்த்த அநேகருடன் சம்பாஷித்திருந்தது மல்லாமல், சிமிர்ணு சபையின்மேல் அத்தியட்சராக அப்போஸ்தலர்களாலேயே நியமிக்கப்பட்டதாகவும் இரேனியஸ் சொல்லுகிறார். ஆகையினால் தெர்தூலியன் (Tertullian) சொல்லுகிறபிரகாரம், இவர் பரி. யோவான் அப்போஸ்தலனால்நியமிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு சந்தேகமில்லை. எனெனில் பரி.யோவான் சின்ன ஆசியாவில் அத்தியட்சாதீனத்தை ஏற்படுத்த அதிகமாய் உழைத்துக்கொண்டிருந்ததைப் பற்றி கிலம் அலக்சாண்டர் எழுதிய 'பரி. யோவானும் கள்ளனும்' என்ற சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படியானாலும், இக்னேஷியஸ் (Ignatious) என்பவர் இரத்தசாட்சியாக மரிக்கும் போது போலிகார்ப் சிமிர்ணு அத்தியட்சராக இருந்தார் என்பது நமக்குத் திட்டமாகத் தெரியும். அதாவது ஏறக்குறைய கி. பி. 110-ம் வருஷத்தில் இக்னேஷியஸ் என்பவர் அந்தியோகியாவிலிருந்து ரோமாபுரிக்குப் போகும் போது முதலாவது சிமிர்ணுவில் தங்கினார். அங்கே அவர் தங்கும் மற்ற இடத்தைப் போல கிறிஸ்தவர்களெல்லாரும் அவரிடத்திற்கு அவருடைய' போதனைகளைக்கேட்கக் கூடிவந்தார்கள். இக்னேஷியஸ் என்பவர் தான் தங்கின அடுத்த ஊரிலிருந்து, சிமிர்ணு திருச்சபைக்குப் பொதுவாக ஒரு நிருபமும், பாலிகார்ப் என்பவருக்கு ஒரு நிருபமும் எழுதினார். பிறகு இக்னேஷியஸ் பிலிப்பி நகரத்தில் தங்கினார். கொஞ்சகாலத்துக்குப் பிற்பாடு, போலிகார்ப், பிலிப்பியின் திருச்சபைக்கு ஒரு நிருபம் எழுதினார். அந்த நிருபம் இன்றைக்கும் இருக்கிறது. அதோடு கூட இக்னேஷியஸ் தமக்கு எழுதின கடிதங்களையும் அனுப்பி அவர்கள் எதாவது இக்னேஷியஸ் என்பவனைப்பற்றி செய்தி தெரிவிக்கக்கூடுமா என்று கேட்டெழுதினார். எனெனில் இக்னேஷியஸ் இரத்தசாட்சியாக மரித்த காரணம் சிமிர்ணுவிலுள்ளவர்களுக்கு நன்றாய்த் தெரியாததுபோல் காணப்படுகிறது.

இரேனியஸ் வயதுசென்ற காலத்தில் எழுதும்போது தான், வாலிபப்பிராயத்தில் போலிகார்ப் பேசினதைக்கேட்டது இன்னும் தனக்கு பரிஷ்காரமாய் இருக்கிறது என்று சொல்லுகிறார். இரேனியஸ் என்பவருக்கு அவருடைய அத்தியட்சராகிய வயதுசெல்போலிகார்ப் இருக்கும் இடமும், அவருடைய தேக லட்சணங்களும், அவர் பரி. யோவானுடனும் கிறிஸ்துவைப்பார்த்த மற்றவர்களுடனும் சம்பாஷித்ததைப்பற்றி அடிக்கடி சொல்வதும் நம்முடைய கர்த்தரின் போ

கத்தையும், அற்புதங்களையும் தளபாடமாய் எழுதியிருக்கிறபடியே அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதும் ஞாபகம் இருந்தது. தப்பறையான போதகங்களைப் போதித்தவர்களுடன் சம்பாஷித்து அவர்களுடைய தப்பிதங்களை உணர்த்திகாட்டுவதற்கான சக்தி அவருக்கு இருந்ததில்லை என்பதாகத் தெரியவருகிறது. ஆனால் அப்போஸ்தலர்கள் அவர்களுடைய சீஷர்கள் முதலியவர்களுடைய சுத்த உபதேசங்களுக்கு அந்தத் தப்பறைகள் முற்றும் விபரீதமாகயிருந்ததினாலும், அந்தக் கள்ளப்போதகர்கள் நமது கர்த்தருடைய சுவிசேஷத்தைத் தங்களுடைய வீணான கட்டுக்கதைகளினால் கெடுத்துப்போடும்படியாகப் பிரயாசப்பட்டதனாலும், அவர்கள்பேரில் வைராக்கிய கோபம் அவருடைய மனதில் இருந்தது.

அவர், அவர்களுடைய அவபக்தியைக் குறித்துக் கேட்கும்போது, தன் காதை அடைத்துக்கொண்டு, 'நல்ல தெய்வமே! நான் இப்பேர்ப்பட்ட காரியங்களைப் பார்க்கும்படி என்னை ஏன் இன்னும் வைத்திருக்கிறீர்' என்று சத்தமிட்டு தான் இருந்த இடத்திலிருந்து ஓடிவிடுவதாக இரேனியஸ் சொல்லுகிறார். இப்படிச் செய்வது அவர் தம்முடைய எஜமானான பரி. யோவான் அப்போஸ்தலனுடைய ஜீவியத்திலிருந்து கற்றுக்கொண்டதாகத்தெரிகிறது. ஏனெனில் ஒரு தடவை பரிசுத்த யோவான் அப்பாஸ்தலன் எபேசுவில் ஸ்நானம் பண்ணப்போயிருந்தபோது, வேதப்புரட்டனான செரிந்தஸ் என்பவனைப் பார்த்தவுடன் ஸ்நானம் செய்வதையே நிறுத்திப்போட்டு 'நாமெல்லாரும் ஓடிப்போவோம், ஏனெனில் சத்தியத்தின் பகைஞனாகிய செரிந்தஸ்உள்ளே இருக்கிறான்' என்று சத்தமிட்டுக்கொண்டு ஓடிப்போனதாக இவர் சொல்லியிருக்கிறார். ஒருதடவை மார்சியன் என்னும் வேதப்புரட்டன் போலிகார்ப்பைப் பார்த்து ... யாரென்று தெரிகிறதா என்று கேட்டதாக, நீ சாத்தானின் சேஷ்ட புத்திரன் ... எனக்குத் தெரியும் என்று சொன்னா

தம்முடைய அந்தியகாலத்தில் ஓர்தடவை போலிகார்ப் அனிசேத்து என்பவர் (Aui ...tus) அத்தியட்சராயிருந்த ரோமாபுரிக்குப் போனார். ரோம கிறிஸ்தவர்களின் ஆசாரங்களுக்கும் (கீழ்தேச) ஆசியாவின் கிறிஸ்தவர்களுடைய ஆசாரங்களுக்கும் உண்டாயிருந்த வித்தியாசங்களைத் தீர்க்கப் போயிருப்பார் என்று ஒருவேளை எண்ணலாம். கடைசியாக, போலிகார்ப் ரத்தச்சாட்சியாக மரித்த சரித்திரத்தைப் பார்ப்போம். அச்சரித்திரம் முழுவதும் சிமிர்னா சபையிலிருந்து எத்தேசத்திலும் எக்காலத்திலும் உள்ள கிறிஸ்து சபைக்கு எழுதப்பட்ட ஒரு நிருபத்தில் அடங்கியிருக்கிறது. அந்நிருபம் இந்நாள் மட்டும் இருக்கிறது.

இந்தச் சமயத்தில் சிமிர்னாவில் ஒரு பெரிய பந்தயம் வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பந்தயத்தை ஒட்டி ஒரு பெரிய உபத்திரவம் சபைக்குண்டானது. ஏற்கனவே பதினொரு பேர் வன்கொலையுண்டார்கள். கடைசியாக, பிதாவாகிய போலிக்கார்ப்பும் ரத்தச்சாட்சியாக மாண்டார். இந்தப் பந்தயங்கள் ஆசியாவிலுள்ள, பிரபுக்கள் எல்லாரும் சந்திக்கும் போது வைக்கப்படுவதுண்டு. இவர்கள் முக்கியமான பட்டணங்களில் சந்திப்பதுண்டு. எந்தக் காலங்களில் இந்தக் கூட்டம் வைக்கப்பட்டது என்பதைப்பற்றி இன்னும் சமாச்சாரம் தெரியுமானால், எப்போது போலிகார்ப் கொல்லப்பட்டார் என்பதைப்பற்றி நாம் திட்டமாய்ச் சொல்லமுடியும். ரோம நியாயாதிபதி ஒருவன் எபேசு பட்டணத்திலிருந்து பந்தயங்களைப் பார்க்க சிமிர்னாவுக்கு வந்தான். இந்தச் சமயத்தில் கிறிஸ்தவர்களைக் கண்டு பிடித்து, அவர்களை, ரோம ராயன்பேரில் ஆணையிடவும் அவனுக்குப் பலியிடவும் பல வந்தம்பண்ணி அந்தப் பந்தயத்தைச் சேர கட்டாயம்பண்ணுகிறதுண்டு. நியாயாதிபதி எப்போதும் கிறிஸ்தவக் கைதிகளை நலவு பண்ணிப் பார்க்கிறதுண்டு. தன் கட்டாயத்தின்படி அவர்கள் செய்யாவிட்டால், அவர்களை வதைப்பதுண்டு. இப்படிப்பண்ணியும் பிடிவாதமாயிருந்தால், அவர்களுக்கு இடவேண்டிய தண்டனையை விதிப்பதுண்டு. இப்படிச் செய்வது ஒருதடவை அவன் எண்ணம் வாய்க்கச்செய்தது.

குயின்றஸ் என்னும் பிரிகியா தேசத்தான், தானாகவே இரத்தச் சாட்சியாக மரிக்க ஒப்புக்

கொடுத்தான். ஆனால் தன்மேல் பாயப்போகிற காட்டுமிருகங்களைக் கண்டு, பயந்து, நியாயாதிபதியின் வார்த்தைகளுக்கு இணங்கி தன் உயிரைக் காப்பாற்றினான். இந்தச் சம்பவத்திலிருந்து கிறிஸ்தவர்களெல்லாரும், வேணுமென்று இரத்தச் சாட்சியாக மரிக்க விரும்புகிறதை, சுவிசேஷ முறைமைக்கு விரோதமாக எண்ணினார்கள். நியாயாதிபதி இன்னொரு தடவை, ஜெர்மானிக்கஸ் என்னும் கிறிஸ்தவ வாலிபனை தன் நய வார்த்தைகளால் இணங்கப்பண்ணினான். அந்த வாலிபனோ சற்றும் பயமில்லாமல் துஷ்ட மிருகங்களைக் கோபம் மூட்டி, தன்மேல் சீக்கிரம் பாய்ந்து கொல்லும்படி செய்தான்.

ஜெர்மானிக்கஸ் என்பவனின் தைரியத்தைக் கண்ட ஜனங்களெல்லாரும், ஜெர்மானிக்கஸ் வதைக்கப்பட்டது அநியாயம். அவன் அப்படிப் பிடிவாதமாய் இருக்கும்படி தூண்டிவிட்ட போலிகார்ப்பே தண்டிக்கப்படுவதற்குப் பாத்திரன் என்று எண்ணிக்கொண்டு 'தெய்வ துரோகிகள் எல்லாரையும் அழியுங்கள் போலிகார்ப்பை தேடிப்பிடியுங்கள்', என்று ஏகமாய்க் கூக்குரலிட்டார்கள். போலிகார்ப்போ தானிருந்த இடத்திலேயே இருக்க விரும்பினார். ஆனால், தன்னுடைய ஜனங்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டபடியால் ஒளித்துக்கொள்ளும்படி ஒரு கிராம வீட்டுக்குப் போனார். அங்கே தனக்கும் தன்னுடைய ஜனங்களுக்கு மாத்திரம் அல்ல, உலகமெங்குமிருக்கிற திருச்சபை அனைத்திற்கும் ஜெபம்பண்ணுவதில் தன் காலத்தைக் கழித்தார் தான் அபாயத்திற்குள் அகப்படுவதற்கு மூன்று நாளைக்குமுன்னே, தன்னுடைய தலையணை தீப்பிடித்து எரிவதாக சொப்பனம் கண்டு, இது தாம் உயிரோடே அக்கினியில் தகனிக்கப்படுவதற்கு முன் அடையாளம் என்பதாக, தன் சிநேகிதருக்குச் சொன்னார். அவரைக் கண்டுபிடிக்க, அதிகப் பிரயாசம் எடுக்கப்பட்டதினால் அவர் பக்கத்திலுள்ள ஓர் இடத்திற்குப் போனார். அங்கே மறைவாகவே யிருந்திருக்கக்கூடும். ஆனால் தேடிப்போனவர்கள் இரண்டு அடிமைப்பையன்களைப் பிடித்து அவர்களை வதைத்ததில், அவர்கள் போலிகார்ப் ஒளித்திருந்த இடத்தைக் காண்பித்து விட்டார்கள். ஒரு நாள் வெள்ளிக்கிழமை, ராத்திரி, குதிரைகளின் சத்தமும், யுத்தவீரர்களின் சத்தமும் கேட்கப்பட்டது. பின்தொடருகிறவர்கள் சமீபித்துவிட்டார்கள் என்று போலிகார்ப்புக்குத்தெரிந்தது. தப்பித்துக்கொள்ள சமயம் இருந்தது. போலிகார்ப்பின் சிநேகிதர்கள் தப்பித்துக்கொள்ளச் சொல்லியும், அவர் மறுத்து "கர்த்தரின் சித்தம் ஆகக்கடவது" என்றார். உடனே அவர் தாம் படுத்திருந்த மேலறையிலிருந்து இறங்கி வந்து, தம்மைப் பிடிக்கும்படி வந்த சேனாதிபதிகளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி செய்தார். பிறகு தாம் கொண்டுபோகப்படுவதற்குமுன், யாதொரு தொந்தரவுமில்லாமல் ஒரு மணி நேரம் ஜெபம் பண்ண உத்தரவு வேண்டிக்கொண்டார். உத்தரவு கொடுக்கப்பட்டவுடன், சிறியவர்களும் பெரியவர்களுமான தமக்குத் தெரிந்த ஒவ்வொருவரையும் நினைத்து, பேர் சொல்லி சொல்லி ஜெபம்பண்ணினார். உலகமெங்குமிருக்கிற திருச்சபையனைத்திற்காகவும் ஜெபம்பண்ணினார். கடைசியாகப் புறப்படுகிற நேரம் வந்தவுடன், அவரை ஒரு கழுதையின் மேல் ஏற்றி பட்டணத்திற்குக் கொண்டுபோனார்கள். கொஞ்ச நேரத்திற்குள் அவர்கள் நியாயாதிபதியாகிய, ஏரோதைப்பார்த்தார்கள்.

இவரை விசாரித்தவனும், நமது ரட்சகரை விசாரித்தவனும் பேர் ஏரோதாக இருந்தபடியால், இவருடைய விசாரணைக்கும், ரட்சகருடைய விசாரணைக்கும் எவ்வளவு ஒற்றுமையிருந்ததென்று அக்காலத்துக் கிறிஸ்தவர்கள் அதிக மனமகிழ்ச்சியோடு சொல்லிவந்தார்கள். ஏரோதும் அவன் தகப்பனாகிய நைசிறஸ் என்பவனும் போலிகார்ப்பை தங்களுடன் ரதத்தில் ஏற்றிக்கொண்டு அவருடைய ஜீவனைக் காத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள் "ஆண்டவனாகிய ராயனே, என்று சொல்லுவதினாலும், அவனுக்குப் பலியிடுவதினாலும் என்ன குறைந்துவிடும்" என்றுசொல்லி வாதாடினார்கள். போலிகார்ப் முதலாவது அமைதியாய் இருந்தார் பிறகு அவர்களைப் பார்த்து, "நான் நீங்கள் விரும்புகிறபடி செய்யமாட்டேன்" என்று வெகு அலட்சியமாகச் சொன்னார். என்னமாய்ச்

சொல்லியும் யாதொரு பாதொரு பயனும் இல்லாததினாலும் பிடிவாதமாய் இருந்ததினாலும் அவர்கள் அவரை வெளியே தள்ளி விட்டார்கள் அதினால், அவருடைய காலில் காயப்பட்டுவிட்டது. பிற்பாடு அவர்எரிக்கப்படுவதற்கு தன் வஸ்திரங்களைக் களையும் போது, இந்தக் காயத்தை அவருடைய சிநேகிதர்கள் பார்த்தார்கள். காயம் பட்டவுடன், யாதொரு வருத்தத்தையும் எண்ணமல் நடந்துகொண்டே போனர். அவர் பந்தய வட்டத்தை அடைந்தவுடன் எல்லாரும் சத்தமிட்டுக் கதறினர்கள். இந்தக் குழப்பத்தின் மத்தியில், அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு ஓர் சத்தம் கேட்டது "போலிகார்ப்பே பயப்படாதிரும், தைரியமாயிரும்" என் ப தே. இதை யார் சொன்னது என்று ஒருவருக்கும் தெரியாது. அங்குள்ள கிறிஸ்தவர்கள், அந்தச் சத்தம் பரலோகத்திலிருந்து உண்டாயிற்று என்று நம்பினர்கள் வழக்கப்படி நியாயாதிபதி அவரண்டை சேர்ந்து "உமது அந்திய காலத்தை வேதனைக் குட்படுத்தாதபடி பார்த்துக்கொள்ளும்" என்று வேண்டினன். 'ஆண்டவனுடைய ராயன்பேரில் ஆணையிடுகிறேன். (கிறிஸ்தவர்களாகிய) தெய்வ துரோகிகளை அழியுங்கள்" என்று அவரைச் சொல்லச் சொன்னன். அப்போது போலிகார்ப் தம்மைச்சுற்றிலும் இருக்கிற அஞ்ஞானிகளைப் பார்த்துக்கொண்டு, வானத்தை அண்ணாந்துபார்த்து "தெய்வதுரோகிகளை அழியுங்கள்" என்றார் அப்போது நியாயாதிபதி அவருடைய உள்ளான எண்ணத்தை அறியாமல் அவனைப் பார்த்து "சரி, இனி ஆணையிடு, கிறிஸ்துவை நிந்தி, அப்போது நான் உன்னை விட்டுவிடுவேன்" என்றான்

அப்போதுதான் அந்தப் பக்தன் என்றும் மறக்கப்படாத இந்த வார்த்தைகளை மறுமொழியாகச் சொன்னர். எண்பத்தாறு வருஷங்கள் நான் என் ஏஜமானைச் சேவித்திருக்கிறேன். இவ்வளவு காலங்களிலும் ஒரு அநியாயமும் அவர் எனக்குச் செய்ததில்லை. இப்படியிருக்க, என் ராஜாவும் என் ரட்சகருமானவரை நான் தூஷிப்பேனோ?

இதினால் போலிகார்ப் ஞானஸ்நானம் பெற்றதுமுதல் கர்த்தருக்கு ஊழியம் செய்து வந்ததாகத் தெரியவருகிறது. ஆகையினால் அவர் சொல்லப்படும் சமயத்தில் 86-வயதுக்கு மேலே இருந்திருகலாம், இல்லையென்றால் அவர் கிறிஸ்தவப் பெற்றோர்களுக்குப்பிறந்து இளம்பிராயத்திலேயே ஞானஸ்நானம்பெற்றிருக்கலாம். இன்னமும் நியாயாதிபதி அவனை வற்புறுத்தியும் அவர் கேளாமல் ஒருநாளைக்கு நிறுத்தி அந்தநாளில் அவனுக்கு கிறிஸ்துமார்க்கத்தை விளக்கிப் போதிப்பதாகச் சொன்னர். அதற்கு அவன் ஜனங்களின் அனுமதியைக் கேட்கச் சொன்னன்.

அப்போது அவர் "எந்த அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டிருக்கவேண்டும், எந்த அதிகாரியையும் கனம்பண்ணவேண்டும் என்று கிறிஸ்தவர்களாகிய நாங்கள் போதிக்கப்பட்டிருக்கிறோம். 'ஆதலால் அதிகாரியான உமக்கு உத்தரவு சொல்லவும் உம்முடைய தயவைப் பெறவும்மட்டும் வேண்டியதேயல்லாமல், ஜனங்களைப் பார்த்து நான் கெஞ்ச நினைத்தமில்லை" என்று சொல்லிவிட்டார். அதன் பின்பு அவன் அவரைப் பயமுறுத்திப்பார்த்தான். அவர் அணுவளவும் அசையவில்லை என்னசெய்தும் யாதொரு பயனுமில்லாததினால், நியாயாதிபதி கட்டியக்காரனை நோக்கி 'போலிகார்ப் தான் கிறிஸ்தவனென்று அறிக்கைசெய்துவிட்டான்" என்று ஜனங்களுக்கு கூறும்படி சொன்னன். உடனே, விக்கிரகங்களை அழித்தவரும், ஆசியாவில் கிறிஸ்துவின் மந்தைகளுக்கு மேய்ப்பனுமாக இருந்த இந்தத் தகப்பன்பேரில் மூர்க்கங்கொண்டு எல்லா அஞ்ஞானிகளும் இவரை உயிரோடே எரித்துவிடவேண்டும் என்று கூவினர்கள். எனெனில் அவருடைய சொப்பனம் நிறைவேறவேண்டுமல்லவா? உடனே அங்குள்ள யூதர்களும் அஞ்ஞானிகளும் சேர்ந்து, ஞ்சு களையும் விறகுகளையும் பொறுக்கிவந்து ஒரு குவியலாகக் குவித்தார்கள்.

உடனே, போலிகார்ப் தன் வஸ்திரங்களைக் களையத்தொடங்கினர்; ஆனல் அவர் தம்முடைய பாதரட்சையை அவிழ்க்கத் தொடங்கினபோது அதை அவிழ்க்க முடியாமல் சங்கடப்பட்டார். எனெனில், இதுவரையிலும் அவருடைய சிஷர்கள் இந்த சிறுவேலையை ஒரு பெரிய பாக்கியமென்று எண்ணி

அதிகாலமாய் அதை அவருக்குச் செய்துவந்திருந்தார்கள். பிறகு அவருடைய விருப்பத்தின்படி அவரை அந்தக்கட்டை குவியலில் கட்டினபிறகு தீ கொளுத்தப்பட்டது. அதிலிருந்து எழும்பின புகையானது அங்கு வந்திருந்த கிறிஸ்தவர்களுக்கு நல்ல மணமாயிருந்தது. ஆனல் இது மெய்தானே, அல்லது ஒருவேளை அவசரம் அவசரமாகச் செய்ததில் நல்ல வாசனையுள்ள கட்டைகளையும் ஜனங்கள் கொண்டுவந்து குவித்துவிட்டதினால் தானே என்று தெரியாது. கொஞ்சநேரத்திற்குள் தீயானது அணைந்துபோகிறமாதிரியிருந்தது. உடனே ஒரு கொலைக்காரன் போய் அவரை வாளால் வெட்டினன். அதினல் வடிந்த ரத்தத்தினல் தீ முழுவதுமாக அணைந்துபோயிற்று. உடனே அங்கு வந்திருந்த கிறிஸ்தவர்கள் அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ண எடுத்துக்கொண்டுபோகவேண்டும் என்றிருக்கிற சமயத்தில் மேலே நாம் சொல்லியிருக்கிற நைஸ்டஸ் என்பவன் போலிகார்ப்பின் சரீரத்தைக் கொடுத்துவிட்டால் கிறிஸ்தவர்களெல்லாரும் சிலுவையில் அறையுண்ட அந்த கிறிஸ்துவை விட்டுவிட்டு போலிகார்ப்பை வணங்குவார்கள் என்பதாகச் சொன்னன். இதை வாசிக்கிறவர்களே இப் பேர்ப்பட்ட எண்ணம் எவ்வளவு பயங்கரமானது. உலகமெல்லாம் இரட்சிக்கப்படுவதற்கு மரித்த பரிசுத்த சொரூபியாகிய கிறிஸ்துவை விட்டு விலகி வேறே எந்தப் பரிசுத்தவானையும் வணங்குவது அப்போது இருந்த கிறிஸ்தவர்களுக்கு மனதிற்கு ஏலாதகாரியம். அவர்கள் கிறிஸ்துவையே வணங்கினர்கள். கிறிஸ்துவுக்காக வைராக்கியத்தேடும் அன்போடும் மரித்த அவருடைய பரிசுத்தவான்களை அவ்விதமாய் மரித்ததினல் மட்டும் அவர்கள் அருமையாக நேசித்தார்கள். பிறகு யூதர்கள் நைஸ்டஸை ஏவிவிட்டதினல் நூற்றுக்கு அதிபதியானவன் போலிகார்ப்பின் சரீரத்தை நன்றாய் கருக்கி எரித்துவிடும்படி செய்தான். ஆகையினலே கடைசியில் விலையுயர்ந்த முத்திக்களையும் ஆபரணங்களையும் விட மிகவும் அருமையாகமதிக்கப்பட்ட அவருடையஎலும்புகள் மாத்திரம் மீதியாயிருந்தன. அதை அவருடைய சிஷர்கள் எடுத்துக்கொண்டு போய் அடக்கம்பண்ணினர்கள். பிறகு அந்த இடத்தில் வருஷந்தோறும் அவர் சுட்டெரிக்கப்பட்ட நாளை அவருடைய 'பிறந்த நாளாக' கொண்டாடும்படி தீர்மானித்து அவ்விதமாகவே செய்துவந்தார்கள்.

தகப்பன் அக்கினி ரதத்தில் ஏறி பரம பிதாவுடைய ராஜ்ஜியத்தில் சேர்ந்தார். பிள்ளைகள் 'என் தகப்பனே! என் தகப்பனே!' என்றுமட்டும் சொல்லிக்கொண்டிராமல், தகப்பனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினர்கள். சபை பெருகினது. உபத்திரவமானது வித்துகளைக் காற்றுத்திசைகள் நான்கிலும் சிதறினதேயல்லாமல், அவைகளை அழிக்கவில்லை. ஒரு பட்டணத்தில் உபத்திரவம் உண்டானவுடனே கிறிஸ்தவர்கள் வேறே பட்டணங்களுக்கு ஓடிப்போய் அங்கே ஸ்தாபகமாகிக் கிறிஸ்துவை அறிவித்துவந்தார்கள். இவ்விதமாக உபத்திரவமேயில்லாமல் சிற்சில பட்டணங்களில் மட்டும் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்க்கூடியதாயிருக்க, உபத்திரவம் மும்முரமாக எழும்பினதால் அக்காலத்து உலகத்தின் பட்டணங்கள், ஊர்கள் யாவும் கிறிஸ்து சபை ஸ்தாபனங்களாயின.

இன்னமும், உலகத்தின் ராஜ்யங்கள் யாவும் நமது கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்கள் ஆகவேண்டுமென்றல் கொடிய அக்கினிபோன்ற உபத்திரவம் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட வேண்டும்.

இரத்தச்சாட்சிகளின் ரத்தம் சபையின் வித்து; அவர்களுடைய கண்ணீர் உலகத்தைக் கர்த்தரண்டைக்கு இழுக்கும் வெள்ளப்பெருக்கு.

டி. தாமஸ் செல்லையா.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

கனம் தேவசகாயமய்யரவர்கள் திருநெல்வேலியிலிருந்து வந்தபின் நான் இதுவரை பார்த்துவந்த மாணுக்கோட்டை முப்பாரம் பாஸ்டரேட்டுகளையே பார்த்து வரவும், அவர்கள் மேடதல்லி பாஸ்டரேட்டைப் பார்க்கவும் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

கம்மாமேட்டில் வருஷா வருஷம் அக்டோபர் மாதத்தில் நடக்கும் யூவிக்குரிட கூட

டத்தில் சபையின் விர்த்திக்காக ஏதாவது பேசிக்கொள்வதுண்டு. மூன்றும் வருஷத்தில் சபையார் மூன்று மைலுக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களில் ஒவ்வொருவரும் போய் பிரசங்கம் செய்துவரவேண்டும் என்று பேசப்பட்டது. முந்தினவருஷம் அந்த ரிப்போர்ட்டைக் கேட்டபொழுது செய்யக்கூடிய அளவு செய்யவில்லையென்று அறிந்து மறுபடியும் இந்த வருஷமும் அதே யளவு தூரம் பிரசங்கம் செய்ய ஊழியர் ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நம்முடைய மிஷனில் சில இடங்களில் அவ்வித வேலை முந்தின வருஷமே நன்றாய் செய்திருந்தாலும் மற்றும் இடங்களிலும் அவ்வேலை நன்றாய் செய்ய ஏற்பாடு நடக்கிறது. வாரத்திற்கு ஒரு நாளை ஜெபநாளாக வைத்து அந்த நாளில் யார் யார் அந்த வாரத்தில் பிரசங்கம் செய்தார்களென்று விசாரிக்கவும், அஜாக்கிரதையாயிருந்தவர்களை மற்றவர்கள் உற்சாகப்படுத்த ஏதுவாகவும், வேலைசெய்த யிடங்களுக்கும் மற்ற வேலைசெய்யாத கிராமங்களுக்குமாக ஜெபிக்கவும் அந்த நாளை குறிப்பிட்டிருக்கிறது. ஜனங்களுக்கு இஷ்டமானால் அந்த நாளில் கூடியவர்கள் மூலக் தாலூகாவில் நடக்கும் வேலைக்காக காணிக்கை கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வித முயற்சியினால் ஜனங்களுக்குள் மிகுந்த எழுப்புதலுண்டாக கர்த்தர் கிருபை செய்வாராக.

பூர்வதங்கிரி யென்ற சபையில் ஒரு ஸ்திரீ வயிற்றுவலியுடன் அதிகக் கஷ்டப்பட்டாள். அப்பொழுது அந்த ஊர் உபாத்தியாயனைக் கூப்பிட்டு அவரிடம் மருந்துண்டாவென்று கேட்கவே அவர் தன்னிடம் மருந்தில்லை, ஆனால் ஜெபம் செய்வோம்என்று சொல்லி ஜெபம் செய்தார்கள். மறுநாள் பூரண சுகமடைந்தாள். சுகமடைந்தபின் ஸ்தோத்திரமாக 1 ரூபாய் கொடுத்தாள். இது நடந்த சிலகாலத்திற்குப்பின் அதே வீட்டில் ஒரு சிறு பிள்ளைக்கு வயிற்றோட்டமும், வாந்தியும் எடுத்தது. அந்தப்பிள்ளையின தகப்பன் உபாத்தியாயரிடம் வந்து சொல்லவே அவர் மருந்தில்லையே யென்றார். தகப்பன் மருந்தில்லாவிட்டால் நாம் ஜெபிப்போம், அதுபோதும், அப்படி பிழைக்காவிட்டால்பயமில்லையென்றார்கள். உபாத்தியாயர் அவர்கள் விசுவாசத்தையறிந்து பிள்ளையினிடம் போய் ஜெபித்து வந்தார். மறுநாள் கர்த்தருடைய கிருபையினால் சுகமாயிற்று. இதினால் அந்த வீட்டாருக்கு ஜெபத்தின்பேரிலும் மார்க்கத்திலும் ஸ்திரமான எண்ணமுண்டாயிருக்கிறது. இந்த வீட்டிலுள்ள ஒரு வயதுசென்ற ஸ்திரீ சிலகாலமாக மார்க்கத்தில் அதிக உற்சாகமில்லாதிருந்தாள். எனக்கும்அவள்பேரில் அதிக நம்பிக்கையில்லாதிருந்தது. நான் அவ்வூர்போனபொழுதெல்லாம் அவளைக்கண்டு எப்படியிருக்கிறாள் என்று கேட்டு வருவேன். ஒருநாள் அவளையறிந்த ஒரு அஞ்ஞானி அங்கே வந்திருக்கையில்அவள், "நீங்களும் மார்க்கத்திற்கு வாக்கூடாதா? நாங்கள் மார்க்கத்தில் சேர்ந்தபின் எங்களுக்கு எவ்வித கஷ்டமுமில்லை எவ்வளவோ முன்னுக்கு வந்துதானிருக்கிறோம்" என்றாளாம். அதைக்கேட்ட எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருந்தது.

கிறிஸ்மஸ் தினத்திற்கு முந்தின சனிக்கிழமை யன்று நாங்கள் குடும்பத்துடனும் சகோதரன் தேவதாசும் அவர் மனைவியுமாக பர்வதகிரியென்ற ஊருக்குப் போனோம். சகோதரன் தேவதாசுக்கு ராஜாக்காலமானதால் எங்களுடன் கிறிஸ்மஸ் தினத்தைச் செலவிடவந்தார். பண்டிகைக்காக ஜெபம் நடக்கும் உபாத்தியாயர் வீட்டை வெள்ளையடித்து அவர் வீட்டுக்குமுன் பந்தல்போட்டுபந்தலைப் பூவினாலும் மாலையினாலும் அலங்காரம் செய்து வைத்தார்கள். கிறிஸ்மஸ்தினம் அதிகாலை 4 மணிக்கு முன்னமே பிள்ளைகள், சிலபெரியோர், உபாத்தியாயருடன் விளக்கையெடுத்துக்கொண்டு ஊருக்குள்ளே போய் பாட்டுபடித்துக்கொண்டு எல்லாரையும் உற்சாகப்படித்தி திரும்பவந்தபின் ஆராதனை நடந்தது. விடியும்முன ஜெபம் முடிந்துவிட்டது. காலையில் சபையிலுள்ள ஒருவன் தன் வீட்டில் ஏதோ வியாதி வந்தபொழுது சுகமானால் கர்த்தருக்குக்காணிக்கையாக பண்டிகையன்றுசர்க்கரை வாங்கிக்கொடுப்பதாக நேர்ந்திருந்தான். அப்படியே சிறு பிள்ளைகளுக்கு சர்க்கரை வாங்கி ஜெபம் முடிந்தபின் பங்கிட்டான். பண்டிகையன்று சிறுகிடாயடித்து சந்தோஷமாய் ஆசரித்தார்கள். அஞ்ஞானிகளாயிருக்

இந்திய மிஷனரி சங்கம்.

(பெப்ரவரிமீ 12ஆ)

ஓர் தியானம்.

இந்திய மிஷனரி சங்கத்துக்குப் பதினான்கு வயது முடிந்து, பதினைந்தாம் வயது ஆரம்பித்திருக்கிறது. கடந்த பதினாலு வருஷங்களிலும், கருணை நிறைந்த தேவன் இச்சங்கத்திற்குப் பாராட்டியிருக்கும் கிருபைகள் அனந்தம். "நீ பெற்ற ஆசீர்வாதங்களை ஒவ்வொன்றாய் எண்ணு!" என்ற இவ்விலிஷ் கீதத்தைக்கையை, அவைகளை ஒவ்வொன்றாய்க் கூறுவோம்.

1. பொருள் வரவு. பதினான்கு வருஷத்துக்குமுன் பதினைந்து நாறு ரூபாயாயிருந்தவரவை பதினாறு ஆயிரம் ரூபாயாக்கியருளினார். கடந்த பதிமூன்று வருஷங்களிலும் மொத்தம் லக்ஷத்து காலாயிரம் ரூபாய் வரவு வந்திருக்கிறது! இது தேவச் செயலேயன்றி வேறென்ன? "தேவரீருக்கே மகிமை புண்டாவதாக!".

2. காணப்பட்டிருக்கும் சுயவெறுப்பு. தேவன் கிருபையாயருளியிருக்கிற பொருள் மாத்திரமல்ல, இதன் சம்பந்தமாய் அவர் கட்டளையிட்டிருக்கிற சுயவெறுப்பை நினைத்து, அவரைத் துதிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம். ஐம்பது, எண்பது, நூறு, இருநூறு ரூபாய் பெருமான பூஷணங்களை மற்றவர்கள் அறியாமல், இச்சங்கத்துக்குக் கொடுக்கும்படி கர்ஜனைகன் மனதை ஏவிவிட்டது அவரல்லவோ? ரூபாயாக ஒரே சமயத்தில் அதிகமதேய கன்கொடையாக ஆயிரம் ரூபாய் வரைக்கும் அனுப்பப்பட்டதுண்டு. முதற் சம்பளம் முழுவதையும் இச்சங்கத்திற்கு அளித்த வாலிபர், வாலிபப்பெண்கள் ஏராளம்! பெப்ரவரிமீ 12ஆ ஆகிய இன்றையத் தினத்தில் ஒரு மணி ஆர்டர். அது உத்தியோகம் பார்க்கும் ஒருவரின் முதற்சம்பளம். மணி ஆர்டரின் மேலேகண்ட எழுத்து இது தான்:— "தயவுசெய்து என் பேரை சுவிசேஷபிரபல்ய வர்த்தமானியிலாவது வேறே எவ்விடத்திலாவது தெரியப்படுத்தக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன்" என்கிறார். இவ்வித சித்தத்தை அருளிச் செய்தவர் இயேசு பெருமானன்றோ? "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

3. எழும்பியிருக்கும் உழைப்போர். இச்சங்கத்திற்காக அங்குமிங்கும் போய் உழைக்கும்படி கர்த்தர் எழுப்பியிருக்கும் தாசனை கினைத்தும் கர்த்தரைத் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்னைபுரி, பர்மா, இலங்கை கிளைச்சங்கங்கள் உற்பத்திக்குக் காரணம் இவ்விதப்பத்தர்தான். கிராமச் சபைகளில் ஆலயங்கள் கட்டும்படி எடுத்த முயற்சிக்கு மூலம் தன் ராஜா காட்சியே இச்சங்கத்திற்கென்று செலவிட கர்த்தர் மனதைச் சாய்த்த ஒரு பக்தனே. சர்க்கார் உத்தியோகத்திலிருந்தாலும், சுயாதீன வேலையிலிருந்தாலும், பாடசாலை ஆசிரியராயிருந்தாலும் தங்கள் சேரத்தையும் பணத்தையும் இவ்வேலைக்கென்று செலவிட்டு, ஊர்ஊராயும் வீடு வீடாயும் போய், இச்சபைத்திற்காகச் சிரத்தை எடுத்துக்கொள்ள மனதை ஏவினவர் இயேசுதானன்றோ? "அவருக்கே மகிமையுண்டாவதாக!".

4. இந்திய முயற்சிகளுக்கு தேவாசீர்வாதம். 1903-ம் வருஷத்தில் இச்சங்கம் ஆரம்பித்தபின், இந்துதேசமுழுவதிற்கும் "காஷனல் மிஷனரி சங்கம்" ஒன்று 1906-ல் ஸ்தாபிக்கப்பட கடவுள் இச்சங்கத்தைக் கருவியாக உபயோகித்தது கிருபையே. "சுதேசிகன் மிஷனரி வேலைசெய்து கொள்ளுவார்களோ?" என்று 1903-ல் கேட்டவர்கள் இப்போது கர்த்தர் சுதேசிகள் மூலமாய்ச் செய்யும் மிஷனரி வேலையைக் கண்ணுற்றுத் துதிசெலுத்த அருள்புரிந்தார். இச்சங்கக் கமிற்றியின் சிபார்சின்பேரில் முதல் மிஷனரிக்கு உதவிக்குருப்பட்டம்கொடுப்பதைத் தீர்த்தவர்களுடைய பிரயத்தனத்தை அவமாக்கி, இச்சங்கத்தின் இன்னோர் மிஷனரி அத்தியக்ஷபட்டாபிஷேகம் பெற்று, இச்சங்கத்தின் முக்கிய ஸ்தானத்தில் வசிப்பதையும் அவர்களே கண்டு களிகூரும்படி செய்தருளினார். "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

5. தமிழ் கிறிஸ்தவர்கள் தேவாலய ஜனங்களுக்காக உழைத்தல். கடந்த பதி

நாலு வருஷங்களில் தமிழ்நாட்டிலிருந்து புருஷரும் மனைவிகளுமாக 40பேர் தெலுங்கு நாட்டிற்கு வந்து, தெலுங்கு ஜனங்கள் நன்மைக்காக உழைக்கும்படி வந்திருப்பது ஈசன் செயலன்றோ? இதில் 20 பேர் இந்திய மிஷனெரி சங்கத்தின் சம்பந்தமாக நாளது தேதியில் வேலை செய்கிறார்கள்; மற்ற 20 பேர் சிங்கரேணி மிஷன், சி. எம். எஸ். மிஷன், ஜட்சர்ளா மிஷன்களில் பணி விடை செய்கிறார்கள். புறதேசங்களுக்குச் சென்று அவ்விடங்களில் திருச்சபையை ஸ்தாபிக்கும்படிக்கும், அங்குள்ள ஜனங்களுக்கு நன்மை செய்யும்படிக்கும் இத்தனை பேரை எழுப்பினவர் "புறப்பட்டுப்போங்கள்" என்று கட்டளையிட்ட அற்புதநாதரல்லவோ? "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

6. மிஷனெரி வாஞ்சை, ஜெபம். பதிநாலு வருஷங்களுக்கு முன், தெலுங்கு நாட்டிற்காக ஜெபித்தவர்கள உண்டோ? திருநெல்வேலியிலும் மற்ற இடங்களிலும் இப்போது தோன்றியிருக்கும் மிஷனெரி ஜெபக்கூட்டங்கள் அநேகம். அவையனைத்திற்காகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இராப்பகலாய் ஜெபிக்கிற பக்தர் அநேகர். தினந்தோறும் குடும்ப ஜெபத்தில் தோர்ணக்கல் வேலையைக் கர்த்தருக்கு நினைப்பூட்டுகிற குடும்பங்கள் ஏராளம்! இத்தனை பேர் தெலுங்கு ஜனங்களுக்காக ஜெபிக்கும்படி ஏவினது கர்த்தரே. "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

7. புதிதாய்க் குணப்பட்டவர்களுக்கு அடைக்கலம். புதிதாய்க் குணப்பட்டவர்களுக்கு ஓர் தாபர ஸ்தலம் கட்டவேண்டுமென்ற முயற்சிகள் பலகாலமும் ஆலோசிக்கப்படுகின்றன. ஆகிலும், அவ்வித நேர்நோக்கத்துடன் வேலைசெய்யாத இச்சங்கம் கடந்த பதிநாலு வருஷங்களிலும் இதை நிறைவேற்றியிருக்கிறது. திருநெல்வேலியில் குணப்பட்டு, தோர்ணக்கல்லில் ஞானஸ்நானம் பெற்றவர் ஒருவர், திடப்படுத்தல் பெற்றவர்கள் ஐந்து. கிறிஸ்தவர்களாகப் பிறவாமல், இந்துமார்கத்திலிருந்து கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்து, தற்சமயம் தோர்ணக்கல்லில் வேலைசெய்கிறவர்கள் 8 பேர். திருநெல்வேலி சபைக்குத் தோர்ணக்கல் ஓர் அடைக்கல நகரமாயிருப்பது தேவகிருபையே. "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

8. ஓர் தாலுகாவுக்கு இரட்சிப்பு. பதிநாலு வருஷங்களுக்கு முன் யாதொரு கிறிஸ்தவர்களுமற்ற ஓர் தாலுகாவில் இச்சங்கத்தின் மூலமாய் சுமார் ஈராயிரம் கிறிஸ்தவர்களும், இதின் பலனாக ஆரம்பித்த சிங்கரேணி மிஷனில் சுமார் ஆயிரம் கிறிஸ்தவர்களும் உண்டாகத் தேவன் துணைசெய்தார். இச்சுவிசேஷ வேலையினால் இத்தாலுகாவில் உதித்திருக்கும் ஒளி நித்திய ஜீவ ஒளியாகிய இயேசுபெருமான் அருளாலல்லவோ? அத்தாலுகாவில் வாசிக்கப்படித்திருக்கிறவர்கள், விடுதலையடைந்திருக்கும் அடிமைகள், குடியை விட்டிருக்கிறவர்கள், இயேசுநாதரை நேசிக்கவும் அவருக்காக உழைக்கவும் கற்றிருக்கிறவர்கள் முதலியோரனைவரும் கடைசிநாளில் இச்சங்கத்திற்குக் கிரீடங்களன்றோ? இவைகளனைத்தும் பரிசுத்த ஆவியின் கிரியைக்குச் சாட்சிகளல்லவா? "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக!".

பதினைந்தாம் வருஷம் ஆரம்பித்துவிட்டோம். கடந்த காலக் கிருபைகளைப் பாராட்டி சும்மா இருந்துவிடாமல், இன்னும் அதிகமான ஜெயத்தைப் பெறுவதற்கு நம்மைப் பிரதிஷ்டை செய்வோமாக. இத்தனை காலமும் தமது கிருபைகளைப்பொழிந்த கர்த்தர் இன்னும் மேன்மேலும் இச்சங்கத்தை ஆசீர்வதிக்கவேண்டுமானால், செய்யவேண்டிய கடமைகளுண்டு:—

1. தேவன்பேரிலேயே சார்ந்திருக்க வேண்டும். லௌகீக வழிவகைகளும் முறைகளும் அதிகப்பணத்தைக் கொண்டுவருமென்றாவது, அதிகசித்தியைப் பிறப்பிக்குமென்றாவது எண்ணும் சோதனைக்குட்படாதபடி ஜாக்ரதையாயிருப்போமாக. வரவைப்பெருக்கும் முறைகளிலும், வேலையை விருத்திபண்ணும் சாதனங்களிலும் கர்த்தரையே முதல் ஸ்தானத்தில் வைப்போமாக. விளையாட்டு

களினாலும் விநோத காட்சிகளினாலும் பணம் வசூல்செய்யும் காலம் இது. எச்சரிக்கையாயிருப்போமாக! ஏதாமொரு வேடிக்கையைக் காட்டி, மனுஷரிடத்திலிருந்து பணத்தைப் பிடுங்கினதினாலல்ல, தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய்க் கொடுத்ததினாலேயே இதுவரை இச்சங்கம் சித்தி பெற்றது. "என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நானும் கனம் பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். மிஷனெரி ஊழியம் கர்த்தர் கட்டளையிட்ட ஊழியம், ஆவிக்குரிய ஊழியம், ஆவியானவர் நடப்பிக்கும் ஊழியம். கர்த்தர்பேரிலேயே சார்ந்து, ஆவிக்குரிய முறைகளையே கையாடுவோமானால், ஜெயம் நம்முடையதாகும்.

2. ஜெபமே பெலனாயிருக்கவேண்டும். தேவன்பேரில் சார்வதற்கு ஜெபம் அத்தாட்சி. தாய்ச்சங்கமும் கிளைச்சங்கங்களும் தாங்கள் எடுத்துக்கொள்ளும் சகல பிரயத்தனங்களையும் ஜெபத்தில் ஆரம்பித்து, நடப்பித்து, முடிப்பார்களாக! வேறே கூட்டங்களுக்கு ஒழுங்குசெய்ய வழியில்லாதேபோனாலும், விண்ணப்பக்கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்வார்களாக! நாம் தேவனுடைய பாதத்தைக் கிட்டிச்சேர்ந்து பிடிக்கும்போது, அவர் சகலத்தையும் நமக்காக நிறைவேற்றுவார். பணத்தைக் கொடுக்கும்படி இருதயங்களை ஏவுகிறவர் அவரே. தடைகளை நீக்குகிறவர் அவரே. அவர் பாதம் பெலன். அப்படியானால் ஜெபத்தில் பின் வாங்காதிருப்போமாக. எப்போதும் ஜெபிக்கவேண்டிய சில விஷயங்களுண்டு.

1. தாய்ச்சங்கத்திற்காகவும், அதின் பிரசிடென்று, செக்ரற்றேரிமார், பொக்கிஷதாருக்காகவும் ஜெபம் தேவை. அவர்கள் சகலத்தையும் ஞானத்தோடும், ஜெபசிந்தையோடும் நடப்பிக்கத் தேவன் அருள் புரியும்படி ஜெபியுங்கள்.

2. கிளைச்சங்கங்களுக்காகவும் அதில் முயற்சியாய் உழைக்கிற உத்தியோகஸ்தருக்காகவும் ஜெபிப்பதவசியம்! சகல பிரயாசங்களிலும் அவர்கள் தேவனைச் சார்ந்து ஞானத்தோடு உழைக்க தேவன் அவர்களுக்குக் கிருபைசெய்யும்படி ஜெபியுங்கள்.

3. மிஷனெரிமாருக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபம் அவசியம். தேவனுடைய ஸ்தானாதிபதிகளாகப் போயிருக்கும் இவர்கள் உற்சாகத்தோடும் ஆவியின் வல்லமையோடும் தங்கள் வேலையை நிறைவேற்ற தேவன் அருள் புரிய ஜெபியுங்கள்.

4. தமிழ் ஊழியர் அனைவருக்காகவும் விண்ணப்பம் தேவை. அயல்நாட்டிற்குப் போயிருக்கும் இவர்கள் தங்கள் நடக்கையினால் புதுக்கிறிஸ்தவர்களுக்குச் சகல விஷயத்திலும் மாதிரிகளாயிருக்கக் கர்த்தர் துணைபுரியும்படி ஜெபியுங்கள்.

5. தெலுங்கு சபைக்காகவும், பரி. ஞானஸ்நானம், திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காகவும் ஜெபிப்பதவசியம். இவர்களுக்குள் நடக்கும் வேலை ஆவியின் முத்திரைபெற்ற ஊழியமாய் கிறிஸ்துவுக்கு அலங்காரமாயிருக்கக் கர்த்தர் கருணைகூரும்படி ஜெபியுங்கள்.

6. தெலுங்கு ஊழியரனைவருக்காகவும், ஊழியத்துக்குப் பயிலுகிறவர்களுக்காகவும் விண்ணப்பம் செய்யவேண்டும். அவர்கள் பரிசுத்த ஆவியின் கிருபையில் வளர்ந்து, தங்கள் ஜனத்தைப் பக்தியிலும், நல்லொழுக்கத்திலும் நடத்தும்படி தங்களைப் பிரதிஷ்டைசெய்ய தேவன் கிருபை செய்ய வேண்டுமென்று ஜெபியுங்கள்.

7. இந்துதேசத்திற்காக ஜெபிப்பதவசியம். இத்தேசமெங்குமுள்ள சுதேசசபை மிஷனெரி வாஞ்சை கொள்ளவும், ஜாதிபேதம், கொள்கைபேதம், கக்ஷி, பொறாமை, சுயநயம் அற்று, கிறிஸ்துவின் ராஜ்யத்திற்காகாகவே முயற்சி செய்யும் காலத்தைத்தீவிரமாய் தேவன் வரப்பண்ண ஜெபியுங்கள்.

இவ்வாறு ஜெபம் செய்வோமானால், ஜெயம் நம்முடையதாகும். இம்மட்டும் நமக்கு உதவிசெய்த ஏகோவா இன்னும் முற்றமுடிய உதவிசெய்வார். தமது அற்புதக் கிரியைகளை நடப்பிக்க நம்மைக் கருவியாக உபயோகிப்பார். அப்படியே ஆவதாக! ஆமென்!

சுரண்டை போர்டிங் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்து, பின்னர் ஜட்சர்ளா மிஷனில் மிஷனெரி ஊழியம் செய்துவந்த Mr. ஐசக் அய்யாதுரை நாளது ஏப்பிரல்மீ 1உ முதல் நமது மிஷனெரியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறார். ஏற்கனவே தெலுங்கு கற்றிருப்பாயி உடனே "முப்பாரம்" என்ற பெருவு சமீப வசித்து, நமது மிஷன் ஸ்தானத்துப்பரிய ஜாதி சுவிசேஷ வேலை செய்வார். இவரைச் சொல்லித்துவர ஞாபகப்படுத்துகிறோம். இஸ்ரவேல்

இந்திய மிஷனெரி சங்க இலங்கைக் கிளை

இவ்வருஷம் பெப்ருவரிமீ 11-ம் தெய்தியன்றையதினத்தை இந்திய மிஷனெரி சங்க மன்றாட்டு நாளாக அனுசரிக்கையில், இலங்கை கிளைச்சங்கமும் தாய்சங்கத்தோடு சேர்ந்து,பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரிப்பதிலும் வேண்டிக்கொள்ளுவதிலும் ஒருமனப்பட்டுக்கொள்ளுவது கடமையென்று தீர்மானித்து, இக்கிளையைச் சேர்ந்திருக்கும்எல்லாப்போதகர்களும்அந்த நாளில் தாங்கள் நடத்தும் ஆராதனைகளில் சுவிசேஷ ஊழியத்தின் மகிமையைப்பற்றியும், இந்திய மிஷனெரி சங்கத்தைக் குறித்தும், அதற்கு உதவி புரிவதில் இலங்கைக் கிறிஸ்தவர்களின் கடமையைக் காட்டியும் சில வார்த்தைகள் சொல்லக்கேட்டுக்கொள்ளவும்; அடுத்தநாள் திங்கள்கிழமை கொழும்பு சபைகளுக்கு ஆல்சேன்ஸ் ஆலயத்தில் காலையில் பரிசுத்த நற்கருணை ஆராதனையும் சாயுங்காலம் விசேஷித்த பிரசங்கமும் ஆராதனையும் நடத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

திங்கள் மாலை ஆராதனைக்கு ஜனங்கள் ஆலயம் நிறைய வந்திருந்தார்கள். கனம் சார்ல்ஸ் என்ரி ஐயரவர்கள் அப்போஸ்தலர் 16—9-ல் பிரசங்கம் செய்தார்கள்.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ஆசியாவின் திசைகளில் தேசாந்தர பிரசங்கியாக சுற்றிவந்து, மத்தியதரைக் கடலுக்கருகே துரோவா என்னும் துறைமுகப்பட்டணத்துக்கு வந்திருந்தபோது, இராத்தரிசனத்தில் சமுத்திரத்துக்கப்பாலுள்ள மக்கதோனியா தேசத்தான் ஒருவன் தம்மிடம் வந்து நின்று: நீர் வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அழைத்தபோது இவன் தன் நாட்டாருக்காக மாத்திரம் வேண்டிக்கொண்டதாக நினையாமல், முழு [illegible]யா தேசத்துக்கும் பிரதிநிதி [illegible] நிற்பதாக எண்ணினார் என்று [illegible] என்ன உதவியென்றாவது [illegible] வேண்டுமென்றாவது சொல் [illegible] புரம்பாக எல்லா உலக ஐசுவரியமும் பொருந்தியதாயிருந்த அக்கால ஐரோப்பா உள்ளாக ஆவியில் வறுமைப்பட்டிருந்ததினால், இந்தமக்கதோனியனின் ஆவி அப்போஸ்தலனை தரிசனத்தில் தட்டி எழுப்பி, நீர் வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டது.

இந்த மக்கதோனியன் மூலமாய் தன் குறையை அறியாமலே அறிக்கையிட்ட ஐரோப்பா, பின் சந்ததியில் அநேக தேசத்தாருக்கு சுவிசேஷ அப்பத்தைக் கொடுக்கத்தக்கதாகும்படி செய்த தேவனுடைய ஞானம், அறிவு இவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!

ரதம் ஏறிப்போன எத்தியோப்பிய மந்திரியை கால் நடையாய் ஓடிப்போய் சந்திக்கும் பிலிப்புவினால் வனாந்தர ஊற்றில் தீட்சைபெற தீர்மானித்ததுவும், செசாரியாவில் தரிசனம் கண்ட கொர்நெலியுவுக்கு யோப்பாவில் தரிசனம் கண்ட சீமோன் பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்போகச் செய்ததுவும் தெய்வசெயலே.

இந்நாளில் நாம் இந்திய மிஷனெரி சங்கத்துக்காகப் பரிந்து மன்றாடுகிறோம். இந்த சங்கத்தின் சரித்திரமும் ஆண்டவருடைய அதிசய நடத்துதலுக்கு ஒரு திருஷ்டாந்தம். இதுவும் அப்போஸ்தலருடைய ஊழியத்தின் தொடர்ச்சிபோல் அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தின் ஒரு அதிகாரம்தான். உலகமுடிவு பரியந்தம் நான் உங்களோடே கூட இருக்கிறேன் என்று திருவாக்குப் பண்ணிய கர்த்தர், என்றும் தம்முடைய ஊழியக்காரரோடு உடன் ஊழியக்காரராயிருந்து, கிரியை நடப்பித்து வருகிறார். தாங்கள் பெற்றுக்கொண்ட மகிமையின் சுவிசேஷத்துக்கு என்ன ஈடு செலுத்துவோமென்றும், தங்களில் பிரகாசிக்கும் ஒளியை எவ்வாறு தங்களைச்சுற்றி பிரகாசிப்பிக்க செய்யக்கூடுமென்றும் உணர்ச்சிகொண்ட சிலஊழியர்துரோவா தரிசனத்தைப்போல் சுவிசேஷ தரிசனம் கண்டு, தங்கள் ஆவியின் சுதந்தரமாகப் பெறப்போகிற தெலுங்கு நாட்டுக்கு ஆபிரகாமைப்போல் விசுவா

சத்தோடு போய், நவபாஷையைக் கற்று, இந்த இந்திய மிஷனெரி வேலையைஸ்தாபித்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 14 வருஷங்களுக்குள் ஏறக்குறைய 2,000 பேர் கிறிஸ்துவின் பாதத்தண்டை கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள் என்றறிகிறோம். சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவானாக.

இன்னும் ஆயிரக்கணக்கானபேர் அக்கியான இருளிலும் அறியாமையின் உழையிலும் அமிழ்ந்திருக்கிறதையும் துக்கத்தோடறிகிறோம். நீங்கள் வந்து எங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அந்த மக்கதோனியனுக்கொப்பாய், சமுத்திரத்துக்கப்பாலிருந்து, தங்கள் பிரதிநிதிகள்போன்ற பத்திரிகைகளாலும், மிஷன் உத்தியோகஸ்தர் மூலமாகவும் தெலுங்கு ஜனத்தார் நம்மை வேண்டிக்கொள்ளுகிறார்கள். தெலுங்குநாட்டு திவ்விய ஊழியம் பெருகி விருத்தியாவது திருநெல்வேலிக்கிறிஸ்தவர்களாலே மட்டுமல்ல, எல்லா தமிழ் கிறிஸ்தவர்கள் உதவியினாலேயாம். ஒரு ஆத்துமா தேவனுடைய பார்வையில் எவ்வளவருமையாயிருக்கிறதென்றும், கிறிஸ்தேசுவை விசுவாசிக்கும் எந்த ஆத்துமாவும் இலவசமான இரட்சிப்பைப் பெறக்கூடுமென்றும், சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கும் எண்ணிறந்த கூட்டமாகிய ஜனங்கள் சகல ஜாதிகளிலும் பாஷைக்காரரிலுமிருந்து வருவார்களென்றும், இந்த தெலுங்குதேசத்தாரும் பாஷைக்காரரும் நம்திரட்சகருடைய சிங்காசனத்துக்கு முன்னிற்கவேண்டியவர்களென்றும் நாம் விசுவாசித்தால் மாத்திரம் அவர்களுக்கு உதவி செய்யலாம். அவர்களிலநேகர் மெய் விசுவாசிகளாகி, தாத்தானின் அடிமைத் தனித்திலிருந்து விடுதலையடைந்து தேவபுத்திரராகலாமென்று விசுவாசித்தால் மாத்திரம் உதவிசெய்வோம். ஒரு கல் சிற்பாசாரியின் உளியால் தேவதூதனுடைய சாயலைப்பெறும். கிறிஸ்து சிற்பாசாரி [illegible] இருதயத்தில் திவ்விய மாறுத[illegible]ாக்குவார். தெலுங்கு நாட்டாருக்காக தேவ சந்நிதியில் மன்றாடுவீர்களாக. உதாரமாய் உதவி செய்யுங்கள். ஊக்கமாய் ஜெபியுங்கள். உங்கள் கையின் காணிக்கையின் பலனையும், இருதய விண்ணப்பத்தின் பலனையும் கடைசி மகாநாளில் பெற்றுக்கொள்ளுவீர்கள். ராஜா உங்களைப் பார்த்து: இந்த சிறியரில் ஒருவனுக்கு எந்த நன்மையைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்லுவார்.

—:(o):—

"நான் பிதாவானால் என் கனம் எங்கே?"

'என் தூதன்' என்ற ருத்தங்கொள்ளும் 'மல்கியா' தீர்க்கதரிசியின் மூலமாய் தேவன் ஓர் காலத்தில் யூதஜனங்களைப் பார்த்து, இக்கேள்விகேட்டார். தேவன் விசேஷித்த பிரகாரமாய் இஸ்ரவேல் ஜனங்களைப் பிதாவடைவான அன்போடு நடத்தி வந்தார். அதி அபூர்வகாலங்களில் அவர் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு, அவன், சந்ததியாரை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகச் செய்து, சகல ஜனங்களிலும் அவர்களைத் தமக்குச் சொந்தமான சம்பத்தாகவும், ஆசாரிய ராஜ்ஜியமாகவும், பரிசுத்த ஜாதியாகவும் (யாத் 19: 5, 6) ஆதரித்து அரவணைத்துக் காப்பாற்றி வந்தார். "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது, அவனை நேசித்தேன்,எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசியா. 11-1) என்றும், "ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல" (உபா. 1: 31) "கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்தேன்" (யாத். 19—4) என்றும் தேவன் சொல்லியிருப்பதாலும், "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிற போதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது" (உபா. 4: 7) என்று மோசே சொல்லியிருப்பதாலும், தேவனுக்கும் இஸ்ரவேல்

ஜனங்களுக்கும் பிதாமக சம்பந்தமிருந்ததென்று நன்குவிளங்கும்.

பிதாவாகிய தேவன், விசேஷித்த கிலாக்கியம்பெற்ற பிள்ளைகளாகிய யூதஜனங்களைப் பார்த்து, மல்கியா (1—6; 3--8, 10)வின் மூலமாய் அருளிய திருவாக்கு என்னவென்று பாருங்கள்:—

"நான் பிதாவானால் என் கனம் எங்கே? மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி, தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள்", என்றார்.

தேவனைத் தங்களுடைய பிதாவாகக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஜனத்திற்கும், ஜாதிக்கும், பாஷைக்காரருக்கும் இது ஒரு அருமையான திருவாக்கு. என்றும் மாறுதலாயிருக்கிற தேவன் அருளிய திருவாசகமானதால், இதைக்கருத்துடன் வாசித்து, உணர்ந்து, இதன்படி செய்கிறவர்கள், தேவனைக் கனம்பண்ணுகிறவர்களும் தேவாசீர்வாதத்திற்குப் பாத்திரவான்களாயிருக்கிறார்கள் என்று கூறும் தெய்வீக ராஜவினம்பரம். அப்படிச்செய்யாதவர்கள் தேவனை வஞ்சிக்கிறவர்கள் என்று இந்த வினம்பரம் தெரிவிக்கிறது. ஆகையால் சகோதரரே, பராக்கு, எச்சரிக்கை.

நாமும் அனுதினமும் பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே என்று வாயினால் ஜெபிக்கிறோம். நான் பிதாவானால், என் கனம் எக்கே என்று தேவன் கேட்கிறார். நாம் தேவனை கனம் பண்ணுகிறோமா, வஞ்சிக்கிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போமாக. பரலோக ராஜ்ஜியம் யாருக்கென்று ஆயத்தப்படுகிறது? வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்று தேவகுமாரன் யாரைப் பார்த்துச் சொல்லப் போகிறார்? மத்தேயு. 25-ம் அதிகாரம் 31-ம் வசனமுதல் பாருங்கள். நான் பரதேசியாயிருந்தேன். எனக்குப்போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; மிகவும் சிறியவர்களாகிய என் சகோதரருக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று தேவகுமாரன் யார் யாரைக் குறித்துச் சொல்லக்கூடுமோ, அவர்களுக்கே பரலோக ராஜ்ஜியம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. வாயினால் என் மேல் சோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று மாத்திரம் சொல்லுகிறவர்கள் அதில் பிரவேசிக்கமாட்டார்கள் என்று தேவகுமாரன் சொல்லியிருப்பதை நாம் எல்லாரும் அறிவோம். ஆகையால் உலகஞானமும் கல்வியும் சாஸ்திரங்களும் முதிர்ந்து, உலகம் பாழாய்ப்போகும் இப்பிரளய காலத்தில், சுயநயம் மூலாதாரமாக நம் முடைய திருக்குள்ள மனசு கூறும் போலி நியாயங்களுக்கு நாம் செவிகொடாமல், 'அப்பாலேபோ, சாத்தானே' என்று அவைகளை வெறுத்துத்தள்ளி, எக்காலமும் மாறுதலற்ற தருடைய திருவசனத்தைக் கிஞ்சித்தேனும் சந்தேகமின்றி விசுவாசித்து, அதில் சொல்லப்பட்டிருக்கும் தெளிவான கட்டளைகளுக்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிவோமானால், அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரவான்களாவோம்.

தோர்ணக்கல்லிலிருக்கும் தேவகுமாரனின் சகோதரரான ஏழை ஜனங்களுக்கு ஒரு தேவாலயம் கட்டிக்கொடுப்போம் என்று நாம் வாக்களித்து, ஐந்து வருஷத்துக்கு மேலாகிறது. இன்னும் சு 12,000 தேவையாயிருப்பதால், நாம் கொடுத்த வாக்கின் படி ஆலயம் கட்டப்படவில்லை. இது தேவனைக் கனம் பண்ணுகிறதாகுமோ? ஞானியாகிய சாலொமோன்:— "உன் பொருளாலும் உன் எல்லா வினைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்" (நீதி. 3: 9—10) என்று சொல்லியிருக்கிறான். எசேக்கியா ராஜாவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவாலயத்தைக் கென்று உற்சாகமான காணிக்கை செலுத்தினார்கள் என்றும், அப்போது அவர்கள் தம்

முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது" (2 நாளா. 31: 10) என்று பிரதான ஆசாரியனை அசரியாசொன்னான் என்றும் வாசிக்கிறோம். ஆகையால் கர்த்தருடைய பிள்ளைகள் உற்சாகமாய்க் காணிக்கைகளையும் தசமபாகத்தையும் ஆண்டவருக்கென்று படைப்பதினால், அபரிமிதமான ஆசீர்வாதம் பெறுவார்கள் என்பது மல்கியாவின் வாக்கினாலும் சாலொமோனின் வாக்கினாலும், பிரதான ஆசாரியனை அசரியாவின் வாக்கினாலும், தேவகுமாரனின் வாக்கினாலும் உறுதிபண்ணப்பட்ட தெய்வீக சத்தியம் என்று பார்க்கிறோம்.

எசேக்கியா ராஜாவின் காலத்திலிருந்த பிரதான ஆசாரியனுடைய அசரியாவைப் போன்ற ஒருவர் தோர்ணக்கல்லில் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவும் கர்த்தருடைய சபையை நட்டத்தவும் பரலோகத்தின் தேவனால் சன்னது பெற்றிருக்கிறார். நாம் உற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் தசமபாகங்களையும் அவர் 'தேவசமுகத்தில் சேர்த்துவைக்கிறார். ஆகையால் நாம் இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால், நம்முடைய களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்ப வேண்டுமானால், நம் முடைய ஆலைகளில் திராட்சரசம் புரண்டோட வேண்டுமானால், நியாயத்தீர்ப்பு காளில் நாம் வலதுபாரிசத்தில் நிறுத்தப்பட வேண்டுமானால், 'வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே' என்னும் ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கவேண்டுமானால், நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் மிஷனெரி ஊழியத்தை ஊக்கமாய் விண்ணப்பங்களினால் தாங்குவோமாக. தோர்ணக்கல் ஆலயத்துக்கென்று தசமபாகங்களையும் உற்சாகமான காணிக்கைகளையும் படைப்போமாக.

J. S. C.

—:(o):—

மார்ச்சுமீ 31வதுயோடு நாளது வருஷக் கணக்கு முடிவுபெறும்.

தேவுங்குநாட்டுக் கடிதம்.

இந்த மாசத்தின் விசேஷ சம்பவங்கள்: (1) 3, 4, 5வகளில் சங்கை மெற்ராப் போலிட்டனுடைய மகாகனம் கல்கத்தா அத்தியட்சரவர்கள் தோர்ணக்கல் அத்தியட்ச மண்டலத்தைச் சேர்ந்த சி. எம். எஸ்., சிங்கரேனி மிஷன், இந்தியன்மிஷன், தோர்ணக்கல் டயோசிஷன் மிஷன் இவைகளில் சம்பந்தப்பட்ட தேவஊழியரையும் சபையார் சிலரையும் கம்மாமெட்டுக்கு வந்து பார்த்துக்கொண்ட விஷயம், (2) 14-ம், 15-ம்வகளில் தோர்ணக்கல்லில் நடந்த திடப்பத்தல், ஞானஸ்நானம், பரி. ராப் போஜனமும்மிஷபாஸ்டரேட்சபைகள்கூடி ஆசரித்த சேர்ப்பின் வருஷாக்தரப்பண்டிகையும், (3) 17-ம், 18-ம்வகளில் மானுக் கோட்டையில் நடந்த திடப்பத்தலும், திருவிருந்தும், (4) சிங்கரேனி மிஷனைச் சேர்ந்த பாக்காலாத் தாலுகா நரசிப்பேட்டையில் 19-ம், 20-ம், 21-ம்வகளில் நடந்த திடப்பத்தலும் திருவிருந்தும் ஞானஸ்நானமும், (5) 27-ம் வயில் மேடிதப்பல்லியில் நடக்கப்போகும் மெடி. பாஸ்டரேட்கே குரிய சேர்ப்பின் பண்டிகையுமே.

இவைகளுக்குன் மகாகனம்: மெற்ராப் போலிட்டன் அத்தியட்சரவர்களுடையவரவைப் பற்றி மட்டும் கான் இதில் எழுதுகிறேன்.

கம்மாமெட் என்பது இவ்விடங்களிலுள்ள ஸ்தலங்களில் ஒரு பெரிய வியாபாரஸ்தலம். ரெயில்வே ஸ்டேஷன். திருகெல்வேலியிலிருந்து தோர்ணக்கல்லுக்கு வருபவர்கள் இந்த ஸ்டேஷனைத் தாண்டியே செல்லவேண்டும். தோர்ணக்கல்லுக்கு உத்தேசம் 15 மைலுக்கு முன்னுலிருக்கிறது. இவ்விடத்திலேயே கம்மாமெட்டி, சி. எம். எஸ். மிஷனின் (எட்குவார்ட்டர்) மிஷனெரி ஸ்தானமும், ஜெனரல் மிஷன் ஸ்தானமும், மிஷன் ஆஸ்பத்திரியுமிருக்கிறது. ஒரு பெரிய கற்கோவிலும் இன்னும் பற்பல கட்டடங்களும் உண்டு. ஆகவே வேனிற்காலப் பள்ளிக்கூடங்கள் (Sumr; School) முதலிய பெரிய கூட்டங்கள்

தோர்ணக்கல் டயோசிஸ் சம்பந்தமான பட்டாபிஷேக முதலிய விசேஷ ஆராதனைகளும் இக்கேதான் நடப்பது வழக்கம். இங்கேதான் மெட்ராப்போலிட்டனவர்களின் சந்திப்பும் நடக்கிறது. தெலுங்கு சி. எம். எஸ். மிஷன் வேண்டிகோளுக்கினசந்து, மகாகனம்: சார்ஜெண்ற்றியட்சரவர்கள் காலத்தில் தெலுங்குநாட்டுக்கனுப்பப்பட்டிருந்த தமிழருக்குள் மிஸ்டர் யாக்கோபுஸ்கின்னர் உபதேசியாரவர்கள் இங்கிருந்து கொண்டே ஓயாத சுற்றுப்பிரயாணம் செய்து உழைத்து, இங்கேயே மரித்தடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தோர்ணக்கல் அத்தியட்ச மண்டலத்தில் ஊழியம் செய்துவந்த தமிழரான ஊழியருக்குள், உண்மையும் ஊக்கமுமாய் உழைத்தவரும் முதலானாக மரித்தவருமான மிஸ்டர் எம். மாணுவேலவர்களுடைய கல்லறையும் இவ்வூரிலேயே இருக்கிறது. கனம். ஜே. பி. பெயின்ஸ் ஐயரவர்கள் மிஷனெரியாயிருக்கும் காலத்தில் உத்தேசம் 14 வருஷங்களுக்குமுன், தோர்ணக்கல் அத்தியட்சாவர்கள் திருநெல்வேலி இந்தியன்மிஷன் செக்ரற்றரியாராக. இவ்விடத்துக்கே முதல் முதலாக வந்திருந்து, பார்வையிட்டு, மானுக்கோட்டைத் தாலுகாவை எமது மிஷன் சுவிசேஷ வேலை நடத்துவதற்கான ஸ்தலமாகக் குறிப்பிட்டார்கள். இவ்விடத்திலேயே மூன்று வருஷங்களுக்கு முன்னதாக மகாகனம் சென்னை அத்தியட்சரவர்கள் வந்திருந்து, தோர்ணக்கல் அத்தியட்சமண்டலத்தை அதின் அத்தியட்சரவர்களுக்கு ஒப்புவித்துப் போனார்கள். இவ்விடத்திலேயே மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் முதலாவதாகப் பட்டாபிஷேகம் அளித்தனர். இந்திய மிஷனெரி சங்கத்தைச் சேர்ந்த முதல் இரண்டு மிஷனெரிமாரும் முதலில் இவ்விடத்திலேயே வந்திருந்து தெலுங்கு கற்று, இவ்விடத்திலிருந்துகொண்டே மானுக்கோட்டைத் தாலுகாவில் தங்கள் சுற்றுப்பிரயாண வேலையைச் செய்துகொண்டு வந்தார்கள்.

தேவபோகிரு கம்மாமெட்டி ஒரு விசேஷ வியாபார வசனமுதலமானதால், தூரதூர ஜனங்கள் ரெயிலில் ஏறுவதும் அதிலிருந்து இறங்குவதும், சரக்குகள் ஏற்றுவதும் இறக்குவதுமாயிருக்கும். எந்தநேரமும் வீதிகள் சந்தடியாயிருக்கும். ஆனால் இந்தவிசை நாங்கள் தோர்ணக்கல்லிலிருந்து கம்மாமெட்டி ஸ்டேஷனில் இறங்கியபோது, இன்னும் இரண்டு போ மட்டுமே இறங்கி, ஊருக்குட் பிரவேசிக்காமல், காட்டின் வழியாய் எங்கேயோ போனார்கள். ரெயிலில் ஏறுகிறவர்களாக ஒருவரும்இல்லை. ரெயிலுக்கு அப்பக்கமும் இப்பக்கமும் வீதிகள் அடர்ந்திருக்கிறது. ஆனால் ஊருக்குட்போனாலோ, ஜனங்களின்மூச்சுப் பேச்சைக்காணோம். காரணம் என்னவென்று சொல்லப்பட்டது. அதிகாலையில் நாங்கள் எழுந்து, உயர்ந்த மேட்டில் கட்டப்பட்டிருக்கு சி. எம். எஸ். பங்களாவிலிருந்து பார்க்கவே. சுற்றிலும் சின்னச் சின்ன கிராமங்கள் கட்டப்பட்டிருக்கிறதாய்க் காணப்பட்டது. கம்மாமெட்டிக்குள் சந்தடியில்லாமலிருந்ததற்குக் காரணம் இங்கே தெரிகிறது. ஊருக்குள்பயங்கரமானகொப்புள "ப்ளேக்" நோயுண்டாகி, பலரை வாரிக்கொண்டுபோய்க்கொண்டிருந்ததால், எல்லாரும் தங்கள் வீடுகளையும் அரண்களையும் தங்கள் பண்டம்பாடிகளையும் இருந்திருந்தபடியேவிட்டோடிப் பற்பல ஊர் சேர்ந்ததுமல்லாமல், காடுகளிலும் போய்க்குடிசைகள் போட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கங்கே சின்னச்சின்ன ஊர்கள் போல காணப்பட்டவை இக்குடிசைகளே. ஒரு பட்டணத்தாரைக் கர்த்தர் ஒடென்று துரத்தியே, ஒரே தினத்திலே ஓடிப்போக நேரிடுமென்பதற்கு இது போதுமான திருஷ்டாந்தமாயிருந்தது. ஒடென்றுரைத்த தேவசத்தத்தைக் கேட்டோமேம் இத்தஜனங்கள், கிறிஸ்துவின் மந்தைக்குட் 'கூடி' என்றும் கூறும் தேவசத்தத்தையும்கேட்கும்போது, தினம் நிரளாய் வந்து கூடுவார்களென்று கம்பி உரைப்போமாக. "ஓடி, ஓடி, ஜீவன் தப்ப ஓடி" என்பது "கூடி, கூடி, ரக்ஷண்ணிய சோவாருக்குட் கூடி, கூடி" என்று முடிவு பெறுவதாக.

கம்மாமெட்டி இப்படிக் கலங்கிச் தெறிப் போயிருக்கும் இச்சமயத்தில், வரவிருக்கும்

68-ம் சங்கீதம்.

(தொடர்ச்சி.)

சரணம். 5.

பாஷான் பர்வதம் தேவ பர்வதம்;
பாஷான் பர்வதம் உயர்சிகரங்களுள்ள பர்வதம்;
உயர் சிகரங்களுள்ள பர்வதங்களே,
தேவன் வாசமாயிருக்க விருப்பங்கொண்ட இந்தப் பர்வதத்தை
என் பொருமையுடன் பார்க்கிறீர்கள்?
"யேகோவா" இதில் என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்!
தேவனுடைய ரதங்கள் பதினாயிரம், பல்லாயிரம்
சீனாயிலிருந்தவண்ணம் ஆண்டவர் இப்பரிசுத்த ஸ்தலத்திலிருக்கிறார்

இச்சரணம் சீயோன் மலைச் சிறப்பைப் பாடியது. தேசத்தை ஜெயித்தபின், தேவன் உன்னதமும் அலங்காரமும் பொருந்திய பாஷான் பர்வதங்களையும், அதிலுள்ள எர்மோன் சிகரத்தையுமல்ல, சீயோன் மலையையே தமதுஸ்தானமாகத்தெரிந்துகொண்டார். சீனாயில் சிறிதுகாலம் மாத்திரம் எழுந்தருளினார்; சீயோனிலோ என்றைக்கும் வாசமாயிருப்பார்! ஆயிரமாயிரமான தமது தூதர்களுடன், சீனாவில் வெளிப்பட்ட சகல மகத்துவத்தோடும் பயங்கரத்தோடும், அவர் சீயோனின் பரிசுத்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கிறார். எழுந்தருளியிருக்கிறவர் ஜெயமருளுவார் என்று சங்கீதக்காரன் பாடுகிறான்.

சரணம். 6.

தேவரீர் உன்னதத்திற்கு ஏறினீர்!
சிறைப்பட்டவர்களைச் சிறையாகிக் கொண்டு போனீர்! (எபே. 5: 12)
மனுஷரிடத்திலிருந்து வெகுமானங்களைப் பெற்றுக்கொண்டீர்!
"யேகோவா" வாகிய தேவன் அவர்களுக்குள் வாசம்பண்ணும்பொருட்டு,
துரோகிகளாகிய மனுஷரிடத்திலிருந்தும் கூட
வெகுமானங்களைப் பெற்றுக் கொண்டீர்!

தேவரீர் சீயோனுக்கு ஜெயவேந்தராய் எழுந்தருளினபோது, உமது சத்துருக்களைக் கைதியாக்கிக்கொண்டுபோனீர்; அதைப் பார்த்த சகல ஜாதியாரும் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து படைத்து, உமது தயவை நாடினார்கள். முன் உமக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின துரோகிகளுங் கூட தேவரீர் தங்கள் நடுவில் வாசம்பண்ணி, தங்களுக்கு அடைக்கலமாயிருக்கவேண்டுமென்று ஆசித்தவர்களாய், உமக்குக் காணிக்கைகளைப் படைக்கிறார்கள். நீர்லோ ஜெயவேந்தர்! என்றுரைப்போல் பாடுகிறான்.

பரி. பவுல் எபே. 4: 8-ல் இச்சரணத்தை மேற்கோளாகப் பேர்த்தெழுதுகிறார். இயேசுநாதர் பரலோகத்துக்கெழுந்தருளியபோது, நிச்சயமாகவே நமது சகல ஆத்தும சத்துருக்களையும் மேற்கொண்ட ஜெயவேந்தராய் எழுந்தருளினார் என்றும், அங்கேறினபின் தம்மால் விடுவிக்கப்பட்ட ஜனங்களிடத்திலிருந்தும் தமது தயவை நாடுகிறவர்களிடத்திலிருந்தும் அவர் வெகுமானங்களை வாங்குகிறதற்குப் பதிலாக அவர் தாமே தமது ஜனங்களுக்கு வெகுமானங்களை அளிக்கிறார் என்றும் சொல்லுகிறார். அவர் திருச்சபைக்களித்த வெகுமானங்கள் யாதெனில், பரிசுத்த ஆவியின் மூலமாய் அவர் திருச்சபைக்கு ஏற்படுத்தின பற்பலவகுப்பாரான தேவ ஊழியர்தான் என்கிறார். சங்கீதக்காரன் புகழ்ந்து பாடின ஜெயத்தைப்பார்க்கிலும், இயேசுராஜா அதிக மகத்துவ ஜெயம் பெற்றதாக பரி. பவுல் பேசுகிறார்.

பல்லவி.

இங்கே சங்கீதத்தின் மூன்றாம் பாகம் ஆரம்பமாகிறது. கடந்தகால சரித்திரத்தை விளம்பின் சங்கீதக்காரன் இந்தத் தேவன் இனிமேலும் தமது சத்துருக்கள்மீது சம்பூரண ஜெயங்கொள்ளுவார் என்று பாடுகிறான்.

ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்!
அவர் தினந்தினம் நமது பாரத்தைச் சுமந்தருளுகிறார்.

தேவனே நமக்கு ரட்சிப்பு!
தேவன் நமக்கு மீட்பின் தேவனாயிருக்கிறார்
மரணத்திலிருந்து தப்புவதும் ஆண்டவராகிய "யேகோவா" வாலேயே.

இது ஓர் பல்லவிபோல் இடையில் வருகிறது. தேவன் தமது ஜனங்களின் பாரங்களையும், கவலைகளையும், அல்லல்தொல்லைகளையும் சுமக்கிறார்; அவர்களை அவர்கள் சத்துருக்களின் கையிலிருந்து இரட்சிக்கிறார்;

மரண அபாயத்திலிருந்து விடுவிக்கக்கூடிய வரும் அவரே—அவர்க்கே ஸ்தோத்திரமுண்டாவதாக என்பதே இப்பல்லவியின் பொருள்.

அருள்நாதரை நினைத்து இதைப் பாடுவது எத்தனை சிறப்பு! ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கும் தமது பிள்ளைகளின் சகல பாரத்தையும் நாடோறும் சுமக்கிறவர் அவரே. அவர்கள் ஆத்தும சத்துருக்களின் கையினின்று அவர்களை நாடோறும் விடுதலையாக்குகிறவரும் அவரே. அவர் நாமம் விடுதலைகளின் தேவன் என்று சொல்லத்தகும். மரணத்திலிருந்து விடுவிக்கிறவரும் அவரே.

இலங்கைக் கிறிஸ்தவசங்கம்.

இலங்கையிலோர் கிறிஸ்தவசங்கம் ஸ்தாபகமானதினால் இரட்சாபெருமானுக்கு அனந்தம் ஸ்தோத்திரம். இலங்கையென்றால் ஒளியென்றருத்தம். பர்மா, சென்னை, கோயம்புத்தூர், மூணூர் முதலான கிறிஸ்தவசங்கங்களுக்கு மேலாக, இலங்கை தான் பூண்ட நாமத்துக்கேற்க, ஒளியாக, தீபமாக இலங்கும்படி ஜெபிப்போமாக. இலங்கை யோர் காலத்தில் இராவணேசுரனின் ராஜ்ஜியம். இராவணம் என்றால் வினைக்கு. ஒளியின் மகன் என்னும் நாமம் பூண்டு, அந்தகார லோகாதிபதியின் கிரியைகளைச் செய்துவந்த இராவணனின் ராஜ்ஜியத்தில், உலகிலுள்ள சகல மனுமக்களையும் பிரகாசிப்பிக்கின்ற ஒளியாக விளங்கிய இரட்சாபெருமானின் பிள்ளைகள் இலங்கையில் மெய்யாகவே ஒளியின் மக்களாக விளங்கும்படி ஜெபிப்போமாக. இலங்கைக்குப் பூர்வநூல்களில் இரத்தினத்தீவு, இயக்கர்தீவு என்னும் பெயர்களுண்டு. இராவணனுக்கு முன் இயக்கர்கோன் என்னப்பட்ட குபேரன் அங்கு அரசுபுரிந்தானும். இலங்கையிலுள்ள நம்சகோதரர் குபேரனைப்போன்ற தனவந்தர்களாகவும், தங்கள் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை இ. மி. சங்கத்துக்குத் தசமபாகமாகப் படைக்கவும் வேண்டுமென்று விரும்புகிறோம். இலங்கைக்குச் சிம்மளதுவீபம், அதாவது சிங்கத்தீவு, என்றும் பெயர். அங்குள்ள நம் சகோதரர் பூதாவின் சிங்கமும் தாவீதின்குமாரனுமாகிய இரட்சகரின் நாமத்தைமகிமைப்படுத்தும் சிங்கக்குட்டிகளாக விளங்குவார்களாக அத்தீவுக்கு ஈழநாடு, சேரன்தீவு, சைலன் என்னும் பெயர்களுமுண்டு. சைலன் என்றால் அதிபூர்வ தமிழில் தெங்கு என்றருத்தம். அப்பெயர் இப்போது சீலோன் என்று மருவிற்று! தெங்குத் தீவு என்பது இந்தியர்களின் முன்னோர் இருந்ததாகச் சொல்லப்படும் நாவல், இறலி, குசை, கிரௌஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்னும் சப்த தீவுகளில் ஒன்று. ஆகையால் நம்முன்னோர்களின் பூர்வதேசமாகிய இலங்கையிலுண்டான கிறிஸ்சங்கம் செழித்தோங்கும்படி ஜெபிப்போமாக. நம்முடைய முன்னோனான ஆதாமின் பெயரும் அத்தேசத்தில் நிலைபெற்றிருக்கின்றது. இலங்கையின் வடபாகத்தை இந்தியாவோடு சேர்க்கும் திருவணை என்னும் சேதுவுக்கு ஆதாமின் பாலம் (Adam's Bridge) என்றும், இலங்கையிலுள்ள ஓர் மலைக்கு ஆதாமின் சிகரம் (Adam's Peak) என்றும் பெயர். இந்நாமங்கள் நிலைபெற்றிருக்கின்ற தேசத்திலுள்ள நம் சகோதரர், பழைய ஆதாமின் கிரியைகளைத் தள்ளிவிட்டு, புதிய ஆதாமைத் தரித்துக் கொண்டவர்களாய்ப் பிரகாசிக்கும்படி, கொல்கொதா மலையரசன் துணைபுரிவாராக. இலங்கையிலுள்ள நதிகளுக்கு மிச்சமாய்க் கங்கையென்றே பெயர். திருஷ்டாந்தமாக, கழனிகங்கை, காமுகங்கை, வாழவகங்கை, மாவலிகங்கை, நீல்கங்கை, கங்கைராயன் என்பதெல்லாம் அங்குள்ள நதிகளின் பெயர்கள். ஆகையால் இலங்கை அதிபூர்வ கங்காதேசம். கங்காதேசத்திலுள்ள நம்முடைய சகோதரர் ஜீவகங்கையாகிய இரட்சாபெருமானின் விலாவிலிருந்து புறண்டோடிய ஜீவதீர்த்தத்தில் அனுதினமும் முழுகி, தங்கள் வஸ்திரங்களை எம்பெருமானின் உதிரத்தில் தோய்த்து, வெண்ணங்கி தரித்தவர்களாய் விளங்குவார்களாக.

J. S. C.

டோர்ணக்கல் ஞாபகார்த்தாலயத்துக்காக ஓர் விஞ்ஞாபனம்

"இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள். நீங்கள் மலையின் மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து ஆலயத்தைக் கட்டுங்கள். அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன். அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகாய் 1: 2, 8.

கடந்த 13 வருஷங்களாக தேவன் திருநெல்வேலியின் கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஆச்சரியமான பிரகாரமாய்ச் செய்திருக்கும் நன்மைகளை நினைவு கூறுவோமாக.

பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கொத்த பெரிய நாமத்தை நமக்கு அருளிச் செய்திருக்கிறார். இந்திய மிஷன் ஏற்பட்டதினால், திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரிய ஆசீர்வாதம் அளவிடப்படாதது. முதல் முதல் டோர்ணக்கல்லைச் சுற்றிப்பார்த்தவர்கள் இந்த இடங்களில் எப்படிக் கிறிஸ்துமார்க்கம் உண்டாகப் போகிறது என்று சந்தேகப்படாமல், விசுவாசத்தோடு தைரியமாய் வேலைசெய்ய ஆரம்பித்ததினால் தேவன் திருநெல்வேலி கிறிஸ்தவர்களின் வாஞ்சையை நிறைவேற்றினார். கடந்த வருஷங்களில் நடந்து வருகிற வேலைகள் அதிகம். மகாகனம் அத்தியக்ஷரவர்களே நம்மிஷன் பேரிலுள்ள வாஞ்சையினால் நம்மிஷனை மேல் நடத்துவது அதிலும் பெரிய சிலாக்கியம். கட்டட விஷயங்களிலும், மற்ற விஷயங்களிலும் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் மூலமாய் கிடைத்திருக்கிற பணச்சகாயம் அதிகம். நம்மிஷன் விர்த்தியாகிக் கொண்டு வருகிற சலாக்கியத்திற்கு நாம் தெய்வத்திற்கு எப்போதும் துதிசெலுத்திக்கொண்டேயிருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நம்மிடத்திலிருக்கிற ஒரே ஒரு குறையை மாத்திரம் சொல்லி, அது நிவிர்த்தியாகப் பிரயாசப்பட வேண்டியது. அதாவது:—

டோர்ணக்கல்லில் கோவில் இல்லாதகுறை. நம்முடைய மிஷனுக்கு டோர்ணக்கல் மூலஸ்தானமும் ஒரு அத்தியட்சஸ்தானமுமாயிருப்பதினால், இந்த இடத்தில் ஒரு பெரிய கோவில் திருநெல்வேலி கிறிஸ்தவர்களால் கட்டப்படவேண்டுமென்று பலதடவையும் பெரியவர்கள் மூலமாயும் பத்திரிகையின் மூலமாயும் வெளியிட்டிருப்பதை அறிந்திருக்கிறீர்கள். இந்த அத்தியக்ஷ் ஸ்தாபனத்தில் ஓர் கோவிலில்லாமலிருப்பது எவ்வளவோ துக்கமான காரியம். திடப்படுத்தல், குருப்பட்டாபிஷேகம் டோர்ணக்கல்லில் நடக்கவேண்டியதிருக்க, கோவிலில்லாததால், இதர இடங்களுக்குப்போய்க் கொடுக்கவேண்டியதிருக்கிறது. தான் மச்சுப்பாவப்பட்ட மாளிகையில் குடியிருக்கும்போது, தேவனுடைய பெட்டி கூடாரத்திலிருக்கலாமாவென்று தாவீது ராஜா சொல்லுகிறார்". அந்தவைராக்கியம் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு உண்டாக வேண்டாமா? திருநெல்வேலி கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ரூ. 1000 முதல் ரூ. 15000 வரை செலவுசெய்து கட்டிய கோவில்களில் ஜெபம் செய்யும்போது, உங்களுடைய பிள்ளைகளாகிய டோர்ணக்கல் சபையார் இலையால் பரப்பிய குடிசையிலும், மரத்தின் நிழலும், கல்லின் சார்பிலும், தெருவீதியின் மத்தியிலுமிருந்து கஷ்டத்தோடு தெய்வத்தை ஆராதிப்பது உங்களுக்கு இஷ்டந்தானே? உங்களுடைய மனசு இன்னும் இளகவில்லையா? தெலுங்குநாடாகிய டோர்ணக்கல்லில் மழைகாலத்திலிருக்கிற அசங்கியமும், வெயில் சாலத்திலிருக்கிற அக்னிக் காற்றும், பனிகாலத்திலிருக்கிற நடுக்கமும் அறிந்தவர்களுக்கே தெரியும். கனம் மதுரம் ஐயர்கள் டோர்ணக்கல்லுக்கு வந்திருக்கும்போது, புல்லூர் என்னும் கிராமத்தைப் பார்வையிட்டார்கள். அந்த ஊரில் இலையால் கட்டியிருந்த கோவிலைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, உள்ளே நுழைய ஆசையிருந்தபோதிலும், வாசல் வழியாய் நுழைந்து உள்ளே போவதற்கு முடியாமற் போய்விட்டது. இதினால் இவ்விடத்து கோவில் என்ன மாதிரி இருக்குமென்று யோசித்துக் கொள்ளுங்கள். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலைப் பார்த்தும் கேட்டுமிருப்பீர்கள். அது யாரால் கட்டப்பட்ட போதிலும், தினந்தோறும் அந்தக் கோவிலில் விளக்கேற்றி, பூசைமணியடிக்கும்போது, ஜனங்கள் கோவிலில்போய் பூசைசெய்து, 'நெல்லையப்பர்' என்று வாயினால் சொல்லுகிறார்கள். திருநெல்வேலி கிறிஸ்

தவர்கள் சேர்ந்து டோர்ணக்கல்லில் தங்கள் பேரால் கோவில் கட்டி வைக்கும்போது, கோவிலில் தீபம் ஏற்றப்படாதா? கோவில் மணியடிக்கும்போது, ஜெபம் நடக்காதா? உங்கள் பேரைச் சொல்லி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தமாட்டார்களா?

கிராமங்களில் கக்ஷி நிலவியாச்சியங்கள் நடக்கும்போது, வீட்டுக்கு அல்லது ஆள் வீதத்திற்கு இவ்வளவு என்று வரிவைத்து வியாச்சியம் நடத்தவில்லையா? ஐம்பது வீடுள்ள ஒரு ஊரில் ரூ. 5000-ம், வரிவைத்து சிலவு செய்கிறார்கள். ஆனால் இது அப்படிப்பட்ட வீண் செலவுமல்ல, அப்படி கட்டாயம் செய்து வாங்கிறதுமில்லை, இது உங்கள் பேரில் விழுந்த கடமை. கர்த்தரால் உங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தை நினைத்து, நீங்கள் நன்மைசெய்ய கடன்பட்டிருக்கிறீர்கள். தற்சமயம் ஐரோப்பாவில் நடக்கும் பயங்கரமான அகோர யுத்தத்தை நினைத்து, தேவன் உங்கள் பேரில் அன்பு வைத்து செய்யும் நன்மைகளை உணர்ந்து, கர்த்தருடைய நாமமகிமைக்கென்று நீங்கள் டோர்ணக்கல்லில் கட்டப்போகும் ஆலயம் சீக்கிரம் வேலைதொடங்க, உங்களால் இயன்ற உதவிசெய்ய உங்களை அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். கோவிலுக்கு அஸ்திபாரக்கல் வைத்து ஏறக்குறைய இரண்டு வருஷமாகிறது. சி. யம். எஸ். எஸ். பி. ஜி. சபைகளில் சுமார் 1570 கிராமங்கள் இருக்கிறது. கிராமத்திற்கு ரூபாய் 20 வீதம் கொடுத்தபோதிலும், ரூபாய் 30000-த்துக்கு மேல் வரும். இது பெரிய காரியமல்ல. இந்த ஒரே காரியத்தை எல்லாரும் ஒன்று சேர்ந்து பேசி, ஏகமனசும் ஏகயோசனையுமுள்ளவர்களாய் ஆலோசித்து, முடிவுக்குக் கொண்டு வரும்படியாகத் தெய்வத்தைப் பிரார்த்திப் போமாக. உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். அவர்கள் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஆலயம் கட்ட பிரயாசப்படுவீர்களா? எல்லாரும் ஒன்று சேர்ந்தால், இந்தக் கோவில் முடிவுக்கு வருமேயல்லாமல், ஒருவராய்ச் செய்யக்கூடியதல்ல. உடற்பிறப்பில்லாத ஒரு பிள்ளையும் பிள்ளையாகுமா? ஒரு வீடு நகரமாகுமா? ஆலயம் கட்டிமுடிக்க வேண்டுமென்ற அபிமானம் நமக்குள் உண்டாக வேண்டும். 1 நாளா. 29-ம் அதிகாரத்தை வாசியுங்கள். தாவீது ராஜாவும் ஜனங்களும் ஆலயத்தின் மேல் வைத்த வாஞ்சையினால் முதலாவது, கஷ்டப்பட்டு சவுதரித்தார்கள், இரண்டாவது, மனப்பூர்வமாய் கொடுத்தார்கள், மூன்றாவது உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கொடுத்து, சந்தோஷப்பட்டு ஸ்தோத்திரித்து துதித்தார்கள். அப்படியே நாமும் டோர்ணக்கல்லில் தேவனுடைய அரண்மனையை கட்டி சந்தோஷப்பட வேண்டும். அதற்காக நாங்களெல்லாரும் தேவனைப் பிரார்த்தித்து, உங்களுடைய வாக்குக்காகக் காத்திருக்கிறோம்.

நமக்கு முன்மாதிரியாக ஐரோப்பியரால் கட்டி பேர் வழங்குகிற மெஞ்ஞானபுரம், இடையன்குடி, பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள கோவில்களையும் நினைத்துக்கொள்ளுவோமாக.

டோர்ணக்கல் ஆலய எஸ்டிமேட்டு ரூ. 30000—0—0. இதில் சுமார் 8000 நாளதுவரை சேகரமாகியிருக்கிறது.

திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்திலுள்ள சர்க்கிள் சேகரங்கள் 21-ல ஒவ்வொன்று ரூ. 1000மும், அல்லது

79 பாஸ்ட்றேற்றுகள் ஒன்று ரூ. 250ம்

1570 கிராமங்கள் ஒவ்வொன்றும் ரூ. 20-ம்.

லக்ஷம் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தலைக்கு ரூ. 0—4—0 வீதம் கொடுத்தால், ஆலயம் முடிவு பெற்றுவிடும். நம் நாட்டிற்கு என்ன ஆசீர்வாதம்! தோர்ணக்கல் கிறிஸ்தவர்களுக்கு என்ன பேருதலி!! நம் அருள்நாதர் நமத்திற்கு எத்தனை மகிமை!!! சென்னை, பர்மா, இலங்கை, கோயம்புத்தூர், மூணார் கிளைகளின் சகாயமும் உற்சாகமும் வேறு.

தாவீது ராஜனைப்போல நாமும் ஆண்டவரின் ஆலயம் கட்டப்பட வேண்டுமென்ற நல்ல தீர்மானமுள்ளவர்களாயும், தனக்குப் பின் ராஜாவாகிற தன் பிள்ளை இளைஞனாயிருக்கிறதை நினைத்து, ஆலயத்திற்குவேண்டிய எண்ணிறந்த பொருள்களையும் சாமான்களையும் சவுதரித்ததுபோல, நீங்கள் எடுத்துக்கொண்ட பாரத்தைநீக்க உங்கள் பிள்ளை இளைஞனாயிருக்கிறபடியால் ஆலயத்திற்கு வேண்டிய பொருள்களையும் சாமான்களையும் சேகரித்துக் கொடுப்பீர்களாக

Gi யோசேப்பு

அத்தியக்ஷாதீனப் பத்திரிகை

ஈஸ்தர் பண்டிகை.

ஈஸ்தர் பண்டிகை தினம் அநேகருக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அருளுமென நம்புகிறோம். ஆயிரக்கணக்கான குடும்பங்களில் வாலிபர் நீதி நியாயம் நிலைநிறுத்துவதற்காகப் புரியும் இக்கொடிய போரில் தங்கள் ஜீவனைத் தத்தஞ்செய்திருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்திருக்காவிட்டால், பிள்ளைகளைச் சாகக் கொடுத்திருக்கும் பெற்றோரும் புருஷரை இழந்திருக்கும் மனைவிகளும் பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்கும் பிள்ளைகளுமான யாவரும் மிகுந்த அவநம்பிக்கையின் உளையிலும் துக்கசாகரத்திலும் மூழ்கியிருப்பார்கள். இப்போதோ ஈஸ்தர் தினத்தின் செய்தியானது அவர்களெல்லாரையும் தாங்கி ஆறுதலளிக்கின்றது. கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ளவர்களாய் மரிக்கும் யாவரும் சதாகாலங்களிலும் பிழைத்திருக்கிறார்கள். மகிமையான ஜீவனுக்கு மரணம் ஓர் ஆரம்பமேயானதால், மரணத்தின் கூர், கடுமை நீங்கிப்போயிருக்கிறது. இதுவே அநேக ஆயிரமான குடும்பங்களுக்கு ஈஸ்தர் பண்டிகையின் செய்தி. இக் குடும்பங்களுக்குக் கர்த்தர் ஆறுதல் கட்டளையிடுவாராக.

யுத்தக்களங்களுக்கு வெகுதூரத்திலிருக்கிற நம்மில் சிலர் மாத்திரம் சமீபகாலத்தில் சிநேகிதரையாவது இனஜனத்தாரையாவது இழக்கக்கொடுத்து துயரத்திலிருக்கலாம். என்றாலும் கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகையின் சந்தோஷம் நம்முடையதாகவும் இருக்கக்கூடும்.

உயிர்த்தெழுதல் என்பது மரணத்துக்குப் பின்னான ஜீவனை மாத்திரம் குறியாமல், இப்போதுள்ள ஜீவனையும் குறிக்கும். அதாவது ஓர் மனுஷன் பிரயோஜனமாய் ஜீவிக்கும் ஜீவன்--கிறிஸ்துவில் பிழைக்கும் ஜீவன். நானல்ல, கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார். இதுவே கிறிஸ்துமார்க்கத்தின் சாராம்சம். நமது இருதயங்களிலிருந்து சுயநயத்தை நாம் அப்புறப்படுத்திவிடும்போது தான், நாம் மெய்யாக ஜீவனுள்ளவர்களாயிருக்கிறோம். தன்னயமுள்ள ஜீவியமே மரணம். அதுவே துக்கம் நிறைந்த ஜீவியம். கிறிஸ்துவானவர் நமது ஜீவியத்தில் பிரவேசிக்குங்கால், சந்தோஷமும் வருகிறது. மற்றவர்களுக்குப் பிரயோஜனமாக அவர்களுக்காக உழைப்பது நமது சந்தோஷமாகிறது.

மற்றவர்களுக்காக உழைப்பதே மெய்யான ஜீவியம் என்று இயேசுபெருமான் பரீஷ்காரமாய்க் காட்டியிருக்கிறார். அவருடைய தொண்டரில் முதன்மையாயிருப்பவன் அதிகமாய் ஊழியஞ்செய்கிறவனென்று அவர் போதித்திருக்கிறார். அவர் தாழ்மையை அணிந்துகொண்டதுபோல நாமும் தாழ்மையைத் தரித்துக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவிஒத்தாசை புரிகிறவர்களாயிருக்கவேண்டும். அவசரம் நேரிடுமானால், மற்றவர்களுக்காக நமது ஜீவனைக் கொடுக்கவும் நம் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சுயநயமற்ற ஊழியமும் சுயவெறுப்புமே ஈஸ்தர் தினத்தின் மெய்யான உன்னத சந்தோஷத்துக்கும் நம்மை வழிநடத்தக்கூடும். தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அருள்நாதர் சகலத்தையும் சகித்தார். நமது சபையிலுள்ள ஏழைகளுக்கும் அறிவீனருக்கும், புறமதஸ்தராய் தேவனுடைய அன்பை அறியாதவர்களாயிருப்பவர்களுக்கும் நம்மாலியன்ற சகாயம் மிகுந்த சுயவெறுப்புடன் புரிவதால், ஈஸ்தர் பண்டிகைதினத்தின் சந்தோஷம் நமது சொந்த ஜீவியத்திலும் விளங்குவதாக.

உயிர்த்தெழுதலினால் கிறிஸ்து நமக்காகச் சம்பாதித்திருக்கும் ஜீவன் அவர்மேல் விசுவாசமாயிருக்கும் யாவரும் ஒன்றுபோல அநுபவிக்கும் ஓர் பொதுவான ஜீவன். ஈஸ்தர் பண்டிகையின் மற்றோர் சந்தோஷம் இது. கிறிஸ்துவானவர் எங்கே இல்லையோ, அங்கே ஆணவமும், கக்ஷியும் விரோதமுமுண்டு. நாமோ அவரில் ஒரே ஜீவனைப் பெற்றிருக்கிறோம். அது அவரோடும் நாம் ஒருவரோடொருவரும் அன்புள்ளவர்களாயிருக்கும்படி நமமை இணைக்கிறது. இவ்வைக்கியத்தின் சந்தோஷமும் அன்புமுண்டாகும்படி விண்ணப்பஞ்செய்வோமாக.

சுவிசேஷப் பிரசங்கிமார் பாடக் கூட்டம்.

நாளது பெப்ருவரிமீ 18கூமுதல் 25கூ முடிய பாளையங்கோட்டைக்கு 4 மைலுக்குத் தெற்கேயுள்ள டக்கரம்மாள்புரம் என்னும் கிராமத்தில் பிரசங்கிமாரின் பக்திக்கும் ஊழியத்திற்கும் ஏற்ற பாடக் கூட்டங்கள் நடைபெற்றன. கனம். E. A. L. மூர் ஐயரவர்கள், கனம். P. N. தெய்வநாயகம் ஐயரவர்கள் இவர்களிருவருடைய முயற்சியும் பிரயாசமும் அதிகம். அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சப்கமிற்றிமார் ஒரு வாரத்துக் கூட்டங்களுக்குரிய சகல ஏற்பாடுகளும் செய்து, அதன் செலவுக்கென்று மிஷனெரி அஸோவியேஷன் கூட்டத்தார் விசேஷித்த கிரான்றும் கொடுத்தார்கள். முதல் நாளும் கடைசி நாளும் ஞாயிற்றுக்கிழமைகள். இவ்விரு நாட்களிலும் காலை 8-மணிக்குப் பரி. நற்கருணையும் பிரசங்கமும் 11-மணிக்கு வேத ஆராய்ச்சிக் கூட்டமும் 3-மணிக்குப் பிரசங்கிமாரின் கான்பரென்ஸ் கூட்டமும், சாயந்தரம் கிராமப் பிரசங்கங்களும் நடந்தன. வாரத்தின் மற்ற நாட்களின் கூட்டங்கள் கிட்டத்தட்ட ஒன்றுபோல்தான். காலை 7-மணிக்குக் காலையாராதனையும், 8-மணிக்கு வேத ஆராய்ச்சிக் கூட்டமும் அனைமணி நேரம் மௌனமாயிருந்து தியானித்தலும், 11-மணிக்கு இந்துமார்க்கத்தின்பேரில் உபந்நியாசமும், 12-மணிக்கு மத்தியஸ்த மன்றாட்டு ஜெபமும், 3-மணிக்கு சம்பாஷணைக் கூட்டங்களும், 5-மணிக்கு விளையாட்டும், மறுபடியும் 7-மணிக்கு மாலையாராதனையும், ஆவிக்குரிய போதனையும் நடந்தது. இக்கூட்டங்களில் மகாகனம் அத்தியகூரவர்கள் நான்கு தினங்கள் தேவனுடைய வெளிப்படுத்தல் என்னும் விஷயத்தில் வேதஆராய்ச்சிக் கூட்டமும், இந்துக்களுக்குக் கிறிஸ்து மார்க்கத்தை எவ்விதம் சொல்லலாம் என்ற பொருள்மேல் இரு தினம் சம்பாஷணையும், ஒரு ஒய்வுநாளில் பரி. நற்கருணையும் பிரசங்கமும் செய்தார்கள். கனம் மூர் ஐயரவர்கள் 70 சேஷர்களைச் சுவிசேஷப் பிரசங்கிகளாக அனுப்பின விஷயத்தை மூன்று நாள் வேத ஆராய்ச்சிப் பாடமாகக் கொடுத்தார்கள். கனம். தெய்வநாயகம் ஐயரவர்கள் இந்து மார்க்கத்தின்பேரில் 6 உபந்நியாசங்கள் செய்யப் பிரசங்கிமார் அவைகளைக் குறித்து நோட்டு எழுதிக்கொண்டார்கள். சாயந்தரக் கூட்டங்களில் சம்பாஷணைக்காக 2 நாள் கனம். K. T. அருமைநாயகம் ஐயரவர்களும், 2 நாள் கனம். அப்பாசாமி அவர்களும் நடத்தினர்கள். இரவுக் கூட்டங்களில் 3 நாள் பேசக்குறித்திருந்த கனம். D. J. ஹாரிஸ்ஐயராவாகள் சுகவீனத்தினால் வரக்கூடாமற்போக அவர்களனுப்பிய பிரசங்கக்குறிப்புகளையே சகோதரரில் ஒருவர் வாசிக்க மூன்று நாள் கூட்டங்கள் முடிந்தன. மற்ற இரண்டு நாட்களில் கனம். R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள் பிரசங்கம் செய்தார்கள். பொதுப்படக் கூட்டங்கள் பிரசங்கிமாருக்கு மிகுந்த உற்சாகமும் எழுப்புதலும் உண்டாக்கினவென்று சொல்லலாம். கனம். வேர்து துரையவர்களும் அவர்கள் கூட்டத்தாரும் எஸ். பி. ஜி. பிரசங்கி கூட்டத்தாரும் அவர்களை நடத்துகிற கனம். ஞானதாஸ் அவர்களும் இக்கூட்டங்களுக்கு வந்திருந்தது யாவருக்கும் எழுப்புதலாயிருந்தது. சாப்பாடு வசதிகளெல்லாம் கனம். தெய்வநாயகம் ஐயரவர்களால் ஒழுங்காய் நடந்தது. வந்திருந்தவர்கள் உத்தேசம் 40 பேர். வெயில் அகோரமாயிருந்தபோதிலும், இடையில் ஒருநாள் பெய்த நல்ல மழையானது சுகத்துக்கேதுவாயிருந்தது. ஒய்வு நாட்களில் மூன்று பவுஞ்சாகப் பிரிந்து மூன்று ஊர்களில் போய்ச் சுவிசேஷத்தை அறிவித்தார்கள் இக்கூட்டங்கள் பிரசங்கிமாருடைய ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் மிகுந்த பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறோம்.

புதுமிஷனெரி. கடந்த வருஷத்தில் எஸ். பி ஜி. சங்கத்தின் தாய்க்கமிற்றிமார் இரு மிஷனெரிமாரைப் புதிதாய் இவ்வத்தியகூரானத்தில் ஊழியம்செய்ய அனுப்பியிருக்கிறார்கள். இவ்வருஷ ஆரம்பத்திலும் கனம். ஜெம்ஸன் ஐயரவர்கள் மிஷனெரியாகவந்திருக்கிறார்கள். தூத்துக்குடியிலிருந்து பாலை கற்றுக்கொள்ள ஒழுங்கு செய்திருக்கிறது.

குருப்பட்டாபிஷேகம்.

கடந்த ஜனுவரிமீ 28கூ யாகிய பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் நாலாம் ஞாயிறு தினத்தில் மெஞ்ஞானபுரம் பரி. பவுலின் ஆலயத்தில் நால்வருக்கு உதவிக் குருப் பட்டாபிஷேகம் மகாகனம் திருநெல்வேலி மதுரை அத்தியகூரவர்களால் கொடுக்கப்பட்டது. பட்டாபிஷேகத் தினத்துக்கு முந்தின மூன்று நாட்களிலும் அவர்களுக்கு விசேஷித்த கூட்டங்கள் பலகுருமாரால் நடத்தப்பட்டன. அவர்களுடைய ஜீவியத்துக்கும் ஊழியத்துக்குமடுத்த பல ஆலோசனைகள் மகாகனம் அத்தியகூரவர்கள் சொன்னார்கள். சனிக்கிழமையன்று அவர்களிடத்தில் பட்டாபிஷேகப் பிரமாணமும் வாங்கப்பட்டது. பட்டாபிஷேக தினத்தில் காலையில் 7½மணிக்குக் காலையாராதனை நடந்தது. 9-மணிக்குப் பட்டாபிஷேக ஆராதனை தொடங்கிற்று. உதவிக்குருப் பட்டம் பெறப்போகிறவர்கள் முன்செல்ல, மற்றக் குருமாரும் அத்தியகூரவர்களும் ஒழுங்காய் ஆலயத்தக்குள் பவனிபோனார்கள்.

கனம். M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் பிரசங்க பீடத்திற்சென்று ஜெப அழைப்பை வாசித்துப் பிரசங்கம் (யாத். 28: 4) செய்த பின், கனம். மூர் ஐயரவர்கள் உதவிக் குருப் பட்டம் பெறப்போகிறவர்களை அத்தியகூரவர்கள் முன் நிறுத்தியபின், கனம் A. மாசிலாமணி ஐயரவர்கள் லித்தானியா பிரார்த்தனையை வாசித்தார்கள். அத்தியகூரவர்கள் பரிசுத்த நற்கருணை ஆராதனையை ஆரம்பித்து, நிருபவாக்கியத்தக்குப்பின் பரீட்சை நடந்தது. பரீட்சை முடிந்ததும் உதவிக் குருப்பட்டம் கொடுத்தபின் அவர்களிலொருவராகிய கனம். ஈசாக்கு ஞானமுத்தம் ஐயரவர்கள் சுவிசேஷ வாக்கியம் வாசிக்க, பரி. நற்கருணை ஆராதனையின் மீதிப் பாகத்தை அத்தியகூரவர்கள் வாசித்தார்கள். அன்றையதினம் பரி. நற்கருணை சேரவந்தவர்கள் ஏறக்குறைய 500 பேரானபடியால், ஆலயத்திலேயே ஜனங்களை வரிசையாய் முழங்காற்படியிடவைத்து, குருமார்கள் மூவர் அப்பமும் மூவர் ரசமும் பரிமாறினார்கள். இவ்விதமாய்ப் மட்டாபிஷேக ஆராதனை யாதொரு குழப்பமின்றி மிகுந்த பக்திவினயமாய் நடந்தது. ஆராதனைக்குரிய சகல எழுங்குகளும் கனம். D. P துரைராஜ் ஐயரவர்களால் மிகுந்த பிரயாசத்தோடு செய்யப்பட்டன. உதவிக் குருப்பட்டம் பெற்றவர்களின் பேர்களும் அவர்கள் ஊழியம் செய்யக் குறித்த இடங்களும் பின் காட்டியிருக்கின்றது.

கனம். ஈசாக்கு ஞானமுத்தம் ஐயரவர்கள் C M. S. பாண்டவர்மங்கலம்.

கனம். ஜி சவரிநாயகம் ஐயரவர்கள் C. M. S. மருதகுளம்.

கனம் அருமை தேவதாசன் ஐயரவர்கள் C. M. S. மெஞ்ஞானபுரம்.

கனம். S. மாசில்லாமணி ஐயரவர்கள் S. P. G. நாசரேத்.

திருநெல்வேலி சி. யம் எஸ். நூற்றாண்டுற்சவம்

சர்ச் மிஷனெரி சங்கத்தார் திருநெல்வேலியில் 1820-ம் வருஷத்தில் வேலையாரம்பித்தார்கள். ஆகவே, 1920-ம் வருஷத்தோடு 100 வருஷமாகிறது. இந்த விசேஷத்தைக்கொண்டாடியபடி திருநெல்வேலி டிஸ்ற்றிக்ட் சர்ச் கவுன்சலார் ஆலோசித்து அதற்கு வேண்டிய பலமுயற்சிகள்செய்து வருகிறார்கள். தகுந்த ஆயத்தம் செய்யும்படி ஒர் சப்கமிற்றி ஏற்படுத்தி, அவர்களுடைய ஆலோசனைகளை ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். மூன்று முக்கிய நோக்கங்களை மனதில்வைத்து வேண்டிய ஏற்பாடு செய்கிறார்கள். அவையாவன:—

முதலாவது. நூற்றாண்டுசரித்திர மடங்கிய ஓர் சிறு புஸ்தகம் தமிழிலும் இங்கிலிஷிலும் பிரசுரிப்பது.

இரண்டாவது. நூற்றாண்டு நிதியொன்று சேகரிப்பது.

மூன்றாவது. சுவிசேஷ பிரபல்யம், கல்வி, சுயஆதரவு, சுயஆளுகை ஆகிய இவைகளில் திருநெல்வேலி சபை தேர்ச்சியடையும்படி பிரயத்தனம் செய்தல்.

I. நூற்றாண்டு நிதி.

அரைலட்சம் ரூபாய் அல்லது ஒரு வருஷத்து வருமானத்தை மூன்று வருஷங்களில் ஜாஸ்தியாய்ச் சேகரிக்கவேண்டுமென்பது. இதைச் சேகரிக்கும் விஷயத்தைப்பற்றி பல முறைகள் ஆலோசிக்கப்பட்டன. ஜனங்கள்

சாதாரணமாய்க் கொடுக்கும் சங்கப்பணத்தில் மூன்றிலொரு பாகத்தை வருஷந்தோறும் ஜாஸ்தியாகக் கொடுத்தால், மூன்றாம் வருஷத்தில் ஒரு வருஷப் பணம் ஜாஸ்தியாயிருக்கும். அல்லது சபைகளிலுள்ள மகமை அல்லது ஊர்ப்பணம் இவைகளின் வரும்படியை மூன்று வருஷத்துக்குப் பிரத்தியேகப்படுத்தி நூற்றாண்டு நிதிக்கென்று கொடுக்கலாம். ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் ஒருநாள் ஆகாரத்தை ஒறுத்து, அதன் கிரயத்தை மூன்று வருஷமும் கொடுப்பது ஓர் முறை. கூலி அல்லது சம்பளத்துக்கென்று வேலைசெய்பவர்கள் ஒருநாள் சம்பளத்தைக்கொடுப்பது இன்னோர் ஆலோசனை. சமுசாரிகள் கோட்டைக்கு ஒரு படி தானியம் கொடுக்கலாம். இதோடு விசேஷித்த தோத்திரக்காணிக்கைகள் சேகரித்தும் அச்சடித்த அப்பீல்கள் அனுப்பப்பியும் பணம் சேகரிக்கலாம்.

II. நூற்றாண்டு சரித்திரம்.

100 பக்கங்களுள்ள ஓர் சரித்திரம் இங்கிலிஷிலும் தமிழிலும் பிரசுரிக்கும் நோக்கத்தோடு அதற்கென்று பிரத்தியேகமான ஒருவரை நியமித்து புஸ்தகத்துக்குவேண்டிய சங்கதிகளைப் பல இடங்களிலுமிருந்து அவர் சேர்த்து, காலக்கிரமமாயும் அவசரமானால் பக்கத்து மிஷன்களுக்கும் சி. ய.ம. எஸ். சங்கத்துக்குரிய சம்பந்தத்தோடும் ஓர் பிரபந்தம் எழுதி அதற்கென்று நியமிக்கப்பட்ட பிரசுரச் சபகமிற்றியாருடைய செபார்சின் பேரில் கவுண்சலார் டை பிரபந்தத்தைப் பிரசுரிக்க வேண்டுமென்பதே.

III. நூற்றாண்டு முயற்சி.

(a) சுவிசேஷ பிரபல்யம் (1)ஒவ்வோர் சர்க்கிளிலும் சுவிசேஷ பிரபல்ய சபகமிற்றியொன்று நியமித்துக்கூடமொனல் ஒரு ஆளைப் பிரத்தியேகப்படுத்தி சர்க்கிள் முழுவதிலும் குருவானவருடைய மேல் விசாரணையோடு இவ்விதவிசேஷித்த முயற்சிசெய்வது. (2) இந்துக்கள் நிறைந்த பெரிய பட்டணங்களில் அதிகப் படிப்பாளிகளான பிரசங்கிமாரை ஏற்படுத்துவது. 3) நார்மல் வேதசாஸ்திர பாடசாலைகளில் கற்கும் மாணாக்கர்கள் சுவிசேஷ ஊழியத்துக்கென்று பயிற்றுவிக்கப்படும்படியான விசேஷ ஏற்பாடு செய்வது. (4) இந்துமார்க்கத்தை விட்டுவருவதால் கஷ்டமடையும் தனியாட்களுக்கு ஓர் ஹாஸ்ற்றல் ஏற்படுத்துவது.

(b) கல்வியபிவிருத்தி. பாடசாலைக்குப் போக ஏலாத வயசுள்ளவர்களில் வாசிக்கத் தெரியாதவர்கள் நூற்றாண்டுற்சவ காலத்துக்குள் வாசிக்கப்படித்துக்கொண்டால், அவர்களுக்கு வெகுமதி கொடுப்பது. கீழ்தரப் பாடசாலைகளில் படிக்கும் திறமையுள்ள பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் ஏற்படுத்திப் படிப்பிப்பது. மிஷன் ஊழியத்துக்கு ஏற்ற ஆட்கள் கிடைக்கத்தக்கதாகவும், ஜில்லாவின் பலபாகங்களிலும் போர்டிங் பாடசாலைகள் ஏற்படத்தக்கதாவும் ஜில்லாவில் சற்காலம் ஏற்பட்டிருக்கிற கல்வி ஸ்தாபனங்களை மறுபடியும், கவனித்து நூதன ஏற்பாடுகள் செய்யத்தக்கதாக ஓர் சப்கமிற்றி ஏற்பாடு செய்வது.

(c) சுயபரிபாலனம். சங்கவீதாசாரம் ஆள் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 8 அணா என்று ஏற்பாடுசெய்வது. ஒவ்வோரிடத்திலும் நடக்கும் சபை ஊழியத்தைப் பரிபாலிக்கத் தக்கதாக கிறிஸ்தவர்கள் தற்சமயம் கொடுக்கும் சங்கப்பணம், காணிக்கை முதலியவைகளை அதிகப்படுத்தவும், மானிபங்கள் கொடுக்கத் தக்கதாக ஜனங்களை உற்சாகப்படுத்தவும், இவ்விதம் கொடுக்கும் மானிபங்கள் அந்தந்த இடத்துக்கு மட்டுமல்ல, அவசியமானால் பொது உபயோகத்துக்கும் வரத்தக்கவிதமாய் ஞானிப ஏற்பாடுகள் செய்ய ஒழுங்குப்படுத்துவதுமே. சம்பளமில்லாமல் சபை ஊழியம் பார்க்கத்தக்க ஆட்களைத்தேடி உற்சாகப்படுத்துவதும் அப்படித் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு மகாகனம் அத்தியூரார்கள் லைசென்ஸ் கொடுக்கவும் அவர்கள் பிள்ளைகளுடைய கல்வி விஷயத்துக்கு உதவி செய்யவும் ஏற்பாடு செய்வது.

(d) சுயஆளுகை. தற்சமயம் சுயஆளுகை விஷயமாய்த் திட்டமான ஏற்பாடுகள் செய்வது சாத்தியப்படாதபடியால் அந்த விஷயத்தைத் தற்சமயம் ஆலோசிக்காமல் நிறுத்திவைக்கப்பட்டது.

அத்தியூரார்களின் சுற்றுப்பிரயாணம்

ஜனவரி 15உ திங்கள் ஒரு மோட்டார் வண்டி வாடகைக்கு அமர்த்தி, ஆறுமுகநேரி போய்ச்சேர்ந்தேன். வழியில் சண்முகபுரம் என்னும் குக்கிராமத்தில் சிறிதுநேரம் தாமதித்து, ஜெபஆலயத்தில் ஆராதனை நடத்தினேன். ஆறுமுகநேரி சபையார் ஓர் பெரிய கூட்டமாக பட்டணத்திற்கு வெளியேகொஞ்சதூரம் வந்து, மிக மரியாதையுடன் உபசரித்து, தங்கள் ஊருக்கு அழைத்துக்கொண்டு போனார்கள் ஆறுமுகனேரி சுமார் பதினாயிரம் ஜனத்தொகை கொண்ட ஓர் பட்டணம் ஜனங்களின் முக்கியதொழில் உப்புண்டாக்குவதே உப்பள சம்பந்தமாய் உத்தியோகஸ்தர் பலருண்டு. இவ்விடத்தின் ஓர் விசேஷம் அநேக ஆலயங்கள். மூன்று பெரிய ஆலயங்களும் குறைந்தபட்சம் மூன்று சிற்சிறு ஆலயங்களுமிருக்கிறன. ஒவ்வொரு ஞாயிறும் ஆராதனைகள் வெவ்வேறு ஆலயங்களில் நடக்கும். இதினால் இங்குள்ள குருவானவருக்கும் மற்றும் தேவ ஊழியருக்கும் அதிக வேலையுண்டு.

ஜனவரி 16உ ஆராதனையும் பிரசங்கமும் நடந்தது. அப்பால் திட்டம்தல்காரரில் ஆஜராயிருந்தவர்களைப் பரீக்ஷித்தேன். பின்னர் மற்றவர்களும் வந்தார்கள். அவர்களுக்காக இரண்டாவதாக ஓர் பரீக்ஷையும் நடத்தினேன். அதன்பின்பு 73 பேர் திட்டம்படுத்தப்பட்டார்கள். ஆராதனை நடந்தபிறகு சந்திப்பு நடந்தது. அப்பால் நாலுமாவடிக்குப் போனேம். உப்பளத்திற்கு அருகாண்மையாய் உப்பள இன்ஸ்பெக்ற்றரையும் அளத்தில் வேலைசெய்யும் ஜனங்களையும் சந்தித்தேன். தங்கள் தொழில்துறைநடக்கும் இடத்திற்குச் சமீபமாய்த் தங்கள் பிள்ளைகளுக்கு ஓர் பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்றும், தங்களோடு வசித்து, தங்கள் பிள்ளைகளின் கல்வி விஷயத்தை விசாரித்து வருவதற்காக ஒரு தேவ ஊழியனை வைக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

நாலுமாவடி ஜனங்கள் ஊருக்கு இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் வந்து, என்னைச் சந்தித்து, தங்கள் சபைக்கு என்னை விமரிசையாய் அழைத்துக்கொண்டு போனார்கள்.

ஜனவரி 17உ காலையில் பரி. நற்கருணை ஆராதனை நடத்தியபின்னர், மதியம் 47 பேரைத் திட்டம்படுத்தினேன். அப்பால் சபையார் சந்திப்பு நடந்தது. கனம். லிபரிக் ஐயாவர்கள் சேமையிலிருந்து திரும்பிவராது நின்றுவிட்டதால், ராமநாதபுரம் சேகரத்தின் வேலையையும் சேர்த்துப்பார்க்கும் விஷயமாய் என்னோடு கலந்துபேசிக்கொள்ளும்படி வந்திருந்த கனம். லாம் ஐயாவர்களுடன் நாலுமாவடியை விட்டுப் புறப்பட்டேன். நாசரேத்துக்குப் போட்டிருக்கும் புது ரெயில்வே பாதைமார்க்கமாய் நடந்துபோகும்படி தீர்மானித்துக்கொண்டு, கால்நடையாய்ப் பிரயாணம்செய்தோம். வண்டிப்பாதை மார்க்கமாய் எங்கள் வரவை எதிர்நோக்கிநின்ற சில சபையார் எமாந்துபோக நேர்ந்தது எனக்கு விசனகாமான காரியமே. என்றாலும், பனையடி, பாட்டக்கரை, நெய்வேலி, கச்சினாவிளை சபையார் எங்களை வழியில் சந்தித்தார்கள். கனம்லாம் ஐயாவர்கள் எனக்குப்பாதைதிருமால் செய்ய், ஜனங்களோடு சில வார்த்தைகள் பேசிக்கொண்டேன்.

ஜனவரி 18உ. வேதவித்யாசாலை கேம்ப்பலில் இங்கிலிஷ் பாஷையில் பரி நற்கருணை ஆராதனை நடத்தியபின்னர், பிரகாசபுரத்துக்குப் போய், திட்டம்படுத்தலுக்கு ஆயத்தமாயிருந்தவர்களைப் பரீக்ஷித்து, 45 பேரைத் திட்டம்படுத்தினேன். இருமுறை மூக்குப்பீரி சபைக்குப் போயிருந்தபோதிலும், அதையடுத்துள்ள இந்த முக்கிய சபையை அச்சமயங்களில் பார்க்க சந்தர்ப்பம் கிட்டாததால், இப்போது இச்சபைக்குப் போனது எனக்கு மிகவும் சந்தோஷகரமாயிருந்தது.

ஜனவரி 19உ. பிள்ளையாமனைக்குப்போய், 74 ஜனங்களைத் திட்டம்படுத்தினேன். இவர்களில் சிலர் கடையனேரை பாஸ்ற்றரேட்டைச் சேர்ந்தவர்கள். அப்பால் நாசரேத்தில் ஆலயக்கூரையைப் புதுப்பிக்கும் விஷயமாய் ஜனங்களுடன் பேசிக்கொண்டேன். நாசரேத்தூர் ஆலயக்கூரை மிகவும் மோசமான ஸ்திதியிலிருக்கிறது. அப்பால் வேதவித்யாசாலைக்குச் சென்று, இந்துமார்க்க விழுப்புதயும் புறமதஸ்தருக்குப் பிரசங்கவேலை உற்பொருளின்பேரிலும அக்கலாசாலை மாணவ

ருக்கு ஓர் உபந்நியாசம் செய்தேன். இதன் பின்னர் ஆனந்புரத்துக்குப் போனேன். கனம். D. P. தாஸாராஜ் ஐயரவர்களும் கனம் K. B. அருளானந்தம் ஐயரவர்களும் என்னைச் சந்தித்தார்கள்.

ஜனுவரிமீ 20உ. பழங்குளத்துக்குப் போய், ஓர் ஆராதனை நடத்தி, பிரசங்கமும் செய்தேன். அப்பால் ஆனந்தபுரத்தில் 54 பேரைப் பரீக்ஷித்து, திடப்படுத்தினேன். சந்திப்புமுடிய, கடாக்ஷபுரத்துக்குப் புறப்பட்டோம். சபையார் எதிர்கொண்டுவந்து எங்களைச் சந்தித்தார்கள். முத்துக்கிஷ்ணபுரத்தில் சிறிதுநேரம் தாமதித்து, பின்னர் கடாக்ஷபுரம் சேர்ந்தோம். சபை மொத்தமாகக்கூடியிருந்தார்கள்.

ஜனுவரிமீ 21உ. ஞாயிறு. காலை ஆராதனையோடு பரி நற்கருணை பரிமாறப்பட்டது. 190 பேர் திருவிருந்தில் சேர்ந்தார்கள். அப்பால் பரீக்ஷித்து 57 ஆட்களைத் திடப்படுத்தினேன். சாயந்தரம் பக்கத்து ஓர் கிராமத்தில் தெருப்பிரசங்கஞ் செய்யும்படி போனேம். இந்துக்களுக்கு நடந்த பிரசங்கம் யாவையும் சபையாரே நடத்தினதைப் பார்த்து, மிகவும் சந்தோஷப்பட்டேன்.

ஜனுவரிமீ 22உ. ஆரோக்கியபுரத்துக்குப் போய் ஆராதனை நடத்தினேனும். ஜனங்களின் வழக்கமான சந்திப்பும் நடந்தது. மெஞ்ஞானபுரத்திலிருந்து ஓர் கூட்டம் பையன்கள் இங்கு வந்து, எங்களை அழைத்துக்கொண்டு போனார்கள். வழிநெடுக பையன்கள் இன்பமான பாடல்கள் பாடிக்கொண்டு வந்தார்கள். ஊருக்கு வெளியே குருமாரும் மற்றும் ஊழியரும் எங்களுக்காகக் காத்து நின்றார்கள். கனம் தோமாஸ் மிசி அம்மாள் கிரஹத்தில் விருந்தினராயிருந்தேன். பிற்பகலில் இப்பாஸ்ற்றரேட்டைச் சேர்ந்த 95 பேரைப் பரீக்ஷித்து திடப்படுத்தினேன்.

ஜனுவரிமீ 23உ. வெள்ளாளன்விளைக்குப்போய், 58 பேரைத் திடப்படுத்தினேன். இவர்களில் ஒருத்தி கனம் D ஞானசிகாமணி பதிதாவர்கள் கிறிஸ்தியாநகரத்திலிருந்து பாட்சாரியெந்திருந்த ஓர் ஸ்திரீ. திடப்படுத்தல் ஆராதனையில் இந்த ஐயரவர்களும் ஆஜராயிருந்தது சந்தோஷமே. அப்பால் ஜனங்கள் திரள்கூட்டமாக என்னைச் சந்தித்தார்கள். அநேகரோடு சம்பாஷணைசெய்ய சமயம் வாய்த்தது. பொழுதுசாய, மெஞ்ஞானபுரத்துக்கு கால்நடையாய்த் திரும்பினேன்.

ஜனுவரிமீ 24உ. மெஞ்ஞானபுரம் பள்ளிக்கூடங்களிலுள்ள 62 பிள்ளைகளைத் திடப்படுத்தினேன். மெஞ்ஞானபுரம் பாஸ்ற்ற ரேட்டு சபையார் சந்திப்பு சாயரட்சை நடந்தது. அநேக விஷயங்களைப்பற்றி அவர்கள் என்னோடு பேசிக்கொண்டார்கள். அவர்களுடைய விவகாரங்களுக்கு சேர்மையாய் மாறுத்தரஞ் சொன்னது மிகுந்த பிரயோசனமாயிருந்ததென்று கண்டேன். இப்படி ஜனங்களோடு களங்கமின்றி தாராளமாய்ப் பேசிக்கொள்வது எப்போதும் மிகுந்தபயன் விளைவிக்கிறதென்பது என் அனுபவம். அநேக மனமாச்சிரியங்கள் சரியான அறிவில்லாதால் வருகின்றன அக்காரியங்களைப்பற்றி பகிரங்கமாய் ஒருவரோடொருவர் கலந்து கொள்ளும்போது, மனவருத்தம் யாவும் நீங்கிப்போகிறதை நான் கண்டிருக்கிறேன். சாயரட்சை ஆண் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் விளையாட்டுஸ்தலத்தைப் பார்க்கப்போனேன். புதுக்கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற இடங்களைப்பற்றியும் பேசிக்கொண்டோம். நியாயமான கிரயத்துக்கு நிலம் கிடைக்குமானால், பள்ளிக்கூடக் கட்டடம் சமீபகாலத்தில் கட்டப்பட்ட சாத்தியப்படும் இரவில், தினிஆன பின்பு குருப்பட்டத்துக்கு ஆயத்தமாயிருந்தவர்களோடே அவர்கள் செய்யவேண்டிய பிரதிக்கினைகளைக்குறித்து சம்பாஷித்துக்கொண்டிருந்தேன்.

ஜனுவரிமீ 25உ. பரி பவுல் குணப்பட்ட திருநாள். மெஞ்ஞானபுரம் பரி. பவுலின் ஆலயத்தில் பரி நற்கருணை ஆராதனை நடத்தினேன். 25 பேர் திருப்பகதியில் சேர்ந்தார்கள். அப்பால் குருப்பட்ட மாணாக்கருக்கு சபையில் எவ்வாறு ஊழியம் நடப்பிக்கவேண்டுமென்பதைப்பற்றிப் பேசினேன் பிற்பகலில் ஹைஸ்கூலைப் பார்த்துவிட்டு, சாயரட்சை சாந்தபுரத்துக்குப் போய்த்திரும்பினன்.

ஜனுவரிமீ 26உ. சுவிசேஷப் பிரசங்கவேலையைப்பற்றியும் இந்துமார்க்கத்தைப்

பற்றியும் குருப்பட்டக்காரோடு பேசினேன். சாயந்தரம் பெண்போர்டிங் பள்ளிக்கூடவேலையைப்பார்வையிட்டபின்னர், வள்ளியம்மைபுரத்துக்குப் போனேன். இங்கு ஜனங்கள் ஓர் புது ஆலயம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் சாயந்தரம் நாசரேத்கனம் ஸ்டேப்லி ஐயரவர்கள் வந்து, குருப்பட்ட மாணாக்கருக்கு ஓர் பிரசங்கம் செய்தார்கள்.

ஜனுவரிமீ 27உ. உதவிக்குருப்பட்டாபிஷேகம் பெறுவதற்கு ஆயத்தமாயிருந்தவர்கள் அத்திருப்பணிவிடைக்கடுத்த பிரதிக்கினைகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அன்று காலையில் கனம் மூர் ஐயரவர்கள் வந்துசேர்ந்தார்கள். அவர்களும் சபை மூப்பரும் நானுமாக ஹைஸ்கூல் புதுக்கட்டடம் கட்டும் விஷயத்தைப்பற்றி பேசிக்கொண்டோம். இதுவிஷயமாக ஜனங்கள் ரூ. 7000 கொடுப்பதற்கு உடன்படுகிறார்கள். இப்போது இருக்கும் கட்டடங்களை பெண் பள்ளிக்கூடத்துக்கும் பையன்களின் படுக்கை அறைகளாகவும் வைத்துக்கொண்டால். ரூ. 30,000க்குள் முதலாவது அவசரமான கட்டடம் கட்டிக்கொள்ளக் கூடியதாகுமென்று ஆலோசனை சொன்னேன். சர்க்கார் கிரான்று பாதி கிடைக்கும்போது, மற்றது சுளுவில் ஆகப்பண்ணக்கூடுமென்றேன். பாளையங்கோட்டை மிஷனெரி கான்பரன்ஸா நிடமும் சென்னை கமிற்றிமார் முன்பும் இவ்வாலோசனையை வைப்பேன் என்று சொன்னேன்.

ஜனுவரிமீ 28உ ஞாயிறு. ஓர் குருப்பட்டாபிஷேக ஆராதனை நடத்தினேன். அதன் விருத்தாந்தங்களை வேறு இடத்தில் காணலாம். ஆராதனை முழுவதும் மகாபக்தி விநயமாயிருந்தது. குருமாரும் மெஞ்ஞானபுரம் சபையாரும் இதுவிஷயமாய் மனப்பூர்வமாய் புரிந்த உதவிக்காக மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். கவுண்சல் வைஸ் சேர்மன்களில் ஒருவராகிய கனம் M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் பட்டாபிஷேகப்பிரசங்கம் செய்தார்கள் பரி. நற்கருணைக்குப் பங்குபெற்றவர்கள் 550 பேருக்குச் சில்வானம். ஆகவே, கூதான்ஸல் என்னும் பரிசுத்த பாகத்தின் கிராதியிலல்ல, ஆலயத்தின மத்தியிலேயே ஜனங்களுக்குத் திருவிருந்து பரிமாறவேண்டியதிருந்தது.

ஜனுவரிமீ 29உ காலை 6 மணிக்குப் புறப்பட்டு, வழியில் பூலிருடியிருப்பு, கல்லுவிளை, எழுவரைமுக்கி முதலிய இடங்களில் ஆராதனை நடத்தினதுமன்றி, ஜனங்களோடு சம்பாஷணையும் செய்தேன். மதிய உஷ்ணத்திற்கு நாசரேத்தில் தாமதித்திருந்துவிட்டு, சாயந்தரம் கனம் மூர் ஐயரவர்களும் நானும் கால் சூட்சவண்டியில் பாளையங்கோட்டைக்குத் திரும்பினேம்.

பெப்ருவரிமீ 5உ சேரா டக்கர் காலேஜ் மாணவரில் 63 பெண்களைப் பரீக்ஷித்து திடப்படுத்தினேன்.

திடப்படுத்தப்பட்டிருக்கும் 600 பேரையும் புதிதாக உதவிக்குருப்பட்டம் பெற்றிருக்கும் 4 டீக்கன்களையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துத்துக்கொள்ளுங்கள்.

கோவில்பட்டி சர்க்கிள் முதலாம் தவச உற்சவம்

நாளது வருஷமுதல் வடதிருநெல்வேலி நான்கு சர்க்கிள்களாக அமைந்திருக்கிறது. அவ்விடத்துச் சபைகளின் ஊழியத்தை விசாரணைசெய்யும்படி சூப்பிரிண்டென்றிங் மிஷனெரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற கனம். எஸ் ஜி. மதாரம் ஐயரவர்கள் மூன்று சர்க்கிள்களாயிருந்த காலத்தில் சில பாஸ்ற்றரேற்றுகளிலுள்ள ஆசாமிகளும் சபையாரும் தூரமான சர்க்கிள் ஸ்தானங்களுக்கு மாதாந்தரக் கூட்டங்களுக்கும் தவச உற்சவங்களுக்கும் போக வேண்டியிருந்ததில் ஏற்பட்ட பல கஷ்டங்களை உத்தேசித்து, தூரையூர், கோவில்பட்டி, சாத்தூர், பணையடிப்பட்டி இப்பாஸ்ற்றரேற்றுகளை அவைகளின் மத்திய ஸ்தானமாகிய கோவில்பட்டியின் பேரால் ஓர் சர்க்கிள் ஸ்தானமாக்கும்படி கேட்டுக்கொண்டபடி சென்னைக் கமிற்றிமார் ஒப்புக்கொண்டார்கள். அப்படி யேற்பட்ட புதுசர்க்கிள் ஸ்தானத்தில் முதல் தடவையாகத் தவச உற்சவம் நாளது மார்ச்சுமீ 1-ம் 2-ம் தெய்திகளில் கொண்டாடப்பட்டது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் அவ்விரண்டு நாட்களிலும் அவ்விடத்தில் கூடாரம்போட்டு, ஜனங்களுக்கு எழுப்புதலான பிரசங்கங்கள்செய்து, கூட்டங்களை உற்சாகப்படுத்தினர்கள். பெப்ருவரிமாசம் 28உ

இரவு ஆயத்தக்கூட்டம் நடந்தது. ஏறக் குறைய 500 ஜனங்கள்போல் முதல் கூட்டத் துக்கே வந்து விட்டார்கள். ஜனங்களுக்கு வசதியாக ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றுக்கு ஒவ் வோர் பந்தலாக பல பந்தல்கள் போடப்பட் டிருந்தன. எதிர்பார்த்ததிலும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். கூட்டங்கள் நடப் பதற்கு வசதியான ஓர் அழகான பந்தல் கோவி லுக்கும் பள்ளிக்கூடத்துக்குமிடையில் சமர்ப் பிக்கப்பட்டிருந்தது. ஆண்கள், பெண்கள், பிள்ளைகளுமாக சுமார் 800 பேர் வந்தி ருந்தார்கள். 1-ம் தெய்தி காலை 5 மணிக்கு அருணோதய ஆராதனையும் பிரசங்கமும் நடந் தது. 9½ மணிக்கு பரி. நற்கருனை ஆராதனை யும் பிரசங்கமும் மகாகனம் அத்தியகூரவர் களால் நடத்தப்பட்டது. சாயந்தரம் 4½ மணிக் கு 'லே'மெம்பர்களாகிய சர்க்கிளின் சில பிர தானிகள் பீடம்வஹிக்கவும் மிஷனெரி ஊழி ரம், சுயஆதரவு, யுத்தம் இவைகளின் பேரில் உபந்நியாசமும் ஜெபமுமாக வருஷாந்தரக் கூட்டம் நடந்தது. இரவு 7½ மணிக்கு பரி. ஞானஸ்நானம் பருவம்கடந்த 25 பேருக்குக் கொடுக்கப்பட்டது. மறுநாள் காலையிலும் அருணோதயப் பிரார்த்தனை முடிந்தபின் 9½ மணிக்கு உற்சவக் காணிக்கை ஆராதனை நடந் தது. தவசு உற்சவ வருமானம் எதிர்பார்த்த தொகைக்கு மேலாக நாணயமாகவும் பொரு ளாகவும் ரூ. 470. நல்ல விளைச்சலில்லாத இக்காலத்தில் ஜனங்கள் காட்டின உற்சாகம் வியக்கப்படத்தக்கது. இரவு 7½ மணிக்கு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தின் பேரில் படங்காட்டிப் போதனைசெய்யப்பட்டது. வட திருநெல்வேலி ஜனங்களுக்குத் தென்திரு நெல்வேலியின் சலாக்கியங்கள் கிடைக்குமா னால், அவர்களே சீக்கிரத்தில் இவர்களுக்கு முன்மாதிரியாவார்கள் என்பது பலவிஷயங் களால் துலங்கும். இவ்வுற்சவம் தேவகிரு பையினால் பலருக்கு மிகுந்த ஆசீர்வாதமுள் ளதாயிருந்ததற்காக ஆண்டவருக்கு ஸ்தோத் திரம் செலுத்துவோமாக.

அத்தியகூரவர்களின் ஸ்காலர்ஷிப் நிதி.

நமது அத்தியகூரவர்களினத்திலுள்ள ஏழை களான பிள்ளைகளின் விஷயமாய்ப் பணச் சகாயம்செய்வது அவசியமென்றும், அவ்வி தம் செய்யும் சகாயத்தைக் கண்டமட்டும் கொடுத்துவிடாமல், தீரவிசாரித்து, சகாயம் பெறத் தகுந்தவர்களுக்கே கொடுப்பது உத்த மமென்றும் மகாகனம் அத்தியகூரவர்கள் கண்டு, இவ் விஷயத்தில் ஆலோசனை சொல் லவும் இந் நிதிக்கு வேண்டும் பணத்தைச் சேகரிக்கவுமாக ஓர் கமிற்றி ஏற்படுத்தியிருக் கிறார்கள். இக்கமிற்றி மெம்பர்கள் ஜி. எம். எஸ். ஜில்லா ஆலோசனைக் கவுண்சல், எஸ். பி ஜி. ஜென்ரல் கவுண்சல் பிரதிநிதிகளில் "லே" மெம்பர்கள் தங்களுக்குள்ளிருந்தும் குருமார் தங்களுக்குள்ளிருந்தும் சீட்டின் பேரில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவ் கமிற்றிக்கு அத்தியகூரவர்களே முதலாளி யாகவும் அவர்கள் கூப்பளன் காரியதரிசியும் பொக்கிஷதாருமாகவுமிருப்பார்கள். இக் கமிற் றிமார் ஸ்கூல் வருஷ ஆரம்பத்தில் (மேய்மா சம் இறுதிபோல்) ஒர்முறை கூடி, பொக்கிஷ ஸ்திதியைக் கவனித்துச் சகாயம்பெறத் தகுந் தவர்களைத் தெரிந்துகொள்ளுவார்கள். இவ் விதம் எற்பட்ட கமிற்றிமார் முதல் தடவை யாக நாளதுமீ 8ஆ வியாழக்கிழமையன்று நாசரேத்தில் கூடினார்கள். அத்தியகூரவர் கள் "ஸ்காலர்ஷிப் நிதி" ஏற்படும் முறை யைப் பின்வருமாறு கூறினார்கள்: அத்திய கூரவர்கள் வருஷத்துக்கு ரூ. 450 மொத்த மாகக் கொடுப்பார்கள். திடப்படுத்தல், குருப் பட்ட ஆராதனைகளில் வரும் காணிக்கைகளை இந்தப் பண்டோடு சேர்க்கவும், அவ்விதம் சேகரமாகும் பணம் ரூ. 150 வருமானால், தாங்கள் மீளவும் ரூ. 150 கொடுப்பதா கவும் வாக்களித்தார்கள். இன்னும் வேண் டிய பணம் சப்ஸ்கிரிப்ஷன் மூலமாகவும், எஸ். பி. ஜி., சி. எம். எஸ். கவுண்சல்களின் விசேஷித்த கிரான்ருகவும் சேகரிக்கலாமென் றும் ஆலோசனை சொன்னார்கள். சப்ஸ்கிரிப் ஷன் சேகரிக்கும் நோக்கமாக அத்தியகூர தினத்தின் பல சேகரங்களை அடியிற்கண்ட பிரகாரம் பிரித்து, ஒவ்வோர் பாகத்திலும் பணம் சேகரிக்க ஒவ்வோர் கமிற்றி மெம்பர்

68-ம் சங்கீதம்

(தொடர்ச்சி).

சாணம். 7. வா. 21—23.

மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்க
ளின் சிரசை உடைப்பார்;
ஓயாமல் தன் அக்கிரமங்களில் செல்லுகிறவனு
டைய
மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்.
உன் கால்கள் சத்துருக்கள் இரத்தத்தில் பதியும்
படியாகவும்
உன் நாய்களின் நாவுக்கு அவைகளில் பங்கு
கிடைக்கும்படியாகவும்;
அவர்களைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்து
வருவேன்.
சமுத்திர ஆழங்களிலுமிருந்து அவர்களைத்
திரும்ப அழைத்து வருவேன்
என்று ஆண்டவர் திருவுளம்பற்றினார்.

தேவனுடைய சத்துருக்களின் நாசம் பரி பூரணமானதாயிருக்குமென்பதை இவ்வாறு வர்ணித்திருக்கிறது. பாசானிலிருந்தென் றால், பாசானின் மலைக்குகைகளில் அவர் கள் ஒளித்துக்கொண்டாலும் என்றர்த்தம்.

சாணம். 8. வா. 24—27.

முந்தின சாணத்தில் சொல்லப்பட்டதற் கொப்பான ஓர் ஜெய கோலத்தைச் சங்கீதக் காரன் இங்கே வர்ணிக்கிறார்.

தேவனே, நீர் பவனிபோவதை அவர்கள் கண்
டிருக்கிறார்கள்.
என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்
தைநோக்
பவனிபோவதையே கண்டிருகிறார்கள்.
பாடுகிறவர்கள் முன்னே, வீணை வாசிக்கிறவர்கள்
பின்னே,
சுற்றிலும், தம்புரு வாசிக்கிற கன்னிகைகள்
சென்றார்கள்
இஸ்ரவேலாகிய ஊற்றிலிருந்து தோன்றினவர்
களே,
சபைகளின் கடிவே ஆண்டவராகிய தேவனை
ஸ்தோத்திரியுங்கள்,
அங்கே அதிபதியாகிய சின்ன பென்யமீன் உண்டு;
யூதாவின் பிரபுக்களும் அவர்கள் கூட்டமும்
அங்குண்டு;
செபுலோனின் பிரபுக்களுங்கூட அங்குண்டு.

தேவன் வெற்றிவேந்தராய்ப் பவனிபோ கிறார். 'இஸ்ரவேலரே, சபைகள் கடவே யேகோவாவைத் துதித்துப்பாடுங்கள்' என்ப தே அவர்கள் பவனிக்கீதமாம். தென்கோ த்திரத்தாராகிய யூதா, பென்யமீனும், வட கோத்திரங்களான செபுலோனும் நப்தலியும் இப்பவனியில் ஆளுக்கு முன் நிற்கிறார்க ளாம்!

அருள்நாதர் சரித்திரத்தில் இது எவ்வ ளவு உண்மையாய் விளங்கிற்று! உயிர்த்தெ முந்தகாதர் ஜெயவேந்தராய் பூலோகமெங்கும் செல்லுகிறார். அவர் துதியைப் பாடுகிற பக்தர் தொகை எத்தனை ஏராளம்! ஆண்களும் பெண்களும், அப்போஸ்தலரும் இரத்தச்சாட் சிகளும் ஏகமாய்க் கூடி கீதம் பாடுகிறார்கள். ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களான யூதா, பென்யமீன் கோத்திரத்தாரின் நாட்டாரான எருசலேம் நகரத்தார் அவரைத் துதிக்கிறார் கள். செபுலோன் நப்தலி தேசமாகிய கலி லேயாவின் (ஏசா. 9: 1) அப்போஸ்தலரும் அவரைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமைபொருந் திய கூட்டம்: உம்மைப்போற்றும்.

தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம்: உம்மைப் போற்றும்.

இரத்தச் சாட்சிகளாகிய தைரியசேனை. உம்மைப்போற்றும்.

சாணம். 9. வா. 28—31.

தேவனுடைய பக்தர் இவ்வாறு அவரைப் பிரஸ்தாபிப்பதின் பலன் இச்சரணத்தில் விவ ரிக்கப்படுகிறது. சகல ஜாதிகளும் அவரை வணங்கத் தீவிரிப்பார்களாம்.

தேவனே, உமது பலத்தைக் கட்டளையிடும்!
தேவனே, எங்கள் நிமித்தம் கிரியை செய்திருக்
கிற நீர் உமது பலத்தை விளங்கப்பண்ணும்
எருசலேமிலுள்ள உமது ஆலயத்தினிமித்தம்
ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக்கொண்டு
வருவார்கள்.
காணலிலுள்ள மிருகத்தையும், ரிஷபகூட்டத்
தையும்
அவர்களோடு சேர்ந்த கன்றுகளாகிய ஜனங்களை
யும் அதட்டும்

அவர்கள் கொண்டவரும் வெள்ளிப்பணங்களைக் காலின்கீழ் மிதியும்.
யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதற டியும்.
பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்.
எத்தியோப்பியா தேவனைநோக்கிக் கையெடுக்கத் தீவிரிக்கும்.

நாணலிலுள்ள மிருகம்—எகிப்து. ரிஷப கூட்டம்—அதிபதிகள். கன்றுகள்—அவர்களைச் சேர்ந்த ஜனங்கள். இச்சரணத்தின் பொருள் தெளிவில்லை. பின்வருமாறு பொழிப்புணர்ச்சொல்லத்தகும். தேவனே, மிருந்த பராக்கிரமத்தோடே எழுந்து கிரியை செய்யும். உம்மை எதிர்க்கிற தேசங்களையும் பிரபுக்களையும் சிதறடியும். அப்பொழுது உம்மை வணங்குகிறவர்களும் உமக்குக் காணிக்கை செலுத்துகிறவர்களும் எகிப்திலும் எத்தியோப்பியாவிலுமிருந்துகூட வருவார்கள் என்றவாறு.

சரணம். 10. வா. 32—35.

தேவாதி தேவனுடைய மகத்துவம் இவ்வாறிருக்கிறபடியால், சகல ஜாதிகளும் தேவனைத் துதித்துப்பாட அழைக்கப்படுகிறார்கள்

பூமியின் ராஜாக்களே தேவனைப்பாடுங்கள்!
ஆண்டவனைக் கீர்த்தனம் பண்ணுங்கள்!
ஆதிமுதலாயிருக்கிற வானுதி வானங்கள்மேல் ஏறி வருகிறவனைப் பாடுங்கள்!
இதோ, அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணுகிறார்!
அது பலத்த சத்தம்!
தேவனுக்கு வல்லமையைச் செலுத்துங்கள்!
அவர் மகத்துவம் இஸ்ரவேலின்மேலுள்ளது!
அவர் வல்லமை ஆகாய மண்டலங்களிலுள்ளது!
தேவனே, இஸ்ரவேலரின் தேவனே; உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து நீர் பயங்கரமாய்விளங்குகிறீர்!
தம்முடைய ஜனத்துக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர் நீர்!
தேவரீர்க்கே ஸ்தோத்திரமுண்டாவதாக!

போகிமிய சாட்சி.

மூன்றொரு காலத்தில் ராஜ்யமாயிருந்த போகிமியாதேசத்திலே 'கருப்புவனம்' என்றபேர்கொண்ட ஒருநாடு இருக்கிறது கருப்புவனம் என்ற நாட்டிலுள்ள கெபிகளிலே 400 வருஷங்களுக்குமுன் ஒருவகை ஜாதியார் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்கள்பேர் 'உவால்டென்சியர்'. இவர்கள் வாசம்பண்ணின கிராமங்கள் ஒன்றில் சத்தியத்துக்கு சாட்சியிட்ட யோவான் ஹஸ் பிறந்தார். அவர் சத்தியத்துக்காக தம் ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அவர் சரித்திரம் மெத்த இன்பமுள்ளது. அதைச் சற்று விபரமாய்ப் பார்ப்போம்.

யோவான் ஹஸ் என்பவருடைய தாய் தந்தை மெத்த ஏழைகள்; என்றாலும், அவர்கள் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். பள்ளிக்கூடத்துப் பண்ம் கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாததால், அந்தப் பிள்ளை உபாத்திமார்களில் ஒருவருக்கு ஒரு வேலைக்காரன்போல் பணிவிடை செய்துவர, அந்த உபாத்தியாயர் அவருக்கு புஸ்தகங்கள் முதலியவைகளை இரவலாகக் கொடுத்து, அவர் படிப்பில் முன்னுக்குவர உதவியாயிருந்தார், ஹஸ் மெத்த சுறுசுறுப்புள்ள மாணாக்கராயிருந்தபடியால், அவர் படிப்படியாய் முன்னுக்கு வந்தார். இருபத்தாலாம் வயதில் அவர் பிரேக் பட்டணத்தின் கல்விச்சாலையில் வேதசாஸ்திரவித்தியா பாரகரானர். அப்போது அவர் ரோமானித்தனுயிருந்தார். ஆனல் ஒரு பிரபு உவிக்லிவுடைய பிரபந்தங்களில் சிலவற்றை அவருக்குக்கொடுத்து, அவைகளை வாசிக்கும்படி ஆலோசனை சொன்னர். அவர் அவைகளை வாசித்த துவக்கத்தில் அந்தப் புத்தகங்கள் மோசம் நிறைந்த உபதேசங்களென்று எண்ணினர். அவைகளைப் பின்னும் பின்னும் வாசித்துத் தியானிக்கவே, அவைகள் தேவவசனத்துக்கு ஒத்திருந்ததாய்க் கண்டறிந்து, வேதாகமங்களை வாசிக்கலானர். ரோம சபைப் போதனைகளில் அநேகம், அவைகளுக்கு விரோதமென்று அப்போது உணர்ந்தார்.

பிரேக் பட்டணத்துச் சிரேஷ்ட அத்தியட்சர், கறுப்புவனநாட்டில் காணப்படும் உவிக்லிவுடைய பிரபந்தங்களை எல்லாம் திரட்டித் தமது அரமனை வாசலில் சுட்டெரிக்க வேண்டுமென்று ஒருநாள் உத்தரவுபண்ணினர். அவைகளைச் சுட்டெரித்தபோது, அந்த அத்தியட்சரை எதிர் நியாயம் சொல்லத்தெரியாத அறிவீனன் என்று ஜனங்கள் கேலியும் பரிகாசமும் பண்ணினர்கள்.

ஹஸ் என்பவர் சிரேஷ்ட அத்தியட்சருடைய நடத்தைக்கு விரோதமாக வெளியரங்கமாய்ப் பேசினர். அதையிட்டு ரோம குருக்கள் அவரைப்பற்றி பாப்புவிடத்தில் குற்றம் சாட்டினர்கள். ஹஸ் ரோமைக்கு வரவேண்டும் என்று பாப்பு கட்டளை பிறப்பித்தார். ஆனல், அவர் ரோமைக்குத் தாமாய்ப் போவது மோசமென்று எண்ணி ஒரு ஒநேகிதனை நியாயஞ்சொல்லும்படி அனுப்பினர். பாப்பு அந்தச் ஒநேகிதனைச் சிறைச்சாலையில் போட்டு, ஹஸ் என்பவன் 'பதிதன்' என்று விளம்பரஞ் செய்தார். பின்னும், ஹஸ் என்பவர் எந்தெந்த இடத்தில் வாசம்பண்ணினரோ அந்தந்த இடத்தில் சாபமிடவும் செய்தார். இதற்கெல்லாம் ஹஸ் பயந்தவரல்ல. அவர் சத்தியத்திற்காகச் சாட்சி கொடுத்துவந்தார். தம்முடைய உபதேசம் தப்பறையென்ற வேதாகமத்தைக் கொண்டு ருபித்தால், அதைவிட்டுவிடுவேன் என்றும் சொன்னர்.

1412-ம்ஆ அவர் வெகு தைரியமாய்ப் பாப்பு மார்க்கத் தப்பறைகளை எதிர்த்தார். பிரேக்பட்டணத்தில் சிலர், பாவத்திற்காக பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்க வந்தோமென்று போதித்தபோது, திவ்விய வைராக்கியத்தால் ஹஸ் என்பவர் வெகுண்டு, அதற்கு எதிரிடையாய்ப் போதித்தார். பாப்பு இதைக் கேள்விப்பட்டபோது, ஹஸ் பிரேக் பட்டணத்தில் இருக்கிறவரையும் அங்கே ஆராதனை நடத்தப்படக் கூடாதென்று கட்டளை அனுப்பினர். சத்துருக்களுடைய மூர்க்கம் கவிசேஷ பிரபல்யத்துக்கு அதுகூலமாயிருந்தது. ஹஸ் பிரேக்பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, மற்றப் பட்டணங்கள், கிராமங்கள், வனங்கள், வெளிகளில் பிரசங்கித்துக்கொண்டுவந்து அதிகமான சித்திய டைந்தார்.

அக்காலத்தில் ரோம்சபையில் அதிகமான குழப்பங்கள் நேரிட்டன. மூன்று பேர் பாப்புப் பட்டத்தைப் பெறும்படி, ஒருவருக்கொருவர் போராடினர்கள். ஒவ்வொருவனும் தான் தவருமையுள்ளவனென்பதற்றி, ஒருவர்பேரில் ஒருவர் சாபம்போட்டுக்கொண்டிருந்தார்கள். உள்ளபடி சபை முழுவதும் வியாதியால் நிறைந்திருந்தது. ஏசாயா சொல்லியிருக்கிறது அதற்குச்சரியாக இருக்கும். 'தலையெல்லாம் வியாதியும் இருதயமெல்லாம் பலட்சயமுமாயிருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை அது சீழ் பிதுக்கப்படாமலும் கட்டப்படாமலும் எண்ணெயினல் ஆற்றப்படாமலுமிருக்கிறது'.

அப்போதண்டாயிருந்த சீர்கேடுகளை நீக்கவேண்டுமென்பது எவ்வகையருக்களுக்கும் பிரியமாயிருந்தது. அதற்காக 1414-ம்ஆ கான்ஸ்தென்ஸ் பட்டணத்தில் ஒரு சங்கம் கூட்டப்பட்டது. அதில் பாப்புவும், ஜர்மனி இராயன்சிக்ஸ்மன்டும், 34கார்டினல்களும், 20 சிரேஷ்ட அத்தியட்சர்களும், 130 அத்தியட்சர்களும் பின்னும் அநேக பிரபுக்களும் கூடியிருந்தார்கள். சங்கத்தின் காரியம் துவக்கப்பட்டபோது, பாப்புவும் இராயனும் ஒருவருக்கொருவர் விரோதிகளாயிருந்தார்களென்று தெரிந்தது. வேதாகமம் நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றும் ஆவியின் கனி: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, சாந்தம் என்றும் போதிக்கிறது. ஆனல் உலகத்தில் பேர் போன இவ்விருவருக்குள்ளும் கொடிய பகையிருந்தது. இராயன் தந்திரனும் வஞ்சகனுமாயிருந்தான். பாப்பு அக்காலத்திலுள்ள பிரபல துஷ்டர்களில் ஒருவனுயிருந்தான். சபையின் காரியங்களையும், ராஜ்யபாரத்துக்குரிய காரியங்களையும் ஒழுங்குப்படுத்தும்படியாக வந்த தலைவர்கள் இப்படிப்பட்ட பொல்லாதவர்களாயிருந்தார்கள்.

இந்தச் சங்கத்தாருக்கு முன்பாக யோவான் ஹஸ் வரவழைக்கப்பட்டார். தமக்கு விரோதமாய் பலத்த சத்துருக்கள் இருக்கி

ரூர்கள் என்பதையும் அவர்கள் கையில் அகப் பட்டால், தப்புவது லேசல்ல என்பதையும் அவர் அறிந்து, யாதொரு மோசமும் நேரிடா தபடிக்கு கொண்டுபோய் நிறுத்துவேன் என்று இராயன் தமக்கு எழுத்தின்மூலமாய் வாக்குக்கொடுக்கும்வரையும் சங்கத்தாருக்கு முன்பாகப் போகாதபடிக்கு இருந்தார். இரா யனுடைய வாக்கு கொடுக்கப்பட்டதின்பே ரில், அவர் தமது சிநேகிதரிடத்தில் வழிய னுப்பிக்கொண்டு பிரயாணம்பண்ணினார். அவர் புறப்படுமுன் தமது இஷ்டர்களைப் பார்த்து, 'நான் உங்களுக்குத் தப்பறைகளைப் போதிக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர் கள். சத்தியத்தில் நிலைத்திருங்கள். தேவ னுடைய இரக்கங்களில் நம்பிக்கையாயிருங் கள். கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையா யிருங்கள். நான் இப்போது அந்தப் பெரிய கூட்டத்துக்குப் போகிறேன். அங்கேசோ தனைகளையும், சிறையிருப்பையும், அவருக்குச் சித்தமானால், மிகக்கொடிய மரணத்தையும் சகிக்க கிருபைபுரிவாராக. என்ன சம்பவித் தாலும், நித்தியவீடுகளில் நாம் சந்திக்கையில் நமது சந்தோஷம் மிகவும் பெரிதாயிருக்கும்' என்றார். அவர் சங்கத்துக்குப் போகிறவழி யில் அவரைக் கண்ட பட்டணத்தார், ஊரார் கூட்டமாய் வந்து அவரைச் சந்தித்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் அவரைப் பிரியத் தோடு அங்கேகரித்துக்கொண்டார்கள்.

கான்ஸ்றென்ஸ் பட்டணத்துக்கு அவர் வந்தபோது பாப்புவுக்கு செய்தி அனுப்பி, தமக்கு விரோதமாய்ச் சாட்டப்பட்ட குற்றங் களுக்கு நியாயஞ்சொல்ல ஆயத்தமாயிருப்ப தாகச் சொல்லி, 'இராயன் எனக்கு யாதொரு மோசமும் நேரிடாதபடி ஆதரிப்பதாய் வாக் குக் கொடுத்திருக்கிறார். அதுபோல சபைக் குத்தலைவராயிருக்கிற நீங்களும் அப்படியே என்னை சுகமாய் ஆதரிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண் டகாரியத்துக்கு உடனே சம்மதி கொடுக்கப் பட்டது. அவர் சங்கத்தாருக்குமுன் வந்த உடனே அவரைப் பிடித்து, பதிதருக்கு உண்மை காட்டப்படாது என்று சொல்லி, நதியருகே யிருந்த ஒரு அழுக்கான இருள றையில் அடைத்தார்கள். பின்பு அவர் சங் கத்தாருக்கு முன்பாக விசாரணைசெய்யப்பட் டதின்பேரில் அவரை விலங்குபோட்டு, ஒரு தருக்கத்தில் அடைத்துவைத்தார்கள். அங் கே இவர் ஆறுமாதகாலமாயிருந்தார்.

இவ்வித உபத்திரவங்களே கிறிஸ்துவினி மித்தம் சகிக்க அவர் ஏற்கனவே ஆயத்தமா யிருந்தார். தமக்குநேரிட்ட உபத்திரவங்களில் அவருக்கு பரம வெளிச்சமும் ஆறுதலும் கிடைத்தன. தான் போதித்த உபதேசங்க ளைத் தள்ளி, அவன் பாப்புவுக்குக் கீழ்படியா திருந்தால் அவனைச் சட்டெரிக்கவேண்டு மென்று சங்கத்தார் சொன்னார்கள்.

அதற்கு அவர் 'நான் சத்தியத்தை மறுத லியாதபடி தேவன் கிருபை செய்வாராக என் றார்' சிலகாலம் சென்றபின் ஹஸ் 42-ம் வயதில் அவர் பிறந்த தேதியில் சங்கத்தா ருக்கு முன்பாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார். இராயன் வெகு ஆடம்பரத் தோடே அங்கே வந்திருந்தான். அவனைச் சூழ அநேக பிரபுக்கள் நின்றார்கள். கார்டி னல்களும் அத்தியட்சகர்களும் மரண தண் டனை விதிக்க ஆயத்தமாகி, ஹஸ் என்பவரை ஒரு மேடையில் நிறுத்தினார்கள். தமது நிலை மை மோசமானதென்று அவர் அறிந்து கொண்டார். அவருக்காகப் பேசுவார் ஒருவ ருமில்லையென்றாலும், தன் இரட்சராகிய தேவன் தனக்குச் சமீபமாயிருப்பதை அறிந் தே, முழங்காலூன்றி, முடிவுபரியந்தம் உண் மையாயிருக்கும்படியாகக் கிருபையைக்கொ டுக்க ஜெபம்பண்ணினார். சத்துருக்கள் பதி தனென்று அவர்பேரில் குறறஞ்சாட்டின பின்பு, அவரை வெளியரங்கமாய் சுட்டெரிக் கவேண்டுமென்று தீர்ப்புச்செய்தார்கள். அப் போது அவர் 'கர்த்தாகிய தேவனே, என்பே ரில் பொய்யாய்க் குற்றஞ்சாட்டி, அநியாய மாய்த் தண்டனை விதித்திருப்பதால், நீர் உமது இரக்கங்களினிமித்தம் என்னுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் மன்னிப்பையரு ளும், இந்தப் பாவத்தை அவர்களுக்குப் பொ றுத்தருளும்' என்று ஜெபம் பண்ணினார். அவருடைய சத்துருக்கள் பின்னும் அவர்பே ரில் குற்றஞ்சாட்டி, யூதா ஸ்காரியோத் என் றும், தெய்வதூரோகி, வேதப்புரட்டன், சபிக் கப்பட்ட நீசன் என்றும் பலவகையான

இழப்பமுள்ள வார்த்தைகளைச் சொல்லிப் பரி யாசம் பண்ணினார்கள். அதற்கு அவர் 'என் முழு நம்பிக்கையையும் என் ரட்சகராகிய தேவனில் வைக்கிறேன். அவர் என்னை விட்டு, தமது ராஜரிய பாத்திரத்தை எடுத் துப்போடமாட்டார்; அவருடைய கிருபையி னாலே இன்று அவருடைய இராச்சியத்தில் பானம்பண்ணுவேன்' என்றார்.

பிரபுக்கள், குருக்கள் எல்லாருடைய இரு தயமோ அவருக்கு விரோதமாய் கடினப்பட் டுப்போயிற்று. அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, காகிதத்தால் இரண்டு அடி உயர முள்ள ஒரு குல்லா செய்து, அதில் பிசாசுக ளின் படம் வரைந்து, 'சிரேஷ்ட பதிதன் என்றெழுதி, அவர் தலையின்மேல் வைத்தார் கள். அவர் அதைப்பார்த்து, 'ஏழைப்பாவியா கிய எனக்காக என் ஆண்டவராகிய இயேசு, நோவை உண்டுபண்ணும் முள்முடியைத் தாங்கி, சிலுவையில் அவமான மரணமாய் மரித்தாரே, நான் அவர் நிமித்தம் இந்த லே சான கிரீடத்தை சந்தோஷமாய்த் தாங்க வேண்டாமா' என்றார். அத்தியட்சர்கள், குருக்கள் அவரைப் பார்த்து: இப்போது நாங் கள் உன் ஆத்துமாவை சாத்தானுக்கும் நரகத் துக்கும் உன் உடலை அக்கினிக்கும் ஒப்புக் கொடுக்கிறோம் என்றபோது, அவர் 'நான் என் ஆத்துமாவை கிருபைநிறைந்த ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒப்புக் கொடுக்கிறேன்' என்றார். அவரைச் சுட்டெ ரிக்கும்படி மைதானத்துக்குக் கொண்டுபோ னார்கள். 800 போர் வீரர் அவரைச் சூழ்ந்து போனார்கள். திரளான ஜனங்களும் பின் சென்றார்கள்.

ஹஸ் கொலைக்களத்துக்கு வெகு அமைதி லாயும் சந்தோஷமாயும் சென்றார். அவர் சிரேஷ்ட அத்தியட்சர் அருமனைக்குச் சமீப மாய்க் கடந்துபோகையில், தமது புத்தகங்க ளைச் சத்துருக்கள் சுட்டெரிப்பதைக் கண்டு, அவர்கள் தங்கள் புகையை இப்படியும் காட் டுகிறார்களே என்று புன்னகைகொண்டார். சற்றப்புறம் கடந்துபோனபோதும்: இயேசுக் கிறிஸ்துவே, ஜீவனுள்ள தேவனுடைய குமா ரனே, எனபேரில் இரக்கமாயிரும் என்று ஜெபித்தார். 'கொலைக்களத்துக்கு வரும் பரி யந்தம் இப்படிப்பட்ட சிறு ஜெபங்களைச் செய்துகொண்டே வந்தார். அவரைக்கேட் டுக்கொண்டுவந்த ஜனங்கள், இந்த மனிதன் இன்னதைப் போதித்தான், உபதேசித்தான் என்று தெரியவில்லையே; அவன் வாயிலி ருந்து பரிசுத்த வசனங்களும் உத்தம ஜெபங் களும் எழும்புகிறதே என்றார்கள்.

கொலைக்களத்துக்கு வந்தபோது அவர் முழங்கால்படியிட்டு, வானத்துக்கு நோக்கத் தமது கண்களை ஏறெடுத்து, உத்தசத்தத்தோ டே கனபக்தியுடன் 31-ம், 51-ம் சங்கீதங்க ளில் அடங்கிய பிரகாரம் சருக்கஜெபங்க ளைப்பண்ணினார். "என் ஆவியை உமது கரத்தில் ஒப்புவிக்கிறேன். சத்தியபரஞ்சுய கர்த்தாவே நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" என்றும், "கர்த்தராகிய இயேசுவே, நான் பயங்கரப்படத்தக்க இந்தக் குரூர மரணத்தை உமது நிமித்தமும், உமது பரிசுத்த சுவிசே ஷத்தினிமித்தமும், உமது பரிசுத்த வசனத் தைப் பிரசங்கித்தனிமித்தமும் உற்சாகமாய்ச் சகிக்கிறேன். என் சத்துருக்கள் செய்கிற குற்றத்தை மன்னித்தருளும்" என்று பிரார்த் தித்தார்.

அப்புறம் அவரைப் பேசாமலிருக்கப் பண்ணி, மூன்றுதரம் சூளையைச் சுற்றிவரச் செய்தார்கள், அப்பறம் தாம் தம்மைக் காத் துக்கொண்டிருந்த சிறைச்சாலை காவல்கார ருடன் பேச உத்தரவுபெற்று, அவர்களைப் பார்த்து, "நீங்கள் எனக்குக் காட்டின தயவுக் காக உங்களுக்கு உத்தம இருதயத்தோடே நன்றிசெலுத்துகிறேன். நீங்கள் என்னைக் காவலாளிகள் போலல்ல, சகோதரர்போல நடத்தினீர்கள், என் இரட்சகர்பேரில் எனக்கு இருக்கிற நம்பிக்கை பெலனுயிருக்கிறது. நான் இன்று அவருடன் பரதீசிலிருப்பேன் என்று நம்பி, இந்த மரணத்தை மன உற்சாக மாய்ச் சகிக்கிறேன் என்று அறியக்கடவீர் கள்" என்றார்.

அப்பால் அவரை நெனந்த கயிற்றால் கழு மரத்தோடே சேர்த்துக் கட்டினார்கள். கழுத் தில் தூருப்பிடித்த கறுத்த சங்கிலியை மாட் டினார்கள். அப்போது அவர் 'என் எஜமா னும் ரக்ஷகரும் என்னிமித்தம் இதைவிட பாரமான சங்கிலியால் கட்டுண்டார். பாவி

யாகிய நான் அவர் நிமித்தம் கட்டப்பட என் வெட்கப்படவேண்டும்' என்றார். பின்பு கட்டைகளை அடுக்கினார்கள். அவர் பாதங்களுக்குக் கீழ் லேசாய் எரியத்தக்க விறகுகளையும் வைக்கோல்களையும் பரப்பினார்கள். சுற்றிலும் கழுத்துவரை பெரிய விறகுகளை அடுக்கித் தீக்கொழுத்தினார்கள். அப்போது பாடுகிற சத்தம் கேட்கப்பட்டது. ஹஸ் அக்கினி மத்தியிலிருந்து தேவனைத் துதித்தார். 'தேவனுடைய குமாரனுகிய இறிஸ்துவே எனக்கு இரங்கும்' என்று அடிக்கடி சொன்னார். காற்று சுவாலையை அவர் முகத்தில் படச்செய்யவே, அவர் பேச்சற்றுப்போனார். அவர் உதடுகள் சொற்பநேரம் ஜெபம்செய்வதுபோல் அசைவாடின பின்பு, அந்த உண்மையுள்ள சாட்சியின் ஜீவன் பிரிந்தது. அவர் ஆத்துமா இளைப்பாறுதலுக்குட்பிரவேசித்தது. அவருடைய சாம்பலையும், கரிக்கட்டைகள், மணல் சகலத்தையும் ஒரு வண்டியில் ஏற்றி, ரையின் ஆற்றில் தூற்றிவிட்டார்கள்.

பொல்லாதவர்களின் கடத்தையைப் பார்க்கையில், நாம் அஞ்சும்படியாயிருந்தாலும், அளவற்ற ஞானமுடைய கர்த்தர் எல்லாக் காரியங்களையும் நன்மைக்கென்றே செய்வார். 'கோதுமை மணியானது நிலத்திலே விழுந்து சாகாவிடில், நல்ல பலனைக் கொடாது, செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். 'ஓ விசுவாசியே, உன்னுடைய நம்பிக்கை யென்ன'.

ஜி. விசுவாசஞானன்.

ஜட்ச்சர்லா.

மகாகனமும் சங்கையும் பொருந்திய தோரணக்கல் அத்தியட்சரவர்கள் இந்த மிஷனை நடத்திக்கொண்டு வருகிற விஷயம் நம்நாட்டார் யவருக்கும் தெரியும். முன் கனம் குரோஸ் ஐயரவர்கள் இந்த மிஷன் வேலையை 6 வருஷம் நடத்தி, இங்கிலாந்துக்கு போய்விட்டார்கள். கடந்த 2 வருஷமாக சிங்ஹோனி மிஷனை நடத்திக்கொண்டிருந்த கனம். D. S. தாவீது ஐயரவர்களும் காணும் இம்மிஷன் கணக்கு ஒப்புக்கொண்டு சுவிசேஷ ஊழியத்தை நடத்திக்கொண்டு வருகிறோம். கனம். D. S. தாவீது ஐயரவர்கள் சிங்கரோனியிலிருந்து பரி. நற்கருணை கொடுக்கவும் ஞானஸ்நானம் கொடுக்கவும் சபையைப் பார்க்கவுமாக 160 மைல் வருவார்கள். 60 மைலுக்கு ரெயில் கிடையாது. ஆண்டவர் கிருபையால் அவர்கள் 26 பேர்க்கு பரி. ஞானஸ்நானம் கொடுத்து இருக்கிறார்கள்.

சுரண்டை போர்டிங் ஸ்கூலில் உபாத்தியார் வேலைசெய்த Mr. ஐயாதுரையவர்கள் தோர்ணக்கல்லிலிருந்து தெலுங்கு கற்றுக்கொண்டு, இப்போது என்ஜெடவந்து வேலை செய்துவருகிறார்கள்.

இந்த மிஷனைப் பார்ப்பதற்கு சென்னை மகாகனம் பிஷப் அவர்களுக்கும் கனம் அம்மாள் அவர்களுக்கும் மிக்க ஆவல். பிரயாண வசதி கிடைக்காமல் வரவில்லை. இப்போது ரெயில் வருகிறது.

கடந்த நவம்பர்மாசம் 4-ம் தெய்தி தோர்ணக்கல் மகாகனம் அத்தியட்சரவர்கள் இந்த மிஷனைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் வருகைக்கு முன்னதாக ஒன்றும் ஒழுங்குசெய்யக் கூடவில்லை. 10 நாள் இரவும் பகலும் மழை பெய்ததால், ரெயில் ஒருவாரமாக ஓடவில்லை. வரமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டோம். 3-ம் தெய்தி ரெயில் வருகிறதைக் கண்டு ஆயத்தப்படுத்தினோம். மழைவிடவில்லை.

ஆண்டவர் கிருபையால் 4-ம் தெய்தி மழை கிடையாது. வெயில்முகம் கண்டது, ஒருவேளை வருவார்கள் என்ற எண்ணத்தோடு Mr. ஐயாதுரையவர்களையும் உபதேசிமார் இருவரையும் சபையாரில் சிலரையும் ஸ்டேஷனுக்குப் போங்கள் என்று சொல்லி, நான் தோட்டத்திலுள்ள மல்லிகைப்பூ, ரோஜா பூ வால் செய்தஆரம் எடுத்துக்கொண்டு, 3 மைல் தூரம் இருக்கும் குல்லபல்லிக்குப்போய் ஆரம்போட்டு கூட்டிக்கொண்டு வருகிறேன் என்பதாய்ப் போய், வேறே குட்ஸ் வண்டி ஏதேனு ஏமாற்றிப் போட்டதால் அங்கு இருந்து 4 மைல் ஒடி, மறுபடியும் ஜட்ச்சலா ஸ்டேஷனுக்கு வந்தேன். கொஞ்சநேரத்துக்குள் வண்டி வந்துவிட்டது. அந்தவண்டியில்

மகாகனம் பிஷப் அவர்கள் வந்து இறங்கினார்கள். ஆங்களைப்போட்டு சந்தித்தோம். உபதேசிமார்கள் இருபேர்களும் Mr. ஐயாதுரையவர்களும் சாமான்களை கூலிஆள் மூலமாய் எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். மாணும் மகாகனம் அத்தியட்சரவர்களும் 3 பர்லாங்கு மெதுவாய் நடந்துவந்தோம். பின்பு அவர்களுக்காக ஆயத்தப்படுத்தி இருந்த குதிரைவண்டியில் ஏற்றி, 3மைல் நடத்திக்கொண்டுஊருக்குச் சமீபமாய் வர, சர்க்கார்உத்தியோகஸ்தரும் நாங்களும் மேளதாளங்களோடும் தீவெட்டிகளோடும் சிலுவைகொடிகள் ஜெண்டாக்களோடும் இருபோலீஸ்தார் உடுப்பு ஆயுதங்களோடும் துப்பாக்கியுடனும் வெகுஜன திரளும் ஜட்ச்சர்லா கவுரவன் பேட்டை கடைவீதி வழியாக மெதுவாய் குதிரைவண்டியை நடத்துக்கொண்டு, நாங்களிருக்கும் மிஷன் பங்களாவுக்கு வந்து இறங்கி, ஜனகூட்டங்களை அனுப்பிவிட்டு, தேயிலைத்தண்ணீர் சாப்பிட்டுவிட்டு, அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட 2 பர்லாங்கு தூரத்திலிருக்கும் மிஷாவரி பங்களாவில் தங்கினார்கள்.

5-ம் தேதி ஞாயிறு காலை எழுந்து, நாங்கள் இருக்கும் பங்களாவில் ஒரு வராண்டாவில் பரி. நற்கருணை கொடுக்கும்படி காலை 7 மணிக்கு வந்து, ஒரு தெலுங்கு உபதேசியார் மனைவிக்கு பிரசவ ஸ்தோத்திரம் நடத்தி, அப்பால் பரி. நற்கருணை பரிமாறினார்கள். பங்குபெற்றவர்கள் 10 பேர். இதில் சபையார் இல்லை. நாங்கள் மாத்திரம். மகாகனம் பிஷப் அவர்கள் பொட்லர் ஒருவன்.

9 மணிக்கு சபையார் ஒரு மைல் தூரமிருந்து வந்து கூடினார்கள். காலை ஆராதனை மகாகனம் அத்தியட்சரவர்கள் உத்தரவின்பேரில் நான் ஆராதனை நடத்தினேன். அன்று வாசிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தை Mr. பென்னியமீன் என்ற தெலுங்கு உபதேசியார் வாசிக்கசொல்லி (மத்: 22: 1 முதல் 14 வரை), இராஜகுமாரனின் கலியாண உவமையைப்பற்றி புதுக்கிறிஸ்தவர்களுக்கு தெளிவாய் அபிநயத்துடன் அநேக திருஷ்டாந்தங்களுடன் ஒருக்காலும் மறந்துபோகாதபடிக்கு கேள்விகள் கேட்டுக்கேட்டு, சபையாரே உத்தரவு சொல்லும்படி செய்து உற்சாகப்படுத்திப் புகட்டினார்கள். சபையார் சொன்ன உத்தரவைக்கேட்டு, நான் அநேகஇடங்களைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் சொன்னமாதிரி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்று மெச்சிக்கொண்டார்கள். ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். ஆராதனை முடியவே, அங்கிகளைக் கழற்றி வைத்துவிட்டு, சபையாரை தன் கிட்டஅழைத்து, வரிசையாக நிறுத்திக்கொண்டு, பேர்களைக் கேட்டுக்கேட்டு மனதில் இருக்கும்படி படித்துக்கொண்டார்கள். சபையார்மேல் இருந்த ஆசையால் பேர்களைப் படித்துக்கொண்டு, அந்தந்த பேர்ப்படியே இங்கு இருந்த நாட்களில் மறந்துபோகாமல் கூப்பிட்டார்கள்.

மறுபடியும் சாயந்தரம் 4 மணிக்கு சபையார் கூடினார்கள். 2 குழந்தை ஞானஸ்நானமும் ஒரு பருவங்கடந்த ஞானஸ்நானமும் நடத்தினார்கள். பக்கத்தில் பேப்டிஸ்து மிஷனிருப்பதால், அவர்கள் கொள்கை சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் மூழ்கி ஞானஸ்நானம் கொடாததும் தப்பிதம் என்ற வார்த்தையைக் கேட்டதின்பேரில் அதைப்பற்றியே சபையாருக்கு தெளிவாய்ப் போதித்து முடித்தார்கள். 30 வருஷமாக பேப்டிஸ்து மிஷனில் வேலைசெய்த ஒரு உபதேசியாரும் மாபூபூநகரிலிருந்து வந்து ஆராதனையைப் பார்த்துக்கொண்டிருந்து, மகாகனம் அத்தியட்சரவர்களிடம் இந்த சபையைப்பற்றி: எங்கள் 30 வருஷ சபையில் இந்த உற்சாகமில்லை, வேதஅறிவுமில்லை, இந்தக்தேதம் பாடார்கள். இந்த உபதேசம் இல்லை; எனக்கு இன்று சந்தோஷம். தங்களைக் கண்டதும் தங்கள் உபதேசம் கேட்டதும் எனக்கு ஆசீர்வாதம். எனக்கு ஒரு தமிழ் ஜெபபுஸ்தகம் வேண்டுமென்று கேட்டார். மகாகனப் பிஷப் அவர்கள் Mr. இராயப்பன் மூலமாய் கடிதம் போட்டு ஞாபகப்படுத்துங்கள், அனுப்புகிறேன் என்று வாக்குக்கொடுத்தார்கள். புஸ்தகம் கிடைக்குமட்டும் Mr. ஐயாத்துரையவர்கள் தன் புஸ்தகத்தை கொடுத்து இருக்கிறார்கள்.

6-ம் தெய்தி திங்கள் காலை ஜட்ச்சர்லா கவுரவன்பேட்டை பெரிய முதலாளிகளும்

குடித்தனக்காரரும், மரியாதையாக வந்துநின்று, எங்களுக்கு அடைப்பட்டமிஷன் ஆஸ்பத்திரி திறந்து, முன்போல மருந்துகொடுக்க உத்தரவாகவேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்கு கிறிஸ்துமார்க்கத்தைபற்றிக் கொஞ்சம்சொல்லி, கூடியசீக்கிரம் ஒருடிரசரை அனுப்புகிறேன் என்றுசொன்னார்கள். இவர்களைப் பார்த்து, தலைபாகை சட்டைகள் வேஷ்டிகளைப்பார்த்து, இரட்சண்ய சேனையைச் சேர்ந்த கிறிஸ்தவர் போல் எண்ணினார்களாம்.

9 மணிக்கு சபையை சந்திக்கப் போனார்கள். சபையார் எதிர்கொண்டுவந்து மாலைகள் போட்டு, கொடிகள் பிடித்துக்கொண்டு கூட்டிக்கொண்டு போனார்கள். முன்னதாகவே தங்கள் வீடுகளை சுத்தமாய் வைத்து பூக்களால் அவரவர் தங்கள் தங்கள் வீடுகளை அலங்கரித்து வைத்து இருந்தார்கள். மகாகனம் அத்தியட்சரவர்கள் ஒவ்வொரு குடிசைக்குள்ளும் நுளைந்துபோய் பார்த்துவந்து, பவுல் என்ற ஒருவன் வீட்டில் சபையார்கூட அங்கே ஜெபம் செய்துவிட்டு வரும் பாதையில் தாலுகுதார் எதிர்கொண்டு வந்து, தன் பங்களாவுக்குக் கூட்டிக்கொண்டுபோய், ஆயத்தப்படுத்தி இருந்த ஆசனத்தில் உட்காரவைத்து, அநேக காரியங்களைப்பற்றி பேசிக்கொண்டு, அப்பால் ஒரு இந்து கோவிலைப் பார்க்கும்படி கூட்டிக்கொண்டு போய் காண்பித்துவிட்டு, மறுபடியும் தன் பங்களாவுக்கு கூட்டிக்கொண்டு வந்து இந்த தேசத்தின் முரியாதைபடி அத்தர், எலம், தாம்பூலம், பூக்கள் முதலானது கொடுத்து வழி அனுப்பினார். மறுபடியும் மகாகனம்அத்தியட்சரவர்களைப் பார்க்கும்படி பெட்டி வண்டியில் ஏறி தங்கி இருந்த மிஷாவரி பங்களாவுக்கு வந்தார்.

உபதேசிமார்களுக்கும் எங்களுக்கும் இங்கு செய்யவேண்டிய சுவிசேஷ ஊழியங்களைப்பற்றி ஆலோசனைகள் சொல்லி முடித்தார்கள்.

சபையார் எங்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தரால் துன்பம் இருக்கிறது, அது எங்களுக்கு பாரமாக இருக்கிறது, எற்பாடு செய்யவேண்டுமென்றுக் கேட்டவர்களுக்கு அநேக போதனைகள் சொல்லி, ஜெபம் செய்யுங்கள் ஆண்டவர் தகுந்த எற்பாடு செய்வார் என்று சொல்லி அனுப்பினார்கள்.

7-ம் தெய்தி காலை புறப்பட்டுவிட்டார்கள். முன்போல் மேளவாத்தியம் வரவேண்டாம் என்று தடுத்து, குதிரைவண்டியில் ஸ்றேஷனுக்குப் போகவே, இருபோலீஸ்தார் துப்பாக்கியுடனும் போலீஸ் இன்ஸ்பெக்டர் குதிரையில் எறியும் ஸ்றேஷன் வரைக்கும் வழியனுப்ப வந்தார்கள். சபையாரில் சிலரும் நானும் ஜட்ச்சர்லா ஸ்றேஷனுக்குப் போய் Mr. ஐயாதுரையுமாக டிக்கட்டு எடுத்துக் குல்லபல்லி ஸ்றேஷன் வரைக்கும் போய் வழியனுப்பி வந்தோம். ஈசாக்கு என்ற ஒரு பையனே தோர்ணக்கல்லில் படிப்பிக்கும்படி கூட்டிக்கொண்டு போனார்கள். தெலுங்கு நாட்டில் சுவிசேஷ ஊழியம் செய்கிற திரு நெல்வேலி நாட்டு பிள்ளைகளுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

S. பால் ஞாயப்பன்.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

மானுக்கோட்டை பாஸ்ற்றரேற்றில் இதுவரையும் கிறிஸ்தவக் கலியாணம் நடக்கவில்லை. கிறிஸ்தவர்களும் வெஸ்லியன் மிஷனில் நடத்தப்படுகிற கலியாணத்தைப் பார்த்திருக்கிறார்களே யொழிய, நம்மிஷன் கலியாணத்தைப் பார்க்கவில்லை. வெஸ்லியன் மிஷன் பக்கத்திலிருப்பதாலும் இங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு அங்கே சம்பந்தமிருப்பதாலும் அந்த வழக்கங்கள் நன்றாய்த்தெரியும். அம்மிஷனில் அறிக்கை வாசிப்பது கிடையாது. ஏதோ சிலநாளைக்கு முன் நோட்டீஸ் ஒட்டி, கலியாணம்செய்து விடுகிறார்கள். உபாத்திமார் அல்லது உபதேசிமார்கள் லைசன்ஸ் வாங்கியோ எப்படியோ, சிறுபிள்ளைகளையும்கூட கலியாணம்செய்து விடுகிறார்கள். இவ்வித எற்பாட்டிற்கும் நமக்கும் அதிக வித்தியாசமிருப்பதால், இந்த ஜனங்களைச் சேர்திருத்துவது மிகுந்த கஷ்டமாயிருக்கிறது. அவ்வித எற்பாடு ஏறக்குறைய அஞ்ஞான எற்பாட்டுக்கு அதிக வித்தியாசமில்லை.

சூரியனுள்ளமட்டும் சந்திரன் பிரகாசிக்கும் வரைக்கும்
தலைமுறை தலைமுறையாக அவர்கள் உமக்குப் பயந்திருப்பார்கள்.
அறுப்புண்ட புல்லின்மேல் பெய்யும் மழை யைப்போலவும்,
பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் அவர் இறங்குவாராக!
அவருடைய நாட்களில் நீதி செழித்தோங்குவ தாக!
சந்திரன் இல்லாமற்போகும் வரைக்கும் சமாதானம் நிலைத்தோங்குவதாக!

இதுவே பழைய ஏற்பாட்டுப் பக்தன் ஆசை. ஏழைகளைப் பராமரிப்பதும், திக்கற்றவர்களை ஆதரிப்பதும் எளியவர்களுக்கு நீதி செய்கிறதுமே மேசியாவின் மகத்துவமாயிருக்கவேண்டும். அறுப்புண்ட புல்மேல் பெய்யும் மழைபோல், காய்ந்த பூமியைக் குளிரச் செய்யும் தூறலைப்போல, நஷ்டமடைந்தவர்களுக்கும், தன்பப்பட்டவர்களுக்கும் ஆறுதலையும் சகாயத்தையும் அவர் அளிக்கவேண்டும். தேசத்தில் இடுக்கண் செய்கிறவர்கள் நிர்மூலமாக்கப்பட்டு, நீதிநியாயம் செழித்தோங்கவேண்டும். அப்படி நடக்குமாகில், பூமி செழிக்குமாம், மலைக்களிலும் சிறுமலைகளிலும் தானியம் ஏராளமாய் விளைவதினால் ஜனங்கள் சமாதானமாய்ப் பிழைப்பார்களாம். இது பூரணமாய் நிறைவேறுகிறது இயேசு ராஜாவின் ராஜ்யத்திலேயே. ஆயக்காரரையும் பாவிகளையும் தேடிப்போன அவருடைய ராஜ்யத்தில்தான் எளியவர்களைத் தேடுவதும், ஏழைகளைப் பராமரிப்பதும் மகிமையாக எண்ணப்படுகிறது. புறக்கணிக்கப்பட்டவர்களைச் சேர்த்து, ஒடுக்கப்படுகிறவர்களை விடுவித்து, உலகத்தில் நடக்கும் அநியாயத்தைக் குறைப்பதுதான் அவர் சபையின் அடையாளம். யூத பக்தனின் அபேக்ஷையும் பிரார்த்தனையும் புண்ணிய மகான் இயேசு ராஜாவிலேயே நிறைவேறுகிறது.

சரணம் 2. அது சர்வலோக ராஜ்யமாயிருக்க ஜெபம் வா. 8—14.

சமுத்திரம் தொடங்கி சமுத்திரம் வரைக்கும்,
நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும்
அவர் அரசாளுவாரா

72-ம் சங்கீதம்.

இது சங்கீதங்களிலெல்லாம் சிரேஷ்ட மிஷனெரி கீதம். கிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றியும், புறஜாதிகள் சேர்க்கப்படுவதைப்பற்றியும் சொல்லிய தீர்க்கதரிசனம் என்று சபைப் பிதாக்கள் எக்காலும் இதற்கு வியாக்கியானங் கூறினர். திருச்சபை தன் திவ்ய ராஜாவுக்காகச் செய்யும் பிரார்த்தனை யென்று ஒருவர் இதைப்பற்றிப் பேசுகிறார்.

இதற்கு ராஜவாழ்த்து கீதம் என்று பேரிடலாம். ஒருவேளை சாலொமோன் சிங்காசனமேறினபோது அவனுக்காகப் பாடப்பட்டதாயிருந்தாலுமிருக்கலாம். மேசியா தாவீதின் வம்சத்தில் பிறப்பார் என்ற வாக்கையும் நம்பிக்கையையுமுடைய இஸ்ரவேலர் புதிதாக ராஜனுகும் எவனைப்பற்றியும் இது தான் நம் மேசியாவோ என்ற எண்ணத்துடன் இவ்வாறு பாடியிருக்கக்கூடும். ஆகையினாற்றான் இக்கீதத்தில் பல வாசகங்கள் மேசியாவாகிய இயேசுபெருமானைப்பற்றி உண்மையாய்ச் சொல்லப்படக்கூடியதேதவிர வேறெந்த பூலோக அரசனைப்பற்றியும் சொல்லத்தகாததா யிருக்கின்றன. ஆகையால் இயேசு ராஜாவுக்காகச் செய்யும் பிரார்த்தனையாக நினைத்து இதை ஆராய்தல் நன்று.

பொருள்: மேசியாவின் ராஜ்யத்துக்காக விண்ணப்பம்.

சரணம் 1. அது சமாதான ராஜ்யமாயிருக்க ஜெபம் வா. 1—7.

தேவனே, ராஜாவுக்காக உமது நியாயத்தீர்ப்புகளையும்,
ராஜகுமாரனுக்கு உமது நீதியையும் கொடுத்தருளும்.
அவர் உமது ஜனங்களை நீதியோடும்,
உமது ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பாராக!
நீதியினிமித்தம், பர்வதங்களும் சிறுமலைகளும் ஜனத்துக்கு சமாதானத்தைத் தருவதாக!
ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களுக்கு அவர் நியாயம் செய்வாராக!
ஏழையின் பிள்ளைகளை அவர் தற்காத்து,
இடுக்கண் செய்கிறவனை அவர் சொறுக்குவாராக! அப்பொழுது

வளந்தரவாசிகள் அவர்முன் பணிவார்களாக!
அவர் சத்துருக்கள் மண்ணை நக்குவார்களாக!
தர்ஷீசின் ராஜாக்களும், தீவுகளின் ராஜாக்களும்
காணிக்கைகளைக் கொண்டுவருவார்களாக!
சகல ராஜாக்களும் அவர்முன் பணிந்து,
சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்களாக!
ஏனெனில், கூப்பிடுகிற எளியவனையும்,
நாதியற்ற சிறுமைப்பட்டவனையும் அவர் ரட்சிப்
பார்.
பலவீனனுக்கும், எளியவனுக்கும் அவர் இரங்கி
எளியவர்களின் ஆத்துமாக்களை ரட்சிப்பார்.
அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்துக்கும் கொடு
மைக்கும் தப்புவிப்பார்.
அவர்கள் இரத்தம் அவர் பார்வைக்கு அருமையா
யிருக்கும்.

யூத சவிஞன் வாஞ்சை இதில் தெரிகிறது. மேசியாவின் ராஜ்யம் சமுத்திரத்துக்கும் சமுத்திரத்துக்கும் இடையிலுள்ள பூமியெங்கும், (ஐபிராத்து) நதி தொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் செல்லவேண்டும். காட்டு ஜனங்கள், நாட்டு ஜனங்கள், சிற்றரசர், மகா ராஜாக்கள் அனைவரும் அவர்முன் பணியவேண்டும்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிக்கவேண்டும். ஏன்? இவரே எளியவனை ரட்சிக்கிறவர். இவரே நாதியற்றவர்களுக்கு உதவிபுரிகிறவர். ஆகையால் இவரிடத்திலேயே சகல ஜாதிகளும் வருவார்கள் என்கிறான். இயேசு ராஜாவின் ஆளுகை இவ்வசனங்களில் கண்ட அளவு இன்னம் வியாபிக்கவில்லை. நம் தேசத்திலும் இன்னம் அவர்முன் பணியாத ஜமீன்களும், ராஜாக்களும், மகா ராஜாக்களும் உளர். பலவீனரையும் எளியவர்களையும் ரட்சிக்கும் சேனையாக அவர் சபை காணப்படட்டும். அவர்கள் அதை மதிக்காமற் போகார்.

சரணம் 3. சாஸ்வத ராஜ்யமா யிருக்க ஜெபம் வா. 15—17.

அவர் சிரஞ்சீவியாயிருப்பாராக!
ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படுவ
தாக!
ஜனங்கள் அவருக்காக ஓயாமல் ஜெபம்பண்ணி,
நாள்முழுதும் அவரை ஸ்தோத்திரிப்பார்களாக!
பூமியிலே மலைகளின் உச்சியிலே திரளான தானி
யமிருப்பதாக!
அதின் விளைவு லீபனோனைப்போல அசைவதாக!
பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்தோங்
குவார்களாக!
அவர் நாமம் என்றைக்கும் நிலைத்திருப்பதாக!
சூரியனுள்ளமட்டும் சந்தான பரம்பரையாய்
அவர் பேர் சொல்லப்படுவதாக!
சகல ஜாதிகளும் அவருக்குள் தங்களைத்தாங்களே
ஆசீர்வதித்துக்கொண்டு,
அவரைப் பாக்கியவாளன் என்று வாழ்த்துவார்
களாக!

இயேசு ராஜாவின் ராஜ்யமே சாஸ்வத ராஜ்யம். அவரே சிரஞ்சீவி! பூலோகத்தின் சகல ஜாதிகளின் பொன்னும் அவருக்கே காணிக்கையாகப் படைக்கப்படுகிறது. அவர் ராஜ்ய அபிவிருத்திக்காகவே இரவும் பகலும் ஓயாமல் ஜெபிக்கப்படுகிறது. அவர் ராஜாங்கம் செய்யும்போது, பூமி முழுவதும் நிச்சயமாய் செழித்தோங்கும். எல்லாரும் சம்பிரமமாய்ச் வாழுகிறபடியால், தலைமுறை தலைமுறையாய் சகல ஜனங்களும் அவரையே வாழ்த்திப் போற்றுவார்கள்.

கிறிஸ்து ராஜாவே வாழ்க, வாழ்க.
நீழே வாழ்க.
கிறிஸ்து சபையே வாழ்க, வாழ்க.
நீழே வாழ்க.
இந்தியாவே வாழ்க, வாழ்க.
நீழே வாழ்க.
சர்வ லோகமே வாழ்க, வாழ்க.
நீழே வாழ்க.
கிறிஸ்துநாதர்க்குள் வாழ்க, வாழ்க.
நீழே வாழ்க.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

சுவிசேஷப்படை முயற்சி. செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டின்படி, ஏப்பிரல்மீ 29உ சாயங்கால முதல் சபையாகப்போய் சுவிசேஷத்தை அறிவிக்கலானோம். சாயங்காலம் மூன்று மைலுக்குளுள்ள அம்மாப்பாளையம் என்ற பெரிய ஊருக்குப்போய், ஒளிவிசித்திரப் படங்கள் காட்டி பிரசங்கம் செய்தோம். கேட்டவர்கள் 200 பேருக்குக் குறையாது. இராஜாவின் படத்தை முதலில் காட்டியதும், மூன்றுபேர் திரைக்குப் பின்புறமாகப்போய், தங்கள் செருப்புகளைக்கழற்றி

நமஸ்காரம் செய்தார்கள். என்ன சங்கதி என்று வினவினபோது, பெரிய ஸ்வாமி வந்திறங்கி விட்டார் என்றார்கள். ஆம், ஸ்வாமி பூமிக்கு வந்திறங்கின சரித்திரம் சொல்லுகிறோம், கேள் என்று உட்கார வைத்தோம். இரவு 11½ மணி வரை படம் காட்டிய பின், அவ்விடமிருந்து இரண்டு மைல் தூரமான கொல்லகூடம் என்ற ஊரையடுத்த ஆற்றோரத்தில் படுத்து நித்திரை செய்தோம். காலையிலெழும்பி ஊருக்குள் போகவே, கிராமாதிகாரி எங்களை யறிந்தவரானபடியால், பிரசங்கம் செய்யவும் படங்கள் காட்டவும், கொடியவெயில் காலமானதால் நாங்கள் உட்கார்ந்திருக்கவும் தக்க சகாயங்கள் புரிந்தார். காலை முதல் மத்தியானம் வரை உயர்ந்தோர் தாழ்ந்தோர் மத்தியில் பவுஞ்சு பவுஞ்சாகப் பிரசங்கம் செய்தோம். ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வந்து கருத்தாய்க் கேட்டார்கள். அவ்வூரிலுள்ள யாவருக்கும் சுவிசேஷம் திட்டமாய்க் கூறி அறிவிக்கப்பட்டது. திரும்பவும் பிற்பகலில் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் சுவிசேஷ அழப்பைக் கொடுத்தோம். ஆனால் முந்தின இரவு ஆற்றோரத்தில் எங்கள் கூட்டத்தைக் கண்டு, பாட்டுகளைக்கேட்ட ஓர் பெரிய மனிதன் 'யுத்தத்திற்கு மனுஷரைப் பிடிக்க ஆற்றில் வந்திறங்கியிருக்கிறார்கள்' என்று பரப்பிய செய்தியும், படங்களினால் மனிதரின் மனதை மயக்கி விடுகிறார்கள் என்ற தப்பான எண்ணமும் சில இருதயங்களைக் கலக்கிற்று. பத்திரிகைகள் படிக்கத் தெரிந்தவர்கள் சொற்பப் பேராயினும், கருத்தோடும் ஆராய்ச்சியோடும் வாசித்தார்கள் என்பதற்கு திரும்பத் தனிச்சம்பாஷணை செய்தபோது, அவர்கள் வினவினதே அத்தாட்சி. இப்படிப்பட்ட கிராமங்களை இன்னும் அடிக்கடி சந்திக்கக்கூடுமானால், சீக்கிரத்தில் பிரத்தியக்ஷமான பலன் காணலாம். இவ்விடங்களில் விதைத்த விதைகள் ஜீவனுள்ள பலனைத் தரும்படி மன்றாடுவோமாக.

போர்டிங் செலவுகள். கடந்தவருஷத்தில் பெருமழை பெய்து, சுற்றுப்புறங்களில் வெள்ளத்தினால் பயிர்கள் அடித்துக்கொண்டு போய் விடப்பட்டதாலும், ஓயாத மழையினால் மேனி மிகக்குறைந்து போனதாலும், தானிய தவசங்கள் விலையாகும் சந்தையிடமாகிய கம்மாமேட்டில் பிளேக் நடமாட, அவ்விடத்து பண்டகசாலைகள் வெகுகாலம் அடைபட்டதாலும், சாதாரணமாய் 55 முதல் 65 ரூபாய் வரை அறுப்புக்காலத்தில் விற்கும் சோளம் 90 முதல் 100 ரூபாய் வரையும் கிரயமாகிவிட்டது. இதுகூடக் கிடைப்பது மிகக்கஷ்டமாகிவிட்டது. இப்போதே இப்படியிருக்குமானால், அக்றோபர் மாதத்திற்குப் பின் விலை பயங்கரமானவிதமாய் ஏறலாம். ஆனாலும் கம்மாமேட்டில் பிளேக் சற்று ஓய்ந்து கடைகள் திறந்திருப்பதாலும், இருநூறு மூந்நூறு மைல் தூரத்திலுள்ள உள்நாடுகளினின்று வெள்ளைச்சோளம் வந்திருப்பதாலும், சோளம் 90 ரூபாயாக விலையாகுகிறது. போன வருஷாரம்பத்தில் 5 ரூபாயாக விற்ற வெள்ளைநூல் யுத்தத்தினால் ரூபாய் 8 முதல் 9 ரூபாய் வரை உயர்ந்து விட்டது. சாயநூல் விலை இருமடங்கு முமடங்கு அதிகரித்துவிட்ட போதிலும். கெட்டிச்சாய நூல் காணோம். எப்படியாயினும் துணிகளின் விலையும் மதிகமாயின. இம்மட்டோடே நின்றுபோகாமல், எண்ணை, உப்பு முதலியவற்றின் விலைகளும் ஏறிவிட்டன. இதுவரை சராசரி நபர் ஒன்றுக்கு சாப்பாடு, துணி, புஸ்தங்களுக்கு மாதம் ரூபாய் மூன்று செலவானால், இன என்ன ஆகும் என்பதை நீங்களே நிதானிக்கலாம். செலவு மிகவும் அதிகப்படுமே என்று மிகவும் பயப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆயினும் முன் பஞ்சகாலத்தில் காகங்களுக்கும் விதைவைக்கும் கட்டளையிட்ட தேவன், இந்தக்காலத்திலும் ஆதரிக்க மாட்டாதவர்கள் என்று நாம் எண்ணுபவர்களுக்கும் தங்கள் பொக்கிஷம் மிகக்குறைவென்று காண்கிறவர்களுக்கும் தெலுங்குநாட்டுத் தம் பிள்ளைகளைப் போஷிக்கக் கட்டளையிட்டிருக்கிறார் எனபதுதிண்ணம். இப்போதிருக்கிற செலவுகளைச் சுருக்கிவிட வேண்டுமென்றாலும் வகையில்லை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக மாதம் ஏதாயினும் கொடுக்கக்கூடாதா என்று யோசித்தால் பெரும்பான்மையோர் அந்தந்த நாள் கூலி செய்து பிழைக்கிறவர்களானதினாலும், அங்கங்கே பலவித கடனுக்குள்பட்டவர்களாயிருப்பதினாலும், தங்கள் பிள்ளைகளை போர்

டிங் ஸ்கூலுக்கு அனுப்புகிறதினால் சம்பாத்தியம் பண்ணும் பிள்ளை அல்லது பையன் தங்கள் குடும்பத்திற்குக் குறைந்து போகிறதாலும், படிப்படியாய்த்தான் அநேக காரியங்களுக்குக்கொடுக்கப் படிப்பிக்கக்கூடியதாலும், அவர்கள் சம்பாத்தியம் பண்ணும் சக்தியை அதிகப்படுத்துமவரை நாம் போர்டிங் விஷயமான காரியத்தில் அவர்களே பீஸ் முதலியன கொடுக்க எதிர்பார்ப்பது கூடியதாகாது என்று எண்ணுகிறேன். என்றாலும் பள்ளிப்பிள்ளைகள். அநேக விஷயங்களுக்குக் கொடுக்கப் பழகுகிறார்கள். சுவிசேஷக்காணிக்கை, ஒய்வு நாள் காணிக்கை, யுத்தத்தில் கஷ்டப்படுவோருக்குச் சகாயம் முதலியவைகளுக்கு கொடுக்கிறார்கள். தங்கள் வீடுகளினின்று வரும் பொழுதாயினும், தங்கள்பெற்றோர் பந்துக்கள் அவர்களை வந்து பார்க்கும்போதாயினும், சாதாரணமாய் ஏதாயினும் காசு கொடுக்கிறதில்லை. ஆனாலும் பிள்ளைகள் சுயமுயற்சியினால் இவைகளுக்குக் கொடுக்கிறார்கள்.

நன்றி யறிதற். மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் ஆலோசனைப்படி ஒரு தரியின் விலையை நன்கொடை யளிப்பவரின் பெயர் அந்தத் தரிக்கு இடப்படும். அந்தப்படி கைலாசபுரம் மக-ரா-ரஸ்ரீ M. தேவசகாயம் அவர்களின் பேர் ஓர் தரிக்கும், ஜப்பல்பூர் கனம் P. யாக்கோபு ஐயரவர்களின் பேர் இன்னொன்றுக்கும், ஆழ்வானேரிடைச்சேர்ந்தஉன்னங்குளம் கனம் மோசே அவர்களின் பெயர் அடுத்த இரண்டு தரிகளுக்கும் இடப்பட்டு, கொடையாளிகளின் பேர் தரிகளுச்கு மேலே எழுதப்பட எற்பாடாகியிருக்கிறது. தேவனிடத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக தோத்திரங்களைச் செலுத்தி, அவர்களால் இன்னுமநேக ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படுவதற்காக தேவனைத் துதிப்போமாக.

சுயமுயற்சி சகாயம். நாளுக்கு நாள் போர்டிங் பாடசாலைப் பிள்ளைகளின் தொகை யதிகரிப்பது அவசியமானதாலும் வரப்போரும் சந்ததிக்கு படிப்படியாய் சுயமுயற்சி பயிற்றுவிக்கும் நோக்கமாகவும், போர்டிங் ஸ்கூல் வரும்படியை உண்டாக்கும் வகைகளாகவும் சில முறைமைகளைக் கையாடுதல் அவசரமாகிறது. தச்சுவேலை செய்வதினால் இரண்டு பையன்களும் கைவசு செய்வதினால் ஐந்துபேரும் சுயஆதரவுக்குள்பட்டவர்களாயிருக்கிறார்கள். தோட்டவேலை செய்வதாலும் கட்டில் நாடாக்கள் நெய்வதாலும் கோழிகள் வளர்ப்பதாலும் நெல்குத்துவதாலும், தொழில்களில் பழகவும் சம்பாதிக்கும் சக்தியை வீருத்தி பண்ணவும் சுயமுயற்சியை உண்டாக்கவும் கூடியதாகும். இப்படிப்பட்ட நோக்கங்களுக்கிசைவான சகாயம் செய்ய தேவன் சில இருதயங்களை எழுப்புவாராக.

பருத்தியறைக்கும் மீனையும், முக்கியமாய் மீனைக்கம்பு இரண்டு மூன்று ஜதைகளும் ஆறு இராட்கேளும் தேவை. நாடா செய்யும் யந்திரம் இரட்சண்ய சேனையால் மிருதியாய் வழங்கப்படுகிறது. கட்டில் நாடாக்கள், விளக்குத் திரிகள், போலீஸார் முதலியவர்கள் காலேச்சுற்றிக்கட்டும் பட்டிகள் கையினால் செய்யப்படுவதைவிட ஐந்துமடங்கு விரைவாய் நெய்யக்கூடியது. இதன் விலை சுமார் 60 ரூபாய். ஆஸ்பத்திரிகளுக்காகவும் கட்டில்களுக்காகவும் வடபாகங்களில் அதிகமாய் வேண்டியதிருப்பதால், மிகவும் பிரயோஜனமான கைத் தொழிலாகும். நெல்லுக்குத்தும் கையந்திரம் சுமார் 80 ரூபாய். இப்படிப்பட்ட ஓர் கையந்திரத்தால் 6 பேருக்கு அதிகமான வர்கள் தங்களை யாதரித்துக்கொள்ளக்கூடும். மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நெல் களஞ்சியம் ஒன்று எற்படுத்தியிருக்கிறதால் இது கூடியதாகும் என்று நம்ப ஏதுவுண்டு.

பணக்கஷ்ட காலமானதால், பிள்ளைகள் இனி தங்கள் சொந்த பாய், சொந்தத்துணி ஒன்றுவது, சொந்த கோப்பை ஒன்று லீவு முடிந்து பள்ளிக்கூடத்திற்கு வரும்போது கொண்டுவரவேண்டுமென்று சொல்லியனுப்பினேம். பிள்ளைகளிலநேகர் உற்சாகமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் வீட்டுக்கஷ்டம் விசேஷமாய் இந்த வருஷம் தாங்கக்கூடாததாய்த் தானிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

புதுப்போஷிகளி. தற்சமயம் பள்ளிக்கூடத்திலிருக்கும் பிள்ளைகளில் 17 பேரு

க்கு போஷிகர்கள் கிடைக்கவில்லை. தேவ கிருபையால் நாளது வருஷம் கனம் ஸ்டீபன் B. A. அவர்கள் முயற்சியால், நாசரேத் டிரேயினிங் ஸ்கூல் மாணவரும், செங்கல்பட்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டவர்கள் கனம் S. G. மோசே B. A. அவர்களும், சிவகாசி Mrs முத்தையா சாமுவேல் அம்மாளவர்களும் ஒவ்வொருவரை யாதரிக்க வாக்குக்கொடுத்து, அவ்வாறே பணம் அனுப்பி வருகிறார்கள்.

கனம் தேவசகாயம் ஐயரவர்கள் கடந்த அக்டோபர் மாதம் ரஜா முடிந்து திரும்பி வந்ததும் 'நமது போர்டிங் ஸ்கூலுக்கு பிள்ளைகள் தான் கிடைக்கமாட்டாது' என்றார்கள். 'என் ஐயா அப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று கேட்க, ஒவ்வொரு சர்க்கிளாரும் ஒரோர் பையனை ஆதரிக்க ஒப்புக்கொண்டு ஆரம்பித்துவிட்டார்கள். அநேக கிறிஸ்தவ கனவான்கள் தோர்ணக்கல் பள்ளிப்பிள்ளைகளை யாதரிப்பதே பெரிய பாக்கியமாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லி, மிஷனரிமார் அனைவரையும் தைரியப்படுத்தினார்கள். தற்சமயம் உதவியில்லாதிருக்கும் பிள்ளைகள் சுமார் 12 பேர் என்பதும் இன்னும் புதிதாய் சேர்க்கப்பட ஆயத்தமாயிருக்கிறவர்கள் 19 பேர் என்பதும் தெரியுமானால், இன்னமும் தோர்ணக்கல் பிள்ளைகளை யாதரிக்க அநேகர் முன்னுக்கு வருவார்கள் என்று நம்புகிறோம்.

விடுமுறைக்குப்போன பிள்ளைகள். வேனிற்கால ரஜாவுக்கு பிள்ளைகள் மேய் மாதம் 25-ம் தேதி வீடுகளுக்குப்போனார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் ஜூன் மாதம் 6-ம் தேதி திரும்புவார்கள். சுமார் 25 மைல் தூரமுள்ள தன் வீட்டுக்குப்போன பிள்ளையை இங்கேயிருந்து முன்று மைலுக்கப்பாலுள்ள கிராமத்தில் சந்தித்தேன். பெற்றோருடன் பிழைப்புக்காக தன் கிராமத்தை விட்டு அஞ்ஞான ஜனங்கள் மத்தியில் வந்திருக்கிறார்கள். அத்தப் பிள்ளையின் தம்பிமார் காய்ச்சலினால் வீட்டின் ஒட்டுத் திண்ணையில் படுத்திருக்க அவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். தாய் களங்களுக்குப்போய், சாயங்காலம் பொழுதடையும்போது கூலி நெல் கொண்டுவருவாள். இதன்பின் தான் அதைக் குத்தி சமையல் செய்து சாப்பிடுவார்கள். தகப்பனுக்கு சில வேளை கூலி கிடைக்கும். சிலவேளைகளில் வேலை கிடையாது. நான் பார்த்த அந்த நாளில் தகப்பனுக்கும் தாய்க்கும் வேலை கிடைக்கவில்லை. ஆகையால் பட்டினியாயிருந்தார்கள். இந்தப் பிள்ளையிடம்: இன்று வாசிக்க வேண்டிய பாகம் வாசித்தாயா என்று கேட்டதும், "ஆம் வாசித்தேன்". 'என்ன பாகம்?" "அப்போஸ்தலர் நடபடிகள் 3: 1—15 வசனங்கள்." "என்ன சங்கதி"? "சப்பாணியை நடக்கப்பண்ணினார்கள்" இந்தப் பிள்ளை பெரிய பிள்ளை. ஆகையால் இந்தப் பிள்ளைக்கிருக்கும் கஷ்டங்களையும் சோதனைகளையும் வேதவாசிப்பில் உண்டான வாஞ்சையையும் யூகித்துக்கொள்ளலாம். இது நடந்த சில நாளைக்குப்பின் ஓர் உபாத்தியாயரைப் பார்த்தேன். கிட்டத்தட்ட இதே விதமான கஷ்டங்களை யனுபவிக்கிற இரண்டு பிள்ளைகளைப்பற்றி வருத்தத்தோடே பேசினார். ஆகையால் இந்தப் பாலியர்பாலகிகளின் கஷ்டங்களுக்காக ஜெபிப்போமாக.

S. V. சுவாமிதாஸ்.

கோரேசும் தேவாலயமும்.

கோரேஸ் சுமார் 24 நூற்றாண்டுகளுக்கு முன் பெர்சியாதேசத்திலிருந்த ஓர் ராஜன். அவன் பிரபிலோன் ராஜ்ஜியத்தை ஜெயித்து அங்கே 70ஆம் காலமாய்ச் சிறைப்பட்டிருந்த கர்த்தருடைய ஜனங்களின் சிறையிருப்பை நீக்கினான். எசாயாவின் புஸ்தகம் 44, 45-ம் அதிகாரங்களில் அவனைப்பற்றிய தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருக்கிறது. அதில், கர்த்தராகிய நான் அபிஷேகம்பண்ணின கோரேஸ் என்றும்; அவன் என மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான் என்றும் கண்டிருக்கிறது. அவனுடைய ராஜ்ஜியபாரத்தின் முதலாம் வருஷத்தில் அவன் பிரசுரஞ்செய்ததாக எஸ்ரூவின் புஸ்தகத்தில்

கண்டிருக்கும் ராஜவிளம்பரம், மேற்கண்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் என்று சொல்லலாம். 'அதில், பரலோகத்தின் தேவனுகிய கர்த்தர் பூமியின் ராஜ்ஜியங்களை எல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார், ஆகையால் அவருடைய ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தருடைய ஆலயத்தைக்கட்டக் கடவர்கள்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன் என்பதாக ராஜ்ஜியமெங்கும் விளம்பரம் பண்ணுவித்தான். அதன் பிரகாரம் இஸ்ரவேல் ஜனங்களில் எவர்களின் ஆவியை தேவன் எவ்வுரோ அவர்கள் எல்லாரும் எழும்பிப்போய், ஒருமனப்பட்டவர்களாய், நாங்களே இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தருடைய ஆலயத்தைக்கட்டுவோம் என்று சொல்லி, விரோதிகளின் தடைகளோடும் சங்கடங்களோடும், ஆலயத்தைக்கட்டி வருகிற காலத்தில், (எஸ்ரூவின் புஸ்தகத்தில் கண்டபடி) மகாராஜாவாகிய அர்த்தசஷ்டா, பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகனுகிய எஸ்ரூவுக்குத் தன் பேராலும் தன்னுடைய ஏழு மந்திரிமார் பேராலும் சன்னதுகொடுத்து, எஸ்ரூவோடுகூட எருசலேமுக்குப்போக மனப்பூர்வமாயிருக்கிற இஸ்ரவேலர் எல்லாரும் போகலாமென்றும்; எஸ்ரூ தன் கையிலிருக்கிற தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி யூதாவையும் எருசலேமையும் விசாரித்து நடத்தலாமென்றும்; ராஜாவும் அவன் மந்திரிமாரும் பாபிலோனிலுள்ள பிரபுக்களும் கொடுத்த வெள்ளியையும் பொன்னையும்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தைக்கட்ட வேண்டுமென்றும்; பின்னும் பரலோகத்தின் தேவனுடைய ஆலயத்துக்கு எது தேவையாயிருக்குமோ, அதையெல்லாம் யோர்தான் நதிக்கப்புறத்திலுள்ள கஜானுவிலிருந்து கொடுக்க வேண்டுமென்றும், கர்த்தருடைய ஜனங்களே நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும் நியாயாதிபதிகளையும் தன்னிலுள்ள தேவனுடைய ஞானத்தின்படி எஸ்ரூ ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதாகவும் ராஜா சன்னதுபெற்று, எருசலேமுக்குவந்து எஸ்ரூ கர்த்தருடைய ஆலயத்தைக்கட்டி முடித்தான் என்று சத்தியவேதம் கூறுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களின் இச்சரித்திரமானது, திருநெல்வேலி மதுரை அத்தியகூடா நேனத்தில் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளின் சரித்திரத்தை ஒத்திருக்கின்றது. 800வது காலமாய்ப் பலஸ்தீனே தேசத்தில் பலத்த ராஜ்ஜியங்களோடுகூட்டி அரசாண்டு வந்த இஸ்ரவேல் ஜனங்கள் தெய்வ துரோகத்தினுல் தங்களுடைய ராஜ்ஜியங்களே இழந்தார்கள்; அவை நாளதுவரை அவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்படவில்லை. கிறிஸ்து முதல் கிறிஸ்துவுக்குப் பின் 13 ம் நூற்றண்டுவரை அரசுபுரிந்து வந்த பாண்டியரின் ராஜ்ஜியம், பாண்டிநாட்டாரின் தெய்வ துரோகத்தால் 600 வருஷங்களுக்கு முன் கவிழ்க்கப்பட்டுப்போயிற்று. 70 வது காலம் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைப்பட்டிருந்த வண்ணம், 500 வது காலமாய்ப் பாண்டி நாட்டாரும் அடிமைப்பட்டிருந்தார்கள். மகாபாபிலோன் ராஜ்ஜியத்தைக் கோரேஸ் பிடித்த முதலாம் வருஷத்திலே இஸ்ரவேலருக்கு மீட்புண்டானதுபோல, பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தியாவைக் கைப்பற்றினநாள்முதல் பாண்டிநாட்டாரின் அடிமைத்தனம் நீங்கிற்று. ஏசாயாவின் புஸ்தகத்தில் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவன் என்றும் அவருடைய மேய்ப்பன் என்றும், அவருடைய பிரமாணசதை எல்லாம் நிறைவேற்றுவான் எனறும் சொல்லப்பெற்ற கோரேஸ் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மீட்பு கூறினுன். பாண்டிநாட்டாருக்கோவெனில், கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவரும், நானே நல்ல மேய்ப்பன் என்றவரும், தம்மூடைய பிதாவின் சித்தத்தைச் சிலுவையின் மரணபரியந்தம் நிறைவேற்றி முடித்தவருமாகிய தேவகுமாரனுதாமே நமக்கு மீட்பு கூறினர். நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் ஜனங்களைச் சிறையெடுத்துக்கொண்டுபோன பின்பு, காலுன் தேசம் பாழ்நிலமாகவும் நித்திய வனந்தரமாகவும் மாறிற்றென்று எரேமியா (25: 9) சொல்லுகிறுன்; அந்த நாட்டிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படி கோரேஸ் கட்டளையிட்டான். அதற்கொப்பானதும் கர்த்தருடைய நாமம் அங்கீகரிக்கப்படாததுமான நிஜாம் ராஜ்ஜியத்தில், தோர்ணக்கல் என்னும் இடத்தில், பாண்டிநாட்டாரின் மீட்பின் ஞாபகார்த்த ஆலயம் கட்டப்படவேண்டுமென்று நம்முடைய ரக்ஷாபெருமான் பாண்டி நாட்டாருக்குக் கட்டளையிட்டிருக்கிறர். காலுன் தேசத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவும், இஸ்ரவேல் ஜனங்களே மேல்ப் பார்க்கவும், அர்த்தசஷ்டா ராஜாவும் அவனுடைய மந்திரிமாரும் உத்தம வேதபாரகனுகிய எஸ்ரூவை ன்னுப்பினவணனம், தோர்ணக்கல்லில் தம்முடைய ஆலயத்தைக் கட்டவும் தம்முடையசபையை மேல்ப்பார்க்கவும், உத்தம வேதபாரகராகிய மகாகனம் அசரியா பிஷப்பை, 7 வசனம் திருவாய்மலர்ந்தவரும், 7 பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலிருப்பவரும், 7 சபைகளின் நாயகருமான தேவகுமாரன் தெரிந்தெடுத்து, சன்னதுகொடுத்து, அனுப்பியிருக்கிறர். எருசலேமின் ஆலயத்தைக் கட்டுப்படி வேண்டிய திரவியத்தை யோர்தான் நதிக்கப்புறத்திலுள்ள கஜானுவில் எஸ்ரூ பெற்றுக்கொள்ளும்படி அர்த்தசஷ்டா ராஜா கட்டளையிட்டபிரகாரம், தோர்ணக்கல் ஆலயத்துக்குத் தேவையான பணத்தை தமரண யோர்தான் நதிக்கு இப்புறமிருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளான தென்பாண்டி நாட்டார் (திருநெல்வேலி மதுரை அத்திய கூடாதினத்து வாசிகளான சகோதரர்) நமது உத்தம வேதபாரகர்களாகிய அசரியா பிஷப் பவர்களிடம் கொடுக்கும்படி சிலுவைநாதர் சொல்லுகிறர்.

தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயத்தைக் கட்டிமுடிப்பதற்கு ரூ. 20,000 தேவையென்றும், அதில் ரூ 7648 நாளதுவரை வசூலாகியிருக்கிறதென்றும், கடந்த வருஷத்திய மிஷனெரி சங்கத்து ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறது. ஆகையால் அதற்கென்ற ரூ. 12,352 இன்னும் சேகரமாகவேண்டும். பாபிலோன் சிறையிருப்பிலிருந்துமீட்படைந்த இஸ்ரவேல் ஜனங்கள் எருசலேமில் ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தபோது, பகைஞரால் அனந்தம் தடைகளும் சங்கடங்களும் நேரிட்டபோதிலும், மீட்கப்பட்ட இஸ்ரவேலர் அவர்களைப் பார்த்து, பெர்சியா ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி (நாங்களே இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம் என்றார்கள் எஸ்ரூ. 4: 3). இஸ்ரவேல் ஜனங்களைப் போல் பலராலும் பகைக்கப்பட்டும் கர்த்தரால் நேசிக்கப்பட்டும்வருகிற பாண்டி நாட்டாரான என அருமையான சகோதரரே! நீங்களும் மீட்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களைப்போல எழும்பி, தோர்ணக்கல் ஆலயத்தை நாங்களே கட்டுவோம் என்று சொல்லி, மனப்பூர்வமாய் உங்கள் காணிக்கைகளை அனுப்பிவிக்க மன்றுடுகிறேன்.

கர்த்தரை தெய்வமாகக்கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது. ஒளியின் மக்களாகிய நீங்களும், கர்த்தருடைய நாம மகிமைக்கென்று உங்கள் திரவியத்தைச் செலவுபண்ணுமல், அந்தகார லோகாதிபதியின் பிள்ளைகளைப் போல, பெட்டியில் பூட்டிவைப்பீர்களானுல் பூச்சியும் துருவும் அதைக் கெடுக்கும் ஜீவனுள்ள தேவகுமாரனுல் தெரிந்தெடுக்கப்பட்ட சுவிகாரபுத்திரரே! தென்பாண்டி நாட்டாரான கர்த்தருடைய பிள்ளைகளே! பரலோகத்தின் தேவன் உங்கள் பிதாவானுல், அவருடைய மகிமைக்கான விஷயங்களில் உங்கள் செல்வத்தைத் உதாரத்வமாய்ச் செலவிடுங்கள். என் பிதாவின் சித்தத்தின்படி செய்யாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே, கர்த்தாவே, என்று மாத்திரம் சொல்லுகிறவன் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்பது தேவகுமாரனின் வாக்கு பாண்டி நாட்டில் கிறிஸ்துவின விலைமதியாத ரத்தத்தால் மீட்கப்பட்டவர்களில் ஒருவராகிலும், தோர்ணக்கல்லில் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும் சலாக்கியத்துக்கு அந்நியராய்ப்போகாதபடி எம்பெருமான் நம்மைக் காப்பாராக ஆமென்.

21—10—1916 J. S. C.

பளியர் ஞானஸ்நானமும் விவாகமும்.

கர்த்தருடைய கிருபையால் கடந்த ஜனுவரிமீ 22வ தலையணை பளியக்குடியில் பரி: ஞானஸ்நானம் ஒன்று நடந்தது வாகைக்குளம் சர்க்கிள் கேஷியர்மென் சனம் K. T. அருமைநாயகம் ஐயரவர்கள் விருதுப்பட்டிக்கு மாற்றப்பட்டிருந்தும் 21வ வாகதேவ

நல்லூருக்கு வந்து, 22உ பெருங் கஷ்டத்துடன் தலையணை வந்து சேர்ந்தார்கள். அதோடு பழியர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் Mr. மோசஸ் முத்துமாலைப் பிரசங்கியாரவர்களும் தம் குடும்பத்துடன் தலையணை வந்து சேர்ந்தார்கள். வாசுதேவ நல்லூர் சபையாரில் சிலரும் வந்துசேர்ந்தார்கள். நம் நாட்டிலுள்ளவர்களுக்கு நேர்த்தியான தேவாலயங்களுண்டு. பளியர்களுக்கு தேவாலயம் மரங்களடிவாரமும் கல்புடைகளுமே. தேவாலயமாகிய புளியமரத்தடியில் கூடி ஜெபம்செய்து, ஏழு பெண்களுக்கு சேலையும், இரண்டு வாலிபருக்கு வேஷ்டியும் கொடுக்கப்பட்டது. கனம் சர்க்கிள் க்ஷேயர்மேனவர்கள் சேலை, வேஷ்டிகள் கொடுக்கும்போதே இயேசு சுவாமியைக் குறித்து சில கேள்விகள் கேட்டார்கள். நாகரீகமற்ற ஜனங்களாயிருந்தும் அவர்கள் சொல்லிய உத்தரவு எங்களெல்லாருக்கும் வியப்பையுண்டாக்கிற்று.

ஞானஸ்நான ஆராதனையில் பளியர்களும், மற்றவர்களும் 'ஏசுவையே துதிசெய்' என்ற கீதம்பாட ஆராதனை நடத்தி, அப்பால் தலையணையாற்றில் லீதியாள் என்ற பேரால் நாமம் சூட்டி, முழுகி ஞானஸ்நானம் கொடுக்கப்பட பழியர்கள் எல்லாரும் "மனம்மாறி இரட்சிக்கப்பட்டேன்" என்ற கீதம் பாடினார்கள். அவ்வாறு பாடிக்கொண்டே மேற்படி தேவாலயமாகிய புளியமரத்தடியில் வந்து, ஞானஸ்நான தோத்திர ஆராதனை முற்றுப் பெற்றது.

பின்னால் பரி: விவாக ஆராதனை நடந்தது. மணமக்கள் நால்வர்க்கும் புதிய வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டது. நாட்டு ஜனங்களில் விவாஹம் நடத்த ரூபாய் 300 முதல் 400 பிடிக்குமென்றும், பெண்ணுக்கு 50—100 ரூபாயில் காசிபட்டுகள் எடுக்கவேண்டுமென்றும், மாப்பிள்ளைக்கு நேர்த்தியான பட்டுச் சட்டைகள், வேஷ்டிகள் எடுக்கவேண்டுமென்றும் சொல்லும் சகோதரர்கள், சகோதரிகள், பளியர்களின் பெண் மாப்பிள்ளைகள் கலியாண வஸ்திரங்களைக் கவனிப்பார்களானால், நன்றாயிருக்கும். மாப்பிள்ளைக்கு கலியாண வேஷ்டி நாசரேத்தூரில் நெய்கிற வேஷ்டி ஒன்றுதான். சுமார் 12 அணா பெறும். பெண்களுக்கு முகூர்த்தச் சேலை சாலியர்கள் நெய்கிற தரிச்சேலையே. சுமார் ரூ. $2\frac{1}{4}$ அல்லது $2\frac{1}{2}$ பெறும். திருமங்கிலியம் வெள்ளியினால் சிலுவை மாதிரி செய்யப்பட்டிருந்தது. சுமார் 12 அணா அல்லது ஒரு ரூபாய் பெறும்.

கனம் சர்க்கிள்க்ஷேயர்மேனவர்கள் உட்கார ஒரு நாற்காலியும், மேசையும் தச்சர்களின்றி உடனே செய்யப்பட்டது. எப்படியென்றால், நாலு கம்புகளை வெட்டி, நாலு கால்களாக நிறுத்தி, குறுக்கே சில கம்புகளைப் பரப்பி, தேக்கு இலைகளை விரித்து, அதன் மேல் மணல் பரப்பி, மேசைத் துப்பட்டிக்குப் பதிலாக Mr. M. முத்துமாலைப் பிரசங்பிரசங்கியாரவர்களுடைய போர்வையை விரித்து மேசை செய்யப்பட்டது. அவ்வாறே நாற்காலியும் செய்யப்பட்டது. கலியாண கொட்டகைக்கு முன்னால் ஆவரம் பூவை தோரணமாகக் கட்டி, மற்ற சில செடிகளால் கமான் வளைத்து, மணமக்களும் விவாஹத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் உட்கார இலைகளால் பாய் விரிக்கப்பட்டிருந்தது. விவாஹம் முடியவும் "ஏசுநாயகா வந்தாளும் எந்நாளும்" என்ற கீதம் பாடி காணிக்கையும் வாங்கப்பட்டது. அன்று சேகரமான காணிக்கை ஒரு ரூபாய் சில்வானம். இவர்களுடைய நிலைமைகளை மற்றவர்கள் சொல்வதினால் விளங்காது. நேரில் பார்ப்பீர்களானால், வனாந்தரத்தில் துஷ்ட மிருகங்களின் மத்தியில் இருந்து பாடும் கீதமும், அருமை ஆண்டவனாத் துதிக்கும் துதியும் நன்றாய்த் தெரியும். ஆகையால் என் உடன் சகோதரர் சகோதரிகளே! மலைப்பழியர்களுக்காக உங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் இடைவிடாமல் ஜெபிப்பதோடு ஷை பளியர்களுக்காக உதவிசெய்யும்படியாகவும் அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி. 19: 17). அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக பிலி.

பளியர்கள் கலியாணத்திற்காக உ[illegible] மாய்வாசுதேவநல்லூர் C.E.Z.M. ஸ்க[illegible]னப்பிரகாசம்பிள்ளையவர்கள் சொந்த[illegible]

அத்தியக்ஷாதீனப் பத்திரிகை.

ஜீவன்.

கிறிஸ்துமார்க்கம் ஓர் ஜீவியமே. அது நடக்கைப் பிரமாணமென்றே சொல்லவேண்டும். தேவனைப்பற்றி நன்றாயறிந்து, திட்டமாய்ப் போதித்தும், அவனைப்போல் ஜீவிக்காதவர்களையே இயேசுகிறிஸ்து கண்டித்துப் பேசுகிறார். 'நீங்கள் கைக்கொள்ளும்படி வேதபாரகர் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கிறபடியோ செய்யாதிருங்கள். ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள். சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்'.

நாம் மெய்க்கிறிஸ்தவர்களாயிருக்கவேண்டுமாயின், நாம் கிறிஸ்துவைப்போலிருப்பது வார்த்தையினால் மாத்திரமல்ல, ஜீவியத்திலும் விளங்கவேண்டும். நம்முடைய தன்னயம், வாக்குவாதம் முதலிய குணங்களினால் நாம் கிறிஸ்துவைப் போன்றவர்களல்லவென்று விளங்கும்போது, கோவிலுக்கு ஒழுங்காய்ப் போவதாலும் நம்மைப் பக்தியுள்ள கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்வதாலும் பிரயோஜனமில்லை. நீ கிறிஸ்துவைப்போலிருக்கிறாயா என்ற ஒரே அளவைக்கொண்டு தான் நம்முடைய பக்தியைத் தேவன் அளந்தறிகிறார். வேறொன்றும் செல்லாது. 'அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே, உமது நாமத்தினாலே தீர்க்கதரிசன முரைத்தோமல்லவா' என்பார்கள். அப்பொழுது நான் அவர்களை நோக்கி: நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டகன்று போங்கள்' என்பார். அவர்களுடைய ஜீவியம் பரிசுத்தமாயிராதபடியால், அவர்களுடைய பிரசங்கமும் ஊழியமும் பிரயோஜணமற்றுப்போகின்றது.

நாம் கிறிஸ்துவின் ஆவியினால் நடத்தப்பட்டு அவருடைய வேலையைச் செய்வதினால், அவரைப்போலவும் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகவுமிருக்க வேண்டியவர்கள்.

நமக்குள்ளே கிறிஸ்துவின் ஜீவன்.

கிறிஸ்து நமக்கருளும் ஜீவனானது நம்முடைய வேலைகளிலெல்லாம் நமக்குக் கைகொடுத்து, நம்மை அனல்மூட்டி எழுப்பிவிடுகிறது. அது நமக்கிருக்கவேண்டிய குணமேயன்றி, நாம் செய்யவேண்டிய அறிக்கைமட்டுமென்று. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற எவனும் தன்னுடைய கிரியைகளிலெல்லாம் அவருடைய குணாதிசயங்கள் விளங்கும்படி அவரைப்பற்றி மற்றவர்களிடம் பேசுவான். அவன் தயவும் அன்புமுள்ளவனாயிருப்பதைப் பார்த்து, ஜனங்கள் கிறிஸ்துவையறிந்து அவரண்டை வருவார்கள். கிறிஸ்துவின் சிந்தை, நோக்கம்போலவே அவனுடைய சிந்தையும் நோக்கமுமிருக்கும். கிறிஸ்து எல்லா மனிதர்பேரிலும் அன்புகூருவதுபோலவே அவனும் அன்புகூருவான். அவர்களுடைய நன்மைக்காக கிறிஸ்து தம்மைத்தாமே பலியாய்க்கொடுத்ததுபோல் அவனும் தன்னை மற்றவர்களுக்காகத் தத்தஞ்செய்வான். கிறிஸ்து சுயமேன்மையை நாடாமலும் தமக்குப் பிரியமாய் நடக்காததும்போல, அவனும் தன் சுயமகிமையை நாடாமலும் தனக்குப் பிரியமானதையே செய்யாமலுமிருப்பான்.

சபையிலே கிறிஸ்துவின் ஜீவன்.

திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். நம்முடைய ஆவி செய்ய விரும்புவதை சரீரத்தைக்கொண்டு நடப்பிக்கிறோம். அப்படியே கிறிஸ்துவின் ஆவி செய்ய விரும்பும் வேலையை கிறிஸ்து சபை செய்யவேண்டும். ஆவி ஆலோசிக்கும், நடத்தும். சரீரமோ கிறிஸ்துவின்பேரிலுள்ள நம்பிக்கையுடன் அவருடைய வேலையைச் செய்யவேண்டும்.

ஆவியானவருடைய நோக்கங்களில் சிலவற்றை யோசித்துப்பாருங்கள். எல்லா மனிதரும் மனந்திரும்பவேண்டுமென்பது தேவசித்தம். மனிதர் மனந்திரும்புவதற்கேதுவாய் கிறிஸ்துவின் அவயவங்களானவர்கள் முயற்சிப்பார்கள். எல்லா மனிதரும் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்பதும் தேவனுடைய சித்தம். கிறிஸ்துவின் அவயவங்களானவர்கள் எங்கேயிருந்தாலும், சபையிலும் கிராமங்களிலும் இந்தியாமுழுவதிலுமே அன்பை விருத்திசெய்ய முயற்சிப்

பார்கள். மனிதர் பாவத்தினின்று மீட்கப் பட தேவன் தம்மைக்கொடுக்கிறார். கிறிஸ்துவின் அவயவங்களானவர்களும் பாவத்தையோட்டவும், மற்றவர்கள் தேவனைப்போல் அன்புள்ளவர்களாய் ஜீவிக்க உதவிபுரியவும் எண்ணமுடையவர்களாய் முயற்சிக்கவேண்டும். 'நான் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைத்திருப்பீர்கள்.'

டையோசீஸன் கவுண்சல்.

ஒவ்வொரு அத்தியகூடினத்திலும் அத்தியகூர், குருமார், 'லே' மெம்பர்கள் இரமமாய் அமைந்துள்ள 'சினட்' சபை ஒன்று எற்படுத்தப்படவேண்டும் என்று சில வருஷங்களுக்குமுன் தீர்மானிக்கப்பட்ட விஷயம் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இதன் விஷயமாய்ப் பல அத்தியகூடினங்களில் கூட்டங்கள் நடந்து, 'சினட்' சபையைப்பற்றிய சட்டங்களும் நிர்வஹிக்கப்பட்டன. என்றாலும், கடைசியாக 'சினட்' சபை இந்தியாவில் ஸ்தாபகமாவது சட்டப்படி கூடாத காரியம் எனத் தெரியவந்தது. ஏனெனில், இந்துதேசத்திலுள்ள நமது திருச்சபையானது இங்கிலாந்து திருச்சபையோடு ஐக்கியப்பட்டுளது. இங்கிலாந்திலோ இப்படிப்பட்ட 'சினட்' சபை கிடையாது. ஆகவே, 'சினட்' சபை ஸ்தானத்தில், கூடியவாறு அதைப் போன்றதென்றாலும், வேறோர் நாமம்பூண்ட 'டையோசீஸன்' கவுண்சல் ஏற்பாடு தீர்மானம்பெற்றது. அநேக அத்தியகூடினங்களில் 'டையோசீஸன் கவுண்சல்' ஸ்தாபிக்கப்பட்டு, அவைகளின் மூலமாய் சபையின் ஊழியங்கள் நடைபெற்றுவருகின்றன.

திருநெல்வேலியில் "டையோசீஸன் கவுண்சல் ஏற்பாடு" ஆரம்பமாக நான் இற்றைவரை வழிவகை செய்யாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நூதனமான இவ்விஷயத்தை ஏற்படுத்துமுன் இந்த அத்தியகூடினத்தின் காரியாதிகளை நான் திட்டவட்டமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது ஒன்று. ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜில்லா ஆலோசனை சங்கங்களோடு இந்த 'டையோஸேன்' கவுண்சிலை எப்படி சம்பந்தப்படுத்துவது என்று அறியாதது மற்றோர் காரணம்.

என்றாலும், 'டையோசீஸன் கவுண்சல்' ஸ்தாபிக்கும்படி முயற்சிப்பதற்கு இப்போது சமயம் வந்திருக்கிறது. முதலாவதாக, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அத்தியகூடினத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமைந்த 'புரோவின்ஷல் கவுண்சல்' கூட்டம் கல்குத்தாவில் 1918-ம் வருஷம் நடக்கும். அதற்கு நமது அத்தியகூரும் நாலு குருமாரும் பட்டம்பெறுத நாலு சபை மெம்பரும் நமது அத்தியகூடினத்திலிருந்து பிரதிநிதிகளாகப் போகவேண்டும். நாமும் நம்முடைய அத்தியகூடினத்தில் ஓர் 'டையோசீஸன் கவுண்சல்' ஏற்படுத்தவில்லையென்றால், அம்மகா சபைக்குப் பிரதிநிதிகள் அனுப்பமுடியாது. தவிரவும், 'புரோவின்ஷல் கவுண்சிலார்' டையோசீஸன் கவுண்சல்கள் சம்பந்தமாய் விதித்திருக்கும் சட்டங்களை நாம் அங்கீகாரம் செய்கிறோமா என்று அந்தக் கவுண்சலில் கேட்பார்கள். நாம் அச்சட்டங்களை ஆலோசிக்காவிடின், உத்தரவு சொல்லுவதற்கு இயலாதவர்களாயிருப்போம். ஆகவே, வருகிற அக்டோபர் மாசம் 'டையோசீஸன் கான்பொரன்ஸ்' ஒன்று நடைபெறும்படி ஆலோசிக்கிறோம் இக்கூட்டத்தை 'டையோசீஸன் கவுண்சல்' என்று ஏன் அழைக்கவில்லையென்றால், இக்கவுண்சல் இன்னும் நியமமாய் அமைக்கப்படவில்லை. நடக்கப்போகிற 'கான்பொரன்ஸ்' கூட்டத்தில் இவ்விஷயங்களைப் பேசி ஆலோசிக்கக்கூடும். யுக்தியென்று கண்டால், ஒரு 'டையோசீஸன்' கவுண்சல் ஸ்தாபித்து, அதின் காரியாதிகளை நடத்துவதற்கு ஓர் காரியகர்த்தா சபை ஏற்படுத்துவதுமன்றி, 'புரோவின்ஷல்' கவுண்சலுக்கு பிரதிநிதிகளையும் தெரிந்துகொள்ளக்கூடும். டையோசீஸன் கான்பொரன்ஸ் சபையானது (1) அத்தியகூரவர்களும், (2) குருமார் அனைவரும், (3) பட்டம்பெறுத சபை மெம்பர்களின் பிரதிநிதிகளும்அடங்கினதாயிருக்கவேண்டும். 'லே' மெம்பர்கள் தெரிந்துகொள்ளப்படும் விதம் பின்வருமாறு:— ஒரு பாஸ்டரோற்றைச் சேர்ந்த பரி: நற்கருணைக்

காரர் அல்லது பாஸ்டரேற்று கமிற்றி ஒவ்வோர் பிரதிநிதியைத் தெரிந்துகொள்ளுவார்கள். மேலும், சர்க்கிள் அல்லது டிஸ்டிரிக்டு கமிற்றி ஒவ்வொன்றும் ஒவ்வோர் பிரதிநிதி தெரிந்துகொள்ளும். அன்றியும், இக்கவுண்சலுக்கு மெம்பர்களாயிருக்கும்படி, பட்டம்பெறுத மற்றவர்களையும் அழைத்துக்கொள்ள அத்தியகூரவர்களுக்கு அதிகாரமுண்டு.

ஓர் டையோசீஸன் கான்பொரன்ஸ் அல்லது கவுண்சல் செய்யும் வேலையென்ன? சில காலமாக, இக்கேள்விக்கு என்ன உத்தரவு சொல்வது என்பது எனக்கு ஓர் கடினமான காரியமாகத் தோன்றிற்று. நமது அத்தியகூடினத்தில் எஸ். பி. ஜி. கவுண்சலும், சி. எம். எஸ். கவுண்சலுமிருக்கின்றன. அவைகள் அநேக விஷயங்களை ஆலோசித்து முடிக்கின்றன. என்றாலும், எஸ். பி. ஜி. மிஷனுக்கும் சி. எம். எஸ். மிஷனுக்கும் பொதுவான விஷயங்களைப் பேசி ஆலோசித்து ஒழுங்குபடுத்திக்கொள்ளுவதற்கு இரு மிஷனிலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகள் அமைந்த ஓர் சிறு கவுண்சல் அவசியம். ஏனெனில் நமது அத்தியகூடினத்தின் பொது விஷயமாய் ஏதாமொரு காரியத்தில் நான் தற்சமயம் ஆலோசனை பெறவேண்டுமானால், முதலாவது அவ்விஷயத்தை நான் சி. எம். எஸ். ஆலோசனைச் சங்கத்துக்குக் கொண்டுபோகவேண்டியதிருக்கிறது. அப்பால், எஸ். பி. ஜி. சென்சல் கவுண்சலுக்குக் கொண்டுபோகவேண்டியதிருக்கிறது. ஆலோசனை பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் பொதுக் கூட்டத்தார் இல்லை. ஓர் சிறு கவுண்சல் இக்காரியத்திற்குப் போதுமானதே. என்றாலும், இப்போதிருக்கும் எஸ். பி. ஜி., சி. எம். எஸ். கவுண்சல்கள் இரண்டிலிமிருந்து தெரிந்துகொள்ளும் பிரதிநிதிகள் அமைந்த ஒரு கவுண்சல் போதுமென்று நினைத்து, சங்கை மகாகனம் கல்குத்தா மெத்திராணியாருக்கு எழுதிக் கேட்டேன். அவர்களோ: குருமார் யாவரும் 'லே' மெம்பர்களில் ஓர் தொகையும் உங்கள் டையோசீஸன் கவுண்சலில் அங்கங்களாக இல்லாவிட்டால், மற்ற டையோசீஸன் கவுண்சல்கள் உங்கள் டையோசீஸன் கவுண்சலை ஒப்புக்கொள்ளமாட்டாது; உங்கள் பிரதிநிதிகளும் நீங்களும் எங்களோடு 'புரோவின்ஷல்' கவுண்சலில் உட்காரமுடியாது என்று எழுதியிருக்கிறார்கள்.

ஆகையால் நமக்கு வேறே போக்கு இல்லை. மெத்திராணியாரவர்கள் ஆஞ்ஞாபிக்கும் 'டையோசீஸன்' கவுண்சல் நமக்கு இருக்கவேண்டும். இக்கக் கவுண்சல் அடிக்கடி கூடுவது சாத்தியப்படாது. ஆனால், கவுண்சல் செய்யும்படி விரும்பும் ஊழியங்களை நிறைவேற்றுவதற்கு ஓர் நிலையான காரியகர்த்தா சபையை அது நியமஞ்செய்துவிடும். இதுதான் காரியம். 'டையோசீஸன்' கவுண்சல்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை பேசி ஆலோசித்து, அவைகளை நாம் வைத்துக்கொள்ளுகிறதா அல்லது மாற்றும்படி முயலவேண்டுமோ என்று தீர்மானிக்கவேண்டியதிருக்கிறது. தவிரவும், புரோவின்ஷல் கவுண்சலுக்கு பிரதிநிதிகளைத் தெரிந்து அனுப்பவேண்டும். எதாவது விஷயத்தைப் பற்றி அத்தியகூடினம் மொத்தமாக ஆலோசித்துத் தீர்மானிக்கவேண்டியபொழுது, நமது சி. எம். எஸ்., எஸ். பி. ஜி. கவுண்சல்களை ஒன்றுக இணைக்கும் ஒரு மத்திய ஆலோசனை கவுண்சல் போன்ற நல்ல 'எக்ஸ கியூட்டிவ்' கமிற்றி ஏற்படுத்தக்கூடியதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

'லே' அங்கங்கள் தெரிந்துகொள்ளும் விஷயத்தைப்பற்றி குருமாருக்கு எழுதியிருக்கிறோம். மற்றக் காரியங்களை இப்பொழுது இங்கே எழுதாமல், நிறுத்திவிடுகிறோம். இந்த மிகவும் முக்கியமான விஷயங்களில் கர்த்தருடைய ஆவியானவர் நம்மை நடத்தும்படி ஜெபித்துவா உங்களெல்லாரையும் சேட்டுக் கொள்ளுகிறோம்.

மரணம்.

எஸ். பி. ஜி. சேகரங்களில் வெகு வருஷங்களாய் நல்ல ஊழியம்செய்து, கடைசியாக கிறிஸ்தியாநகரம் முதலூர் இச்சேகரங்களின் ஸ்தலகுருவாகப் பணிவிடைசெய்துவந்த கனம J. N பெரியநாயகம் ஐயரவர்கள் நாளது வருஷம் மேமீ கர்த்தருடைய ராஜ்யத்துக்குட்பட்டார்கள். தக்கத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்திற்குக் கர்த்தர் ஆறுதல ளிப்பாராக.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

மேடுதப்பல்லி பாஸ்டரேட்டு.

சபை. இதை முந்தின வருஷத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அற்ப சொற்ப ஏற்றம், தாழ்வைப் பார்க்கலாம். இது, கிறிஸ்தவர்களாக வந்தவுடன் அவர்கள் மத்தியில் அவர்களைப் பாதுகாக்கும் ஊழியரில்லாமற் போவது ஒரு காரணமாகும்.

பள்ளிக்கூடம். இரு இடங்கள்தவிர, மற்ற இடங்களில் நன்றாயிருக்கிறது. ஒரு கிராமத்தில் 6 வாலிபர் வாசிக்கப்படித்து, சிறுவர் கூட்டத்தில் சேர்ந்து, வேதாகமம் வாசித்து வருகிறார்கள். நான் போகுங்காலத்தில், தங்கள் 6 வேதாகமங்களுடன் கூட்டத்திற்கு இவர்கள் வருவது இந்த இடத்திற்கு முக்கிய விஷயமே. இவர்கள் மிகவும் ஏழைகள். தங்களுக்கு மாசம் முழுதும் கிடைக்கும் சம்பளம், இத்தேச நாணயத்தின் படி 2 ஆலி ரூபாய். நமக்கு ரூ. 1—12 அணு வாகும். இச்சம்பளம் வயிற்றிற்குக்காணுமல், தங்கள் எஜமான்களிடம் வருஷத்திற்கு 15 ரூ முதல் 24 வரை கடன்பட்டு, ஓயாதகடின வேலையால் சுயாதீனமின்றி, இரவு வந்து, திரும்பத் தங்கள் வேலைகளுக்குப் போகுமுன் வாசிக்கிறார்கள். ஜெபத்திற்கும் அச்சமயமிருந்துபோவார்கள். அவ்வூர் பிள்ளைகளும் அற்ப சொற்ப வேலைக்கு கூலிக்குப்போவதால், அவர்களும் இரவுதான் படிக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஊர்விட்டுஸ்தோத்திரப்பண்டிகை, நிடப்படுத்தல் முதலிய கூட்டங்களுக்கு வரக்கூடாத ஸ்திதியிலிருக்கிறார்கள். இது மிகவும் பரிதாபமான காரியம். இவர்களை விடுதலை செய்கிறது யார்?

முலக் தாலுகாவில் தெலுங்குநாட்டார் புதிதாய் ஆரம்பித்திருக்கும் மிஷனெரி ஊழியத்திற்கு ஜனங்கள் முந்தின வருஷத்தைவிட தங்கள் வறுமையிலிருந்து காணிக்கை கொடுக்க ஆரம்பித்திருப்பதும் முக்கிய விஷயம். எங்கெங்கே மிஷனெரிக்கூட்டம் வைக்கப்படுகிறதோ அங்கே ஜெபமும் காணிக்கையும் கொடுக்கிறார்கள். ஓர் கிறிஸ்தவன் முதல் முதல் மீன் பிடிக்கப்போகையில், இன்று பிடிக்கும் மீன்கள் முலக் தாலுவுக்கு என்று பிடிக்கப்போய், ஒரே ஒரு பெரிய மீன் மாத்திரம் கிடைத்தது. அதைக்காணிக்கையாகக் கொடுத்தான். இதுமுதல் முலக்தாலுகாவிலும், மனிதர்கள் சுவிசேஷ வலையில் படுவார்கள் என்பதற்கு இது அடையாளமாகும் எனநெண்ணப்பட்டது.

சபைகளில் ஜனங்கள் கள்க்குடி முதலிய வற்றை விட்டு வருகிறார்கள். குடி, ஒய்வுநாள் மீறுதல் பெரிய கஷ்டம் என்பதையும் உணர்ந்துவருகிறார்கள். வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் முலக்தாலுகா முதலிய சுவிசேஷ முயற்சிக்கூட்டமும், மாசத்தில் 2 தடவை மதுவிலக்குச்சங்கக் கூட்டமும், பிள்ளைகள் கூட்டமும் வைக்கப்பட்டுவருகிறது.

கிறிஸ்தவ கிராமங்களின் பக்கத்து மூன்று மைலுக்குட்பட்ட இதர கிராமங்களில் தேவ ஊழியராலும் சபையாராலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டும் வருகிறது.

தேவ ஊழியர், சபையாரின் பக்திவிர்த்திக்காக வருஷந்தோறும் கும்மாமேட்டில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்களால் நடத்தப்பட்டுவரும் ஆவிக்குரிய கூட்டங்களால் அதிக நன்மைகள் உண்டாவதோடு, சபையார் வேத அறிவில் தேறும்படி 'கிராம சபையாருக்கு வேதபாடங்கள்' என்ற தலைப்புள்ள ஒரு மாதாந்தப் பத்திரிகை வருஷமுழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றத் திருநாட்களிலும் உபயோகிக்கச் செய்திருக்கும் ஏற்பாடு இச்சொற்பகாலத்திற்குள்ளாக சபைக்குள் வேத அறிவை விர்த்தியாக்கியிருக்கிறதென்பது இவ்வருஷத்திய முக்கிய சம்பவம்.

மேடுதப்பல்லியில் வழக்கம்போல் தவச உற்சவம் நடந்தேறினது. முந்தின வருஷத்தைவிட ஜனங்கள் அதிகமாகக்கூடி, காணிக்கை உற்சாகமாகக் கொடுத்தார்கள். கடந்த வருஷக் காணிக்கை ரூ 31. இந்த முறை ரூ. 52 ஸில் வானம்.

சபைகளில் காணப்படும் ஏற்றத்தாழ்ச்சிகளையும், குறைகள், பலவீனங்களையும் நம் பரமபிதா மன்னித்து, தமது ஆசீர்வாதத்தை நாளது வருஷத்தில் சம்பூரணமாய் ஊற்றும்படி கருத்தாய் ஜெபிப்போமாக.

D. தேவசகாயம்.

அஞ்ஞான விவாகங்கள்.

சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டிலே சமீபகாலத்தில் முக்கியமான விஷயமொன்றுக்குத் தீர்மானம் சொல்லப்பட்டது. சர்க்காரர் நிர்வகித்திருக்கும் இந்திய கிறிஸ்தவ கலியாண சட்டம்: மாப்பிள்ளை பெண்களில் ஒருவர் அல்லது இருவரும் கிறிஸ்தவர்களாயிருக்கையில், சட்டப்படி அதிகாரம் பெறுத எவராவது அப்படிப்பட்டவர்களுக்கு விவாகம் நடத்தினால், அவர் பத்து வீருஷப் சிறையில் வைக்கப்படுவார், அல்லது ஏழு வருஷத்துக்குக் குறையாமல் பத்து வருஷத்துக்கு மேற்படாமல் தீவாந்தரம் அனுப்பப்படுவார்.

இவ்விதமான கலியாணத்தை நடத்தக் கூடாதென்ற சட்டம். கிறிஸ்தவர்களுக்குத்தான் செல்லுமென்றும், அவர்களிலும், குருமார், அதிகாரம்பெற்ற ரிஜிஸ்திராரர் தவிர வேறெந்தக்கிறிஸ்தவனும் நடத்தினால் மாத்திரம் அவன் அவ்விதமான தண்டனையடைவானென்றும் சாதாரணமாய் எண்ணிக்கொள்ளப்பட்டது. ஆனால் அந்தச்சட்டம் எவரையும் கட்டுப்படுத்துமென்று ஹைக்கோர்ட்டார் தீர்த்திருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ மாப்பிள்ளைக்கும் இந்து பெண்ணுக்கும் இந்து முறைமைப்படி ஒரு இந்து, விவாகம் நடத்தினதாக ஒரு வழக்கு விசாரணைக்கு வந்ததில், அவன் காவலிலடைக்கப்பட பாத்திரனென்று பைசலானது. அப்படியே அவன் காவலிலடைக்கப்பட்டான்.

கிறிஸ்தவர்களுக்கும் புறமதஸ்தருக்கும் இந்து முறைமைப்படி நடத்தப்படும் விவாகங்கள் நம் நாட்டில் சகஜம். ஆகையால் இப்பேர்ப்பட்ட விவாகங்களை நடத்துகிற எவரும் கடுந்தண்டனைக் காளாவாரென்று ஒவ்வொருவருக்கும் தெரிந்திருப்பது நலம். கிறிஸ்தவர்கள் விஷயமாய் அவ்வித கலியாணங்கள் ஒப்புக்கொள்ளப்படாமற் போகிறதுமன்றி, சட்டத்துக்கு விரோதமான குற்றமுமாகிறது. அதோடே கடுந்தண்டனையை வருவிக்கக்கூடியதுமாயிருக்கிறது.

எஸ். பி. ஜி. கவுண்சல் நட்படிகள்.

மார்ச்சுமீ 7உ, 1917.

1. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் உபந்நியாசம். கவுண்சலின் புதுச் சட்டங்கள் ஊர்ஜிதத்திற்கு வந்து சுமார் ஆறுமாசமாகிறது. காணப்படும் தேற்சி திர்ப்திகரமானதென்றே சொல்லவேண்டும். திருச்சபையின் ஊழியத்தின் உத்திரவாதத்தை யுணர்ந்து, மெய்யான தாபத்தம் அநேக விஷயங்களில் காணப்படுகிறது நன்றியறிதலான விஷயமே. சுவிசேஷ பிரபல்லிய விஷயத்திலும், சபைகள் அதிக அக்கரை எடுத்து வருவதாக அறிகிறோம் இவ்வளவு போதுமென்று இருந்துவிடலாகாது. சபைகளில் காணப்படும் எவ்வித வருத்தமும் குறைவும் சுவிசேஷ பிரபல்லிய முயற்சியினால் நீங்கி விடுமென்பது நிண்ணம். ஆகையினால், சுவிசேஷப் பிரசங்க வேலையை உற்சாகமாக நடத்துவது ஒவ்வொரு மெம்பர்மேலேயும் விழுந்த கடமையே. கவுண்சிலரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிற சில காரியங்கள் உண்டு. குருமார் மாற்றுதல் தங்களை யத்தனை சிலர் நினைக்கிறார்கள். காரியம் அப்படியல்ல. இது அத்தியக்ஷரவர்களுடைய கடமைகளில் ஒன்றாகும். மெய்தான், அத்தியக்ஷரவர்கள் தங்களுடைய 'அட்வைசரி' கவுண்சிலாரிடம் ஆலோசித்து, குருமாரை மாற்றுகிறார்கள். இதுநிற்க. தாய்ச் சங்கத்தாருக்கு இப்போது கேர்ந்திருக்கும் பெரிய பணக்கஷ்டத்தில் உதவிபுரியும்படி ஜனங்கள் பல சேகரங்களில் பெரிதும் சிறிதுமான நன்கொடையளித்திருப்பது நன்றியறிதலான விஷயமே. சில சேகரங்கள் நாளது வருஷத்தில் செல்லும் செலவிற்கு எதாவது பணம் மிகையிலிருந்து வாங்கமாட்டோமென்று உற்சாகமாய்ச்சொல்லியிருக்கிறார்கள். இது ஓர் சந்தோஷகரமான காரியமல்லவா?

2. தேவஊழியர் சம்பளம். தற்கால அவசியங்களுக்கு ஏற்க, உபாத்திமார் உபதேசிமார் சம்பளதாரிப்பு உயர்த்தப்பட்டது. பினாமெரிபாசாகி போதஞசக்தியடைத்தவருக்கு 8 ரூபாய்முதல் 15 ரூபாய்வரையும், லோயர் செக்கெண்டெரி போதஞ சக்தி நிறமை

யையடைந்தவர் 11 ரூபாய்முதல் 20 ரூபாய் வரையும், ஸ்கூல் பைனல் பரீட்சைக்குப் போய் தவறினவர்களுக்கு 16 ரூபாய்முதல் 30 ரூபாய் வரை மாதச் சம்பளம் கொடுக்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. தவிரவும், ஐந்தாம்படிமுதல் ஏழாம்படிவரை எலிமென்றரி ஸ்கூலிலும், முதலாம் பாரமுதல் மூன்றும் பாரம் முடிய செக்கண்டரி பாடசாலைகளிலும் மிஷன் ஊழியருடைய பிள்ளைகளின் போர்டிங் கல்வி பீஸில் அரைப்பீஸ் கல்நடக்கையுள்ள பிள்ளைகளுக்குக் கொடுக்கும்படியாகவும் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட மூன்று வகுப்புகளிலும் ஒரு பையன் ஒரு தடவைமாத்திரம் புரோமோஷன் வாங்காமல் இருக்கலாம். இருதடவை தவறினால் ஸ்காலஷிப் நின்றுபோம்

3. பென்ஷன். முப்பது வருஷம் உண்மையாயுழைத்தவர்களுக்குக் கூடாசியாக வர்ங்கின சம்பளத்தில் பாதியும், இருபது வருஷம் உழைத்தவர்களுக்கு மூன்றிலொரு பென்ஷனும் கொடுக்கும்படித் தீர்மானிக்கப்பட்டது. இருபது வருஷத்துக்குள்ளாக வியாதியிலாவது வேலைபார்க்க முடைப்படுகிறவர்கள் சாரியாக கவுன்சலால் பிரத்தியேகமாகக் கவனிக்கப்படும்.

4. தருப்பட்டம். மெற்றிக்குலேசன் பரீட்சை பாஸ்பண்ணுதவர்களையும் இளிமேல் குருப்பட்டத்திற்குத் தெரிந்துகொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களில் திறமையுள்ளவர்களை அடுத்த கவுன்சலுக்குச் சிபார்சுசெய்யும்படி டிஸ்றிக்டு கவுன்சலார் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

5. தசமபாகம். தசமபாகம்கொடுப்பது நியாயமும் அவசியமுமான காரியமாயிருப்பதுமன்றி, தேவ வசனத்திற்கும் ஏற்றது. என்றாலும், கட்டாயமாக மிஷன் ஊழியரிடமிருந்து தசமபாகம் வசூல்செய்வது ஆகூபமான முறையென்று பேசப்பட்டது. இது விஷயமான தீர்மானம் டிஸ்றிக்டு கவுன்சல்களின் அபிப்பிராயத்தையறிந்து அடுத்த முறை பேசப்படும்.

பிஷப்பவர்களின் சுற்றுப்பிரயாணம்.

பெப்: 8உ.—தட்டப்பாறை வழியாய்ப் புதியம்புத்தூருக்குப் போனேம். ஆண்களும் பெண்களுமாக 63 பேர் திடப்படுத்தல் பெற்றார்கள். பழைய கோவிலிருந்த இடத்தில் புதிதாக எழும்பும் கட்டடத்திற்குச் சில மாதங்களுக்குமுன் அஸ்திபாரம்போட்டேன். இந்தக் கட்டட வேலை நன்றாய் நடந்தேறி வருகிறதைப் பார்த்து அதிகச் சந்தோஷப்பட்டேன்.

பெப்: 9உ.—ஆராதனை முடிந்ததும் பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு, அதன்பின் மேலச்சேய்த்தலைக்குப்போக மோட்டார்காரைக் கிளைறினேம் வழியில் ஒட்டப்பிடாரத்திலுள்ள பள்ளிக்கூடத்தைச் சந்தித்தேன். மேலச் சேய்த்தலையில் பிரதான மஸ்தாவின் பாத்தியதையையிட்டு நெடுங்காலமிருந்து வருகிற மனஸ்தாபம், வியாச்சியமுதலிய கஷ்டங்களினால் ஜனங்கள் தரித்திரப்பட்டுப்போயிருக்கிறார்கள். எதேனும் ராஜி பேசிமுடிக்க எதுவில்லாதிருப்பதும் பரிதாபமே. உத்தேசம் 60 பேருக்குத் திடப்பமத்தல் கொடுத்துவிட்டு மோட்டார் சைக்கிளேறி தூத்துக்குடிக்கு விரைந்துசென்றோம்.

பெப்: 10உ.—தூத்துக்குடிக்குத் தென்மேற்கேயிருக்கும் அத்திமரப்பட்டிக்குப் போகும்படி அதிகாலையிலே புறப்பட்டோம். கடல் ஏற்றமாகுமுன்னமே ஆற்றைக் கடக்க வேண்டியதாயிற்று. அவ்விடத்தில் ஒரு கோவில் பிரதிஷ்டை ஒழுங்குபண்ணியிருந்தது. அதைக் கட்டிமுடிப்பதற்கு கால்டுவெல் காலேஜ் இரண்டாவது உபாத்தியாயராகிய கனம் தங்கசாமி என்பவர் அதிகமாய் உதவி செய்திருக்கிறார். ஆகையால் மை கல்விச்சாலை மாணவரில் அநேகர் எங்களுடன் வந்து கஷ்டமான இடங்களில் எங்களுக்கு உதவி செய்தார்கள். ஊரார்எங்களை அன்பாய்வற்றுக் கொண்டார்கள். ஆலயப் பிரதிஷ்டை நடந்தபின்னர், நற்கருணை பரிமாறப்பட்டது. பிற்பகலில் கடல்வற்றுமட்டும் நாங்கள் ஆற்றைக் கடக்கமுடியாதெனக் கண்டோம். ஆகையால் நாலு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு, எவ்வளவோ பிந்திப் புறப்பட்டும், ஆற்றங்கரையில் ஒரு மணிநேரம்காத்திருக்க நேர்ந்தது. அதினிமித்தம் தூத்துக்குடிக்கு அதிக நேரஞ்சென்று திரும்பியதால் நான் நினைத்திருந்தபடி பல இடங்களையும் சந்திக்க முடியவில்லை.

பெப்: 11உ.—காலையில் சண்முகபுரம் என்ற இடத்துக்குப் போனேன். அங்கே ஆலயத்தைப் பெரிதாகக் கட்டியிருக்கிறார்கள். நற்கருணைத் திருமேனையைப் பிரதிஷ்டை செய்து திருவிருந்து பரிமாறினேன். அப்புறம் 9½-மணிக்கு பரி. பேற்றாரிக் ஆலயத்து புதிய மணிக்கோபுர மாடத்தைப் பிரதிஷ்டை செய்து, காலை ஆராதனையில் பிரசங்கம் செய்தேன். 2-மணிக்கு 83 பேரைப் பரீக்ஷித்து திடப்படுத்தினேன் மாலையில் பழைய டச் சுக்காரர் கோவிலில் பிரசங்கம்செய்தேன்.

பெப். 12உ.—குலையன்கரிசலுக்குப் போய், அங்கே ஜனங்கள் புதிதாய்க் கட்டுகிற ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டேன். அவர்கள் ஒரு புதுக்கோவிலைக் கட்ட எத்தனிக்கும்போதெல்லாம் இடத்தின் விஷயமாய் அல்லது கட்டுமான விஷயமாய் ஏதாவது தொந்தரவு உண்டாகியே வந்திருந்தும், அவர்கள் விடாமுயற்சியாய் தங்கள் நோக்கத்தை முடித்துக்கொண்டதாய்த் தெரியவருகிறது. அதன்பின் நான் புதுக்கோட்டைக்குத் திரும்பி, அங்கே 103 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தேன். சந்திப்பு முடிந்ததும் தூத்துக்குடிக்குத் திரும்பினேம்.

பெப்: 13உ.—அதிகாலையிலே ரெயிலேறி, தட்டப்பாறை வழியாய் கைலாசபுரம் சேர்ந்தோம். இந்த இடத்துக்கு இப்போதான் முதல் தடவையாகப் போனேன். அவ்விடத்து செழிப்பு மனதுக்கு இன்பம் விளைவித்தது. வாலிப கிறிஸ்தவ சங்கத்து கட்டடத்தில் தங்கியிருந்தேன். இது மிகவும் நன்றாய்க் கட்டப்பட்டிருக்கிறது. 35 பேரைப் பரீக்ஷித்து திடப்படுத்தினேன்.

அப்புறம் பாண்டியபுரம் போகப் புறப்பட்டோம். அங்கே அநேகர் ஞானஸ்நானம் பெறக் காத்துக்கொண்டிருந்தார்கள். 30 பேருக்கு ஒரு பந்தலிலே ஞானஸ்நானம் கொடுத்தபின், ஆலயம் கட்டுவதற்காக ஒரு இடம் பார்த்தோம். அவ்விடத்து ஜனங்கள்பேரில் கனம் தேவசகாயம் நாடார் அதிகக் கரிசனையுள்ளவர்களொன்றறிந்து, அதுவிஷயத்தில் ஜனங்களுக்கு ஆலோசனை சொல்லும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

பாளையங்கோட்டைக்குத் திரும்பி சில நாட்கள் பின்னிட்டபின், திருச்செந்தூர்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜில் பரிசளிக்கும் கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்கும்படி சென்றேன். நமதுடைய வாலிபரில் அநேகர் அந்தக் காலேஜுக்குப் போய் கல்விகற்றுவருவதால், அக்கல்லூரியைப் பார்க்க மிகவும் ஆசைப்பட்டேன். புத்தூரில் வைஸ்-பிரின்சிபல் காம்பவுண்டுக்குள் கிறிஸ்தவர்களுக்கென்று சட்டப்படும் ஆஸ்றல் கட்டடவேலை கிட்டத்தட்ட முடிவாகிறது மாணவருக்கு பரிசு அளிக்கும் சம்பவம் மிக நேர்த்தியாய் நடைபெற்றது. மாணவரில் பலர் தாங்கள் பெற்ற இனாமை யுத்தநிதிக்காக நன்கொடையளித்துவிட்டு, சர்ட்டிபிக்கேற்று மாத்திரம் பெற்றுக்கொண்டார்கள்.

பெப்ருவரி 18உ ஓய்வுநாள் அதிகாலையில் சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் பரி. நற்கருணை பரிமாறி, பின்னர் காலை ஆராதனையில் பிரசங்கம் செய்தேன். பிற்பகலில், 'ஜெம்ஸ்' என்னும் புருஷர் ஐக்கியத்தில் உபந்நியாசம் செய்து, சாயந்திரம் பட்டாளத்து ஆலயத்தில் பதினெரு பிள்ளைகளைத் திடப்படுத்தினேன்.

அடுத்தவாரம் டக்கரம்மாள்புரத்தில் சுவிசேஷப் பிரசங்கிகள் பக்திவிருத்தி கூட்டம் நடந்தது. அதே நாட்களில் அவர்களுக்குப் பிரசங்கம் செய்வதற்காக அங்குபோய் வந்தேன். சி. எம் எஸ். பிரசங்கிமாரோடு எஸ். பி. ஜி சுவிசேஷப் பிரசங்கக் கூட்டத்தாயும் பார்த்தது எனக்கு மெத்தப் பிரீதியாயிருந்தது.

பெப்ருவரி 25உ புதிதாக அமைத்திருக்கும் கோயில்பட்டி சர்க்கிளின் முதல் தவச உற்சவத்திற்காகக் கோவில்பட்டிக்குச் சென்றோம். எதிர்பார்த்தபடி, ஜனங்கள் அவ்வளவு திரளாய் வரவில்லை. ஆனால், நல்ல தொகையான ஜனங்கள் வந்திருந்தார்கள். காணிக்கை திருப்திகரமாயிருந்தது. இந்த நல்ல ஆரம்பம் நன்றியறிதலான விஷயமே.

மார்ச்சுமீ 1உ சர்க்கிள் கமிற்றி கூட்டம் ஒன்றும் மற்றக் கூட்டங்களுடன் நடந்தது. அநேக சபை மெம்பர்கள் சுவிசேஷ பிரபல்யம், சுய ஆதரவு முதலிய விஷயங்களின்பேரில் பேசினார்கள். சபையின் முக்கியஸ்தரான இவர்கள் சபை விஷயமாய் இவ்வளவு வாஞ்சையும் அக்கறையும் காட்டினது எனக்கு மிகவும் சந்தோஷகரமாயிருந்தது. இக்கூட்டத்தினால் அநேகர் பிரயோசனம் அடைந்தார்கள் என்று நம்ப இடமுண்டு. சாயங்காலம் 25ஜனங்கள் பரி. ஞானஸ்நானத்தினால் திருச்சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

மார்ச்சுமீ 6உ கனம் மூர் ஐயரவர்களுடன் நாசரேத்துக்கு 'துவி சக்கர குட்சவண்டி'யில் அதிகாலை புறப்பட்டுப்போனேன். ஐயரவர்கள் சாத்தான் குளத்திற்குப் போனார்கள். நான் நாசரேத்தில் தாமதித்தேன். பிற்பகலில் ஒரு 'அட்வைசரி கவுன்சல்' கூட்டம் நடந்தது. மறுநாள் திருநெல்வேலி மதுரை சென்றால் கவுன்சல் கூட்டம் வைக்கப்பட்டது. இக்கூட்டம் மிகவும் நன்றாய் நடந்தேறினது. பரி. நற்கருணை ஆராதனையில் பிரசங்கம் செய்தேன். அதன்பின், பகல் முழுவதும் கூட்டம் நடந்தது. மிஷன் ஊழியருடைய புது சம்பளத் தாரிப்பும் மற்றும் விஷயங்களும் தீர்மானிக்கப்பட்டது. பட்டம் பெறாத சபை மெம்பர்கள் கவுன்சல் கூட்டத்தில் பேசின விதமும் அவர்கள் காட்டின உற்காகமும் ஓர் புது மிஷனெரியினுடைய மனதில் மிகவும் நல்ல எண்ணம் உண்டாக்கிற்று என்று அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டேன். இங்கிலாந்திலிருந்து அவர் அப்போதுதான் இந்தியாவுக்கு வந்திருந்தால், இக்கூட்டத்தை சீமையில் நடக்கும் கூட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

மார்ச்சுமீ 8உ வியாழனில் 'டையோசிஷன் ஸ்காலஷிப்' கமிற்றிமாரின் முதல் கூட்டம் நடந்தது. அப்பால், நானும் கனம் மூர் ஐயரவர்களும் பாளையங்கோட்டைக்குத் திரும்பினோம்.

மார்ச்சுமீ 12உ திங்களில் ஆள்வாநேரிக்குப்போய், வழியில் கொங்கந்தான்பாறை, புதுக்குளம் சபைகளைச் சந்தித்தோம். மறுநாள் பரி. நற்கருணை பரிமாறினபின், 120 பேரைப் பரீட்சித்துத் திடப்படுத்தினேன். பிற்பகலில், மருதகுளத்துக்குப் புறப்பட்டுப் போகும் பாதையில் கோவைகுளம் சபையைப் பார்த்தேன். ஜனங்கள் இங்கே ஒரு புது ஆலயம் கட்டுகிறார்கள். அப்பால, மருதகுளத்தில் 77 பேரைப் பரீட்சித்துத்திடப்படுத்தல் கொடுத்தேன். மறுநாள் புதன் தவச உற்சவம் நடக்கிறது. சரியான காலத்தில் உற்சவம் வைக்கப்படாததால், வழக்கம்போல் அவ்வளவு ஏராளமான ஜனங்கள் வரவில்லை.

பிற்பகலில், டோனாவூருக்குப் புறப்பட்டுப்போய், குறித்தநேரத்திற்குமுன் அங்கு போய்ச் சேர்ந்துவிட்டோம். இது எங்களை விமசரிசையாய் உபசரிக்கும்படி ஒழுங்குகள் செய்திருந்த அன்புள்ள ஜனங்களுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது.

மார்ச்சுமீ 15உ பள்ளிக்கூடத்தைச் சுற்றிப்பார்த்தேன். சிலநாள்களுக்குமுன் பிள்ளைகளின் படுக்கைஅறை அக்கினிக்கு இரையாகிவிட்டது. எப்படி நெருப்புப்பற்றினது என்பது பரமரகசியமே. நான் போயிருந்த அதேநாளில் பையன்களின் சமையல் அறையில் தீப்பிடித்துவிட்டது. இரண்டொரு நாளைக்குப்பின் எர்வாடியிலுள்ள சர்க்கார்பள்ளிக்கூடமும் அக்கினிவாதைக்குள்ளானது. இவ்விடங்களில் நெருப்புப்பற்றினதற்குக் காரணம் தலங்கவில்லை. 'பாஸ்பரஸ்' என்றும் அக்கினி வஸ்து உபயோகிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது பொது அபிப்பிராயம். நெருப்பு எரிந்து முடிந்தபின், நான் 63 பிள்ளைகளைப் பரீட்சித்துத் திடப்படுத்தினேன்.

மார்ச்சுமீ 16உ சின்னம்மாள்புரத்திற்குப்போய், 27 பேரைப் பரீட்சித்துத் திடப்படுத்தினேன்.

மார்ச்சுமீ 17உ சனி. அதிகாலையில் பேர்ப்பிலான்குளத்திற்குப் புறப்பட்டு, கிட்டத்தட்ட முடிவாயிருக்கும் நாசரேத் ஆலயத்தை வழியில் பார்வையிட்டேன். பரி. இராப்போஜன அறையில் இரண்டொரு சன்னல்கள் வைக்கும்படி ஜனங்களை வசப்படுத்தினேன். இந்த அறையில் ஆகாயமும் வெளிச்சமும் சரியான பிரகாரம் இல்லாவிட்டால்,

நமது வருஷாந்தக் கூட்டம்.

கிருபை கிறைந்த கடவுளின் கிருபையால், இக்கூட்டம் நாளதுவருஷம் ஜூலைமீ 12உ மாலை 6 மணிக்கு நூற்றுண்டு சபா மண்டபத்தில் நடைபெற்றது. குருமார், சபையார், பிள்ளைகளாக சுமார் மூவாயிரம் பேர் கூடி வந்திருந்தார்கள். 39-ம் சுவிசேஷ கீதம் பாடப்பட்டபின், கனம் V. J. டேயர் ஐயாவர்கள் 72-ம் சங்கீதத்தை வாசித்து, மிக ஊக்கமாய் ஜெபித்தார்கள். அதன்பின், 'தும்புதும்பலாய் போதனையடைதல்' என்ற பொருளின்பேரில் சங்கத்தின் பிரமுகரென்றவர்கள் எழுதிய கிருபம் வாசிக்கப்பட்டது.

அப்பால், தெலுங்குநாட்டிற்கு அனுப்பப்படும் நமது புது மிஷனெரியாகிய கனம். ஜாண் சாமுவேல் அவர்களுக்குப் பயணோபசார வாழ்த்துதலும் ஆலோசனையுமடங்கிய கிருபம் ஒன்றை கனம். M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் வாசித்தார்கள். நமது ஜில்லா ஆலோசனை சங்க முதலாளியாகிய கனம் E. A. L. மூர் ஐயரவர்கள், அனுப்பப்படும் புதிய மிஷனெரிக்காகவும் அவர்கள் செய்யப்போகிற புதிய ஊழியத்திற்காகவும் மிக அனலுடன் ஜெபித்தார்கள். பின்பு, பாளையங்கோட்டை பரி திரித்துவ ஆலய பாடகர் தாங்கள் ஆயத்தம் செய்திருந்த ஓர் அருமையான இங்கிலிஷ் பாடலொன்றை ('With the sweet word of peace') மகா பயபக்தியோடும் கேட்போருக்கு இன்பமாகவும் பாடினார்கள். பின்னர், விருதுபட்டி கனம். K. T. அருமை நாயகம் ஐயரவர்கள் சங்கத்தின் வருஷாந்தர அறிக்கையை மிகத் தெளிவாய் யாவருக்கும் கேட்கும்படி வாசித்தார்கள்.

அதில், சங்கத்தின் காளது வருஷ வரித்திலும், தெலுங்குச் சபையாரிடம் காணப்படும் சுவிசேஷப் பிரபல்ய வாஞ்சையும், ஊழியரில்லாக் குறைவும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அப்பால், கனம். D. S. தாவீது ஐயரவர்கள் 'தண்ணீர் கலக்கப்படும்போது என்னோடுகூடநில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை' பரி. யோ. 5: 7. என்ற வசனத்தைக்கொண்டு, மிகவும் அருமையாய்ப் பிரசங்கம் செய்தார்கள். பெதஸ்தாக் குளத்தில் படுத்திருந்த 38 வருஷ வியாதியஸ்தன் சகாக்களிடம் சொன்னதுபோல, இந்தியாவின் தென்முனை முதல் வட எல்லை வரையுமுள்ள இந்துதேசத்தார் நம்மைவிட்டு கலக்கப்படும்போது எங்களைக் குளத்தில் கொண்டுபோய விடுகிறதற்கு ஒருவருமில்லை' என்பதாகச் சொல்லுகிறார்கள். சற்காலத்தில் நம் தேசம் நெடுகிலும் பலத்த அசைவு இருக்கிறது. வியாதிக்காரர், அந்தகர், சூம்பின உறுப்புடையோருண்டு; இவர்களுடைய பெரிய முறைபபர்டி: தண்ணீர் கலங்கப்படும்போது, எங்களைக் குளத்தில் கொண்டுபோய் விடுவதற்கு ஆட்கள் இல்லை என்பதே. தெலுங்குநாட்டின் நிலைமையைக் கவனித்தால், அவர்களைப் படிப்பித்து நடத்த ஆட்களில்லை. இயேசுவும் ஆத்துமாக்களும் ஒருவனாயொருவர் சந்திக்கச்செய்ய ஆட்கள் வேண்டும். எப்படிச் சந்திக்கச் செய்யலாம்? இயேசுவைக் கூட்டிக்கொண்டு வியாதியஸ்தனிடம் போவது ஓர் முறை. வியாதிக்காரனை இயேசுவிடம் கொண்டுவருவது மற்றோர் வழி.

1. வியாதிக்காரனை இயேசுவினிடம் சுமந்துவரும் முறை யாது? ஜெபமே. மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலரின் பாவங்களைச் சுமந்துகொண்டுபோய், ஆண்டவர் பாதத்தில் வைத்தார்கள். அப்படியே நாமும் எப்போதும் செய்யவேண்டும்.

2. இயேசு சுவாமியை வியாதியஸ்தனிடம் கொண்டுபோவதெப்படி? சுவிசேஷப் பிரசங்கத்தின் ஊழியத்தின் மூலமாகவே. ஆகையால் சுவிசேஷ ஊழியரை அனுப்பவேண்டும். இன்று அனுப்பும் இந்த ஒரு மிஷனெரி போதாது; இன்னும் எத்தனையோ ஆட்கள் வேண்டும்! தெலுங்குநாட்டார் தங்களுக்குப் போதிப்பதற்கு ஆட்களுக்காகத் தவித்து நிற்கிறார்கள்; இயேசுவண்டை கொண்டுபோகவோ ஆட்களில்லை. ஊழியஞ்செய்ய வாஞ்சையுள்ள அநேகர் நம் நாட்டிலுண்டு: ஆனால் பணம் பெரிய தடையாயிருக்கிறது. 'பணமில்லை', பணம் எப்படி வரும்? சில முறைகளைச் சொல்லுகிறேன்.

(1) ஊழியத்திற்கு பொருள்வேண்டும். மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையைத் தெரிந்துகொள்ளுவோமாக. அத்தினத்தைப் பற்றி சபையாருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நல்ல ஆயத்தமும் செய்யவேண்டும். தட்டாய்ப் போடுவதானால், பெரிய சபைகளில் ரூ. 2, அல்லது சின்னச்சபைகளில் ரூ. 1 மாத்திரம் வரலாம். ஆனால் பொருட்களைக் கொண்டுவர ஏவவேண்டும். நாணயம் கொண்டுவருவது ஜனங்களுக்கு கஷ்டம். தோண்டி ஓலை, கோழிக்குஞ்சி, வற்றல், உள்ளி, கருப்புக்கட்டி, பயிறு, அரிசி முதலிய பொருட்களாய்க் கொண்டுவருவது இலேசு. இப்படிச்செய்தால், காணிக்கையும் ஜாஸ்தியாகும். ஜனங்களும் உற்சாகமாய்க் கொடுப்பார்கள். மூன் சுவிசேஷபுரத்தில் அணு 12 மாத்திரம் காணிக்கையாகச் சேர்ந்தது. இப்போதோ இம்முறையினால் ரூ. 3 சேகரமாகிறது.

(2) தோணிக்கல் அத்தியக்ஷாலயம் கட்டி முடிப்பதற்குப் பணம் தேவை. இவ்வாலயம் கட்ட 20 ஆயிரம் ரூபாய் செல்லும். இதுவரையும் மிஷி வகைக்கு வரவு ரூ. 8 ஆயிரம். இந்த ஆலய விஷயமாயும் ஒரு முறை சொல்லுகிறேன், கேளுங்கள்; மரங்களிலிருக்கிற ஒவ்வொருவரும் ஒருமரம் கொடுக்க வேண்டும். அது பனை, வேம்பு, புளியாயிருக்கலாம், எதானாலும் பாதகமில்லை. பனை இருக்கிற ஒவ்வொருவரும் வீடு ஒன்றுக்கு ஒரு பனை வீதம் கொடுத்தால், சுலபமாய் 12 ஆயிரம் ரூபாயும், அதற்குமேலாகவும் சேர்க்கலாம்.

இவ்விதமாக, கேட்போரைக் கவர்ந்து கொள்ளத்தக்கவிதமாகவும் எழுப்புதலாகவும் பேசினார்கள். அதன்பின் காணிக்கை வாங்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட காணிக்கை சுமார் ரூபாய் 66.

கடைசியாக, நமது அருமை அத்தியக்ஷர்வர்கள் நாம் கடந்த வருஷத்தின் ஊழியத்திற்காக ஆண்டவரை ஸ்தோத்திரிப்பதோடு, நம் முடைய பிரதிகளுக்காகவும் ஜெபிக்கவேண்டுமென்று சொன்னார்கள். மேலும், தேவனுடைய ராஜ்ய விர்த்திக்காகவும் ஆத்திரத்துடன் மன்றுவது நமது கடமையென்று திட்டமாய்க் காட்டி, பாரம்பரை நூலில் அன்று தாங்கள் வாசித்த ஓர் வசனத்தை ஜனங்கள் முன்வைத்து, கேட்போர் மனதில் அவ்வசனம் அனல் மூழும்படி பேசினார்கள். அவ்வசனமாவது: 'என் பக்கத்திலிருக்கிறவன் நெருப்பின் பக்கத்திலிருக்கிறான்; என்னைவிட்டுத் தூரமாயிருக்கிறவன் ராஜ்யத்துக்குத் தூரமாயிருக்கிறான்' என்பதே உலகமுழுவதும் வியாபித்து கிரியை நடப்பித்து வரும் பரிசுத்த ஆவியானவரைக் கவனியுங்கள். நம்தேசத்தில் பெரிய அசைவை அவர் உண்டாக்கியிருக்கிறார். அவரே அந்த அக்கினி. இயேசுவின் பக்கத்திலிருக்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியாகிய நெருப்பு அருளப்படுகிறார். கிறிஸ்துவுக்காக அப்போதே நல்ல ஊழியம் உள்ளக்கனிவுடன் செய்வோம். இயேசுவுக்குத் தூரமாயிருந்தால், ராஜ்யத்துக்குத் தூரமாயிருப்போம் என்பதாக வெகு எழுப்புதலாகப் பேசினார்கள். கனம். Ll. G. S. பிரைஸ் ஐயரவர்கள் ஜெபித்து, மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதங்கூற, கூட்டம் முடிந்தது.

ராஜையா.

பாலிய இரத்தச்சாட்சி.

இங்கிலாந்து தேசத்து ஆறாம் எட்வார்ட் ராஜாவின் காலத்தில் ஒவ்வொரு ஆலயத்திலும் பைபிள் புஸ்தகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவைகளை எவரும் எடுத்துக்கொண்டுபோகாதபடி, அவைகள் சங்கிலியால் மாட்டப்பட்டிருந்தன. வேத வசனம் அக்காலத்தில் அபூர்வமாயும் மிகவும் விலையுயர்ந்ததாயுமிருந்தது. ஆனால் அநேகர் அதின் பேரில் அதிகப் பிரியமாயிருந்தார்கள். கொஞ்சம் படிப்புள்ளவர்கள், அந்தப் புத்தகத்தைப் படிப்பில்லாதவர்களுக்குச் சத்தமிட்டு வாசித்துக்காட்டுவார்கள். இப்படியாக வெளிச்சம் பரம்பத் துவக்குகையில், அந்தகாரம் அதை மூடினது. மேரி ராணி மூடப் பக்தியுள்ள ரோமன்மார்க்கத்தாளாய், இங்கிலாந்தின் சிம்மாசனத்துக்கு வந்தாள். வரவே, அவள் மார்க்கவிஷயமாய் முந்தின ராஜா எற்படுத்தின சட்டங்களை மாற்றினாள். ஆனால் சில

இடங்களில் அவள் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

1455-ம்ஜு வசந்தகாலத்தில் ஒருநாள் உல்லியம் ஹன்றர் என்று பேருள்ள ஒரு பாலியன் கோவிலுக்குள் பிரவேசித்து, அந்த வேதப் புத்தகத்தை வாசித்தான். அந்தப் பாலியன் சத்தியத்துக்கு விரோதமாய்ப் பாவம் செய்வதைவிட அதற்காக உபத்திரவங்களைச் சகிப்பதே உத்தமம் என்று எண்ணினவன். அவன் வேத புஸ்தகத்தை வாசித்து ஜெப சிந்தையாயிருக்கையில், பாப்பு மார்க்க அத்தியக்ஷரிடத்தில் உத்தியோகமாயிருந்த "அத்வல்" என்னும் பிரபுவைக் கண்டான்.

பிள்ளையாண்டான் வணக்கமாய் அத்வலைப் பார்த்து, "தகப்பனே, நான் வேதாகமத்தை விஸ்தரிக்கும்படியாக அல்ல, எனக்குச் சொந்தப் பிரயோஜனமாக வாசிக்கிறேன்" என்றான். அதற்கு அத்வல், "வேதபுத்தகத்தைப்பற்றி உனக்குக் கவையென்ன, உனக்கு வாசிக்கத் தெரியுமா? வேதத்தை விஸ்தரிப்பாயா என்று சொன்னதுமல்லாமல், அந்தப் பரிசுத்த புஸ்தகத்தைப்பற்றி இகழ்ச்சியாகவும் பேசினான். பிள்ளையாண்டான் மரியாதையாய்: ஐயா, அப்படிச் சொல்லவேண்டாம். அது தேவனுடைய புத்தகம், அதால் கிருபையைப் பெற்றவர்கள் தேவனுக்குப் பிரியமுள்ளதையும் பிரியமில்லாததையும் அறிந்து கொள்வார்கள் என்றான்.

அத்வல்: தேவனை வணங்கவேண்டிய வகையைப்பற்றி இப்போதுதானே சரியான படி தெரியும், முன் நமக்குத் தெரியாதா?

பிள்ளையாண்டான்: இப்போது தெரிந்ததுபோல முன் தெரியாது. இந்த அருமையான புத்தகம் முன் நமக்குள் வழங்கினதுபோல இப்போதும் எப்போதும் வழங்கிவந்தால், எத்தனை நன்றாயிருக்கும்!

பிள்ளையாண்டானை வசப்படுத்த எதுவில்லையென்று கண்டு, அத்வல்: நீ ராஜாத்தியின் கட்டளைகளை வெறுக்கிறவர்களில் ஒருவன் என்று எனக்குத் தெரிகிறது. திரும்பாதிருந்தால், மற்றகேக பதிதனைப்போல் நீயும் எரிக்கப்படுவாய்.

பிள்ளையாண்டான்: நான் கர்த்தருடைய வேதத்தை விசுவாசிக்கவும், அவரை அறிக்கையிடவும், அவர் எனக்குக் கிருபைபுரிவாராக.

அத்வல் பிள்ளையாண்டானைப் பார்த்து, "அவரை அறிக்கையிடவா? அல்ல, அல்ல; நீயும் உன்னைச்சேர்ந்தவர்களும் பிசாசண்டைபோவீர்கள்" என்று சொல்லி, கோவிலைவிட்டுப் புறப்பட்டுப்போகையில், வழியில் ஒரு குருவைக் கண்டு, அவனைடே உல்லியம் வாசித்துக்கொண்டிருந்த இடத்துக்கு வந்தான். அந்தக் குரு பிள்ளையாண்டானைக் கடிந்து கொண்டு, பயமுறுத்தினார். உல்லியம் அவன் இன்னது செய்யப்போகிறானென்றறிந்து, தகப்பன் வீட்டுக்குப் போய் வழியனுப்பிக் கொண்டு, பட்டணத்தைவிட்டு ஓடிப்போனான்.

உல்லியம் ஓடிப்போன சில நாட்களுக்குப் பின்பு, ஒரு நியாயாதிபதி அவன் தகப்பனை அழைத்து, உன் மகனை ஒப்புவிக்க வேண்டும்என்க, தகப்பன்: ஐயா, என்மகனைச் சுட்டெரிக்கும்படியாகவா அவனைத் தேடிப் பிடித்துக்கொண்டு நான் வரவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் என்றான். நியாயாதிபதி: பிடித்துக்கொண்டு தான் வரவேண்டுமென்றான். நியாயாதிபதி பிடிவாதம் சாதித்ததினால், அவனுக்குத் திர்ஷ்டியுண்டாக, இரண்டு மூன்று நாள் பிரயாணம் போய், மகனைக் காணுமல் திரும்பிவிடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கையில், பிள்ளையாண்டான் தகப்பனைத் தூரத்திலே கண்டு, அவனண்டை வந்தான். தகப்பனுக்கு உண்டாகப்போகிற மோசத்தை அவன் அறிந்தபோது, தன் தகப்பனுக்குத் தீங்கு நேரிடுவதிலும் அவரோடு கூடப்போகிறதே நலம் என்று தீர்மானித்தான். தகப்பனுக்கு மகனைக் காட்டிக்கொடுக்கப் பிரியமில்லை. என்றாலும், கடைசியாக மகனுடைய தீர்மானத்துக்குச் சம்மதித்தான். இருபேரும் பட்டணத்துக்குப் போனார்கள். பிரன்றவுட் நகருக்கு வந்தபோது, ஜனங்கள் அவர்களைக் கண்ணீரோடே திடப்படுத்தினார்கள். அடுத்த நாளில் என்ன சம்பவிக்குமோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

உல்லியம் வந்துசேர்ந்த அன்று இராத்திரியில்தானே, அவனைப் பிடித்துக் குட்டையிலடித்தார்கள். இராமுழுவதும் உடம்பில் நோவும் இருதயத்தில் மகிழ்ச்சியுமுள்ளவனுயிருந்தான்.

காலையில் உல்லியத்தை நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். விசுவாசத்தைவிட்டு அவன் மருள விழும்படி பிரயாசப்பட்டும் பலிக்காததால், ரோமச் சபை அத்தியக்ஷராகிய பானன் என்பவர் குடியிருந்த 'பெத்னுல் கிரீன்' என்ற இடத்துக்கு அவன் அனுப்பிவிக்கப்பட்டான். கண்காணியார் முதலாவது அவனுடே சாந்தமாயும், பின்பு கண்டிப்பாயும், அப்புறம் கடினமாயும் பேசியும், பிள்ளையாண்டான் சத்தியத்தை மறுக்க உடன்படவில்லே. ஆதலால் மறுபடியும் அவனைக் குட்டையில் மாட்டினர்கள். இரண்டு நாள் இரவும் பகலும் போஜனமில்லாமல் வருந்தினன். அற்ப ஆகாரமும், கொஞ்சம் தண்ணீரும் மாத்திரம் கொடுக்கப்பட்டதுண்டு. இவ்வித வருத்தங்களோப் பொறுமையோடே சகிக்க அவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருந்தது. தமது நிமித்தம் பாடுகளே அனுபவித்த அவனுக்கு, இயேசு தமது ஆறுதலைக் கொடாதிருப்பாரா?

அவனே மருள விழத்தட்டும்படி, லண்டன் பட்டணத்துச் சிறைச்சாலேக்கு அனுப்பி, அவனுல் தாங்கக்கூடும்வரைக்கும் அவன் பேரில் சங்கிலி மாட்டும்படியாகக் கண்காணியார் சிறைச்சாலேக்காவலுக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுத்தார். சிறைச்சாலேயில் அவன் ஒன்பது மாசக்காலமிருந்தான்.

ஒருநாள் பானர் அத்தியக்ஷர், பிள்ளேயாண்டானே நினைத்து, அவன் இவ்வளவு காலம் சிறைச்சாலேயில் அடைபட்டிருப்பதால், விடுதலேபெற பிரியப்படுவான் என்று எண்ணி, தன் மாளிகைக்கு அவனைக் கொண்டுவரும்படி கட்டளேயிட்டார். ஆனுல் உல்லியம் ஆவியில் அசையாதவனுயிருந்தான். சுவிசேஷத்தைப்பற்றிய நம்பிக்கையிலே உறுதியைக் காண்பித்தான்.

கண்காணியார் உல்லியத்தைப் பார்த்து, "நீ இப்போது உன் தீர்மானங்களே விட்டுவிட்டால், நான் உனக்கு நாற்பது பவுண் தந்து ஒரு தொழிலில் பிரவேசிக்கச்செய்வேன்" என்றார். இந்தத் தொகை அக்காலத்துக்கு மெத்தப் பெருந்தொகை. என்றலும் அது தனக்கு வேண்டாம் என்று பிள்ளேயாண்டான் மறுத்துவிட்டான். பின்பு பானர்: நான் உன்னே என் வீட்டுக்கு உக்கிராணக் காரனுக்குவேன் என்றுசொல்லிப்பார்த்தார். அதற்கு உல்லியம் "என் ஆண்டவனே, வேதவாக்கியங்களேக்கொண்டு என் இருதயத்தைத் திருப்பக்கூடாதிருந்தால், உலக நேசத்துக்காக என் தேவனேவிட்டு மருளவிழேன்" என்றான்.

இவ்வுலகத்திலுள்ளவைகளேக் கிறிஸ்துவின் அன்போடே ஒப்பிட்டுப்பார்க்கையில், அவைகளேக் குப்பையாக எண்ணுகிறேன் என்றான். நயத்தினுலாவது பயத்தினுலாவது அவனைத் திருப்புவது கூடாததால், அக்கினிக்கு இரையாக்குங்கள் என்று அத்தியக்ஷர் தீர்ப்புச்செய்தார்.

அக்கினியில் தகனிக்கும்படி உல்லியத்தை அவன் ஜனன பட்டணத்துக்குக் கொண்டுபோனர்கள். "மரணபரியந்தம் உண்மையுள்ளவனுயிரு, அப்போது ஜீவகிரீடத்தைப் பெறுவாய்" என்ற வசனம் அவன் ஞாபகத்துக்குவந்தது. உண்மையை மரணபரியந்தம் காட்டினுன். பிரன்ற்வூட்டில் சிறைச்சாலேயில்லாததால், ஒருசத்திரத்தில் அவன் காவல் பண்ணப்பட்டிருந்தான். அவன் தாய் அவன் வந்திருப்பதைக்குறித்துக் கேள்விப்பட்டு அன்பினுல் ஜெயிக்கப்பட்டு, அவனிருந்த இடத்துக்குச் சாடினுள். காவலாளர் மனமிரங்கி, அவள் தன்மகனண்டையிலிருக்கும்படி இடங்கொடுத்தார்கள். அவன் மன உறுதியும் மனப்பாக்கியமுமாயிருக்கக் கண்டு, அப்படிப்பட்ட மகனேத் தனக்குக் கொடுத்ததற்காகத தேவனே ஸ்தோத்தரித்தாள். அவன் தாயைப் பார்த்து, "அம்மா, நான் படப்போகிற அற்ப நோவுக்காக, கிறிஸ்துவானவர் எனக்கு மகிழ்ச்சியின் கிரீடத்தைச் சம்பாதித்திருக்கிறார். அதற்காக உங்களுக்குச் சந்தோஷமில்லேயா?" என்ற கேட்டபோது, அவள் தேவனுக்கு மிகுந்த நன்றியறிதலேச் செலுத்தினுள். பின்பு அவர்களிருவரும் முழங்கால்படியிட முடிவுபரியந்தம் தின் மகனேப் பலப்படுத்தும்படி தாய் ஜெபம்பண்ணினுள். உல்

லியம் இரத்தச்சாட்சியாய் மரிக்கும் வேளே வந்தது. நியாயாதிபதிகளும் குருக்களும் ஆடம்பரத்தோடே வந்தார்கள். ஜனங்களும் அந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடினுர்கள். சத்திரத்திலிருந்து பாலியன் கொலேக்களத்துக்கு நடத்தப்பட்டான். அவனுடைய தகப்பன் மனவேதனேயடைந்து, பிள்ளேயின் பேரிலிருந்த பாசத்தினுல் ஜெயிக்கப்பட்டுக் கூட்டத்துக்குள் பாய்ந்து, தன் இருகரங்களேயும் பிள்ளேயாண்டான் கழுத்தில்போட்டு, கண்ணீர்சொரிந்து, "என் மகன் உல்லியமே, தேவன் உன்னேமேடே இருப்பாராக" என்றான். மகன் தன் அருமைத் தகப்பனுரைப் பார்த்து, "ஐயா, கர்த்தர் உம்மோடிருப்பாராக; அவர் உமக்கு ஆறுதலே அளிப்பாராக. நாம் ஒன்றுசேர்ந்து சந்தோஷப்படத்தக்கதாக மறுமையில் ஒருவரை ஒருவர் சந்திப்போம் என்று நம்புகிறேன்" என்றான்.

அன்றையத்தினத்தில் அநேகருடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. சுவிசேஷத்தினிமித்தம் சுட்டெரிக்கும்படி தேவபக்தியுள்ள பாலியனேத் தெருவழியாய் இழுத்துக்கொண்டு போனதைப் பார்த்த கடின இருதயமுள்ளவர்களுங்கூட அன்று கண்ணீர்வடித்தார்கள். உல்லியம் நடந்துபோகையில், தன் தகப்பனுருடைய குடிசையையும் அதிலே துக்கித்துக்கொண்டிருந்த தன் சகோதரிகளேயும் கடைசி விசையாக ஏறிட்டுப்பார்த்தான். பின்பு அவன் தன் வீரஓட்டத் தோழர் சிநேகிதனே வழியனுப்பிக்கொண்டான். அவன் கிறிஸ்துவினியித்தம் மரிக்கப் பயப்படாதிருப்பதை அவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். கொலேக்களத்துக்கு வந்தவுடனே, அவனைக் கழுமரத்தில் சங்கிலியால் மாட்டி, விறகுகளே அடுக்கி, கடைசியாக அவனுடனே "நீ பாப்பு மார்க்கத்தானுலல், உனக்கு மன்னிப்பு கிடைக்கும்" என்று சொன்னர்கள். அதற்கு உல்லியம் "நான் மருளவிழேன். கர்த்தர் எனக்குத்துணே நிற்பாராக" என்று உறுதியாகச் சொல்லி ஜனங்கள் முகமாய்த் திரும்பி "எனக்காக ஜெபம்பண்ணுங்கள்" என்றான். அப்போது கடின நெஞ்சுள்ள ஒருவன்: ஜெபம்பண்ணுவா, உனக்காக ஜெபம்பண்ணுவதைப்பார்க்கிலும் ஒரு நாய்க்காக ஜெபம்பண்ணுவேன் என்றான்.

அதற்கு உல்லியம்: இந்தக்குற்றம் கடைசி நாளிலே உம்முடைய பேரிலே சாற்றப்படாதபடிக்கு உமக்காக ஜெபம்பண்ணுகிறேன் என்று மறுமொழி சொன்னன்.

ஒரு குருவானவரும் உல்லியத்தைப் பரியாசம் பண்ணினர். அப்போது ஒரு துரை மகன் "கர்த்தர் அவன் ஆத்துமாவுக்கு இரக்கம் காட்டுவாராக என்றான்." ஜனங்கள் துக்கத்தோடே "ஆமென்" என்றார்கள்.

தீக்கொழுத்தப்பட்டது. அது சுவாலித்தெரிகையில், உல்லியம் கையில் ஒரு சங்கீதப் புத்தகமிருந்தது. அவன் அதைத் தன் சகோதரன் கையில்விழ எரிந்தான். அவன் சகோதரன் அதைவைத்துக்கொண்டு, "என் சகோதரனே, கிறிஸ்துவானவரின் உபத்திரவங்களே நினே, பயப்படாதே" என்றான்.

அதற்கு ரத்தச்சாட்சி: நான் பயப்படவில்லே. கர்த்தாவே, என் ஆவியை அங்கீகரித்துக்கொள்ளும்" என்றான். இதுதான் அவன் கடைசியாக மொழிந்த வார்த்தைகள். சில நிமிஷநங்களுக்குள்ளாக அக்கினி அவன் உபத்திரவங்களுக்கு நித்திய முடிவை உண்டுபண்ணினது. சத்தியத்துக்காக உல்லியம் இரத்தச்சாட்சியாக மரித்த இடத்தைக் குறிப்பிக்கும்படி அதற்குச் சமீபமாக ஒரு மரம் வைத்தார்கள். அவன் ஆத்துமா இரத்தச்சாட்சிகளுடன் சேர்ந்திருக்கிறது. அவனுடைய உண்மையும் தைரியமும் பூவுலகில் நெடுங்காலம் சொல்லிக்கொள்ளப்படும். கிறிஸ்துவின் நாமத்துக்காக மரிக்கவும் நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? அப்படியானுல் கிறிஸ்துவின் நாமத்திற்காகப் போர் புரிவோம்.

விஸ்வாசி.

சுவிசேஷப் பண்டிகை

ஆகஸ்டு 26-யாகிய கிரித்துய திருநாளுக்குப் பின்வரும் 12-ம் ஞாயிறு சுவிசேஷ பண்டிகை தினமாக ஆசரிக்கப்படும்.

ஆத்துமாக்களே ஜெபத்தினுல் ரக்ஷகண்ணைச் சுமந்துசொண்டு போவோமாக. சுவிசேஷ நற் செய்தியைக் கூறி ஜனிவித்து, ஆத்துமாக்களே ரக்ஷாபெருமானண்டை வழிநடத்துவோமாக.

தெலுங்குநாட்டுக் கடிதம்

I

தோர்ணக்கல் பாஸ்ற்றரேட்.

கடந்த வருஷம் மழைகாலத்தில் ஆறுகளில் ஓயாத வெள்ளமாயிருந்ததால், அம்மூன்று மாதங்களிலும் சபைச் சந்திப்பு வேலை கிரமமாய் நடந்தேற வழியில்லாதிருந்தது. மற்றக் காலங்களிலெல்லாம் அடிக்கடி போய், சபைகளைச் சந்தித்து வந்திருக்கிறேன்.

தோர்ணக்கல் பாஸ்ற்றரேற்றை நான் மேற்பார்த்துவருகிறேன். அதோடு, கனம்: சிரினிவாசகம் ஐயரவர்கள் மேல்விஜாரணைக் குட்பட்டிருக்கும் மானுக்கோட்டை, முப்பாரம்பாஸ்ற்றரேற்றுகளில், ஒரு பிரீஸ்துசெய்ய வேண்டிய கடமைகளையும் நிறைவேற்றிவந்திருக்கிறேன். இவைகளுடன் கடந்த வருஷத்தில் முதல் 6 மாதங்களிலும் மேடிதப் பல்லிப் பாஸ்ற்றரேற்றையும் தோர்ணக்கல் பாஸ்ற்றரேற்றுடன் சேர்த்துப் பார்த்தேன்.

தோர்ணக்கல் பாஸ்ற்றரேற்றில் போன வருஷத்தில் சபையின் தொகை 578லிருந்து 710-க்கும், ஞானஸ்நானம் பெற்றவர்களின் தொகை 356லிருந்து 412-க்கும், பரிசுத்த ராப்போஜனக்காரர் 77லிருந்து 115-க்கும், சபைகளுள்ள கிராமங்கள் 18லிருந்து 24-க்கும் உயர்ந்திருக்கிறது. புதிதாகத் திடப்பத்தல் பெற்றவர்களின் தொகை 45 பேர். பருவம் கடந்தவர்களின் ஞானஸ்நானம் 56, பிள்ளைகளின் ஞானஸ்நானம் 12.

சபைகளும் சபைகளுள்ள கிராமங்களும் அதிகப்பட்டிருந்தபோதிலும், சபைகளில் ஊழியம் செய்யும் ஊழியரின் தொகை அதிகப்படாமலே இருக்கிறது. முந்தின வருஷத்தில் 18 சபைகளில் தேவஊழியம் செய்துவந்த 9 ஊழியரே கடந்த வருஷத்தில் 24 கிராமங்களில் தேவ ஊழியம் செய்துவந்தார்கள். இவர்களுக்குள் ஒருவர் பாஸ்ற்றரேற்றுச் சபைகளைப் பரீக்ஷைசெய்துவர உபதேசியாராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். ஆகவே தன் தன் சபை அல்லது சபைகளின் வேலையைச் செய்துவரும் ஊழியர் 8 பேர் மாத்திரமே. இவ்வெட்டுப்பேரில் மூவர் ஒவ்வோர் சபையில் மட்டும் ஊழியம் செய்துவருகிறார்கள். மற்ற 5 பேரும் மீதியாயுள்ள 21 கிராமங்களில் ஊழியம்செய்துவருகிறார்கள். இருவர் இரண்டிரண்டு கிராமங்களிலும், ஒருவர் 3லும், மற்றொருவர் 5லும், இன்னொருவர் 6லும் தேவ ஊழியம் செய்துவருகிறார்கள். மீதியான 3 கிராமங்களுக்கு உபாத்தியார் கிடைக்காததாலும், இருக்கிற உபாத்திமாரில் யாராவது அவைகளைச் சேர்த்துப் பார்க்கக் கூடாதபடி பிரத்தியேகமாயிருப்பதாலும், சபைகளெல்லாவற்றுக்காகவும் ஏற்படுத்தியிருக்கும் உபதேசியாரே தன்னால் இயன்றமட்டும் அம்மூன்று கிராமங்களையும் பார்த்துக் கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன. இவ்வாரூக, பல சபைகளையும் படிப்பிக்கவேண்டியதாயிருக்கும் உபாத்திமார் எவ்வளவு பிரயாசப்படுவதாயிருந்தாலும், சபைகளில் அவர்கள் செய்யக்கூடியதாயிருக்கும் வேலை சொற்பமாகவேயிருக்குமென்பது தெளிவான விஷயமே. அயல் மிஷன்களிலிருந்து நமக்கு வேண்டிய ஊழியர் கிடைப்பது அசாத்தியமாயிருக்கிறது. நமது போர்டிங் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்கள் கிராமங்களில் தேவ ஊழியம் செய்யத்தக்கவர்களாவதற்கு இன்னும் வருஷங்கள் பிடிக்கும். ஆகவே நமது சபைகளிலிருந்து வாசிக்கப்படித்திருக்கும் வாலிபரைச் சேர்த்து, இரண்டொரு வருஷம் படிப்பித்துப் பழக்கி, உபாத்திமாராக்கிக் கொள்வது இன்றியமையாத அவசியமாகத் தோன்றுகிறது. சபைகளில் ஊழியம்செய்வதற்குப் போதுமானவர்களைச் சவதரித்துக் கொள்ள வகைசெய்துகொள்ளாதபட்சத்தில் சபைகள் தொகையில் மட்டுமல்ல, பக்தியிலும் அறிவிலும் விருத்தியடைய சாத்தியப்படமாட்டாது. சபைகள் சகல விஷயத்திலும் குன்றிப்போகும்.

பாடங்கள்: ஞானஸ்நானத்துக்கும் திடப்படுத்தலுக்கும் ஆயத்தப்படுகிறவர்கள் படிப்பதற்கு வெவ்வேறு பாடங்கள் முந்தின வருஷங்களிலேயே மகாகனம் அத்தியட்சரவர்களால் ஆயத்தப்படுத்திக் கொடுக்கப்பட்டு, சபைகளில் படிப்பிக்கப்பட்டு வருகிறது. சபைகளுக்குப் படிப்பிக்கப்படவேண்டிய பொதுவான வேதபாடங்களை பரிசுத்தினங்களுக்கும் ஞாயிறுகளுக்குமுரிய வரிசைகிர

மமாய் நாலு வருஷங்களில் படிப்பிக்கத்தக்கதாய் மகாகனம் அத்தியட்சரவர்கள் ஏற்படுத்தி, அப்பாடங்களைப் படிப்பிக்கும் வழிவகைகளையும் அச்சிட்டுக் கொடுத்து, அப்பாடங்கள் குறிப்புகளின் பிரகாரம் சபைகளில் பாடங்கள் படிப்பிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வருஷம் இந்தப் பாஸ்ற்றரேற்றின் வருஷாந்தர சேர்ப்பின் பண்டிகைபெப்ருவரீமீ 15ல கொண்டாடப்பட்டது. முன்னுள்ள வருஷங்களைப் பார்க்கிலும் இந்த வருஷத்தில் ஜனங்கள் அதிகமாய்வந்திருந்தார்கள். அதிக உற்சாகம் காட்டினார்கள். அந்நாளில் 36 பேர் பரி. ஞானஸ்நானத்தால் சபையிற் சேர்க்கப்பட்டார்கள். காணிக்கை ரூ. 120. இதற்கு முந்தின வருஷத்தில் ரூ. 70 மாத்திரம் காணிக்கையாக வந்தது.

சபை வளர்ச்சி சம்பந்தமாய்க் காணப்படும் எல்லா நல் விஷயங்களுக்காகவும் கர்த்தரைத் துதித்து, சபையின் வேலைக்கு அவசியமான தெலுங்கு ஊழியர் போதுமானமட்டும் கிடைக்கத்தகும் வழியைக் கர்த்தர் தயவாய்த் திறக்கும்படி ஊக்கமாய் மன்றாடி வரும்படி உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் உடன் ஊழியன்,

சாமுவேல் பாக்கியநாதன்.

II

மானுக்கோட்டை பாஸ்ற்றரேட்.

மானுக்கோட்டை முப்பாரம் பாஸ்ற்றரேற்றில் முந்தின வருஷம் 19 கிராமங்களிருந்தன. இந்த வருஷம் 22 கிராமங்களிருக்கிறது. டீபையில் புதிதாக இந்த வருஷம் 120 பேர் வந்தாலும், கடந்தவருஷம் வந்தவர்களில் அநேகர் மார்க்கத்தைவிட்டுப் போய்விட்டார்கள். சிலர் போலீசாரின் தண்பத்தினிமித்தமும் சிலர் ஊழியர் குறைவினாலும் போய்விட்டார்கள். இந்த இருபத்திரண்டு கிராமத்திலும் ஊழியம் செய்கிற உபாத்திமார் பதினொரு பேராலும், சிலர் இருகிராமமும் சிலர் 3 கிராமமும் பார்த்து வருகிறார்கள். சில இடங்களில் கிறிஸ்துமார்க்கத்திற்கு வருவோமென்று சொன்னாலும், அவர்களுக்கு படித்துக்கொடுக்க உபாத்திமார் எவ்விதமாய் அனுப்புவது என்கிற பயம் வருகிறது. இவ்விதக் குலைவு நீங்க போர்டிங் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறத்தக்க பையன்களுமில்லை. மற்ற மிஷன்களிலிருந்து வருகிறவர்களையும் காணேம். கர்த்தர் வருகிற வருஷத்தில் இக்குறைவை நீக்கி சபை விர்த்தியுண்டாகும்படி கிருபை செய்வாராக.

கடந்த வருஷக்கடைசியில்வந்த ஒரு கிராமச்தார் இந்த வருஷம் ஞானஸ்நானம் பெற்றதும் மற்றயிடங்களிலும் ஞானஸ்நானம் பெற்றதுமாக மொத்தம் 42 பேர். 23 பேர் திடப்படுத்தல் பெற்று, அவர்களில் ஒருவன் தவிர மற்ற எல்லாரும் பரி. நற்கருணையில் புதிதாய் இவ்வருஷம் சேர்ந்திருக்கிறார்கள்.

சபையார் வேத அறிவில் தேறத்தக்கதாக மகாகனம் அத்தியட்சரவர்கள் இந்த வருஷம் புதிதாய் பாடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உபாத்திமார் இலகுவாய் படித்துக்கொடுக்கத்தக்கதாக அவைகளை எழுதி அச்சடித்துக்கொடுத்திருக்கிறார்கள். எல்லா உபாத்திமாரும் அப்படியே படித்துக்கொடுத்து வருகிறதால், கிறிஸ்தவர்கள் வேதஅறிவு கொஞ்சம் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

முன் சொல்லப்பட்ட அந்தப்பாடம் சபையில் உபாத்திமார் படித்துக்கொடுக்கும் பொழுது, அடிக்கடி போய் பார்த்து நன்றாய் படித்துக்கொடுக்கும்படி சொல்லத்தக்கதாகவும், மிஷனெரிமார் அடிக்கடி சபைகளைப் பார்க்க முடியாததால் அப்படி பார்த்துவரத்தக்கவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை உபதேசமாராக்கியிருக்கிறது. அவர்கள் அப்படி பார்த்து வருவதால், எல்லாவிதத்திலும் முன்னிருந்ததைவிட விர்த்தியாகத்தான் செய்கிறது. மானுக்கோட்டை முப்பாரம் பாஸ்ற்றரேற்றை நான் பார்த்து வருவதாலும் முப்பாரம் அதிகத் தூரத்திலிருப்பதாலும் நான் அடிக்கடி பார்த்து வருவது கஷ்டமென்றெண்ணி, முப்பாரத்தில் ஒரு உபதேசியாரை நியமித்திருக்கிறது.

இந்த வருஷத்தில் கிறிஸ்தவர்கள் எல்லாரும் தங்கள் கிராமத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள அஞ்ஞான கிராமங்களுக்குப்

போய், பிரசங்கம்செய்துவர ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அவ்விதமான ஏற்பாட்டினால் அநேகர் அடுத்த கிராமங்களில்போய் பிரசங்கித்து வந்திருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். நான் சில கிராமத்திற்குப்போன சமையத்தில் காலையில் உபாத்தியாயருடன் சிலர் வந்து ஜெபம் பண்ணி பிரசங்கத்திற்கு புறப்பட்டார்கள். இரவு ஜெபம் நடக்கும் சமையத்தில் அநேகனை பிரசங்கம் செய்கிறீர்களாவென்று கேட்கும்பொழுது, ஸ்திரிகளும் தாங்கள் போதித்ததையும் அதற்கு அஞ்ஞானிகள் கேட்ட கேள்விகளையும் சொன்னார்கள். அதைக் கேட்டு சந்தோஷப்பட்டேன்.

கிறிஸ்தவர்களில் சிலர் தங்களுக்குக்கூடிய சமையத்தில் ஊரைவிட்டு வெளியேபோய் ஜெபம்செய்து வருகிறார்கள். தங்களுக்குள் எதாவது வியாதிவந்தால், தாங்கள் தனியாயும் உபாத்தியாயருடனும் ஜெபம்செய்து வருகிறார்கள். ஒரு இடத்தில் ஒரு பிள்ளை அதிகமாய் வியாதியினால் கஷ்டப்படும்பொழுது தகப்பன் உபாத்தியாயரை ஜெபம்பண்ண வாரும்; மருந்து இல்லாவிட்டால், பரவாயில்லையென்று சொல்லிப்போய்ஜெபிக்கவே: அவன் விசுவாசத்தின்படியே சுகமாயிற்றும். உபாத்திமார் இல்லாதபொழுது, சபையில் ஒருவர் ஜெபம் நடத்திவருகிற கிராமங்களுமுண்டு.

இருபாஸ்ற்றரேற்றிலும் பள்ளிக்கூடத்திற்கு வருகிற பிள்ளைகள் 70 பேரிருக்கிறார்கள். போர்டிங் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்கள் பன்னிரண்டுபேர். சபையில் மாத்திரம் இவர்களோத்தவிர வேதம் வாசிக்க அறிந்தவர்கள் 5 பேர். இன்னும் ஏழுபேர் நன்றாய் வாசிக்கத்தக்க நிலைமைக்கு சீக்கிரம் வருவார்கள். இந்த வருஷக்கடைசிக்குள்ளாக இருபது பேராவது வேதம் வாசிக்கும் திறமைக்கு வருவார்களென்று நம்புகிறேன். பிள்ளைகள் நன்றாய்ப் படித்தவா முடியாததற்குரிய தடைகள் உண்டு. பத்து அல்லது பன்னிரண்டு வயதானவுடன் எதும். ஒரு வேலை செய்யப் போகிறார்கள். அவர்கள் வேலைசெய்து முக்கியமாய் இரவுதான் சரியானபடி வாக்கூடும். சிலர் மதியம் வந்து கொஞ்சநேரம் படிக்கிறார்கள். சிலரோ இரவு ஜெபத்திற்கு வந்து ஜெபம் முடிந்தவுடன் படித்து விட்டுப் போவார்கள். சில சமயங்களில் வராமலே கலைத்துப்போயிருந்து விடுவார்கள். இதற்கு உபாத்திமாரும் அதிகரித்தை யெடுக்கவேண்டும். நம்மிஷனில் உபாத்திமாரின் மனைவிகளுக்கு சம்பளமில்லை, அவர்கள் பாலர்பாடம், முதலாம்பாடம், நன்றாய் வேதம் வாசிக்க எழுதத்தக்கதாகவும் படித்துக் கொடுத்தால், தலைக்கு 2, 3, 4 ரூபாய் வீதம் இனாம் கொடுக்கப்படுகிறது. நன்றாய் வேதம் வாசிக்க அறிவு வந்தவுடனே ஒரு வேதப்புஸ்தகமும் வேஷ்டி அல்லது சேலை, படித்தவர்களுக்கு இனாமாக அளிக்கப்படுகிறது. படிப்பை விர்த்தியாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவைகளைச் செய்து வருகிறோம்.

கர்த்தர் இவ்வருஷம் செய்யப்பட்ட அற்பமான வேலையினாலும் நல்ல பலன் அளிக்கும்படி ஜெபிக்க மன்றாடுகிறோம்.

ஜான் சிரினிவாசகம்.

III

ஊழியர் குறைவு.

"மார்க்க ஆராய்ச்சிக்காரர் தொகையிலும், பரி. ஞானஸ்நானம்பெற்றவர்களின் தொகையிலும் இருக்கவேண்டிய பிரகாரம் விர்த்தி காணப்படவில்லை. இதற்குக் காரணம் ஊழியர் குறைவே. ஊழியரின் வருஷாந்தரக் கூட்டம் ஒன்றில், 27 இடங்களில் மார்க்க ஆராய்ச்சிக்காரருக்குப் போதனை கொடுப்பதற்கு, உபாத்திமார் அவசியம் வேண்டும் என்று தெரியலானது. என்றாலும், ஒரு ஊழியனையாவது அனுப்புவதற்குச் சாத்தியப்படவில்லை இக்குறைவை நீக்கும் நோக்கமாக, போர்டிங் பள்ளிக்கூடத்தின் உயர்ந்த வகுப்புகளில் வாசிக்கும் பிள்ளைகளில் பலரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு விசேஷ பயிற்சி ஆறுமாதம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. கனம் பாக்கியநாதன் ஐயரவர்கள் இவ்வகுப்பை நடத்துகிறார்கள். மிஷனெரியாக நாம் இவ்வருஷம் அங்கீகரித்திருக்கும் கனம் D. அய்யாத்துரை அவர்கள், கனம் ஐயரவர்களுக்கு தோணக்கல் சபை

மெலனீசிய தீவுகளின் மிஷனேரியான பேற்றிஸன் அத்தியட்சர்.

"மரணம் ஜெய்மாக விழுங்கப்பட்டது."

சிறையிருப்பினின்று திரும்பி வந்த யூதர்கள் எருசலேம் பட்டணத்து மதில்களைத் திருப்பிக் கட்டினபோது, அந்த வேலையை அழிக்கும்படி சதியோசனை செய்துகொண்டிருந்த சத்துருக்கள் சுற்றிலும் இருந்தபடியால், ஒருகையில்பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு, அடுத்தகையினால் கட்டடவேலை செய்தார்கள். (நெகேமியா. 4: 17, 18). இவ்விதமாகவே எக்காலமும் நடந்துவருகிறது. கிறிஸ்துவின் சபையைக் கட்டுகிற வேலையும், சாத்தானின் அரண்களை இடிக்கிற வேலையும், எகாலத்தில் நடக்கவேண்டியதாயிருக்கிறது. நம்முடைய கண்கள் எதிரியின்பேரிலும், நமது ஊழியத்தின்பேரிலும் எப்போதும் விழிப்புள்ளவைகளாயிருக்கவேண்டும். மேலும் சத்துருக்களின் தேசத்தைக் கட்டிக் கொள்ளப்போகும் சேனையின் முன்னணியானது, சத்துருவின் சகல கொடிய மும்முரத்தையும் எற்றுக்கொண்டு முன்செல்லவேண்டியதாயிருக்கிறது. முன்னணியில்தான் அதிக உயிர்ச்சேதம் உண்டு. என்றாலும் ரத்தம் ஒழுந்திக்கொண்டு முன்னேறும் வீரர் சத்துருக்களின் அணிகளுக்குள் எதிர்த்து அவர்களை மடங்கடித்து வெற்றியடைந்து தேசத்தைக் கட்டிச்கொள்ளுவார்கள். சுவிசேஷத்தின் ஜெயமும் கிடைத்த வழி இவ்வாறே. கிறிஸ்துவின்மேலுள்ள அன்பினால் எவப்பட்டு, தங்கள் உயிரையும் பாராமல் அஞ்ஞான இருள் மூடிய இடங்களுக்குத் துணிந்து சென்று, இன்றைக்கு சுவிசேஷம் எங்கும் தடையின்றிச் செல்லும்படியாக வழி உண்டாக்கின வீரர் அநேகர் உண்டு. அவர்களுடைய ரத்தம் சபையின் வித்தும், அவர்களுடைய அடிச்சுவடுகள் சுவிசேஷம் ஜெயகோலத்தோடு செல்லும் ராஜபாதையாகவும் இருக்கின்றன. அவர்கள் தோல்விகள் தோல்விகள் அல்ல, ஜெயங்களே. இவ்விதமான ஜெய கிரீடத்தைப் பெற்றவர்களில் மெல்னீசிய தீவுகளில் உழைத்துவந்த பேற்றிஸன் அத்தியட்சர் ஒருவர்.

இவர் 1827-ம் வருஷத்தில் பிறந்தார் லண்டன் நகரின் நியாயாதிபதிகளில் ஒருவரான ஸர் ஜாண் பேற்றிசன் என்பவரது மூத்த குமாரன். இவருடைய தாயார் பிள்ளைகளின் பேரில் மட்டற்ற பாசமுள்ள அம்மாள். ஆனால் பிள்ளைகளின் நன்னடக்கையைக் குறித்து அதிகக் கண்டிப்புள்ளவர்கள். இந்தப் பையன் பிடிவாதமும் மூர்ண்டுக்குணமுமுடையவர். ஐந்து வயதிலேயே நன்றாய் வாசிக்கக் கூடியவரானபடியால், அவருடைய பிறந்த நாளிலே தகப்பனார் ஒரு நேர்த்தியான வேதாகமப் புஸ்தகம் வாங்கிக்கொடுத்தார். பிற்காலத்தில் அத்தியட்சராக அபிஷேகம்பெற்ற போது அவருடைய கையில் அளிக்கப்பட்ட வேதாகமம் இதுவே. சிறு வயதிலேயே குருவாகவேண்டும் என்கிற வாஞ்சை அவருக்குள் இருந்தது. தாயாருக்கும் இந்த விருப்பம் அதிக மகிழ்ச்சியையும், நம்பிக்கையின் எதிர்பார்க்குதலையும் உண்டாக்கிற்று. ஆனால் அதற்கு சிறுபிள்ளைத்தனமாக அவர் கொடுத்த காரணம் என்னவென்றால், 'பாவவிமோசனத்தை ஜனங்களுக்குக் கூறி அறிவிப்பது எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும்' என்பதே. மற்றவர்களுக்கு, விசேஷமாய் வீட்டுவேலைக்காரருக்கும் உதவியற்றவர்களுக்கும் பணிவிடைசெய்வது அவருக்கு மிகவும் பிரியமாக இருந்தது. அவருடைய வேலைக்காரரெல்லாரும் அவரை 'எங்கள் பேற்றிஸன்' என்று சொல்லுவார்கள்.

அவர் பிராயம் வந்தபோது ஈற்றன் (Eton) பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே அவரிடத்தில் சகல துதிக்கான குணங்களும் காணப்பட்டன. ஒருதடவை ஒரு நாடகசாலையில் இவரும் இவருடைய கூட்டாளிகளும் போலீஸ்காரருக்கு விரோதமாய் ஒரு பெரிய கலகம் எழுப்பிவிட்டார்கள். ஒருதடவை விக்ற்றோரியா ராணியம்மாள் இவர் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தபோது, அவர்களுடைய ரதத்தின் சக்கரத்தில் அகப்பட்டு மோசத்திலிருந்தபோது, ராணியம்மாளவர்கள் தங்களுடைய கையை நீட்டி ஆபத்தில்லாதபடிப் பிடித்துக்கொண்டார்கள். இன்னுமொருதடவை போர்போன தளகர்த்தராகிய வெல்லிங்ற்றன் பிரபு அங்கு

விஜயம் செய்தபோது, பெரிய கூட்டத்தின் மத்தியில் வெளியேறக்கூடாதபடி சூழப் பட்டபோது, இவர் அத்தனை பெருஞ்சும்பலையும் அங்கும் இங்குமாகத் தள்ளிவிட்டு, குதிரையை நடத்திக்கொண்டு, அதில் ஏறியிருந்த தளகர்த்தனை மிக்க கெம்பீரத்தோடு பள்ளிக்கூடத்திற்குள் அழைத்துக்கொண்டு வந்தார். அவருடைய பதினாலாவது பிராயத்தில், நியுஹிலாந்து தீவின் அத்தியட்சரான செல்வின் கண்காணியார் இங்கிலாந்திற்கு சுகத்திற்காக வந்திருந்தபோது இவருடைய பள்ளிக்கூடத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில், தான் ஒரு சபையைக் கட்டப் போவதாகவும், கட்டியபின் எல்லாராலும் மறக்கப்பட்டு இறந்துபோய்விட அதிகப் பிரியப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் பேசினார். அந்தப் பிரசங்கந்தான், மெலனீசிய தீவுகளில் சபையை ஸ்தாபித்து, கண்காணதபடி ஜீவனை விடும்படியிருந்த இந்தப் பேற்றிஸனை மிஷனெரி ஊழியத்திற்கு எவிவிட்டது. செல்வின் அத்தியட்சருடைய வார்த்தைகள் ஒருநாளும் இவர் மனதைவிட்டு நீங்கவேயில்லை.

அத்தியட்சர், தமது சிநேகிதரான பேற்றிஸன் நியாயாதிபதியைப்பார்க்கப் போயிருந்தபோது, அவர் மனைவியைப் பார்த்து 'பேற்றிஸன் அம்மாளே, உங்கள் மகனை நான் கூட்டிக்கொண்டு போய்விட்டுமா?' என்று விளையாட்டாய்க் கேட்டார். அந்த அம்மாள் உடனே திடுக்கிட்டுப்போனார்கள். ஆனாலும் மாட்டேன் என்று சொல்லவில்லை. பிறகு பிள்ளையாண்டானும் தனக்கு அத்தியட்சரோடு புறப்பட்டுப்போய்விடப் பிரியம் இருந்ததாகச் சொன்னபோது, வளர்ந்து பெரியவனாகும் பிராயத்திலும் அவ்வித பிரியம் நீங்காதிருந்ததேயானில் போகிறதற்குப் பூரணமான சம்மதம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதே வருஷத்தில் திடப்பதித்தலும் பெற்றார். (1842).

பிற்பாடு ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைச் சேர்ந்தார். ஆனால் காலத்தை சரியான அளவு பிரயோஜனப்படுத்தவில்லை. இதைக் குறித்துப் பிற்காலத்தில் அவருக்கு அதிக வருத்தம் இருந்தது. இவரிடத்திற் காணப்பட்ட ஓர் விசேஷித்த லட்சணம் என்னவென்றால், தவறிப்போன ஒரு காரியத்தைக் குறித்தும் வருந்திக்கொண்டிருக்காமல் மறுபடியும் முயற்சியெடுத்து சித்திபெறும்படிப் பிரயாசப்படுவதேயாம்.

சர்வகலாசாலைப் படிப்பெல்லாம் முடியவே, இவருடைய மன விருப்பத்தின்படியே 1853-வருஷம் செப்டெம்பர் மாதத்தில் உதவிக்குருவாகவும், சிறிது காலத்திற்குப் பிற்பாடு குருவாகவும் பட்டம் பெற்று சபை வேலை செய்துகொண்டிருந்தார். அடுத்தவருஷம் மறுபடியும் செல்வின் அத்தியட்சர் இவரைக் குறுக்கிட்டார் தம்மோடுகூட மிஷனெரியாக வரும்படி அழைத்தார். தகப்பனார் சம்மதம் கொடுத்தால் உடனே தான் முன்செல்லுவதாக வாக்குக் கொடுத்தார். இதற்கு 12 வருஷங்களுக்கு முன்னமேயே தாயார் மரித்துப் போனார்கள். மூத்தகுமாரன் வீட்டைவிட்டுப்போக கொஞ்சமும் இடங்கொடுக்கமாட்டேன் என்று சாதித்துக் கொண்டிருந்த தகப்பனார், தெய்வ வஞ்தலுக்கு அடங்கி 'நான் அவனைத் தடைசெய்யாதிருப்பேனாக' என்று சொல்லி மகனை விட்டுவிட சம்மதித்தார். அத்தியட்சரை நோக்கி 'இதோ என் மகனை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்து விடுகிறேன். எனினாலும் அவனை மறுபடியும் நான் பார்ப்பேன் என்ற நம்பிக்கையேயில்லை. ஆனால் என் தகப்பனார் என்னைப் பார்க்க ஆசைபட்டுக் கொண்டிருப்பாரே என்றும் ஒருநாளும் அவன் எண்ணவேண்டாம்' என்று சொன்னார். சம்மதம் கொடுக்கப்பட்டது. மகனும் அதற்குப்பிறகு திரும்பிவரவில்லை. தகப்பனாரும் அதற்கப்புறம் மகனைப் பார்க்கவில்லை. அடுத்தவருஷம் (1855) செல்வின் அத்தியட்சரோடு புறப்பட்டுப் போனார்.

மிஷனெரி ஊழியம். இவர் ஊழியஞ் செய்த இடம் நியுசிலாந்தும், அதைச் சுற்றிலும் உள்ள தீவுகளுமே.

போன நூற்றாண்டிலேயே கொடிய அடிமை வியாபாரத்தைக் கண்ணுற்று, அதினால் மனுஷஜாதிக்கு உண்டாகிக்கொண்டிருந்த

கொடிய உபத்திரவங்களையும் துயரங்களையும் மகா வேதனையோடு மனதில் எண்ணினார். அடிமை வர்த்தகர் பெரிய கப்பல்களிற் சென்று தீவுகளில் இறங்கி தந்திரத்தோடும் பலவந்தத்தோடும் மிலேச்ச ஜனங்களைப் பிடித்துச் சிறையாக்கிக்கொண்டு வந்தார்கள். இதில் இன்னமும் பரிதபிக்கப்படத்தக்க விஷயம் என்னவென்றால், மிஷனெரிமார்களுடைய சுயவெறுப்பையும் அன்பையும் நல் நோக்கத்தையும் நன்றாய் அறிந்திருந்த இந்த அறிவற்ற ஜனங்கள், அடிமை வியாபாரிகளையும் மிஷனெரிமாரென்றே எண்ணி தடையின்றி தங்கள் தீவுகளில் வரவிட்டுப் பிறகு அந்த ஓநாய்களால் பிடிக்கப்பட்டு வந்ததினால் இந்தக் கொடிய வியாபாரிகளுக்கு மிஷனெரிகளுடைய ஊழியம் மிகவும் அனுகூலமாயிருந்தது.

பேற்றிஸன் நல்ல சுகத்தோடும் பலத்தோடும் தம்முடைய ஊழியத்தைத் தொடங்கினார். அந்தத்தீவின் உஷ்ணம் அவருடைய தேகத்தைக் கட்டுப்படுத்தினதே தவிர கொஞ்சமும் பலட்சயப்படுத்தவில்லை. அந்த இடத்தின் காட்சிகள், செடி, பிராணிவகைகள் யாவும் அவருக்கு மகா மகிழ்ச்சியாயிருந்தன.

மிஷனெரிமாருடைய வேலை என்னவென்றால், வருஷத்தில் பாதி நாட்கள் தங்கள் கப்பலிற் சென்று தீவுகள் தோறும் இறங்கி ஜனங்களைக்கண்டு பேசி, கிறிஸ்துவைக்கூறி, தங்களோடுகூட வரச்சம்மதப்பட்டவர்களைக் கூட்டிக்கொண்டு தங்கள் மிஷன் ஸ்தாபனத்திற்கு வருவார்கள். அடுத்தபாதி நாட்களில் அவ்விதம் வந்த ஜனங்களுக்குக் கல்வி, ஞாகரீகம், உடை முதலிய அறிவுகளைப் புகட்டிக் கிறிஸ்துவைப்பற்றி இன்னமும் அதிகத் திட்டமாய் அறியும்படி வேதாகமத்தைக் கற்றுக்கொடுப்பார்கள். பேற்றிஸன் ஜனங்கள்பேரில் அளவற்ற பாசமுடையவர். அவர்களை மிலேச்சரென்று யாராவது சொல்லவும் விடமாட்டார். அவர்களோடு யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் அன்னியோன்னியமாய்ப் பழகி அவர்களுடைய பாஷையை எளிதிற் கற்றுக்கொண்டார். இன்னமும் அந்தப் பாஷையில் வேதபுஸ்தகமும் வேறு எந்தப் புஸ்தகங்களும் எழுதப்படத்தக்கதாக அதற்கு இலக்கணமும் உண்டாக்கி அதை விரிவாக்கினார். எந்தெந்தத் தீவுகளில் இறங்கினாலும் முதல் முதலாகக் கண்ட ஜனங்களும் ஓடிவந்து கையைப் பிடித்துக்கொண்டு, கும்மாளிபோட்டு, மாலைகளைக் கொண்டுவந்துபோட்டு, பிறகாலேயே திரிவார்கள் அந்த ஜனங்களுக்குள் நரமாம்ச பட்சணிகளும் இருந்தார்கள்.

அவருடைய ஜீவியத்தில் விளங்கிய ஓர் விசேஷித்த ஆச்சரியம் என்னவென்றால் உள்ளத்தில் நிரம்ப உள்ள மகிழ்ச்சியே. சகலத்தையும், சகலரையும் விட்டுப்போட்டு தொலைதூரமான இடத்திற்போயிருந்தும் ஒரு சிறு நிமிஷமாவது அவர் முகத்தில் சலிப்பு தோன்றவேயில்லை 'தேவன் சுத்த மாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே' என்ற தெய்வ கட்டளை அவருடைய ஊழியத்தின் சட்டமாயிருந்தது.

பிள்ளைகளை அவர்கள் பெற்றோர் நடத்துகிறபடியே நடத்தவேண்டும் என்று விரும்பி அவர்களைத் தேற்றி, கழுவி, குளிப்பாட்டி மிகவும் அன்பாய் நடத்தினார். காயங்களைக் கட்டவும், அற்பசொற்ப சிகிட்சை செய்து கொள்ளவும், சிறு கைத்தொழில்கள் செய்யவும் பிரயாசப்பட்டுக்கொண்டுவந்தார். அவருடைய மாணாக்கர்கள்பேரிலிருந்த பாசமானது அவருடைய ஜீவியத்தின் மகிழ்ச்சிக்கு முக்கிய ஏதுவாயிருந்தது. அந்தத் தீவுகளின் சிறு குழந்தைகள் முதற்கொண்டு இவரண்டைக்குத் துள்ளிக்கொண்டு வரும். இவ்வளவுதூரம் ஜனங்களோடும் மாணாக்கர்களோடும் யாதொரு வித்தியாசம் பாராட்டாமற் பழகியும், தம்முடைய நிலைமைக்கு யாதொரு பங்கமும் வராதபடி நடந்துகொண்டார். ஜனங்கள் எப்பொழுதும் அவரைத் தங்கள் எஜமானாகவும், ஆசிரியராகவும், குருவாகவும் எண்ணி கண்ணியத்தோடு நடத்தினார்கள். சீக்கிரம் ஜனங்களுக்குள்ளும் மாணாக்கர்களுக்குள்ளும் ஆவியின் எழுப்புதல் மெதுவாக ஆரம்பித்தது. அநேக தடவைகளில் தனிமையாய் இவருடன் பேசிக்கொள்ளும்படி வர ஆரம்பித்தார்கள்.

இவ்விதமாக யாவருக்கும் பிள்ளையாகவும் சகோதரனாகவும் இருந்து நிறைந்த மகிழ்ச்சி

யோடு உழைத்துவரும்போது, இவரைத் தகப்பனுக்க திருச்சபையின் ஏஜமான் சித்தங் கொண்டார்.

1861-ம் வருஷம் நியுசிலாந்து அத்தியட்சராலயத்தில் இவர் மெலனீசிய தீவுகளின் அத்தியட்சராக அபிஷேகம்பண்ணப்பட்டார். அதே வாரத்தில் உலகத்தில் ஒரே ஆதரவாக இருந்த தனது தகப்பனார் இறந்து போகவே, குடும்பத்திற்கும் சபைக்கும் எக காலத்தில் தகப்பனுமானார். "என் பிள்ளைகள் இருநூறு தீவுகளில் வசித்துவருகிறார்கள்" என்று இக்காலத்தில் அவர் சொல்லவேண்டியதாயிற்று.

இதற்கு மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஒரு பெரிய ஆபத்து நேரிட்டது. மிஷனெரி கூட்டத்தார் தங்கள் வழக்கத்தின்படியே ஒரு தீவில் இறங்க எத்தனித்தபோது ஜனங்கள் தீடீரென்று இவர்மே எப்பக்கமும் சூழ்ந்து கொண்டு நஞ்சு தடவிய ஈட்டிகளே எய்து இரண்டு பேரைக் கொன்றுபோட்டார்கள். இவர் உயிர் தப்பிப்பிழைத்தது செய்வ திருவையே. அடிமை வியாபாரிகளின் கொடுமைச் செய்கைகளினுல் மூர்க்கவெறிகொண்ட ஜனங்கள் இவ்விதமாகத் திரும்பிவிட்டார்கள். இச்சமயத்திற் சொல்லப்பட்ட இருவரும் பக்தியில் தேறினவர்களும் இவருக்கு மகா அருமையானவர்களுமாயிருந்தார்கள். எவ்வ ளவுதான் உள்ளான மகிழ்ச்சி குறையாததாக இருந்தபோதிலும் இந்த கஷ்டமானது அவர் முகத்தில் தோன்றிற்று. கவலைக் குறிகள் காணப்பட்டன. பேற்றிஸனுடைய இன்னொரு பேராவல் எண்ணவெண்ணுல் மார்க்க வணக்கங்கள், சட்டங்கள், ஆசாரங்கள், முறைகள் யாவற்றையும் அத்தீவாருக்கு ஏற்றபடி திருத்தவேண்டும் என்பதே. இதற்காக மிக்க ஆழ்ந்த யோசனையோடு பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார். 1868-ம் வருஷம் செல்வின் அத்தியகூர் வேறொரு அத்தியட்சாதீனத்திற்கு மாற்றப்படவே, இவருக்கு உலகப்பிரகாரமாய் பெரு நஷ்டம் உண்டானது. இது பரியந்தமும் தகப்பனடைவான அவரது அன்பும் உடன் ஊழியமும் பேற்றிஸனுக்குப் பெரிய ஆதரவாக இருந்தது.

அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் முதல் முதலாக சுதேச உதவி குரு ஒருவர் பட்டம் பெற்றார். கர்த்தருடைய வேலை நடந்து கொண்டிருக்கும்போதே, சாத்தானின் வேலையும் மகா மும்முரமாக நடந்துவந்தது. அடிமை வியாபாரிகளின் கொடுமைகளால் அநேக தீவுகள் குடியற்றுப்போயின. மிஷனெரி மாருக்கும் அடிமை வியாபாரிகளுக்கும் விரோதியாசம் உண்டாக்கவும், பலவந்தமாக வேலை செய்யும்படி பிடித்துக்கொண்டுபோகப்பட்ட ஜனங்களுக்கு யாதொரு இம்சையும் நடக்காமல் சரியான கூலிகிடைக்கவும், அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லாதிருக்கவும் வேண்டுமென்று ஆலோசித்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் சில நிபந்தனைகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்களிடம் ஒழுங்கு செய்ய ஆரம்பித்தார். ஆவி எவ்வளவுதான் உற்சாகமுள்ளதாயினும் சரீரம் பலட்சய மடையக்கூடியதாகையால், இவ்வளவு உத்தி வாதமான வேலைகளைச் செய்துகொண்டுவந்த அவருடைய தேகம் பலங்குன்ற ஆரம்பித்தது. ஆறுமாதமும் அலைச்சல்; அடித்த ஆறு மாதமும் பள்ளிக்கூடவேலையும் சபைவேலையும். பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிறவரும், தலைமை உபாத்தியாயரும், கணக்குப்பார்க்கிற வரும் அவர்தான். உதவிக் குருவும், குருவும், கண்காணியாரும், பட்டத்திற்குப் படிப்பிக் கிறவரும், சோதிக்கிறவரும் அவர்தான். 1870-ம் வருஷம் நெஞ்சில் கொடிய வியாதி யுண்டாகி, சுகத்திற்காக நியுசிலாந்துக்குப் போக நேரிட்டது. இவருடைய ஊழியம் நடந்துவந்த மெலனீசிய தீவுகளுக்கும் நியுசிலாந்து தீவுக்கும் அறுநூறு மைல் தூரம். தல்ல சுகத்தோடு மறுபடியும் திரும்பி வந்தார். இதனிடையில் அடிமை வியாபாரிகள் இவருடைய தீவுகளுக்குள் தாராளமாகச் சென்று, மிஷனெரிமார்போல் தங்களைக் காட்டிக்கொண்டு இவருடைய பிள்ளைகளில் அநேகரைக் கொன்றும் சிறையாக்கிக் கொண்டும் திரிந்தார்கள். அவர்களுடைய குரூர வர்த்தகத்தை அடக்கும்படி மறுபடியும் ராஜாங்கத்தாரிடத்தில் ஒழுங்குசெய்ய ஆரம்பித்தார். தீவின் ஜனங்கள் இனி யார் வந்து இறங்கினாலும் பழிவாங்குவோம் என்று தங்களுக்குள் தீர்மானித்து ஆயத்தமாயிருந்தபடியால், இக்காலத்தில் இவர் அதிக ஜாக்கிரதையோடும் விவேகத்தோடும் நடக்க வேண்டியதாயிருந்தது. என்றாலும் பரம தகப்பனிடத்தில் விசுவாசத்தோடும் தைரியத் தோடும் தன்னை ஒப்புவித்து யாதொரு கவலையுமில்லாமல் வழக்கம்போலவே உழைத்துக்கொண்டுவந்தார். ஜனங்கள் கொஞ்சமும் தன்னைப்பற்றிச் சந்தேகப்படாதபடி தாம் அவர்களிடத்தில் யாதொரு சந்தேகமுமின்றி தாராளமாகப் புழங்கிவந்தார். 1871-ம் வருஷம் அவர் சந்தா குருஸ் (Santa Cruz) என்ற தீவுகளைச் சந்திக்கும்படி போனார். அந்தத் தீவுகளில் இதுபரியந்தமும் யாதொரு அசைவும் உண்டாகவில்லையே ஒருவரும் மிஷனெரிமாரோடு புறப்பட்டுவரவும் சம்மதிக்கவில்லையே என்று அடிக்கடி இவர் அங்கலாய்த்ததுண்டு. ஆனல் இந்தத்தடவை இவருடைய வருத்தமெல்லாம் நீங்கிப்போய்விடும் படியானவிதமாய் ஆச்சரியமான மாறுதல்கள் காணப்பட்டன. அநேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஒரேகாளில் 231 பிள்ளைகளும், 56 பருவங்கடந்த ஸ்திரீ புருஷரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். வேதவசன ஆராய்ச்சிக் கூட்டங்களும், பிரசங்கக் கூட்டங்களும் வெகு முப்முரமாய் நடந்தன. ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்தார்கள்.

செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் அங்குள்ள ஒரு தீவிற்கு அத்தியட்சரும் சில ஊழியரும் போனர்கள். ஜனங்களுக்குக் கொடுக்கும்படி அநேக விலைதமான ஜாமான் களையும் எடுத்துக்கொண்டு கப்பலேவிட்டுத் தோணிக்கு இறங்கினர்கள். அத்தியட்சரைக் கண்டவுடனே ஜனங்கள் பிரியத்தோடு வந்து அவரையும் அவர் உடன் ஊழியரையும் தங்கள் தோணிகளில் ஏற்றி கரைக்குத் தண்டுவலித்துச் சென்றார்கள். அச்சமயத்திலேயே திடீரென்று ஜனங்கள் ஈட்டிகளை எய்யத்தொடங்கி ஊழியரில் முன்றுபேரைக் காயப்படுத்தினர்கள். உடனே அவர்கள் தோணியைக் கப்பலுக்குத் திருப்பி ஓட்டினர்கள். அத்தியட்சரைத் தனிமையாய் ஜனங்கள் கரைக்கு அழைத்துச் சென்றார்கள். திரும்பி போடின ஊழியர் கப்பலில் ஏறின சிலமணி நேரங்களுக்குள் இரண்டு படகுகள் கப்பலை நோக்கிவந்தன. ஒரு படகு அடித்த பட்டகைக் கப்பலுக்குச் சற்றுதூரம்மட்டும் கொண்டுவந்து விட்டுத் திரும்பிவிட்டது. அதில் யாதொரு ஆளுமில்லை. அதைப்போய்ப் பார்க்கும்போது அதில் அத்தியட்சருடைய சரீரம் ஒரு பாயில் சுருட்டப்பட்டதாக இருந்தது. தேகம் பூக்களாலும் இலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஐந்து முடிச்சுகள்போடப்பட்ட ஒரு நூல் ஓலையும், ஐந்து காயங்களும் அவர் தேகத்திற் காணப்பட்டன. ரகசியம் என்ன வென்றுல் ஐந்து இடங்களிலிருந்து அங்கு வந்து ஜனங்களே சிறைப்பிடித்துக்கொண்டு போன அடிமை வியாபாரிகளின் குரூரச் செயலைப் பழிவாங்கும்படியாக அருமையான தகப்பனுகிய அத்தியட்சரை ஐந்து காயங் களாற் கொன்று பலிசெலுத்தினர்கள்.

தாம் உயிருக்கு உயிராய் நேசித்த தம்முடைய அருமையான பிள்ளைகளுக்காக பேற்றிஸன் அத்தியட்சர் தமது உயிரைக் கொடுத்தார். ஜீவனோடு பிழைத்திருந்தாலும் தம் ஊழியத்தினுல் கொடுத்திருந்திருக்கும் உயிரை மரணத்தினுல் தத்தஞ்செய்தார். ஆனல் இன்றைக்கு அவருடைய ரத்த கிரயமாக மெலனீசிய சபை வாங்கப்பட்டு தங்களுக்காக உயிரைக்கொடுத்த தகப்பனுமா நன்றியறிதலோடு நினைத்துவருகிறது. இந்தப் பலியை எக்காலத்துள்ளோரும் நினைக்கும் பொருட்டு அத்தீவார் மிக்க மகிழ்ச்சியோடு ஒரு பெரிய சிலுவையைக் கடற்கரையில் ஞாபகார்த்தமாக நட்டியிருக்கிறார்கள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

ஜான் கோல்ரிட்ஜ் பேற்றிஸன் டி.டி.
மிஷனெரி அத்தியட்சர்.

இவ்விடத்து மனிதர் அவருடைய உயிரை வாங்கினர்கள்.

அவர்களுக்காக தம்முடைய உயிரை சந்தோஷமாகக் கொடுத்திருப்பார்.

மெலனீசிய தீவுகளின் சபை இன்றைக்கும் ஒரு அத்தியட்சரால் ஆளப்பட்டுவருகிறது. சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும் கடைசி ஈஸ்டர் தினத்தில் உயிர்த்தெழுதலின் மகிமையான சரீரத்தோடு மெலனீசிய தீவுகளின் ஜெய வீரனுகிய பேற்றிஸன் அத்தியட்சர் எழும்புவார்.

மரணமே உன் கூர் எங்கே! நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுல் பேற்றிஸன் அத்தியட்சருக்கு ஜெயங்கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

கும்பல் கும்பலாக போத்னே நாட்டல்.

இவ்விஷயத்தைப்பற்றி கிறிஸ்தவர்களுடைய பத்திரிகையாகிய 'Christian Patriot' 'அபிமானி'யில் அநேக பிரபந்தங்கள் எழுதப்பட்டு வருகின்றன. சிலர் அபிப்பிராயம் அதை உற்சாகப்படுத்தி உடனே சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பது. வேறு சிலருடைய அபிப்பிராயம் நன்றாய்ப் போதியாமல் அறிவீனமாயிருக்கிற ஜனங்களே உடனே சபையில் சேர்த்துக்கொள்வதனால் பெருங்கெடுதி விளையும் என்பது.

நமது சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பத்திரிகையிலும்: ஐந்துகோடி ஜனங்களுக்குள் பலர் கிறிஸ்துவைப்பற்றி அறியவும் கிறிஸ்துமார்க்க அநுஷ்டானிகளாகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இது ஒரு பாகத்தில் மாத்திரமல்ல, நம் பிரமாண்டமான தேசத்தின் நாலு பாகங்களிலும் உள்ளது. இப்போர்பட்ட நல்ல அசைவு நாம் சுவிசேஷ ஊழியம் நடத்தும் நிஜாம் ராஜ்யத்திலு முண்டு. இது கர்த்தருடைய ஆச்சரியமான ஓர் செயலே. அநேக தெலுங்கு ஊழியர் கிடைக்குமாளால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்துவின் அன்பில் போதிக்கப்பட்டு, கிறிஸ்துவின் தொண்டர்களாகக்கூடும் என்று மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷர வர்கள் சொல்லுகிறார்கள் என்று கண்டிருக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி சென்னை அத்தியக்ஷரவர்கள் ஒரு விசேஷித்த உபந்நியாசம் செய்திருக்கிறார்கள். அதில் இப்படி வராளமாய் வருகிற ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடாமல் தடுப்பது பாவமென்றும், அப்படி ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு, அவர்களுக்குச் சரியானபடி படிப்பித்து, சீர்திருத்தி நல்லொழுக்கமான கிறிஸ்வர்களாக்காவிட்டால் அப்படித் தடுப்பதிலும் பெரிய பாவமாயிருக்குமென்றும் சொல்லியிருக்கிறார்கள். பெரிய அசைவுள்ள மத்திய மாகாணத்திற்கு 100 உபாத்திமாரும், 50 உபதேசிமாரும், 20 போதகர்களும் தேவை என்கிறார்கள். 'நன்மைசெய்ய அறிந்திருந்தும் அப்படிச் செய்யாதிருப்பது பாவமாகும்' என்பது வேதவாக்கியம்.

ராஜாங்க விஷயங்களைப்பற்றி இந்திய ஜனங்கள் போராடி வருவதில் முக்கியமானது ஒன்று: அதாவது நியாயம் செய்கிற அதிகாரிகள் வேறாயும், அதை நிறைவேற்று கிற அதிகாரிகள் வேறாயும் இருக்கவேண்டுமென்பது. அந்த மாதிரி நான் சொல்லுகிற ஆலோசனை யாதெனில் திருநெல்வேலி ஜில்லாவில் பாஸ்ட்ரேட் அதாவது சபை மேல் பார்க்கிற வேலைக்குரிய போதகர்கள் வேறாயும், சுவிசேஷ பிரபல்ய படைமுயற்சி செய்யும் போதகர்கள், ஆசாமிகள் வேறாகவும் இருக்கவேண்டும். அவர்களுக்குத் தனிமையான ஒரு தலைகர்த்தனும் வேண்டும். இப்படிப் போராடுகிற சபை ஜெயம்பெறுமென்பதிலும், அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துமென்பதிலும் சந்தேகமில்லை. அதுவே நம் ராட்சாபெருமானின் கட்டளை. நம் தோர்ணக்கல் மிஷனிலும் இவ்வித ஏற்பாட்டை நூதனமாய் அனுசரிக்க முயற்சிக்கவேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவின் பல இடங்களிலும் விசேஷமாய் வட திருநெல்வேலியிலும் பலஜாதியாருக்குள் இப்படிப்பட்ட அசைவுண்டு.

ஆகையால் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி இங்கே கூடி வந்திருக்கிற நமக்குப் பிரயோஜனமாக சில குறிப்புகளை சேர்த்து, என் அபிப்பிராயத்தை ஆலோசனையாக எழுதி வீரும்புகிறேன். கூடுமானால் சிலவருஷங்களுக்காவது நாம் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

குணப்படுதல், ஆத்மலாபம், ஆத்ம யீடேற்றம், நல்வழி காட்டல், புரோபகார சிந்தை, வெகு நல்ல காரியந்தான். என்றாலும் கும்பல் கும்பலாகக் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ப்பதனால் சில நன்மைகளுமுண்டு, பல கெடுதிகளுமுண்டு என்பது நிச்சயமான விஷயம். ஆகையால், அதனால் உண்டாகும் கெடுதிகள் இன்னவென்று ஆராய்ந்து அதை நிவர்த்திசெய்யவேண்டியது. ஆரம்பத்திலேயே கெடுதிக்கு இடமான காரியத்தைச் செய்யும்போது அது பிற்காலத்தில் வேரூன்றி நிலைத்து பெருங்கெடுதிகளை விளைவிக்கின்றன.

ஒன்றும் அறியாத சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறது திருச்சபை சட்டமாயிருக்கும்போது ஒன்றுமறியாத கும்பல் கும்பலாக வருகிற ஜனங்களுக்கு ஏன் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்று ஓர் பிபி மானி சொல்லுகிறார்.

மூன்றிய காலத்தில் பல இடங்களில் நன்றாய்ப் போதிக்கப்பட்டு குணப்படாமல் சேர்ந்தவர்கள் அநேகர் சீரடையாமல் அநேக இராமங்களில் குற்றவாளிகள், கள்ளவாளிகளாயிருக்கிறார்கள் என்பது ஓர் போலீஸ் சூப்பிராண்டின் அபிப்பிராயம்.

இவ்விஷயம் வெகுவாய்த் தீர்க்க ஆலோசனைசெய்து முடிவுசெய்யவேண்டிய காரியமானதால் நமக்கிருக்கிற சுருக்கமான நேரத்தில் பல ஞாயங்களை எடுத்தாளைப்பது கூடாமை. ஆனால் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களாவன:—

(a) தெருப்பிரசங்கம், தேசாந்தரப் பிரசங்கம் செய்யும்போது அநேக ஜனங்கள் சொல்லப்படுகிற சுவிசேஷ சத்தியத்தை நன்றாய்க் காதுகொடுத்து முதலாய்க் கேட்கிறதில்லை. அப்படியிருக்க ஊர் ஊராகவும், கிராமங்கிராமமாகவும், கும்பல் கும்பலாகவும், கூட்டங் கூட்டங்களாகவும் ஜனங்கள் வரும் பொழுது, அவர்களைத் தடுப்பது சரியல்ல. கிடைத்திருக்கிற சமயத்தை இழந்துபோவது நியாயமல்ல திறந்திருக்கிற வாசல் திரும்ப அடைபட்டால் மறுபடி திறப்பது கஷ்டமாய்ப் போகும்.

(b) ஆனால் அதற்கு எதிரிடையாயிருக்கிற முக்கியமான நியாயம் என்னவென்றால், அவர்களில் அநேகர் ஆத்ம ஈடேற்றம் இன்னதென்பதை அறிந்தவர்களுமல்ல, அறிய விருப்பமுடையவர்களுமல்ல; ஆனால் உலகப் பிரகாரமாய் ஜனங்கள் மத்தியில் உயர்தரமாயெண்ணப்பட்டு முன்னுக்கு வரவேண்டுமென்ற பெரியஆசையுண்டு. அப்படி வருகிறவர்களுக்காக தக்க உபாத்திமார், உபதேசிமார், வாத்திச்சிமாரை நியமித்து அவர்கள் ஒவ்வொருவர்க்கும் கிறிஸ்துமார்க்கத்தின் முக்கிய உபதேசங்களை நன்றாய்ப் போதித்து அவர்கள் இருதயத்தில் அதை உட்சென்று அவர்கள் அங்கேநிற்கபிறகு தக்க பரீட்சையின்பேரில் சரியானபடி ஆயத்தம் என்று தோன்றுகிறவர்களுக்கு மட்டும் ஞானஸ்நானம் கொடுத்து திருச்சபையில் சேர்த்துக்கொள்ளக்கூடும். அவர்களறியவேண்டிய முக்கிய சத்தியங்கள், கடவுள், ஆத்துமா, பாவம், இரட்சிப்பு, பாவத்துக்கு விலகும் நல்ல நடத்தை முதலியன.

(c) மேற்கண்ட விஷயங்களைப்பற்றி நம்மில் அநேகருடைய அபிப்பிராயம் ஒத்தமையுடையதாகவேயிருக்கும். காலஞ்சென்ற கனம். T. உவாக்கர் ஐயாவர்கள் அனுசரித்துவந்த முறை உத்தமமானதென்று என் மனதில் படுகிறது. அதாவது அவர்கள் தேசாந்தரக் கூட்டப்பிரசங்கத்திலேயாயிருக்கும்போது, பிந்தியகாலத்திலும், அவர்கள் போதனையைக் கேட்டும், அவர்கள் சாதனையைப் பார்த்தும், சில பால்யர்களும், சில வாலிபர்களும், பெரியவர்களும் கொஞ்சம் கூட்டம் கூட்டமாகக் கிறிஸ்துமார்க்கத்தையறிய அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். அதில் பல ஜாதிக்காரரும், பலதரமான படிப்புள்ளவர்களுமுண்டு. ஐயரவர்கள் கையாடி வந்த முறையென்னவெனில்; கூடுமான சமயங்களில் தாங்களும், மற்ற சமயங்களிலெல்லாம் தங்களோகூடவிருக்கும் உபாத்திமார், உபதேசிமாரைக் கொண்டும் போதித்துவருவார்கள். குறித்தகாலங்களில் தாங்களே அவர்கள் எல்லாரையும் பரீக்ஷித்தல் வழக்கம். அறிவிலும், நடத்தையிலும், நன்றாய்த் தேறித் தன் மனதிற்குத் திருப்தியாய் வந்தபிறகு மட்டும் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். இவர்களில் சிலர் பரீட்சைகாலமாய், மூன்று மாசம், ஆறுமாசம், ஒருவருஷம் வரையும் இருந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பார்கள். பெரியவர்களாயிருப்பவர்களுக்கெல்லாம் சமயத்திற்கு தக்கபடி போதிப்பார்கள். ஆனால், இப்படி சபைக்கு வரவாஞ்சையுள்ளவர்களாயிருக்கிற யாவரையும் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றக் கிறிஸ்தவ சபையாரோடு ஜெப ஆராதனைக்கு வரும்படி ஒழுங்குசெய்வார்கள். அவர்களும் சம்மதித்து வந்து ஆராதனையில் சேர்ந்து ஜெபம்பண்ணுவார்

கள். இப்படிக் கொஞ்சக்காலம் நடந்துவரும் போது அங்கு நடக்கும் போதனைகளையும் சாதனைகளையும் கவனித்து, கிறிஸ்துமார்க்கப் போதனை இன்னது, ஆராதனையின் நன்மை இன்னது என்று அறிந்துகொள்வார்கள். இப்படிச் செய்வதில் இன்னும் ஒரு பெரிய நன்மையுண்டு. மூன்றிய கிறிஸ்தவர்களோடு பழகியிருக்கவும், அந்நியோந்நியமாய் ஜெபத்திற்கு ஒன்றுகூடவும் ஏது உண்டாகிறது. இப்படியெல்லாம் கற்றுத்தேறி நல்லொழுக்கத்தில் பழகி ஜெபத்திற்கு ஒழுங்காய் வரும் படி கற்றுப்பழகி பிறகு ஞானஸ்நானம் பெற்றவர்கள் அநேகமாய் பிற்காலத்தில் நிலைத்திருக்கிறார்கள். மறுதலித்துப்போகிறதில்லை. விசுவாசத்தில் நாளுக்குநாள் தேற்றியடைகிறார்கள். பரீக்ஷை யார்த்தமாய் இருக்கிற காலத்தில் வாசிக்கப் படிக்கத்தெரியாத அநேகர் வேதம் வாசிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். கொஞ்சம் கொஞ்சம் வாசிக்கத் தெரிந்தவர்கள் நன்றாய் வாசிக்கப்பழகிக் கொள்ளுகிறார்கள். 'கற்க கசடற கற்றபின் நிற்க அதற்குத்தக' என்ற முதுமொழியின் படி நிலைத்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த மாதிரியன்றோ.

இத்தகைய முறைகளைக் கையாடி வருவது மெய்யாய்த் திரளான ஜனங்களை ரட்சா பெருமானின் அடிகளுக்கு, மீட்கப்பட்ட கூட்டத்தாரோடு சேர்த்து ஆத்ம லாபம் செய்வதாயிருக்கும். நாம் நன்மை செய்கிறவர்களாகவேயிருப்போம்.

ஆகையால் கடைசி ஆலோசனையாக நான் சொல்வது யாதெனில், நம் திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலும், நம் மிஷன் தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்திலும், கரிசனையாகவும் உண்மையாகவும் தேவாவியின் அருளைப்பெற்று ஊக்கத்தோடு ஜெபித்து உழைத்தால் வருஷத்திற்கு 5,000; 10,000 பேர் மார்க்க ஆராய்ச்சிசெய்து அறிந்து, உணர்ந்து ரட்சாபெருமானின் அன்பை ருசித்து அவருடைய திருவடிகளுக்கு ஆளாகக் கூடும் என்பதே. அப்படிப்பட்ட அனுக்ரகத்தை தேவன் ஆசீர்வதிக்கவேண்டுமென்று நாமெல்லாரும் பிரார்த்திப்போமாக, ஜெபிப்போமாக!

A. S. அப்பாசாமி.

சிங்கரேனி மிஷன்.

(சென்னை அத்தியட்சாதீனப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

இந்த மிஷனுக்கு அநேக கிராமங்கள் உண்டு. இந்தக் கிராமங்களையெல்லாம் ஆதரிப்போர், கல்குத்தா அத்தியட்சராக இருந்த கோப்பிள்ஸ்டற்ன் அத்தியட்சருடைய அம்மாளவர்களும், அவர்கள் சகோதரியுமே. நாலு கிராமங்களைப்பற்றி இங்கு எழுதுவோம்.

1. வெங்கட்டபுரம். 1914-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் முதல் முதலாக மார்க்க அசைவு இங்கே தோன்றிற்று. அதே வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இவ்வூரார்களில் 52 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இந்த சபையாரின் உள்ளான ஜீவியத்தின் வளர்ச்சி மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. தமிழரான பிரசங்கியார் ஒருவர் இவ்விடத்திலேயே வசித்து, ஜனங்களுக்கு இரவும் பகலும் படித்துக்கொடுத்துவந்தார். இராப்பள்ளிக்கூடப் படிப்பினால் ஆறு புருஷரும் ஒரு பெண்பிள்ளையும் வாசிக்க அறிந்திருக்கிறார்கள். முதல் திடப்படுத்தல் கொடுக்கப்பட்டவுடனே பிரசங்கியாரை வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டவே, அவருடைய ஸ்தானத்தில் தெலுங்கரான ஒரு உபதேசியார் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். ஜனங்களெல்லாரும் கிறிஸ்தவர்களாகுமுன் குடிவெறியராயிருந்தார்கள். இப்பொழுது ஞானஸ்நானம் பெற்றிருக்கிற சகலரும் குடியை முற்றிலுமாக விலக்கியிருக்கிறார்கள். பதினெட்டுப்பேர் நற்கருணைக்காரராகியிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் ஒய்வுநாட்களில் வேலைசெய்கிறதேயில்லை. ஆனால் கோவில் ஆராதனை முடிந்தவுடனே பக்கங்களிலுள்ள இடங்களுக்குப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவருகிறார்கள். சபையாரில் மூன்று புருஷர் கிராம மூப்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சபையாருக்குள் எழும்புகிற வழக்குகளையெல்லாம் இவர்களே தீர்த்துவருகிறார்கள். அல்லது சபையின் உபாத்தியாரோடு சேர்ந்து, ஆராதனை வீடுகளில் இருக்கிற ஒழுங்கீனங்களையும், ஒய்வுநாள் மீறுதலான குற்றங்களையும் கண்டித்துவருகிறார்கள். உபாத்தியாருடைய

இது ஓர் சிறந்த போதனை கீதம். சிறையிருப்புக்கு முன்னதாக, தேவாலயம் அழிக்கப்படுமுன், இது எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று சொன்றுகிறது. 'தேவனைச் சேவிப்பது விருதா; அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினால் என்ன பிரயோஜனம்? தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்கள்' என்று மல்கியா காலத்து யூதர் நியாயம் பேசினார்களாம். 37-ம், 49-ம் சங்கீதங்களைப் பாடின பக்தர்: 'பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே, நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறுமை கொள்ளாதே' என்றும் (37: 1); ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டில் மகிமை பெருகும்போது நீ பயப்படாதே' (49: 16) என்றும் புத்திசொல்லி நீதிமான்களைத் தைரியப்படுத்தவேண்டியது அவசியமாயிற்று. 'தன்மார்க்கர் ஜீவித்து, விருத்தராகி வல்லவராவனேன்?' என்ற கேள்வி யோபின் மனதையும் குழப்பச்செய்தது. (யோபு. 21: 7) இவ்வித மனக்குழப்பத்திலகப்பட்ட பக்தனொருவன் தன் சந்தேகந் தீர்ந்த விதத்தை இச்சங்கீதத்தில் பாடுகிறான்.

தன்மார்க்கர் எவ்விதவியாதி துன்பமும், கஷ்ட நஷ்டமுமற்று வாழ்ந்து செழித்தாலும், கர்த்தருக்கு முன்பாகக் குற்றமற்றவனாய் ஜீவிக்கும்படி முயற்சிக்கிற பக்தன் நாடோறும் வேதனைகளையும், உபாதியையும் அடைவதைப்பார்த்த சங்கீதக்காரன் மனந்தளர்ந்து, தேவனைச் சேவிப்பது விருதாவென்றெண்ணி, அவபக்தியின் வழியில் நேராய்ச் சென்று, அதோ கதியாய்க் கெட்டுப்போகும் நிலைமைக்குச் சமீபித்து விட்டானும். அப்படிப்பட்ட சமயத்தில் இதைத்தீர ஆலோசிக்கும்படி தேவாலயத்திற்குட் சென்றனும். அப்போது சத்தியம் அவனுக்குப் புலப்பட்டது. தன்மார்க்கர் வாழ்வு வேஷம், சொப்பனம்; அவர்கள் முடிவு அழிவு; தேவ சிநேகமோ நிலையான ஐசுவரியம்; அவர் சமூகப் பிரசன்னமே பேரானந்தம் என்று கண்ணோர்ந்தானும். தியானம் முடிந்தபின் இச் சங்கீதத்தை எழுதுகிறான். முதலாம் வசனம் பல்லவி என்கலாம். சங்கீதக்காரனுடைய தியானத்தின் முடிவான தீர்மானம் அதிற் கண்டிருக்கிறது.

முகவுரை 1. இஸ்ரவேலருக்கு,—சுத்த இருதயமுள்ளவர்களுக்கு—கடவுள் மெய்யாகவே நல்லவர்தான்!

ஏசாவைப்போல உலகத்தையும் உலக சம்பந்தங்களையும் நேசிக்காமல், தேவனையே தன் ஒரே பங்காகத் தெரிந்துகொள்ளுகிறவர்களுக்குமுற்ற உத்தம இஸ்ரவேலருக்கு கர்த்தர் நல்லவராகவே இருக்கிறார். அவ்வாறில்லாதபோலச் சிலவேளைகளில் தோன்றலாம்; துன்பமும் கண்ணீரும் சிறிதுகாலம் அவர்கள் பங்காயிருந்தாலும் இருக்கலாம். ஆகிலும், அவர் முழுவதும் நன்மைசொரூபியாகவே விளங்குவார் என்பது சத்தியமே சத்தியம். இதுதான் சங்கீதக்காரனுடைய முடிவான தீர்மானம்.

முதலாம் பாகம்.

ஆகிலும், (இப்பாடம் கற்றுக்கொள்ளுமுன்னதாக)

2. நானோ, என் கால்கள் தவறச்சற்றே தப்பினேன்!
என் அடிகள் வழுவச்சற்றே பிழைத்தேன்!

இவ்வித அபாயகர ஸ்திதிக்குத் தான் சமீபித்த காரணத்தை இனி விவரிக்கிறார்:—

3. துன்மார்க்கர் வாழ்வை நான் கண்டபோது,
கர்விதரான அவர்கள்மேல் பொறுமை கொண்டேன்.

4. மரணத்தில் அவர்களுக்கு வேதனைகளில்லை,
அவர்கள் பெலன் ஒடுங்காமல் புஷ்டியாயிருக்கிறார்கள்;

5. மற்றவர்கள் படும் வருத்தத்தில் அவர்கள் அகப்படார்கள்,
மற்றவர்களுக்கு வரும் வாதையை அவர்கள் அடையார்கள்;

6. ஆகையால், கர்வம் சரப்பணியைப்போல் அவர்கள் கழுத்தைச்சுற்றியிருக்கிறது,
கொடுமை வஸ்திரத்தைப்போல் அவர்களை மூடிக்கொண்டிருக்கிறது;

7. அவர்கள் கண் கொழுப்பினால் எடுப்பாய் பார்க்கிறது;
அவர்கள் அகத்தின் எண்ணம் முகத்தில் தெரிகிறது;

8. அவர்கள் பரியாசம்பண்ணி, அக்கிரமமாய் கொடுமைச்சொற் சொல்லுகிறார்கள்;
கர்வமாய்ப் பேசுகிறார்கள்;

9. வானபரியந்தம் தங்கள்வாயை உயர்த்துகிறார்கள்;
பூமியெங்கும் அவர்கள் நாவு சுற்றுகிறது.

10. ஆகையால், அவர்களைச் சேர்ந்தவர்களும் அந்தவழியாகவே திரும்புகிறார்கள்,
தண்ணீரை நிறைய உறிஞ்சிக்குடிக்கிறார்கள்.

11. 'தேவனுக்கு இது எப்படித்தெரியும்?
உன்னதமானவருக்கு அறிவு உண்டோ' என்கிறார்கள்.

12. இதோ! துன்மார்க்கர் காரியம் இது!
அவர்கள் எப்பொழுதும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியை விருத்தியாக்குகிறார்கள்.

13. நானே, என் இருதயத்தைச் சுத்தம் பண்ணினது வீண்தான்;
என் கைகளைக் குற்றமில்லாமையில் கழுவினதும் வியர்த்தந்தான்,

14. ஏனெனில், நாள் முழுவதும் நான் வாதிக்கப்படுகிறேன்.
காலைதோறும் நான் சிட்சிக்கப்படுகிறேன்.

போழிப்புரை. துன்மார்க்கர் சுபமாய் வாழ்கிறதைக் கண்டபோது எனக்குப் பொறுமையுண்டாயிற்று. மரண சமயத்திலும் கூட அவர்களுக்கு வேதனை இல்லை. கடைசி பரியந்தம் சீர புஷ்டியுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். மற்ற மனுஷருக்கு நேரிடும் வருத்தம் அவர்களுக்கு நேரிடுகிறதில்லை. மற்றவர்கள் வீட்டுக்கு வரும் கொள்ளைநோய் அவர்கள் வீட்டுக்குப் போகிறதில்லை இதினால் அவர்கள் கர்வங்கொண்டு அநியாயத்தை ஓயாமல் நடப்பிக்கத் துணிகிறார்கள். அவர்கள் கண்ணின் கர்வப்பார்வையையும், முகத்தின் மூர்க்கத்தையும், பரியாசப் பேச்சையும், குரூரச் சொல்லையும் அங்கார மொழிகளையும், என்ன சொல்ல? வானம் அளாவ, பூமி எட்ட, அவர்கள் நாவு பெரும் பேச்சுப் பேசுகிறது. அவர்கள் மாத்திரமல்ல, அவர்களைச் சேர்ந்தவர்களும் அவ்வாறே செய்யத் துணிகிறார்கள். சித்தின்ப உல்லாச பாத்திரத்தை அவர்களும் வயிறு நிறையக் குடிக்கிறார்கள். இதையார் கண்டது? தேவனுக்கு இது தெரியுமோ என்று மேலிழுச்சிபாய்ச் கேட்கிறார்கள். சுகமாய்க் குடியிருந்து ஆஸ்தியின் மேல் ஆஸ்தியைக் குவித்துக்கொள்ளுகிறார்கள். இவ்வாறு வாழுகிறவர்கள் யார் என்றால், துன்மார்க்கர்! (வா. 1—12). இதைக் கவனிக்கும்போது உத்தமனுயிருப்பதினால் பிரயோஜனமென்னவென்று கேட்கிறேன். குற்றமற்ற கைகளோடு ஜீவிக்கிற எனக்குத் தான் நாள் முழுவதும் வாதை, நாள்தோறும் துன்பம், காலைதோறும் சிக்ஷை!(வா. 13, 14). சங்கீதக்காரன் மனதை வேதனைப்படுத்தின எண்ணம் இதுதான்.

இரண்டாம் பாகம்.

15. இவ்வாறு பேசுவேன் என்று நான் சொல்லிக்கொள்ளுவேனுகில்,
இதோ! உமது பிள்ளைகளின் சந்ததிக்கு அது துரோகமாகும்!

மன ஐயங்களை இவ்வாறு வாய்திறந்து சொல்லலாமாவென்று யோசித்தபோது அது கடவுளுக்கும் அவரது பக்தருக்கும் துரோகமாகுமேயென்று பயப்பட்டுப் பேசாதிருந்தாராம். ஆனுல் இச்சந்தேகம் தீரும்படி, இதைத் தீர ஆலோசிக்கத்தக்கதாக தேவசமூகத்திற் சென்றாராம்.

16. இதை அறிந்துகொள்ளும்படி யோசித்துப்பார்த்தேன். தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் நான் சென்று,

17. அவர்களுடைய பிற்கால முடிவைச் சிந்திக்குமளவும், என் மனதுக்கு அதிகமும் ஆயாசகரமாகவேயிருந்தது.

18. நீர் அவர்களை உள்ளபடி சறுக்கலான இடங்களில்தான் நிறுத்தியிருந்தீர், அவர்கள் அழிந்துபோகும்படி திடீரென அவர்களை விழத்தள்ளுவீர்.

19. கணப்பொழுதில் அவர்கள் பாழாய்ப்போவார்கள்; மகா பயங்கரங்களால் அவர்கள் பட்சிக்கப்பட்டுப்போவார்கள்

20. விழித்தெழும்பும்போது சொப்பனம் ஒழிந்துபோகிறதுபோல, ஆண்டவரே, நீர் எழும்பும்போது அவர்கள் வேஷத்தை இகழுவீர்!

தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்துக்குட் சென்று தேவசமூகத்தில் ஆலோசிக்கவே, சத்தியம் புலப்பட்டது! துன்மார்க்கருடைய ஆஸ்தி, வாழ்வு, பெலன் அனைத்தும் சறுக்கலான ஸ்தலங்களே. அவை நிலையானவையல்ல, அவர்கள் முடிவு நாசம்; கணப்பொழுதில் அழிவு; அவர்களுக்கு மெய்ப்பாக்கியமில்லை; இருதய பயங்கரங்களே அவர்கள் அநுதின அநுபவம். அவர்கள் மேன்மையனைத்தும் வேஷமே. நித்திரையைவிட்டெழும்பும்போது சொப்பனம் ஒழிந்துபோவது போல தேவன் நியாயம்செய்ய எழும்பும் போது, இவையனைத்தும் இல்லாததுபோல எண்ணுவார்.

மூன்றும் பாகம்.

தன் மனம் குழம்பி, தகாதவிதமாய்த் திகைத்தது புத்தியீனம் என்று சங்கீதக்காரன் இப்போது அறிக்கையிடுகிறான். "ஏனெனில்" என்று இவ்வசனம் ஆரம்பிக்கிறது. அதாவது என் இவ்வாறு என் யோசனையில் தவறிப்போனேன் என்றால்,

21. ஏனெனில், என் மனம் வியாகுல மடைந்திருந்தது,
என் இருதயம் குத்துண்டிருந்தது:

22. அப்பொழுது: நான் அறிவில்லாத மூடன்போலிருந்தேன்.
உமக்கு முன்பாக எருமைமாடு (1)போலிருந்தேன்.

என் மனதில் கசப்பிருந்தது; என்னுடைய சஞ்சலங்களினால் முறுமுறுப்பும், பொறுமையும் என் இருதயத்தைப் பிளந்திருந்தது. அப்படிப்பட்ட சமயத்தில் அறிவற்ற மிருகம்போல யோசித்துவிட்டேன். என்று சொல்லி, தன் தப்பிதமான எண்ணத்தை அறிக்கையிடுகிறான்.

23. என்றாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்;
நீர் என் வலது கரத்தைப் பிடித்திருக்கிறீர்!

24. உமது ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி,
பிற்பாடு, மகிமையோடு என்னைச் சேர்த்துக்கொள்ளுவீர்.

25. உம்மைத்தவிர பரலோகத்தில் எனக்கு யார் உண்டு?
நீர் எனக்கு இருந்தால், பூலோகத்திலுள்ள எதுவும் எனக்கு விருப்பமில்லை.

26. என் மாம்சமும் என் இருதயமும் குன்றிப்போகிறது,
தேவனே, என் இருதயத்தின் பெலனும் என் நித்திய பங்குமாயிருக்கிறார்.

27. இதோ, உமக்குத் தூரமாயிருக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.
உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் நீர் சங்காரிப்பீர்.

28. எனக்கோ தேவனுக்குச் சமீபமாயிருப்பதே எனக்கு நன்மை.
கர்த்தராகிய எகோவாவை நான் என் அடைக்கலமாக்கியிருக்கிறேன்.
அவர் கிரியைகளையெல்லாம் (ஓயாமல்) சொல்லி விவரிப்பேன்.

போழிப்புரை. நான் இவ்வாறு அலைக்கழிப்பட்டபோதிலும் நான் எப்பொழுதும் உமது சமூகத்திலிருக்கிறேன் என்பதை இப்போதுணருகிறேன். நான் அல்ல, நீர் என்னைப் பிடித்திருக்கிறீர்; நீரே என்னை நடத்துவீர்; நீரே என்னைக் கடைசியில் மகிமையான முடிவுக்குக்கொண்டுவந்து சேர்ப்பீர்.

பரலோகத்திலேயாரையும் பூலோகத்திலேயாரையும், என் ஆண்டவரே, நீர் எனக்கிருந்தால் போதும்! என் சரீரமும் இருதயமும் குன்றிப்போகட்டும்! பரவாயில்லை! தேவன் என் இருதயத்தின் பலன். அவர் என் நித்திய பங்கு. அதுவெனக்குப் போதும். உம்மைவிட்டுத் தூரமாகப்போவதே நாசம்; உமக்குச் சமீபிப்பதே நன்மை.என்று கற்றுக்கொண்டேன். உம்மை எனக்கடைக்கலமாக்கியிருக்கிறேன். உமது மகத்துவக் கிரியைகளை இனி ஓயாமல் பாடிக்கொண்டிருப்பேன்.

"இஸ்ரவேலருக்கு—சுத்த இருதயமுள்ளவர்களுக்கு—

கடவுள் மெய்யாகவே நல்லவர்தான்!

என்பதே இனி என் கீதம் என்கிறான்—சங்கீதக்காரன்.

(1) 'பிகெமோத்' என்பது எபிரேய பதம். யோபு. 40: 15 பார்க்க. பெரிய மூட மிருகம் என்பது தார்ப்பரியம்.

சகோதரனே சகோதரியே, நீயும் உபத்திரவத்தினால் மனம் சோர்ந்துபோகிறாயா? தேவனைச் சேவிக்கும்படி உத்தமமாய்ப் பிரயாசப்படுகிற உனக்கு உயிர் நஷ்டம், பொருள் நஷ்டம், நேரிடுகிறதே என்று விசாரமுறப்படுகிறாயோ? இவ்வுலகம் உனக்கு இன்பத்தையல்ல துன்பத்தையே அருளுகிறதென்று இலேசமுற்றுத் தவிக்கிறாயோ? துன்மார்க்கர் அநேகர் நன்றாயிருக்க, என்னைத் தேவன் இவ்விதநிலைமையில் வைத்துவிட்டாரே என்று முறுமுறுக்கிறாயோ? பொறு, பொறு, முறுமுறுக்காதே. உன் அறைவீட்டுக்குட் பிரவேசி;முழங்காற்படியிடு. நிதானி. உன்னைப் பற்றிப்பிடித்திருக்கிற பேரன்பரான பிதாவை நோக்கிப்பார்.

உன் கண்ணீரைப் பார்த்துக் கண்ணீர் சிந்துகிற அருள்நாதர் இயேசுபெருமானைக் கண்ணோக்கு. உனக்காகப் பெருமூச்சுவிட்டு விண்ணப்பம்பண்ணுகிற ஆவியானவரை நினை. திரியேக தேவன் உன் பங்காயிருப்பது போதாதா? அவர் உன்னைப் பிடித்திருக்கிறார், விடமாட்டார். கடைசியில் எல்லாம் நித்திய சந்தோஷமாய் விளங்க உன்னை நடத்திக்கொண்டுபோவார். அவனை மாத்திரம் விட்டுத் தூரம்போகாதே; அவருக்கு மாத்திரம் துரோகம்பண்ணாதே. உயிர் நஷ்டம் நஷ்டமல்ல; உன்னை தேவனைவிட்டுப் பிரிவதே நஷ்டம். பொருள் நஷ்டம் நஷ்டமல்ல, பேரன்பருக்குத் துரோகம்பண்ணுவதே நஷ்டம். அவருக்குச் சமீபமாகச் செல். அவரை அண்டிக்கொள். அவர் அன்பைப் பாடு. சுத்த இருதயமுள்ளவர்களுக்கு அவர் முழுவதும் நல்லவராகவேயிருக்கிறார் என்று ஒயாமல் சாக்ஷிசொல்.

என் தேவனே, என் பாகமே, நீர் நித்த மாட்சிமை!

விஸ்தார வையகத்திலே, நீரே என் வாஞ்சனை!

இவ்வானமும் இப்பூமியும், மிகுந்த அற்பமே!

இவைகளில் ஒன்றிலும், உமக்கொப்பில்லையே!

தாழ்மையும் அன்பும் மிஷனெரி ஊழியத்திற்கு முக்கிய ஆதாரம்

நமது இயேசுகிறிஸ்துவாகிய இரட்சகரும், நமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியும் காண்பித்துப்போன முதல் மிஷனெரியிலிருந்து இந்நான்பரியந்தம் இவ்வுலகத்தில் நமது பரமபிதாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற உண்மையாய் உழைத்துவந்த மிஷனெரிமார்களெல்லாருடைய ஜீவிய சரித்திரங்களையும் உற்று ஆராயும்பொழுது அவர்கள் யாரிடத்திலாவது தாழ்மையின்மையையும் அன்புத்தாழ்ச்சியையும் காண்பதரிது. மேலும் அக்கால மிஷனெரிமார் இத்தாழ்மையினாலும் பிறரை நேசித்ததினாலுமே அக்காலம் அவர்களுக்குத் துன்பங்களும், கஷ்டங்களும், நஷ்டங்களும் இருந்தபோதிலும் தற்காலத்தில் அவர்கள் பக்திமான்களென்றும், தேவனுடைய பிள்ளைகளென்றும், ஜனங்களால் நேசிக்கப்பட்டும், புகழப்பட்டும்,கொண்டாடப்பட்டும் வருகின்றனர். இவ்விரண்டு குணங்களும் அவர்களிடத்தில் இல்லாமற்போயின் அவர்கள் இப்பொழுது கல்ல நாகரீகத்தை உண்டாக்கி, புறமதஸ்தருக்கு ஒளிபோல் விளங்குகின்ற நமதாண்டவரின் ராஜ்யத்தை பற்பலவிடங்களிலும் நாட்டியிருக்கமுடியாதென்பது திண்ணமே.

இவ்விரண்டு குணாதிசயங்களையும் நாம் நமக்கு நல்ல பாடமாகப் படித்துக்கொள்ள நமக்குச் சரியான முன்மாதிரி காண்பித்துப்போன நமது இரட்சாபெருமானின் ஜீவிய சரித்திரத்தினின்றும் நன்கு கற்றுக்கொள்ளலாம்.

தாழ்மையானது அன்பின் அவதாரம். அன்பின் பிறப்பே தாழ்மை. ஒருவன் மற்றவனிடத்தில் அன்புவைக்காவிடில் அவன் அவனுக்குத் தாழ்ந்துபோகமாட்டான். இவ்வன்பு பற்பலவகைப்படும்.

முதலாவது, ஒரு முதற்பிறப்பான குழந்தையைக் கையிலே வைத்திருக்கும் ஒரு தாய் அதன்மேல் வைக்கும் அன்பு. இரண்டாவது ஒரு சிநேகிதன் மற்றொரு சிநேகிதன்மேல் வைக்கும் அன்பு. மூன்றாவது ஒரு வாலிபன் தனக்குப்பிற்பாடு மனைவியாகப்போகிற

பெண்ணுக்குக் கொடுக்கும் மாசில்லாத, பக்தியுள்ள அன்பு. கடைசியாக ஒருவன் தன் பிறர் எல்லாரிடத்திலும் வைக்கும் அன்பு. இவர்களெல்லாரிடத்திலும் தாழ்மையானது இல்லாவிடில் அவ்வன்பு சீக்கிரம் மாண்டு போகக்கூடியதே. ஆ! அத்தாழ்மையே அவர்களுடைய அன்பு வர வர குறைந்துபோகாமல் அதிகரித்துக்கொண்டுவரவும், ஒருவர் மேல் ஒருவருக்குப் பற்றுதல் காளுக்குநாள் கூடிக்கொண்டுவரவும், கடைசியாக ஒருவருக்காக ஒருவர் உயிரைக்கூட விட்டுவிட ஆயத்தமுள்ளவர்களாகவும் செய்வதைப் பார்க்கலாம்.

மேற்சொல்லியவைகளில் கடைசியிற் சொல்லப்பட்ட அன்பே பிரதானமாதலால் அதையே நாம் முதலாவது தெரிந்து சிந்திப்போம். இது கிறிஸ்துவினிடத்திலேயே நன்குவிளங்குகிறது. அவர் நமக்குப் போதித்ததுமாத்திரமல்ல நடந்தும் காட்டியிருக்கிறார். முதலாவது அவருடைய போதனைகளை எடுத்துப்பார்ப்போம்.

நாம் முதல் முதலாக வாசிக்கிற அவருடைய பிரசங்கம் "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" என்பதே. இதனால் பரலோகராஜ்யத்திலும் பூலோகத்திலும் தாழ்மையே நமது ஆசீர்வாதத்திற்கு ஏதுவாயிருக்கின்றது என்று காட்டுகிறார். பின்பு சொல்லுகிறார், "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" "உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனுயிருக்கிறானே அவனே பெரியவனுயிருப்பான்" என்று சொல்லுகிறார். அவர் அன்பைப்பற்றியும் சொல்லுகிறார், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருங்கள்: நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" "உங்களில் பெரியவனுயிருப்பவன், உங்களுக்கு வேலைக்காரனுய் இருக்கக்கடவன்" "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்றும் நமக்குப் போதித்திருக்கிறார். இனிமேல் அவர் நடந்து காண்பித்ததைக் கவனிப்போம்.

முதலாவது தம் வார்த்தைகளினால் தம்மைத் தாழ்த்தினார். பிதாவுக்குமுன்பாகத் தம்மை எப்பொழுதும் தாழ்த்தினார். "குமாரன் ஒன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்" "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை .....எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவிற்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்." "என் சித்தத்தின்படியல்ல என்னையனுப்பினவரின் சித்தத்தின்படி செய்யவே வானத்திலிருந்திறங்கிவந்தேன்." "இது என்னுடைய வார்த்தைகளல்ல." இப்படியாக அவர் தம்மைத்தாமே தேவனுக்குமுன்பாகத் தாழ்த்தி பிதா மகிமையடையும்பொருட்டுத் தம்மை யொருபொருட்டாக எண்ணுதது மாத்திரமல்ல, அவர்தம்மை மனுஷர்கள் முன்பாகவும் தாழ்த்தினதையவருடைய வார்த்தைகளினின்றும் பார்க்கலாம். "நான் உங்களுக்குப் பணிவிடைக்காரனைப்போலிருக்கிறேன்" என்கிறார்.

இரண்டாவது தம் செய்கையினால் தம்மைத் தாழ்த்தினார். அவ்வளவு பெரிய தேவகுமாரன், இம்மானிட வேஷம்பூண்டு, எழைக்குலமெடுத்ததே அவருடைய தாழ்மையைத் தூக்கிக் காண்பிக்கிறது.

இயேசு தம் சீஷரின் கால்களைக் கழுவினார். இவ்வன்பும் தாழ்மையுமே எல்லாவற்றிற்கும் பிரதானமானது. ஒரு சகோதரன் மற்றொரு சகோதரன் கால்களைக் கழுவுவதே அரிது; இப்படியிருக்க தேவகுமாரன் மனுஷரிலும் எழையாக எண்ணப்பட்ட கேவலம் செம்படவர்களின் காலைக் கழுவித்துடைத்தது தேவகுணமே. ஆனாலும் இவ்வுலகத்தின் மக்களாயிராமல் பரலோகத்திற்கென்று ஜீவிக்கும் சுத்த பக்திமான்களிடத்தில் அக்குணம் இன்றைக்கும் ஜொலிக்கிறது.

அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணினார். அவர் யூதரால் புறக்கணிக்கப்பட்ட ஜாதியாரிடத்திலும் ஸ்திரீகளிடத்திலும் அன்புகூர்ந்ததினாலே அவர் மத்தேயுவின் வீட்டிற்குப் போஜனம்பண்ணப் போனார். பரிசேயராலும் மற்றும் உயர்குல யூத ஜாதியாராலும் எவ்வளவோ பரிகாசம்பண்ணப்பட்டாலும் அவர் அதை ஒருபொருட்டாக எண்ணாமல் தம் அன்பையும் ஆதரவையும் தம்மண்டை வந்த எந்த ஸ்திரீயாகிலும் சரி ஐசுவரியவானாகிலும் சரி அவனுக்குக் கொடுத்தார்.

இயேசு பரிசேயனான சீமோனுடைய வீட்டில் சாப்பிடும்போது ஒரு பாவியான ஸ்திரீ அவர் கால்களை கண்ணீரினால் நனைத்து தலைமயிரினால் துடைத்துப் பரிமளத் தைலம் பூசினாள். அவளை இயேசு இவ்வுலகத்திற் குரியவராயிருந்திருந்தால் உடனே தம் சமூகத்தைவிட்டுத் துரத்தியிருக்கவேண்டுமென் பதை சீமோனின் யோசனையினால் அறிகிறோம். கிறிஸ்துவோ அவள் எவ்வளவு பாவியானபோதிலும் அவள் அவர்பேரில் அன்பு கூர்ந்ததினால் அவளுக்காகத் தைரியமாய்ச் சீமோனிடத்தில் பேசி, அவனுக்கு அதனால் ஒரு பாடமும் கற்பித்து பாவவிமோசனம் அளிக்கிறார். அவர் நான் யூத ஜாதியில் பிறந்தவன், பரிசேயன் வீட்டில் சாப்பிடுகிறேன், பக்கத்திலிருக்கிற யாவரும் கோபப்படுவார்கள் நகைப்பார்கள் என்று அவரைத் தடுக்கவில்லை.

இயேசு திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகினார், அவர்களைப் போஷிப்பித்தார். அவர்கள் ஒருவனையாகிலும் அவர் தள்ளவில்லை, அவர்களை போஜனவேளை வந்ததென்று அனுப்பிவிடவில்லை. "அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜமான் வேலையாட்களை அனுப்ப வேண்டினார்." "இயேசு கண்ணீர் விட்டார்." ஒரு தேவகுமாரன் மனுஷனைப் போல் கண்ணீர்விட்டார். எதற்காக? தாம் மரியாளின் மேலும், லாசருவின் பேரிலும் மார்த்தாளின்பேரிலும் மற்றும் சுற்றிநின்ற யூதர்களின் பேரிலும் வைத்த பரிதாபத்தினாலும் அன்பினாலுமே.

சமாரியாப் பட்டணமானது யூதராலும் கலிலேயராலும் புறக்கணிக்கப்பட்ட நாடு. நமது இரட்சகரோ அதை அப்படியெண்ணாமல், சமாரிய ஸ்திரீயினிடத்தில் கிணற்றண்டையில் ஜீவத்தண்ணீரைப்பற்றி வற்புறுத்தினபின் இரண்டொள் அங்கே தங்கினதினால், இதிலும் தம் தாழ்மையைக் காண்பிக்கிறார்.

இப்படியாக இயேசு எப்பொழுதும் தாழ்மையும் அன்பும் நிறைந்தவராய்த் தம்மிடத்தில் வந்த எந்த ஸ்திரீயையும் பாவியையும் தள்ளிவிடாமல், அவர்களுக்குள்ளே வாசம்செய்து, அவர்களை நேசித்து, ஆதரித்து, ஆறுதல் சொல்லி, உதவிசெய்து, அவர்களுடைய அன்பையும், பற்றுதலையும், அடைந்தவராய் அவ்வேழைகளிடத்திலே பரம பிதாவின் இராச்சியத்தைஸ்தாபித்துவிட்டுப் போனார். இதனால் அவர் சொன்ன, "தன்னைத்தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்கிற வார்த்தை அவரிடத்திலேயே நிறைவேறினது. ஏனெனில், "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் தாழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்."

இதுநிற்க, முன்சொல்லிய மற்றவித அன்பையும் பார்ப்போம். அதில் முதலாவதாகிய தாய்க்கும் பிள்ளைக்குமிருக்கப்பட்ட அன்பும், புருஷனுக்கும் மனைவிக்குமிருக்கப்பட்ட அன்புமே. நமது வீட்டிற்குள்ளேயே நாம் ஒருவருக்கொருவர் தாழ்ந்துபோவதிலும் ஒருவரையொருவர் நேசிப்பதிலும் நாம் வெளியே போய்க் கர்த்தருக்கென்று ஊழியஞ்செய்ய எவ்வகுதிறதை அறியலாவீட்டிலிருந்து புறப்படாத அன்பு வெளிலும் காணப்படுவது அரிது. தாயிற்கும் பிள்ளைக்குமுள்ள அன்பு. இதைப்பற்றி பவு அப்போஸ்தலன் நமக்கு நன்றாய்க் கற்பிதிருக்கிறார். இது மிகவும் சிறந்த அன்பு. ஆ

லும் கடைசிக் காலத்தில் பரிதாபப்படத்தக்கது. இதில்தாயின் அன்பு எந்நாளும் மாறாத அன்பே. ஒரு தாயாவது தனக்குத்தன் பிள்ளை எந்த கஷ்டத்தையும், கஷ்டத்தையும், வியாகுலத்தையும் உண்டாக்கினபோதிலும் அதின் பேரிலுள்ள அன்பை விட்டுவிடமாட்டாள். ஆகையால் பிள்ளைகள்தான் அதிலும் ஆண் பிள்ளைகளே, குற்றவாளிகளாயிருக்கிறார்கள். வாலிபரே, நீங்கள் பெரிய மனிதராயிருந்தாலும்,எவ்வளவு பெரிய உத்தியோகத்திலிருப்பினும்,உங்களைச் சிறு வயதுமுதல் தொட்டிலில் ஆராட்டி உண்ண ஆகாரம் கொடுத்து, உடுக்க வஸ்திரங் கொடுத்து, தங்கள் சுகத்தையும் பாராமல், உங்கள் வியாதிப்படுக்கையில் உங்களண்டை இராமுழுவதும் விழித்துக் கண்ணடையாமல் தங்கள் உயிரைக் கையிலேந்திப் பார்த்த உங்கள் பெற்றோரை, அவர்கள் முதுமைப்பருவம் வந்து உங்கள்மேல் சாருங்காலம் வரும்போது இரக்கமில்லாமல் தள்ளிவிடாதேயுங்கள். அப்போஸ்தலனுடைய பவுல் சொல்லுகிறதைக் கேளுங்கள், 'பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள், இதுநியாயம். உனக்கு நன்மையுண்டாயிருப்பதற்கும் உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது'. ஆனால் நான் சொன்னபடி தாய்மாருக்குப் பவுல் அப்போஸ்தலன் பாடம் கற்பிக்கவில்லை. பிதாக்களுக்கே புத்தி சொல்லுகிறார். எனெனில் பிதாக்களே தங்கள் புருஷதன்மையினால் திடீரெனக் கோபப்பட்டு விடுவார்கள். 'பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'. சாலோமோன் ஞானி சொல்வதையும் கேளுங்கள். 'உன்னைப்பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே'. ஆகையால் பிள்ளைகளே நீங்கள் உங்களை எப்பொழுதும் உங்கள் தாய் தந்தையருக்குப் பிள்ளைகளென்று அறிந்து அவர்களுக்குத் தாழ்ந்து, அவர்களில் அன்புகூர்ந்து கடைசியில் உங்களையவர்கள் சாருங்காலத்தில் கைவிடாமல் மேன்மைபடுத்தி வருவதினால் கடவுளுக்கு உகந்த பிள்ளைகளாகவும் இவ்வுலகத்திலும் மனுஷதயவையும் அன்பையும் மென்மேலும் பெற்று வளருவீர்களென்பதற்குத் தடையில்லை.

இப்படியாக நமது வீட்டிலிருந்தே தாழ்மையையும், பொறுமையையும், அன்பையும் கற்றபின்னர் உடனே புறமதஸ்தருக்குள்ளாவது மற்றும் கிறிஸ்துவையறியாத ஜனங்களுக்குள்ளாவது நாம் போய் ஊழியம் செய்யயியலாது. ஆகையால் இடையில் மற்றொரு படியிருப்பதைக் காணலாம். இது நாமும் நமது சிநேகிதர்களுமே. வீட்டைவீட்டு வெளியேறினவுடன் நமது சிநேகிதர் வீட்டிற்கே நாம் போகிறோம். நம் சிநேகிதரின் குணத்தால் நம் குணமும் நடத்தையும் கணிக்கப்படும். தெரிந்துகொண்டபின் நமக்கு என்ன கஷ்டம் என்ன இடையூறுகள் நேரிடினும் நாம் தெரிந்துகொண்ட சிநேகிதர்களைக் கடைப்பிடியாய்ப் பிடித்து, ஒருவர்க்கொருவர் தாழ்ந்து ஒருவர் மேலுள்ள குற்றத்தை ஒருவர் பொறுத்து ஒருவர்க்கொருவர் ஒன்றையும் மனதில் வைக்காமல் நேர்நேராய்ப் பேசி சமாதானமாயிருக்கவேண்டும்; இப்படியிருக்கும் சிநேகம் கடவுளுடைய அன்பிலேயே ஸ்திரப்படுகின்றது. உலகப்பிரகாரமான அன்பு கொஞ்சநாளே நிலைத்திருக்கும்.

பகை, பொறுமை, சண்டை, அன்புத் தாழ்ச்சி, பெருமை முதலியவற்றினால் அன்பைக் கெடுத்துக்கொண்டிருக்கும் வாலிபர்கள் எல்லாரும் அன்புக்குக் கீழடங்குவார்களானால் அவர்கள் பெற்றோருக்கும், மற்றோருக்கும் கடவுளுக்கும் மகிழ்ச்சி உண்டாகும். நாம் கெட்டுப்போன எந்த வாலிபர்களையாகிலும் ஒருகாலத்திலும் மனந்திரும்பார் என்றும் நினைக்கமுடியாது. ஏனெனில் இப்படிப்பட்ட பெருமையும், பொறுமையும், பகையும், சண்டையும், ஆகாமியமும் நிறைந்துள்ள வாலிபரில் அநேகர் தங்களை தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்களையும் இரட்சைக்கும் தேவனுடைய மந்தையில் சேர்த்து அவருக்கென்று அதிசயமான ஊழியத்தையும் பற்பல விடங்களில் செய்துவருகின்றனர். ஆ!

வாலிப சிநேகிதரே, நீங்கள்தான் கர்த்தருக்கென்று பலத்தவேலையைச் செய்யக்கூடியவர்கள். சபைக்குத் தூணுகவும் கூடியவர்கள். நீங்கள் கடவுளுக்கென்று செய்கிற ஒவ்வொரு வேலையும் பெரியவர்களால் புகழப்பட்டு, பெற்றோருக்கு மகிழ்ச்சியும் கடவுளுக்குப் பிரியமானதாயுமிருக்கிறது.

இவ்விதமாக அன்பைப்பற்றியும், அதின் பற்பல லட்சணங்களைப்பற்றியும் விவரமாகப் பார்த்தோம். அன்பின் வெளிப்படுதல் தாழ்மையென்றும், அன்பின் ஜெயத்திற்குக் காரணமும் தாழ்மையென்றும் சிந்தித்தோம். முதலாவது வீட்டிலேதான் அன்புதோன்றி, அவ்விடத்திலிருந்து பிறரான மற்றெல்லாருக்குள்ளும் சென்று கிரியை நடப்பிக்கிறது. வீட்டில் அன்பற்றவன் வெளியிலும் அன்பு காட்ட முடியாது. கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணுத தெய்வத்தினிடத்தில் அன்புவைப்பது கூடாத காரியம். மிஷனெரி ஊழியம் என்றால் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிற ஜீவியந்தான். அன்பின் சொரூபியாகிய நமது ரட்சகர் தாழ்மையின் உன்னத மாதிரியாகவும் இருக்கிறார். கிறிஸ்து அதாவது கிறிஸ்துவின் சிந்தை, அதாவது அன்பு, தாழ்மை என்னும் லட்சணங்கள் நம்மில் இராவிட்டால் நாம் ரட்சகனைக் காட்ட முடியாது. காட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டு செய்கிற வேலை மிஷனெரி ஊழியமுமல்ல.

கடைசியாக, நாம் தேவனுக்கு ஏப்பொழுதும் பயந்தவர்களாய், நம் வீட்டிலும், வெளியிலும், அவருக்கென்று நம்மை ஒப்புக்கொடுத்து எந்தச்செய்கையிலும் அவருடைய ஆசீர்வாதத்தையும் கிருபையையும் பெற்று, ஒருவர்க்கொருவர் தாழ்ந்து, ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கிறிஸ்துவைப்போல் எந்த ஏழையாயினும், அருவருக்கப்படத்தக்கவர்களாயினும் அவர்களை ஆதரித்துக் காப்பாற்றி அவருடைய நாமத்திற்கென்று புறமதஸ்தர்களுள்ளாகிலும் நமது சிநேகிதர்க்குள்ளாகிலும் வெளிச்சம்போலிருந்து நமது செய்கையினால் மற்றவர்களுக்குப் பாடங் கற்பிக்கிறவர்களாய் அவருடைய கிருபையையும் அன்பையும் தயவையும் ஆசீர்வாதத்தையும் மென்மேலும் பெற்று வருவோமாக.

தெலுங்குநாட்டுக் கடிதம்

இங்கே ஜூன்மாத முதல் இதுவரையும் மழைகாலம்தான். ஆகஸ்ற்றுமாதம் பத்து பேருக்குமேல் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடுசெய்து கனம் தேவசகாயமய்யரவர்களை வரச்சொல்லி நானும் புறப்பட்டேன். மழையினால் அதிகதூரம் வரமுடியாமல் தடைபட்டுப் போனார்கள். நான் போனவன் பொம்மக்கல்லில் ஆறு! சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு எவ்வளவோ கஷ்டத்தில் திரும்பினேன். சில காலத்திற்குப்பின் ஞானஸ்நானம் கொடுக்க ஏற்பாடு செய்தும் மழையின் கஷ்டத்தினால் வண்டிபோக முடியாததாலும், ஆற்றைக் கடப்பது கஷ்டமாவதாலும் இது வரை ஞானஸ்நானம் கொடுக்க எதுவில்லாமற் போயிற்று. இனி அக்டோபர் கடைசியில் அல்லது நவம்பரில் ஞானஸ்நானம் மானுக்கோட்டை மூப்பாரம் பாஸ்ற்றரேற்றிவிருக்கும். அவர்களுக்காக ஜெபிக்கக்கேட்டுக் கொள்ளுகிறேன். மழைகாலத்திலும்கூட வெயில்காலத்தைப் போலவே உபாத்திமார் வீட்டுக்குமுன் வெளியில் ஜெபம்பண்ணுவது கூடாதாகையால் அதிகமழைபெய்து ஜெபம் பண்ணக்கூடாத நேரத்தில் தங்கள் வீட்டுக்குள் ஜெபம் செய்கிறார்கள். சிலகிராமத்தில் ஜெபத்திற்காக வீட்டுக்கு முன் பந்தல்போட வேண்டும் என்று ஆயத்தம்பண்ணுகிறார்கள். நாங்கள் சபையை சந்திக்கப்போனால் உபாத்திமார் வீட்டுக்கு முன்னுள்ள விராந்தாவில் தான் இருந்துவருவோம். மழைகாலத்தில் வீடு ஒழுகும்பொழுது மிகுந்த கஷ்டந்தான். எவ்விதமான கஷ்டமிருந்தாலும் மாதம் 15 நாள், குறைந்தது 12 நாளாவது சபையை சந்தியாமலிருக்கமாட்டோம். சபையில் மகாகனம் அத்தியட்சரவர்கள் ஏற்படுத்திய பாடங்கள்தான் படித்துக்கொடுக்கிறார்கள். சில சில பாடங்களில் பாடங்கள் நன்றாய்ப் படித்து வருகிறார்கள். பிரதி சபைக்கு ஒவ்வொரு உபாத்திமார் இருந்து கிரமமாய் படித்துக்கொடுத்து வந்தால் எல்லா பாடங்களிலும் பாடங்கள் படித்தவருவதுடன் சபையும் விர்த்தியாக இடமுண்டு. அநேக பாடங்களில் உபாத்தி

அயர்லாந்தின் அப்போஸ்தலனை

பரி. பேற்றிக்.

பாவம் பிசாசுக்கும்
சிறைப்பட்டோர்களே!
உங்களை ரட்சிக்கும்
மீட்பர் நல் யேசுவே.
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டுவந்தது!

பூர்வீக ரோமர் அதிக அன்போடும் உருக்கத்தோடும் எக்காலமும் நினைத்துக் கண்ணியப்படுத்திவந்த ஒரு வீரன் உண்டு. அவன் பேர் நெருலஸ். களகர்த்தனுயிருந்து தன் தேசத்தாருக்காக வைராக்கியத்தோடும் வெற்றிகளோடும் போர்செய்துகொண்டுவந்த இந்த வீரன் சத்துருக்கள் கையில் அகப்பட்டு சிறைப்படுத்தப்பட்டான். குரூரமாய் நடத்தப்பட்டு வருந்தி இளைத்த இவனை சத்துருக்கள் ரோமரிடத்தில் அனுப்பி சமாதான நிபந்தனைகளை ஏற்படுத்தக் கட்டளை கொடுத்தார்கள். தன் தேசத்திலேயே போய் இருந்துவிடாமல் சிறைச்சாலைக்குத் திரும்பி வந்து விடுவதாக சத்தியம் செய்துகொடுத்து, தன் தேசத்திற்குப்போய் சமாதானத்திற்கு உடன்படவேவேண்டார், சீக்கிரம் உங்களுக்கு ஜெயம் கிடைக்கும் என்று சொல்லிவிட்டு, மனிவிமக்கள், தேசத்து பிரபுக்கள் எல்லாரும் எவ்வளவோ கெஞ்சியும், வருந்தியும் கேளாமல் மறுபடியும் சத்துருக்களுடைய சிறைச்சாலைக்குப்போய் அங்கே சில நாட்களுக்குள் மாண்டு போனனும். சத்தியத்திற்குக் கீழ்ப்பட்டு, சுயாதீனத்தையும் ஜீவனையும் வெறுத்து, சத்துருக்களுடைய சிறைச்சாலைக்குச் சென்றதினால் பேர்போன வீரனுக் எண்ணப்படுகிறான். சத்தியமாகிய கிறிஸ்து ரட்சகர்பேரிலுள்ள அன்பினால் எவ்வப்பட்டு, தான் மிகக் கொடுமையாய் சிறைப்படுத்தப்பட்டிருந்த தூர தேசத்திற்கு, தன் பெற்றோரையும், சுயதேசத்தையும் சுயாதீனத்தையும் சந்தோஷத்தையும் வெறுத்துச்சென்ற பேற்றிக் பக்தனை நாம் எவ்வளவு வீரனுக நன்குமதிக்க வேண்டும்!

இவ்வுலக ஜீவியத்தில் இன்பகாலத்தில் கடவுளைப் பற்றிய எண்ணமேயில்லாமல் ஜீவிக்கிறவர்கள் துன்பமாகிய மேகங்களின் மத்தியில் அவருடைய வாக்குத்தத்தம், இரக்கம் பராமரிப்பு ஆகிய வானவில்லைக்கண்டு களித்து அவரையே தரிசித்து அவருக்கே தொண்டர்கள் ஆகிறதுண்டு.

செல்வாக்கும் கண்ணியமும் உடைய பெற்றோர்களோடு வளர்ந்துவந்த பேற்றிக்கும் செல்லப்பிள்ளையாய் கஷ்டமேயில்லாமல் தெய்வமேயில்லாமல் தான் ஜீவித்துவந்தார். ஸ்கொத்லாந்தில் பனேவன் என்னும் இடத்தில் இவருடைய தகப்பனுர் உதவிக்குருவாயிருந்தார். இவரது பாட்டனுர் குருவாக இருந்தவர். இவர் 389-ம் வருஷத்தில் பிறந்தார். தெய்வ ஊழியரின் குடும்பத்தில் இருந்தும் தெய்வத்தை அறியாதவராய் ஜீவித்துவந்தார். பதினுறும் வயதில் அயர்லாந்து சேனைகளால் பிடிக்கப்பட்டு அத்தேசத்திற்கு சிறையாகக் கொண்டுபோகப்பட்டார். அங்கே ஒரு மனிதனுல் விலைக்குக்கொள்ளப்பட்டு அவனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டு வந்தார். சாப்பாடு முதற்கொண்டு இடையாமல் அதிகக் கஷ்டத்தை ஆறு வருஷங்களாக அனுபவித்து வந்தார். ஏகாந்தமாயும் கஷ்டத்தின் மத்தியிலும் ஜீவிக்கும் போது தெய்வத்தினுடைய அமர்ந்த மெல்லிய சத்தம் கேட்டது. "அங்கே ஆண்டவர் என் இருதயத்தைத் திறந்து என் அவிசுவாசத்தையும் என் பாவத்தையும்பற்றி உணர்த்தி என் முழு இருதயத்தோடும் என்னை அவரிடத்தில் திருப்பினர்" என்று தன் சிறையிருப்பின் காலத்தைக்குறித்துச் சொல்லியிருக்கிறார். இன்னமும் அந்த ஆறு வருஷங்களைக் குறித்தும், "என் சிறையிருப்பு என்னுடையகன்மைக்காகவே வந்தது. எனென்றால் அதின் மூலமாய்த்தான் நான் என்னுடைய ரட்சிப்பைக் குறித்து முதலாய் கவலையற்றவனுயிருக்கும்போது, சீர்திருத்தப்பட்டு, மற்றவர்களுடைய ரட்சிப்புக்காகக் கவலைப்படவும் கஷ்டங்களை அனுபவிக்கவும் பாத்திரமாக்கப்பட்டேன்" என்று சொல்லுகிறார். தான் விதேலையாக்கப்படும்படி ஜெபித்துக் கொண்டேயிருந்த இவர் ஆறுவருஷங்களின் முடிவில் தப்பிக்கொள்ள சமயம் வாய்த்தது. ஆனால் மறுபடியும் ஓர் முறை சிறைபிடிக்கப்பட்டு அடிமையாகி இரண்டாந்தரமும் தப்பி

ஒடி பிரான்ஸ் தேசத்தில் போய்ச் சேர்ந்தார். இது நடந்தது 412-ம் வருஷத்தில். அதிலிருந்து மூன்று வருஷங்களாக குருக்களோடு ஒரு மடத்தில் ஜீவித்துவந்தார். பிறகு தம் சொந்த தேசத்திற்குத் திரும்பிப்போனார். ஆனால் அங்கே நிலையாக இருக்கும்படி மனம் சம்மதிக்கவேயில்லை. எனென்றால் தான் சிறையாக இருந்த காலத்தில் அயர்லாந்து குடிகளுடைய அறிவீனத்தையும் கொடுமைக் குடியிருப்புகளாக இருந்த அஞ்ஞானத்தையும் பார்த்து அவர்கள்பேரில் பரிதாபங் கொண்டு, அவர்களுக்கு சுவிசேஷ ஒளியைக் கொண்டுபோகவேண்டும் என்று தீர்மானித்திருந்தார். இப்படியிருக்க, ஒருநாள் இரவில் ஒரு சொப்பனங்கண்டார். அதில் அயர்லாந்திலிருந்து ஒரு மனிதன் ஒரு நிருபங்கொண்டு வந்ததாகவும், அச்சமயத்தில் "பரிசுத்த வாலிபனே, நீ வந்து எங்கள் நடுவில் வசிக்கும்படி நாங்கள் உன்னை வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று ஓர் சத்தம் பிறந்ததாகவும் கண்டார். இவருடைய தீர்மானத்தைப் பெற்றோர் கண்டுகொண்ட போது பல வருஷங்களாகத் காணதிருந்த தங்கள் மகன் கொடுங்கனை அனுபவித்த அந்த இடத்திற்குப் போகவே கூடாதென்று தடுத்தார்கள். ஆனால் அவரோ ஒரே காதனையாக போகத்தான் வேண்டுமென்று சொல்லி, அந்த ஊழியத்திற்குத் தன்னை ஆயத்தப்படுத்தும்படி பரிசுத்த வேதத்தை அதிக சுறுசுறுப்போடு படித்து ஆராய்ச்சி செய்துவந்தார். 415-ம் வருஷம் குருவாகப் பட்டம்பெற்று, பதினாலு வருஷங்களுக்குப் பிறகு அத்தியட்சராகவும் அபிஷேகம் பெற்றார். பிறகு அயர்லாந்துக்குச் சென்றார். "கொடிய கஷ்டங்களை எனக்குச்செய்த ஜனங்களிடத்திற்கு மறுபடியும் திரும்பிப் போகும்படி என்னை எவனது தெய்வகிருபையும், சுவிசேஷமும், அதின் வாக்குத்தத்தங்களுமே" என்று அவர் எழுதுகிறார்.

அக்காலத்தில் அயர்லாந்தானது ஒரே அரசன் கீழ் இராமல் அநேக சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. பேற்றிக் அத்தியட்சர் ஜனங்களைச் சுவிசேஷத்திற்குத் திருப்ப வேண்டுமானால் அரசர்கள் மூலமாய்த்தான் கூடுமென்று ஆலோசித்து, அரசர்களுடைய அரண்மனைகளுக்குப் போய்ப் பிரசங்கித்து வந்தார். இவரை சிறைப்பிடித்து வைத்திருந்த மிலியூஸ் என்னும் எஜமானைக் குணப்படுத்தும்படி முயன்றும் கூடாமற்போய்விட்டது. நமக்கு அடிமையாக இருந்தவன் கிறிஸ்து நம்மை அவனுக்கு இணங்கும்படி செய்துவிடுவான் என்று வெட்கப்பட்டு, தன் வீட்டைத் தீக்கொளுத்தி தான் அதில் விழுந்து இறந்து போனதாகச் சொல்லப்படுகிறது. எல்லா அரசர்களிலும் பிரதானமான அரசனுடைய சகோதரனை லாகேயர் என்பவன் கிறிஸ்தவனாகி இவருடைய ஊழியத்திற்கு பெரிய உதவிகள் செய்துவந்தான். விக்கிரகங்கள் தெய்வங்கள் அல்ல, மனுஷனுடைய வேலைப்பாடுகளும் உயிரற்ற வஸ்துக்களும் தான் என்று ஜனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு விக்கிரகங்களைக்கண்ட இடமெல்லாம் உடைத்துப்போடும்படியாக உத்தரவு கொடுத்தார். அயர்லாந்தின் வடபாகம் முழுவதும் அலைந்து திரிந்து சுவிசேஷத்தைக் கூறிவந்தார். 444ம் வருஷம் ஒரு அரசனால் ஆர்மா என்னும் இடம் இவருக்கு அளிக்கப்பட்டது. அதைத் தான் தம்முடைய ஸ்தாபனமாக்கினார். இன்றைக்கும் ஆர்மா பட்டணம் அயர்லாந்தின் மகா பிரதானமான அத்தியட்ச மண்டலமாயிருக்கிறது. ஜனங்களுக்குள் அதிக சாதாரணமாகப்பழகி அவர்களுடைய பாஷைகளையும் ஆசாரங்களையும் எளிதிற் கற்றுக்கொண்டார். அயர்லாந்தின் தென் பாகத்தில் அவர் அதிக ஊழியம் செய்யும்படி அவசரம் இருக்கவில்லை. ஆனால் அங்கேயும் இரண்டு அரசர்களுடைய குமாரரை மார்க்கத்தில்சேர்த்து ஞானஸ்நானங்கொடுத்தார். அநேக இடங்களில் முழுவதுமாக அஞ்ஞானம் நீங்கி சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் அஞ்ஞான பழக்கங்கள் வீண்பக்தி முதலிய கொடிய மோசங்களின் மத்தியில் இருந்த போதிலும் கொஞ்சமும் கவறிவிடாதபடி ஆவியின் ஞானத்தோடு கிறிஸ்துவின் சுத்த உபதேசத்தில் பலமாய் தம்முடைய சபைகளை ஸ்தாபித்தார்.

ரூரா என்னும் இடந்தான் மகா பெரிய அரசனுடைய இடமாக இருந்தது. ஒரு

ஈஸ்டர் தினத்தின் முந்தின சாயங்காலத்தில் இவர் அந்த இடத்தின் சமீபத்தில் தமது உடன் ஊழியரோடு தங்கியிருந்தார். அந்தநாள் அக்கினிக் கடவுளுக்கு பண்டிகையானதால் அரசனுடைய சமுகத்திலிருந்து வெளிச்சம் காட்டப்படுமளவும் ஒருவரானது தீமூட்டக்கூடாது என்பது ராஜகட்டளை. மிஷனெரிமார் இதை அறியாதவர்களாய் வழக்கப்படியே தீமூட்டி சமைக்கத் தொடங்கினார்கள். இதைக் கண்ட அரசனுடைய பூசாரிகள் அந்தத் தீயை அரசனுக்குக் காட்டி "அதோ எரிகிற அக்கினியை உடனே அவித்துவிடாத பட்சத்தில் அது நம்முடைய அக்கினியையெல்லாம் அவித்துப்போடும்" என்று எச்சரித்தார்கள். மூடபக்தியோடு பேசப்பட்ட வார்த்தைகளாயினும், எல்லாவற்றையும் தனக்குக் கீழ்ப்படுத்தும் வல்லமையுள்ள ஜீவனுள்ள தேவனுடைய சுவிசேஷமாகிய அக்கினி அயர்லாந்து தேசம் முழுவதையும் நிரப்பிவிடும் என்று தீர்க்கதரிசன கருத்துடையவைகளாயிருந்தன. அரசன் அத்தியட்சரை உடனே கொண்டுவரும்படிக் கட்டளையிட்டான். ஆனால் இவர் அதிக ஞானத்தோடும் இணங்குநெஞ்சோடும் அரசனோடு பேசினதால் தன்நாடு முழுவதிலும் அவர் பிரசங்கிக்கலாம் என்று அனுமதி கொடுத்தான். அடுத்த நாளாகிய ஈஸ்டர் தினத்தில் அவர் அரசனுடைய அரண்மனையிலேயே பிரசங்கித்து, ராஜகுடும்பத்திலுள்ள சிலர் கிறிஸ்துவினுடையவர்களாகும்படி செய்தார். அதோடு சுவிசேஷம் அந்த நாடு முழுவதிலும் பரம்பும்படி வழி திறக்கப்பட்டது. அந்தஸ்துள்ள குடும்பங்களின் பிள்ளைகளும் வாலிபரும் இவரைக்கண்ட மாத்திரத்தில் இவரண்டை வந்துவிடும்படியான ஒரு ஆவியின் வரம் இவருக்கு இருந்தது. உதாரணமாக, ஒரு பெரிய அதிபதியின் வீட்டில் இவர் பிரசங்கித்து அந்தக்குடும்பம் முழுவதையும் கிறிஸ்துவினுடையவர்களாக்கின போது, அந்தக் குடும்பத்தின் முதற்பிள்ளையான பெனிச்னஸ் என்னும் பிள்ளையாண்டான் அத்தியட்சரோடேயே இருந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான். அவனுடைய பெற்றோரும் உறவினரும் எவ்வளவு தான் வருந்தி கெஞ்சினபோதிலும் அவன் அவரைவிட்டுப் பிரியாமல், அவரோடேயே உழைத்து, சகல கஷ்டங்களையும் அனுபவித்து, அவருடைய மரணத்திற்குப்பின் ஆர்மா பட்டணத்தின் அத்தியட்சர் ஆனான். தம்முடைய காலத்தோடு சபைகள் அழிந்து போகக்கூடாது, எக்காலமும் நிலைத்திருக்க வேண்டும் என்று கருதி அநேக கல்விஸ்தாபனங்களைக் கட்டி, உலக அறிவு பக்தி அறிவு ஆகிய இரண்டையும் போதிக்கும்படி ஆசிரியர்களையும் போதகர்களையும் ஏற்படுத்தினார்.

இங்கே போதிக்கப்பட்ட அறிவின் மேம்பாட்டைப் பார்த்து வியந்து இங்கிலாந்து தேசத்திலிருந்தும், ஐரோப்பா கண்டத்தின் மற்றெல்லா தேசங்களிலிருந்தும், பிரபுக்களும் பெரியோரும் தங்களுடைய பையன்களை அயர்லாந்தின் கலாசாலைகளுக்கு அனுப்பினார்கள். 'பரிசுத்த தீவு' என்னும் பேர் அயர்லாந்துக்கு உண்டாயிற்று. 461-ம் வருஷம், எஜமானுடைய சித்தத்தை நிறைவேற்றித் தீர்ந்து இளைப்படைந்த இந்த பக்தன் தம்முடைய நித்திய ஓய்வுக்குட்பட்டார். திரளான ஜனங்கள் இவர்காலத்திலேயே கர்த்தரிடமாக சேர்க்கப்பட்டார்கள். இவர் காலத்திற்குப் பின்னும் சுவிசேஷம் எவ்விடங்களுக்கும் செல்லவும் ஞானமான ஏற்பாடுகள் செய்திருந்தார். வாலிபர் உலக இன்பங்களையும் வீண் ஆசாபாசங்களையும் வெறுத்துவிட்டு சன்மார்க்க விஷயங்களில்ஈடுபடும்படி தூரவரை ஜீவியத்திற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

அவருடைய ஊழியத்தில் ஓர் விசேஷித்த குறிப்பு என்னவெனறால் அஞ்ஞான வழக்கங்களை முற்றிலும் வீண் பைத்தியம் என்று தள்ளிவிடாமல், அவைகளுக்குப் பதிலாக கிறிஸ்துவின் சுத்த உபதேசத்திற்கேற்ற வழக்கங்களை ஏற்படுத்தினதுதான். இதினால் ஜனங்கள் தங்களுடைய பழைய வழக்கங்களின்சட்டங்களுக்கு இடங்கொடுத்து பின்வாங்கிவிடாமல் புதிய சுத்தமான வழக்கங்களின் பேரில் மனதைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. ஆகவே வெளிச்சம் உண்டாக்கக்கூடாது என்று சிருஷ்டி கர்த்தர் கட்டளை கொடுத்து அயர்லாந்து தேசம் முழுவதும் சுவிசேஷ ஒளியால் நிரம்பும்படி செய்தார்.

ஆதியில் இருளை
அகற்றி ஒளியை
படைத்த நீர்,
வேதம் பரம்பவும்
லோகத்தார் யாவரும்
அவ்வொளி காணவும்
அருள்செய்வீர். ஆமென்.

இலங்கைக் கிளை வருஷாந்தக் கூட்டம்.

சென்ற மாதம் 19-ம் தெய்தி இலங்கைக் கிளையின் வருஷாந்த பொதுக்கூட்டம் கொழும்பு, கால்வேஸ் பள்ளிக்கூடத்தில் நடத்தப் பட்டது. சந்தோஷ முகங்களால் கூட்டம் நிரம்பியிருந்தது. சிறுட் சங்கத்துக்காக வெளிச்சபைகளிலிருந்து கொழும்புக்கு வந்திருந்த போதகன்மாரில் பலரும் சில சபை பிரதிநிதிகளும் கூடிவந்திருந்தனர். கிளைச் சங்கத்தின் அக்கிராசனராகிய Mr. J. A. முத்துவேல் அவர்கள் ஆசனபதியாய் வகித்திருந்தார். ஓர் கீதம் பாடியபின் கனம். A. பாக்கியநாதன் ஐயர் ஏசாயா 52-ம் அதிகாரத்தில் முதல் 10 வசனங்களை வாசிக்க, கனம். J. யார்க் ஐயர் ஜெபம் செய்தார். காரியதரிசி Mr. P. S டேவிட் பின்வருகிற சுருக்கமான ரிப்போட்டை வாசித்தார். பொக்கிஷதாராகிய Mr, S. E. சின்னையா, வரவு செலவு கணக்குகளை வாசித்தார்.

அதன்பின் இலங்கை வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் பொதுக் காரியதரிசியாகிய Mr. J. R. ஐசக் பி. ஏ. அவர்கள் "நீங்களே அவர்களுக்குப் போசனம் கொடுங்கள்" என் பதின்பேரில் ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். முக்திசேரவேண்டுமென்று இந் துக்களுக்கு இருக்கும் பேர் ஆவல் எவ்வளவு அதிகம் என்று, அடிக்கடி கிறிஸ்தவர்களையும் விட அதிக ஊக்கம் பாராட்டிசெய்யும் முயற் சிகளாலும், கஷ்டங்கள் அநுபவிப்பதாலும், சிலசமயங்களில் தங்கள் சரீரத்தை மெத்த வேதனைக்குட்படுத்துவதாலும் அறியலாகும். இவர்கள் ஊக்கத்தையும் முயற்சியையும் சரியான பாதையில் திருப்புவது கிறிஸ்தவர் கள் கடமை: இக்காலத்தில் கும்பல் கும்பலாய் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கிறிஸ்து மார்க்கத்தை அனுசரித்துக்கொள்ளவந்தபோதிலும், இவ்வளவு திரள் ஜனங்களுக்குப் போதனைசெய்து கிறிஸ்துமார்க்க சத்தியங் களைப் படிப்பிக்கும் எதுகாலங்களோ வேலையாட்களோ இல்லாமையால் சிலரை மாத்திரம் சபையில் சேர்த்துக்கொண்டு மற்றவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடாத நிலமையிலிருக்கிறது. இவர்களுக்கு ஊழியரை ஏற்படுத்துவதிலும் ஆதரிப்பதிலும் உதவிசெய்வது நமது கடமை. கர்த்தர் நம்மை இரட்சிப்பின் ஆசீர்வாதங்களால் ஆசீர்வதித்திருப்பது இக்காலத்தில் மற்றவர்களுக்கு தம்முடைய மீட்பை நாம் சொல்லுகிறதற்காகத்தான். மிஷனரி ஆவியில்லாத சபை நிச்சயமாய்க் குன்றிப் போகும் என்று சொன்னார். தம்முடைய வட இந்திய பிரயாணங்களில் கண்ட காட்சிகளில், இவர்கள் முழு உலகத்தின் ஜனங்களோ என்று பிரமிக்கத்தக்கதான மகா திரள் கூட்டமாய்புண்ணியதீர்த்தமாடகங்கையோடு யமுனை நதி சந்திக்குமிடத்தில் நதியின் கரை வந்து சேர இன்னும் பத்து மயில் இருக்கும் போதே ஜனம் நெருக்கமாகி இந்தப் பத்து மயில் ஜனத்திரளையும் கடந்து தண்ணீர்க் கரைவந்துசேர ஏழெட்டுநாட் சென்று சுசிகர விதிகளை அனுசரித்துக்கொள்ளக்கூடாத நிலமையிலாகி மகா கஷ்டத்தோடு நதி வந்துசேர்ந்து, இங்கும் பத்து மயிலுக்கு அதிதமான தூரம் நதிக்கரை நெடுகநின்று, தங்கள் பாவம் நீங்கிப்போமென வீண் நம்பிக்கையுடன் ஸ்நானம்பண்ணும் பரிதாபமான காட்சியையும்; இன்னொரு இந்திய நதிக்கரையில் நூறு நூறுன ஜனங்கள் மகாகனம். அசரியா அத்தியட்சர் அவர்களால் ஞானஸ்நானம் பெறும் அழகான சந்தோஷ காட்சியையும் கேட்டோர் மனதுருகச் சொன்னார்.

பின்பு கனம். J. G. டாஸ் ஐயர் "இது ஆண்டவருக்கு வேண்டும்" என்பதின்பேரில் இருதயங்களை ஊடுருவிய பிரசங்கம் செய்தார். நிசாம் ராட்சியத்தில் இருளிலிருந்த ஏழை ஜனங்களை கர்த்தர் பார்த்து இவர்கள் எனக்கு வேண்டும் என்று சொல்லுகிறார். திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களை நோக்கி இவர் இவர் என் ஊழியத்துக்கு வேண்டும் என்று சொல்லுகிறார். ஏறக்குறைய 14 வருஷங்களுக்குள் தோர்ணக்கல்லில் செய்யப்பட்டிருக்கிற பெரியவேலைகளையும் பலன்களையும்

கவனிக்கையில் இவை தேவனுல் நடத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறதென்று நிச்சயித்து சந்தோஷத்துடன் அவரை ஸ்தோத்திரிக்கிறோம். இலங்கையிலும் போதகன்மாராயினும் சபையாராயினும் நம் ஒவ்வொருவரையும் காட்டி நீ எனக்கு வேண்டும், உன் இருதயம் எனக்குவேண்டும், உன் பொருள் எனக்கு வேண்டும், உன் ஜெபம்எனக்கு வேண்டும் என்று தேவன் சொல்லுகிறார்.

தென் இந்தியாவில் நம்மை மேன்மைப் படுத்தி இரட்சிப்பின் சுவிசேஷத்தை நமது கையில் கொடுத்திருக்கிறார். ஒரு பெரிய உத்தரவாதத்தையும் பெற்றிருக்கிறோம். மிஷனரி ஊழியத்தைச் செய்து அதன் தாபரிப்புக்காக உதவிபுரிகிற சபைகள் எவ்வளவாய் முன்னுக்குவருகிறதென்று நாம் காண்கிறோம். தேவ அன்பைநம்முடைய இருதயங்களில் உணர்ந்து இரட்சிப்பைக் கண்டடைந்தவர்களாயிருந்தால் இந்த ஊழியத்தைச் செய்ய பாத்திரவான்களாயிருப்போம் என்று சொன்னார்.

அக்கிராசனர் சமயோசித வார்த்தைகள் சொல்லியபின் கனம். C T. உல்லியம்ஸ் ஐயர் ஜெபம் செய்யக் கூட்டம் முடிவடைந்தது.

இந்திய மிஷனரி சங்கத்தின் இலங்கைக் கிளை ரிப்போட்டு

கிறிஸ்துவுக்குள் கனம்பெற்ற போதகன்மாரே அன்பான சபையாரே, உலகின் சகல தேசத்தாருக்கும் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்க கட்டளையிட்டுப்போயிருக்கும் இரட்சகரின் கற்பனையை சிரமேற்கொண்டு, அவர் அன்பின் ஆவியால் ஏவப்பட்டு சொந்த தேசத்திலும் அந்நிய தேசத்திலும், சுயபாஷைக்காரரிடையிலும் மறுபாஷைக்காரரிடையிலும், நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கும் ஊழியருக்காகவும் அவ்வூழியத்திற்கு உதவிசெய்வோருக்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்.

இருளில் மூழ்கி நித்திய அழிவுக்கு விரைந்து செல்லும் ஏழை ஆத்துமாக்களை ஜீவ பாதைக்குத் திருப்பும் சாவகாசம் நம்மில் அநேகருக்கு இல்லையாயினும், இந்த இரக்கத்தின் ஊழியத்துக்கு உதவிபுரியும் சலாக்கியம் இந்திய மிஷனரிச் சங்கத்தின் மூலமாய் நமக்குக் கிடைத்ததற்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்.

மகா கருணைத் தேவன் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுக்குள் 14 வருஷங்களுக்கு முன் சுவிசேஷ ஊழியத்தின் ஆவலைப் பிறப்பித்தார். சிலர் தங்களை சுவிசேஷ வேலைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அநேகர் பண உதவி வாக்குச் செய்தார்கள். சுயபாஷைக்காரருக்குள் சுவிசேஷத்தைக் கூறக்கூடாத தடை நேரிட்டது. ஆயினும் மனமடிவு அடையவில்லை. மத்திய இந்தியா நிசாம் ராட்சியத்தில் தெலுங்கு பாஷைக்காரருக்குள் பெரிய வாசலைக் கர்த்தர் திறந்தார். நமது மிஷனரிகள் அங்கு போய் தெலுங்கு பாஷையைக் கற்று வேலை ஆரம்பித்தார்கள். தேவன் ஆடுகளைச் சேர்த்தார், மந்தை ஆயின. பள்ளிக்கூடங்கள், ஆராதனை ஸ்தலங்கள், அநாதவர் ஸ்தாபனங்கள், கைத்தொழிற்சாலைகள் எழும்பின. உதவியின் அவசியம் அதிகரித்தது. திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, எல்லா இந்திய கிறிஸ்தவர்களும் இந்த வேலையை ஆதரிக்க கடன்பட்டவர்கள் என்று உணர்த்தப்பட்டு உதவி சேகரிக்கும் கிளைச் சங்கங்கள் அங்கங்கே ஏற்படலாயின.

இந்த சுவிசேஷ வேலை விஷயமாய் சென்ற வருஷம் நவம்பர் மாதம் கனம். D.S. டேவிட் போதகர் இங்கு வந்திருந்தபோது கனம். சார்ல்ஸ் என்றி, J. V. டானியல், G. M. அருளானந்தம் போதகன்மாரின் உதவியால் இந்த இலங்கைக் கிளையும் ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த வருஷத்து உத்தியோகஸ்தர்:— Mr. J. A. முத்துவேல் அவர்கள் அக்கிராசனர்; கனம். சார்ல்ஸ் என்றி, J. V. டானியல், G. M. அருளானந்தம், J. G. டாஸ், J. யார்க் ஐயர்மார் உப அக்கிராசனர்; Mr. P. S. டேவிட் காரியதரிசி; Mr. S. E. சின்னையா பொக்கிஷதார். மேற்சொல்லிய உத்தியோகஸ்தருடன் Messrs சார்ல்ஸ் ஏசுவடியான், Y. R. பால், G. தேவதாஸ், G. R. எண்ஸ்மன்,

J.C. ஜாஷுவா, T.C. வன்னித்தம்பி, A.M. குலசேகரம், T. N. சாமுவேல், Y. ஆசீர்வாதம், S. V. M. திரவியம், S பிச்சமுத்து, Y. தானியேல் என்பவர்கள் கமிற்றியாய் ஏற்பட்டு இந்த இளங்கிளையாகிய இலங்கைக் கிளையை வளர்த்துவருகிறார்கள்.

சென்ற பெப்ருவரிமீ 11-ம் தெய்நியை தாய்ச் சங்கம் மன்றாட்டு நாளாக அனுசரித்ததால், இலங்கைக் கிளையும் அந்நாளை இந்திய மிஷனரி சங்கத்துக்காக பரலோகத்தின் தேவனை வேண்டிக்கொள்ளும் மன்றாட்டு நாளாக ஆசரித்து, அடுத்த நாள் பிறக்கோட்டை ஆல்சேன்ஸ் ஆலயத்தில் காலையில் நற்கருணை ஆராதனையும் சாயங்காலத்தில் விசேஷித்த பிரசங்கமும் ஆராதனையும் நடத்தப்பட்டது. இக்கிளையின் மூலமாய் தாய்ச்சங்கத்தின் பத்திரிகையாகிய "சுவிசேஷ பிரபல்லிய வர்த்தமானி" 65 பிரதிகளுக்கு அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

கொழும்பு தென் பாஸ்ற்றரேற்று சபையின் ஓர் அம்மாளால் இரண்டு அஞ்தப் பிள்ளைகளும் தாய்மார் சங்கத்தால் ஒரு அஞ்தப் பிள்ளையும் தோர்ணக்கல் அஞ்த பாடசாலையில் தாபரிக்கப்பட்டுவருகிறார்கள்.

நெடுங்கால யுத்தத்தினால் உலகம் கண்ணீருக்குள் நிடத்தப்பட்டு ஜீவனம் கஷ்டமாகிவரும் இடுக்கமான இக்காலத்திலும் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்தோர், தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படியே பரலோக ஆஸ்தி தங்களுக்கு ஈவாரென்னும் நம்பிக்கையால் சந்தோஷமாய்ப் பண உதவி செய்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் மீட்பரின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு இரட்சிப்பைக் கண்டடையவும், இரட்சிப்பின் ஆனந்தத்தை ருசித்து பின் தங்களைச் சுற்றிலும் அந்தகாரத்தில் இருக்கும் புறமதஸ்தருக்கு மீட்பரின் அன்பைக் கூறவும், சுவிசேஷ வேலையின் ஆவலினால் நிரப்பப்படவும் கர்த்தர் தமது பரிசுத்த ஆவியை பெருமழைபோல் பொழிந்தருளுவாராக.

தெலுங்குநாட்டுக் கடிதம்.

ஜெபத்திற்கு உத்தரவு. சவட்டப்பல்லி மிஷன் நிலத்தைப்பற்றி நாம் இதுவரை ஜெபம்செய்து வந்திருக்கிறோம். சவட்டப்பல்லி ஊர் மேடுதப்பல்லிக்குச் சமீபமாயிருக்கிறது.சுமார் ஒன்பது வருஷங்களுக்குமுன் மகாகனம்சென்னை அத்தியட்சரவர்கள் நன்கொடையால் ஏறக்குறைய 95 எக்கர் பூமி மிஷன சுயஜீதாவுக்கென்று வாங்கப்பட்டது. சம்பளமின்றி வேலைசெய்யும் ஒரு உபாத்தியாருமிருக்கிறார். இதில் சபையின் தொகை 31. பரி: ஞானஸ்நானம் பெற்றவர்கள் 22 பேர்களிருக்கிறார்கள்.

நாளதுவரை நம் அதுபவத்திலிருந்தநிலத்தை நமக்கு நிலம் விற்றவர்கள் இந்த வருஷம் நாம் பயிர் செய்யாதபடி சில ரகசிய பிரயத்தனங்கள் செய்கிறதாகக் கேள்விப்பட்டு, கர்ணம், கிராமமுனிஷீபுயிடம் நமக்கு இருக்கும் தஸ்தாவேஜு தீர்வை செலுத்திய ரசீதுகளைக் காட்டியும் பிரயோஜனமில்லாமற் காணப்பட்டது. அப்பால் நிலமளக்கும் சர்வேயரிடம் சொன்னேன், கவனிக்கவில்லை. பிற்பாடு நாளது வருஷம் மேமீ 23உ சர்வே இன்ஸ்பெக்ற்றரிடம் தஸ்தாவேசுகளைக் காண்பித்தேன், யாதொரு நன்மையுமில்லை. அப்பால் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் உத்தரவுப்பிரகாரம் இக்குழப்பங்களைப் பற்றி மானுக்கோட்டை மூன்றாவது கலெக்டரிடம் சூன்மீ மனுச்செய்ததில் ஒருமாசக் காலமாய் யாதொரு பதிலில்லை. பிற்பாடு அம்மனு தாசில்தாருக்கு உருதில் எழுதிக் கொடுக்கப்பட்ட சமயம் மகாகனம். அத்தியட்சர் அவர்கள் கடிதமும் போகவே சூலைமீ 28உ சர்க்கார் 1-வது தாக்கீது நமக்கு அநுகூலமாய் சவட்டப்பல்லி கிராம அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. அது வந்தும் வராததுபோலாகிவிட்டது.

இதன்பின் ஆகஸ்ற்றுமீ மேடுதப்பல்லிக்குச் சமீபமான அப்பா பாளையம் என்ற கிராமத்தில் தாசில்தாரை நேரில் போய்ப் பார்த்தேன். வெகு அன்பாய் ஏற்றுகொண்டு, அநுகூலமான 3 தாக்கீது: ஒன்று சவட்டப்பல்லி கிராம அதிகாரிகளுக்கும், மற்றொன்று

ரெவினியு இன்ஸ்பெக்ற்றருக்கும், இன்னொன்று எனக்கும் கொடுக்கப்பட்டது. இவைகள் அந்தந்த அதிகாரிகளுக்குப் போனபோதிலும் எவ்வித நன்மையும் பிறக்கவில்லை. கர்த்தருடைய வேளையும் இன்னம் வரவில்லை. நாம் எல்லாரும் ஜெபமும் விடாது நடத்தினோம்.

அப்பால் தாசில்தார் உத்தரவுப்படி எனக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவை சவட்டப்பல்லி கிராமமுனிஷிபுக்குக் கொடுத்தேன். எதிரிகளைக் கூப்பிட்டு வாசிக்கப்பட்டபோதி, இது சர்க்கார் உத்தரவு அல்ல என்று குழப்பம் அதிகமாயிற்று. இதன் இரகசியம் என்னவென்று கொஞ்சம் ஆராய்ந்து கேட்டதில் நமக்குப் பத்திரம் செலது ரெஜிஸ்ற்றர் ஆனலும், பட்டாவாகவில்லை. ஆதலால் ஒரு வீண்பேச்சு எங்கும் பரம்பினது. கிறிஸ்தவர்களுக்கு நிலம் சர்க்காரில் பட்டாவாகாது என்பதே இதற்கு மூலம். இவ்வித அறிவீன பேச்சுக்கு ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடமுமுண்டு. அதை இங்குவிபரிக்க இடமில்லை. நிஜாம் ராஜாங்கத்தில் சுதேசக் கிறிஸ்தவர்களுக்கு அப்படிப்பட்ட உத்தரவில்லை. இதற்குப்பின் தாசில்தாருக்குக் காரியத்தைத் தெரிவிக்கவே செப்தெம்பர்மீ 4உ மற்றோர் சரகத்து ரெவினியு இன்ஸ்பெக்ற்றருக்கு ஆர்டர் பிறப்பிக்கப்பட்டது. அவர் நியாயஞ்செய்ய சவட்டப்பல்லிக்குப் போய் ஒருமணிநேரம் பின்னிட்டு திரும்பிவருவேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நியாயமும் நீதியும் அணைந்ததுபோல் பல வாரமீ சிலர் ஆயாசப்பட்ட போதிலும் திரும்பவும் தாசில்தாருக்கு எழுதினேன். அது Mr. ஐயாதுரை மூலமாய் தாசில்தாருக்கு நேரில் கொடுக்கப்பட்டுஅவர்களும்விபரமாய்ச்சொன்னதின்பேரில் 4-வது, தாக்கீது அதே ரெவினியு இன்ஸ்பெக்டருக்கு வெகு கண்டிப்பாய் அனுப்பப்பட்டது இவர் சவட்டப்பல்லியில் ஒருவாரப்போல்காரியங்களை விசாரித்து நியாயஞ்செய்கிறதுபோலிருந்தும் விரோதிகளின் மும்முரம் இவரது வருகையால் அதிகமாகவே இருந்தது. நம்மை உழுது பயிரிட விடமாட்டார்கள். எதிரிகளை உழப்படாது என்று சொல்லியபின், எதிரிகளுக்கு அதிக உற்சாகம்.

திரும்பவும் தாசில்தாருக்குத் தெரிவித்தேன். 26உ செப்தெம்பர்மீ முகாமிலிருவரும் மேடுதப்பல்லியில் பேசிக்கொள்வோம் என்று ஒரு கடிதம் தாசில்தாரிடமிருந்து வந்தது. உடனே ஜெபித்து ஆண்டவனைத் துதித்து, நம் நாட்டாரை ஜெபிக்க எழுதியனுப்பினேன். தாசில்தார் என் வீட்டில் வந்து கொஞ்சநேரம் இருந்து காரியாதிகளை அறிந்துகொண்டு 28உ மேடுதப்பல்லிக்குச் சமீபமாய் உள்ள சுப்பிர்வீடு என்ற இடத்திற்கு இருபட்சத்தாரையும் வரக்கேட்டார். நான் போயிருந்தேன். எதிரிகள் வரவில்லை. உடனே 5-வது ஆர்டர் வெருகண்டிப்பாய், கிராம அதிகாரிகளுக்கு அனுப்பியதில்,கிராமமுனிஷீபு தலையாரி,வெட்டியான் மூலமாய் எவ்வளவு பிரயத்தனஞ்செய்தபோதிலும், விடமாட்டோம் என்று எதிர்த்து நின்றார்கள். ஒருவன் மாத்திரம் சர்க்கார் உத்தரவுக்குக் கீழடங்கி, நமக்குப் பட்டாச்செய்து கொடுத்தான். தாசில்தார் 28உ என்னிடம் இன்னும் ஒரு வாய்தாவில் இருபட்சத்தாரும் வந்தால் ஒரே நாளில் முடிவு செய்வேன் என்றார்.

இதினிடையில் சனம். பாக்கியநாதன் ஐயரவர்கள் இது விஷயமாய் தங்கள் காலத்தில் நிலம் வாங்கப்பட்டதென்பதைப்பற்றி தாசில்தாரிடம் பேசப்போனபோது, நம் எதிரிகளே கர்த்தர் தற்செயலாய்க் கொண்டுபோய் வாக்குமூலம் வாங்கிக்கொள்ள சமயஞ செய்தார். எதிரிகளிடம் வாக்குமூலம் வாங்கினபோது விற்றது நிஜம், அநுபவம்,தீர்வை செலுத்துவது எல்லாம் 'மிஷனெரிமாசைச் சேர்ந்ததுதான் என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கப்பால் அக்ற்றோபர்மீ 18உ வாய்தாவுக்குப் போனேன். எதிரிகள் வரவில்லை. மைசூர் சர்ணம் கிராமமுனிஷி தாசில்தார் முதலியவர்களுடைய வாக்குமூலம் வாங்கியபின், நிலம் நம்முடையது, அநுபவமும் நம்முடையது என்று பைசல் எழுதி, இந்த வருஷம் எதிரிகளால் விதைத்த பயிர் நாம்

அநுபவித்துக்கொள்வதென்றும், கிராம அதிகாரிகளுக்கும் நமக்கும் தீர்ப்பு நகல் கொடுக்கப்பட்டது. இவைகளை அறிந்து நம தாண்டவரைத் துதிப்போமாக. கர்த்தரே மகா தேவன். பூமி அவர் கையிலிருக்கிறது. தேவ ரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய் வார் ஒருவருமில்லை. பூமியும் அதன் நிறை வும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தரு டையது.

டேவிட் தேவசகாயம்.

இரு ஞானஸ்நானங்கள்.

நீங்கள் இங்குவந்த சிறிது காலத்திற் குள் இரண்டு இடங்களில் ஜனங்கள் கூட் டம் கூட்டமாய் பரி. ஞானஸ்நானம் பெறும் காட்சியைக் கண்ணுற்றுக் களிக்கும் சிலாக்கி யத்தை யடைந்ததற்காகக் கர்த்தருக்கு உள் ளக் களிவுடன் ஸ்தோத்திரம் செலுத்துகி றோம்.

1. தோர்ணைக்கல்லிலிருந்து மூன்றுமை லுக்கப்பாலிருக்கிற கார்லா என்றும் ஊரி லுள்ள எருக்கல ஜாதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் (சுமார் நாற்பதுபேர்) அவ்வூ ருக்கருகே ஓடுகிற ஒரு பெரிய ஆற்றில் அக் ரோபர் 22ஆயில் ஞானஸ்நானம் பெற் றனர்.

இந்த ஜாதி, மாதிக, மால குலங்களுக்கு மேலானதாக எண்ணப்படுகிறது. இவர்கள் நமது நாட்டுக் குறவருக்குச் சமானம். மூங் கிலினால் முறம், பாய், தட்டி, கூடை முதலி யவைகள் செய்வது பெரும்பான்மையாய் அவர்கள் செய்யும் தொழில். இவர்களிடம் நிஜாம் கவர்ண்மென்ரார் அதிகப் பிரீதியா யிருப்பதுபோலத்தோன்றுகிறது. எனென், ரூல், அவர்கள் கிராமமுனிசீபு உத்தரவின்றி வேற்றூருக்கு இனத்தாரைப் பார்க்க முத லாய்ப் போகக்கூடாது. உத்தரவுபெற்றுப் போனபோதிலும், அங்கிருக்கும் நாளெல்லாம், தாங்கள் திரும்புவரை தினசரி அவ்வூர் கிரா முனிசீபிடம் போய் ஆஜர் கொடுக்கவேண் டும். இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்து மார்க்கத்தின் சிலாக்கியங்களும் விடுதலையும் கிடைத்திருப்பது நமதருள்நாதரின் மகத்துவ செயலன்றே.

இவர்களின் ஞானஸ்நானத்திற்கென்று மகாகனம் அத்தியட்சரவர்களும் அம்மாளும் தோர்ணக்கல் மிஷனெரிமாரனைவரும், மற்று மிஷன் உத்தியோகஸ்தர் பலரும், பயிற்சி சாலை மாணவரும் குறிக்கப்பட்ட நேரத்தில் போய்ச் சேர்ந்தோம். அன்று மதியம் 12 மணிவரை மழை எங்கள் பிரயாணத்தைத் தடுப்பதுபோல பயமுறுத்தினது. புறப்படும் நேரம் வரவே, வானம் வெளிவாங்கி, சகல மும் எங்கள் பிரயாணத்திற்கு அனுகூலமாக மாறிவிட்டது தெய்வச்செயலே.

நாங்கள் நதிபோய்ச் சேரவும், ஞானஸ் நானம் பெறப்போகிற ஜனங்கள் மலர்ந்த முகத்தோடு, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மாற்று வஸ்திரங்களைத் தங்கள் கைகளில் பிடித்தவர்களாக வரிசையாய் வந்து சேர்ந் தார்கள். மகாகனம் அத்தியட்சரவர்களும் கனம். பாக்கியநாதன் ஐயரவர்களும் தண் ணீர் ஓரத்திலும், எருக்கல ஜனங்கள் அவர் கள் முன்பாகவும், மற்றக்கிறிஸ்தவர்கள் பக்தி விநயமான சிந்தையுடன் ஓர் புறமும், இக் காட்சியைப் பார்க்க விருப்பமுற்று வந்த இதர ஜனங்கள் சற்று தூரத்தில் இன்னொரு பக்கமாகவும் நிற்க, பரி. ஞானஸ்நான ஆரா தனை ஆரம்பித்தது.

கேட்ட கேள்விகளுக்கு ஜனங்கள் சொன்ன மாறுத்தரம் எனக்கு மிக வியப்பை யுண்டாக்கிற்று. "வெறுத்து விடுவோம், விட்டுவிடுவோம்", என்று அவர்கள் சொல் லியபோது, பாவத்தை மெய்யாயுணர்ந்து அவைகளை வெறுத்துத்தள்ள ஆவலுள்ளவர்க ளாய் மறுமொழி சொன்னது மட்டுமல்ல, சைகைகளிலும் அதைக் காண்பித்தார்கள். அப்பால் மகாகனம் அத்தியட்சரவர்கள் அரையளவு தண்ணீரில் நின்றுகொண்டு, ஒவ்வொருவராய் அவர்கள் வலது கையைப் பிடித்து மும்முறை தண்ணீரில் முழுக்காட் டி, பரி. ஞானஸ்நானம் கொடுத்த காட்சி அங்குநின்ற சிலர் மனதில் யோவான்ஸ்நா கன் யோர்தான் நதியிலும், ரட்சகரும் சேஷரும் அயிரேனென்னுமிடத்திலும் கொடுத்த

டிசம்பர்மீ

Vol: 11: No: 4 16427

திருநெல்வேலி மதுரை

அத்தியக்ஷாதீனப் பத்திரிகை

மூன்று மாசத்துக்கொருமுறை பிரசுரமாகும்

டையோவிசன் கவுண்சல்

பிரசங்கம்.

(பிஷிப்பியர் 1: 20.)

பரி: பவுல் ரோமாபுரியில் கைதியாயிருந் தார். அக்காலத்தில் நேரோ என்பவன் ராயு யனுயிருந்தான். அவன்தான் 'கிறிஸ்தவர் களைக் கொடுமையாய்த் துன்பப்படுத்த ஆரம் பித்தவன். நிஷ்டூரத்துக்கு அவன் பேரே காரணப்பெயராய் வழங்கப்பட்டுவந்தது. இப் படிப்பட்ட காலத்திலிருந்த பரி. பவுல் தன் னையும் தன் ஜீவன் தப்பும் வழியையும்பற்றி யே யோசனைகொண்டிருந்திருப்பார் என்று எண்ணலாம் ஆனால் தன் ஜீவனைக் காக் கும் வகையைக்குறித்து அவர் கிஞ்சித்தே னும் எண்ணவேயில்லை. தான் ஜீவனோடிருக் கவேண்டுமென்று விரும்பினாலும், கிறிஸ்து வின் ராஜ்ய பிரபல்யத்துக்காக அப்படி விரும் பினாரேயொழிய மற்றப்படியல்ல. அவரு டைய நினைவுகளெல்லாம் கிறிஸ்துவைப்பற் றினவைகளே. அவரை விசனப்படுத்தும் படி அவருடைய சத்துருக்களும் கிறிஸ்து வைக்குறித்துப் பிரசங்கித்தார்கள். ஆனால் பரி. பவுல் பிரசங்கித்தபிரகாரம் அவர்கள் பிரசங்கிக்கவில்லை. அவர்கள் போதித்தவை களில் சில பிசகானவை. பரி. பவுல் முக்கிய மென்று எண்ணினவைகளை அவர்கள் விட்டு விட்டார்கள். அப்படியிருந்தும், பரி. பவுல் அதினிமித்தம் விசனப்படவில்லை. தம்மு டைய மனவருத்தங்களையெல்லாம் அடக்கிக் கொண்டு, "கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிறார்; அதினால் நான் சந்தோஷிக்கிறேன்; இன்னு மும் சந்தோஷப்படுவேன்" என்கிறார். பரி. பவுல் தம்மைப்பற்றிய மேன்மையான எண்ணங்களைத் தீர்மானத்தோடு அடக்கிக் கொண்டு, கிறிஸ்துவின் மகிமைக்கானவை களைப்பற்றி மாத்திரம் யோசிக்கிறார்.

நல்லது, அவர் கைதியாயிருக்கிறாரே, அதைப்பற்றியென்ன? அவருடைய மரணத் தோடுதான் அது முடியுமோ? அல்லது விடு தலையடைவாரோ? நாம் இவ்வித நிலைமைக் குள்ளிருந்தால், நாம் தப்பும் வழியென்ன வென்றுதான் யோசிப்போம். பரி. பவுலும் தன் ஜீவன் தப்பும் வழியைக்குறித்து யோ சிக்கிறார். ஆனால் தான் இன்னும் சிலகாலம் உயிரோடிருக்கவேண்டும் என்ற வெறும் நோக்கத்தோடல்ல, தான் கிறிஸ்துவுக்காக செய்யத்தக்க வேலை இன்னும் இவ்வுலகத் தில் தனக்குண்டு என்ற எண்ணத்திலுமே யே உயிரோடிருக்க விரும்புகிறார். நான் மரித்தால் கிறிஸ்துவோடிருப்பேன். அது எனக்கு நன்மையாயிருக்கும். ஆனால் "பிலிப் பியரே, உங்களுக்கு ஒரு ஆள் அவசியம். கிறிஸ்துவும் நான் இன்னும் கொஞ்சக்காலம் இவ்வுலகத்திலிருக்கவேண்டுமென்று விரும்பு கிறார். ஆகையால் நீங்கள் தேர்ச்சியடைவ தற்காக இன்னும் சிலகாலம் நான் உயிரோடி ருப்பேன் என்று எண்ணுகிறேன்" என்கி றார். ஆம், அப்படியே பின்னும் ஐந்து அல் லது ஆறு வருஷம் உயிரோடிருந்தார். மறு படியும் ஓர் நீண்ட பிரயாணம் செய்து, கிறிஸ்து சபைகளைச் சந்தித்து, அவர்கள் தங் கள் விசுவாசத்திலுலும் ஜீவியத்திலுலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டு மென்று போதித்தார். அப்புறம் தமது மரண பரியந்தம் கிறிஸ்துவின் வேலை நடந்தேற வேண்டிய வழிவகைகளை ஆலோசித்து, அதற்காக ஜெபித்து இவ்விதமாய் தமது ஜீவ னையும் விட்டார்.

பரி. பவுல் நம்மைப்போன்ற ஓர் மனு ஷன் தான் என்று நாம் எண்ணவேண்டும். மற்ற மனுஷரைப்போல அவருக்கும் பல வீனங்கள், பாவங்கள் இருந்தன. அவரு டைய பழைய ஜீவியம் மேன்மையுள்ளது

தான். அவர் ரோம சலாக்கியமுள்ளவர். அதைக் குறித்தும் மேன்மை பாராட்டினார். பரிசேயருக்குக் கிடைக்கக்கூடிய மேலான வேத சாஸ்திரம் கற்றவர். பொதுவாக ஓர் நல்ல மனுஷன். அதிகப் பக்தி வைராக்கியமும் மத அபிமானமும் உள்ளவர். சற்காலத்திலிருப்பாரானால், அவரை வைராக்கியமுள்ள வாலிபன் என்றுதான் நாம் சொல்வோம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவைக் குறித்துப் பிரசங்கித்தபோது, அவர் எனே தானே வென்றிருக்கவில்லை. அவர்கள் பிரசங்கத்தைத் தடுக்க முயன்றார். அவர்களை அடித்து, சிறைச்சாலையில் போடுவித்துக் கொலை செய்வித்தார். கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கியாதபடி தடுக்கவும் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தவும் மற்ற ஊர்களுக்கும் போனார். என்றாலும், சுகதேகமுள்ளவரல்ல. அடிக்கடி வியாதிப்படுவார். வியாதியினால் சில வேளைகளில் அவருக்குப் படபடப்பான குணமும் மனவருத்தமும் உண்டானதுண்டு. தன்னிஷ்டப்படியே நடக்கவேண்டுமென்ற விருப்பமும் உண்டு. தாம் எதைச் செய்யச் சட்டளையிடுவாரோ அதையே செய்யும் வாலிபரைத் தான் தமக்குச் சிநேகிதராய் வைத்துக்கொள்ள விரும்பினார். தன்னை யாரும் எதிர்க்கிறது அவருக்குப் பிரியமாயிராது. எல்லாரும் தனக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பது அவருடைய இயற்கைச் சுபாவம். இப்படிப்பட்ட நிலைமையில் கிறிஸ்து அவரைச் சந்தித்து, அவருடைய ஜீவியத்தின் நோக்கம் முழுவதையும் மாற்றிப்போட்டார். பக்தியுள்ளவன்தான். ஆனால் நோக்கம் மாத்திரம் விபரீதமாயிற்று. வாலிபப்பிராயத்தில் பரிசேயர் மேன்மையடையவேண்டும், தானும் மேன்மையடையவேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கம். ஆனால் பின்னரோ கிறிஸ்து மேன்மையடையவேண்டும் என்பது அவருடைய ஏகநோக்கம். மேலும், தான் தனிமையாய் வேலைசெய்யவேண்டுமென்றும், தம்முடைய சேஷ்டர்கள் தமக்குக் கீழ்ப்பணிவேண்டுமென்றும், தம்மை யாரும் எதிர்பேசக் கூடாதென்றும் விரும்பினார். என்றாலும் வரவர தமது தவறுதல்கள்மேல் ஜெயங்கொண்டார். கிறிஸ்துவைப்பற்றி மாத்திரம் சிந்திக்கத் தொடங்கினார். இப்போது, பரிசேய சமயத்தாருடைய பக்கமையையல்ல, கிறிஸ்துவின் மகிமையையே தேடினார். இனிப் பவுலின் மேன்மையல்ல, "இனி நானல்ல, கிறிஸ்துவே" என்பதாகாரம் கடக்க ஆரம்பித்தார்.

தாம் செய்த சகல காரியங்களுக்கும் கிறிஸ்துவே நோக்கமும் பிரதானமுமாக இருந்தபடியால், அவருடைய வேலையிலும் ஜீவியத்திலும் தேசங்கள் முற்றிலும் மாறுதலடைந்தது மாத்திரமல்ல, கிறிஸ்து சபை தற்காலத்திலிருக்கிறபிரகாரம் தோற்றியதுமாயிற்று. திருநெல்வேலியில் கிறிஸ்துமார்க்கம் இவ்வித சீரடைந்திருப்பதும் பரி.பவுலின் வேலையினாலேயே. எனென்றால் நமக்கு வேண்டிய போதனையாவும் அவருடைய நிருபங்களிலிருந்தே கிடைத்து வருகின்றது. திருச்சபையின் பற்பல சட்டங்களின் ஏற்பாடும் அவரிலிருந்துண்டானதே.

நான் திரும்பவும் வற்புறுத்திச் சொல்ல விரும்புவதென்னவெனில்: பரி. பவுல் கிறிஸ்துவின் வல்லமையினால் மாறுதலடைந்த ஓர் சாதாரண மனுஷன் என்பதே. அப்படியானால், அந்த வல்லமை இன்னதென்பதை நாம் அறிவது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும். அது முகாந்தரமாகவே இவ்வாக்கியத்தையும் நான் தெரிந்துகொண்டேன். "ஜீவனுலாகிலும் சாவினுலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தில் மகிமைப்படவேண்டும்." இதுதான் ரகசியம். இந்த ரகசியத்தை நமது ஜீவியத்துக்குச் சொந்தமாக்கிக்கொள்வோமானால், சகலமும் நன்றாயிருக்கும். இந்த ரகசியம் பரி பவுலுக்கு மாத்திரம் உரியதும் மற்றெவருக்கும் கிடைக்கக்கூடாததுமானதல்ல. இது கிறிஸ்தவ ஜீவியத்துக்குரியதும் உலகமெங்கும் தெரியிருக்கும் கிறிஸ்து சபையனைத்துக்கும் பொதுவானதுமான ஓர் ரகசியம். அந்த ரகசியமென்ன? ஜீவனுலாகிலும் சாவினுலாகிலும் கிறிஸ்து நம்மில் மகிமைப்படவேண்டும்.

கிறிஸ்து சபையானது ஆரம்பமான காலத்தில் ரோம ராஜ்யத்தைப் பார்க்கிலும் அதிகக் காலம் தழைத்தோங்கவும் அந்த ராஜ்யம் முழுவதும் பரம்பவும்காரணமென்னவென்று

யோசித்துப்பார்த்த ஓர் நூலாசிரியர் எழுதுகிறது என்னவெனில், "கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளைவிட நன்றாய் ஜீவித்தார்கள். நன்றாய் மரித்தார்கள், நன்றாய் யோசித்தார்கள்" என்பதே. கிறிஸ்துவின் மகிமையே நமது ஏகநோக்கமாகில், கிறிஸ்தவர்களாகிய நாம் மற்றவர்களைவிட நன்றாய் ஜீவிக்கலாம். மற்றவர்களைவிட நன்றாய் மரிக்கலாம். மற்றவர்களைவிட நன்றாய் யோசிக்கலாம். அதேனென்றால், நமது ஜீவனுகிய கிறிஸ்து மற்றெவரையும்விட நன்றாய் ஜீவித்தார், நன்றாய் மரித்தார், நன்றாய் யோசித்தார். இந்த மூன்று விஷயங்களையும் ஒழுங்காய்ச் சுவனிப்போம்.

மற்றவர்களைவிட நன்றாய் ஜீவிக்கக் கூடும். ஜீவியம்தான் சகலத்துக்கும் ராகியம் என்று கிறிஸ்துவானவர் ஏற்படுத்தினதற்காக நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் அறிந்து கொள்ளக்கூடாத ஓர் தத்துவ சாஸ்திரத்தை அவர் ஏற்படுத்தியிருப்பாரானால், நம்மில் அநேகர் கைவிடப்பட்டவர்களாவோம். பிரமிக்கப்படத்தக்க வீரதீரச் செய்கைகளும் மகிமையான கிரியைகளும் செய்யவேண்டும் என்று கற்பித்திருப்பாரானால், நமக்கு யாதொரு இடமுமே கிடையாது. இவ்விதக் கடினமான வேலைகளைச் செய்யும்படி ஆஞ்ஞாபிக்காமல், ஜீவியுங்கள், நடவுங்கள் என்று மாத்திரம் சொல்லுகிறார். எல்லாரும் ஜீவிக்கலாம், நடக்கலாம். இதுகூடியகாரியமே. அந்த ஜீவியத்தின் ரகசியத்தையும் நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்த ரகசியம் அன்பே. யாவரும் அன்புள்ளவர்களாய் நடக்கக்கூடும். இதினுலுண்டான் பலன் என்னவென்றால், சாதாரண ஜனங்களிலுள்ள புருஷரும் ஸ்திரீகளும் கிறிஸ்தவர்களாகவே, பரி பவுல் தம்முடைய காலத்திலுள்ள கிறிஸ்தவர்களில் 'ஞானிகள் அநேகரில்லை, பலவான்கள் அநேகரில்லை' என்று சொல்லுகிறார். உலகத்தார் ஞானத்தையும் பராக்கிரமத்தையும் விரும்பினார்கள். கிறிஸ்துவோ 'நட, அன்புகூர்' என்று மாத்திரம் போதித்தார். சாதாரண ஜனங்களில் ஆயிரக்கணக்கான பேர் அவருடைய உபதேசத்தைக் கேட்டு, அதின்படி நடந்து அன்புள்ளவர்களானார்கள். இந்தியாவிலும் இதே விதமாய்த்தான் காரியங்களிருக்கிறது. ஞானிகள் அதிகரில்லை. பலவான்கள் அநேகரில்லை. தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. தரித்திரர் ஜீவிக்கவும் அன்புகூரவும் கூடும். அதுதான் நமக்குப் பெலன். நம்மில் அன்பு எவ்வளவுக்குக் காணப்படுகிறதோ அவ்வளவே நமது வளர்ச்சியும் இருக்கும். அன்பே, கிறிஸ்துவின் அன்பே கடனிலியாயத் தீர்ப்பிலும் நம்மை நியாயந் தீர்க்கும் பிரமாணமாகும். நாம் உலகத்திலுள்ள மற்றெதையும்விடக் கிறிஸ்துவை அதிகமாய் நேசிக்கிறோமா? நமக்குள் சண்டைகளும் மனவருத்தங்களும் என் உண்டாகிறது? நமது இருதயங்களில் பகையும் பாரபக்ஷமும் ஆளுகை செய்கிறதினாலல்லவா? நாம் கிறிஸ்துவில் அன்பு கூர்ந்தது மெய்யானால், அவர் தமது ஜீவனைக் கொடுத்து மீட்ட மனுஷனை அல்லது ஸ்திரீயை எப்படி பகைக்கக்கூடும்? கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. நாமோ அவன் நமக்கு ஏதோ கெடுதி செய்ததினிமித்தம் அவனோடு சண்டைபோடத்தக்கதாக நம்மை நாமே நேசிக்கிற நாம், கிறிஸ்துவில் எவ்வாறு அன்புகூர்வோம்? கிறிஸ்துவானவர் அஞ்ஞானிகளைக் குறித்ததான் 'தங்களை நேசிக்கிறவர்களையே அவர்களும் நேசிக்கிறார்கள், தங்களை வாழ்த்துகிறவர்களையே அவர்களும் வாழ்த்துகிறார்கள்' என்கிறார். ஆனால் கிறிஸ்தவர்களோ தங்கள் சத்துருக்களைச் சிநேகிக்கவேண்டும். தங்களை வெறுக்கவேண்டும்; இப்படிச் செய்து கிறிஸ்துவையே மகிமைப்படுத்தவேண்டும் என்கிறார்.

கிறிஸ்து சபையில் அன்பு மாத்திரம் நிறைந்திருக்குமானால், அந்தச்சபையின் வல்லமைக்கு அளவிராது. நமது நடுவில் சில கிராமங்களிருக்கின்றன. அவைகளில் கிறிஸ்தவர்கள் தங்கள் முழுப்பெலத்தையும் சண்டைகளிலேயே செலவழிக்கிறார்கள். அவை களைக் குறித்து திரும்பத் திரும்பப் பேசுவதால் எவ்வளவு காலம் நஷ்டமாகிறது! அப்படியே அற்பங்களான சஞ்சர்ப்பனைகளிலும் தந்திரமான நடபடிக்கைகளிலும் மனிதர் தங்கள் சேஷத்தையெல்லாம் பின்னிடுகிறார்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமான நேரம், கிறிஸ்து

வுக்காக அன்பின் ஊழியத்தில் உபயோகிக்க வேண்டிய நேரம் எல்லாம் வீணுய்ப் போகிறது! இவ்விதமாக கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளைவிட நன்றுய் ஜீவிக்காததால், கிறிஸ்தவர்கள் அன்புள்ளவர்களாய் நடந்துகொள்ளாததால், கிறிஸ்துவின் நாமம் அஞ்ஞானிகளுக்குள்ளே தூஷிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் அன்பு நமது இருதயத்தை ஆண்டு கொள்ளுமானுல், நாம் செய்யக்கூடாதவேலை ஒன்றுமிராது. இவ்வகையாய் மாத்திரம் நாம் அஞ்ஞானிகளைவிட நன்றுய் ஜீவிக்கக் கூடும்.

கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளைவிட நன்றுய் ஜீவிக்கிறதினுல் மாத்திரம்அல்ல, அவர்களைவிட நன்றுய் மரிக்கிறதினுலும் கிறிஸ்து மார்க்கம் விருத்தியடைகிறது.

சாவு லாபமென்று பரி: பவுல் சொல்லுகிறார். கிறிஸ்துவை மறுதலிக்க மனமில்லாமையால், ஆயிரக் கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவனை அவருக்காகக் கொடுத்து மகிமையடைந்திருக்கிறார்கள். பூர்வத் திருச்சபையில் மாத்திரமல்ல, நமது காலத்திலும் ஆப்பிரிக்கா, சீனு இத்தேசங்களில் நூதன கிறிஸ்தவர்கள் மிருந்ததையியத்தோடே இரத்தச் சாட்சிகளாய் மரித்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள சபையையும் தேவன் துன்பத்தினுல் பரீட்சிக்கச் சித்தங்கொண்டாராஞல், கிறிஸ்துவுக்காக அநேகர் சந்தோஷமாய் மரிக்க ஆயத்தமாயிருப்பார்களென்று நம்புகிறேன். மரணத்தைக் குறித்து நாம் கொண்டிருக்கும் எண்ணத்தைக் கிறிஸ்து எவ்வளவாய் மாற்றுகிறார்என்பதைச் சமீபகாலத்தில் அறிந்தேன் என்று நான்என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்லக்கூடும். இந்தியா வெங்குமுள்ள இந்தியர்களிடத்திலிருந்து எனக்கு வந்த கடிதங்களில் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையும் விசுவாசமும் தெளிவாய்க் காணப்படுகிறது. அதற்காக நான் தேவனை ஸ்தோத்திரித்திருக்கிறேன். இவ்விதமான புதிய எண்ணங்களை நம்மில் உண்டாக்குகிறவர் யார்? மரணத்தை ஜெயித்த கிறிஸ்து அல்லவா? கிறிஸ்துவிலுள்ள இந்த ஜீவன் ஆரம்பிக்கும் காலம் மரணமே. மரணத்தோடு ஜீவன் முடிவடைகிறதில்லை. கிறிஸ்துவுக்குள் அது சதாகாலமும் வளர்ந்துகொண்டே போகிறது. ஆனுல் இப்பொழுதே நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறபடியால், மரணத்தில் நாம் அவரைவிட்டுப் பிரிந்துபோகிறதில்லை. மரித்தோர் கிறிஸ்துவுக்குள் இளைப் பாறுகிறார்கள். அவர்கள் கிரியைகள் அவர்களைப் பின்செல்லுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் உழைக்கிறோம். நாம் எல்லாரும் ஒன்றுயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் இவ்விதமாய் நமது ஜீவியத்திலும் நமது மரணத்திலும் மகிமைப்படுகிறார்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களைவிட மேலாயிருக்கவேண்டிய மூன்றுவது காரியம் யோசனை. நாம் மற்றவர்களைவிட அதிகமாய் அறிவடைந்திருக்கிறபடியால், நன்றுய் யோசிக்கக்கூடும். தேவன், அவருடைய அன்பு, கிறிஸ்துநாதர், அவருடைய பலி-இவைகளைப் பற்றிய அறிவு இல்லாமல், இந்த ஜீவியத்துக்கடுத்த காரியங்களைப்பற்றி அறியப் பிரயாசப்படுவோமானுல், அது கூடாத காரியமாய்த்தானிருக்கும். இம்மைக்குரிய ஜீவியத்தோடும் சகலமும் முற்றுப்பெறுமானுல், தேவன் அன்பாகவேயிருக்கிறார், அவர் நீதியுள்ளவர் என்பவைகளின் நிச்சயம் நமக்குத் தெரியாது. மேலும், அவர் அன்பாயிருக்கிறார், நீதியுள்ளவராயிருக்கிறார் என்று சொல்வதில் யாதொரு பிரயோஜனமுமிராது; அது சத்தியமுமல்ல. நாம் தேவனையும் கிறிஸ்துவையும் அறிந்திருக்கிறபடியால், இவ்விஷயத்தில் நாம் மற்றவர்களைவிட நன்றுய் யோசிக்கிறவர்களாயிருக்கிறோம். கிறிஸ்தவர்களுக்கிருக்கவேண்டிய இவ்வித அறிவு, யோசனை கமுடைய விஷயத்தில் எப்படியிருக்கிறதென்று அறியவேண்டியது அவசியம். சற்காலத்தில் இந்தியாவுக்கு அவசியம் தேவையானது நிதானமான யோசனையே. பத்திரிகைகளை வாசித்துப் பார்க்குங்கால், நடபடிக்கைக்கு வராத நிழலாட்டமான காரியங்களைக் குறித்து மிச்சமான பேச்சும் குழப்பமும் நடந்துகொண்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக, சுய ஆளுகை, இந்தியாவின் புராதனங்கள், அங்கிலேயே ஆட்சிமுறை முதலிடவைகளைப் பற்றித்தான். ஆனுல் இந்நாதேசத்தாரில் கோடிக்கணக்கான ஜனங்களின் சரித்திரம்

ஆலயங்களிலும்கூடக் காணப்படுகிற துன்மார்க்கம், குடிவெறி, அக்கிரமக் கிரியைகள், சண்டைகள், பிரிவினைகள் இவைகளைக் குறித்துப் பேசுவாரும் இவைகளுக்காக முயற்சி செய்வாருமில்லை. ஆனுல் காரியத்தின் முடிவைநோக்குங்கால், இவைதான் அதி முக்கியமான விஷயங்கள். இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் சஞ்சரித்த காலத்திலுள்ள ஜனங்களில் பிரதானமானவர்கள் ராஜாங்க விஷயங்களில்தான் அதிக முயற்சியெடுத்தார்கள். இயேசுநாதர் இவைகளில் தலையிடப் பிரியப்படாததால்தான் அவரைப் பகைத்தார்கள். ஆனுல் அவர் விரும்பின காரியமோ இதற்கு முற்றிலும் மாறுனது. தேவன் நமது பிதா. நாம் அவரைப்போலாக வேண்டும், அவரைப்போல இரக்கமும் அன்புமுள்ளவர்களாய் நடக்கவேண்டும். இவைகளைத்தான் புருஷரும் ஸ்திரீகளும் அறிந்து அவைகளின்படி நடக்கவேண்டும் என்பது அவருடைய ஆசை. மனுஷர் தன்னயமற்றவர்களாய், மற்றவர்களுக்காக ஜீவிக்கவும், அவசியம் நேரிட்டால், அவர்களுக்காகத் தங்கள் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டுமென்பது அவருடைய உபதேசம். துக்கப்படுகிறவர்களை ஆறுதல் படுத்தவும், பாடுபடுகிறவர்களுக்கு உதவிபுரியவும், பசியுள்ளவர்களைப் போஷிக்கவும் விரும்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக, மனுஷர் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு, மனுஷப்படியும் பிறந்து, தமது பரிசுத்த ஆவியினுல் நிறைந்து, புது ஜீவனுள்ளவர்களாய் நடக்கவெண்டும் என்பதுதான் மிகவும் அவசரம் என்று அவருக்குத் தோன்றிற்று. சண்டைக்காரர் அவரிடத்தில் வந்தபோது, "என்னை தங்களுக்கு நியாயாதிபதியாக்கினது யார்?" என்று சொன்னர். நிக்கோதேமு ராஜாங்க விஷயங்களைக் குறித்து அவரிடத்தில் சம்பாஷிக்க ஆரம்பித்தபோது, "நீ தேவனுடைய ராஜ்யத்தைக் காண விரும்பினுல் மறுபடியும் பிறக்கவேண்டும்." என்று வனுக்குப் போதித்தார். சீஷர்கள் தங்களில் பெரியவர்களாக வேண்டுமென்று விரும்பினபோது, அவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்று கற்பித்தார். ராஜ அபிமானிகள் அவரைச் சோதித்து, அந்நிய ராஜாங்கத்துக்கு விரோதமாய் அவர் ஏதாகிலும் பேசும்படி செய்து, அவரை கண்ணிக்குட்படுத்தவேண்டுமென்று முயற்சித்தபோது, அவர்களைப் பார்த்து: நீங்கள் தேவனுக்கும் ராஜாங்கத்துக்குமுரிய கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்று மறுமொழி கொடுத்தார்.

இன்றையத்தினம் நாம் ஓர் டையொவிஸன் காண்பான்ஸ் நடத்தப்போகிறோம். வெகுகாலமாக இவ்விதக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தேன். பலசந்தர்ப்பங்களினுல் அதைஇப்பொழுதேநடத்தும்படி நேரிட்டிருக்கிறது. இக்கூட்டம் செய்யவேண்டியதென்ன? எற்கனவே நம்மிடையில் பல கமிற்றிகளும் கவுண்சில்களும் இருக்கின்றன. சொல்லவேண்டுமானுல், பலவிஷயங்களில் நமது அத்தியகூஷாதீனத்து ஏற்பாடுகள் மற்றநேக அத்தியகூஷாதீன ஏற்பாடுகளைவிட சிறந்ததாயிருக்கின்றன. என்றாலும் அத்தியகூஷாதீனம் மொத்தமாகக் கூடி, கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கடுத்த விஷயங்களைக்குறித்து ஆலோசிக்கவும் அவைகளுக்காக ஜெபிக்கவுமான ஓர் சாவகாசம் இல்லையென்றுநாமெல்லாரும் நினைத்ததுண்டு. நமது கவுண்சல்கள் கூடும்போது, அவரவர் வேலைக்கடுத்த பற்பல சில்லறையான விஷயங்களைக்குறித்து ஆலோசித்துத் தீர்மானிக்கவேண்டியது நேரிடுகிறபடியால், அத்தியகூஷாதீனச்சின் பொதுவிஷயங்களை யோசிக்கவும் அவைகளைக்குறித்துப் பேசவும் சாவகாசம் இல்லாமற்போகிறது. மாற்றுதல்கள், சம்பளத்தாரிப்பு, புரோமோஷன், எஸ்தி்மேற்றுகள், பணம்சேகரித்தல் இவைகள்தான் கவுண்சல் கூட்டங்களில் பேசவேண்டிய முக்கிய காரியங்களல்ல. இவைகள் அவசியம் தான், ஆனுல் ஆலோசிக்கவேண்டிய முக்கிய காரியம் யாதெனில்:- நமது திருநெல்வேலிச்சபை மொத்தமாகக் கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிற சபையாயிருக்கிறதா? அஞ்ஞானிகள் குணப்படுவதற்காக நாம் இன்னும் செய்யத்தக்கது ஏதாவது உண்டா? இன்னும் அதிகமாய் ஜெபிக்கவேண்டாமா? கிறிஸ்தவ பாவியருக்கு நாம் ஏற்படுத்தியிருக்கும் கல்விசாத

னங்கள் அவர்களைக் கர்த்தருக்கேற்ற பயத்தில் வளர்க்கத்தக்கவைகளா? நமது அத்தியக்ஷாதீனத்தில் எங்கேயாவது பாலியரின்கல்வி விஷயத்தை அசட்டை செய்கிறோமா? நாம் கர்த்தருக்காகச்செய்யும் ஊழியமும் அவ்வூழியத்தை நடத்தும்முறையும் கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தினாலும் தங்கள் மரணத்தினாலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தத் தகுந்தவைகளாயிருக்கின்றனவா? குடிவெறி, துன்மார்க்கம், சண்டைகள், ஒழுங்கீனக் கலியாணம் இவ்விதத் தீமைகளை எதிர்த்து ஒழியப்பண்ணத்தக்கதாக நாம் ஏதாவது செய்யக்கூடுமா? இவ்விஷயங்களைக் குறித்து ஆலோசிக்கவும் இவைகளுக்காக ஜெபிக்கவும் நாம் ஏகோபித்துக்கூடத்தக்க சாகவாசம் இதுவரை நமக்கு ஏற்படவில்லை யென்பது வாஸ்தவமல்லவா? இது காரணம்பற்றியே, சி. எம். எஸ்.; எஸ். பி. ஜி.யாகிய இவ்விரு சங்கங்களின் ஆலோசனைக்கூட்டங்களன்றியில் இவ்வத்தியக்ஷாதீனத்தின்வேலையைக்குறித்து மொத்தமாய்ப் பேசிக் கவனிக்கத்தக்கதாக ஓர் டையோஸீஸன் கவுண்சலிருப்பது நமக்கு அவசியமென்று எனக்குத்தோன்றுகிறது. மேலும், நமது டையோஸிஸன் கவுண்சல் கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் ஏகஐக்கியமுள்ளவர்கள் என்பதற்கு ஓர் அறிகுறியாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். ஒரே விசுவாசத்தினாலும், ஒரே ஞானஸ்நானத்தினாலும், அவருடைய ஊழியமாகிய ஒரே வேலையை இவ்வுலகத்தில் செய்கிறதற்கென்று நாம் நமது ஒரே கர்த்தராகிய கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறோமென்பதை நாம் ஏற்றபடி உணருகிறதில்லை. நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம். ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய சரீரத்தின் அவயங்களாயிருக்கிறோம். நாம் தனித்தனியாகமாத்திரமல்ல, மொத்தமாகவும் அவருடைய வேலையைச் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் இந்தியாவில் என்னென்ன வேலைகள் செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறாரோ அவைகளைச்செய்யும்படி கிறிஸ்து இயேசுவுக்குள்தேவனுடைய அன்பினால் ஒன்றாய்க் கட்டப்பட்டிருக்கிறோம். அவருடைய சித்தம் இன்னதென்பதை நாம் யோசித்து உணர்ந்து அறிந்துகொள்ளத்தக்கதாக அவர் தமது ஆவியை நமக்குத் தருகிறார். சசலமும் ஒரே வேலையாகச் செய்யப்படத்தக்கதாகத் தமது வேலையின் பற்பல வித்தியாசயான கடமைகளை நிறைவேற்றும்படி பற்பலருக்குத் தமது வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். இதுவே பூமியிலுள்ள அவருடைய சபை ஏற்படுத்தப்பட்ட நோக்கம். கிறிஸ்துவின் ஊழியத்தை ஏக ஐக்யமாய்ச் செய்வதற்காக இவர் அருளிச் செய்திருக்கிற வரங்களையும் தத்துவங்களையும் ஒன்றுசேர்த்து உபயோகிப்பதற்காகவும், ஒருமித்து ஜெபிக்கவும் வேலை செய்வதற்காகவும் சபை ஏற்படுத்தப்பட்டிக்கிறது. சபை வளருகிறதற்கேதுவாக தேவன் வெளிப்படுத்தியிருக்கிற விஷயங்களை ஒருவரிடத்திலிருந்து ஒருவர் கற்றறிந்துகொள்ளும்படி ஒருவரோடொருவர் பேசிக்கலந்துகொள்வது நல்லது. திருஷ்டாந்தமாக, கிறிஸ்துநாதர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தமது சீஷரை அனுப்பினபோது, அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கலந்துகொண்டு, சேர்ந்து ஊழியம் நடப்பிக்கும்படியாக அவர்களை இரண்டு இரண்டு பேரரக அனுப்பினார். அவர்கள் திரும்பி வந்தபோது, அவர்கள் இளைப்பாறவும் தாங்கள் செய்த வேலைக்காக ஒன்றுகூடி ஜெபிக்கவுந்தக்கதாக அவர்களெல்லாரையும் ஒன்றாய் வனாந்தரமான ஓரிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோனார். நாம் அவர்களுக்குக் கற்பித்த ஜெபத்திலும், எங்கள் பிதாவே, எங்களுக்குத்தாரும், எங்களுக்கு மன்னியும், எங்களை ரட்சியும் என்று பன்மையில் சொல்லிக்கொடுத்து, தன்னயமற்றவர்களாயிருந்து, தங்களைப்பற்றி மாத்திரம் நினைக்கிறவர்களாயிராமல், ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து, ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கற்பித்தார். இதுதான் ஓர் சிறந்த மாதிரி. ஆகையினால் நாம் ஒருவரிடத்திலிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவும், ஒருவரு[illegible] கொருவர் உதவிசெய்யவும் ஒருவருக்காக [illegible]வர் ஜெபிக்கவும் வேண்டுமென்ற நோ[illegible] தோடேயே அக்கவுண்சலை ஏற்படுத்தக் க[illegible] கொண்டேன். இக்கவுன்சல் சில்ல[illegible]யான விஷயங்களைப்பற்றிப் பேசி நட[illegible]கை செய்கிற ஓர் கூட்டமாயிராமல் (அ[illegible]ளைப்பற்றிப் பேசுவது அவசியம தான், அ[illegible]

களுக்கு நமக்குப்போதுமான வேறு சமயங்களிருக்கின்றன), கிறிஸ்துநாதர் தமது சபைக்கு ஏற்படுத்திய அவருடைய சித்தத்தின் முறையை அறிந்துகொள்ளவும் அம்முறையைக் கையாடுவதால், தேவனுடைய சித்தம் நிறைவேறவும் இவ்விதயாய்த் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தில் கிறிஸ்து மகிமைப்படவும் இந்தக் கவுண்சல் கருவியாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

அத்தியக்ஷரவர்களின் முதல் விசிற்றேஷன்.

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் நாளது அக்ற்றோபர்மீ 11உ பாளையங்கோட்டை பரி: திரித்துவாலயத்தில் தங்கள் உத்தியோக முறையாய்க் குருமாரைச் சந்தித்து, குருமாரின் லைசன்ஸ் பத்திரங்களைப் பரிசோதித்து கையொப்பமிட்டு, தங்களுடைய கட்டளையைக் குருமாருக்குஅருளி, தங்கள்முதலாவது விசிற்றேஷனை நடத்தினார்கள். அத்தியக்ஷாதீனத்திலுள்ள குருமாரில் வியாதியினாலும் வேறு தகுந்த முகாந்தரங்களினாலும் உத்தரவு பெற்று வராமலிருந்த 6 பேர் தவிர, மீதியான 80 குருமாரும் 11 உதவிக் குருமாரும் ஆஜராயிருந்தார்கள். அன்று காலை 7½-மணிக்கு பரி. திரித்துவாலயத்தில் பரி. நற்கருணை ஆராதனை நடந்தது. மகாகனம் அத்தியக்ஷரவர்களோடு, அவர்கள் க்ஷேப்ளன் கனம் ஆர். வி. ஆசீர்வாதம் ஐயரவர்களும், ஸ்தலக் குரு கனம் எம். ஆசீர்வாதம் ஐயரவர்களும், கனம் ஜி. எச். லாம், எஸ். ஜி. மதுரம், Ll. G. S. பிரைஸ், D. M. பெரியநாயகம் ஐயர்மாரும் பரி: நற்கருணை பரிமாறுவதில் உதவிசெய்தார்கள். கனம் லாம் ஐயரவர்கள் நிருபவாக்கியமும் கனம் மதுரம் ஐயரவர்கள் சுவிசேஷ வாக்கியமும் வாசித்தார்கள். மூன்று வரிசையாக பரி: நற்கருணை பரிமாறப்பட்டது. இவ்வாராதனை முடிந்தபின் 9-மணிக்கு குருமார் யாவரும் சி. எம். எஸ். மாடல் ஸ்கூல் ஹாலில் கூடி, அங்கிகள் தரித்துக்கொண்டு குருப்பட்டம் பெற்ற வரிசைப்படி ஒழுங்காய்ப் பவனி செல்ல, ஸ்தலக் குருவும் க்ஷேப்ளனும் அத்தியக்ஷரவர்களும் கடைசியில் சென்றார்கள். குருமார் தங்கள் அதிகாரப் பத்திரங்களை கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது இருபக்கங்களிலும் ஆயத்தமாயிருந்த தட்டுகளில் வைத்துவிட்டுப்போக, அவைகள் இருவருடைய பந்தோபஸ்தில் இருந்தன. குருமார் தம்தம் வரிசையில் ஆசனங்களுக்குச் சென்றனர். க்ஷேப்ளன் முன்செல்ல, அத்தியக்ஷரவர்கள் நற்கருணை அறையின்மத்தியில் போடப்பட்டிருந்த ஆசனத்தண்டை சேரவே, யாவரும் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி முடித்தபின், "அடியார்நெஞ்சைத் தயவாய்" என்னும் கீதம் (Veni Creator) முழங்காலில் பாடப்பட்டது. ஸ்தலக் குரு வித்தானியா பிரார்த்தனை செய்தார்கள். எல்லாரும் எழுந்து உட்கார, குருமாரின் பேர் வரிசையாய் வாசிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் அவரவர் பேர் வாசித்தவுடன் எழுந்து உட்கார்ந்தார்கள். பின்னர் அத்தியக்ஷரவர்கள் எழும்பிநின்று, தாங்கள் அத்தியக்ஷாதீனத்துக்கு வந்தபின் மரித்துப்போன பின்வரும் குருமாருடைய பேர்களை வாசித்தார்கள்:

1. கனம் J. அல்பர்ட் ஐயரவர்கள்.
2. S. மாசிலாமணி ,,
3. Y. ஞானமுத்து ,,
4. M. ஜீவானந்தம் ,,
5. S. டேவிட் ,,
6. A. ஜெகநாதன் ,,

அதன்பின் அத்தியக்ஷரவர்கள் தங்கள் கட்டளை (Charge) யை இங்கிலிஷில் வாசித்தார்கள். கடைசியாக ஓர் சுருக்க ஜெபம் வாசித்து ஆசீர்வாதம் கூற, விசிற்றேஷன் ஆராதனை முற்றுப்பெற்றது. குருமார் திரும்பவும் பவனிசென்று, தங்கள் அங்கிகள் கழற்றியானபின், அத்தியக்ஷரவர்கள் குருமாருக்கென்று ஆயத்தம் செய்திருந்த விருந்து (Breakfast) 11-மணிக்கு ஆரம்பித்தது. அது முடிந்தபின், குருமார் சற்றுநேரம் இளைப்பாறினார்கள். மாலை 2-மணிக்கு குருமாரின் கான்பெரன்ஸ் கூட்டம் நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்றது. முன் குறிக்கப்பட்ட நாலு பொருட்களின்பேரில் அத்தியக்ஷரவர்களால் நியமிக்கப்பட்ட நால்வர் உபந்யாசம் செய்ய, ஒவ்வொன்றின்பேரிலும் குருமாரில் பலர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

I. டையோஸிஸன் கவுன்சல். இதைப்பற்றி கனம் எஸ். ஜி. மதுரம் ஐயரவர்கள் உபந்நியாசித்தார்கள். அவர்கள் உபந்யாசத்தின் சுருக்கம் என்னவென்றால்:- டையோஸிஸன் கவுன்சல் ஸ்தாபகமாக வேண்டிய முறைகளைப் பேசிக்கொள்ளும்படி வந்திருக்கிறோம். அது அவசியமென்பதைப் பின்வரும் நியாயங்களால் காட்டுகிறேன்:—

முதலாவது, டையோஸிசன் ஏற்பாட்டின்படி ஆளுகை நடத்துவதே ஓர் திருச்சபையின் இயற்கையான ஆளுகை முறையாம். இவ்வத்தியக்ஷாதீனத்தில் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த இருசங்கங்கள் வேலை நடப்பிக்கின்றன. இவ்விரு சங்கங்களும் அத்தியகூ ஆளுகையை ஒப்புக் கொள்ளும் சங்கங்களேயாம். ஆகையால் அவ்விரண்டிற்குமுரிய காரியாதிகளை நடத்தும்படி பொதுவான ஓர் அத்தியக்ஷர் ஏற்பட்டிருக்கிறபடியால், டையோஸிஸன் கவுன்சல்தான் இயற்கையான ஓர் ஏற்பாடேயொழிய வேறல்ல. இவ்வித ஏற்பாட்டைப்பற்றி 21 வருஷங்களுக்கு முன் பலர் தங்கள் மனதில் பயங்களையும் சந்தேகங்களையும் உடையவர்களாயிருந்தபோதிலும், அவைகளால் யாதொரு விகற்பம் நேரிட்டதாகக் காணேம். இன்னும் 20 வருஷம் சென்றால், அவ்வித பயங்களும் சந்தேகங்களும் யார் மனதிலும் தோன்றக்கூடியதில்லை. ஆதலால் இதை ஓர் இயற்கை சம்பவமாகவே யாவரும் ஒப்புக் கொள்ளவேண்டியது.

இரண்டாவது, டையோஸிஸன் ஏற்பாடே ஓர் திருச்சபைக்குரிய நியாயமான ஆளுகை முறை. திருச்சபைச் சரித்திரத்தைப் பார்த்தால், அதன் உண்மை விளங்கும். இரண்டாம் நூற்றாண்டில் அத்தியகூர்மார் சினட் ஏற்பாடாகியிருக்கிறது. மூன்றும் நூற்றாண்டுமுதல் டையோஸிஸன் சினட்கள் தோன்றியிருக்கின்றன. கடந்த 200 வருஷங்களுக்குள்ளாக உலகமெங்கும் டையோஸிஸன் சினட்களும் புரோவின்சியல் சினட்களும் நடைபெற்றுவருகின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திபோல் அமெரிக்கா தேசத்திலுள்ள ஐக்கிய மாகாணங்களில் அவைகள் கிரமப்படுத்தப்பட்டு, பின்பு ஆஸ்திரேலியா, நியுசிலாந்திலும், அப்புறம் கனடா, தென் ஆப்பிரிக்காவிலும், அதன்பின்னர் சீனா, ஜப்பானிலும்கூட இவைகள் நடைபெற்றுவருகின்றன. இங்கிலாந்தில் திருச்சபைக்கும் பார்லிமெந்துக்குமுரிய சம்பந்தத்தினிமித்தம் இவ்வித ஏற்பாடு கஷ்டப்படுகிறது. அதே சம்பந்தமான கஷ்டம் இந்தியாவிலுமுண்டாயிருக்கிறபடியால், இனட் ஏற்பாடுகூடாதபோதிலும், டையோஸிஸன் கவுண்சல் ஏற்பாடு செய்வதற்கு யாதொரு தடையுமில்லை.

மூன்றாவது, நமது அத்தியகூஹாதீனத்துக்கு டையோஸிசன் கவுண்சல் மிகவும் அவசியம். காலம்சென்ற மகாகனம். கார்ட்வெல் அத்தியகூரவர்கள் தங்களையும் மகாகனம் சார்ஜெண்ட் அத்தியகூரவர்களையும்பற்றி ஓர் புத்தகத்தில் தாங்களிருவரும் சமதூர இருதேர்கோடுகளில் ஓடும் புகைவண்டிகளென்றும் தாங்கள்ஒருபோதும் ஒருவரையொருவர் மோதிக்கொள்ளமாட்டார்களென்றும் சொன்னார்கள். அவர்கள் சமதூரக்கோடுகளில் சென்றபடியால், மோதிக்கொள்ளமாட்டாததுபோல அவர்களிருவரும் ஒருகாலத்திலும் ஐக்யப்பட்செக்கொள்ளவும் கூடாததாயிருந்தது. ஆனால் பல விஷயங்களில் இவ்விரு சங்கங்களுக்கும் சம்பந்தமுண்டு. விசேஷமாய்க்கலியாணவிஷயங்களில் ஐக்கியப்பட்டுவருகிறார்கள். ஆகையால் விகற்பம் நேரிடக்கூடிய பல விஷயங்களில் ஒற்றுமையுண்டாயிருக்கவும் அத்தியகூஹாதீனப் பொது ஊழியங்கள் மிகுந்த சிரத்தையோடு நடத்தப்படவும் இவ்வித டையோஸிசன் கவுண்சில் மெத்த அவசியம்.

நான்காவது, டையோஸிசன் கவுண்சில் ஏற்பாட்டை அங்கிகரிக்கத்தக்கதாக இவ்வித்தியகூஹாதீனம் முன்னாலேயே ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. பதினைந்து வருஷங்களுக்கு முன் சி. எம். எஸ். தாய்ச் சங்கத்தார் பிரசுரித்த ஓர் விசேஷித்த அறிக்கையில் தங்கள் ஆட்சிக்குள்பட்ட புறதேச மிஷன்களில் நடைபெறும் கமிற்றிகளும் கவுண்சில்களும் வருங்காலங்களில் ஸ்தாபகமாகுமென்று எதிர்நோக்கும் அத்தியகூஹாலோசனை கூட்டங்களுக்கென்று (Diocesson Council) சபையைப் பயிற்சிக்கும் சாதனங்களென்றும் அவ்வித டையோஸிசன் கவுண்சல்கள் ஏற்படுங்கால், தாங்கள் அவைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, அத்தியகூ ஆளுகைக்குச் சபைகள் ஒப்புக்கொடுத்து தங்களாலியன்றமட்டும் அவ்வித ஆளுகை ஸ்திரப்பட உதவிபுரிந்து அவசியமானால் பணச் சகாயம் செய்து வருவோமென்று வீக்களித்திருக்கிறார்கள். இவ்விதமாய்ச் சபையானது சுயாதீனமடைந்து தனது காரியாதிகளைத் தானே நடத்திக்கொள்ளத்தக்கதாய் வளருங்கால் அதற்குப் பூரண சுயாதீனம் கொடுப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் ஏற்றகாலத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் இச்சுயாதீனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்களை நிர்வகிப்பது நமக்குத் தகுதி.

ஐந்தாவது, இந்தியா முழுவதும் இவ்வித டையோஸிசன் ஏறபாட்டுக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. சற்காலத்தில் இந்து தேசமானது பல பெரிய காரியங்களைக் குறித்து எழுப்புதலடைந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்களும் தாங்கள் யாவரும் ஏகமாய் அனுஷ்டிக்கத்தக்க ஆராதனை முறை, தங்கள் யாவருக்கும் பொருந்தின சபை ஆளுகை ஆகிய இத்தகைய பெரிய காரியங்களைக்குறித்து ஆலோசிப்பது மெத்த அவசியம். இந்தியாவிலும் ஆங்கில திருச்சபையின் ஐக்யத்துக்குட்பட்ட ஓர் இந்திய சபை சீக்கிரத்தில் ஏற்பாடாகக்கூடும் என்று நம்ப இடமுண்டு. ஆகையால் நமது சபை ஓர் ஒழுங்கு முறைமைக்குட்பட வேண்டியது மெத்த அவசியம்.

ஆகையால் நமது சபையில் ஓர் டையோஸிசன் கவுண்சில் அவசியமென்றும் அதினால் மிகுந்த பிரயோஜனம் உண்டென்றும் நம்புவதோடு ஒருவருக்கொருவர் அன்புள்ளவர்களாய் நடந்து "அன்பினால் கிரியைச்செய்யும் விசுவாசமே" பிரதானம் என்பதை ரூபிப் போமாக.

கனம். Ll G. S. பிரைஸ் ஐயரவர்கள் பின்வரும் கேள்வி கேட்டார்கள். அதாவது டையோஸிசன் கவுண்சல் ஏற்பாடானால் உபதேசங்கள், ஆராதனைக்கடுத்த சடங்காசாரங்கள் இவ்விஷயங்களில் கவுண்சல் தலையிடுமா? மகாகனம் அத்தியட்சரவர்கள் கவுண்சலானது இவ்விஷயங்களில் தலையிடாதென்று சொன்னார்கள். மேலும் கனம். பிரைஸ் ஐயரவர்கள் இவ்விதக் கவுண்சல் அதிக ஐக்யத்துக்கு ஏதுவாயிருக்குமென்றார்கள்: இதன் சம்பந்தமாய் மகாகனம் அத்தியகூரவர்கள் தாங்கள் நிரூபித்த சட்டங்கள் மிகுந்த ஆலோசனையின் பேரில் ஏற்படுத்தப்பட்டதென்றும் சில விஷயங்களில் மாறுதல் அவசியமாவென்பதை ஆலோசித்துக்கொள்ள வேண்டுமென்றும்சொன்னார்கள். அவைகள்எவையென்றால் (1) 'கவுண்சலின் லேபிரதிநிதிகள்' 'பாஸ்ற்ரேற்" 'சர்க்கிள்' என்பவைகளுக்குத்தக்கபடியா? பரி. நற்கருணைக்காரரின் தொகைக்குத்தக்கபடியா? (2) சம்மதச்சீட்டுக் கொடுப்பவர்களின்வயது (18) பிரதிநிதிகளின் வயது (21). (3) லேபிரதிநிதிகள் பரி. நற்கருணைக்காரராயிருப்பது போதாதா? 'சபைக்குச் செல்லவேண்டியபணம் கொடுப்பவர்கள் என்பதும் கூட்டவேண்டுமா? (4) எக்செக்கியுட்டிவ் கமிற்றியில் இருசங்கங்களின் பிரதிநிதிகளும் கூடியவரை சரிசமமாயிருக்கத்தக்கதாக தெரிந்துகொள்ளுதல், ஏற்படுத்தல் (Election, Nomination) இவ்விரண்டிற்கும் பிரதிநிதிகளின் எண்ணம் ஏற்படுத்தியிருக்கிறது. (5) வகுப்புவகுப்பாகச் சம்மதச் சீட்டுக்கொடுக்கும் முறையினால் ஓர் விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் வித்தியாசப்படுமானால் அதினால் ஒரு வகுப்பாருடைய சம்மதத்துக்கு எதிரிடையான காரியம் நடக்கவேண்டுமென்பது கருத்தல்ல, அந்த விஷயம் பிந்தி யோசிக்கப்படும் என்பதே கருத்தாம்.

II. சுவிசேஷ வேலை

கனம். D. M. ஞானசிகாமணி ஐயரவர்கள் இவ்விஷயத்தின்பேரில் ஓர் உபந்நியாசம் செய்தார்கள். அவர்கள் பேசினதின் சுருக்கமாவது:—

சுவிசேஷ வேலை இருவகைப்படும். (1) முயற்சியோடு கூடிய நேரான வேலை (2) யெலற்றசவேலை. நேரான வேலையென்பது தெருப்பிரசங்கம், மண்டபங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகளில் செய்யும் சுவிசேஷ ஊழியம், தனித்த ஆள் சம்பாஷணை இவைகளைக் குறிக்கும். செயலற்ற வேலையென்பது வைத்தியசாலை, கலாசாலை முதலிய பரோப

கார சாலைகளை ஸ்தாபித்துக் கிறிஸ்தவ செல்வாக்கையுண்டாக்குவதைக் குறிக்கும்.

மூயற்சியுள்ள வேலையின் பலனைக் குறித்து முன் ஓர் காலத்தில், அதிக விசுவாசமில்லாவிடினும் தற்காலம் நாமெல்லாரும் அவ்விதமுயற்சியில் ஊக்கமான நம்பிக்கையுள்ளவர்களாய் உழைக்கிறபடியால் அவ்வூழியம் சித்திபெறத்தக்க சில வழிவகைகளை இங்ஙனம் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

முதலாவது, பிரசங்கிகளை மாற்றிக்கொள்ளல். நமது சபைகள் தற்காலத்தில் தாங்களே எழுப்புதலடைந்து பிரசங்கம் நடத்துகிறார்கள். ஒய்வுநாட்களில் தெருப்பிரசங்கம் நடத்துகிறார்கள். சிற்சில இடங்களில் வருஷாந்தரக் கூட்டப்பிரசங்கங்களும் நடைபெற்று வருகின்றன. இவ்விதமான ஊழியம் இடங்கள்தோறும் ஆரம்பமாகி நடைபெற வேண்டியது மெத்த அவசரம். ஆனால் இது வழக்கமானவுடன் பிரசங்கம் கேட்க வருகிறவர்கள் குறைந்துகொண்டே போகிறது இயற்கை. இக்குறைவை நிவிர்த்திக்கவேண்டுமானால் ஒரிடத்துப்பிரசங்கிகள் மற்றோரிடத்துக்கும் ஒரு பால்ற்றரேற் ஊழியர் அயல் பாஸ்ற்றரேற்றுக்கும் போய் இவ்விதமாய்க் கூடிய போது மாற்றிக்கொள்வார்களானால் அது உற்சாகத்தைக் கொடுக்கும். இதற்கென்று வருஷந்தோறும் நடைபெறும் ஊழியத்துக்கு விசேஷித்த பிரசங்கிகளையும் தூரத்திலிருந்து வரவழைக்கலாம்.

இரண்டாவது, சுவிசேஷ அல்லது வாசிப்பு மண்டபங்கள் ஏற்படுத்தல். இம்முறை பட்டணங்களில் மட்டும் சித்திபெறக்கூடியது. தற்காலத்தில் பட்டிகளிலுள்ளவர்களுங்கூட பத்திரிகைகள் வாசிக்க ஆசிக்கிறார்கள். இவ்விதவாசிப்பு மண்டபங்கள் ஏற்பாடானால், கிறிஸ்தவர்களலலாதவர்களும் அவ்விடங்களுக்கு வருவார்கள். அவர்களுடைய வாசிப்புக்கேற்ற பத்திரிகைகள், மார்க்க சம்பந்தமான புஸ்தகங்கள் சவதரித்துக் கொடுக்கிறதாயிருந்தால் கிறிஸ்தவ செல்வாக்கு இவைகளின் மூலமாய் உண்டாக எதுவாரும் சபையில் முக்கியஸ்தரான ஒருவனையே இவ்விதமான ஏற்பாடுகளை மேற்பார்த்து நடத்த ஒழுங்குசெய்யலாம். காலாகாலங்களில் இவ்விதமாய்க் கூடி வருவோருக்குப் பிரசங்கங்களும் சம்பாஷணைகளும் ஏற்பாடு செய்யலாம்.

மூன்றவது, தனித்த ஆள் சம்பாஷணை செய்தல். ஆத்தும ஆதாயத்துக்கு இது ஏற்ற முறை. தெருப்பிரசங்கம் பிரத்தியகூமான பலன் கொடுக்கவேண்டுமானால் அது முடிந்த பின் தனித்து ஆட்களைக் கண்டுபேசவேண்டும். தேர்ந்த பிரசங்கம்கேட்டு மனது எழுப்தலடையும். ஆனால் மனதில் பட்ட சத்தியம் ஸ்திரப்பட்டுக் கிறிஸ்துவைத்தைரியமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் ஆட்களைத் தனித்துக்கண்டு பேசவேண்டும். அல்லது சத்தியத்தைப் பலதரம் பிரசங்கங்கள் மூலம் கேட்டும் மனதில் சந்தேகம் நிவிர்த்தியாகவேண்டுமானால் அவர்களோடு தனித்துச் சம்பாஷணை செய்யவேண்டும். சிலர் தாங்களே வலிய வந்து பேச வெட்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இவ்விதமான ஊழியம் பிரயோஜனமாகும். சிலர் சுவிசேஷ ஊழியம் என்றால் சாட்சி கொடுக்கவேண்டியதுதான். ஆகையால் இடத்துக்கிடம் போய்ப் பிரசங்கம் நடப்பிப்பது போதுமென்பதுபோல் எண்ணுகிறார்கள். ஆது பிசகு. கிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதும் கிறிஸ்துவண்டை அவர்களை வழிநடத்துவதும் அதோடு சேர்ந்த வேலையாம். ஆகையால் இவ்விதசம்பாஷணைகள் செய்வதற்கென்றே ஒவ்வோர் பாஸ்ற்றரேற்றிலும் இரண்டொரு பிரசங்கிமார் ஏற்படுத்துவது உசிதம். ஒய்வுநாள் மாலையில் நடக்கும் தெருப்பிரசங்கத்தோடும் தனித்த ஆள் வேலையைச் சேர்த்து நடத்தலாம். 20 பேர் கூட்டமாய்ப் போனால் 2 அல்லது 3 பேர் மட்டும் பேச இடங்கிடைக்கும். ஆனால் அந்த 20 பேரும் இரண்டிரண்டு பேராகப் பிரிந்து ஆட்களைக் கண்டுபேசுவதில் ஒரு மணி நேரம் பின்னிட்டாலும் அது மிகுந்த பலனுள்ளதாயிருக்கும். பிரசங்கம் பண்ணுவது இரண்டொருவர்தானே என்ற போக்கை வைத்துக்கொண்டு எத்தனையோ பேர் பிரசங்கத்துக்குப் போகிறதேயில்லை. கூட்டங்களில் பிரசங்கம் செய்யும் திறமையில்லாதவர்கள் தனித்தனியாய் ஆட்களோடு சம்பாஷிக்கலாமே. ஒய்வுநாளில் மட்டுமல்ல, வாரத்து நாட்களிலும் இந்தக்களைக் கண்டுபேசலாம். ஆனால் இவ்வூழியத்திலும் பிசகு நேரிடக்கூடும். சிலர் தாங்கள் காண்கிற ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வோர் வாசகத்தை அல்லது வேதவசனத்தைக் சொல்லிவிட்டு அதோடு தங்கள் வேலை முடிந்தது என்று எண்ணுகிறார்கள். அது சரியல்ல, ஓர் கிராமத்தில் பிரசங்கிக்கப் போனால் வசனத்தைக் ஏற்றுக்கொள்ளத்தக்கவர்கள் இன்னின்னாரென்பதற்கு ஓர் ஜாபிதா எழுத்துக் கொண்டு அவர்களைப் பிரிவாகப் பிரித்துக் கூடிய வேளைகளிலெல்லாம் அவர்களைக் கண்டு பேசினால் அதினால் பலனுண்டாகும்.

கடைசியாக, சுவிசேஷ வேலையானது முன்காலத்தில் மிஷனெரிமாரால் நடந்ததுபோல இக்காலத்தில் நடக்கிறதில்லையென்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். பழைய மிஷனெரிமார் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களைச் சேகரிக்கப்பிரயாசப்பட்டார்கள். சபைகள் சேர்ந்தபின் கிறிஸ்தவர்களை ஸ்திரப்படுத்துவதில் தங்கள் முயற்சியைச் செலவழித்தார்கள். இவ்விரண்டும் ஒருங்கே நடைபெறவேண்டியதவசியம். இவ்விரண்டையும் நெகிழவிடாமல் செய்தால் மட்டும் நூதன கிறிஸ்தவர்களுண்டாகிறதுமன்றி அவர்கள் மூலமாயும் சுவிசேஷ நற்செய்தி மற்றவர்களுக்கும் பரவ ஏதுவுண்டாகும்.

அப்பால் கனம் பிளாஸ் ஐயரவர்கள் வேதாகமப்பாகங்கள் விற்பனை செய்து, அதின் மூலமாய் சுவிசேஷ சம்பாஷணை செய்யலாம் என்று ஆலோசனை சொன்னார்கள். கனம். உவீலன் ஐயரவர்களும் அதையே வற்புறுத்திப் பேசினார்கள். கனம். மதுரம் ஐயரவர்கள் இந்துக்களான இனத்தாரிடத்தில் தனிச் சம்பாஷணை செய்யலாம் என்றார்கள். கனம் அருமைநாயகம் ஐயரவர்கள் இந்துக்களான அனேகர் இரகசியமாய் வேதம் வாசித்து வருகிறார்கள் என்றும் விசேஷமாய் சில ஸ்திரீகள் வேதம் வாசித்து அற்புதங்க ஜெயிகளாயிருக்கிறார்களென்றும் சொன்னார்கள். கனம் விசுதாசன் ஐயரவர்கள் அத்தியகூஹாதீனத்தில் இன்னும் அநேகவேதசாஸ்திர சாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் அவைகளிலுள்ள மாணாக்கர் மூலமாய் தனித்தவுள் வேலை நடப்பிக்கவேண்டுமென்றும் பேசினார்கள். கனம் P. J. ஹாரிஸ் ஐயரவர்கள் நூதனமாய் மார்க்கத்துக்கு வருகிறவர்கள் இந்துக்களான தங்கள் இனத்தாருக்கு முன் வெளியரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டுமென்றும் அதினால் மிகுந்த பலன் உண்டாகும் என்றும் சொன்னார்கள்.

III. சபை வேலை.

இது விஷயத்தைக் குறித்து கனம். E. A. L. மூர் ஐயரவர்கள் ஓர் உபந்நியாசம் செய்தார்கள். அதாவது:—குருமாரும் சபைகளும் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் பல விதத்தியாசங்கள் ஏற்படுகின்றன. என்றாலும், இந்த விஷயம் மிகவும் முக்கியமும் நமக்குச் சம்பந்தப்பட்டதுமானது. இந்துதேசமானது தன் புராதன மார்க்க ஏற்பாட்டின்படி குருத்துவ ஊழியத்தைசிரேஷ்டப்படுத்துகிறது. ஆகையால் இந்தியாவில் ஓர் கிறிஸ்தவக் குரு அல்லது போதகருடைய விஷயம்கவனிக்கப்பட வேண்டியது. இரண்டு காரியங்களைக் குறித்துத் தற்சமயம் நாம் யோசித்துக் கொள்வது பிரயோஜனமாயிருக்கும்.

(1) குருவின் தனி ஜீவியம். (2) அவருடைய ஊழியம்.

1. வாசிப்பதில் காணப்படும் அசட்டை.

(a) திருநெல்வேலியிலுள்ள குருமார் பொதுவாகப் புஸ்தகங்களை வாசிக்கும் அப்பியாசமுள்ளவர்களா? இல்லையென்றுதான் சொல்லவேண்டும். பல திருஷ்டாந்தங்கள் சொல்லலாம். (1) பாளையங்கோட்டை சி. யம். எஸ். ஆபீசிலிருக்கும் புஸ்தகசாலையிலிருந்து புஸ்தகங்கள் வாங்கி வாசிக்கும் குருமார் மிகவும் சொற்பம். (2) குருமாருடைய புஸ்தகசாலைகளைப் பார்வையிட்டாலும் இதன் உண்மை விளங்கும். (3) நூதன புஸ்தகங்கள் வாங்கி வாசிப்போர் மிகவும் சிலர். (4) தற்காலத்தில் மார்க்க சம்பந்தமாய் நடக்கும் மாறுதல்களுக்கு முற்றிலும் அந்நியராயிருக்கிறார்கள் (5) வாசிப்பது முக்கியம், அவசியம் என்ற உணர்வுகூடச் சிலருக்குள்ளில்லை. (6) பிரசங்கங்களில் போதனையென்பது பூச்சியம்.

(b) இப்போர்ப்பட்ட நிலைமை அதாவது குருமார் வாசித்து அறிவில் தேறுவது அவசியமா? அவசியமில்லையா? இரண்டுக்கும் உத்தாவு சொல்லலாம். (1) அவசியமில்லையென்று சொல்லலாம். அதற்குச் சில நியாயங்களுண்டு. அறிவு அவ்வளவு விசேஷமுக்கியமானதல்ல. வாசிப்பே சில வேலைகளில் விக்ரகமாகும். அறிவு இறுமாப்பையுண்டாக்கும். நமது ஜனங்களின் நிலைமையைப் பார்க்கும்போதும் அவசியமில்லாததுபோல் தோற்றும். மேலும் வாசிப்பும் படிப்பும் இராமங்களில் வேலைசெய்யும் குருமாருக்குச் சாத்தியப்படாது.

(2) அவசியந்தான் என்றும் சொல்லலாம். இவ்விஷயத்தைக் குறித்துப் புஸ்தகம் எழுதியிருக்கிற யாவரும் அது அவசியம்தான் என்று சொல்லுகிறார்கள். டீன்சர்ச் என்பவர் "உன்னால் எவ்வளவு வாசிக்கக்கூடுமோ அம்மட்டும் வாசி. படிப்பில் தேர்ந்த குருமார் ஒவ்வொருவருக்கும் இதுவே பிரமாணமாயிருக்கவேண்டும். குருவானவர் முடிவுபரியந்தம் வாசிக்கிறவராகவும், மாணாக்கராகவும், யோசிக்கிறவராகவும் இருக்கவேண்டும்" என்கிறார். டீன் வான் என்பவர், "குருவானவர் அங்கீகாரம் பெறுவதற்கு வாசிப்பு மாத்திரம் இன்றியமையாதது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் வாசிப்பின் முக்கியத்தைக் குருவானவர் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை அசட்டை செய்கிறதினால் மோசம் நேரிடக்கூடியது" என்கிறார். ஸ்பர்ஜன் என்பவரும் இவ்விதமாகவே பேசுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக பரி: பவுல் "நான் வருமளவும் வாசிக்கிறதில்...ஜாக்ரதையாயிரு" என்று தீமோத்தேயுவுக்குப் புத்தி சொல்லுகிறார். குருவானவன் வாசிப்பில் தேர்ந்தவனாயிருக்க வேண்டுமென்பது வேதாந்த சாஸ்திரத்திலும் கண்டிருக்கிறது. வாசிப்பு என் அவசியம்? [a] நமது சொந்த பிரயோஜனத்துக்காக. பக்தியும் அறிவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளது. நமக்குக் கிடைத்திருக்கும் எந்தத் தாலந்தையும் அசட்டை செய்வது நல்லதல்ல. இஜ்ஜீவியத்துக்குச் சம்பந்தமான பல காரியங்களை நாம் நெகிழவிடலாம். ஆனால் எவ்வளவுக்கு நெகிழவிடுகிறோமோ அவ்வளவுக்கு நமது ஜீவியம் குறைவுள்ளதாய்த்தான் காணப்படும்" என்று உவெஸ்ற்கட் என்னும் போதகர் சொல்லுகிறார். [b] நமது வேலையின் அனுகூலத்துக்காக வாசிப்பை அசட்டை செய்தால் கட்டாயம் பிரசங்கத்தின் சாரம் குறையும். வாசித்துக்கொண்டே போகாவிட்டால் பிரசங்கங்கள் போதனையுள்ளவைகளாயிருக்கமாட்டாது. வாசிப்பினால் உண்மை பிரகாசமடைந்து பிரசங்கம் பயனுள்ளதாகும். [c] நமது சபையின் வாழ்வுக்காக. திருநெல்வேலி சபையில் போதகர்கள் எத்தனைபேர்? தென்னிந்திய சபையில் வேத சாஸ்திரிகள் எத்தனைபேர்? திருநெல்வேலிக்கு வெளியே நமது குருமாருடைய சொற்சக்தி யெவ்வளவு?

(c) இவற்றிற்கு நிவாரணமுண்டா? நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் அதிகம். வாசிக்க நேரம் கிடையாது. புஸ்தகங்கள் இல்லை. வாசிப்பில் உற்சாகப்படுத்தும் ஏதுக்களுமில்லை. சில ஆலோசனைகள் சொல்லலாம். [1] வருஷந்தோறும் சில புஸ்தகங்களை வாசிக்கும்படி அத்தியகூஷரவர்கள் குறிப்பிடலாம் (டீன் வான்) [2] புஸ்தகங்கள் வாங்கும்படி குருமாருக்குப் பண உதவி செய்யவேண்டும் (ஸ்பர்ஜன்) [3] ஒவ்வோர் பாஸ்றரேற் ஸ்தானத்திலும் ஓர் புஸ்தகசாலை ஏற்படுத்த வேண்டும். [4] வேனிற்கால வகுப்புகள் ஏற்படுத்தவேண்டும். திருவனந்தபுரத்தில் இவ்வகுப்புகள் நடந்துவருகின்றன.

2. மற்ற வேலைகளின் பாரம். (a) திருநெல்வேலியிலுள்ள குருமார் சபையில் செய்யவேண்டிய நேரான ஆவிக்குரிய ஊழியமன்னியில் பலவித மற்ற வேலைகளும் செய்ய நேரிடுகிறது. எவையென்றால், பணம் சேர்க்குதல், கணக்குகள் பார்வையிட்டுச் சரிபார்க்குதல், சம்பளம் போடுதல், கட்டடங்கள் மேற்பார்க்குதல், சொத்துக்களை விசாரித்தல், வழக்குகள் விசாரித்தல் உத்தியோகஸ்தரைக் கண்டு பேசுதல், கச்சேரியில் நடக்கும் விவாகங்களில் சாட்சி சொல்லுதல் ஆகிய இவைகளை.

(b) இவைகள் தீமையா? இரண்டு வகையாயும் நிதானிக்கலாம். 1. தீமைதான். மோசேயின் சரித்திரம் இதற்கு திருஷ்டாந்தமாகும். நமது ஆண்டவரும் கூட இப்படிப்பட்ட ஓர் விஷயத்தில் தலையிட மாட்டேன் என்றார். அப்போஸ்தலர் நடபடி 6-ம் அதிகாரத்தில் பார்க்கிறபடி அப்போஸ்தலர் தாங்கள் சபையின் ஆவிக்குரிய வேலையைச் செய்வதில் குறைவுபடாதபடிக்கும் சபையின் வாக்குவாதங்களில் சிக்கிக்கொள்ளாதபடிக்கும் உதவிக்காரரை ஏற்படுத்தினார்கள். ஆனால் இதில் சில மோசங்களுண்டு. சபையோடு சம்பந்தப்படும் வேலைகளையெல்லாம் தூரான உத்தியோகஸ்தருக்குக் கொடுத்துவிட்டுக் குருமார் மேற்பார்வைமட்டும் செய்கிறவர்களாய்ப் போகக்கூடும். 2. தீமையல்லவென்றும் சொல்லலாம். வியாச்சியங்களுக்குவிடாமல் சமாதானம் பண்ணுகிறவர்களுக்கு ஆசீர்வாதமுண்டு. ஒடுக்கப்படுகிறவர்களைப் பராமரிக்கலாம். இதினால் மிகுந்த சொற்சக்தியுண்டாகும். மற்றவர்களுக்குப் பிரயோஜனமுள்ளவர்களாகலாம்.

(c) இதற்கு நிவாரணமுண்டா? மற்றக் கடமைகளையெல்லாம் செய்யத்தக்கதாக சம்பளம் பெற்ற லேமென்பர்களை நியமிக்கலாம்.

கனம். D. S. டேவிட் ஐயரவர்கள் வீடு சந்திப்பினால் தான் ஜனங்களுடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்ளலாம் என்றும், குருமார் தங்களுடைய தனி வாசிப்புக்கென்று கிரயத்துக்குப் புஸ்தகங்கள் வாங்கக்கூடாத நிலைமையிலிருக்கிறார்களென்றும், அவர்கள் புறம்பான வேலைகளின் மிகுதியினாலும், அவ்விதப் புறம்பான வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கமிற்றிமாரும் ஜனங்களும் எதிர்பார்க்கிறதினாலும் தனி வாசிப்புக்கு இடமற்றிருக்கிறார்கள் என்றும் சொன்னதோடு, சாவகாசமான நேரத்தில் வாசிக்கத்தக்கதாக அவர்களுக்குப் புஸ்தகங்கள் கொடுக்கப்பட்டால் நலலது என்னும் ஆலோசனை சொன்னார்கள். கனம். P. J. ஹாரிஸ் ஐயரவர்கள் வேதவாசிப்பைவிட வீடு சந்திப்பு பிரதானமானது என்றார்கள், கனம் J. மனுவேல் ஐயரவர்கள் சில குருமார் புஸ்தகங்கள் வாசிக்கிற பழக்கமுள்ளவர்கள் என்றும் பட்டணங்களிலுள்ள குருமாரைவிட பட்டிக்காடுகளிலுள்ளவர்கள் பேதமையான ஜனங்களைப் போதித்து உணத்தவேண்டியதால் அவர்களுக்கே வாசிப்பு அதிக அவசரமென்றும், ஒரு சபைக்கிலுள்ள குருமார் மாசத்தில் ஒன்று அல்லது இரண்டுதடவை ஒன்றுய்க்கூடி வேதத்தைப் படிப்பது உசிதம் என்றும் சொன்னார்கள். மகாகனம் அத்தியகூஷரவர்கள் தமிழ்ப்பாஷையில் வேத சாஸ்திரத்துக்கடுத்த புஸ்தகங்கள் அதிகப் பூச்சியம் என்றும் குருமார் தனி வாசிப்பு அப்பியாசம் செய்வது மிகவும் அவசியம் என்றும் புஸ்தகசாலை ஒன்று ஏற்படுத்தி புஸ்தகங்கள் இரவல் கொடுக்கும் முறை ஒன்றை கனம். செல்வின் ஐயரவர்களும், கனம். ஸ்றேப்லி ஐயரவர்களும் ஆலோசித்துச் சொல்லவேண்டும் என்றும் பேசி முடித்தார்கள்.

IV. கல்வி விஷயம்.

கனம். எவன்ஸ் ஐயரவர்கள் கவர்ண்மென்று இன்ஸ்பெக்ற்றர்கள் பொதுவாக கட்டடங்களின் விஸ்தீரணம் பள்ளிக்கூடச் சாமான்கள், உபகரணங்கள், உபாத்தியாரின் திறமை அவர்கள் படிப்பிக்கும் முறை இவைகளைக் குறித்துக் கவனித்து ரிப்போர்ட்டு எழுதுகிறார்களேயல்லாமல், பள்ளிப்பிள்ளைக்களைக் குறித்து அவர்கள் கவனம் இரண்டாம் பக்ஷந்தான். நமது எலிமென்றரிப் பாடசாலைகளின் கல்வி விஷயத்தைப்பற்றிக் கவனித்துக்கொள்வது நலம். இவைகளில் பலமான அஸ்திபாரம் போடப்பட்டிருக்குமானால் செக்கண்டெரிப் பாடசாலைகளில் கஷ்டம் எற்படமாட்டாது. நமது அத்தியகூஷாதீனத்தின் வடபாகத்திலுள்ள எலிமென்றரிப் பாடசாலைகளின் கல்வி விஷயத்தை நாம் விசேஷித்துக் கவனிப்பது நல்லது.

நமது மிஷன் பாடசாலைகளில் பிள்ளையின் குண விசேஷமே முக்கியம் என்று கருதுகிறோம். இந்த நோக்கத்தோடேயே பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு மிகுதியான பணம் செலவழிக்கப்படுகிறது. இவ்விஷயத்தில் நமது பிள்ளைகள் தேறவேண்டுமானால் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரகஸ்ய வல்லமையினாலும் அவருடைய குணாதிசயத்தையும் அவருடைய ஜீவியத்தையும் பிள்ளைகளுக்குமுன் காட்டுவதினாலுமே அது கைகூடிவரும். ஒவ்வொரு உபாத்தியாயரும் இதை நன்குமனதில்வைத்து அதற்கு ஏற்கபடிப்பிப்பார்களானால் எவ்வளவு நேர்த்தியாயிருக்கும்! ஆனால் உபாத்தியாயர், கவர்ண்

மென்று இன்ஸ்பெக்ற்றருக்காகவும் மிஷன் சூப்பர் வைசருக்காகவும் சர்க்கார் இராஜ்ஜியத்துக்காகவும் உழைக்கிறதாகத் தெரிகிறது. அத்தோடு அவர் பல பொருள் காட்சிசாலை, தோட்டம் இவைகளையும் வைத்து பரிபாலிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் பிள்ளைகளின் மார்க்க அறிவைப் பரீட்சித்தால், அதுவும் மற்றப்பாடங்களைப்போல வேத சரித்திரம், ஞானோபதேசவினா விடை, மனப்பாட வாக்கியங்களாகக் கற்பிக்கப்படுகிறதேயொழிய பிள்ளைகளின் குணத்தைச் சீர்ப்படுத்தும் முறையாகக் கற்பிக்கப்படுகிறதில்லை. அநேகம் பள்ளிக்கூடங்களில் பாலர் வகுப்பில் மட்டும் ஜாஸ்தியான பிள்ளைகள் படிக்கிறார்களே தவிர மேல் வகுப்புக்குப் போகப் போக அநேகர் பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள். அந்த வகுப்பிலும்கூட எழுத்துக்களும் சில வார்த்தைகளும் மட்டும் கற்பிக்கப்படுகிறது.

ஆனால் கல்வியென்றாலென்ன? அதின் நோக்கமென்ன? பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள் என்ற வாசகத்தில் அந்நோக்கம் அடங்கியிருக்கிறது. தற்காலத்தில் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் அறிவையுண்டாக்குவதே கல்வியின் நோக்கமாயிருக்கிறது. பல தலைமுறைகளுக்கு முன்னுள்ளவர்கள் தங்கள் சொந்தப்புத்தியை உபயோகித்துத் தாங்களே தாதனமான விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் தற்காலத்திலோ அப்படிப்பட்டவர்களைக்காணோம். பையனுடைய புத்தியை மட்டுமல்ல அவனை முழு மனுஷனைப் பாவித்துப் பயிற்றுவிக்கவேண்டும். எலிமென்றரிப் பாடசாலைகளில் மிகுதியானபணங்கள் செலவழித்தபோதிலும் அவைகளின் நோக்கம் சித்திபெறுகிறதாகத் தெரிகிறதில்லை. பிள்ளைகளின் சன்மார்க்கம் ஆவிக்குரிய ஜீவியம் தேர்ச்சியடையத்தக்கதான வழிவகைகள் கண்டுபிடிக்கக்கூடுமானால் அவர்கள் நல்லகுணதிசயமுள்ளவர்களாய்வளருவார்கள். இந்துப்பையன் ஒருவன் கிறிஸ்தவ போர்டிங் பாடசாலையொன்றில் சேர்ந்து பாடசாலையிலுள்ள மற்றப் பையன்களோடு கூட அவனுடைய ஆவிக்குரிய ஜீவன் சம்பந்தப்படும்போது அவன் சிக்கிரத்துக்குள்ளாகத் தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறான். மாதிரிபார்த்து நடப்பது சிறுவரின் இயல்பு. ஆகையால் எலிமென்றரி பாடசாலைகளில் போதனையும் உபாத்தியாயரின் சிறந்த சாதனையும் ஒத்திருக்குமானால் மிகுந்த நன்மையுண்டாகும்.

இவ்விஷயத்தைக் குறித்து இன்றையதினம் இவ்விடத்தில் சம்பாஷணைசெய்வதைவிட மிஷன் உத்தியோகஸ்தர் கூடும் கூட்டங்களில் பேசிக்கொள்வது நலமாயிருக்கும். நம் நோக்கம் இவ்விஷயத்தில் சித்திபெற வேண்டுமானால் ஒன்று செய்யலாம். அதாவது நாம் சர்க்கார் சம்பந்தத்திலிருந்து நீங்கிக்கொள்வதுதான். இது நமக்குக் கஷ்டமான ஓர் காரியப்தான். செக்கண்டெரி பாடசாலைகளில் சர்க்கார் பரீக்ஷைகளுக்காக நாம் சர்க்காரைச் சார்ந்துகொண்டிருக்கவேண்டியதிருக்கிறது. ஆனால் எலிமென்றெரிப் பாடசாலைகளிலோ அப்படியல்ல. சர்க்கார் மேற்பார்வை எப்படியும் இருக்கவேண்டியது அவசியமே.

இரண்டாவது உபாத்தியாருடைய வேலை விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் தங்கள் பள்ளிக்கூட வேலையோடு கூடச் சனிக்கிழமைகளில் அதிகத்தூரம் நடந்து உபாத்தியார் கூட்டங்களுக்குப் (Teachers' Associatton) போவதோடு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பல கிராமங்களுக்குச் சென்று ஆராதனைகள் நடத்தவேண்டியதிருக்கிறது.

மேலும் ஓர் சிறுபிள்ளையின் குணதிசயத்தை நல்வழிப்படுத்தக்கூடிய திறமை எல்லா உபாத்தியாருக்கும் உரியதல்ல. ஆயிரத்தில் ஒருவர் அத்திறமையுள்ளவராயிருக்கலாம். பெண்கள் கல்வி அபிவிர்த்தியாகும்போது இவ்வித ஊழியம் அவர்களால் திறமையாய்ச் செய்யப்படலாம். இவ்விதமாய் யோசித்துப் பார்க்குமளவில் கஷ்டங்கள் பல நமக்கு ஏற்பட்டபோதிலும் இதன் அவசியத்தை நன்குணர்ந்து அது சித்திபெற நடத்தக்கூடிய முறைகளைப் பிரயாசப்பட்டுப் பார்ப்போமானால் வெகுதூரம் காரியம் பயன்படக்கூடியதே. சில பாடசாலைகளை வைத்துக்கொண்டு

மிச்சமான சிறுவர்கள் அவைகளில் கூடுவதைவிட பாலருக்கென்று பல பாடசாலைகள் ஏற்படுத்திச் சற்றுப் பெரிய பிள்ளைகளுக்கு மத்தியான இரண்டொரு பாடசாலைகள் வைத்து நடத்துவோமானால் உபாத்திமாரில் பலர் உபதேசிமாராவதற்கு எதுவாகும்.

நமது எலிமென்றெரிப் பாடசாலைகளைக் கூடியவரை சுருக்கமான செலவில் நடத்தலாம் என்று எண்ணிக்கொள்வதே நாம் செய்கிற பெரும் பிசகு. சுய ஆதரவு என்கிற விஷயத்தை மனதில் வைத்துச் சிறுவர் காரியத்தை நெகிழவிடுவோமானால், பின்னை தலைமுறைகளில் அதினால் மிகுந்த நஷ்டமுண்டாகும்.

கனம். G. H. லாம்ப் ஐயரவர்கள், மார்க்கப் படிப்பை விர்த்திசெய்வதில் சர்க்கார் சம்பந்தம் ஓர் தடையில்லையென்றும், உபாத்திமார் சபை வேலையும் சேர்த்துப்பார்க்கா விட்டால் அதிகப் பணக்கஷ்டம் உண்டாகும் என்றும் சொன்னார்கள். கனம். பிரைஸ் ஐயரவர்கள், பிள்ளைகளில் அநேகர் மேல் வகுப்புகளுக்கு வராமல் பாலர் வகுப்பிலே நின்று போவது நாம் கவனிக்கவேண்டிய ஓர் விஷயமென்றும் பணச்சகாயத்துக்காக நாம் சர்க்கார் சம்பந்தத்தை நீக்கிக்கொண்டாலும் பாடசாலைகள் அங்கிகாரம் பெற அது அவசியமென்றும் சொன்னார்கள்.

சாயந்தரம் 7-மணிக்குப் பரிசுத்த திரித்துவாலயத்தில் மாலை ஆராதனை நடந்தது. கன்ம. M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் இரண்டாம் பாடத்தை வாசித்து பரி. லூக்கா 10. 2 வசத்தினின்பேரில் சிறு பிரசங்கம் செய்தார்கள். திருநெல்வேலிச் சபையில் அறுப்பின் ஊழியம் மிகுதியென்றும் அவ்வூழியத்துக்குப் போதுமான ஊழியர் அனுப்பப்படும்படி ஜெபிக்கவேண்டுமென்றும் பேசினார்கள்.

அக்டோபர் 12வயாகிய வெள்ளித்கிழமை டையோவிசன் கான்பரென்ஸ் நடைபெறும்படி குறிக்கப்பட்டநாள். அத்தியகூரானை முழுவதிலுமிருந்து தெரிந்தேற்படுத்தப்பட்ட 157 லே பிரதிநிதிகளில் 135 பேரும், குருமார் 97 பேரில் 93 பேரும் ஆஜராயிருந்தார்கள். காலை 7-மணிக்கு பரி. திரித்துவாலயத்தில் பரி. நற்கருணை ஆராதனை நடந்தது. மகாகனம் அத்தியகூரவர்கள் பிலி. 1: 20. ன்பேரில் பிரசங்கம் செய்தார்கள். அந்தப் பிரசங்கம் பிரத்தியேகமாய் இப்பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறது. ஆராதனை முடிந்தபின் காலை 8½-மணிக்கு நூற்றுண்டுபெண்டபத்தில் காண்பரென்ஸின் முதல் கூட்டம் ஆரம்பித்தது. ஏறக்குறைய 40 பேர் விசிற்றர்களாகப் பிரத்தியேகமான ஆசனங்களில் உட்கார்ந்திருந்தார்கள். மகாகனம் அத்தியகூரவர்கள் ஜெபிக்கக் கூட்டம் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் கனம். ஆர்டில் ஐயரவர்கள் டையோவிசன் கவுன்சல் எற்பாட்டினால் அது ஆராதனைகளுக்கடுத்த சடங்காசாரங்களைப்பற்றிய விஷயங்களில் சட்டம் பிறப்பிக்குமோவென்றதன் சந்தேகத்தை நியாயங்களோடு வெளியிட மகாகனம் அத்தியகூரவர்கள் அப்படிப்பட்டவைகள் இந்தக் கவுன்சலின் நோக்கமல்லவென்பதை விளக்கிக்காட்டினபின் பின்வரும் காரியங்கள் வரிசையாய்க் கவனிக்கப்பட்டன.

முதலாவது, புரோவின்சியல் கவுன்சலின் நிபந்தனைகளை ஒப்புகொள்ளல். இவ்விஷயம் தெளிவாய்ப் பேசப்பட்டு இதற்குச் சம்பந்தப்பட்ட சட்டங்கள் சில சிறுமாறுதல்களோடு ஒப்புக்கொள்ளப்பட்டன.

இரண்டாவது, லே பிரதிநிதிகள் தெரிந்கொள்ளும் முறையும் அவர்களின் தொகையும். மஸ்மதா சட்டங்களை நன்றாய்ப் படித்துப்பார்த்து அதற்குரிய விதிகளோச் சில அற்ப மாறுதல்களோடு ஒப்புக்கொண்டார்கள். கான்பரென்ஸின் செக்ரற்றெரிகளாகக் குருமாரில் கனம். W. E. இவான்ஸ் ஐயரவர்களும் லே மெம்பர்களில் கனம். G. தேவதாசன் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவ்விரண்டு விஷயங்களும் பேசியானபின் 12-மணிக்கு மத்தியஸ்தமன்றாட்டு விண்ணப்பஞ்செய்ய முதல் கூட்டம் முடிந்து மத்தியான போஜனம் நடந்தது. திரும்பவும் 2½-மணிக்கு ஆரம்பித்தது.

மூன்றாவது, புரோவின்சியல் கவுன்சலுக்குப் பிரதிநிதிகள் தெரிந்தேற்படுத்தல்: குருமாரிலும் லே மெம்பர்களிலும் பலருடைய பேர்கள் சொல்லப்பட்டன. கடைசியாகக் குருமாரில் கனம். வென்ஸ் ஐயரவர்களும், கனம். E. A. L. மூர் ஐயரவர்களும்,

கனம். SG. மதுரம் ஐயரவர்களும், கனம். A. ஞானக்கண் ஐயரவர்களும், லே மெம்பர்களில் கனம். J. அன்புடையான் அவர்களும், கனம். ஜி. தேவதாசன் அவர்களும், கனம். G. S ஆபிரகாம் அவர்களும், கனம். G. தங்கசாமி அவர்களும் தெரிந்தேற்படுத்தப்பட்டார்கள்.

மஸ்மதர சட்டங்களைச் சில மாறுதல்களோடு கான்பரென்ஸ் ஒப்புக்கொண்டபடியாலும் பிரதிநிதிகள் சட்டப்படி தெரிந்து கொள்ளப்பட்டபடியாலும் டை. கான்பரன்சே டையோஷிசன் கவுண்சலாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அக்கவுண்சலா தங்கள் முதல் விஷயமாகப் பின்வரும் காரியத்தைப் பேசித் தீர்மானித்தார்கள். தமிழ் வேதாகமத்தைப் புதுப்பிக்கவேண்டுமென்ற வேதாகம சங்கத்தாரின் தீர்மானம் டையோஷிசன் கவுண்சலார்முன் அறிவிக்கப்பட அவர்களெல்லாரும் ஏக சம்மதமாய் வேதாகமம் புதுப்பித்தல் அவசியமல்லவென்று தீர்மானித்து அத்தீர்மானத்தை மகாகனம் அத்தியகூஷாவர்கள் மூலமாய் டை. சங்கத்தாருக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டார்கள்.

நான்காவது, கமிற்றிகள் ஏற்படுத்தல். எக்செக்கியூட்டிவ் கமிற்றி ஒன்று ஏற்பாடாகும்படி பேசப்பட்டது. சட்டப்படி மகாகனம் அத்தியகூஷரவர்கள் முதலாளியாக இருக்க, கனம். Ll. G. S. பிரைஸ் ஐயரவர்கள் பிரதி முதலாளியாகவும், கனம். W. E. இவான்ஸ் ஐயரவர்களும், கனம். G தேவதாசன் அவர்களும் செக்ரற்றெரிகளாகவும் கனம். E. A. L. மூர் ஐயரவர்கள் பொக்கிஷதாராகவும் ஏற்படுத்தப்பட்டு இவர்கள் தங்கள் உத்தியோகமேறைப்படி எக்சிக்கியூட்டிவ் கமிற்றி மெம்பர்களாகவும், அடியிற்கண்ட 12 குருமாரும் 25 லே மெம்பர்களும் மெம்பர்களாகவும் தெரிந்தேற்படுத்தப்பட்டார்கள். அதன்பின் வரும் மூன்று குருமாரும் ஐந்து லே மெம்பர்களும் மகாகனம் அத்தியகூஷரவர்களால் (கூட்டத்துக்குப்பின்) நியமகம் பெற்றார்கள்.

குருமார்.

1 கனம். C. G. ஸ்ற்றேப்ளி ஐயரவர்கள்.
2 ,, S. G. மதுரம் ,,
3 ,, D. S. டேவிட் ,,
4 ,, D. பெரியநாயகம் ,,
5 கனம் M. ஆசீர்வாதம் ,,
6 ,, A. ஞானக்கண் ,,
7 ,, R. V. ஆசீர்வாதம் ,,
8 ,, G. H. லாம்ப் ,,
9 ,, D. S. பாக்கியநாதன் ,,
10 ,, G. T. செல்வின் ,,
11 ,, J. யேசுதாசன் ,,
12 ,, D. பால் ,,
13 ,, P. N. தெய்வநாயகம் ,,
14 ,, K. T. அருமைநாயகம் ,,
15 ,, P. S. பீற்றர் ,,

லே மெம்பர்கள்.

1 மகா-ரா-ரா-ஸ்ரீ J. அன்புடையான் அவர்கள்
2 ,, G. தங்கசாமி ,,
3 ,, A. S. அப்பாசாமி ,,
4 ,, D. தேவவரம் ,,
5 ,, G. S. ஆபிரகாம் ,,
6 ,, J. ஞானமுத்து ,,
7 ,, A G. ஜெபமணி ,,
8 ,, J. S. கோயில்பிள்ளை ,,
9 ,, J. H. ஆசீர்வாதம் ,,
10 ,, S. D. லாசரஸ் ,,
11 ,, Y. ஸ்தீவன் ,,
12 ,, C. S. கோலாப் ,,
13 ,, A. வேதநாயகம் ,,
14 ,, G. விசுவாசம் ,,
15 ,, A. C பால் ,,
16 ,, P. ஜோஸப் ,,
17 ,, பாக்கியம் ,,
18 ,, G. ஞானப்பிரகாசம் ,,
19 ,, A பெரியநாயகம் ,,
20 ,, அப்பாவு யேசுதாசன் ,,
21 ,, G. யோசுவா ,,
22 ,, பாலையா ,,
23 ,, திரவிய பாக்கியமுத்து ,,
24 ,, I. தேவசகாயம் ,,
25 ,, M. தேவசகாயம் ,,
26 ,, V. தேவசகாயம் ,,
27 ,, V. சாமுவேல் ,,
28 ,, J. குணரத்தினம் ,,
29 ,, D அருளப்பன் ,,
30 ,, P. N. S. கோயில்பிள்ளை ,,

மேற்காட்டிய மெம்பர்கள் தெரிந்து கொள்ளச் சீட்டுகள் கொடுத்து முடிந்தபின் டையோஷிசன் கவுண்சலுக்கு வந்திருந்த யாவருடைய படமும் பிடிக்கும்படி நூற்றுண்டு மண்டபத்தின்முன் ஏற்பாடு செய்தபடி படம்பிடிக்கப்பட்டது.

சாயந்தரம் 5½-மணிக்கு சுருக்கமான மாலை ஜெபங்கள் செய்து மகாகனம் அத்தியகூஷாவர்கள் ஆசீர்வாதம் கூறக் கூட்டம் முடிந்தது.

இவ்விரு காட்களில் கூட்டங்களுக்கு வந்திருந்த குருமார், லே மெம்பர்கள் யாவருக்கும் மகாகனம் அத்தியகூஷரவர்கள் செலவில் உபசரணை செய்யப்பட்டது. இதற்குவேண்டிய சகல ஒழுங்குகளும் செய்யும்படி ஓர் உபசரணைக் கமிற்றி ஏற்பாடாகியிருந்தது. மக-ய-ரா-ஸ்ரீ G. தேவதாசன் அவர்கள் அக்கமிற்றிக்கு செக்ரற்றெரியாயிருந்து சகல ஒழுங்குகளையும் வெகு பிரயாசையுடன் நடப்பித்தார்கள். கனம். M. ஆசீர்வாதம் ஐயரவர்களும், மக-ரா-ரா-ஸ்ரீ A. ஜேக்கப் அவர்களும் மக-ரா-ரா-ஸ்ரீ M. அதிசயம் அவர்களும் அக்கமிற்றியின் மெம்பர்கள். குருமாருக்கு சி. ய.ம. எஸ். ஐஸ்கூலச்சேர்ந்த தெற்குக்கட்டடமும், லே மெம்பர்களுக்கு நூற்றுண்டு மண்டபத்தின் ஓர்பாகமும் ஆயத்தம்பண்ணப்பட்டிருந்தது. யாவருக்கும் சாப்பாட்டு வசதி மொத்தமாக மிஷன் சத்திரத்தில் ஏற்பாடாயிருந்தது. சி. ய.ம. எஸ். நார்மல் ஸ்கூல் மாணாக்கர் சிலர் இவ்விஷயத்தில் நல்ல உதவிபுரிந்தார்கள். இவ்வுபசரணை விஷயத்தில் பேருதவிபுரிந்த கமிற்றிமாருக்கும், இக்கூட்டங்களுக்கென்று தங்கள் வருப்புகளை ஒழித்து இட வசதி கொடுத்த கனம். ஆர்டில் ஐயரவர்கள்; கனம். பிரைஸ் ஐயரவர்களுக்கும், பிரதிநிதிகளுக்குப் பற்பல உதவிகள்புரிந்த நார்மல் ஸ்கூல் மாணவருக்கும் நன்றியறிதலான வார்த்தைகள், மகாகனம் அத்தியகூஷரவர்களால் கவுண்சல் கூட்டத்திலேயே பேசப்பட்டன.

இக்கவுண்சல் கூட்டமானது யாரும் எதிர்பாராதவண்ணம் மிகுந்த சித்தியோடு நடைபெற்றதையறிந்து சபாநாயகராகிய ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இவ்வத்தியகூஷ மண்டலத்தின் சபைகள் இதுமுதல் நற்சீர்பொருந்தி தேவ நாமம் மகிமைப்படுவதற்கேதுவாய்ச் சகலமும் நடந்துவர தேவன் தாமே கிருபைபுரிவாராக.

நாளது வருஷம் முழுவதிலும் நிடப்படுத்தல் ஆராதனை நடந்த இடங்கள் 41. நிடப்படுத்தல் பெற்றவர்கள் 2096.

மகாகனம் கல்குத்தா மேற்றிராப்போலிற்றன் அவர்கள் தற்சமயம் வியாதியாயிருக்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் அந்த வியாதி அதிகப் படாமல் சீக்கிரம் சுகம் நிடைக்கும்படி ஜெபிக்க எல்லாரும் கேட்கப்படுகிறார்கள்.

திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை டையோஸிசன் கவுண்சல் சட்டங்கள்.

1. நாமம்.

இக்கவுண்சல் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை டையோஸிசன் கவுண்சல் என்று அழைக்கப்படும்.

(சுருக்கமாய் திருநெல்வேலி டையோஸிசன் கவுண்சல்).

II. அங்கங்கள்.

இக்கவுண்சலானது பின்கண்ட அங்கங்கள் அமைந்ததாயிருக்கும்:—

(a) திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை அத்தியகூஷரவர்கள்;

(b) அத்தியகூஷரவர்களின் லீசன்ஸ் பத்திரம் பெற்று, இவ்வத்தியகூஷமண்டலத்தில் வசிக்கும் பிரீஸ்தர்களனைவரும்;

N. B.—டீக்கன்கள் கவுண்சலில் ஆஜராகி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடலாம். ஆனால் சம்மதச்சீட்டு (Vote) கொடுக்கும் பாத்தியதை அவர்களுக்குக் கிடையாது.

(c) இவ்வத்தியகூஷமண்டலத்தில் வசித்து, சபைக்குச்செல்லவேண்டிய பணத்தைக்கொடுத்து வரும் பரி. நற்கருணைக்காரரான புருஷரால் தெரிந்துகொள்ளப்படும் புருஷரான 'லே' பிரதிநிதிகள்.

தெரிந்துகொள்ளும் விதம் பின்வருமாறு:—

(i) ஒவ்வோர் பாஸ்ற்ரரேற்றிலிருந்தும் ஓர் பிரதிநிதி.

N. B.—பொதுவாக ஓர் பாஸ்ற்ரர் அல்லது பாஸ்ற்ரரேற் கமிற்றியின் ஆளுகைக்குட்பட்ட இடமே பாஸ்ற்ரரேற்றும்.

(ii) ஒவ்வோர் டிஸ்ற்றிரிக்ற் அல்லது சர்க்கிளிலிருந்தும் ஓர் பிரதிநிதி.

N. B.—இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாஸ்ற்ரரேற்கள் அமைந்ததாய், ஓர் டிஸ்ற்றிரிக்ற் கவுண்சல் அல்லது சர்க்கிள் கமிற்றியின் ஆளுகைக்குட்பட்ட பாகம் டிஸ்ற்றிரிக்ற் அல்லது சர்க்கிள் என்றழைக்கப்படும்.

(iii) பரி. நற்கருணை சேர்ந்த புருஷரான 'லே' அங்கங்களிலிருந்து அத்தியகூஷர்வர்களாவது கவுண்சலாவது நியமகஞ்செய்யும் பிரதிநிதிகள். இவர்களின் தொகை தெரிந்துகொள்ளப்பட்ட 'லே' பிரதிநிதிகளின் மொத்தத்தொகையில் ஐந்தில் ஒரு பங்குக்கு அதிகப்படக்கூடாது. மேலும் இவர்கள் அத்தியகூஷமண்டலத்தில் நடைபெற்று

வரும் ஊழியங்களில் உத்தியோகஸ்தராயிருப் பதினிமித்தமே உத்தியோக மேலாயர் (Ex. Officio) நியமகம் பெறுவார்கள்.

N. B.—1. பரி. நற்கருணைக்காரர் என்பது மூன்றை வருஷத்தில் குறைந்தபக்ஷம் மூன்று தடவை திருப்பந்தியில் சேர்ந்து, அத்தியகூரவர் களால் பரி. நற்கருணைக்கு விலக்கப்படாமலும் சபைக்குப்புறம்பாக்கப்படாமலுமிருப்பவர்களே யாம்.

2. 'சபைக்குச் செல்லவேண்டிய பணம்' என்பது பாஸ்ற்றரேற் கமிற்றி நீர்மானிக்கும் தொகையைக் குறிக்கும்.

III. தெரிந்துகொள்ளும் முறை.

1. பாஸ்ற்றரேற் பிரதிநிதிகள்: பாஸ்ற்ற ரேற் கமிற்றிக்கு மெம்பர்களைத் தெரிந்துகொள் ளும் சமயத்தில் சம்மதச்சீட்டுக்கொடுக்கும் பாத் தியதையுள்ளவர்கள் தங்கள் பாஸ்ற்றரேற் பிரதி நிதியைத்தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்து கொள்ளப்பட்ட மெம்பர்கள் பரி. நற்கருணைக் காரராயும் சபைக்குச் செல்லவேண்டிய பணம் கொடுத்தவர்களாயுமிருக்கவேண்டும்.

2. டிஸ்ற்றிக்ற் அல்லது சர்க்கிள் பிரதிநிதி கள்: சர்க்கிள் அல்லது டிஸ்ற்றிக்ற் கமிற்றிகளுக் கு மெம்பர்களைப் பாஸ்ற்றரேற் கமிற்றிமார் தெரிந் தேற்படுத்தும் சமயத்தில் டிஸ்ற்றிக்ற் அல்லது சர்க்கிள் பிரதிநிதியைத் தெரிந்தேற்படுத்த வேண் டும்.

IV. கவுன்சலின் தத்துவங்களும் கடமை களும்.

1. பின்கண்ட விஷயங்களைக் கவுன்சல் ஆலோசித்து தீர்த்தும்:—

(1) புரோவின்சியல் கவுன்சலாவது அத்திய கூரவர்களாவது இக்கவுன்சலின் ஆலோசனைக் காக அனுப்பும் விஷயங்கள்.

(2) அத்தியகூமண்டலத்தின் திருச்சபை ஊழியம் நடந்தேறுவதற்காக ஆலோசிக்க வேண் டிய விஷயங்கள்.

ஆனால் மேற்கண்ட விஷயங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும். அவை யாவன:—

(a) புரோவின்சியல் கவுன்சலின் ஆளுகைக் குட்பட்ட எந்தக் காரியத்தைக்குறித்தும் டையோ சிஸன் கவுன்சலின் ஆளுகைக்குட்பட்டதல்ல வென்று புரோவின்சியல் கவுன்சலார் தீர்மானித் திருக்கிற எந்தக் காரியத்தைக்குறித்தும் டையோ சிஸன் கவுன்சலார் புரோவின்சியல் கவுன்சலுக்கு மனுச்செய்துகொள்ளலாமேயன்றி, தாங்களாய்த் தீர்மானஞ் செய்துகொள்ளக்கூடாது.

N. B.—புரோவின்சியல் கவுன்சலானது (இந் திய இலங்கை அத்தியகூமண்டலங்களமைந்த) மாகாண முழுவதுக்கும் சம்பந்தப்பட்ட பொது விஷயங்களையும் இவ்வத்தியகூமண்டலங்கள் ஒன் றோடொன்றும் (இம்மாகாணத்துக்கு) வெளியே யுள்ள திருச்சபையோடுமுள்ள ஐக்யத்தைக்குறித்த விஷயங்களையும் கவனித்துத் தீர்மானங்கள் செய் யும்.

(b) அத்தியகூரவர்களின் அதிகாரத்துக்குட் பட்ட எந்த விஷயமும் அத்தியகூரவர்களுடைய அனுமதியின்றி கவனிக்கப்படமாட்டாது.

N.B.—உபதேசம், அனுஷ்டானங்கள் இவற் றிற்கடுத்த விஷயங்களில் டையோஸிசன்கவுன் சலார் சட்டம் ஏற்படுத்துவதற்கு மேற்கண்ட இருசட்டங்களும் இடங்கொடுக்கிறதில்லை.

(c) டையோஸிசன் கவுன்சலார் செய்யும் எந்தத் தீர்மானமும் தீர்ப்பும் அத்தியகூரவர் களுடையசம்மதம் பெற்றபின்தான் உறுதிப்படும். அத்தியகூரவர்கள் சம்மதம் கொடாததால் மாகாண அத்தியகூ சபைக்கு அப்பீல் செய்திருக் கும் எத்தீர்மானமும் அத்தியகூர் சபையில் பெரும்பாகத்தாருடைய சம்மதம் பெற்றலன்றி உறுதிப்படமாட்டாது.

(d) புரோவின்சியல் கவுன்சலார் பொதுச் சட்டமாக நிர்வஹித்திருக்கும் (Normative) அல்லது அத்தியகூ மகாசபை (Episcopal Synod) பிரசுரித்திருக்கும் ஓர் தீர்மானத்தை மாற்றவாவது ரத்துச்செய்யவாவது டையோஸி சன் கவுன்சலார் விரும்பினால், புரோவின்சியல் கவுன்சலுக்கு அல்லது அத்தியகூர் மஹாசபைக் குச் செய்துகொள்ளும் ஓர் விண்ணப்ப ரூபமான பிரேரணையாக மாத்திரம் அவ்விஷயம் ஆலோசிக் கப்படலாம். இப்படிப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுக்கு எதிரிடையாக டையோஸிசன் கவுன் சலார் அபூர்வமாய்ப்பேசித் தீர்மானித்துவிட்டார் களானால், இவ்வித ஒழுங்கீனத்தைக்குறித்து முதலாளியவர்கள் மூலமாய் உத்தியோக முறை யான நோட்டீஸ் வந்தவுடன், கவுன்சலார் கூடிய சீக்கிரத்தில் அத்தீர்மானத்தை ரத்துச்செய்வது அவர்கள் பேரில்விழுந்த கடமையாகும். பொது வாக, புரோவின்சியல் கவுன்சலார் சட்டமாக நிர்வஹித்திருக்கும் தீர்மானங்களை டையோஸிசன் கவுன்சலார் ஆலோசனைக்காக அனுப்பி, அவர் கள் கவனிக்கும்படியாகவும், அவர்களுக்குப் பிரி யமானால், அத்தீர்மானங்கள் விஷயமாய் தாங்கள் முறைப்படுத்த விரும்புவதை புரோவின்சியல் கவுன்சலுக்குத் தெரியப்படுத்தும்படியாகவும் சமயம் கொடுக்கப்படும்.

N. B.—ஓர் விஷயம் டையோஸிசன் கவுன் சலார் பேரில் ஆலோசிக்கக்கூடியதோ அல்லவோ என்பதைப்பற்றிய முடிவான தீர்மானம் செய் தல் புரோவின்சியல் கவுன்சலாருக்கு மாத்திர முரியது.

2. கவுன்சல் கூட்டங்களுக்கிடையில் கவுன் சல் தீர்மானங்களின் நடபடிக்கைக்குக் கொண்டு வரவும், அடுத்த கூட்டத்தில் கவனிக்கவேண்டிய பொருட் ஜாபிதாவைத் தயாரிக்கவும், மெ கூட் டங்கள் கூடுவதற்கான ஏற்பாடுகள் செய்யவும் கவுன்சலார் ஓர் எக்செக்கியுட்டிவ் கமிற்றி ஏற் படுத்த வேண்டும்.

3. கவுன்சலார் தங்களுக்கு அவசியமென்று காணும் காயம் அல்லது அக்காமி சப்கமிற்றி களாவது போர்டுகளாவது காலாகாலம் ஏற்பாடு செய்யலாம். இக்கமிற்றிகளின் மெம்பர்கள் டையோஸிசன் கவுன்சல் மெம்பர்களாயிருக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல. ஆனால் புருஷ ராளும், ஸ்திரீகளாளும் அவர்கள் பரி: நற் கருணைக்காரராயிருக்கவேண்டும்.

4. புரோவின்சியல் கவுன்சலார் பிரசுரித்திரு க்கும் ஜாபிதாப்பிரகாரம் (Schedule), குருமாரில் நால்வராயும் 'லே' மெம்பர்களில் நால்வராயும், புரோவின்சியல் கவுன்சலுக்குப் பிரதிநிதிகளாக டையோஸிசன் கவுன்சலார் தெரிந்தெடுக்க வேண்டும்.

N. B:—பிரதிநிதிகளில் குருமாளைக் குரு மாரும், 'லே' மெம்பர்களை 'லே' மெம்பர்களும் தெரிந்துகொள்ளவேண்டும்.

5. கவுன்சலார் குருமாரில் ஒருவரையும் 'லே' மெம்பரில் ஒருவரையும் காரியதரிசிகளா கவும், ஒருவரைப் பொக்கிஷதாராகவும் தாங்களே தெரிந்துகொள்ளவேண்டும். குருமாரில் ஒரு வரைப் பிரதி அக்கிராசனபதியாகவும் ஏற்படுத்த வேண்டும்.

6. புரோவின்சியல் கவுன்சலுக்கு அனுப்பப் படும் பிரதிநிதிகளின் பிரயாணச்செலவு, புரோவின் சியல் கவுன்சல் கூட்டங்களின் அச்சடிப்பு தபால் செலவுகள் முதலியவற்றிற்காகப் புரோவின்சியல் கவுன்சலார் ஏற்படுத்தும் வீதாசாரத்தை டையோ சிஸன் கவுன்சலார் தங்கள் பொக்கிஷத்திலிருந்து செலுத்தவேண்டும்.

7. மெ செலவுகளுக்கும், டையோஸிசன் கவுன்சலார் தங்கள் மேலே விஷயமான மற்றச் செலவுகளுக்கும் அவசியமென்று தீர்மானிக்கும் பணத்தை பாஸ்ற்றரேட்டுகளிலும் டிஸ்ற்றிக்ற் அல்லது சர்க்கிள்களிலும் சேகரிப்பதற்கு டையோஸிசன் கவுன்சலாருக்கு அதிகாரமுண்டு.

8. கவுன்சலின் தீர்மானங்களும் மற்ற நட படிக்கைகளும் அடுத்த புரோவின்சியல் கவுன்சல் கூட்டத்தில் பேசப்பட்டதற்காக, அவைகளின் திட்டவட்டமான பிரதி ஒன்று தயார்செய்து, முதலாளியவர்கள் மூலமாய் மேற்றிராணியாருக்கு அனுப்பவேண்டும்.

V. கவுன்சல் கூட்டங்கள்.

1. எக்செக்கியுட்டிவ் கமிற்றியோடு ஆலோ சித்து, அத்தியகூரவர்கள் (அல்லது அத்தியகூா தானம் காலியாயிருக்குங்கால் அதை மேல்விசாரிக் கும் அத்தியகூர்) குறிப்பிடும் எச்சமயத்திலும் அத்தியகூமண்டலத்திலுள்ள எவ்விடத்திலும் கவுன்சல் கூட்டம் நடத்தப்படலாம். ஆனால் தூரைந்தபக்ஷம் மூன்று வருஷத்திற்கு ஒருதர மாவது கூட்டம் நடக்கவேண்டும்.

2. கவுன்சல் முதலாளியாக அத்தியகூரவர் கள் இருப்பார்கள். கவுன்சல் கூட்டங்களி லும் கவுன்சலைச் சேர்ந்த கமிற்றிக்கூட்டங்களி லும் அவர்களே பீடம் வஹிப்பார்கள்.

அவர்கள் ஆஜரில்லாத சமயங்களில் அவர்க ளுக்குப்பதிலாக பிரதி அக்ராசனபதி பீடம் வஹிப் பார். பொதுவாக ஓர் அக்ராசனபதிக்குரிய அதிகாரம் மாத்திரம் அவருக்குண்டு, மெம்பருக் குரிய ஓர் சம்மதச் சீட்டுத்தான் அவருக்குரியது. ஓர் காரியத்தை முடிவாகத் தீர்மானிக்கவாவது தள்ளிவிடவாவது IV. I. (3)ல் கண்ட அதிகாரம் அவருக்கு இல்லை. இவ்வதிகாரம் அத்தியகூருக்கு கூர்மனுக அல்ல, உத்தியோக ரேகைப்படி உரி யது.

3. சம்மதச் சீட்டு கொடுக்கும் முறை.

கவுன்சல் மெம்பர்களில் பத்துப்பேர் பணக் காரியம் ஒன்றுதவிர, மற்றெந்த விஷயத்திலும் வகுப்பு வகுப்பாக சம்மதச் சீட்டுக் கொடுக்கும் படி கேட்கலாம்.

வகுப்பு வகுப்பாக வோட் எடுக்கும்போது, 'லே' அங்கங்கள் முதலாவது வோட் கொடுப்பார் கள். அவர்களுடைய வோட்டின் தீர்மானம் ஓர் பிரேரணைக்கு மாறுக இருக்குமாகுல், அப்பி ரேரணை அநாதி முடிவுபெற, பொருள் ஜாபிதா வில் கண்ட அடுத்த காரியத்தை கவுன்சலார் பேசுவார்கள். ஓர் பிரேரணை 'லே' அங்கங்க ளின் சம்மதச்சீட்டினால் அங்கீகாரம் பெற்றதா

னால், பின்னர் குருமார் அதின்பேரில் வோட் கொடுப்பார்கள். குருமார் ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில், அப்பிரேரணை தள்ளப்படும். கவுண்சலார் அதற்கடுத்த காரியத்தைப் பேசுவார்கள். குருமார் ஒப்புக்கொள்ளுங்கால், அத்தியக்ஷரவர்கள் தங்கள் சம்மதத்தைக் குறிப்பிடுவார்கள். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றால், அத்தீர்மானம் நிஷேதிக்கப்படும். அவர்கள் அங்கீகாரஞ் செய்யுங்கால், அத்தீர்மானம் ஊர்ஜிதத்திற்கு வரும். ஆனால் பின்வரும் நிபந்தனையைக் கவனிக்கவேண்டும். அதாவது, 'லே' அங்கங்களிலும் குருமாரிலும் தனித்தனியே மிச்சமான பேர் ஏதாமொரு தீர்மானத்தை அங்கீகாரம் செய்திருக்க, அத்தியக்ஷரவர்கள் மாத்திரம் அதை ஒப்புக்கொள்ளாவிட்டால், கவுண்சலார் தங்களுடைய அடுத்த கூட்டத்திற்கு இத்தீர்மானத்தை மீளவும் கவனிக்கும்படி கொண்டுவரலாம். அச்சமயத்திலும், 'லே' அங்கங்களிலும் குருமாரிலும் முறையே முன்றில் இரண்டுபேர் ஒப்புக்கொண்டிருக்க, அத்தியக்ஷரவர்கள் சம்மதம் கொடுக்காவிட்டால் மாகாண அத்தியக்ஷர் சபைக்கு அப்பீல் செய்து கொள்ளவும் பெரும்பான்மையான பிரிவாருக்கு அதிகாரமுண்டு. இந்த அப்பீலைக் கவனிக்கும்படி அத்தியக்ஷர் சபைகூடும் கூட்டத்தில், தங்கள் விவகாரத்தை எடுத்துச் சொல்வதற்கு குருமாரிலும் 'லே' மெம்பர்களிலுமிருந்து பிரதிநிதிகளை அனுப்பவும் அவர்களுக்குப் பாத்தியதையுண்டு.

VI. எக்செக்கியுட்டிவ் கமிற்றி.

1. மெம்பர்கள். ஏக்செக்கியூட்டிவ் கமிற்றியின் கண்ட மெம்பர்கள் அமைந்ததாயிருக்கும்:-

(1) அத்தியக்ஷரவர்கள், அவர்களே முதலாளியாயிருப்பார்கள்,

(2) பிரீஸ்துகளான பதினைந்து குருமார். இவர்களில் பன்னிருவர் குருமாரால் தெரிந்து கொள்ளப்படவேண்டும். முவா அத்தியக்ஷரவர்களால் நியமிக்கப்படுவார்கள்.

(3) முப்பது 'லே' அங்கங்கள். இவர்களில் இருபத்தைந்துபேர் 'லே' பிரதிநிதிகளால் தெரிந்துகொள்ளப்படவேண்டும். ஐந்துபேர் அத்தியக்ஷரவர்களால் நியமிக்கப்படுவார்கள்.

(4) இவர்களையல்லாமல், உத்தியோகஸ்தர்கள் (கவுண்சல்) உத்தியோக மேறைப்படி மெம்பர்களாயிருப்பார்கள்.

கவுண்சலின் உத்தியோகஸ்தரே, எக்செக்கியூட்டிவ் கமிற்றியின் உத்தியோகஸ்தராயிருப்பார்கள்.

2. தெரிந்துகொள்ளும் முறை. குருமார் தங்களில் இலருடைய நாமங்களை முதலாவது பிரேரேகிக்க, அவைகள் கிரமமாய் ஆமோதிக்கப்படவேண்டும். இவ்வாறு நியமுகம் தீர்ந்தபின், குறிப்பிட்ட நாமங்கள் தெளிவாய் எழுதிவைக்கப்பட்டிருக்க, வோட்டுகள் பெற்ற முதல் பன்னிரண்டுபேர் தெரிந்துகொள்ளப்படுவார்கள். ஆனால் அத்தியக்ஷமண்டலத்து எஸ். பி. ஜி. அல்லது சி. எம். எஸ். என்ற ஒரே பாகத்தில் எடுக்கு அதிகமான குருமார் எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

அதே பிரகாரம், 'லே' மெம்பர்கள் தெரிந்துகொள்ளுதலும் நடத்தப்படும். இவர்களில் பதினைந்து பேருக்கு அதிகப்படாத தொகை சி. எம். எஸ். அல்லது எஸ். பி. ஜி. என்ற ஒரு பாகத்தில் இராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

1. கடமைகளும் தத்துவங்களும். புரோவின்சியல் கவுண்சலுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளுதல்; சட்டங்களையடுத்த விஷயங்கள் இவைகளைத்தவிர, மற்றெல்லாக் காரியங்களிலும் டையோசிஸன் கவுண்சலின் சகல அதிகாரமும் எக்செக்கியூட்டிவ் கமிற்றிக்குரியதாகும்.

2. எக்செக்கியூட்டிவ் கமிற்றியின் நடபடிக்கைகளெல்லாம் அடுத்த டையோசிஸன் கவுண்சல் கூட்டத்தில் திரும்பப்பேசப்படலாம்.

3. எக்செக்கியூட்டிவ கமிற்றிக் கூட்டம் நடத்தப்படும் முறைமையும் 5 மெம்பர்களின் வேண்டுகோளின்படி அதில் வகுப்பு வகுப்பாக வோட் எடுத்தலும் டையோசிஸன் கவுண்சல் முறைமைப்பிரகாரம் நடைபெறும்.

4. எக்செக்கியூட்டிவ் கமிற்றியானது உபகழகங்கள் ஏற்படுத்தலாம். இக்கழகங்களின் நியமுகம் டையோசிஸன் கவுண்சலினால் உறுதிப்படுத்தப்பட்டாலன்றி, அத்தியக்ஷமண்டலத்தின் நிலையான ஏற்பாட்டின் ஓர் அம்சமாக பாவிக்கப்படமாட்டாது.

5. இப்படிப்பட்ட உபகழகங்களுக்கு நியமிக்கப்படும் ஆட்கள் டையோசிஸன் கவுண்சல் அங்கங்களாக இருக்கவேண்டியதில்லை. ஆனால் இங்கிலாந்து திருச்சபையைச்சேர்ந்த பரி நற்கருணைக்காரர் மாத்திரம் பருஷர் அல்லது ஸ்திரீகள் இவ்வுபகழகங்களின் அங்கங்களாய் இருக்கலாம்.

162427